

# இன்று அவருடைய சத்தம்

(குடும்ப தியான நூல்)

# இன்று அவருடைய சத்தம்

(குடும்ப தியான நூல்)

சகரியா பூணன்

*“இன்று அவருடைய சத்தம் கேட்டு... அவருடைய ‘இளைப்பாறுதல்’ வழி நடவுங்கள்”*
*(எபிரெயர் 3:7-10 ab)*

**இன்று அவருடைய சத்தம்** (His Voice To-day)- 2010

*தினசரி தியான நூல்* - Daily Devotion

இப்புத்தகத்தின் செய்திகள் தவறாகக் கையாளப்படுவதை தவிர்ப்பதற்காக இப்புத்தகம் பதிப்புரிமையைப் பெற்றுள்ளது. ஆசிரியரின் அனுமதியில்லாமல், இச்செய்திகள் மொழி பெயர்க்கப்படவோ அல்லது அச்சிடப்படவோ கூடாது.

ஆசிரியர் முகவரி:

Christian Fellowship Centre, #69, Bellahalli, Kannur Post,

Bengaluru – 562149, Karnataka, India

email: cfc@cfcindia.com

Private circulation only

## இன்று அவருடைய சத்தம்!

இந்த தினசரி தியான நூல் தனிமையிலும், குடும்பத்திலும் தியானிப்பதற்கு உகந்த, சிறந்த ஆவிக்குரிய தியான நூலாகும். ஒரு மெய் கிறிஸ்தவன், அன்றாட தேவனிடம் சென்று, அவர் முகம்தேடி, அவர் வார்த்தையைக் கேட்பதிலும் மேலானது யாதொன்றும் இல்லை! ஆகிலும், நாள்தோறும் தனிமையில் அல்லது குடும்பமாய் காலையிலோ, மாலையிலோ அல்லது இரவினிலோ செய்திடும் இப்புத்தக தியானம் உங்களை ஆவிக்குரிய விழிப்பிற்கும், ஆறுதலுக்கும், வளர்ச்சிக்கும் நடத்தும் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை! ஒவ்வொரு தியானத்திலும் "ஆண்டவரின் சத்தம்" கேட்டு, நடந்திடுங்கள்! வாழ்ந்திடுங்கள்! "அவருடைய வார்த்தை" தொனிக்கும் பஞ்சமான இந்நாட்களில் "அவரது சத்தம்" உங்களை நித்திய வழி நடத்துவதாக! ஆமென்.

**அவருடைய கட்டளைகள் வியக்கத்தகு வாக்குத்தத்தங்கள்!**

ஆதிமுதலாய் "மனுஷன் எங்ஙனம் வாழவேண்டும்?" என தேவன் விரும்பினாரோ அவ்வித வாழ்க்கையை மனிதன் இப்போது வாழமுடியும், என்பதே சுவிசேஷத்தின் சுபிட்சமான செய்தியாகும்! கிறிஸ்துவின் அழைப்பிற்கு சிறிதும் பிசகில்லாமல் தங்களை சம்பூரணமாய் சமர்ப்பணம் செய்திடும் யாவரும் ஓர் தொடர்ச்சியான வெற்றி வாழ்க்கையை வாழ்ந்திட முடியும்!!

பாவத்தை ஜெயித்து வாழும் ஓர் உன்னத வாழ்க்கையைப் புதிய ஏற்பாடு நமக்கு வாக்களித்திருக்கிறது. இதற்குரிய அருமையான தேவ வாக்குதத்தத்தை ரோமர் 6:14, "நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது" என கெம்பீரமாய் கூறுகிறது!!

பயத்திலிருந்தும், கவலையிலிருந்தும், முற்றிலுமாய் விடுதலையாகி ஓர் தொடர்ச்சியான மகிழ்ச்சியின் வாழ்க்கையை வாழும்படி "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். . . நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாதீர்கள்!" (பிலிப்பியர் 4:4, 6) என கட்டளையிடும் தெய்வ வார்த்தையின் ரீங்காரத்தையும் கேளுங்கள்!!

நாம் எவைகளைச் செய்வதற்கு தேவன் பெலன் தருகிறாரோ, அவைகளை மாத்திரமே நாம் செய்யும்படி தேவன் கட்டளை கொடுக்கிறார் என்பதை நாம் எப்போதும் நினைவிற்கொள்ள வேண்டும். ஆகவே, ஒன்றை நாம் செய்து சாதித்துவிடுவதற்கு தேவன் நமக்கு அருளும் கிருபையைக் காணும்போது, "அவருடைய கட்டளைகள் அத்தனையும் வாக்குத்தத்தங்களால் இழையோடி இருக்கிறதே!" என நாம் வியக்காமல் இருக்கவே முடியாது!! எனவே, நாம் ஓர் தொடர்ச்சியான மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கை வாழவேண்டும் எனவும்; முற்றிலுமாய் பயமும் கவலையற்ற வாழ்க்கை வாழவேண்டும் எனவும்; மேலே நாம் குறிப்பிட்ட தேவ கட்டளைகள், நாம் அவ்விதமான வாழ்க்கை வாழ்ந்துவிடுவதற்கென தேவன் நம்மைப் பெலப்படுத்தும் வாக்குத்தத்தங்களே என அறிந்துகொள்கிறோம்!

இதேபோன்று புதிய ஏற்பாட்டில் எத்தனை எத்தனை மகிமையான வாக்குத்தத்தங்கள் இருக்கிறது தெரியுமா! இவ்வாறு தெய்வ கற்பனைகள் அத்தனையும் வாக்குத்தத்தங்களே என்ற உண்மையை நீங்கள் அறிந்துகொண்டால், "சுவிசேஷம் முழுவதும் சுபிட்சம் நிறைந்த செய்திகளே!" என நீங்கள் மனப்பூர்வமாய் ஏற்று மகிழ்வீர்கள்.

***ஜெபம் :*** *எங்கள் பரலோக பிதாவே! உமது அனைத்து கட்டளைகளும் நாங்கள் மகிழ்ச்சியான வாழ்வு பெற நீர் தந்திட்ட வாக்குத்தத்தங்கள் என காணும்படி எங்கள் கண்களைத் திறந்தீரே.... ஆண்டு முழுவதும் இந்த மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்ந்துவிட அருள்புரியும்!! ஆமென்.*

## மனந்திரும்புவதே விசுவாசத்தின் ஆதாரம்

ஆதிக்கிறிஸ்தவர்களிடம் காணப்பட்ட ஆழ்ந்த தன்மையும், அர்ப்பணமும், வல்லமையும் இன்றுள்ள அனேகமான விசுவாசிகளிடம் காணப்படவில்லை. இதற்கு என்ன காரணம் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? ஆம், இவர்கள் சரியானவிதமாய் மனந்திரும்பவில்லை என்பதே பிரதான காரணமாகும். இவர்கள் கிறிஸ்துவை விசுவாசித்தார்கள் என்பது உண்மைதான். ஆனால் இவர்களோ 'முதலாவது' மனந்திரும்பாமலேயே விசுவாசித்தவர்கள்!

உதாரணமாய், இன்று அநேகருக்குப் பழக்கமான ஓர் கீர்த்தனைப் பாடலின் வாசகத்தைக் கவனித்துப் பாருங்கள்:

*"மா கொடிய துரோகியானாலும்*
*மனதார விசுவாசித்தால் போதுமே;*
*அக்கணமே அக் கொடியோன்*
*இயேசுவின் மன்னிப்பை பெற்றிடலாகுமே!"*

இவ்வாறு, ஓர் கொடிய துராகிதன் 'வெறுமனே' விசுவாசித்துவிட்டால் இயேசுவின் மன்னிப்பை உண்மையாகவே பெற்றிட முடியுமா? அவன் 'முதலாவது' மனந்திரும்புவது அவசியமில்லையா?

இக்கேள்விக்கு நீங்கள், "உண்மையான விசுவாசம் மனந்திரும்புதலோடு இணைந்தே வருகின்றது" என பதிலுரைக்கலாம். ஆனால் நீங்கள் எண்ணிக்கொள்ளும் இந்த விளக்கத்தை அக்கொடிய துராகிதன் அறியாதிருப்பானென்றால், தான் விசுவாசித்ததினிமித்தம் 'மறுபடியும் பிறந்துவிட்டதாக' அல்லவா தன்னைத் தவறாக முடிவு செய்திருப்பான்? இதினிமித்தம் தன் ஜீவிய காலமெல்லாம் கொடிய ஏமாற்று வஞ்சகத்தில் அம்மனிதன் சிக்கிக் கொள்வானே!

இயேசுகிறிஸ்துவே பிரசங்கித்த முதல் செய்தி யாதெனில், "மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" (மாற்கு 1:15) என்பதுதான். இதே செய்தியைத்தான் அவருடைய அப்போஸ்தலர்களும் பிரசங்கிக்கும்படி இயேசு கட்டளைகொடுத்தார் (லூக்கா 24:47). அதை அப்படியே அப்போஸ்தலர்களும் கொஞ்சமும் பிசகாமல் பிரசங்கித்தார்கள் (அப்.20:21). நீங்கள் யாராயிருந்தாலும், உங்களுக்கு காரியம் நன்றாய் நடந்து நீங்கள் உண்மையாகவே குணப்பட வேண்டுமென்றால். . . . மனந்திரும்புதலையும் விசுவாசத்தையும் ஒருக்காலும் பிரித்துவிடாதீர்கள்!! இந்த இரண்டையும் தேவனே ஒன்றாக இணைத்துள்ளார். எனவே தேவன் இணைத்ததை மனிதன் ஒருக்காலும் பிரிக்கலாகாது!

**ஜெபம்** : *எங்கள் பரம தந்தையே! மெய்யாய் மனந்திரும்பி திருந்தி வாழாமலே "நானும் ஆண்டவரை விசுவாசிக்கிறேன்" என வாழ்ந்த என்னை மன்னியும்! இரட்சகர் நாமத்தில் ஜெபிக்கிறேன்! ஆமென்.*

### இரட்சிக்கப்பட்டதற்கும் 'கனி' வேண்டும்

யோவான்ஸ்நானகன் பரிசேயர்களைப் பார்த்து, "மனந்திரும்புதலுக் கேற்ற கனிகளைக் கொடுங்கள்" என அழைப்பு விடுத்தார் (மத்.3:8). நாம் உண்மையாகவே மனந்திரும்பியிருப்போ மென்றால், அவ்வித மனந்திரும்புதல் நம் முழு ஜீவியத்தையும் மாற்றிவிடும்!

நாம் மனந்திரும்பியவுடன் செய்யவேண்டிய முதலாவது காரியம் யாதெனில், நம் கடந்த ஜீவியத்தில் செய்த தவறுகளினிமித்தம் ஏற்பட்ட நஷ்டங்களைத் திரும்பச் செலுத்துவதேயாகும் (Restitution). சகேயுவைக் குறித்து லூக்கா சுவிசேஷத்தில் வாசிக்கிறோம். இயேசு அவனுடைய வீட்டிற்குள் பிரவேசித்தவுடன், அவன் தன் பாவங்களை உணர்ந்தான் (லூக்கா 19:1-10). அந்த சகேயு பணத்தை சிநேகித்த மனிதனாயிருந்தான்! இருப்பினும், மனந்திரும்புதல் இன்னதென்பதை அவன் நன்கு அறிந்திருந்தான்!! தான் இயேசுவின் சீஷனாய் மாறவேண்டுமென்றால் தன் ஜீவியத்தில் இழைத்த எல்லாத் தவறுகளையும் சரிசெய்திட வேண்டும் என்பதையும் நன்கு அறிந்திருந்தான். அவ்வாறு அவன் செயல்பட்டால், அதிகமான பண நஷ்டம் தனக்கு ஏற்படும் என்பதையும் அறிந்திருந்தான்! ஏனெனில் அவன் அநேகரின் பணத்தை ஏமாற்றி அபகரித்தவன்!! எனவேதான், தன் ஆஸ்தியில் பாதியை ஏழைகளுக்கும், தான் அநியாயமாய் அபகரித்தவர்களிடம் நாலத்தனையாகவும் திரும்பச் செலுத்துவேன் என ஆண்டவரிடம் கூறினான்.

இவ்வாறு சகேயு "திரும்பச் செலுத்துவேன்" எனக் கூறியதால் மாத்திரமே, "இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது" என இயேசு அறிவித்தார்! "நான் திரும்பச் செலுத்துவேன்" என்ற ஆயத்தமான விருப்பமே உண்மையான இரட்சிப்பின் அடையாளங்களில் ஒன்றாகும் (லூக்கா 19:1-10).

யாரோ சில ஜனங்களை நீங்கள் ஏமாற்றியிருந்தால், அவர்களிடம் பணத்தைத் திருப்பிக்கொடுக்கும்போது, நீங்கள் செய்த தவற்றிற்காக மன்னிப்பும் கேட்கவேண்டும். இந்த சந்தர்ப்பத்தில், உங்கள் ஜீவியத்தில் எவ்விதம் இந்த மாற்றம் நிகழ்ந்தது என்பதையும் அவர்களிடம் கூறுங்கள்!

உங்களால் எல்லாப் பணத்தையும் உடனடியாகத் திருப்பிச் செலுத்த முடியவில்லையா? பரவாயில்லை! அவைகளைத் தவணை முறையில் திரும்பச் செலுத்துங்கள். சகேயு எல்லாப் பணத்தையும் திரும்பச் செலுத்திய பின்பு அல்ல . . . . 'திரும்பச் செலுத்துவேன் என அவன் என்று தீர்மானித்தானோ' அன்றே தேவன் அவனை ஏற்றுக்கொண்டார்!

**ஜெபம்** : *எங்கள் பரம தகப்பனே! எங்கள் சீர்கெட்ட வாழ்வை நீர் விரும்புகிறபடி சரிசெய்து, மெய்யான இரட்சிப்பை நாங்கள் கண்டடைய வகை செய்தருளும்!! இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

### உங்களுக்கு தவறிழைத்தவர்களை மன்னியுங்கள் !

*"மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்" (மத்தேயு 6:15) என இயேசு கூறினார். இதை இயேசு மேலும் வலியுறுத்திக் கூறும்பொழுது நாம் பிறரை மேலோட்டமாக அல்ல "மனப்பூர்வமாய்" மன்னிக்க வேண்டும் என்றும் கூறினார் (மத்.18:35). நாம் பிறரை 'முழுவதுமாய்' 'மனப்பூர்வமாய்' மன்னிக்கா விட்டால், நாம் தேவனால் மன்னிக்கப்படுவதும் ஒருக்காலும் கைகூடாது! பிறர் செய்த செயலை நாம் ஒருவேளை மறக்கமுடியாமல் இருக்கலாம். ஆனால் எப்பொழுதெல்லாம் பிறர் செய்த தீமையை நினைவுகூரும்படி நாம் சோதிக்கப்படுகிறோமோ, அப்பொழு தெல்லாம் அத்தீமைகளை நினைப்பதற்கு மறுத்துவிட நம்மால் நிச்சயம் முடியும்!*

*சில சமயங்களில் உங்களுக்குச் சொல்லொண்ணா தீமை விளைவித்த ஒருவரை மனப்பூர்வமாய் மன்னிக்க முடியாதபடி நீங்கள் கஷ்டப்படலாம். அச்சமயங்களில், அவரை மன்னிப்பதற்கு உதவும்படி தேவனிடம் முறையிட்டு ஜெபியுங்கள். அப்போது எந்த மனிதரையும் மன்னிப்பதற்குரிய விருப்பத்தையும் அதை நிறைவேற்றுவதற்குரிய பெலனையும் தேவன் உங்களுக்குத் தருவதை நீங்களே கண்டு ருசிப்பீர்கள்!*

*நம்முடைய கோடிக்கணக்கான பாவங்களைத் தேவன் இலவசமாய் மன்னித்திருப்பதை நீங்கள் சற்றே தியானித்தால், அதே போல பிறரை மன்னிப்பது உங்களுக்கு இப்போது கஷ்டமாயிராது. நாம் யாரையேனும் மன்னியாதிருக்கும்போதுதான் சாத்தான் நம்மைத் தன் வல்லமையால் பிடித்துக்கொள்ளுகிறான்! எனவேதான், "சாத்தானாலே மோசம் போகாதபடிக்கு பிறரை மன்னியுங்கள்!" என பவுல் புத்தி கூறினார் (2 காரிந்தியர் 2:10, 11).*

*உங்கள் சகோதரனையோ அல்லது சகோதரியையோ மன்னிக்கா விட்டால், தேவன் உங்கள் ஜெபங்களை கேட்கவே மாட்டார். "என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச் செவி கொடார்" என வேதம் தெள்ளத் தெளிவாகவே கூறுகின்றது (சங்கீதம் 66:18). தேவன் எனக்கு பதில் கொடுக்கமாட்டார் என்றுகூட இல்லாமல், எனக்குச் செவிகொடுக்கக்கூட மாட்டார் எனக் கூறப்பட்டிருப்பதைக் கவனித்தீர்களா! இனியும், நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளாதிருப்போமாக!!*

***ஜெபம்*** *: அன்பின் பிதாவே! எங்கள் 'கணக்கில்லாத' பாவங்களை நீர் மன்னித்தீரே! அதுபோல், நாங்களும் எங்களுக்கு தவறிழைத்தவர்களை மனப்பூர்வமாய், முழுமையாய் மன்னித்திட எங்களுக்கு உதவி செய்தருளும்!! ஆமென்.*

**சாத்தானோடு கொண்ட 'யாதொரு' தொடர்பையும் துண்டியுங்கள் !**

*நாம் இரட்சிக்கப்பட்ட பின்பு சரிசெய்து சீர்ப்படுத்தவேண்டிய விஷயங்களில் ஓர் முக்கியமான பகுதி உள்ளது. அது யாதெனில், சாத்தானோடும் பொல்லாத ஆவிகளோடும் நாம் கொண்டிருந்த உறவேயாகும். நீங்கள் வானசாஸ்திர அஞ்சனத்திலும், விக்கிரக வழிபாட்டிலும், கைரேகை பார்ப்பதிலும், மை வைத்து மேஜிக் செய்வதுமானவைகளில் ஈடுபட்டிருந்தால் அல்லது 'ராக்-மியூஸிக்', தீமையான போதை மருந்துகளில் ஈடுபாடு கொண்டிருந்தால், இவைகளின் மூலம் நீங்கள் சாத்தானோடு கொண்டிருந்த உறவை இப்போது முற்றிலுமாய் துண்டித்துக் கொள்ளவேண்டும்! இதுபோன்ற காரியங்களில் நீங்கள் ஒருவேளை உங்களையும் அறியாமலே தொடர்பு வைத்திருந்தாலும் அவைகளையும் நீங்கள் கண்டிப்பாகத் துண்டித்துக்கொள்ள வேண்டும்!!*

*இதற்கு நீங்கள் முதலாவது செய்யவேண்டிய காரியம் யாதெனில், நீங்கள் வைத்திருக்கும் எல்லா விக்கிரகங்களையும், மாயஜால புஸ்தகங்களையும், அசுத்த ஆவிகளின் பாதுகாப்பைத் தேடும் 'தாயத்து' போன்ற வஸ்துக்களையும் நீங்கள் முற்றிலுமாய் உடைத்தெறிந்து அழிக்கவேண்டும்! (அவைகளில் எதையும் விலையுயர்ந்ததென விற்காமல், அழித்துவிட வேண்டும்! அப்.19:19-ஐ வாசித்துப்பாருங்கள்). அவ்வாறு செய்தபின்பு நீங்கள் இயேசுவை நோக்கி, "ஆண்டவரே, நான் அறிந்தோ அல்லது அறியாமலோ சாத்தானோடு வைத்திருந்த எல்லாத் தொடர்பையும் துண்டித்துவிட்டேன்" என அறிக்கைசெய்து ஜெபியுங்கள். இவ்வாறு ஜெபித்த பின்பு நீங்கள் நேருக்கு நேராய் சாத்தானுக்கு முன்பாகத் திரும்பிநின்று, "சாத்தானே, என் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உன்னை நான் கடிந்துகொள்ளுகிறேன். நான் இப்பொழுது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குச் சொந்தமானவன். இனிமேல் நீ என்னை ஒருக்காலும் தொடவே முடியாது!" என தைரியமாய் கூவி முழங்குங்கள். ஏனெனில் யாக்கோபு 4:7 "தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்!" என தெளிவாய் வாக்குரைத்துக் கூறுகின்றது. ஆகவே சாத்தானுடைய பிடி இனிமேல் உங்கள்மீது இருக்கவே இருக்காது!*

***ஜெபம்*** *: ஓ, எங்கள் தகப்பனே! எங்களையும் அறியாமலே, சாத்தானோடு தொடர்பு ஏற்படுத்திய 'யாதொரு' காரியத்தையும் நாங்கள் வெறுத்து, அவைகளை எங்கள் ஜீவியத்திலிருந்து இப்போதே அழித்துவிடுகிறோம்! தயவாய் எங்கள் பிழைகளை மன்னியும்!! ஆமென்.*

**நிலைத்திருக்கும் வாழ்க்கையையே நாடுங்கள்!**

*இரட்சிக்கப்பட்டு தேவனுடைய பிள்ளையாகிவிட்ட ஒருவனுக்கு, இக்காலத்திற்குரியவைகளைக் காட்டிலும் நித்தியத்திற் குரியவைகளே அதிக மேன்மை யுள்ளதாய் இருக்கும்! அதாவது, பூமிக்குரியவைகளின் மதிப்பைக் காட்டிலும் பரலோகத்திற்குரியவை களின் மதிப்பு இவனுக்கு இப்போது அதிக முக்கியமானதாயிருக்கும்.*

*நித்திய வாழ்வை நோக்கிச் செல்லும் நம்முடைய பயணத்தில், இவ்வுலகம் நாம் கடந்து செல்லும் 'இடைவெளி' மாத்திரமேயாகும். 'தகுதியைப் பெறும் பரீட்சைக்காகவே' நாம் இவ்வுலகத்தில் வைக்கப்பட்டிருக்கிறோம். வாழ்வின் பல்வேறு சூழ்நிலைகளில் பரலோகத்திற்குரிய நித்தியமானவைகளைத் தெரிந்து கொள்கிறோமா? அல்லது இப்பூமிக்குரிய அநித்தியமானவைகளைத் தெரிந்து கொள்கிறோமா? என்பதைக் காண்பதற்காகவே தேவன் இப்போது நம்மை சோதித்தறிகிறார். நாம் ஞானமுள்ளவர்களாயிருந்தால், நித்தியத்தில் மதிப்புடையவைகளையே தெரிந்து கொள்வோம்!*

*ஒரு குழந்தை, 500 ரூபாய் நோட்டைக் காட்டிலும் ஓர் பளபளக்கும் வர்ணத்தாளையே விரும்பும். ஏனென்றால் இக்குழந்தைக்கு மதிப்பிடும் சாதுரியம் இல்லை! பரலோகத்திற்கும் நித்தியத்திற்கும் உரியவைகளுக்குப் பதிலாய் இப்பூமிக்குரியவை களையே நாம் தெரிந்து கொண்டால், நாமும் இந்தக் குழந்தையைப் போலவே நடந்து கொள்கிறோம்!!*

*"இவ்வுலகமும் அதிலுண்டான யாவும் கடந்து போகும்" என வேதாகமத்தில் மிகவும் தெளிவாக தேவன் நமக்கு கூறியிருக்கிறார். எனவே இப்பூமிக்குரிய தற்காலிகமானவைகளுக்காக நாம் ஜீவிப்பது, நம்முடைய பணத்தை சீக்கிரத்தில் நஷ்டமடைந்து திவாலாகப்போகும் வங்கியில் சேமிப்பதற்கொப்பாகும்! ஞானமுள்ள மனிதனோ தன் பணத்தை ஓர் நிலையான வங்கியில் சேமித்து வைப்பான். இதைப்போலவே பரலோக ஞானமுள்ளவர்கள், நித்திய மதிப்புடையவைகளுக்காகவே ஜீவிப்பார்கள்! நித்தியமதிப்புடைய வைகள் நம்முடைய குணாதிசயங்களாகிய பரிசுத்தம், அன்பு, நற்குணம், மன்னிக்கும் தன்மை, தாழ்மை போன்றவைகளாகும்! நாம் இந்தப் பூமியை விட்டு கடந்து போகையில் இதுபோன்ற மேலான குணாதிசயங்களை மாத்திரமே நம்மோடு எடுத்துச்செல்ல முடியும்!!*

*ஏனெனில், "ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" (எபிரெயர் 9:27). ஆம், இந்த "ஒரு வாழ்க்கை" நித்திய நோக்கத்தோடு வாழ்வதே சாலமும் சிறந்த வாழ்க்கையாகும்!*

***ஜெபம் :*** *அன்பின் பரம பிதாவே! இந்த "ஒரே ஒரு வாழ்க்கையை" உலக மாயைக்கு அல்ல, நித்திய வாழ்வை முன்வைத்தே ஜீவித்திட வேண்டும் என மீண்டும் என்னை உணர்த்தியமைக்கு உமக்கு நன்றி!*

**எல்லா தீமைகளிலிருந்தும் விடுதலை!**

*நம் தேவன் மிகவும் நல்ல தேவன்! தன்னுடைய பிள்ளைகளுக்கு எவ்வித தீமையாகிலும் சம்பவித்திட அவர் விரும்பவே மாட்டார்!!*

*இவ்வுலகில் அநேக ஜனங்கள், பிறர் செய்த பில்லி சூனியத்தினாலோ அல்லது செய்வினையினாலோ துன்பம் அனுபவிக்கிறார்கள். உங்கள் இருதயத்தையும் வாழ்க்கையையும் இரட்சகராகியஇயேசுகிறிஸ்துவுக்கு அர்ப்பணித்திருப்பீர்களென் றால், இதுபோன்ற சாத்தானுக்குரிய கிரியைகள் உங்களைத் துன்புறுத்த ஒருக்காலும் முடியாது! உங்களை இரட்சிக்கும்படி ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தை நீங்கள் கூப்பிடும்போது, உங்கள் மீதுள்ள எவ்வித பில்லி சூனியத்தின் வல்லமையும் "நொடிப் பொழுதில்" "இப்போதே" விரட்டி துரத்தப்பட முடியும்!*

*இயேசு சிலுவையில் மரித்தபோது, சாத்தானைத் தோற்கடித்து அவனுடைய வல்லமையை அடியோடு உரித்து போட்டார், என்றல்லவா வேதாகமம் கூறுகிறது! இது ஒரு நிலைத்த சத்தியமாகும். ஆனால், பாவமன்னிப்பைப் போலவே, "நீங்கள் ஏற்றுக்கொள்ளும்வரை" சாத்தானின் தோல்வியும் உங்கள் வாழ்க்கையில் நிஜமாய் மாறிட முடியாது!!*

*"மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனை தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கு", ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற் குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார்" (எபிரேயர் 3: 14,15) என வேதம் கூறுவதைப் பாருங்கள்! "தேவனுக்கு கீழ்படிந்திருங்கள்; பிசாசிற்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்" (யாக்கோபு 4:7) என்றும் வேதம் கூறுகிறது!*

*நாம் தேவனுடைய பிள்ளைகளாய் மாறிய பின்பும்கூட சாத்தான் நம்மைச் சோதிப்பதற்கு தேவன் அனுமதிக்கிறார். ஏனென்றால் இவ்வாறாகத்தான் நாம் பெலன் கொண்டவர்களாய் மாறிடமுடியும். சாத்தானை எதிர்த்து நின்று அவனுடைய எல்லா தாக்குதல்களையும் ஜெயிப்பதற்குரிய வல்லமையை நமக்குத் தரும்படி, நமக்குள் வாசம் செய்யும் பரிசுத்தாவியையும் இப்போது நாம் பெற்றிருக்கிறோம். இனியும் இந்த வையகத்திலுள்ள யாதொரு தீமையும் நம்மை மேற்கொண்டு மடங்கடித்திட ஒருபோதும் முடியாது, முடியவே முடியாது!!*

***ஜெபம் :*** *இரக்கமுள்ள பரம பிதாவே! செய்வினை, பில்லிசூனியம் ஆகிய தீமையினால் கட்டப்பட்டவர்களை மாத்திரமல்லாமல் "மரணபயத்தில்" பீடிக்கப்பட்ட "யாவரையும்" விடுதலை செய்யும்படி, சாத்தானை சிலுவையில் ஜெயித்திட அனுப்பித்தந்த உம் அன்பின் குமாரன் இயேசுகிறிஸ்துவுக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக! ஆமென்.*

**ஜெபம் கேட்டிட நமக்கு பரம தகப்பன் உண்டு!**

ஜெபிக்கும் சிலாக்கியம் ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைக்கும் கையளிக்கப்பட்ட ஆச்சரியமான சிலாக்கியங்களில் ஒன்றாகும். பொதுவாக, ஒரு சத்தத்தை நம்முடைய காதுகளினால் கேட்பதைப்போல, தேவன் நம்மிடம் பேசுவதில்லை. ஆனால் நமக்குள்ளிருக்கும் ஆவியில், உணர்த்துதலைக் கொடுத்து தேவன் பேசுகிறார். இதுவும், நாம் காதுகளினால் கேட்கும் சத்தத்தைப் போலவே உண்மையான சத்தமேயாகும். அதுபோலவே, நம் மனதின் பாரங்களை ஜெபத்தின் மூலமாய் நாம் பேசுவதையும் தேவன் கேட்கிறார்! ஆம், நம்முடைய மனதில் ஏற்படும் பாரமான யாவற்றையும் தேவனிடத்தில் கூறும்படியே இயேசு நம்மை ஊக்குவிக்கிறார்!!

இன்று அநேக ஜனங்கள் தனிமையில் மௌனமாய் துன்பப்படுகிறார்கள். ஏனென்றால் இவர்களுக்கு தங்கள் வருத்தங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு யாருமே இல்லை! ஆனால் தேவனுடைய பிள்ளைகளுக்கோ, பரலோகத்தில் ஒரு தகப்பன் இருக்கிறபடியால், அவரிடத்தில் நமக்குரிய யாவற்றையும் பகிர்ந்து கொள்ள முடியும். பரலோகத் தகப்பன், இப்பூமியில் நமக்குத் 'தேவையான' யாவற்றையும் தருவார் என நாம் நம்பியிருக்கவும் முடியும்!

நமக்குரிய சிக்கல்களை தேவன் மாற்றும்படி அவரிடம் நாம் கேட்பதற்கும்; அதன் மூலம் சிக்கல்கள் மாறுவதை ருசிப்பதற்கும்; ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்கு கற்றுக் கொடுத்திருக்கிறார். இதுவே ஜெபத்தினால் விளையும் அற்புதமாகும்! நமக்கு ஏற்படும் சம்பவங்கள் நமக்கும் நம் குடும்பத்திற்கும் ஏதேனும் ஒரு வகையில் ஊறு விளைவிக்கும்போது, "எது நடந்தாலும் தேவ சித்தம்தான்!" என விதிப்பயனாக நாம் ஏற்றுக்கொள்ளத் தேவையே இல்லை! விதிப்பயனுக்கும், தேவனுடைய சித்தத்திற்கு அடங்கி இருப்பதற்கும் ஏராளமான வித்தியாசங்கள் உண்டு. ஆம், ஜெபத்தில், நமக்குத் "தேவையான" யாவற்றையும் கேட்பதற்கே நாம் ஊக்குவிக்கப் படுகிறோம்!!

வேதாகமத்தில் உள்ள வாக்குதத்தமும், "தேவன் உங்கள் குறைவையெல்லாம் (தேவையெல்லாம்) நிறைவாக்குவார்" என்றே இருக்கிறது (பிலிப்பியர் 2:19).

இருப்பினும், ஞானமுள்ள எந்த ஒரு தகப்பனைப் போலவே நாம் விரும்புவதையெல்லாம் அவர் தரமாட்டார்! நமக்குத் 'தேவையானவைகள்' எவைகளோ, நமக்கு நல்லது என அவர் காண்பவைகள் எவைகளோ, அவைகளை மாத்திரமே நமக்குத் தருவார்!

***ஜெபம் :*** *எங்களிடம் பட்சம் நிறைந்த பரம தகப்பனே! இனியும் நாங்கள் "தனியாய்" துன்பம் அடைந்திட தேவையில்லையே! எங்கள் பாரங்கள் யாவையும் உம்மிடம் கூறி பதில் பெற்றிட தயை புரியும்! ஆமென்.*

**பாவத்தின்மேல் வெற்றி நிச்சயம்!**

*விசுவாசமில்லாமல் தேவனிடமிருந்து ஒன்றையும் நீங்கள் பெற்றுக் கொள்ள முடியாது என்பதை சாத்தான் நன்கு அறிவான். அப்படியானால் உங்கள் இருதயத்தை எவ்வளவாய் அவிசுவாசத்தால் நிறைப்பதற்கு அவன் முயற்சி செய்வான் என்பதை சற்று எண்ணிப் பாருங்கள்! அவிசுவாசமானது, பொய் சொல்லுதல் விபச்சாரம் செய்தலைவிட பயங்கர அபாயம் நிறைந்தது. ஏனெனில் பிறவற்றை நாம் பாவங்கள் என்று எளிதில் கண்டுகொள்ள முடியும். ஆனால் அவிசுவாசம் அப்படியல்லவே! அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம், ஜீவனுள்ள தேவனைவிட்டே விலகுவதற்குக் காரணமாகி விட முடியும் என்று எபிரெயர் 3:12-ம் வசனம் நம்மை எச்சரிக்கிறது. ஆம், அவிசுவாசமே எல்லாப் பாவங்களுக்கும் வேர்!!*

*"நாம் கிருபைக்கு கீழ்ப்பட்டிருந்தால் பாவம் நம்மை ஆளுகை செய்யவே முடியாது" என்று ரோமர் 6:14-ம் வசனம் திட்டமாய் கூறுகிறது. மிக வெளிப்படையான இவ்வசனத்தை ஒரு சிறுபிள்ளை கூட புரிந்துகொள்ள முடியும்! இவ்வாறெல்லாம் இருந்தும், அநேக விசுவாசிகள் பாவத்தின்மேல் பூரண வெற்றியுள்ள வாழ்க்கை வாழமுடியும் என்ற சத்தியத்தை விசுவாசிக்கவில்லையே!!*

*நீங்கள் வெற்றி வாழ்க்கை வாழவே தேவன் விரும்புகின்றார்! உங்கள் சிந்தனை ஜீவியம் எவ்வளவு அருவருப்பாய் இருந்தால் என்ன? எவ்வளவோ காலம் நீங்கள் கோபத்தால் தோற்கடிக்கப்பட்டிருந் தாலும் என்ன? இவை எல்லாம் ஒரு பொருட்டல்ல! தேவன் உங்களை நூற்றுக்கு நூறு விடுதலை செய்து சுத்த இருதயத்தை உங்களுக்கு கொடுத்திட முடியும்! ஆனால் இவையெல்லாவற்றையும், உங்களிடம் விசுவாசம் இல்லையென்றால், அவரால் ஒன்றும் செய்யவே முடியாது!*

*நாம் இருதயத்தில் விசுவாசிப்பதை, வாயினால் அறிக்கை செய்ய வேண்டும் என்றல்லவா வேதம் கூறுகிறது (ரோமர் 10:10). இது ஓர் மிக முக்கியமான கோட்பாடாகும்! ஏனெனில், வாயினால் அறிக்கை செய்வதின் மூலமாகவே நம் இருதயத்தின் விசுவாசத்தை நாம் பிரதிபலித்திட முடியும். இதன் விளைவுதான், எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுதலையாகும் இரட்சிப்பிற்குள் நம்மை நடத்துகிறது. ஜெயம் சொற்ப நாட்களில் வந்துவிடாது! எனவே கொஞ்சமும் அதைரியம் அடைந்துவிடாதீர்கள். . . தேவன் உங்கள் வாயின் அறிக்கையை நிச்சயம் கனப்படுத்துவார்!!*

***ஜெபம் :*** *எங்கள் பரமபிதாவே! எங்களை அணுகும் பாவத்தை ஜெயித்து வாழ முடியும் என்ற விசுவாசத்தை இன்று எங்கள் இருதயத்தில் தந்தமைக்காய் உமக்கே நன்றி! ஆமென்.*

### துன்பத்தில் ஆவிக்குரிய வளர்ச்சி!

நாஸ்திகன் நம்மைப் பார்த்து, "ஓர் அன்புள்ள தெய்வம், உங்களை எப்படி இவ்வளவு துன்பங்களைக் கடந்து வர அனுமதிப்பார்?" என்று கேட்கலாம். ஆவிக்குரிய கல்வித் திட்டத்தில் துன்பமும் ஒரு பகுதி என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியாது. ஆம்! துன்பத்தின் மூலமாகவே தேவன் தன்னுடைய பிள்ளைகளை முதிர்ச்சி பெற நடத்துகிறார். நீங்கள் துன்பம் அடைவதற்கு அதிகமான சந்தர்ப்பம் இல்லாதிருந்தால், நீங்கள் வளர்ச்சியும் அடையமாட்டீர்கள் என்பதுதான் பொருள்!

ஒருவேளை, கடந்தமுறை கொஞ்ச துன்பத்திலேயே நீங்கள் முறுமுறுத்து குறை கூறியதால், உங்கள் சொந்த வழியிலேயே செல்வதற்கு தேவன் அனுமதித்திருப்பார். "இப்படி" தேவன் உங்களை ஓர் அறையில் ஒதுக்கி வைப்பது, மிகவும் துக்கம் நிறைந்ததாகும். இவ்வாறு ஓர் அறையில் தேவனால் ஒதுக்கப்படுவதைவிட என் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும் நான் பாடுகளுக்குள் பிரவேசிப்பதே பாக்கியம்!

தேவன் நம்மைத் துன்பத்தின் பாதையில் நடத்தும்போது, மற்றவர்களோடு நம்மை ஒப்பிடுவது மதியீனமாகும். எப்படியென்றால், உங்கள் பிள்ளைகள், "தாங்கள் மாத்திரம் பள்ளிக்குச் செல்லும்போது, சேரியில் உள்ள பிள்ளைகள் நாள் முழுவதும் மண்மேட்டில் விளையாடுகிறார்களே!" என வியப்பதற்கு ஒப்பாகும். தேவன் நம்மோடு இடைப்படும் கிரியை யாவும் அவர் நம்மீது வைத்த பூரண அன்பினாலேயே கிரியை நடப்பிக்கிறார். நாம் சந்தோஷமாய் இருக்கவே தேவன் விரும்புகிறார்... ஆனால், நுரைபோன்ற மேற்பூச்சான இவ்வுலக சந்தோஷம் அல்ல. . . மாறாக, பரிசுத்த ஜீவியத்தின் மூலமாய் வரும் உண்மையாய் நிலைத்து நிற்கும் சந்தோஷம்! நாம் பரிசுத்தம் அடைவதற்குத் துன்பத்தைக் கடந்து வருவதல்லாமல் வேறு வழியே இல்லை என வேதம் திட்டமாய் கூறுகிறது (எபிரெயர் 12:10).

இப்பூமியில் நடந்த எல்லோரைக் காட்டிலும் மகிழ்ச்சி நிறைந்த மனிதர் இயேசு ஒருவரே! இருப்பினும் எல்லோரைக் காட்டிலும், அதிகமாய் துன்பம் அடைந்ததும் அவர் ஒருவரே! தன் பிதா பூரண அன்புள்ளவர் என்பதை அவர் அறிந்திருந்தார். எனவேதான், பிதா அனுப்பிய எல்லா வழிகளுக்கும் தன்னைப் பெருமகிழ்ச்சியுடன் ஒப்புக்கொடுத்தார்! அவரது முழுமையான வெற்றி வாழ்க்கையின் இரகசியமும் இதுதான்!!

***ஜெபம்*** : *இரக்கமுள்ள எங்கள் பிதாவே! துன்பத்தில் 'ஆவிக்குரிய வளர்ச்சி' அடையும் வழியை இப்போது கண்டுகொண்டோம்! இனி, பொறுப்புடன்வாழ தயை புரியும்.... ஆமென்.*

## மனச்சோர்விலிருந்து விடுதலை!

என் கிறிஸ்தவ வாழ்க்கையை புரட்சியான மாற்றம் செய்த ஓர் சத்தியம் உண்டு. அதென்னவெனில், "பிதா, இயேசுவை நேசித்ததுபோலவே நம்மையும் நேசிக்கிறார்" (யோவான் 17:23) என்று இயேசு நமக்கு அருளிய உன்னத வெளிப்பாடேயாகும்.

பொதுவாய் எல்லா கிறிஸ்தவர்களுமே, பரலோகத்தில் அன்புள்ள பிதா ஒருவர் இருக்கிறார் என்பதை எழுத்தளவில் விசுவாசிக்கின்றனர். ஆனால் இவர்கள் அடிக்கடி கவலையுற்று, பதட்டம் அடைந்து, ஓர் பாதுகாப்பற்ற பயத்துடன் வாழும் வாழ்க்கை, இவர்கள் தங்கள் இருதயத்தின் ஆழத்திலிருந்து இச்சத்தியத்தை விசுவாசிக்கவில்லை என்பதையே நிரூபிக்கிறது. இருப்பினும், இயேசுவை தேவன் எவ்வளவு நேசித்தாரோ அதே அளவு நம்மையும் நேசிக்கிறார் என்ற துணிவான விசுவாசம் கொள்ள கொஞ்சம் பேர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்!

இம்மாபெரும் சத்தியத்தைக் காணும்படி உங்கள் கண்கள் மாத்திரம் திறக்கப்பட்டுவிட்டால் உங்கள் வாழ்க்கையின் முழு அணுகுமுறையையும் இச்சத்தியம் மாற்றிவிடும்! மாத்திரமல்ல, உங்கள் வாழ்க்கையில் உள்ள எல்லா முறுமுறுப்பும், மனச்சோர்வும், நம்பிக்கையின்மையும் அழிந்து ஒழிந்துபோகும்! இப்படியெல்லாம் நடப்பது சாத்தியமென்று நான் அறிந்திருக்கிறேன். ஏனெனில், இவையாவும் என் வாழ்க்கையில் நிறைவேறியிருக்கிறதே!!

அநேக ஆண்டுகள் நான் மனச்சோர்விற்கு அடிமையாக வாழ்ந்து தோற்கடிக்கப்பட்டவன். இவ்வாறு நான் இருந்தது பிதாவின் சித்தம் இல்லைதான், இருந்தாலும் நானோ அதிலிருந்து விடுதலையாக முடியாமல் தவித்தேன். என்ன விந்தை! "பிதா இயேசுவை நேசித்தது போலவே என்னையும் நேசிக்கிறார்" என்ற சத்தியத்தைக் காண என் கண்கள் திறக்கப்பட்ட 'அந்த நாளிலிருந்து' எல்லாம் அடியோடு மாறிவிட்டது!! என் வாழ்வின் பாதைக்குள் பிரவேசிக்கும் ஒவ்வொன்றும், என் அன்பின் பிதாவின் கையிலிருந்தே வருகின்றன என்பதை இப்போது தெளிவாய் காண்கிறேன். அவர் என்னைக் கண்ணின் மணிபோல் காக்கிறதைக் கண்டுகொண்டபடியால், இப்போது என் வாழ்வின் எந்த சூழ்நிலையும், என்னை முறுமுறுக்கவோ, மனச்சோர்வடையவோ செய்திட முடிவதில்லை!! ஆ! இப்போது, "தேவன் இயேசுவை நேசித்தது போலவே என்னையும் நேசிக்கிறார்" என்ற சத்தியம் என் வாழ்வில் அசைக்க முடியாத அஸ்திவாரமாய் ஆகிவிட்டது!!

**ஜெபம்** : *நேசமுள்ள பரமதகப்பனே! "இயேசுவை நேசித்ததுபோலவே என்னையும் நேசிக்கும்" உமது அன்பை என் கண்கள் கண்டுவிட்டன! மனசோர்வை அகற்றிய உம் சத்தியத்திற்கு நன்றி! ஆமென்.*

**சுய – அனுதாபத்திலிருந்து விடுதலை!**

"என்னை யாரேனும் நேசிக்கமாட்டார்களா?" என்று ஏங்கி நிற்கும் ஜனங்களால் இவ்வுலகம் நிறைந்திருக்கிறது. அநேக கிறிஸ்தவர்களும், தாங்கள் நேசிக்கப்படும்படியாக சபைவிட்டு சபை செல்லுகிறார்கள்! சிலர் நண்பர்களிடமும், சிலர் திருமண உறவிலும் அவ்வன்பைத் தேடுகிறார்கள். ஆனால் பரிதாபம்! இவ்விதமாய்த் தேடுவதின் பிரதிபலன் ஏமாற்றத்திலேயே முடிவடைகிறது!! அனாதைகளைப் போல, இவ் ஆதாமின் பிள்ளைகள் பாதுகாப்பற்றவர்களாய் மீண்டும் மீண்டும் "சுய-அனுதாப நோயினால்" பீடிக்கப்படுகிறார்கள். இதில் வேதனை என்னவென்றால், மனந்திரும்பிய அநேகர்கூட, இன்னமும் இக்கொடிய பாதுகாப்பற்ற நிலையிலேயே இருக்கின்றனர்! இவ்வாறு இருக்க வேண்டியது நிச்சயமாய் அவசியமேயில்லை!!

இப்பிரச்சனைகளுக்கு சுவிசேஷம் அளிக்கும் விடை யாது? தேவனுடைய அன்பில் பாதுகாப்பைக் கண்டுகொள்வதுதான் இதற்கு நிரந்தரமான விடை! மறுபடியும் மறுபடியும், இயேசு தன் சீஷர்களுக்கு, அவர்களுடைய தலையின் மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறதென்றும், கோடிக்கணக்கான பறவைகளைப் போஷிக்கிறவர், கோடிக்கணக்கான மலர்களை உடுத்துவிக்கிறவர் நிச்சயமாய் உங்களையும் பராமரித்துக் காப்பார் என்றும் உறுதிபட கூறினார். இவையெல்லாவற்றிற்கும் மேலாக, "தம்முடைய சொந்த குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர் அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" என்று ரோமர் 8:32-ம் வசனம் அறைகூவி முழங்குகிறது.

இதைத்தான், "இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தல்" என புதிய ஏற்பாடு விளம்புகிறது. "(நம்மீது தேவன் கொண்ட பூரண அன்பை) விசுவாசித்தவர்களாகி நாமோ, அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்" (எபிரெயர் 4:3) என்றே வாசிக்கிறோம். மேலும், இந்த இளைப்பாறுதலுக்குள், நம் முழு இருதயத்தோடும் நாம் பலவந்தம் செய்து பிரவேசிக்க வேண்டும் எனவும் வேதம் வலியுறுத்திக் கூறுகிறது (எபிரெயர் 4:11). இந்த இளைப்பாறுதலைக் கண்டடையாதவர்களே மிக எளிதில் அலைக்கழிக்கப் பட்டு வீழ்ச்சியடைவார்கள்!

**ஜெபம்** : *பேரன்பு கொண்ட பரம தந்தையே! பாடி மகிழும் ஆகாயத்துப் பறவைகளைவிட வண்ணமலர்களைவிட எங்களை 'எவ்வளவு அதிகமாய்' நேசிக்கிறீர்! 'சுய அனுதாப நோய்' இன்றே எங்களைவிட்டு மாய்ந்துவிட்டது!! உமக்கு நன்றி...... ஆமென்.*

## 'உண்மையான' மனந்திரும்புதல் வேண்டும்!

*"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் (அதுவே ABC பாடமாகும்)" என சத்திய வேதம் விளம்புகிறது (நீதி.9:10). "பாவத்தை விட்டு விலகி" ஜீவிப்பதே நாம் உண்மையாகவே கர்த்தருக்குப் பயப்படுதலாகும் என நீதிமொழிகள் 3:7 கோடிட்டுக் காட்டுகிறது. எனவே, மனந்திரும்பி பாவத்தைவிட்டு விலகாத யாராயிருந்தாலும் கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆரம்ப ABC பாடத்தைக்கூட கல்லாதவர்கள்தான்!*

*நீங்கள் மனந்திரும்பியிருக்கிறீர்களா? அப்படியானால், உங்கள் மனந்திரும்புதல் உண்மையானதுதானா என்பதையும் நீங்கள் உறுதி செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். ஏனென்றால், இன்று சாத்தான் போலியான மனந்திரும்புதலின் மூலமாய் "எண்ணற்ற ஜனங்களை" ஏமாற்றி வஞ்சித்திருக்கிறான்!*

*"நீ ஒருவராலும் பிடிபடமாட்டாய்!" என்ற தைரியத்தின் அடிப்படையில் இன்று அநேக ஜனங்கள் ஜீவித்துக் கொண்டிருப்பதை சாத்தான் நன்கு அறிந்திருக்கிறான். ஆகவே, ஒருவராலும் பிடிக்கப்படாமல் எவ்விதம் பாவம் செய்ய முடியும் (!?) என்ற தந்திர உபாயங்களையெல்லாம் அவர்களுக்கு சாத்தான் இன்று போதித்து வருகிறான். 'ஓர் திருடன்கூட' தான் பிடிபட்டுவிட்டால் மிகவும் மனம் வருந்துவான்! ஆனால், அது உண்மையான மனந்திரும்புதல் இல்லவே இல்லை!!*

*இவ்வாறு போலியாய் மனந்திரும்பிய சில உதாரணங்களை வேதாகமத்திலும் நாம் பார்க்கிறோம். சவுல் ராஜா தேவனுக்குக் கீழ்ப்படியாமற் போனதும், தான் பாவம் செய்ததாக சாமுவேல் தீர்க்கதரிசியிடம் ஒத்துக்கொண்டான். ஆனால் தன்னுடைய மீறுதலை ஜனங்கள் அறிந்துகொள்ளுவதற்கோ அவன் விரும்பவேயில்லை. அக்கொடிய நேரத்திலும், அவன் மானிடரின் மதிப்பைத் தேடினான்! ஆம், உண்மையான மனந்திரும்புதலை அவன் அடையவே இல்லை! தான் கையும்மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்டதினிமித்தமே சவுல் துக்கமடைந்திருந்தான் (1 சாமுவேல் 15:24-30). ஆனால், தாவீது ராஜாவோ இந்த சவுலுக்கு முற்றிலும் மாறுபட்டுக் காணப்பட்டான். தாவீது ராஜா பாவத்தில் வீழ்ச்சியடைந்தபோது, அவைகளைப் 'பகிரங்கமாய்' அறிக்கை செய்தே மனந்திரும்பினான்! (சங்கீதம் 51).*

***ஜெபம்:*** *அன்புள்ள பரம பிதாவே! எங்களின் மனந்திரும்புதல் உண்மையானதுதானா? என சோதித்தறிய உதவி புரிந்தீர்! உமக்கே ஸ்தோத்திரம்!! ஆமென்.*

**ஒவ்வொரு பாடுகளிலும் ஓர் தேவ நோக்கம் உண்டு!**

*"நம் வாழ்க்கையில் குறுக்கிட தேவன் அனுமதிக்கும் ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் அவருடைய "மகிமையான நோக்கம்" ஒன்று உண்டு என நாம் கண்டுகொள்வோமென்றால், அது எத்தனை பெரிய மகிழ்ச்சியான அற்புத வாழ்க்கை! அவர் நம்முடைய ஜெபங்களுக்கு "இல்லை" என்று பதிலுரைத்தாலும், அதுவும் அவரது பூரண அன்பின் இருதயத்திலிருந்தன்றோ பிரவாகிக்கிறது!!*

*வனாந்திரத்தில் இஸ்ரவேல் ஜனங்களைக் கடிக்கும்படி தேவன் கொள்ளிவாய் சர்ப்பங்களை அனுப்பினாரே, அதுவும் அவரது அன்பின் கிரியை தானோ? (எண்ணாகமம் 21:6). நிச்சயமாக அப்படித்தான்! ஏனெனில், இதன் மூலம்தான் தேவன் அவர்களை மனந்திரும்பும்படிச் செய்து, தான் அவர்களை ஆசீர்வதிக்கும்படி அவரிடம் அவர்களைத் திரும்பக் கொண்டுவர முடிந்தது! அவரோ அவர்களை ஆசீர்வதிக்க விரும்பினார் . . . ஆனால், அவர்கள் மனந்திரும்பும்வரையில் அது அவரால் கூடாத காரியமாய் இருந்தது!!*

*"நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற திட்டங்களை நான் அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக் கேதுவான நினைவுகளே - அது உங்களுக்கு எதிர்கால முடிவையும் நம்பிக்கையையும் கொடுக்கும்" என்றே கர்த்தர் உரைக்கிறார்! (எரேமியா 29:11).*

*இவ்வுலகமானது, நோய் நொடிகளாலும், விஷப்பாம்புகளாலும் நிறைந்த பாதுகாப்பற்ற இடமாய் தேவன் அனுமதித்ததற்கு ஓர் காரணம் உண்டு! அதென்னவெனில், ஜனங்கள் தங்கள் துன்பத்தில் தன்னிடம் திரும்பவும், அவர் அவர்களை ஆசீர்வதிக்கவுமே ஆகும்!! எனவே, சாத்தான் கொண்டுவரும் எல்லாத் தீமையானவைகளையும் தேவன் எவ்வாறு தன் நோக்கம் நிறைவேறும்படி கிரியை செய்ய உபயோகிக்கிறார் என்பதை இப்போது நாம் காணமுடிகிறது! நித்தியத்திற்குள் பிரவேசித்தவர்களை நாம் கண்டு, பாம்புக் கடியையும்; பொருளாதார நெருக்கடியையும்; புற்றுநோய் போன்றவற்றையும் தேவன் எவ்வாறு உபயோகித்து அவர்களைப் பாவத்திலிருந்து விலக்கி அவருடைய பிள்ளையாய் மாறும்படிச் செய்தார் என்று கேட்கும்போது, நாம் இச்சத்தியத்தைப் பூரணமாய் அறிந்து கொள்ளுவோம்! மேலும், தேவன் எவ்வாறு பாடுகளை உபயோகித்துத் தன் பிள்ளைகளைப் பரிசுத்தப்படுத்தவும், அவருடைய சுபாவத்தை அடையவும் செய்தார் என்றும் அன்று கேட்டறிவோம்!!*

***ஜெபம்*** : *இரக்கமுள்ள எங்கள் பிதாவே! பாடுகளை அற்பமாய் எண்ணாமல், அதன் மூலம் உம் நோக்கம் எங்களில் நிறைவேற அருள்புரியும்! இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

**எந்நிலையிலும் மகிழ்ச்சி இழக்காத ஜீவியம்!**

*"சில சமயங்களில், நாம் திடீரென்று பணத்தை இழக்கவோ அல்லது மனசாட்சியற்ற மக்களால் ஏமாற்றப்படவோ" தேவன் ஏன் அனுமதிக்கிறார்? நம்மில் அநேகர் நெரிசலான புகைவண்டியில் அல்லது பஸ்களில், நம் பணம் "பிக்பாக்கெட்" அடிக்கப்படும் அனுபவத்தையும் அடைந்திருக்கிறோம். நானோ, இவ்விதமான நேரங்களை இந்தத் திருடர்கள் அல்லது ஏமாற்றுக்காரர் களுக்காய் ஜெபிக்கும் நல்ல தருணமாகவே எடுத்துக்கொள்கிறேன். இவையெல்லாவற்றிற்கும் மேலாக தேவன் அதிகமாய் விரும்புவதெல்லாம், பணத்தோடும் - உலகப்பொருட்களோடும் உள்ள நம்முடைய அசாதாரணமான பிடிப்பிலிருந்து நாம் விடுபட வேண்டும் என்பதேயாகும்! நாம் இழந்த ஒவ்வொரு ரூபாயையும் விரல்விட்டு எண்ணி ஏங்கிக் கவலைகொள்ளவோ அல்லது நாம் லாபமடையும் ஒவ்வொரு பணத்திற்காகவும் மகிழ்ச்சியடையவோ தேவன் ஒருபோதும் விரும்புவதில்லை! ஆம், நாம் "அவரில்" களிகூர்ந்து மகிழ்ந்திருக்கவே அவர் விரும்புகிறார். இந்த மகிழ்ச்சி எப்படிப்பட்டது? உலக லாபம் கிடைத்துவிட்டதால் கூடவோ, அல்லது உலக நஷ்டத்தால் சற்றும் குறையவோ முடியாத மாறாத மகிழ்ச்சி!*

இப்பூமியில் இயேசு இவ்விதமாய்த்தான் நடந்துகொண்டார். இப்போது நாமும் அவர் நடந்தபடியே நடப்பதற்கு அழைக்கப்படுகிறோம். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" (பிலிப்பியர் 2:5) என்றல்லவா வேதம் கூறுகிறது. இயேசுவுக்கு யாராவது, அவருடைய ஊழியத்தால் ஆசீர்வதிக்கப்பட்டதினிமித்தம் நன்றியுணர்வோடு "பத்தாயிரம் ரூபாய்" கொடுத்திருப்பார்களென்றால், இச்செயல் அவருடைய சந்தோஷத்தை இம்மி அளவுகூட அதிகரிக்க முடிந்திருக்காது! ஏனெனில் அவர் பிதாவின்மேல் வைத்த சந்தோஷம் "ஏற்கனவே" நிறைந்ததாகவும், வழிந்தோடுவதாகவும் இருந்தது!! அதுபோலவே, உலகப்பொருட்களின் நஷ்டத்தாலும் அவருடைய சந்தோஷம் குறைந்திட முடியாததாய் இருந்தது! இயேசுவுக்கு அன்பளிப்பாய் வந்த அதிகமான பணத்தை யூதாஸ்காரியோத்து சுரண்டி சுரண்டி திருடிக் கொண்டிருந்தான். இயேசுவும் இதை நன்கு அறிந்திருந்தார். அவர் யூதாஸ்காரியோத்துக்காக மனம் வருந்தினாலும், தான் இழந்த பணத்திற்காக ஒருபோதும் 'மனக்கிலேசம்' அடையவேயில்லை!

**ஜெபம்** : *நேச பரம பிதாவே! "உம்மில் மகிழ்ந்திருக்கும்" நிலையான மகிழ்ச்சியே எனக்கு வேண்டும்! மாய உலக மகிழ்ச்சியிலிருந்து விடுபட அருள்புரியும்! இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

**தேவன் உங்கள் வாழ்வில் இடைபட அனுமதியுங்கள்!**

*"நீங்கள் கிறிஸ்துவைப்போல் மாறும் ஜீவியத்தில்" முழுவிருப்ப முள்ளவராயிருந்தால், தேவன் உங்களை உலகப்பொருளின் ஆசை, மனுஷீக கனத்தை தேடுதல், சுய அனுதாபம் போன்ற அநேக கிறிஸ்துவற்ற மனோபாவத்திலிருந்து விடுதலையாக்குவதற்கு ஏதுவாய் எண்ணற்ற நிகழ்ச்சிகள் உங்கள் வாழ்க்கையில் நிகழ்வதற்கு அனுமதிப்பார். ஆனால் 'உங்களுக்கு விருப்பம் இல்லையென்றால்' இவ்வித வழி செல்வதற்கு அவர் ஒருபோதும் வற்புறுத்தமாட்டார்! உங்களைச் சுற்றியுள்ள அநேக விசுவாசிகளின் தரம் குறைந்த தோற்கடிக்கப்பட்ட வாழ்க்கையில் நீங்களும் திருப்தியுற்றிருந்தால், உங்களை அப்படியே தனியே ஒதுக்கி வைத்துவிடுவார். ஆனால் தேவனுக்குரிய மேன்மையான காரியத்தில் நீங்கள் தாகம் உள்ளவராயிருந்தால், உங்களிடம் அவர் தீவிரமாய் செயல்பட்டு உங்களை அழித்துக் கொண்டிருக்கும் "புற்றுநோயை" வெட்டி எறிவார்! உங்களைக் கறைப்படுத்தும் "விக்கிரகங்களை" அழித்து ஒழிப்பார்! நீங்கள் துயரமடையவும், ஏமாற்றம் அடையவும், நஷ்டமடையவும், நம்பிக்கை குலையவும், இழிவுபடுத்தப்படவும், அநீதியாய் புறங்கூறப்படவும் அவர் அனுமதிப்பார்! எதற்கு? நீங்கள் இனி ஒருபோதும் அசைக்கப்பட முடியாத ஸ்தானத்திற்கு அவர் உங்களைக் கொண்டுவரும்படிக்குத் தான்!! அதற்குப் பிறகு, நீங்கள் பணக்காரராய் இருந்தாலோ, ஏழையாய் இருந்தாலோ, அவமதிக்கப்பட்டாலோ, இவையொன்றும் உங்களில் எந்த வித்தியாசத்தையும் கொண்டுவர முடியாது!! இம்மண்ணுலகின் ஒவ்வொரு காரியத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் மரணத்தை அடைவதால், இயேசுவின் வாழ்க்கையில் பங்குள்ளவர்களாய் மாறி, இவ்வுலகில் நீங்கள் ஒரு ராஜாவைப்போல நடக்க ஆரம்பிப்பதை நீங்களே காண்பீர்கள்! (2 கொரிந்தியர் 4:10).*

*சுயத்திற்கு மரிப்பதின் "விலைக்கிரயத்தை" மிகக் கொஞ்சம் பேர்களே செலுத்த விரும்புகிறபடியால், கிறிஸ்துவின் பரிபூரண ஜீவியத்தை அடையும் வழியைக் கண்டுகொள்பவர்களும் மிகச் சிலராகவே இருக்கின்றனர். உங்கள் 'சுயம் உடைவதற்கு' உங்களை தேவனுக்கு விட்டுக்கொடுங்கள்! நாம் சுயத்திற்கு மரிக்கவில்லையென்றால், விசுவாசத்தினால் ஜீவிப்பதென்பதும் ஒருபோதும் முடியாது!*

**ஜெபம் :** *ஓ, எங்கள் தகப்பனே! எங்கள் 'சுயம்' மரிக்காமல் கிறிஸ்துவின் வாழ்வை பெற இயலாது என்பதை கண்டுகொண்டோம்! நாள்தோறும் சுயத்திற்கு மரிக்க அருள்புரியும்! இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

**முழு அர்ப்பணத்தில் தேவனின் பூரண பாதுகாப்பு!**

*யோவான் 17:23-ல் இயேசு இவ்வுலகத்திற்காகவோ அல்லது மனுஷீகக் கிறிஸ்தவர்களுக்காகவோ (Carnal Chrisitans) ஜெபிக்க வில்லை. மாறாக, "எல்லாவற்றையும்" வெறுத்துவிட்டு அவரைப் பின்பற்றிய 11-சீஷர்களுக் காகவே ஜெபித்தார்! இவர்களே, இம்மண்ணுலக மக்களும்-மாம்ஷீகக் கிறிஸ்தவர்களும் கண்டுகொள்ள முடியாத "பிதாவின் அன்பின் பாதுகாப்பைத்" தங்கள் வாழ்வில் மெய்யாய் கண்டவர்கள்!*

*இன்று ஏன் அநேக கிறிஸ்தவர்கள் "மாம்ஷீகக் கிறிஸ்தவர்களாய்" இருக்கின்றனர்? ஏனெனில் பிசாசானவன், இவர்கள் தங்களைத் தேவனுக்குப் பூரணமாய் ஒப்புக்கொடாமல் "இம்மண்ணுக் குரியதையும்- விண்ணுக்குரியதையும் சேர்த்துப் பெற்றுக்கொண்டு" அதிக சந்தோஷமாய் இருக்கலாம் என அவர்களை சிந்திக்க வைத்து ஏமாற்றியிருப்பதால்தான்! ஆனால், இது ஓர் கொடிய வஞ்சகம்!! நாம் தேவனுடைய பரிபூரண அன்பை விசுவாசித்திருப்போமென்றால் "கொஞ்சம்கூட" நமக்கென்று ஏதும் "பதுக்கிக்கொள்ளாமல்" எல்லாவற்றையும் மனப்பூர்வமாய் அவருக்கு ஒப்புக் கொடுத்திருப்போம்! அப்படிச் செய்திருந்தால் பிலிப்பியர் 4:6,7-ல் வேதம் சொல்லுகிறது போல "எல்லா" பதட்டமான கவலைகளிலிருந்தும் நாம் "பரிபூரணமாய்" விடுதலையாகி யிருப்போம்! ஆனால், மாம்ஷீகக் கிறிஸ்தவர்களோ, "எங்கே இந்தப் படகு நடுவில் புயலினிமித்தம் கவிழ்ந்துவிடுமோ" என்று எப்போதும் சந்தேகித்து சஞ்சலத்துடன் இருப்பார்கள்! பிதாவின் பூரண அன்பில் பாதுகாப்பாயிருந்த இயேசுவால், புயலினூடேயும் 'ஆழ்ந்த நித்திரையாய்' இளைப்பாற முடிந்தது. ஏனெனில் "இவ்விதமாகப்" பிசாசு தன்னை மூழ்கடிக்க ஒருக்காலும் முடியாது என இயேசு நன்றாய் அறிந்திருந்தார். ஏனெனில், அந்தப் பிதா இயேசுவை எப்போதும் கண்ணுறங்காமல் காவல் புரிகிறாரே! இவ்விதமாக, இயேசுவை நேசித்துக் காத்துக்கொண்டது போல பிதா நம்மையும் நேசித்துக் காக்கிறார் என்பதை நாம் அறிந்து கொண்டோமென்றால் இவ்வாழ்க்கையின் மகத்துவம் தான் என்னே!!*

***ஜெபம்** : எங்களின் அன்பு தகப்பனே! எங்களை முழுமையாய் உம்மிடம் அர்ப்பணிக் காமல் உமது "பூரண" பாதுகாப்பு இல்லை என்பதை உணர்ந்து, இன்றே எங்களை "முழுவதும்" அர்ப்பணிக்கிறோம்! இயேசுவின் நாமத்தில் ஜெபம் கேளும், ஆமென்.*

**தம்முடையவர்களை 'மதிலாய்' நின்று காக்கும் தேவன் !**

*சா*த்தானோ அல்லது நம்மை வெறுப்பவர்களோ நம்மைப் பலவிதத்தில் துன்புறுத்துவதற்கு விரும்பலாம்! "ஆனால்" தேவனுடைய அனுமதியில்லாமல் அவர்கள் நம்மை நெருங்கவே முடியாது!! பழைய ஏற்பாட்டில், யோபுவை எந்தத் தீங்கும் தொடமுடியாதபடி தேவன் அவனைச் சுற்றி வேலியிட்டுக் காத்ததை சாத்தான் உணர்ந்திருந்தான் (யோபு 1:10). இருப்பினும், யோபுவை பரிசுத்தப்படுத்தும்படிக்கு, தேவன் அந்த வேலியை "கொஞ்சம்" திறக்கும்படி செய்து, அவனைத் தாக்குவதற்கு சாத்தானை அனுமதித்தார். வேலியை எவ்வளவு திறக்க வேண்டும்? என்பதை 'தேவனன்றோ' தீர்மானித்து நியமனம் செய்தார்! ஆரம்பத்தில் 'கொஞ்சம்' திறக்கப்பட்டது! (யோபு 1). அதற்குப் பிறகு 'சற்றே அதிகமாய்' திறக்கப்பட்டது! (யோபு 2). இவ்வாறு தேவன் திறந்த அந்த வேலியின் வழியாகவே சபேயர்களும், கல்தேயர்களும் நுழைந்து யோபுவின் சம்பத்துக்களைக் கொள்ளையடித்தார்கள் (யோபு 1:15,17). யோபுவின் பிள்ளைகள்மேல் வீடு தகர்ந்து விழும்படியாக வீசிய பெருங்காற்றுகூட, இவ்வாறு தேவன் திறந்த வேலியின் வழியாகத்தான் பிரவேசித்தது. இருப்பினும், யோபுவின் சரீரத்தை நோய் தாக்கும் அளவிற்கு 'இன்னும் கொஞ்சம் அதிகமாய்' திறந்தபின்புதான் "நோயும்" உள்ளே பிரவேசித்து யோபுவை வாதிக்க முடிந்தது!

தனக்கு நிகழ்பவைகளையெல்லாம் தேவன் "கண்ட்ரோல்" (Control) செய்து கொண்டிருக்கிறார் என்பதை யோபு முதலில் அறிந்து கொள்ளவில்லை. எல்லாம் நிறைவேறி முடிந்த பின்புதான் அதை அறிந்துணர்ந்தான். அவனுக்கு நம்மைப்போல் எழுதிவைக்கப்பட்ட வேத வசனங்கள் இல்லாதபடியால், நாம் யோபுவைக் குறைசொல்லவே முடியாது! ஆனால் இப்போதோ, தேவனுடைய பிள்ளைகளைச் சுற்றியுள்ள வேலியை ஆளுகை செய்பவர் இன்னார் என்பதை அறிவிக்கும் வேதவசனம் நம்மிடம் இருக்கிறது! நம்மைச் சுற்றிலும் அக்கினி மதிலாக தேவனே அந்த வேலியாய் இருக்கிறார் என்று சகரியா 2:5 பறைசாற்றுவதையும் நாம் அறிந்திருக்கிறோம்! ஆனால் பரிதாபம்..... எலிசாவின் வேலையாளைப்போலவே, இப்பரலோக உண்மையைக் காணமுடியாதபடி நம் கண்கள் அடிக்கடி குருடாய் போய்விடுகிறது. நம்மைச் சுற்றி உள்ள அக்கினி மதிலை நம் கண்கள் காண்பதே இல்லை. எலிசாவினால் இதைக் காண முடிந்ததால் அவன் கொஞ்சமும் பயம் அற்று இருந்தான் (2இராஜாக்கள் 6:15-17). நம்முடைய கண்களும் இவ்விதம் திறக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமன்றோ!

***ஜெபம் :*** *அன்பின் பரம பிதாவே! உமக்குரியவர்களை நீர் எவ்வளவு கவனமாய் பாதுகாக்கிறீர்! நாங்கள் மெய்யாய் பாக்கியம் பெற்றவர்கள்!! ஆமென்.*

**திராணிக்குமேல் நாம் சோதிக்கப் படுவதில்லை!**

*நாம் ஆவிக்குரிய வளர்ச்சியற்று, பெலவீனமாய் இருக்கும் போது, மனுஷர் மூலமாகவோ பிசாசின் மூலமாகவோ கொடூரமாய்த் தாக்கப்பட தேவன் அனுமதிக்கவே மாட்டார். நம் வாழ்க்கையில் தேவன் வைத்திருக்கும் நோக்கத்தின்மேல் நமக்கு விருப்பம் இல்லையென்பதைத் தேவன் காணும்போது, நம் ஜீவியத்தில் நாம் மிக எளிதான பாதை செல்லவும் அனுமதித்து விட்டுவிடுவார்! இதன் விளைவாய் நாம்தான் நித்தியத்தில் பேரிழப்பைத் தழுவி நிற்போம்!!*

*ஏனெனில், "தாங்கிக் கொள்ள முடியும்" என்ற பக்குவநிலை அடைந்தவர்கள் மிகவும் சிலரே! இவ்வித ஆவிக்குரிய முதிர்ச்சியை அடைவதற்கு மிகச்சிலர்தான் விருப்பம் கொண்டிருக்கிறார்கள்.*

*நாம் சந்திக்கக்கூடிய எல்லா சோதனைகள் வழியாகவும், இயேசுவானவர் தன் பிதாவினால் அழைத்துச் செல்லப்பட்டார். இப்படித்தான் அவர் பூரணரானார்! (எபிரெயர் 4:5, 5:7-9). நாமும் பூரணராவதற்கு இதைத் தவிர வேறு வழியே இல்லை!*

*"நாம் திராணிக்கு மேலாக சோதிக்கப்படவோ அல்லது பரீட்சிக்கப்படவோ தேவன் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்" என்ற சத்தியமே நம் வாழ்க்கையின் எல்லா நேரங்களிலும் நாம் ஜெய ஜீவியம் செய்திடமுடியும் என்ற நம்பிக்கைக்குக் காரணமாயிருக்கிறது!! இவ்விதமாய் 1கொரிந்தியர் 10:12 மூலம் தேவனுடைய உத்திரவாதம் நமக்கு கொடுக்கப்படவில்லையென்றால், நாம் இப்படிப்பட்ட நம்பிக்கைகொள்ள முடியவே முடியாது!!*

*ஆம், நம் பாதைக்குள் பிரவேசிக்கும் ஒவ்வொரு சோதனையும் பரீட்சையும் ஜெயிக்கப்படத்தக்கதே என்ற உத்திரவாதத்தை தேவன் நமக்கு அளித்திருக்கிறார். இவ்வாறிருக்க நாம் ஏன் வீழ்ச்சியடைய வேண்டும்!*

***ஜெபம் :*** *எங்கள் பரம தந்தையே! நாங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியடையும்படி நீர் அனுமதிக்கும் எந்த சோதனையும் எங்கள் திராணிக்கு மிஞ்சியது அல்லவே அல்ல என்பதை உணர்ந்தோம்! உமக்கே ஸ்தோத்திரம்!! ஆமென்.*

**வாழ்வின் சுமை அகற்றும் தாழ்மையின் வழி !**

*"வாழ்க்கையின் சுமையானது" அதைத் தாங்கவொண்ணாத தாயிருக்கிறது என்று நாம் எண்ணிக்கொள்ளுகிறோம்! ஆனால் உண்மை என்னவென்றால், நம்மைக்குறித்து வைத்துள்ள மேட்டிமை எண்ணங்களான பெருமைதான் இதற்கெல்லாம் காரணம்! இதைக்குறித்து, ரிசர்வ் செய்யாத நெரிசலான புகைவண்டியில் பயணம் செய்யும் சமயங்களில் நான் தியானித்திருக்கிறேன். உட்காருவதற்கு இடமில்லாமல், தரையின் ஓர் மூலையில் உட்காரவோ அல்லது சில சமயங்களில் நின்றுகொண்டு வரவோ வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. புகைவண்டிப் பெட்டியோ, ஸ்டேஷன் ஆரம்பத்திலிருந்தே ஜனங்களாலும், சாமான்களாலும் நிறைந் திருக்கும். அடுத்து ஒவ்வொரு ஸ்டேஷனில் நிற்கும்போதும், மேலும் அதிக ஜனங்களும் சாமான்களும் ஏறுவதால் நிலைமை மிக மோசமாகிவிடும்! தொடர்ந்து நெருக்கடி அதிகமாகிக் கொண்டேதான் போகும்!! இச்சமயங்களில், "நான் இப்போது ஒரு எறும்பின் அளவாய் (Size) மாற முடியுமென்றால் எனக்கு இந்த நெரிசல் இருக்காதே!" என எனக்குள் சிந்திப்பதுண்டு. ஆம், 'அளவினிமித்தமே' நெருக்கடி அதிகமாயிருப்பதை உணர்கிறேன். என்னைவிடப் பருமனான அளவு கொண்ட ஓர் மனிதனின் கதி இன்னமும் மோசமானதுதான்! நெருக்கடியெல்லாம் "அளவைப்" பொருத்தே இருக்கிறது. ஆனால் ஒரு சிறிய எறும்போ, நெரிசலான ரயில் பெட்டியையும் விசாலமான இடமாய் கருதி, அங்குள்ள நெரிசலைக்குறித்து கொஞ்சமும் குறை கூறாது!*

*இதுவே ஆவிக்குரிய விடையையும் நமக்கு அளிக்கிறது. நெருக்கத்தின் சுமை என்னைச் சுற்றிலும் அதிகரிக்கும்போது, நான் மாத்திரம் என் கண்களுக்கு சிறியதாய். . . . சிறியதாய், மாற முடியுமென்றால், நெருக்கடியானது குறைந்து சீக்கிரமே ஒன்றுமில்லாமல் மறைந்தும்விடும்!! தேவன் "நம்மைக் குறைத்து" சிறியதாய் மாற்றவே விரும்புகிறார். அவர் தன் நோக்கத்தை நம் மூலமாய் நிறைவேற்றுவதற்கு முன்பாக, நம்மைக் குறைத்து, குறைத்து நம்முடைய சுய எண்ணத்தில் "பூஜ்ய நிலைக்கு" நம்மை கொண்டுவர வேண்டியதாயிருக்கிறது. பரிபூரண ஜீவனுக்குள் நடத்த, "நம்மை நாமே தாழ்த்தும்" இயேசு முன்நடந்த இந்த "இடுக்கமான வழியை" கண்டு கொண்டவர்கள் வெகு சிலராகவே இருக்கிறார்கள்!!*

***ஜெபம் :*** *இரக்கமுள்ள பரம தந்தையே! எம்மை ஜீவனுக்குள் நடத்தும் வழி இடுக்கமானதே ஆயினும், அதில் கெம்பீரமாய் நடந்துசெல்ல "தாழ்மையின்" இரகசியத்தை அறிந்துகொண்டோம்!! உமக்கே ஸ்தோத்திரம்!! ஆமென்.*

**“தெய்வ கிருபை” தேவனுடைய உதவிகரம் !**

**சோ**தனையின் வலிமையை தேவனுடைய கிருபையின் வலிமையினால் மாத்திரமே வெல்ல முடியும்!

நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய் வந்தது. ஆனால், கிருபையோ இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வந்தது (யோவான் 1:17). நியாயப்பிரமாணத்தின் கீழ் (பழைய உடன்படிக்கையில்) ஜனங்கள் தங்கள் இருதயத்தில் சோதனையோடு கடுமையாய்ப் போராடினாலும், எப்போதும் அவர்கள் தோல்வியையே தழுவினார்கள். தர்சுப் பட்டணத்தானாகிய சவுல், தேவனுடைய பிரமாணத்தின் வெளியரங்கமான (External) தரத்தில் பூரணமாய் ஜீவித்தாலும் (பிலிப்பியர் 3:6), “இருதயத்திலிருந்து” உண்டாகும் இச்சைக்கு முன்பாக வலிமையற்றவனாகவே இருந்தான் (ரோமர் 7:7-11). ஆம், நியாயப்பிரமாணம் இருதயத்திலிருந்து பிறக்கும் இச்சையிலிருந்து ஜனங்களை விடுவிக்க முடியவில்லை. இந்த நியாயப்பிரமாணம் அதற்காக நியமிக்கப்பட்டதும் அல்ல! ஆம், மனுஷனுடைய உள்ளான பாவத்தையும், அவனுடைய இருதயத்திலிருந்து உண்டாகும் இச்சையிலிருந்து விடுதலையாக முடியாத அவனுடைய நிர்ப்பந்த நிலையையும் உணர்த்தவே நியாயப்பிரமாணம் தரப்பட்டது!!

ஆனால் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டான புதிய உடன்படிக்கையின் நற்செய்தி என்னவெனில், நியாயப்பிரமாணத்தினால் கூடாதது கிருபையினால் கூடும் என்பதுதான்! “கொஞ்சமும் அருகதையற்றவர்களாகிய நம்முடைய பாவங்களை மன்னிக்கும் தயவு” என்பது மாத்திரம் தேவனுடைய கிருபை அல்ல. அவர் கிருபை இதைவிட மேலானதாகும்! கிருபையானது தேவனுடைய பெலன்!! ஆம், 2கொரிந்தியர் 12:9-ல் கிருபையானது பெலனுக்குச் சமமாய் சொல்லப்படுவதைக் கவனியுங்கள்! இந்த பெலன் அல்லது இந்த வல்லமையே நம்முடைய சோதனையின் இக்கட்டான நேரத்தில் நமக்கு சகாயம் செய்ய அல்லது உதவி செய்ய கரம் கொடுக்கிறது!! (எபிரெயர் 4:16).

**ஜெபம் :** *எங்கள் பரலோக பிதாவே! உமது கிருபை எங்களுக்கு “உதவி செய்யும் தேவ பெலன்” என கண்டுகொண்டோம்! சோதனையில் கிருபை தந்தருளும் எங்கள் ஆண்டவர் இயேசுவுக்கு நன்றி!! ஆமென்.*

**அப்பழுக்கற்ற தேவ ஞானம் !**

*தேவன் பரலோகில் இருக்கிறபடியால், பூமியில் உள்ள நம்மைக் காட்டிலும் அதிக ஞானம் நிறைந்தவர்! எனவேதான், அவருடைய பரிபூரண ஞானத்தால் நம்முடைய வாழ்வின் வழிகளை ஆயத்தம் செய்து கட்டளையிடுகிறார்: "தேவனுடைய வழி உத்தமமானது, ஏனெனில் அவர் ஞானத்தில் பரிபூரணமானவர்.... என் வழியைச் செம்மைப் படுத்தி என் சூழ்நிலைகளை ஆயத்தம் செய்து கட்டளையிடுகிறவர் தேவனே!" என சங்கீதம் 18:20, 32-ல் (*Living-*மொழிபெயர்ப்பு) வாசிக்கிறோம்.*

*அவரது பரிபூரண ஞானத்தில் நம்பிக்கையாய் இருந்து, நம் ஆள்த்துவம் முழுவதையும் அவரில் சார்ந்திருக்கச் செய்வதே விசுவாசமாகும்!!*

*பூமியைக் காட்டிலும் பரலோகம் உயர்ந்திருக்கிறபடியால், தேவஞானம் நம்மைக் காட்டிலும் மேலானது என்பதை ஒத்துக்கொள்வதற்கு நம்மில் யாருக்கும் பிரச்சனை இருக்காது என்றே எண்ணுகிறேன். தேவனுடைய வழிகளை, நாம் அநேக சமயங்களில் புரிந்துகொள்ள முடியாததற்கு இதுவே முக்கிய காரணம்! இது எப்படியெனில், ஓர் நாய் எவ்வாறு மனுஷர்களுடைய வழியைப் புரிந்து கொள்ள முடியாதோ அதைப்போல! நாம் விசுவாசத்தில் வளர்ச்சியடைந்து, அவருடைய திவ்விய சுபாவத்தில் அதிகமதிகமாய் பங்குபெறும்போது மாத்திரமே, தேவனுடைய வழிகளைக் கொஞ்சம் கொஞ்சமாய் நாம் அறிய ஆரம்பிப்போம்!!*

*"எல்லா சூழ்நிலைகளையும் - ஜனங்களையும்" தேவனே தன் அப்பழுக்கற்ற ஞானத்தால் அரசாளுகிறார் என்ற சத்தியத்தை அநேக விசுவாசிகள் சந்தேகித்து... தயங்கித் ... தேங்கி நின்றுவிட்டனர்! தங்கள் உதடுகளால் ஒருவேளை இச்சத்தியத்தை அங்கீகரித்து ஏற்கலாம். ஆனால் இவர்களோ தங்களின் அன்றாட ஜீவிய சூழ்நிலைகளில் இதைக் "கிரியையில்" விசுவாசித்ததே இல்லை! இன்றிலிருந்து, பிழையற்ற அவரது அனந்த ஞானத்தை நம் ஜீவியத்தின் ஒவ்வொரு சம்பவத்திலும் மெய்யாய் விசுவாசிக்கக் கடவோம்!!*

***ஜெபம் :*** *ஞானம் நிறைந்த பரம தந்தையே! உமது ஆளுகையில் வாழும் எங்கள் ஜீவியத்தில் "பிழை ஏதும்" ஏற்படாது!! இயேசுவின் நாமத்தில் மிகுந்த நன்றியுடன்..... ஆமென்.*

**சதிமேஜையை "சாத்தானுக்கே திருப்பி" ஜெயம் தரும் தேவன்!**

*சாத்தான் தேவ ஜனங்களைத் தாக்கும்போது 'அவனுக்கு எதிராகவே' அத்தாக்குதலின் மேஜையை தேவன் எவ்வாறு திசை திருப்புகிறார் என்பதைக் காண அநேகர் தவறுகின்றனர்!*

*உதாரணமாய், யோசேப்பின் வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்களைத் தியானித்துப் பாருங்கள்! அவன் 30-வயதாகும்போது, அவனை எகிப்தின் இரண்டாவது அதிபதியாக்கும்படி தேவன் ஓர் திட்டம் வைத்திருந்தார். யோசேப்பு கர்த்தருக்குப் பயந்த மனுஷனாயிருந்ததின் நிமித்தம், சாத்தானால் அவன் மிகவும் வெறுக்கப்பட்டான்!*

*எப்படியாகிலும் யோசேப்பை ஒழிக்கும்படி அவனுடைய மூத்த சகோதரர்களை சாத்தான் தூண்டிவிட்டான்! தன் ஆசைக்கு இணங்காத யோசேப்பை பொய்யாய் குற்றம் சாட்டி, போத்திபாரின் மனைவி அவனை சிறையில் அடைக்கும்படி செய்தான்!!*

*யோசேப்பைக் குறித்ததான தேவனுடைய கால அட்டவணைப் படி, சிறையிலிருந்த யோசேப்பிற்கு 30 வயதானவுடன், பார்வோனுக்கு ஓர் சொப்பனம் உண்டாகி.... "யோசேப்பு சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லுகிறவன்" என்பதை 'பானபாத்திரக்காரன்' நினைவுகூர்ந்தான். இப்படித்தான் யோசேப்பு பார்வோனுக்கு முன்பாய் வரவழைக்கப் பட்டு, எகிப்தின் இரண்டாவது அதிபதியாக மாறினான்! அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கு சகலமும் நன்மைக் கேதுவாய் நடக்கும்படி, சாத்தானின் சதி மேஜையை அவனுக்கு விரோதமாகவே திருப்புவது தேவனின் பெரு மகிழ்ச்சியாகும்!*

*இந்நிகழ்ச்சிகளை, நம் வாழ்வின் சூழ்நிலைகளோடு ஒப்பிட்டுப் பார்ப்போம். "பொறாமையினால்" நம்மை வெளியே தள்ள முயற்சிக்கும் தீய சகோதரர்களிடம் நம்முடைய மனநிலை எப்படி இருந்திருக்கும்? பொய்யாய் குற்றம் சுமத்திய அந்தப் பொல்லாத பெண்ணிடம் நமது மனோபாவம் எப்படி இருந்திருக்கும்? அநீதியாய் சிறையில் அடைக்கப்பட்டதின் நிமித்தம் நமது மனோபாவம் எப்படி இருந்திருக்கும்? உதவி செய்வேன் என்று வாக்கு கொடுத்துவிட்டு அதை மறந்து போகும் நண்பர்களினிமித்தம் நமது மனோபாவம் எப்படி இருந்திருக்கும்? அவர்கள் வேண்டுமென்றோ - தற்செயலாகவோ செய்யும் எல்லா கிரியைகளையும், நம்முடைய வாழ்க்கையில் அவரது தீர்மானம் நிறைவேறும்படி தேவன் உபயோகிக்க முடியும் என்று நாம் விசுவாசிக்க முடிகிறதா? யோசேப்புக்கு அவ்வாறு நிறைவேற்றி யிருந்தால், நமக்கும் அவ்வாறே நிறைவேற்றிட அவரால் முடியாதா? நிச்சயம் அவரால் முடியும்! அப்படியே நமக்கும் அவர் செய்திடுவார்!!*

***ஜெபம்*** : *அன்புள்ள பரம பிதாவே! உமது நோக்கம் எங்கள் வாழ்வில் நிறைவேற தடைசெய்திட இப்பாருலகில் ஒருவரும் இல்லை! எதிலும் ஜெயம் தரும் ஆண்டவர் இயேசுவுக்கே நன்றி, ஆமென்!!*

### இயேசுவின் ராஜகெம்பீரம் நமக்கும் வேண்டும் !

யூதாஸ் இயேசுவை காட்டிக் கொடுத்தான்! பேதுரு அவரை மறுதலித்தான்! அவருடைய சீடர்களும் அவரை கைவிட்டுச் சென்றனர்! திரளான ஜனங்கள் அவருக்குப் பின்முதுகு காட்டி பிரிந்து சென்றனர்! அவர் அநீதியாய் துன்புறுத்தப்பட்டும்! பொய்யாய் குற்றம் சாட்டப்பட்டும்! சிலுவையில் அறையப்படும்படி அழைத்துச் செல்லப்பட்டார்!!..... இருப்பினும் அவர் கல்வாரிப் பாதையில் செல்லும்போது, திரளானோரைத் திரும்பிப் பார்த்து, "எனக்காக அழாதீர்கள்-நான் நன்றாகவே இருக்கிறேன்" என்று அவரால் சொல்ல முடிந்தது!! (லூக்கா 23:28). ஆம், அவரிடம் சுய அனுதாபத்தின் சிறிய தடயம்கூட காணப்படவில்லை! பரிசுத்தாவியின் வல்லமையினால் அன்றி, இந்தப் பொன்னான வாழ்வை யார் வாழ்ந்திட முடியும்!!

தான் பானம் பண்ணிக்கொண்டிருந்த பாத்திரம் பிதாவினாலேயே அனுப்பப்பட்டது என்று அவர் நன்றாய் அறிந்திருந்தார். யூதாஸ்காரியோத்து, அந்தப் பாத்திரத்தைக் கொண்டுவந்த பணிவிடையாள் மாத்திரமே! எனவேதான் அவர் யூதாஸை அன்போடு பார்த்து "சிநேகிதனே" என்று அழைக்க முடிந்தது. தேவனுடைய பரிபூரண ஆளுகையில் விசுவாசம் இல்லாமல் நீங்கள் இவ்விதமாய் சொல்லிவிட ஒருக்காலும் முடியாது! அடுத்தபடியாக, இயேசு பிலாத்துவிடம் "என் பிதா அதிகாரம் கொடுக்காமல், உமக்கு என்மேல் ஒரு அதிகாரமும் இல்லை" என்றார் (யோவான் 19:11). இந்த உறுதியான நம்பிக்கையே, இயேசுவை இந்த உலகில் கனம் பொருந்திய ஒரு ராஜாவைப்போல் நடக்கச் செய்தது! அவர் ஆவிக்குரிய கனத்தோடு ஜீவித்து அதே ஆவிக்குரிய கனத்தோடு மரித்தார்!!

இப்போது நாமும் "இயேசு நடந்தபடியே நடப்பதற்கு" அழைக்கப்படுகிறோம். அவர் பிலாத்துவுக்கு முன்பாக மேற்கண்ட "நல்ல அறிக்கையை சாட்சியாக விளங்கப் பண்ணியது" போல, நாமும் இந்த அவிசுவாசமுள்ள சந்ததி முன்பாக நல்ல அறிக்கை செய்து (2தீமோத்தேயு 6:12-14) கெம்பீரமாய் நடந்திடக்கடவோம்!!

***ஜெபம் :*** *எங்கள் பரலோக பிதாவே! "உமது அதிகாரமே" இயேசுவின் பின்னணியில் இருந்த கெம்பீரத்திற்கு காரணம் என அறிந்தோம்! அதே 'கெம்பீரம்' எங்களுக்கும் அருளி உமது நாமத்திற்கு புகழ்சேர்க்க தயை புரிந்தருளும்! ஆமென்.*

**பணத்தைவிட தேவனே நமக்கு மேலானவர்!**

*இந்த உலகில் பணம் மிகவும் வலிமை நிறைந்ததாய் இருக்கிறது! எனவேதான், நாம் சேவிக்கும்படி இரண்டே எஜமான்கள்தான் இருக்கின்றனர் என தேவனையும், உலகப் பொருளையும் தனித்தனி எஜமானாக இயேசு குறிப்பிட்டு கூறினார் (லூக்கா 16:13). இந்த உலகம் பணத்தின் வலிமையை நம்புகின்றபடியால் "பணத்தினால் எல்லாம் கூடும்" என்கிறார்கள். விசுவாசிகளாகிய நாமோ, "தேவனால் எல்லாம் கூடும்" என்கிறோம். ஆனால் அதிகபட்சமாய், அவிசுவாசிகள் தங்கள் தேவன் (பணத்தின்) மேல் வைத்துள்ள விசுவாசமானது, 'ஜீவனுள்ள மெய் தேவனின் விசுவாசிகள்' என தங்களைக் கூறிக் கொள்பவர்கள் வைத்திருக்கும் விசுவாசத்தைவிட அதிகமாய் உள்ளதே!?*

*இவ்வுலகில் நாம் அனுதினமும் பணவிஷயத்தில் ஈடுபாடு கொள்வதால், இப்பகுதியிலும் நாம் ஜெயம் பெற வேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது! நீங்கள் விண்ணப்பம் செய்யும் பெர்மிட்டோ அல்லது லைசென்ஸோ அல்லது இதுபோன்ற வேறெதுவோ "பாஸாகுவதற்கு" உங்களிடம் லஞ்சம் கேட்கும் கறைபடிந்த அதிகாரிகளைக் காணும்போது நீங்கள் என்ன செய்வீர்கள்? இந்த உலகமோ லஞ்சத்தினால் எதையும் சாதித்துவிடலாம் என்று நம்புகின்றது! நம்மைக் குறித்து என்ன? பணம் சாதிப்பதைவிட நம் தேவன் பெரிய அற்புதங்களைச் செய்ய முடியாதா? ஆனால் இதற்கென நமக்கு விசுவாசம் இல்லாதிருக்கும் போது, தேவன் நம் பட்சத்திலிருந்து ஒருக்காலும் கிரியை செய்யவே முடியாது. இவ்வுலகில் "கூடாதது ஒன்றுமில்லை" என்பதற்கு இரண்டு நபர்களே இருக்கின்றனர் என இயேசு கூறினார். ஒன்று தேவன்! இரண்டாவது "மெய்யாய் விசுவாசிக்கும்" ஓர் விசுவாசி!! (மாற்கு 10:27; 9:23).*

*1) தேவனாலும் 2) விசுவாசிக்கிறவனாலும், கூடாதது ஒன்றுமில்லை! இது கிட்டத்தட்ட நம்பமுடியாததொரு அற்புதமேயாகும். ஆனால் உண்மையாகவே இந்த விசுவாசத்திற்கு, சர்வவல்ல தேவனின் வல்லமையோடு நம்மை இணைப்பதற்கு அவ்வளவு வலிமை இருக்கிறது. இப்படிப்பட்ட விசுவாசத்தாலேயே, நம்மைச் சுற்றியுள்ள இந்த உலகத்திற்கு, "தேவன் பணத்தைவிட மேலானவர்" என்று நாம் நிரூபித்துக் காட்டவேண்டும்! நாம் லஞ்சம் கொடுப்பதே இல்லை!! மெய் விசுவாசத்துடன் சர்வவல்ல நம் தேவனிடம் ஜெபிக்க மாத்திரமே செய்கிறோம்!!*

***ஜெபம்*** *: எங்கள் அன்பின் பிதாவே! பணத்தை அசட்டை செய்து, உம்மையே பற்றி வாழும் வாழ்க்கை ஓர் அற்புதம்! அதை நிரூபித்து வாழ உதவிபுரியும்! இயேசுவின் நாமத்தில் ஜெபம் கேளும்! ஆமென்.*

**தேவனுடைய விருப்பம் செய்வதே நமக்கு இளைப்பாறுதல்!**

தேவன் விரும்புவதெதுவோ அதுவே உங்கள் விருப்பமாயும் இருக்குமென்றால், எந்நிலையிலும் உங்களுக்கு ஒரு பிரச்சனையும் இருக்காது. நீங்கள் வைத்துக்கொள்ளும்படி தேவன் விரும்பாத எதையும் நீங்கள் வாங்குவதற்கோ, உரிமை கொள்வதற்கோ ஆர்வம் கொள்ளவில்லையென்றால், நீங்கள் எப்போதும் இளைப்பாறுதலில் இருக்கலாம். ஏனெனில், உங்களுக்குத் தேவையிருந்தால் அதை அற்புதமாய் தேவன் வழங்கிடுவாரே! ஆனால் உலகப்பொருளின் மீது கொண்ட இச்சையை திருப்தி செய்வதற்காக 'இதையும் அதையும்' வாங்குவதற்கு விரும்புவீர்களென்றால், நீங்கள் எப்போதும் பிரச்சனைக்குள்தான் ஓடி நிற்பீர்கள்!!

இதே விசுவாசத்தின் அடிப்படைதான் நமக்குரிய வாழ்க்கைத் துணையைக் கண்டுகொள்ளும் விஷயத்திற்கும் பொருந்தும். "வீடும் ஆஸ்தியும் மாத்திரமே ஓர் தகப்பன் தன் மகனுக்குத் தரமுடியும். ஆனால் புத்தியுள்ள மனைவியையோ கர்த்தர் மாத்திரமே அருள முடியும்" (நீதிமொழிகள் 11:14 - Living Bible) என்றே வாசிக்கிறோம்.

உங்கள் வாழ்க்கைத் துணைவியாய் இருக்கும்படி தேவன் யாரையேனும் முன்குறித்திருக்கும்போது "அந்த நபரை" வேறு யாரும் அபகரித்துச் சென்றுவிடுவார்கள் என்ற அபாயம் ஏற்படுமோ? நிச்சயம் இல்லை! நீங்கள் சர்வவல்ல தேவனின் ஆளுகையை விசுவாசித்திருக்கும் வரை அந்த அபாயம் நிச்சயம் இல்லை!!

தேவனுடைய சித்தத்தின் எல்லைக்கு வெளியே உங்களுக்கு எந்தவித நோக்கமும் இல்லாமல், தேவனுடைய சித்தத்திற்கு உட்பட்டு 'நீங்கள் தனித்திருக்கவும்' ஆயத்தமென்றால் இப்போது நீங்கள் எதற்கும் அஞ்சவேண்டிய அவசியமேயில்லை. தங்களுக்குரிய எல்லாவற்றையும் அவரிடம் ஒப்புவித்தவர்களுக்காக கிரியை செய்யும்படி தேவனுடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது (2 நாளாகமம் 16:9). ஓ, நமக்குத்தான் எவ்வளவு அருமையான தேவன் இருக்கிறார்!

***ஜெபம் :*** *எங்கள் பிரியமுள்ள தந்தையே! "உம் சித்தம் ஒன்றே" செய்வது இப்பூமியில் எத்தனை இளைப்பாறுதல்! எங்கள் சுய சித்தத்தின் சிக்கலுக்குள் சிக்கிவிடாதிருக்க தயைபுரியும்! இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

**உணர்வுள்ள மனசாட்சி தேவன்தந்த வரம் !**

"ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும், மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" என வேதாகமம் கூறுகிறது (எபிரெயர் 9:27).

இந்த பூமியில் செய்யும் குற்றங்களுக்கு 'அநேக மக்கள்' தப்பித்துக் கொள்கிறார்கள். ஆனால். . . முடிவில் இவர்கள் நியாயாசனத்திற்கு முன்பு நிற்கும்போது தங்களுக்குரிய நீதியான தண்டனையை இவர்கள் நிச்சயமாய் அடைவார்கள்! அதேபோல், அநேக மக்கள் தாங்கள் பிறருக்குச் செய்த நன்மைகளுக்காக இப்பூமியில் பிறரால் பிரதி உபகாரம் தரப்படாமல் இருந்திருக்கலாம்! இருப்பினும், கிறிஸ்து இப்பூமிக்கு திரும்பவரும் போது அவர்களுக்குரிய பலன் நிச்சயம் அவர்களுக்கு கிட்டும்!

இவ்வாறு நாம் எதைச் செய்தாலும் "ஒரு நாளில்" தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டியது இருக்கிறபடியால், நம் மனசாட்சியின் சத்தத்திற்கு எப்போதும் செவிகொடுக்க வேண்டியது மிக முக்கியமாயிருக்கிறது.

'மனசாட்சி' தேவன் மனிதனுக்கு வழங்கிய ஒரு ஒப்பற்ற வரமாகும். இந்த வரம் நம்முடைய சரீரத்தில் நாம் பெற்றிருக்கும் "வலி" (PAIN) என்ற வரத்திற்கு ஒப்பாகும். இன்று அநேகர் வலியை தொந்தரவுதரும் ஒன்றாக எண்ணுகிறார்கள். இந்த வலி நம் ஜீவியத்தில் எத்தனை ஆசீர்வாதமாய் இருக்கிறது என்பதை நாம் உணருவதில்லை! வலியின் மூலமாகவே நம்மில் ஏற்படும் ஏதாகிலும் ஒரு சுகவீனத்தை நம் சரீரம் எச்சரிக்கிறது. நம் சரீரத்தில் நோய் உண்டாவதை அறிவிக்கும் "முதல் சிக்னலாய்" வலி இருக்கிறது. இந்த வலி இல்லாத பட்சத்தில், நமக்கு வியாதி இருந்தால் கூட அதை அறியாதவர்களாகத்தான் இருப்போம். இந்த வலிக்கொப்பாகவே மனசாட்சி இருக்கிறது.

நம் மனசாட்சி சொல்லுகிறபடியால்தான் நாம் யாவரும் நம்மை பாவிகள் என அறிந்திருக்கிறோம். எனவே, நாம் உணர்ந்திடும் குற்ற உணர்வை உதறிவிடுவதற்கு நாம் முயற்சிக்கவே கூடாது. ஏனென்றால் இந்த குற்ற உணர்வு "வலியின் ஆசீர்வாதத்திற்கு" ஒப்பாகும். நாம் ஆவிக்குரிய நோவு கொண்டிருக்கிறோம் என்பதையும், அதிலிருந்து நாம் சுகமடைய வேண்டும் என்பதையும் இந்த குற்ற உணர்வே நமக்கு எடுத்துரைக்கிறது.

***ஜெபம்*** : *பரம தந்தையே! எவ்வித தவற்றையும் உடனே உணர்ந்து உம்மிடம் மனம்திரும்பி வந்துவிட உணர்வுள்ள மனசாட்சியை எமக்குத் தந்தருளும், இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

**நீங்கள் தெய்வ நற்குணம் அடைய வேண்டும் !**

தேவன் நம்மை குணாதிசயம் கொண்டவர்களாயும், சுயாதீனமாய் தெரிந்து கொள்ளும் திறன் கொண்டவர்களாயும் படைத்தார். ஆனால் இவ்வித சுயாதீனமாய் தெரிந்து கொள்ளும் சுதந்திரத்தினிமித்தம் ஏற்படும் அபாயம் யாதெனில், இந்த சுயாதீனத்தை வைத்து நம்மைநாமே பிரியப்படுத்துவதற்கும் தேவனுடைய பிரமாணங்களுக்கு கீழ்படியாமல் இருப்பதற்கும் பயன்படுத்திவிட முடியும்! இவ்வாறு இருந்தபோதும் தேவன் இந்த விபரீதத்தைச் சந்திக்கத் தயாராயிருந்தார். ஏனென்றால், தேவனாகிய தன்னை சுயாதீனமாய் தெரிந்துகொள்ளும் பிள்ளைகளையே அவர் விரும்புகின்றார்!!

தேவன் சிருஷ்டித்த முதல் மனுஷனும் மனுஷியும் ஆதாம் என்றும் ஏவாள் என்றும் அழைக்கப்பட்டார்கள். அவர்கள் சிருஷ்டிக்கப்பட்ட போது "களங்கம் அற்றவர்களாகவே" இருந்தார்கள். ஆனால் 'பரிசுத்தமாய்' இருப்பதற்கோ, அதை அவர்கள் தாங்களாகவே தெரிந்துகொள்ள வேண்டும்! இந்தத் தெரிந்துகொள்ளுதல் ஏற்படுவதற்காகத்தான் அவர்கள் சோதிக்கப்பட வேண்டியிருந்தது. ஏனெனில் அப்போது மாத்திரமே அவர்கள் 'தீமையை மறுத்து' தேவனைத் தெரிந்துகொள்ள முடியும்! இதற்காகவே சாத்தான் அவர்களிடம் வந்து, அவர்களைச் சோதிப்பதற்கு தேவன் அனுமதித்தார்! இந்த நிகழ்ச்சியை வேதாகமத்தில் ஆதியாகமம் 2, 3 அதிகாரங்களில் வாசிக்கிறோம்.

களங்கமற்ற தன்மைக்கும் பரிசுத்தத்திற்கும் ஏராளமான வித்தியாசங்கள் உள்ளன. ஒரு குழந்தையிடம் நாம் காண்பதே களங்கமற்ற தன்மையாகும். ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டபோது அவன் எப்படி இருந்திருப்பான் என்பதை நீங்கள் அறிய விரும்பினால், ஒரு குழந்தையை சற்றே உற்று நோக்குங்கள்... நன்மை தீமை இன்னதென்று அறியாததும், களங்கமற்றதுமான தன்மையையே அக்குழந்தையிடம் நீங்கள் காண்பீர்கள். ஆனால் அக்குழந்தை பரிசுத்தமானதோ அல்லது பூரணமானதோ அல்ல! பூரணமடைய வேண்டுமென்றால், அக்குழந்தை வளர்ச்சி அடைந்து 'தெரிந்து கொள்ளுதலை' தன் வாழ்வில் கைக்கொண்டு... அதன்மூலம், தீமையை மறுத்து தேவனைத் தெரிந்து கொண்டு வளர வேண்டும்.

**ஜெபம் :** *பரம தந்தையே! தெய்வ நற்குணமே எங்கள் தீராத வாஞ்சை! எங்கள் 'சுயாதீனத்தைக்' கொண்டு தீமையை மறுத்து உமது நற்குணம் செய்திடவே பெலன் தாரும்! இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

**சாத்தானின் தீமைகளை நன்மையாக மாற்றும் தேவன் !**

*"இவ்வுலகத்தின் எல்லா தீமைகளுக்கும் சாத்தான்தான் காரணமென்றால், சாத்தானையும் எல்லா அசுத்த ஆவிகளையும் தேவன் ஏன் அழிக்காமல் வைத்திருக்கிறார்?" என்ற கேள்வியை நாம் கேட்கக்கூடும்.*

*தேவன் விரும்பினால் சாத்தானை ஒரு நொடிப் பொழுதில் நிச்சயமாய் அழித்துவிட முடியும். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை! சாத்தானையும் அவனோடிருக்கும் பிசாசுகளையும் அனுமதித்திருக்க வைத்திருப்பதில் ஓர் தெளிவான நோக்கத்தைத் தேவன் வைத்திருக்கிறார். அவ்வித அவருடைய நோக்கத்தின் ஒரு பகுதி யாதெனில், இப்பூமிக்குரிய வாழ்க்கையை மனிதனுக்கு கடினமானதாகவும்; பாதுகாப்பற்றதாகவும்; அபாயம் நிறைந்ததாகவும் செய்வதற்கு சாத்தானையே தேவன் உபயோகப்படுத்துகிறார்!*

*அது ஏனென்றால் "இதன் மூலமாய்" ஜனங்கள் இப்பூமிக்குரிய சொகுசான வாழ்க்கையினால் ஈர்க்கப்பட்டுவிடாமல், தேவனிடத்தில் திரும்பவும், நித்திய வாழ்க்கையில் அக்கறை கொள்ளவுமேயாகும்! இதற்குமாறாக இப்பூமிக்குரிய வாழ்க்கை எந்த நோயும் இல்லாமலும்; துன்பம் இல்லாமலும்; தரித்திரம் இல்லாமலும்; ரொம்பவும் சொகுசான வாழ்க்கையாக இருக்குமென்றால் தேவனைக் குறித்த சிந்தை கிட்டதட்ட ஒருவருக்குமே ஏற்படாது! இதன்நிமித்தமே இவ்வுலகத்தில் பாதுகாப்பற்ற ஜீவியத்தையும், துன்பங்களையும் தேவன் உபயோகித்து. . .'இதுபோன்ற தேவையான நேரத்தில்' நாம் அவரிடத்தில் திரும்பவும், அவரைச் சிந்தித்துத் தேடவும் வைக்கிறார்.*

*எனவே, சுகமாக்க முடியாத வியாதிகள், சுகவீனங்கள், வறுமைகள் இன்னும் இதுபோன்ற உலகத்தில் காணும் தீமைகளைத் தேவன் உபயோகித்து அதன்மூலம் ஜனங்களை அவர்களின் பாவங்களிலிருந்து மனம் திரும்பும்படிச் செய்கிறார். முடிவில், ஜனங்கள் பரலோகத்தில் உள்ள தங்கள் நித்திய வீட்டைக் கண்டுகொள்ளும்படி தேவன் நடத்துகிறார்!*

*ஆம், இவ்விதமாகவே சாத்தானைத் திரும்பத் திரும்ப ஒரு 'முட்டாளாய்' தேவன் நிற்க வைத்து விடுகிறார்! சாத்தான் பிறருக்காக "எதையோ மனதில் வைத்து" வெட்டின குழியில், அவனே அக்குழியில் தள்ளப்பட்டு விடுகிறான்!!*

***ஜெபம் :*** *இரக்கமுள்ள எங்கள் பரம தந்தையே! இம் மண்ணின் மாயையில் சிக்கிவிடாமல், சாத்தானின் தீமையை அனுமதித்து எங்களை உம்மிடம் திருப்புகிறீரே..... உம் அனந்த ஞானத்திற்கே ஸ்தோத்திரம்! ஆமென்.*

**சிருஷ்டிகரே! நீர் மாத்திரம் எனக்கு வேண்டும் !**

*சி*ருஷ்டிக்கப்பட்ட ஒன்றை சிருஷ்டிகருக்கு மேலாய் உயர்த்துவதே விக்கிரக ஆராதனையாகும். அது, பணமோ அல்லது அழகான ஸ்திரீயோ அல்லது நம்முடைய பேர் புகழோ ஆகிய எதுவாகவும் இருக்கலாம். இவ்வாறு சிருஷ்டிக்கப்பட்ட ஒன்றை சிருஷ்டிகருக்கு பதிலாய் தொழுதுகொள்ளுவதால் அதுவே விக்கிரக ஆராதனையாக இருக்கிறது. இதுவே எல்லாப் பாவங்களுக்கும் வேர் என்றும் கூறலாம்!

உண்மையான மனந்திரும்புதல், சிருஷ்டிக்கப்பட்ட எல்லாவற்றையும் விட்டு விட்டு தேவனிடத்தில் திரும்பி, "சர்வ வல்லமை யுள்ள தேவனே! நீர் ஒருவரே தொழுகைக்கும் ஆராதனைக்கும் பாத்திரர். இந்நாள்வரை, சிருஷ்டிக்கப்பட்டவை களை நான் தொழுது கொண்டதற்காக மிகவும் வருத்தம் அடைகிறேன். இன்றிலிருந்து என் வாழ்வில் நீர் மாத்திரமே எனக்கு எல்லாவற்றிலும் மேலானவர்" என நாம் கூறுவதாய் இருக்க வேண்டும்! (சங்.73:25).

"நீர் மாத்திரம்" என்பதற்காக, நம்முடைய வேலைகளை அல்லது குடும்பத்தை விட்டு விட்டு ஏதாகிலும் காடு அல்லது மலைக்குச் சென்று சந்நியாசியாக மாறவேண்டும் என்பது பொருளாகாது. அப்படி இல்லவே இல்லை! நாம் யாவரும் நம்முடைய பிழைப்பிற்காக சம்பாதிக்கவும், குடும்பங்களை உடை யவர்களாய் இருக்கவுமே தேவன் விரும்புகிறார்! பணம் சம்பாதிப்பது ஒரு பாவமல்ல. ஆனால் தேவனைக் காட்டிலும் பணத்தை அதிகமாய் நேசிப்பதே பாவமாகும்!

இந்த மாயலோகத்தின் ஈர்ப்பு மகாகொடியது! "உலக மகிமையை கணப்பொழுதில்" காண்பித்து இயேசுவையே வஞ்சித்திட சாத்தான் முயன்றான். ஆனால் இயேசுவோ, 'லோக மயக்கம்' என்ற விக்கிர ஆராதனையை மறுத்து, "தேவனுக்கே என்றும் ஆராதனை" செய்கிறவராய் ஜெயம் பெற்றார்! (லூக்கா 4:8). நாமும் அவரது அடிகளையே பின்பற்றக் கடவோம்!!

***ஜெபம் :*** *பரம சிருஷ்டி கர்த்தாவே! உம்மைவிட்டு பிரிக்கும் யாதொன்றும் 'விக்கிரகமே' ஆகும்! உம்மையே என்றும் சேவித்திட எங்களுக்கு அருள் புரியும்!! இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.*

**சாட்சியாய் வாழ தேவபெலன் வேண்டும் !**

தேவ பெலனுக்கென நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் முதல் மூலதனமாயிருப்பது, "தேவனுடைய வார்த்தையே" ஆகும். நாம் சோதனைகளை ஜெயிப்பதற்கு வேதப்புத்தகம் ஓர் வலிமையான ஆயுதமாய் நமக்கு உதவுகிறது. இயேசுகூட, சாத்தானுடைய சோதனைகளைத் தேவனுடைய வார்த்தையின் வல்லமையின் மூலமாகவே ஜெயித்தார் என நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம் (மத்தேயு 4:1-11). இதனிமித்தமே நாம் ஒவ்வொரு நாளும் தேவனுடைய வசனத்தை வாசிக்கும் பழக்கத்தை உடையவர்களாய் இருக்க வேண்டும். அதனிமித்தம் தேவன் நம்மோடு தம் வார்த்தையின் மூலமாய் பேசி, அன்றாட நம் ஜீவியத்தின் போராட்டங்களைச் சந்திப்பதற்கு நம்மைப் பெலப்படுத்துகிறார்!

வேதாகமம், வாலிபர்களைப் பார்த்து, "வாலிபரே, நீங்கள் பலவான்களாய் இருக்கிறதினாலும், தேவவசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்தீர்கள்" என கூறுகிறது (1யோவான் 2:14).

தேவ பெலனுக்கென நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் இரண்டாவது மூலதனமாயிருப்பது, நமக்குள் வந்து வாசமாயிருக்கும் "பரிசுத்தாவியாகிய தேவனே" ஆவார். நம்முடன் தினமும் பேசவும், வாழ்க்கைப் போராட்டங்களுக்குரிய பெலனைத் தரவும், கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் சீஷர்களாய் வாழ்வதற்கு உதவி செய்யவும், பரிசுத்தாவியானவர் நமக்குள் நிரந்தரமாய் தங்கி வாழ விரும்புகிறார்! எனவேதான், பரிசுத்தாவியினால் நம்மைத் தொடர்ச்சியாய் நிரப்பும்படி நாம் தேவனிடம் கேட்க வேண்டும்!!

தேவ பெலனுக்கென நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் மூன்றாவது மூலதனமாய் இருப்பது, "ஏக சிந்தை கொண்ட கிறிஸ்தவர்களோடு கொண்டிருக்கும் ஐக்கியமாகும்." அனேக கரித்துண்டுகள் ஒன்றாய் எரியும்போது, அவை அனைத்தும் பிரகாசமாய் சுடர்விட்டு எரியும்.

பெயரளவில் மாத்திரம் கிறிஸ்தவர்களாய் இருப்பவர்களை நாம் தவிர்த்துவிடல் வேண்டும்! நாமோ, அனுபவபூர்வமான கிறிஸ்தவர்களாய் மாறி, இயேசுகிறிஸ்துவைத் தங்கள் அனுதின வாழ்வில் பின்பற்ற வாஞ்சிப்பவர்களோடு மாத்திரமே ஐக்கியம் கொள்ள நாடவேண்டும்!

***ஜெபம் :*** *அன்பின் பிதாவே! நாங்கள் உமக்கு சாட்சியாய் வாழ்ந்திட அருளித்தந்த "மூலதனங்களுக்கு" நன்றி! அவைகளைப் பற்றிக்கொண்டு உமக்கென்று சுடர்விட அருள்புரியும்! இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

**எக்காலத்தும் தேவனை சார்ந்திருப்பதே விசுவாசம்!**

*தேவன்மேல் விசுவாசம் வைப்பது என்பதற்குப் பொருள் யாதெனில், அவரையே முழுமையாகச் சார்ந்துகொண்டு.... அவர்தம் வார்த்தையில் கூறிய எல்லாவற்றையும் அப்படியே ஏற்றுக்கொள்வதே யாகும்! அதாவது, நம் உணர்வுகள் என்னதான் கூறினாலும் அல்லது வேறு யாரோ என்னதான் மறுத்தாலும் அவைகளை ஒரு பொருட்டாய் எண்ணாமல் தேவனுடைய வார்த்தையை அப்படியே ஏற்றுக்கொண்டு விசுவாசிப்பது ஆகும். இது அவ்வளவாய் மிக எளியதேயாகும்!*

*தேவன்மீது விசுவாசம் வைக்கும்பொருட்டு, அவரைக்குறித்த குணாதிசயத்தில் மூன்று தன்மைகளை வேதத்தில் நாம் காண்கிறோம்.1) அவர் நம்மை சொல்லொண்ணா சிநேகத்தால் அன்புகூருகிறார். 2) அவரே சம்பூர்ண ஞானமுள்ளவர். 3) அவரே சர்வவல்லமையுள்ளவர்! இவ்வாறு அவரைக் குறித்த இந்த மூன்று உண்மைகளை நாம் விசுவாசிப்பது கஷ்டமான காரியமா? இல்லவே இல்லை! அப்படியானால், நாம் அவரை முழு இருதயத்தோடு நம்பி விசுவாசிப்பதற்கு இனியும் கஷ்டம் என்று சொல்லாதிருப்போமாக!!*

*ஏதேன் தோட்டத்தில் சாத்தானின் குரலிற்கு என்று ஏவாள் செவிகொடுத்தாளோ, அன்றே விசுவாச வீழ்ச்சி ஏற்படத் துவங்கியது. தன்னுடைய நன்மைக்காகவே தேவன் கற்பனைகளைக் கொடுத் திருக்கிறார் என்பதை விசுவாசிக்க அன்று ஏவாள் தவறிவிட்டாள். இவ்விதம் தேவன் அவள்மீது வைத்திருந்த 'பூரண அன்பில்' ஏவாளுக்கு விசுவாசமில்லாதபடியால், அவள் தேவனுக்குக் கீழ்படியாமற் போனாள்!*

*ஆம், விசுவாசத்தின் மூலமாகவே தேவனுடைய ஈவுகளைப் பெற்றிட முடியும். நமக்கு கொடுப்பதற்கென தேவனிடம் அனேக அற்புதமான ஈவுகள் உள்ளன! அவரளிக்கும் ஈவுகள் யாவும், கிருபையின் ஈவுகளே ஆகும்! ஆனால், இப் பரம ஈவுகளைப் பெறுவதற்கோ விசுவாசம் நமக்கு மிகவும் அவசியமாயிருக்கிறது.*

*"கிருபையினாலே* **விசுவாசத்தைக்கொண்டு** *இரட்சிக்கப்பட்டோம்" (எபேசி.2:8) என்றே சத்தியவேதம் கூறுகிறது. உன்னதத்தின் திரளான ஆசீர்வாதங்களை ஏந்திக்கொண்டு நம்மை நோக்கி ஏகிவரும் தேவனுடைய கரமே கிருபையாகும்! தேவனுடைய கரத்தில் பொதிந் திருக்கும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும்படி மேல் நோக்கி உயர்த்திடும் நம் கரமே விசுவாசமாகும்!*

***ஜெபம் :*** *எங்கள் பரம தந்தையே! எங்கள்மீது நீர் கொண்ட மாறாத அன்பிற்குத் தந்தருளிய உமது கற்பனைகளை 'எக்காலத்தும்' நம்பியிருக்கும் விசுவாச ஜீவியத்தை எங்களுக்குத் தந்தருளும்! ஆமென்.*

**"நான் தேவனுடைய பிள்ளை" என உறுதியாய் விசுவாசித்திட வேண்டும் !**

"**நா**ம் அவருடைய பிள்ளைகள்" என நம் இருதயத்தில் சம்பூரணமான உறுதிகொண்டிருக்கவே தேவன் விரும்புகிறார். இந்த உண்மையைக் குறித்து நாம் சந்தேகத்திற்குள் பிரவேசிக்க தேவன் ஒருபோதும் விரும்புவதே இல்லை.

நம்மைச் சந்தேகத்திற்குள் தள்ளும்படி, சாத்தானே சதா முயற்சித்துக் கொண்டிருக்கிறான். நாமோ சந்தேகத்திற்குள் பிரவேசிக்கத் தேவையேயில்லை! ஏனெனில், நமது சந்தேகங்களை அழித்து நமக்கு உறுதி செய்யும்படி அநேக வாக்குதத்தங்களை தேவன் தன் வார்த்தையில் தந்தருளியுள்ளார்!

அவ்வித வாக்குதத்தங்களில் ஒருசிலவற்றை சற்றே நோக்குங்கள்:

1) "என்னிடத்தில் வருகிறவனை நான் (ஒருக்காலும்) புறம்பே தள்ளுவதில்லை. என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு **நித்திய ஜீவன் உண்டென்று** மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 6:37, 47) என இயேசுவே கூறினார்.

2) "அவரை (ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை) ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, **அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்**" (யோவான் 1:12).

3) மேலும், "நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் **இனி நினையாமலிருப்பேன்**" என்றும் ஆண்டவர் கூறினார் (எபி.8:12).

தேவனுடைய வாக்குதத்தங்களில் விசுவாசம் வைப்பதென்பது ஓர் நதியைக் கடப்பதற்காக கட்டப்பட்ட வலுவான பாலத்தின்மீது நடக்கும்படி நம் கால்களை வைப்பதற்கே ஒப்பாகும்! நம்முடைய கால்கள் பெலஹீனமானதாயிருக்கலாம்! அதினாலென்ன?. . . பாலம் உறுதியானதாயிருந்தால், அது போதுமே!! இப்போது எது உறுதியான விசுவாசம் என்பதற்கு நீங்களே பதில் கூறுங்கள்: ஆம், "ஓர் வலுவான தேவனையும் அவர் அளித்த வாக்குதத்தங்களையும் முழுவதுமாய் நம்பிச் சார்ந்துகொள்ளுவதே" உறுதியான விசுவாசம் ஆகும்!!

***ஜெபம் :*** *இரக்கமுள்ள எங்கள் பிதாவே! எங்களை நீர் பிள்ளையாய் ஏற்றுக்கொண்ட வாக்குத்தத்தங்கள் உறுதியாய் இருப்பதால் 'இனியும்' வீண் சந்தேகம் எங்களை அலைக்கழிக்காதிருக்க கிருபை செய்தருளும். இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## "தனக்கானதை தேடாத" ஆவிக்குரிய வளர்ச்சி

*"பிள்ளை வளர்ந்து...... ஞானத்தினால் நிறைந்தது" (லூக்கா 2:40).* நாசரேத் ஊரில், இயேசு வாழ்ந்த முப்பது ஆண்டுகளிலும் தொடர்ச்சியாக ஞானத்தில் வளர்ந்தார்! அவருடைய வாழ்க்கையில் ஆவிக்குரிய வளர்ச்சி இல்லாமல் "ஒருநாள் கூட" வீணாகவில்லை எனக் கூறுவதே உண்மையாகும். இங்ஙனம் ஜீவிப்பவனே முழு இருதயம் கொண்டவன் என நாம் கூறிட முடியும். அதாவது, இயேசுவைப் போலவே தன் வாழ்விலும் தேவசித்தம் முழுவதும் நிறைவேறும் பொருட்டு தன் ஜீவிய நாட்களை முழுமையாய் பயன்படுத்திக் கொண்ட ஒருமனிதன்!

ஒரு மனிதனின் ஆவிக்குரிய வளர்ச்சியை கோபம், அசுத்த சிந்தை, பொய்சொல்லுதல்....... போன்ற பாவங்களை அவன் ஜெயித்து வாழ்ந்த வாழ்க்கையை மட்டும் வைத்து கணக்கிட முடியாது. கனி மெய்யாகவே நல்லதாக இருப்பதற்கு முன்பாக மரம் நல்லதாக இருக்கவேண்டும்! கோபத்தையும், பாலியத்திற்குரிய பாவங்களையும், பொய்யையும்..... ஜெயித்து வாழவேண்டிய முக்கியத்துவத்தை புறஜாதியாரின் மார்க்கங்கள்கூட வலியுறுத்துகிறதே! காரியம் இவ்வாறாய் இருப்பதால், நாம் எந்த அளவு **"தனக்கானதைத் தேடும்"** சுபாவத்திலிருந்து விடுதலையாகி இருக்கிறோம் என்பதை வைத்தே நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சி கணக்கிடப்படுகிறது!

நம் எல்லா பாவங்களுக்கும் 'ஆணிவேராக' நிற்கும் பிரதான பாவமே 'தனக்கானதைத் தேடும்' பாவமாகும். நம் புகழ், நம் பெயர் பிரஸ்தாபம், நம் சொந்த ஆதாயங்கள்...... எனத் தேடுவதே தனக்கானதைத் தேடும் கொடிய சுபாவமாகும்!!

சார்லஸ்ஃபின்னி, "ஒரு மனிதன் **எதற்காக வாழ்ந்தான்** என்ற முடிவே அவன் பாவியா அல்லது பரிசுத்தவானா என்பதை நிர்ணயம் செய்கிறது" என தீர்க்கமாய் கூறினார். நம்முடைய சில செய்கைகளோ அல்லது நாம் பேசிய சில வார்த்தைகளோ அல்ல, மாறாக..... நம் ஜீவியத்தின் அடித்தள நோக்கம் என்ன என்பதை வைத்தே நாம் முழு இருதயம் கொண்ட இயேசுவின் சீஷர்களாய் இருக்கிறோமா? அல்லது இல்லையா? என்பதை நிரூபணம் செய்கிறது.

உங்கள் வாழ்க்கை, **"தேவனுடைய மகிமையைத் தேடுவது ஒன்றே** என் விருப்பம்!" என்பதாய் இருக்கு மென்றால் மாத்திரமே, நீங்கள் தனக்கானதைத் தேடும் தீமையிலிருந்து விடுதலையாகி இருக்கிறீர்கள் என அறிந்து கொள்ளமுடியும்.

**ஜெபம் :** *எங்கள் பரலோக பிதாவே! "தனக்கானதை தேடாத" வாழ்க்கையே மெய்யான ஆவிக்குரிய வளர்ச்சி என்பதைக் காண உதவி செய்தமைக்கு நன்றி! நாங்களும் அந்த வளர்ச்சியடைய அருள்புரிந்தருளும்!! இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

**நித்தியத்தின் மேன்மையை சுட்டிக்காட்டும் வேதம்!**

*இக்கொடிய இருளான நாட்களில், உங்களுக்கும் எனக்கும் அருளப்பட்டிருக்கும் "வெளிச்சம்" வேதாகமம் ஒன்றில் மாத்திரமே காணப்படுகிறது. ஆகவே வேதாகமத்தை கருத்தாய் தியானித்து, மெய்யான கிறிஸ்தவர்களுக்கு எவைகளெல்லாம் வாழ்வின் உயர்ந்த இலட்சியங்களாய் இருந்திட வேண்டும் என்பதைக் காண நாம் நாடுவோமாக! அவ்வாறு நாம் வெளிச்சத்தில் காணும் சத்தியங்கள் நம்மைப் பாதிப்பது போலவும், நம்மை மனம் புண்படச் செய்வது போலவும்கூட தோன்றக்கூடும்! ஏனெனில், வேதாகமம் மெய்யாகவே இருபுறமும் கருக்குள்ள பட்டயமாய் நம்மை ஊடுருவிச் சென்று, நம் மாய ரூபத்தைக் கிழித்து நம் உண்மை நிலையை காட்டிவிடும் என்பது உண்மை!! இவ்வேளையில், கடந்த இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆஸ்வால்டு சேம்பர்ஸ் என்ற தேவனுடைய ஊழியனின் ஞானமுள்ள வார்த்தைகளைக் கொண்டு நாம் அனைவரும் தைரியம் பெறுவோ மாக! அவர் கூறினார் : "இயேசுவின் வார்த்தைகள் என்னைத் தாக்கி இடறச் செய்யட்டும்! எதுவரை? இனி தாக்கப்படுவதற்கும், இடறச் செய்வதற்கும் என்னில் ஒன்றும் இல்லை என்ற நிலை என்னில் ஏற்படும் வரை!! (மத்தேயு 11:6). இயேசுவின் வார்த்தைகளால் நான் இந்நாள் வரை பாதிக்கப்படாதிருந்தால், வேதத்திலிருந்து அவர் பேசுவதை இதுநாள் வரை நான் கேட்கவில்லை என்பதுதானே உண்மை? ஒரு மனுஷனை தேவனுடைய வல்லமையான ஊழியத்திலிருந்து 'அவனை அழிக்கப் போகும்' யாதொன்றின் மீதும் இயேசுகிறிஸ்து தயவு காட்டியதே யில்லை! கர்த்தருடைய ஆவியானவர், ஆண்டவருடைய ஒரு வார்த்தையை நம் மனதிற்கு கொண்டு வந்து அதன் மூலம் நம்மைப் 'பாதிக்கும்படி' செய்திருந்தால், அந்த பாதிக்கப்பட்ட ஒன்று 'மரணம்' அடையும் வரை நம்மில் கிரியை செய்வார் என்பது அதிக நிச்சயம்!!" ("உன்னை நான் அனுப்பினேன்" என்ற புத்தகத்தில் ஆஸ்வால்டு சேம்பர்ஸ் கூறியவைகள்).*

*"என் செவிகளைத் திறந்தருளும், நான் கேட்கட்டும்*
*நீர் அனுப்பும் சத்தியத்தின் குரல் நானும் ஏற்கட்டும்!*
*உம் வார்த்தை செவிதனில் விழுந்த அக்கணமே*
*அனைத்து மாயையும் என்னிலிருந்து அகலுமே!*
*அமைதியாய் நானும் காத்திருப்பேன் உமக்காய்*
*ஆயத்தம் நானும் உம் சித்தம் காண்பேன் சீராய்!*
*என் கண்களைத் திறந்தருளும் ஒளி அதில் ஏற்றிடும்*
*தூய ஆவியே! என் திவ்வியமே! உம் சித்தம் ஆகட்டும்!!"*

***ஜெபம் :*** *பரலோக பிதாவே! உமது வேதமே நித்தியத்தின் வழிகாட்டும் எம் வெளிச்சம்! அதற்கு எங்களை முற்றிலும் ஒப்புவித்து வாழ அனுகிரகம் செய்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## புத்திமதி கூறிட மனதுருக்கம் தேவை!

*பிலிப்பியர் நிருபத்தில் பவுல் புத்திமதிகளை எழுதியபோது, "சகோதரரே, நீங்கள் என்னோடேகூட பின்பற்றுகிறவர்களாகி நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள். ஏனெனில், அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்கு பகைஞர் என்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன். இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன்" (பிலிப்பியர் 3:17-19) எனக் கூறினார்.*

*மேற்கண்ட வசனங்களில் இரண்டு ரகமான கிறிஸ்தவர்களை பவுல் தெளிவுபடுத்தினார். முதல் ரகத்தை சேர்ந்தவர்கள், அப்போஸ்தல னாகிய பவுலைப்போலவே கிறிஸ்துவைப்போல் மாறுவதற்கும், ஆண்டவரையும் அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அதிகமாய் வாஞ்சை கொண்டு அவரோடு மரிப்பதற்கும் வகைதேடுபவர்கள்!*

*ஆனால், இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவர்களோ கிறிஸ்துவின் ஆவிக்கு முரணான ஆவி கொண்டவர்களாய் இருந்தார்கள். இவர்களை "கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞர்கள்" என்றே பவுல் குறிப்பிட்டார். ஏனெனில் இவர்கள் பூமிக்குரியவைகளிலேயே சதா நாட்டம் கொண்டவர்களாய் இருந்தார்கள்!*

*நாம் பவுலோடு முதல்ரக குழுவினருடன் இருப்பதற்கே விரும்புகிறோம். ஆம், அந்த விருப்பம் நல்லதுதான். ஆனால், நாம் பவுலின் குழுவினரோடு இருக்கவேண்டுமென்றால் அவரிடம் காணப்பட்ட "ஓர் விசேஷித்த குணாதிசயமும்" நம்மில் காணப்பட வேண்டும். அது என்னவெனில்: கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞர்களைக் குறித்து அவர் குறிப்பிட்ட போதெல்லாம்"மிகுந்த கண்ணீரோடு" பேசினார்!*

*பார்த்தீர்களா! நாமும் நம்முடைய ஜீவியத்தில், அவ்வப்போது ஒத்தவேஷம் தரித்த அல்லது பின்மாற்றம் அடைந்த கிறிஸ்தவர்களைக் குறித்து பேசவேண்டியதாய் உள்ளது. ஆனால்..... பவுல் பேசிய ஆவியோடு நாம் அவர்களைக் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறோமா? அல்லது பரிசேயத்துவ சுயநீதியோடும், குற்றம்சாட்டும் ஆவியோடும் பேசினோமா? இந்த இரண்டாவது ரக ஆவியுடையவர்களாய் இருந்திருப்பீர்களென்றால் "சகோதரர்களைக் குற்றம்சாட்டும்" சாத்தானோடு நீங்கள் ஐக்கியம் கொண்டுவிட்டீர்கள் என்பதையே இப்போது அறிந்துகொள்ளுங்கள்!*

*கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞர்களைக் குறிப்பிட வேண்டிய அவசியம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அவ்வாறு குறிப்பிடுவதற்கு ஒரே வழி "கண்ணீரோடு" குறிப்பிடுவதுதான்!*

**ஜெபம்** : *அன்பின் பிதாவே! எங்கள் பிள்ளைகளுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ நாங்கள் கூறும் புத்திமதிகளில் "மனதுருக்கமும் கண்ணீரும்" இல்லை.... உம்போன்ற மனதுருக்கத்தை எங்களுக்குத்தாரும்! ஆமென்.*

**கற்பனைகளில் யாதொன்றையும் 'சிறியது' என தள்ளிவிடக் கூடாது!**

*கற்பனைகளைக் கைக்கொண்டு ஜீவிப்பதிலும் இரு சாராரை இயேசு குறிப்பிட்டார் : 1) இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான். 2) இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான் (மத்தேயு 5:19).*

*மேலும், 18-ம் வசனத்தில் வானத்தையும் பூமியையும்காட்டிலும் தேவனுடைய பிரமாணங்களே மேலானது என இயேசு வலியுறுத்திக் கூறியதை கவனித்துப்பாருங்கள். பரலோகத்திலும் தேவனுடைய பிரமாணங்களே மேன்மையாகக் கருதப்படுவதால், ஒவ்வொரு தேவப்பிரமாணங்களையும் கைக்கொள்ளவேண்டுமென்றே இயேசு வலியுறுத்தினார். தேவப்பிரமாணங்களுக்கு மேன்மையான முக்கியத் துவத்தைத் தந்த இயேசு, இக்கற்பனைகளில், "சிறியதொன்றையாகிலும் மீறி" அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான் என எச்சரித்தார். இப்படிப் பட்டவன் ஒருவேளை அவனுடைய இரட்சிப்பை இழக்காமல் இருக்கலாம். ஆனால் அவனோ பரலோகராஜ்யத்தில் மிகவும் சிறியவன்! பொதுவாய், விபசாரம் செய்யாதிருப்பாயாக; கொலை செய்யாதிருப் பாயாக போன்ற பெரிய கற்பனைகளை அநேக கிறிஸ்தவர்கள் கைக் கொள்ளத்தான் செய்கிறார்கள். ஆனால் சிறிய கற்பனைகளை "சிறியது தானே!" அவ்வளவு முக்கியமல்ல என அலட்சியம் செய்கிறார்கள்.*

*கற்பனைகளில் சிறியதோ அல்லது பெரியதோ என்பது பொருட்டல்ல. "இவைகளை தேவன் கட்டளையிட்டாரா?" என்பதே மிக முக்கியமாகும். நாம் தேவன்மீது கொண்டிருக்கும் மனப்பான்மையும், கீழ்ப்படிதலும் சிறிய கற்பனைகளை வைத்தே சோதிக்கப்படுகின்றது. சில சிறிய தேவகற்பனைகளை எண்ணிப் பாருங்கள். உதாரணமாய், "தண்ணீர் ஞானஸ்நானம், ஜெபிக்கும்போது பெண்கள் தலையில் முக்காடிடுவது . . ." போன்ற சிறிய கற்பனைகளே, நாம் விபசாரத்திற்கும், கொலைக்கும் விலகியிருக்கிறோமா என்ற பெரிய கற்பனைகளைக்காட்டிலும் வலிமை நிறைந்ததாய் . . . . தேவனுடைய வார்த்தைக்கு நேராய் நம்முடைய மனோபாவம் எப்படியிருக்கிறது என்பதை புடமிட்டு சோதிப்பதாய் இருக்கிறது.*

*ஆனால், இன்று தங்கள் ஊழியத்திற்கு 'திறந்த வாசல்' வேண்டுமென விரும்புபவர்கள், இச்சிறிய கற்பனைகளைத் தாங்களே கைக்கொண்டிருந்தாலும்கூட அதைமற்றவர்களுக்குப் பிரசங்கிக்காமல் மௌனமாய் இருந்துவிடுகிறார்கள்! அது, கூடாது!!*

**ஜெபம் :** *அன்புள்ள தந்தையே! உம்மில் அன்பு கூர்ந்து கைக்கொள்ளும் கற்பனை களில், "சிறியது" என கருதி புறக்கணிக்காமலோ அல்லது மற்றவர்களுக்கு எடுத்துச்சொல்லாமலோ இருந்திடாதிருக்க உதவி செய்தருளும், ஆமென்.*

**'எதுநடந்தாலும்' வேத வாக்கைப்பற்றி நடப்பதே விசுவாச வாழ்க்கை!**

அநேக சமயங்களில் நம்முடைய 'உணர்ச்சிகள்' (Feelings) நம்மை வஞ்சிக்கக் கூடியவைகளாகவே இருக்கிறது. ஆகவே இவ்வித உணர்ச்சிகளை நாம் ஒருபோதும் சார்ந்து நம்பிவிடவே கூடாது! உண்மை (Fact); விசுவாசம் (Faith); உணர்ச்சி (Feeling) ஆகியவைகளை மூன்று மனிதர்களாக சுட்டிக்காட்டி கூறிடும் உவமை ஒன்றுண்டு. இந்த மூன்று மனிதர்களும் ஓர் ஒடுக்கமான சுவற்றின்மேல் ஒருவர் பின் ஒருவராக நடந்து சென்று கொண்டிருந்தனர். 'உண்மை' முதலாவதாக முன்னோக்கி நடந்துகொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து 'விசுவாசம்' நடந்து சென்று கொண்டிருந்தது. கடைசியாக 'உணர்ச்சி' விசுவாசத்தைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. விசுவாசம் தன் கண்களை முன் சென்று கொண்டிருந்த உண்மையின் மீது பதித்திருந்தது வரை சகலமும் சுமுகமாய் நடந்தேறியது! அதேபோல், விசுவாசத்தை உணர்ச்சியானது விடாப்பிடியாகப் பின்தொடர்ந்து சென்றது!! ஆனால் தன்னைப் பின்தொடர்ந்து வரும் உணர்ச்சியைக் காண்பதற்கு விசுவாசம் திரும்பிப் பார்த்தவுடன் நிலை தடுமாறி கீழே விழுந்து. . . . மரணத்தைத் தழுவியது! அதோடு சேர்ந்து உணர்ச்சியும் செத்து அழிந்தது!! ஆனால் உண்மையோ, தனக்குப் பின்னால் நடந்த எந்த நிகழ்ச்சியையும் சிறிதுகூட பொருட்படுத்தாமல் சுவற்றின் மீது கெம்பீரமாய் நடைபோட்டு 'தன்னந்தனியே' சென்று கொண்டேயிருந்தது!!

இந்த உவமை நமக்கு கற்றுத்தரும் பாடம் மிகத்தெளிவாய் இருக்கிறது. தேவனுடைய வார்த்தையே, என்றென்றும் மாறாத உண்மை நிறைந்ததாகும் (ரோமர் 10:17). நம்முடைய விசுவாசம் தேவனுடைய வார்த்தையை மாத்திரமே உற்று நோக்கிக்கொண்டிருந்தால் ஒருக்காலும் இடறிவிழும் அபாயத்திற்குள் பிரவேசித்திட மாட்டோம்.

விசுவாசத்தைத் தொடர்ந்து உணர்ச்சிகள் பின்பற்றி வரத்தான் செய்யும்! ஆனால் நாம் நம்முடைய உணர்ச்சிகளைத் திரும்பிப் பார்க்கத் துவங்கிவிட்டால், நாம் மிக எளிதில் நிலை தடுமாறி அதைரியத்திற்குள்ளும். . . . கடும் குற்ற ஆக்கினைக்குள்ளும் வீழ்ந்து மாய்ந்துவிடுவோம்!

***ஜெபம்*** : *எங்கள் பரம தந்தையே! சூழ்நிலைகள் மாறும்போது, எங்கள் விசுவாசம் தளர்வதைக் காண்கிறோம்! "உமது வார்த்தையின் உண்மையை" அப்படியே ஏற்று பின்பற்றிவர அருள்புரியும்! இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.*

**மரணம், நித்தியத்திற்குள் நம்மை நடத்தும் படியே ஆகும்!**

*இயேசு மரணத்தை ஜெயித்தபடியால், இப்போது ஓர் உண்மையான இயேசுவின் சீஷனுக்கு மரணம் ஓர் அச்சுறுத்தும் பயங்கரம் அல்ல! ஆம், மரணம் நமக்கு ஓர் தோற்கடிக்கப்பட்ட சத்துருவேயாகும்!! இயேசு மரித்து தன் மரணத்தினால் சாத்தானின் வல்லமையை உரிந்து போட்டதால், இனியும் நாம் மரணபயம் கொண்டிருக்க அவசியமில்லை என சத்தியவேதம் வெற்றிக் களிப்போடு நமக்கு எடுத்தியம்புகிறது (எபி.2:14, 15). இனிமேல், அவருடைய சீஷர்களுக்கு இயேசு மாத்திரமே மரணத்தின் வாசலைத் திறந்திட முடியும்! அவர்களைச் சாத்தான் 'தொடக்கூட' முடியாது!*

*ஒரு மனிதன் மரிக்கும்பொழுது என்ன சம்பவிக்கிறது? ஐசுவரிய வானையும் லாசருவையும் குறித்துப் பேசப்படும்பொழுது, இயேசு தெளிவாக இக் கேள்விக்குப் பதில்கொடுத்தார். இச்சத்தியங்களை அறிந்துகொள்ளுவதற்கு முன்பாக, நீங்கள் சற்று அமர்ந்து, சிறிது நேரம் செலவழித்து லூக்கா 16:19-31 வசனங்களைக் கவனமாய் வாசியுங்கள்.*

*இந்நிகழ்ச்சி ஓர் உவமானமல்ல! எந்த உவமானத்திலும் இயேசு யாருடைய பெயரையும் குறிப்பிட்டதில்லை. ஆனால், இந்நிகழ்ச்சி யிலோ இயேசு பெயரைக் குறிப்பிட்டு பேசினார். ஆம், ஐசுவரியவானும் லாசருவும் இஸ்ரவேல் தேசத்தில் உயிரோடு வாழ்ந்தவர்களாவார்கள்!!*

*நாம் வாசித்த லூக்கா 16-ம் அதிகாரத்தின் நிகழ்ச்சியில், மரித்தவர்கள் செல்லும்படி 'இரு ஸ்தலங்கள்' மாத்திரமே உண்டு என்பதை இயேசு தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார். 1) ஆபிரகாமின் மடி, இதைப் 'பரதீசி' Paradise என்றும் வேதம் அழைக்கிறது. 2) நரகம். இந்த ஸ்தலம் கொடிய வாதையும் வேதனையும் நிறைந்த இடமாகும். ஒரு மனிதன் மரித்தவுடன், இப்பூமியில் அவனுடைய சரீரம் அடக்கம் பண்ணப்படுவதற்கு முன்பாகவே அவனுடைய ஆத்துமா இந்த இரு ஸ்தலங்களில் ஏதேனும் ஓர் இடத்திற்கு உடனடியாகச் செல்கிறது! அவன் செல்லும் ஸ்தலத்தில், தன்னைச் சுற்றி சம்பவிக்கும் யாவையும் அறிந்துகொள்ளும்படி அவன் உணர்வுள்ள வனாகவே இருப்பான்! ஓர் சரீரத்தை உடையவனாய் அவன் இல்லாதிருந்தும், ஆறுதலையோ அல்லது வேதனையையோ உணரும் நிலையில்தான் இருப்பான்!!*

*திரித்துவத்தைப்போலவே, மனிதன் ஆவி, ஆத்துமா, சரீரத்தைக் கொண்டவனாயிருக்கிறான் (1 தெச.5:23). மரணத்தின்போது ஆவியும் ஆத்துமாவும் சரீரத்தை விட்டுப்பிரிந்து பரதீசிக்கோ அல்லது நரகத்திற்கோ செல்லுகிறது!*

***ஜெபம்** : பரம பிதாவே! மரணம், நித்தியத்திற்குள் எங்களை நடத்தும் படி அல்லது வாசல் என அறிந்தோம்! நித்திய ஜீவனை எங்களுக்கு அருளிய இரட்சகர் இயேசுவுக்கே ஸ்தோத்திரம்! ஆமென்.*

**தேவன் வழங்கும் நற்சாட்சியே மெய் ஆசீர்வாதம்!**

*தேவன் மூலமாய் உலகப் பொருட்களின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நிறைவேற்ற வேண்டிய ஒரே நிபந்தனை என்னவென்றால், ஒருவர் நல்லவராகவோ அல்லது தீயவராகவோ இருக்க வேண்டும், அவ்வளவுதான்!! ஏனென்றால், தேவன் நீதியுள்ளோர் மீதும் அநீதியுள்ளோர் மீதும் ஒரே சமமாகவே தன் சூரியனை உதிக்கப் பண்ணுகின்றார் (மத். 5:45) என இயேசு கூறினார். எனவே பொருளாதார ஆசீர்வாதங்கள், தேவன் ஒரு மனிதனின் வாழ்க்கையை அங்கீகரித்ததற்கு அடையாளமே கிடையாது! வனாந்திரத்தில், இரண்டு கோடி இஸ்ரவேலர்கள் 40-வருடங்களாக தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருந்தனர். அவர்கள் மீது தேவன் கடுமையாய் கோபம் கொண்டிருந்தார் (எபி. 3:17). இருப்பினும், இந்த எல்லா வருட காலமும் தேவன் அவர்களுக்கு உணவையும், நல்ல சுகத்தையும் கொடுத்தார். ஆம், அதையும் "அற்புதமாகக்" கொடுத்தார் (உபா. 8:2). எனவே சரீரபொருளாதாரத் தேவைகளுக்கான ஜெபத்திற்கு கிடைக்கும் "அற்புதமான பதில்கள்", தேவன் ஒரு மனிதனின் வாழ்க்கையைக் குறித்து மகிழ்திருக்கிறார் என்பதற்கு அடையாளம் அல்லவே அல்ல!*

*இதற்கெல்லாம் மாறாக, இப்பூமியில் இயேசு வாழ்ந்தபோது, 30-வயது நிறைவுபெற்றதும் தேவ அங்கீகாரம் அவருக்குக் கிட்டியது! அதற்கு ஒரே காரணம் என்னவெனில், இந்த எல்லா வருடங்களிலும் இயேசு உண்மையுள்ளவராய் இருந்து "அவரை பாவம் செய்யும்படி" தூண்டிய சோதனைகளை மேற்கொண்டு ஜெயித்தார்! அவர் தன்னையல்ல, பிதாவை மையமாகக் கொண்டதோர் வாழ்க்கையை வாழ்ந்தார்! ஆம், அவர் தன்னைத் தானே பிரியப்படுத்துகின்ற ஒன்றையும் ஒருபோதும் செய்யவே இல்லை (ரோமர் 15:3). அவருடைய ஞானஸ்நானத்தில், "இவர் என் நேச குமாரன் இவரில் நான் பிரியமாயிருக்கிறேன்" என்றே பிதா நற்சாட்சி வழங்கினார். ஆம், "நான் எப்படியெல்லாம் ஆசீர்வதித்த என் நேச குமாரன்" என்று பிதா கூறவேயில்லை! இந்த இரண்டாவது சாட்சியில் எந்த மதிப்பும் இல்லவேயில்லை! இயேசுவுக்குத் தேவையாய் இருந்ததெல்லாம் தேவ அங்கீகாரத்தை முடிசூட்டும் அந்த முதலாவது சாட்சியே ஆகும்! நாமும் இதே சாட்சியைப் பெறுவதற்காகத்தான் இன்று இயேசுவைப் பின்பற்றுகிறோம்!!*

***ஜெபம் :*** *பரிசுத்த பரம பிதாவே! உலகப் பொருட்களின் ஆசீர்வாதத்திற்காய் உம்மைப் பின்பற்றாமல், உம்மைப் பிரியப்படுத்தி வாழும் ஜீவியத்தையே வேண்டி விரும்பி ஜெபிக்கிறோம்! இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

**'நீதிமான்களாக' தேவனிடம் கிட்டிச்சேரும் பாக்கியம்!**

*நம் கடந்தகால ஜீவியத்தின் குற்றங்களை இயேசு கிறிஸ்துவின் மூலமாய் பெற்ற "பாவ மன்னிப்பு" அகற்றிவிடுகிறது. ஆனால் அது மாத்திரம் நம்மை பரிசுத்தராய் மாற்ற முடிவதில்லை. ஆகவே பூரண பரிசுத்தம் நிறைந்த தேவனுக்கு முன்பாக நாம் நிற்பதற்கு இன்னமும் தகுதி பெறவில்லை! எனவேதான் தேவன் நமக்காக மேலானதொன்றைச் செய்ய வேண்டியதாயிருந்தது.*

*அவர் நம்மை நீதிமானாக்குவதே (Justify) அச்செயலாகும்!*

*நீதிமானாக்கப்படுதல் என்பதின் பொருள் யாதெனில், "பரிபூரணம் நிறைந்த கிறிஸ்துவின் நீதியை தேவன் நம் கணக்கில் வரவு வைக்கிறார்" என்பதே சரியான பொருளாகும். இதன் விளைவாய் கிறிஸ்து எங்ஙனம் தேவனுக்கு முன்பாக பூரணராய் நின்றிட முடியுமோ அதற்கொப்பாகவே நாமும் தேவனுக்கு முன்பாக நின்றிட முடியும்! இந்த சத்தியம் நம்மை மகா ஆச்சரியத்திலாழ்த்துகிறது. . . ஆனால், அது உண்மை!! ஒரு பிச்சைக்காரனின் வங்கிக் கணக்கில், அவனுடைய பெயரில் பலகோடி ரூபாய்கள் வரவு செய்வது எவ்வளவு ஆச்சரியமோ அதற்கொப்பாகவே மேற்காணும் சத்தியம் நம்மை ஆச்சரியத்தி லாழ்த்துகிறது!! இவ்வளவு பெரிய தொகையை இந்த ஏழைப் பிச்சைக்காரன் சம்பாதிக்கவோ அல்லது அதற்கு தகுதியுள்ளவனோ அல்ல. இருப்பினும் அப் பெருந்தொகை ஓர் இலவச அன்பளிப்பாகவே அவனுக்குத் தரப்பட்டது!!*

*ஆகவே, நீதிமானாக்கப்படுதல் என்பது: "நம் கடந்த ஜீவியகாலம் முழுவதும் நாம் இதுவரை ஒரு தடவைகூட பாவஞ்செய்யாதவர் களைப்போல தேவன் நம்மை ஏற்றுக்கொள்ளுவதாகும்! மேலும் இன்று வாழும் ஜீவியத்தில் நாம் பூரண நீதியுள்ளவர்களைப்போல காணப்படுவதுமாகும்!!"*

*"இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால். . . . . இயேசுகிறிஸ்து மூலமாய் நாம் இந்த கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருக்கிறோம்" (ரோமர் 5:1,2) என தேவனுடைய வசனம் கூறுவதைப் பாருங்கள். எனவே, நாம் இப்போது எல்லா சமயங்களிலும் தேவனுடைய சமூகத்திற்கு முன்பாக எவ்வித தயக்கமும் பயமுமின்றி தைரியமாகப் பிரவேசித்திட முடியும்! ஏனெனில் இவ்விதம் தைரியமாய் கிட்டிச் சேருவதற்கான வழியை தேவனே நமக்காகத் திறந்திருக்கிறார்!!*

**ஜெபம் :** *அன்பின் பரலோக பிதாவே! ஆண்டவர் இயேசு கிறிஸ்து மூலமாய் பாவ மன்னிப்பு மாத்திரமல்லாமல் உம்மண்டை நாங்கள் கிட்டிச் சேரும்படி பாவ குற்ற உணர்வை நீக்கி எங்களை 'நீதிமானாகவும்' மாற்றிய தயவிற்கு உமக்கே ஸ்தோத்திரம்! ஆமென்.*

**வெளிப்புற 'உலக வசீகரமல்ல' உள்ளான ஜீவிய வசீகரமே வேண்டும்!**

ஏசாயா 2:12, 16 வசனங்களில், "சேனைகளுடைய கர்த்தரின் நாளானது. . . எல்லா சித்திர விநோதங்கள் (தோற்றத்தில் அழகானவைகள்) மேலும் வரும்" என காண்கிறோம். இன்று இவ்வாறாகவே மனுஷர் பார்வைக்கு கவர்ச்சியூட்டும் வசீகரங்களே ஏராளமாய் உள்ளன! ஆனால் இதுபோன்றவைகளை வியந்து பாராட்டுவதின் மூலமாய், உங்கள் உள்ளான மனிதனில் எந்த அளவிற்கு மறுரூப மடையும் பெலன் குன்றிப்போகும் என்பதை சிந்தித்துப் பாருங்கள்! ஆம், இவ்வாறு வெளிப்புறக் கவர்ச்சியினால் எந்த அளவுக்கு ஈர்க்கப் பட்டிருக்கிறோமோ அந்த அளவிற்கு நம் உள்ளான ஜீவியத்தின் வளர்ச்சியில் குறைவுபடுவோம் என்ற உண்மையை நாம் மனதில் கொள்வோமாக!! வெளிப்புறத்திற்குரிய யாதொன்றும் நம் சந்தோஷத் தை சிறிதளவுகூட கூட்ட முடியாது! ஆனால், உங்கள் முழு இருதயமாய் தேவனுக்கு பயந்து வாழ்ந்தால், நீங்கள் சம்பூரண இரட்சிப்பை அடைவது மாத்திரமல்லாமல் நிறைவான மகிழ்ச்சியும் அடைவீர்கள்!!

தேவனோ, நேற்றும் இன்றும் மாறாதவராகவே இருக்கிறார். அன்று ஏசாயாவின் நாட்களில் வெளித்தோற்றமான கவர்ச்சியை அருவருத்தார்! இன்றும் பவுல் தன்னுடைய நாட்களில் "மேட்டிமை யானவைகளை சிந்தியாமல் தாழ்மையானவைகளுக்கு நம்மை இணங்கும்படியே" (ரோமர் 12:16) புத்திசொன்னார். அதாவது, நாம் எப்போதும் தாழ்மையானவைகளையே தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால், இவ்வாறு தாழ்மைக்கு இணங்கும் சிந்தை இன்று ஜனங்களி டத்தில் காணப்படுகிறதா? இல்லவே இல்லை! இதற்கு நேர் எதிரிடை யான மேன்மையானவைகளில்தானே நாட்டம் கொள்கிறார்கள்!!

ஏசாயா 3:16-24 வசனங்களில் மாயையாகிய வெளித்தோற்ற கவர்ச்சியை தங்களுக்குத் தேடுகிறவர்கள்மீதும், இப்பூமிக்குரிய உயர்ந்த வஸ்துக்களைப் போற்றி மதிப்பவர்கள்மீதும், எவ்வாறு தேவனுடைய உக்கிரமான கோபம் வெளிப்படும் என கூறப்பட்டுள்ளது. ஆம், தங்கள் பேச்சின் நளினம்; தங்கள் ஒய்யாரப்பார்வை; தங்களைக்குறித்து மற்றவர்களின் கணிப்பு; போன்ற சிந்தைகளால் ஆட்கொள்ளப்பட்டு வாழ்பவர்கள்மீதே தேவகோபம் தூண்டப்படுகிறது! ஏனெனில், உள்ளான வசீகரத்தில் மாத்திரமே நாட்டம் கொண்டிருப்பது; அந்தரங்க ஜீவியத்தில் மறுரூபமடைவது; முழுமையான தேவபக்தி யுடன் வாழ்வது; போன்ற ஜீவியத்திற்கு இவையாவும் நேர் முரணான வைகளேயாகும்! தேவனோ இதுபோன்ற அந்தரங்க தேவபக்தியின் சிந்தையில்தான் அக்கறை கொண்டுள்ளார்.

**ஜெபம் :** *அன்பின் பிதாவே! நிறைவான மகிழ்ச்சிக்கு எங்கள் உள்ளான ஜீவியத்தில் அடைந்திடும் இரட்சிப்பே அல்லாமல், மாயையான உலக வசீகரம் மகிழ்ச்சி தரமுடியாது என்பதை அறிந்தோம்! அந்தரங்க வாழ்வில் உண்மையாய் வாழ கிருபை செய்தருளும்! ஆமென்.*

**நம் வாழ்வில் தெய்வ அன்பே முதலிடம் பெற வேண்டும்!**

நம்முடைய உறவினர்களோடு நாம் வைத்திருக்கும் சுபாவமாய் கொண்ட 'அசாதாரண' அன்பைத் துண்டித்துக்கொள்ள வேண்டும் என்பதே சீஷத்துவத்தின் முதல் நிபந்தனையாகும். (லூக்கா 14:26).

அப்படியானால், நாம் அவர்களை நேசிக்கக்கூடாது என்பதா பொருள்? இல்லை! நிச்சயமாய் இல்லை!! நம்முடைய மனுஷீக அன்பை நாம் இழக்கும்போது, அந்த இடத்தை தேவன் தன்னுடைய தெய்வீக அன்பினால் நிறைத்துவிடுவார்! இங்குதான் நம்முடைய உறவினர்களை நாம் நேசிக்கும் அன்பு தூய்மையடைகிறது. ஆம், நம்முடைய நேசத்திற்கு எப்பொழுதும் தேவனே முதலிடம் வகித்திட வேண்டும். . . மாறாக, உறவினர்கள் அல்ல!

இந்த முதல் நிபந்தனைக்கே இன்று அநேகர் தேவனுக்குக் கீழ்படியவில்லை! ஆண்டவரோ, நம் ஜீவியத்தில் நாம் அவருக்கு முதலிடம் தரும்படியே கட்டளையிடுகிறார். அவ்விதமாய் நாம் அவருக்கே முதலிடம் தராவிட்டால், அவருடைய சீஷர்களாய் ஒருக்காலும் இருந்திடவே முடியாது!!

இதற்கு, இயேசுவையே மாதிரியாக நோக்கிப் பாருங்கள். அவர், தன் விதவையான தாய்மீது கடைசிவரைக்கும் பொறுப்புள்ள அக்கறை கொண்டிருந்தார். அவ்வாறிருந்தும், தான் பிதாவின் பரிபூரண சித்தம் செய்து முடிப்பதற்குத் தடையாக, சிறு விஷயத்தில்கூட தன் தாய் தன்னை இடைமறித்திட அவர் ஒருபோதும் அனுமதிக்கவே இல்லை!

இதற்கு கானா ஊர் கலியாணம் ஓர் முன்னுதாரணமாக இருக்கிறது. அக்கலியாணத்தில், தன் தாயின் தூண்டுதலின்படி ஒன்றைச் செய்திட இயேசு மறுத்துவிட்டார்! (யோவான் 2:4).

இயேசுவின் சிநேகத்திற்கு, பிதாவானவரே எப்போதும் முதலிடம் பெற்றிருந்தார். அவரைப்போன்ற மனோபாவத்தையே நாமும் பெற்றிருக்க இயேசு வாஞ்சிக்கிறார். இயேசு உயிர்த்தெழுந்தபின்பு பேதுருவைப் பார்த்து, "பேதுருவே, இவ்வுலகத்திலுள்ள எதைக் காட்டிலும் நீ என்னை அதிகமாய் நேசிக்கிறாயா?" (யோவான் 21:15-17) என உருக்கமாய் கேட்டார்!

சங்கீதக்காரன் கூறியதைப்போலவே, "பரலோகத்தில் உம்மை யல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத்தவிர எனக்கு வேறே விருப்பமில்லை" (சங்.73:25) என நாமும் நம்முடைய மனதாரக் கூறிடமுடியுமா? அங்ஙனமே நாம் கூறிவிட்டால், நாம் உண்மையாகவே சீஷத்துவத்தின் முதல் நிபந்தனையை மகிழ்வுடன் நிறைவேற்றியவர் களாயிருப்போம்!!

**ஜெபம்** : பேரன்பு கொண்ட எங்கள் பிதாவே! மானிட அன்பில் உழன்ற எங்களை விடுதலையாக்கி உம்மையே பிரதானமாய் நேசிக்கும் சீஷத்துவ வாழ்க்கைக்கு எங்களை அர்ப்பணிக்கிறோம்! ஆமென்.

**நம் அந்தரங்கத்தில் சுமந்திட வேண்டிய அனுதின சிலுவை!**

கொரிந்தியர்கள், சிலுவையில்லாத இயேசுவை விசுவாசித்து வஞ்சிக்கப்படுவார்களோ என்று பவுல் அஞ்சினார் (2கொரி. 11:4). யார் இந்த சிலுவை இல்லாத இயேசு? மக்களை பாவ மன்னிப்பு பெறுவதற்கு அழைத்துவிட்டு சிலுவை எடுத்து இயேசுவைப் பின்பற்றும் அவசியத்தை வலியுறுத்தாத இயேசு! சுவிசேஷத்தின் உண்மை இயேசுவோ, தன் ஜீவிய காலமெல்லாம் தொடர்ச்சியாக சுயத்தை வெறுத்து, சிலுவையில் அறையுண்ட வாழ்க்கை வாழ்ந்து, மக்களும் இப்படிப்பட்ட அவரது வாழ்க்கையை பின்பற்ற அழைத்த இயேசு! இதை பவுல் தெளிவாய் உணர்ந்திருந்தார். இளைப்பாறுதல் தேடி பாரத்தோடு இயேசுவிடம் வந்தவர்கள் உடனடியாக 'அவரது நுகத்தை' தங்கள் மேல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் சத்தியம் (மத்.11:28,29). ஆம்! சிலுவை எடுத்து "அனுதினமும்" சுயத்திற்கு மரிக்காமல் (லூக்கா 9:23; 14:24) ஒருக்காலும் இயேசுவின் சீஷனாய் இருக்க முடியாது என்று இயேசு தெளிவுபடுத்தியதை பவுல் நன்றாய் அறிந்திருந்தார். இந்த சீஷத்துவத்தின் பூரண சுவிசேஷத்தையே பவுல் எல்லா இடங்களிலும் பிரசங்கித்தார் (அப்.20:26).

அனேக பிரசங்கிகள் "இலகுவான" சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள் என்பதை பவுல் அறிந்திருந்தார். இந்த இலகுவான சுவிசேஷத்தின் இயேசு ஆசீர்வதிப்பவர், மன்னிப்பவர், சுகமளிப்பவர், ஜெபங்களுக்கு பதில் தருபவர்! "ஆனால்" பாவம், உலகம், சுயம் ஆகியவற்றை நூற்றுக்கு நூறு விட்டுவிட்டுத் திரும்ப ஒருபோதும் அழைக்காத இயேசு! இந்த இயேசுதான் போலியான "வேறொரு இயேசு!"

பேதுருவுக்கும் மற்றும் எல்லா அப்போஸ்தலர்களுக்கும் தான் மரிக்கப்போகும் "வெளியரங்கமான சிலுவையைப்" (External Cross) பற்றி இயேசு கூறியிருந்தார் (மத்.16:21). மேலும் தான் அனுதினமும் "அந்தரங்க" சிலுவையில் (Inward Cross) ஏற்கனவே மரித்துக் கொண்டிருப்பதையும், அதைப்போலவே தன்னைப் பின்பற்ற விரும்பும் ஒவ்வொரு உண்மை சீஷனும் **அனுதினமும்** தன் ஜீவனை இச்சிலுவையில் இழக்க வேண்டும் (மரிக்க வேண்டும்) என்ற சத்தியத்தையும் அவர்களுக்குப் போதித்திருந்தார் (மத்.16:24). நாம் நமக்குரியவைகளை அல்ல, தேவனுக்குரியவைகளை தேடுவோமென்றால் இந்த சத்தியத்தை புரிந்திட முடியும். நம்முடைய பாவங் களுக்கு நிவாரணமாய் மரித்த இயேசுவின் மரணத்தில் நாம் பங்குபெற முடியாது. ஆனால், அனுதின "இயேசுவின் மரணத்தில்" நாம் பங்குபெற்றே ஆக வேண்டும் இயேசுவின் ஜீவன்பெற அதுவே வழி!!

**ஜெபம் :** எங்கள் பரலோக பிதாவே! கல்வாரி சிலுவை தந்த இரட்சிப்பிற்கும் மேலாக, ஜீவனையும், இளைப்பாறுதலையும் நாங்கள் கண்டடையும்படி இயேசு முன்வைத்த "அனுதினம் நாங்கள் சுமந்து வரும்படி" வைத்த சிலுவை உபதேசத்திற்கு நன்றி! ஆமென்.

### நம் சாட்சியில் மனுஷர் புகழ்தேடும் தீமை வேண்டாம்!

தேவன் நமக்குச் செய்த நன்மைகளை சாட்சி சொல்வது நல்லதுதான். ஆனால் அநேகமாய் நடப்பது யாதெனில், இவர்களின் சாட்சியின் நோக்கம், "நான் கர்த்தருக்காக செய்தவைகள்" என்ற ஜம்பமாய்த் தேய்ந்து தரம் கெட்டுவிடுகின்றது. இவர்களின் சாட்சிகளில் "நான் எவ்வளவு உண்மையுள்ளவன்" "நான் கர்த்தருக்காக எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறேன் . . ." என்ற சுயபுகழ்ச்சியைத் தேடும் "ஜம்பங்கள்" வந்து விடுவதையேக் காண்கிறோம். அல்லது சிலரோடு சம்பாஷிக்கும் போது, பேச்சுவாக்கில் நம்முடைய தியாகச்செயல்களைக் கூறிவிடுகிறோம். இவையாவும், மற்ற விசுவாசிகள் தன்னை "முழு இருதயமானவன்" என எண்ணும்படி சுயபுகழ்ச்சிக்காகவே செய்யப்பட்டவைகள் ஆகும். தங்களுடைய செயலுக்காக மனுஷர் புகழைத் தேடும் ஒவ்வொருவரையும், அன்று தேவன் ஆதிசபையில் அனனியா சப்பீராளின் மறைவான புகழ்தேடும் நோக்கத்தைக் கண்டதுபோலவே நம்மையும் காண்கிறார் என்ற உணர்வு நம் யாவருக்கும் தெய்வபயத்தைத் தருவதாக!

நாம் தர்மம் செய்வதோ அல்லது காணிக்கை செலுத்துவதோ ஆகிய நற்கிரியைகளை எப்படிச் செய்யவேண்டும் என்றும் மத்தேயு 6:3-ம் வசனத்தில் "வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்க" செய்ய வேண்டுமெனக் கூறினார். நாம் யாவரும் அறிந்திருக்கிறபடி நம் வலதுகைக்கோ அல்லது இடதுகைக்கோ தனித்தனியாக அறிவு இல்லை! அப்படியானால் எப்படி வலதுகை செய்வதை இடதுகை அறியாது கொடுக்கமுடியும் என்று இயேசு சீஷர்களுக்குக் குறிப்பிட்டது, "கிறிஸ்துவின் சரீரமே" என நாம் பொருள்பட முடியும். வலதுகை இடதுகை போன்ற அங்கமா யிருப்பவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ளவர்களே ஆவார்கள். எனவே நாம் செய்யும் நற்கிரியைகளை கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள மற்றொரு அவயவமான சகோதரனுக்கோ அல்லது சகோதரிக்கோ தெரிந்து பகிரங்கமாய் கொடுக்காமல் அந்தரங்கமாய் கொடுப்பது சாத்தியமேயாகும்.

தேவையுள்ள ஒரு சகோதரனுக்கு நீங்கள் பணம் கொடுத்து உதவ விரும்பினாலும், கூடுமானமட்டும் மறைவாக கொடுப்பதற்கே முயற்சி செய்யுங்கள். அப்போது மாத்திரமே அவர் உங்களோடு ஒட்டிக் கொள்ளாதவராய் இருக்க முடியும்! ஒருவேளை அந்த சகோதரன் தான் பெற்ற உதவியை வேறொரு நபரிடத்திலிருந்து பெற்றதாக எண்ணிக் கொண்டாலும் அதைக்குறித்து நீங்கள் சிறிதும் அலட்டிக் கொள்ளாதீர்கள். இதுபோன்ற நிலையில்தான் கடைசிநாளில் நீங்கள் பெற்றிடும் வெகுமதி மிக அதிகமாய் இருக்கும்!

***ஜெபம் :*** *எங்கள் பரம பிதாவே! உம்மிடம் பலன் பெறுவது ஒன்றே எங்கள் நோக்கமாய் வாழ்ந்து, "மனுஷர் புகழ்ச்சியை" உதறித்தள்ளி வாழ கிருபைதாரும், ஆமென்.*

**ஜீவன் தரும் இடுக்கமான வாசலுக்குள் பிரவேசியுங்கள்!**

*மத்தேயு 5, 6, 7ம் அதிகாரங்களில் இயேசு விவரித்த வெற்றியுள்ள வாழ்க்கையில் அநேகருக்கு விசுவாசம் இருப்பதில்லை. இவ்வதிகாரங்களை வாசித்தவுடன், இப்படிப்பட்ட ஜீவியம் "இவ்வுலகில்" சாத்தியமில்லை என்று சொல்லுவார்கள். கானான் தேசத்தை வேவுபார்த்து, அதனுள் பிரவேசிப்பது கூடாத காரியம் என்று கூறிய 10-வேவுக்காரர்களுக்கே ஒப்பாயிருக்கிறார்கள் (எண்.13:14). தங்களை "விசுவாசிகள்" என்று அநேகர் அழைத்துக் கொண்டாலும், இவர்களுடைய அவிசுவாசத்தின் கொழுமை "ஜீவனுக்குள் நடத்தும்" இடுக்கமான வாசலுக்குள் பிரவேசிக்க ஒவ்வாது! நாம் வாழும் இவ்வுலகம் தேவன் பேரில் அவிசுவாசத்தினால் நிறைந்திருக்கிறது. "இதே ஆவி" அதிகபட்சமான கிறிஸ்தவர்களிடம் காணப்படுவது மிகவும் பரிதாபம்! மிகவும் கொஞ்சம் பேர்களே தாங்கள் தேவனுடைய கிருபையினாலும், அவருடைய பெலத்தினாலும் மலைப்பிரசங்கத்தில் விவரிக்கப்பட்ட வாழ்விற்குள் பிரவேசிக்க முடியும் என்று விசுவாசிக்கிறார்கள். அநேக கிறிஸ்தவர்கள் தங்களுடைய தரம் குறைந்த வாழ்க்கையை நியாயப்படுத்துவதற்கு, தேவனுடைய வார்த்தையில் கலப்படம் செய்து, கறைப்படுத்தவும் துணிவு கொள்கிறார்கள் (2 கொரி.2:17; 4:2). சிலர் மலைப்பிரசங்கத்தை யூதர்களுக்கு உரியது என்றுகூட துணிந்து தர்க்கிக்கிறார்கள். பலர் அசட்டையாய் புறக்கணிக்கிறார்கள்.*

*எவ்வித வேதவசன முரண்பாட்டிற்கும் ஆணித்தரமாக எதிர்த்து நிற்பவர்களும், தேவனுக்குரிய மேன்மைகளைப் பெற்றிட எந்த விலைக்கிரயமானாலும் செலுத்தத் துணிந்தவர்களுமே... ஆம், இவர்கள் மாத்திரமே. . . இயேசு பிரசங்கித்த இடுக்கமான வாசலுக்குள் உட்பிரவேசிக்க முடியும். இவர்களே இன்றைய கிறிஸ்தவத் தலைவர்களாகக் கருதப்படுபவர்களிடமிருந்து உருவாகும் எதிர்ப்புகள், பொய்யான குற்றச்சாட்டுகள், தவறாய் புரிந்துகொள்ளப்படுதல், பயமுறுத்தப்படுதல் போன்ற தடைகளை யெல்லாம் மீறி இக்குறுகிய வாசலுக்குள் உட்பிரவேசிப்பார்கள். மீதியானவர்களெல்லாம், கரங்களைத் தட்டி, ராகத்தோடு பல்லவிகள் பாடி, காது குளிர பிரசங்கங்கள் கேட்பதில் திருப்தியுற்று வெளியிலேயே தங்கிவிடுவார்கள்!*

**ஜெபம் :** *அன்பின் பரலோக பிதாவே! ஆண்டவர் இயேசுவின் மூலம் எங்களுக்குப் போதித்த 'இடுக்கமான வாசலுக்காய்' ஸ்தோத்திரம்! இவ்வழி நடந்து, "ஜீவனுக்குள்" பிரவேசித்திட அருள்புரியும்! இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

**நம் சுயம் சிலுவையில் அறையப்பட வேண்டும்!**

*கிறிஸ்துவின்-ஜீவனுக்கு (Life of Christ) நம் சுய-வாழ்க்கையே பிரதானமான எதிரியாகும். இந்த சுய-வாழ்க்கையை "மாம்சம்" (The Flesh) என வேதம் போதிக்கின்றது. நமக்குள் குடிகொண்டிருக்கும் சகலவிதமான பொல்லாத இச்சைகளின் பண்டகசாலையே இந்த மாம்சமாகும்! இக்கேடான இச்சைகளின் நிமித்தமே நம்முடைய சுய- ஆதாயத்தைத் தேடும்படியும், நமக்கு இஷ்டமான சொந்த-வழியில் செல்லும்படியும் நாம் சோதிக்கப்படுகிறோம்!*

*நீங்கள் நேர்மையுள்ளவர்களாயிருந்தால், உங்களுடைய நல்ல கிரியைகள் கூட தீய நோக்கத்தினால் கறைபட்டிருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளுவீர்கள்! கறை புரையோடியே நம் இச்சைகளிலிருந்தே கறைப்பட்ட தீய நோக்கங்கள் எழும்பி வருகிறது!! எனவே நாம் இந்த மாம்சத்தை வெறுத்தாலொழிய நாம் ஒருக்காலும் ஆண்டவரைப் பின்பற்றிச் சென்றிட முடியாது!!*

*இதனிமித்தமே, நம் சொந்த ஜீவனை வெறுப்பதைக் (அல்லது இழப்பதைக்) குறித்து இயேசு திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறினார். இவ்வாறு, நம் சுய-ஜீவியத்தை வெறுப்பதைக் குறிப்பிட்டு சுவிசேஷங்களில் 6-தடவை திரும்பத் திரும்ப கூறப்பட்டிருப்பதைக் காண்கிறோம் (மத்.10:39; 16:25; மாற்கு 8:35; லூக்கா 9:24; 14:26; யோவான் 12:25). இயேசு பிரசங்கித்த இந்தச் செய்திதான் சுவிசேஷங்களில் அடிக்கடி கூறப்பட்டுள்ளது. ஆனால். . . . அந்தோ, இன்று இந்தச் செய்திதான் எப்போதோ அபூர்வமாய் பிரசங்கிக்கப் பட்டும். . . . மிகக் குறைந்த அளவில் புரிந்துகொள்ளப்பட்டும் உள்ளது!*

*உங்கள் சொந்த ஜீவனை நீங்கள் வெறுக்க வேண்டுமென்றால், உங்கள் சுய உரிமைகளையும்; சுய லாபங்களையும்; சுய மதிப்பையும்; சுய வழிகளையும்; சுய இலட்சியங்களையும் அதன் அபிலாஷைகளையும் தேடாமல் அவைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திட வேண்டும்! இவ்வழி செல்வதற்கு நீங்கள் ஆயத்தமா? அப்போது மாத்திரமே நீங்கள் இயேசுவின் சீஷனாய் திகழ்ந்திட முடியும்!!*

***ஜெபம் :*** *பிரியமுள்ள பரம தகப்பனே! ஆண்டவர் இயேசு நடந்துசென்ற சிலுவைப் பாதையைக் கண்டு அவரது அடிச்சுவடுகள் நடந்துவர நாங்கள் ஆயத்தம்! அவர்போலவே 'சுயத்தை மறுத்திட' தயை புரிந்தருளும்! இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

## நம் "பாடுகள்" வழங்கும் பரம ஐசுவரியம்!

நம்மைவிடப் பாடுகள் குறைவாய் இருப்பதுபோல் தோன்றுகிறவர்களைக் கண்டு நாம் பொறாமை கொள்வது சுத்த மதியீனம்! பாடுகள் எவ்வளவு அதிகமோ, அவ்வளவு அதிகமாய் இயேசுவின் மகிமையை அடையும் சந்தர்ப்பத்தையும் பெறுகிறோம் (2தெச. 2:14). உதாரணமாக, மற்ற விசுவாசிகளிடம் இருப்பதுபோல் அதிகமான உலகப்பொருட்கள் உங்களிடம் இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். அதினால் என்ன? இப்போது உங்கள் எல்லா தேவைக்கும் அவரையே நம்பும்படி அதிகமான சந்தர்ப்பம் உங்களுக்கு கிட்டிவிட்டதே! எனவே இப்போது உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் தாழ்ச்சியானது ஓர் கஷ்டகாலம் அல்ல! அது, ஆசீர்வாதமே!! ஆனால், இதற்கு மாறாக உங்கள் பாடுகளில் நீங்கள் முறுமுறுத்துக் குறை கூறுவீர்களென்றால், உங்களுக்குக் கிட்டிய அரிய சந்தர்ப்பத்தை வீணாக்கிவிட்டீர்கள்!! ஆண்டவர் உங்களுக்குத் தர எண்ணிய மகிமையையும் இழந்து போனீர்கள்..... இது, எத்தனை பெரு நஷ்டம்!

தன் வழியில் குறுக்கிடும் ஒவ்வொரு பாடுகளின் சந்தர்ப்பத் தையும் பிரயோஜனப்படுத்திக் கொள்பவனே ஞானவான்! ஒவ்வொரு நாளும் பலதரப்பட்ட சோதனைகளை நாம் சந்திக்கிறோம். அந்த ஒவ்வொரு சோதனையிலும் நம் ஆண்டவரின் மகிமையை இன்னும் கொஞ்சம் அடைவதற்கான சந்தர்ப்பமும் கூடவே வருகிறது என்ற உண்மையை நாம் ஒருபோதும் மறந்துவிடவே கூடாது!!

இவ்வாறு தொடர்ந்து அந்தரங்கத்தில் உண்மையுள்ளவர்களாய் இருப்பதே, நித்தியத்தில் திரட்சியான மகிமையின் ஐசுவரியத்தை நமக்குக் கொண்டுவந்து சேர்க்கும்! ஆனால் நீங்கள் நழுவவிடும் சந்தர்ப்பங்களோ மீண்டுமாக உங்களுக்கு கிடைக்கவே கிடைக்காது.... ஆம், அவைகளை நீங்கள் நித்திய காலமாய் இழந்துவிட்டீர்கள்!

நாம் பிறப்பதற்கு முன்பாகவே தேவன் நமக்காகப் பரலோக சம்பத்துக்களைத் திட்டம் வகுத்துவிட்டார்! நம் வழியில் குறுக்கிடப் போகும் ஒவ்வொரு பாடுகளும் அவர் ஏற்கனவே வரையறை செய்தது தான்! இப்போது அவருடைய முழு வாஞ்சையும் என்னவென்றால், நாம் ஒவ்வொரு பாடுகளையும் பொறுமையோடு சகித்து ஆண்டவராகிய இயேசுவின் மகிமையை அடையவேண்டும் என்பதுதான்!

***ஜெபம் :*** *அன்புள்ள பிதாவே! 'பாடுகளை' தள்ளிவைத்து வாழ்ந்த வாழ்விற்கு நாங்கள் மனம் வருந்துகிறோம்! இன்றிலிருந்து, பாடுகளுக்குள் பிரவேசித்து உமது மகிமையை சுதந்தரிக்க அருள்புரியும்! இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

**சகலத்தையும் அர்ப்பணித்தவனே இயேசுவின் சீஷன்!**

நமக்குச் சொந்தமாக நாம் வைத்திருப்பவைகளே நம் உடைமைகள்! நமக்கு உண்டானவைகள் யாதொன்றையும் இனிமேலிருந்து **நமக்குச் சொந்தமாக** பாவிக்காமலிருப்பதே, இயேசு கற்பித்த நமக்குரிய யாவற்றையும் வெறுத்துவிடுதலாகும்!! லூக்கா 14:33.

ஆபிரகாமின் வாழ்க்கை, இதைக் குறித்த விளக்கத்தை நமக்குச் சித்தரிக்கின்றது. ஆபிரகாமின் சொந்தமகன், ஈசாக்கு அவனுடைய உடைமை! ஒருநாள், அவனுடைய உடைமை ஈசாக்கைப் பலியாக படைக்கும்படி ஆபிரகாமிடம் தேவன் கூறினார். அதன்படியே ஆபிரகாம் ஈசாக்கைப் பலிபீடத்தில் கிடத்தி அவனை வெட்டுவதற்கும் ஆயத்தமாகிவிட்டான்! இத்தருணத்தில் தேவன் துரிதமாய் இடைப்பட்டு "பிள்ளையாண்டான் மேல் உன் கையைப் போடாதே...." எனத் தடுத்து விட்டார். ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்ப்படிய ஆயத்தமாயிருந்தான் என்பதை தேவன் கண்டபடியால் அவ்விதம் இடைப்பட்டுத் தடுத்தார் (ஆதி.22). அதன் பின்பு, ஆபிரகாம் ஈசாக்கைத் தன் வீட்டில் தன்னோடு வைத்துக்கொண்டாலும், அவனைத் தனக்குச் சொந்தமாக வைத்திருக்கவில்லை என்பதை ஆபிரகாம் ஆழமாய் உணர்ந்திருந்தான்! ஆம், இந்த ஈசாக்கு இப்போது தேவனுக்கே சொந்தம்!!

நமக்குரிய எல்லா உடைமைகளையும் வெறுத்துவிட வேண்டும் என்பதற்கு இதுவே பொருளாகும். நமக்கு உண்டான உடைமைகள் யாவும் பலிபீடத்தில் வைக்கப்பட்டு அவைகளைத் தேவனுக்கே அர்ப்பணித்திட வேண்டும். இவ்வாறு நாம் அர்ப்பணித்து விட்டவைகளில் சிலவற்றை உபயோகிக்கும்படி தேவன் அனுமதிக்கக் கூடும்! ஆனால் அவ்விதமான பொருட்களை, நாம் இனியும் நமக்குச் சொந்தமானது என எண்ணிட முடியாதே! நம்முடைய சொந்த வீட்டில் நாம் வசித்தால்கூட, அந்த வீடு தேவனுக்கே சொந்தம் என்று மனதார நினைத்திட வேண்டும். இந்த நல்ல தேவன், அவ்வீட்டில் நாம் வாடகையில்லாமல் இருக்கச் செய்திருக்கிறார் என்றே நன்றியோடு நினைவுகூர வேண்டும்!! இதுவே உண்மையான சீஷத்துவமாகும்.

***ஜெபம்*** : *பரம பிதாவே! "எனக்குரியது" என பற்றி வாழும் வாழ்க்கையின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகி, எங்கள் முழுமையையும் உமக்கே அர்ப்பணிக்கிறோம்! எங்களையும் இயேசுவின் சீஷனாய் ஏற்றுக்கொள்ளும்! ஆமென்.*

**நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திட வேண்டும்!**

*ஏதோ, ஒரு நேரத்தில் சம்பவித்த 'எரிச்சலின் சம்பவம்'ஒன்றும் நம்மை தீயவனாய் மாற்றுவதில்லை! மாறாக, ஜீவகாலமெல்லாம் நமக்குள் வாசமாய் இருந்த தீமைகளைத்தான் "இந்த எரிச்சலூட்டும் சம்பவம்" மேல்மட்டத்திற்கு கொண்டுவந்து விட்டது, அவ்வளவுதான்!!*

*இதைக் குறித்து ஏமிகார்மைக்கேல் அம்மையார் கூறும்போது, "ஒரு கப் நிறைய உள்ள தித்திப்பான தண்ணீருக்கு, எவ்வளவுதான் அதிர்ச்சி ஏற்பட்டு சிதறிவிழுந்தாலும், சிதறிவிழுந்த அந்த தண்ணீரில் ஒரு சொட்டாகிலும் கசப்பு நீராய் மாறிவிடக்கூடுமோ?" என்றார். ஆகவே, நம்முடைய ஜீவியத்தில் கசப்பான நீர் நம் உதடுகளில் வந்துவிட்டால்,அந்த "கசப்பு" ஏற்கனவே பாத்திரத்தில் இருந்தது என்பதுதான் உண்மை! 'இப்போது' எரிச்சல் மூட்டிய சம்பவம் ஒன்றும் நம்மை கசப்பாய் மாற்றிவிடவில்லை! அல்லது 'திடீரென' நம்மை ஆவிக்குரியவர்-அற்றவர்களாய் மாற்றிவிடவும் இல்லை. ஆம், 'ஏற்கனவே' நமக்குள் இருந்ததை மாத்திரமே இப்போது சம்பவித்த நிகழ்ச்சி வெளியே கொண்டுவந்திருக்கிறது! ஆகவே நம் கறைப்பட்ட சொந்த ஜீவியத்திலுள்ள குணாதிசயத்தை வெளியே கொண்டு வருவதற்கு இது போன்ற சம்பவங்களை அனுமதித்த தேவனுக்காக நாம் மிகுந்த நன்றியுள்ளவர்களாகவே இருக்க வேண்டும்! இது போன்ற சம்பவங்கள் நடந்திருக்காவிடில், நமக்குள் ஓர் கறைப்பட்ட ஊற்று இருப்பதையும், நம் மாம்சத்திற்குள் ஒரு நன்மை கூட வாசமாயில்லை என்பதையும் நம் அறிந்து கொள்ளவே முடியாது!!*

*'அடக்கிக் கொள்வதே' ஜெயமென்று கருதினால், விற்பனை செய்யும் வியாபாரிகளைக் கூட "கிறிஸ்துவைப் போன்றவர்கள்" என நாம் கூறிவிடலாம்! ஏனெனில், இவர்களின் வாடிக்கையாளர்கள் இவர்களின் பொறுமையை எவ்வளவுதான் சோதித்தாலும் "தங்கள் வியாபாரத்திற்காக" தங்கள் வெளித் தோற்றத்தில் மிகுந்த அன்புள்ளவர்களைப் போலவே காட்சியளிப்பார்கள். . . ஆனால், அவர்களுக்கு உள்ளேயோ 'எரிச்சலினால்' கொதித்துக் கொண்டிருப்பார்கள்!!*

*ஆம், அடக்கிவைத்துக் கொள்வது ஒரு போதும் ஜெயமாகாது! நாம் 'விடுதலையானது போன்ற' வெறும் தோற்றத்தையோ அல்லது 'ஆவிக்குரியவர்களைப் போன்ற' தோற்றத்தையோ தேவன் விரும்பாமல், நாம் "உண்மையாகவே விடுதலை" பெற்றிடவே தேவன் விரும்புகிறார். இதைப் பவுல் கூறும் போது "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" (கலாத்தியர் 2: 20), என்றே கூறினார். இந்த ஒப்பற்ற நிலைக்கு நம்மைக் கொண்டுவரவே தேவன் விரும்புகிறார்.*

***ஜெபம்*** : *பரம தந்தையே! "கறைபட்ட நான்" சிலுவையில் அறையுண்டு, கிறிஸ்து என்னில் வாழ்ந்திட கிருபை புரிந்தருளும்! இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

**"சுய-அன்பு" கட்டிலிருந்து விடுதலை பெற வேண்டும்!**

*சுயத்தை மையமாகக் கொண்டவன் தன் சக மனிதர்களிடத்தில் ஓர் மெய்யான அன்புடையவனாய் 'இருக்கவே மாட்டான்.' அவன் பிறரிடம் கடின மனப்பான்மையோடு நடப்பதற்கு "இந்த அன்பற்ற தன்மையே" மூலகாரணமாய் இருக்கிறது. அதிக அன்பைக் காட்டுவது போல் அவன் பாவனை செய்தாலும், கிறிஸ்துவைப் போன்ற மெய்யான அன்பு அவனுக்குள் இருக்காது! உவமையில் கூறப்பட்ட மூத்த குமாரன், தகப்பனின் வீட்டை விட்டுச் சென்ற கெட்ட குமாரனைத் தேடுவதற்காக கடந்த ஆண்டுகளில் ஒருமுறை கூட தன் தகப்பனிடம் சென்று கேட்டதில்லை! தன்னுடைய சகோதரன் மரித்துவிட்டானா? அல்லது உயிரோடிருக்கிறானா? என்ற அக்கறை கூட ஒரு துளியும் அவனிடம் காணப்படவில்லை! அவனுடைய முழு ஆர்வமும் "தன் சிநேகிதரோடு சந்தோஷமாய் இருக்க வேண்டும்" என்பது மாத்திரமே யாகும் (லூக்கா 15:29). அவனைப் பொறுத்த வரையில் "தான் சந்தோஷமாய் இருக்கவேண்டும்!" அவ்வளவு தான்.*

*நம்மை மாத்திரமே சுற்றிச் சுற்றி வந்து நாம் வாழ்கிறோமல்லவா? 'பின்மாற்றக்காரர்களைக்' குறித்து நமது மன நிலை என்ன?*

*இந்த உவமையில் நாம் காணும் இளைய குமாரன் ஓர் பின் மாற்றக்காரனாகவே இருக்கிறான்! ஆகவே அவனை மிக எளிதில் ஆக்கினைக்குள்ளாக்கித் தீர்த்திட முடியும். இவ்வேளையில், ஓர் அவிசுவாசியை அன்புகூருவதுகூட எளிது. ஆனால் ஒரு பின்மாற்றக்காரனை அன்புகூர்ந்து அவனுக்கு உதவி செய்வதுதான் அதிகக்கடினம்!! இதைக் குறித்து வேதம் கூறும்பொழுது "உன் கிறிஸ்தவ சகோதரன் ஒருவன் யாதொரு பாவத்தில் அகப்பட்டிருந்தால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவர்களை தூக்கி எடுத்து சரியான பாதைக்கு சீர்பொருந்தப் பண்ணுங்கள்"(கலாத்தியர் 6:1 - Living Bible) எனக் கூறுகிறது. அதேபோல் 1 யோவான் 5:16 குறிப்பிட்டு "உன் கிறிஸ்தவ சகோதரன் பாவம் செய்வதை நீங்கள் கண்டால், தேவன் அவனுடைய பாவங்களை மன்னித்து அவனுக்கு ஜீவனைத் தரும்படி நீங்கள் ஜெபம் பண்ணவேண்டும்" (Living Bible) எனவும் கூறுகிறது. இவ்வாறு வீழ்ச்சியடைந்தவர்களுக்காக நாம் எப்போதாவது ஜெபித்திருக் கிறோமா? நம்மில் அநேகர் இந்த ஜெபத்தை ஜெபிப்பதில்லை! அதற்கு ஒரே காரணம், நாம் அவ்வளவாய் நம் சுய-நலத்தில் மையம் கொண்டு வாழ்கிறோம் என்பதுதான்!!*

**ஜெபம்** : *இரக்கமுள்ள எங்கள் தந்தையே! "சுய- அன்பு" இவ்வளவு ஆழமாய் எங்களில் இருப்பதைக்காண உதவி செய்தீர்! பிறரை நேசிக்கும் மெய்யான "தன்னலமற்ற அன்பை" எங்களுக்குத் தந்தருளும்! இயேசுவின் நாமத்தில் ஆமன்.*

**கீழானவைகளை அல்ல, மேலானவைகளையே நாடுங்கள்!**

*இஸ்ரவேலரின் சத்துருக்களை எதிர்க்க கிதியோன் ஒரு சேனையைத் திரட்டினபோது, அவனுடன் 32,000 இஸ்ரவேலர்கள் இருந்தனர். ஆனால் அவர்கள் எல்லோரும் முழு இருதயத்துடன் இல்லை என்பதை தேவன் அறிவார். ஆதலால், தேவன் அவர்களை வடிகட்டி கழித்துவிட்டார். முதலாவது, பயப்படுகிறவர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டனர். அப்படியும் 10,000 பேர் மீதமிருந்தார்கள். அவர்கள் ஆற்றண்டை கொண்டு செல்லப்பட்டு சோதிக்கப் பட்டார்கள். அதில் 300 பேர் மட்டுமே சோதனையில் ஜெயம் பெற்று தேவனால் அங்கீகரிக்கப்பட்டார்கள்! தங்கள் தாகத்தைத் தீர்க்கும்படி அந்த 10,000 பேர்கள் ஆற்றில் தண்ணீர் குடித்தவிதம், கிதியோனின் சேனையில் இருப்பதற்கு தகுதியுடைய வர்கள் யார் என்பதைத் தேவன் தேர்ந்தெடுக்கும் முறையாயிற்று! தாங்கள் சோதிக்கப்படுகிறோம் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவேயில்லை!! 9,700 பேர்கள் சத்துருவைப் பற்றிய "விழிப்புள்ள உணர்வு"எல்லாவற்றையும் மறந்து தங்கள் தாகத்தை திருப்தியாக்க முழங்கால்படியிட்டனர். 300 பேர்கள் மாத்திரம் நின்றவண்ணம், ஜாக்கிரதையாய் குவிந்த கைகளால் தண்ணீரைக் குடித்தனர்!*

*தேவன் நம்மை சோதிப்பது, அனுதின வாழ்வின் சாதாரண விஷயங்களில்தான்! பணம்; உலக மரியாதை; லௌகீக சுகங்கள் போன்றவற்றைப் பற்றிய நமது மனப்பான்மையில்தான். நாமும்கூட கிதியோனின் சேனையில் இருந்தவர்களைப்போல, தேவன் நம்மை சோதித்தறிகிறார் என்பதை அனேக முறை உணர்வதில்லை. "உலகக் கவலைகளால்" பாரமடையாதபடிக்கு இயேசுகிறிஸ்து நம்மை எச்சரித்துள்ளார் (லூக்கா 21:34). கொரிந்து பட்டண கிறிஸ்தவர் களுக்கு பவுல் ஆலோசனை சொல்லும்பொழுது "மனைவிகளுள்ள வர்கள் மனைவிகள் இல்லாதவர்கள் போலவும், இவ்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் அதைத் தகாதவிதமாய் அனுபவிக்காதவர்கள் போலவும், கொள்ளுகிறவர்கள் கொள்ளாதவர்கள் போலவும்" இருக்கவேண்டும் என்கிறார் (1 கொரி. 7:29-31). நமது தாகத்தை நாம் தீர்க்கலாம்.... ஆனால், கரங்களைக் குவித்து குறைந்தபட்ச தேவை எவ்வளவோ அவ்வளவே நாம் குடிக்க வேண்டும்! நம்முடைய மனம் பூமிக்குரியவைகளையல்ல, மேலானவைகளையே நாடி நிலைத்திருக்க வேண்டும்!*

***ஜெபம்** : பரம தந்தையே! பூமிக்குரிய எங்கள் 'தேவைகள்' தவிர எங்கள் நாட்டமோ எப்போதும் மேல்நோக்கியிருக்க அருள்புரியும்! இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

**ஊழியத்தைவிட ஜீவியமே பிரதானம்!**

*மே*லும் நியாயத்தீர்ப்பின் கடைசி நாளில் அவரது நாமத்தில் அற்புதம் செய்த அநேகர் 'அக்கிரமமுள்ளவர்கள்' எனப் புறக்கணிக்கப்படவே தகுதியுள்ளவர்களாயிருந்தார்கள் (மத்.7:22,23) என இயேசு நமக்கு போதிக்கிறார். அவரது நாமத்தினால் மெய்யான அற்புதங்கள் செய்கிற கிறிஸ்தவ பிரசங்கிமார்களையும், குணமாக்குகிறவர்களையும்தான், அவர் இங்கு தெளிவாகச் சுட்டிக் காண்பிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் வார்த்தையின்படி இந்த அற்புதஞ்செய்யும் ஊழியம் கொண்டவர்களில் அநேகர் (ஒரு சிலரல்ல, எல்லோருமல்ல, ஆனால் அநேகர்) தங்கள் தனிப்பட்ட வாழ்விலும், தங்கள் சிந்தனை வாழ்விலும் பாவத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்! அது கிறிஸ்துவின் நியாயாசனத்தின் முன் பகிரங்கமாக்கப்படும்!!

ஒரு மனிதன் தேவனால் அங்கீகரிக்கப்பட்டான் என்பதற்கு, "அற்புதங்கள் செய்வது" ஒருவிதத்திலும் அடையாளமாகாது என்பதையே நமக்கு தெளிவாகப் போதிக்கிறது. காதுள்ளவன் கேட்கக்கடவன்! இல்லையேல் வஞ்சிக்கப்படுவான்!!

தனது முப்பதாவது வயதில் இயேசுகிறிஸ்து "இதோ, என் நேச குமாரன், இவரில் நான் பிரியமாயிருக்கிறேன்" (மத்.3:17) என்று பிதாவினால் வானத்திலிருந்து எல்லோரும் கேட்கும்படியான நற்சாட்சி பெற்றார். "அந்த நேரம்" அவர் ஒரு அற்புதமோ, ஒரு பிரசங்கமோ ஒன்றும் செய்யாதிருந்த வேளை! அப்படியானால், தேவனால் அவர் நற்சாட்சி பெற்ற அந்த இரகசியம்தான் என்ன? ஆம், அது அவரது ஊழியத்தினால் அல்ல **அவரது ஜீவியத்தினால்தான்** நற்சாட்சி பெற்றார் என்பது தெளிவு! நமது ஊழியங்களின் வளர்ச்சியினால் நாம் அங்கீகரிக்கப்பட மாட்டோம். மாறாக, நம் அனுதின வாழ்க்கையில் உண்மையுள்ளவர்களாய் இருப்பதை வைத்தே அங்கீகரிக்கப் படுவோம்!

மறைவாயிருக்கும், இயேசுகிறிஸ்துவின் 30-ஆண்டு கால வாழ்க்கையைப் பற்றி நமக்குச் சொல்லப்பட்டிருப்பதெல்லாம் (தேவ ஆலயத்தில் அவர் போதகருடன் பேசினதைத் தவிர்த்து) அவர் நம்மைப்போல் எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டும் பாவம் செய்யவில்லை என்றும் (எபிரெயர் 4:15), அவர் தனக்கே பிரியமாய் நடக்கவில்லை என்றும்தான் (ரோமர் 15:3) சொல்லப்பட்டிருக்கிறது. அவர் உண்மையுள்ளவராய் எல்லாவிதமான சோதனைகளையும் எதிர்த்தார். ஒன்றிலும் அவர் தனக்கானவைகளை நாடவில்லை. இதுதான் பிதாவைப் பிரியப்படுத்தியது!

**ஜெபம்** : *அன்பின் பிதாவே! இயேசுவின் ஊழியத்தைக் கண்டு அல்ல... அவரது ஜீவியத்தைக் கண்டு "இவர் என் நேசக்குமாரன்" என அழைத்த அந்த நற்சாட்சியை நாடியே உம்மை இன்றுமுதல் பின்பற்றிட தீர்மானிக்கிறோம்! இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

**உலகப்பொருட்களின் நாட்டத்தில் விடுதலை பெற வேண்டும்!**

*இவ்வுலகப்பொருள் குறித்து, ஆபிரகாம் சோதிக்கப்பட்ட இரு தருணங்களை ஆதியாகமம் 13, 14 அதிகாரங்களில் நாம் வாசிக்கிறோம். முதலாவது, தங்கள் மந்தைகள் மிகவும் பெரிதாகிவிட்டதினிமித்தம் தாங்கள் சேர்ந்திருக்கக்கூடாதெனக் கண்டு அவனும் லோத்துவும் பிரிய வேண்டிய தருணம்.... ஆபிரகாம் மூத்தவனாயிருப்பதாலும், கானான் தேசத்திற்கு அவனே தேவனால் அழைக்கப்பட்டதாலும், தேசத்தை தேர்ந்தெடுக்கும் முதல் வாய்ப்பை அவன் பயன்படுத்துவதுதான் இலகுவானதும் முறையும்கூட! ஆனால் சுயநலமின்றி, தாராள மனதுடன், 'முதலாவது' லோத்து தெரிந்துகொள்ளும்படி ஆபிரகாம் சொன்னான். மனுஷரீதியாக சொல்லப்போனால், லோத்து சிறந்ததைத் தேர்ந்தெடுத்தான் - ஆம், சோதோம் தேசத்தை!*

*ஆனால் தேவன் மௌனமாக இந்த நடபடியை - நமது எல்லாப் பண சமாச்சாரங்களை கவனிப்பதுபோலவே கவனிக்கிறார் என்று ஆபிரகாமோ, லோத்தோ உணரவில்லை! ஆபிரகாமிடம் காணப்பட்ட சுயநலமில்லா தன்மையில் தேவன் மிகவும் பூரித்துப் போய், அவனுடன் உடனடியாகப் பேசி ஆபிரகாமிற்கு 'நான்கு திசை' எங்கும் கண்களை ஏறெடுத்து பார்க்கக்கூடிய தேசம் முழுவதையும் அவனுடைய சந்ததிக்கு சுதந்திரமாகக் கொடுப்பேன் என்றார். லோத்து தெரிந்தெடுத்த பகுதியும் இதில் அடங்கும்! இன்று சுமார் 4000 ஆண்டுகளுக்குப் பிறகு, தேவன் தன் வார்த்தையைக் காப்பாற்றி யிருக்கிறதை பார்க்கிறோம். ஆபிரகாமின் சந்ததியார் (யூதர்கள்) ஆபிரகாமிற்கு தேவன் கொடுத்த இடத்தில் வாழ்கின்றனர். இதுதான் தேவனுடைய வழியாகும். சாந்தகுணமுள்ளவர்களே பூமியைச் சுதந்தரிப்பார்கள்!!*

*உண்மையான தேவ ஊழியக்காரனுக்கு ஏற்ற பெருந்தன்மையுடன் ஆபிரகாம் நடந்துகொள்வதை நாம் மீண்டும் ஆதியாகமம் 14ஆம் அதிகாரத்தில் காணலாம். சோதோம் ராஜாவின் மக்களையும், அவன் பொருட்களையும், அவனுடைய விரோதிகளிடமிருந்து ஆபிரகாம் மீட்டுவிட்டான். சோதோமின் ராஜாவோ எல்லாப் பொருட்களையும் ஆபிரகாமிற்கே சமர்ப்பித்தான். ஆனால், ஆபிரகாம் அவற்றிலிருந்து ஒரு பாதரட்சை வாரைக்கூட ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறான். "எனது தேவன் வானத்தையும் பூமியையும் உடையவர். . . உனது எந்தப் பொருளும் எனக்கு வேண்டாம்" என்று கூறுகிறான் (ஆதி. 14:22,23).*

*இந்த உரையாடலையும் கூட, தேவன் மவுனமாகக் கேட்டார். உடனடியாக ஆபிரகாமிற்குத் தோன்றி, அவன் தேவனாலேயே பலன் அடைவான் என்று சொன்னார் (ஆதி. 15:1). ஆம், நாம் தேவனை கனம் பண்ணினால் நிச்சயம் அவர் நம்மைக் கனம் பண்ணுவார்.*

***ஜெபம் :*** *பரலோக பிதாவே! ஆபிரகாமைப்போல் உலக சிநேகத்தை உதறி, உம்மையே எங்கள் வாழ்வில் மேன்மையாக கனம் பண்ணிவாழ அனுக்கிரகம் செய்தருளும்! ஆமென்.*

**பரிசுத்தாவி அபிஷேகத்தின் நோக்கம் நிறைவேற வேண்டும்!**

நமக்குள் வந்திருக்கும் பரிசுத்தாவியின் கிரியையை வேதாகமம் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறது : "நாம் இயற்கையாகவே தீமைகள் செய்வதற்கே அதிக விருப்பம் கொண்டிருக்கிறோம்! அந்த விருப்பம், பரிசுத்தாவியானவர் நாம் செய்யும்படி கூறுகின்ற விருப்பத்திற்கு முற்றிலும் விரோதமானதேயாகும்! அதேபோல, பரிசுத்தாவியானவர் நமக்குள் கிரியை செய்திட விரும்பும் விருப்பங்கள், நம்முடைய இயற்கையான விருப்பங்களுக்கு முற்றிலும் விரோதமாகவே இருக்கிறது!! இவ்வாறு நம் சுய-வாழ்கை என்ற சத்துவமும், பரிசுத்தாவியின் சத்துவமும் தொடர்ச்சியாக ஒன்றுக்கொன்று விரோதமாய் யுத்தம் செய்து. . . இந்த இருவரில் ஒருவர் யுத்தத்தில் ஜெயித்து நம்மை ஆளுகை செய்துவிடும்படியே நாடுகிறார்கள்!!" *(கலாத்தியர் 5:17 -* LIVING BIBLE*).*

இன்று பரிசுத்தாவியின் ஊழியத்தைக் குறித்து அநேக கிறிஸ்தவர்கள் குழம்பிப்போயிருக்கும் தருணத்தில், நாமோ அவர் நம் மாம்சத்தின் கிரியைகளை, அதாவது நம் சுய-வாழ்க்கையை நாம் மரணத்துக்கு கொண்டுவரும்படி "நமக்கு உதவி செய்யும் ஓர் ஒப்பற்ற உதவியாளர்" என தெளிவு பெறுவது சாலச் சிறந்ததல்லவா! ஆம், பரிசுத்தாவியானவர் இன்றும் அநேக காரியங்களை நமக்குள்ளும் நம் மூலமாயும் கிரியை நடப்பிக்கிறார். அவர் நடப்பிக்கும் கிரியை யாதொன்றையாயினும் நாம் அற்பமாய் எண்ணாதிருக்கக்கடவோம். ஆகிலும், பரிசுத்தாவியானவர் நம் சுய-வாழ்க்கையை மரணத்துக்குள் கொண்டுவரும்படி கிரியை செய்திட நாம் அவருக்கு இடந்தராத பட்சத்தில், நம்முடைய மற்ற எல்லா அனுபவங்களும் எந்த மதிப்புமில்லாத அனுபவங்களாகவே மாறிவிடும்!!

இதைத்தான் வேதாகமம் குறிப்பிட்டு "நீஙகள் மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள். ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள், (இவ்வழி நடந்து) எவர்கள் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" (ரோமர் 8:13,14) என ஆணித்தரமாய் கூறுகிறது.

***ஜெபம்:*** *பரலோக தந்தையே! எம் சுய-வாழ்வை அழித்துவிடும்படி அருளப்பட்ட பரிசுத்தாவிக்கு நாள்தோறும் எங்களை ஒப்புவித்துவாழ தயைபுரிந்தருளும்! ஆமென்.*

**ஜீவனைக் கண்டடைந்து, பிறருக்கும் பகிர்வதே வாழ்வின் சீரிய நோக்கம்**

யாக்கோபின் வாழ்வில் பெத்தேலில்தான் சூரியன் அஸ்தமனமாகி விட்டது! அங்கு அவன் கண்ட சொப்பனத்தில், யாக்கோபின் வாழ்க்கையில் கொண்டிருக்கும் மேலான மகிமை நிறைந்த தன் நோக்கத்தை தேவன் அவனுக்கு வெளிப்பாடாய் தந்தார்! ஆனால் அதற்கு யாக்கோபின் பிரதிபலிப்பு என்னவாய் இருந்தது? அவன் சொன்னான், "கர்த்தாவே, நீர் தந்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்களில் அப்படியொன்றும் பெரிய ஆர்வம் எனக்கொன்று மில்லை! அதைவிட, நான் போகிற வழியிலே என்னைக் காப்பாற்றி, உண்ண ஆகாரம் தந்து, உடுக்க வஸ்திரமும் தந்துவிட்டால், அதுவே எனக்குப் போதும்! அப்படி நீர் செய்துவிட்டால், நீர் தரும் வருமானத்திலிருந்து உமக்கு நான் தசமபாகம் செலுத்துவேன்! உம்மை எனக்குத் தேவனாகவும் வைத்துக் கொள்வேன்!!" (ஆதி. 28:20-22) என்றான்.

இன்றும் அநேக கிறிஸ்தவர்கள் இதே நிலையில்தான் இருக்கிறார்கள். தேவனோ அவர்களை 'மகத்துவமானவைகளுக்கு' அழைத்திருக்க அவர்களோ மிகத் தரங்குறைந்த அற்ப காரியங்களில் தங்கி திருப்தியடைந்து விடுகிறார்கள். தங்கள் முழு சக்திகளையும் தன் பணிக்கென செலவழிக்கும்படி அழைத்திருந்தும். . . அவர்களோ, பணத்தைத் தேடுவதற்கும்! இவ்வுலகத்தின் கனத்தைத் தேடுவதற்கும்! தங்கள் ஜீவியத்தை வீணாக்கிப்போடுகிறார்கள்!! உத்தம மிஷனரியாய் ஊழியம் செய்த ஒரு பக்தன் தன் மகனை நோக்கி, "மகனே, நீ ஒரு மிஷனரியாக தேவனால் அழைக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், நீயோ ஒரு மகாராஜாவாகவோ அல்லது ஒரு கோடீஸ்வரனாகவோ முன்னேறிச் செல்வதை நான் ஒருக்காலும் விரும்ப மாட்டேன்! கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயம் செய்யும் கனத்திற்கு முன்பாக, உன் ராஜ மேன்மையும் உன் பிரபு ஸ்தானமும் யாதொரு மேன்மையும் அல்லவே அல்ல!!" என தலை நிமிர்ந்து முழங்கினார்.

யாக்கோபிடத்தில் போலவே, நம்மிடத்திலும் தேவன் கொண்டிருக்கும் நோக்கம், சரீரப் பிரகாரமான ஆசீர்வாதங்களை யெல்லாம் விட மகா மேன்மை நிறைந்ததேயாகும்!

அவருடைய நோக்கம் பொதுவாக இரண்டு முக்கியத்துவம் கொண்டதாகவே இருக்கிறது. முதலாவது முக்கியத்துவம், கிறிஸ்துவின் ஜீவியத்தை நாம் வாழ்ந்து வெளிப்படுத்துவதேயாகும்! இரண்டாவது முக்கியத்துவம் அவர் தந்த ஜீவனை மற்றவர்களும் கண்டடையும்படி ஊழியம் செய்வதாகும்! இவைகளே ஒரு மெய்க் கிறிஸ்தவனுக்குள்ள மேன்மையான அழைப்பாகும்! இதைத்தவிர, இந்த பூமியில் வேறு உயர்ந்த அழைப்பு என எதுவுமே இல்லை!!

***ஜெபம்*** : *அன்பின் பிதாவே! உம்முடைய அழைப்பின் மேன்மையை உதாசினம் செய்யாமல், அதை நிறைவேற்றும் பாக்கியத்தை தந்தருளும்! ஆமென்.*

**நம்மில் தேவன் விரும்பும் அந்தரங்க சாட்சி வாழ்க்கை!**

ஈசாக்கை பலியாக கொடுக்கும்படி தேவன் ஆபிரகாமிடம் இரவில் பேசியபோது (ஆதி.22:1), அவன் ஏற்கனவே மக்கள் மத்தியில் தேவ மனுஷன் என்று பெயர் பெற்றிருந்தான் (ஆதி. 21:22). நம்மைக்குறித்து மனிதர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை தேவன் பொருட்படுத்துவதே இல்லை. தானே ஆபிரகாமை சோதித்தறிய விரும்பினார். ஆகையால்தான் ஒருவரும் கேளாவண்ணம் இரவில் அமைதியாக தேவன் ஆபிரகாமிடம் பேசினார்!

தேவன் ஆபிரகாமிடம் ‘கேட்டது’ விலையேறப்பெற்ற பொருள்! மறுநாள், அவன் அதைக்குறித்து ஒன்றும் செய்யாமல், தேவனுக்கு கீழ்படியாமல் போனால், அதை ஒருவரும் அறிய வாய்ப்பில்லை. ஆபிரகாம் தனக்கு பயப்படுகிறானா இல்லையா என தேவன் பரீட்சிக்கவிரும்பியது இப்படித்தான்!

தேவன் ‘நம்மை’ சோதித்தறிவதும் இப்படித்தான். அவர் நம்மிடம் பேசும்போது, மிக அமைதியாக, நம்மோடுகூட வசிப்போர்கூட தேவன் நம்மிடம் என்ன சொன்னார் என்று அறியாவண்ணம் நமது இருதயத்தில் பேசுகிறார்! தேவன் நம் ஒவ்வொருவருக்கும் முற்றிலும் அந்தரங்கமான பகுதியாக ‘நமது சிந்தை வாழ்வை’ - கொடுத்ததற்கு ஒரு காரணம், நாம் அவருக்குப் பயப்படுகிறோமா? இல்லையா? என்று சோதித்தறியவேயாகும். நமது சிந்தை நமது வார்த்தையைப் போலவே உரத்த சத்தமுள்ளதாயிருந்தால், நம்மை ஒருவரும் அற்பமாய் எண்ணி விடாதபடி நாமெல்லோரும் நமது சிந்தையை சுத்தமாகக் காத்துக் கொள்வோம். ஆனால் நமது சிந்தை மிக இரகசியமானதாக தேவன் மட்டும் காணக்கூடியதாக இருக்கிறபடியால், அவருக்கு பயப்படு கிறோமா? இல்லையா? என இப்போது தேவன் காண்பது எளிது.

ஆபிரகாம் சோதனையில் வெற்றி பெற்றான்! அவன் மனுஷருக்கு முன்பாக உள்ள அற்பமான சாட்சியைத் தேடவில்லை. அவன் தேவனுக்குரிய அந்தரங்கமான பகுதியிலும் கீழ்படிய விரும்பினான். ஆம், அவன் ஈசாக்கை மறுநாள் காலையில் அழைத்துக்கொண்டு மோரியா மலைக்குப் பயணமானான்! அங்கு தனது ஏக சுதனை அர்ப்பணித்ததன் மூலம் “கர்த்தாவே நான் பூமியில் மற்ற யாரொருவரைக் காட்டிலும் உம்மையே அதிகமாய் நேசிக்கிறேன்” என்று சொன்னான். ‘அப்போதுதான்’ தேவன் தன் நற்சான்றிதழை அளித்து அவனை அளவில்லாமல் ஆசீர்வதிப்பதாக வாக்குப் பண்ணினார்!

**ஜெபம் :** *பரம தந்தையே! எங்கள் சிந்தையும், எங்கள் இருதயமும் யாரும் காணமுடியா அந்தரங்கமாய் உள்ளதே! நீர் மாத்திரமே காணும் இந்த உன்னதமான அந்தரங்கத்தில் உமக்குப் பிரியமாய் வாழ அனுக்கிரகம் புரிந்தருளும்! ஆமென்.*

**பழையமனிதனை களைந்து புதிய மனிதனை தரித்துக்கொள்ள வேண்டும்!**

*ரோமர் 6:1-7 வசனங்கள் ஞானஸ்நானத்தின் பொருளை மிகத் தெளிவாக விளக்குகிறது. அவ் வசனங்களில், நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூட சிலுவையில் அறையப்பட்டதென்றும்; ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப் பட்டோம் என்றும் வாசிக்கிறோம். நாம் மனந்திரும்பாத நாட்களில், நம்மோடுகூட நாம் வைத்திருந்த 'பாவம் செய்ய விரும்பும்' ஓர் மனமே பழைய மனுஷனாகும்! இப்போது இந்த பழைய மனிதன் கிறிஸ்துவுடனேகூட சிலுவையிலறையப்பட்டுவிட்டான்! (ரோமர் 6:6).*

*பழைய மனுஷனும்; மாம்சமும்; ஒன்று அல்ல! சகல பொல்லாத இச்சைகளையும் தனக்குள் வைத்திருக்கும் பண்டகசாலையே (Store House) மாம்சமாகும்! இப்படிப்பட்ட மாம்சம் தேவசித்தத்தை சதா எதிர்த்தே நிற்கிறது. இருப்பினும், இக்கேடான மாம்சத்தை நம்முடைய மரணநாள் வரை நம்மோடுகூட நாம் சுமந்தே வரவேண்டியுள்ளது!!*

*நம் வீட்டிற்குள் நுழைய முயலும் ஓர் திருடர்களின் கும்பலுக்கே நம் மாம்சத்தை ஒப்பிடலாம்! நம் வீட்டிற்குள் இருக்கும் பழைய மனுஷனை ஓர் உண்மையற்ற வேலைக்காரனுக்கு ஒப்பிடலாம்! இந்த உண்மையற்ற வேலைக்காரன் (பழைய மனுஷன்) இது நாள் வரை நமக்குச் செய்ததெல்லாம், "திருடர்கள் உள்ளே நுழைவதற்குத் தொடர்ச்சியாக கதவுகளைத் திறந்துவிட்டான்!" என்ற கேடான செயலே ஆகும். ஆனால் இப்போது, ஓர் விந்தையின் நற்செய்தி கேளீர்!! இத்தீமையான உண்மையற்ற வேலைக்காரன் இப்பொழுது கொல்லப்பட்டுவிட்டான். திருடர்கள். . . .? அவர்கள் இன்னமும் திடகாத்திரமாகவே நம்மைச்சுற்றி வந்து கொண்டேதான் இருக் கிறார்கள்! ஆனால் 'புதிய மனுஷன்' என அழைக்கப்படும் ஓர் புது வேலைக்காரனை இப்போது நாம் பெற்றிருக்கிறோம். இப் புதிய வேலைக்காரன் உண்மையுள்ளவன்! உள்ளே நுழைய விரும்பும் திருடர்களுக்கு எதிராக கதவைப் பூட்டுவதற்கே இப் புதிய மனுஷன் வாஞ்சையோடு நிற்கிறான்!!*

*நம் ஞானஸ்நானத்தின் மூலமாக, பாவம் செய்ய விரும்பும் பழைய மனுஷனின் மரணத்தையும் அவனுடைய அடக்கத்தையும் சாட்சி பகர்ந்து, இப்போது கிறிஸ்துவோடுகூட உயிர்த்தெழுந்து "புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளுவோம்!" என்றே நாம் கெம்பீரிக்கிறோம் (ரோமர் 6:4).*

***ஜெபம்*** *: எங்கள் பரம தகப்பனே! ஞானஸ்நானத்தின் மெய்யான அர்த்தத்தின்படி 'பழைய மனிதனை' நடைமுறை வாழ்வில் அடக்கம் செய்து 'புதிய மனிதனை' தரித்து வாழ கிருபை செய்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**'திவ்வியம்' மலர்ந்திடும் பொன்னான வாழ்க்கை!**

*வீழ்ச்சியுற்ற நிலையிலிருந்து, திவ்விய சுபாவத்தை அடைவதற்கு இரு கட்டங்களைக் கடந்து வரவேண்டும்.1) முதலாவது, நாம் பாவத்தை மேற்கொண்டு ஜெயிப்பதற்குரிய கிருபையைப் பெறுவதுதான் (ரோமர் 6:14). ஆனால் இக்கட்டத்தில், நம் சத்துருக்களை சிநேகிப்பதற்கும், சபிப்பவர்களை ஆசீர்வதிப்பதற்கும்..... போன்ற திவ்விய சுபாவங்களுக்காய் நாம் இன்னமும் போராடத்தான் வேண்டியுள்ளது. 'இப்போது' கிருபையின் வல்லமையால் ஜெயம் மாத்திரமே பெற்று ஜீவிக்கிறோம். இவ்விதம் நாம் தொடர்ச்சியாய் எல்லா சோதனைகளிலும் உண்மையுள்ளவர்களாயிருந்தால் மாத்திரமே நாம் இரண்டாவது கட்டத்திற்குள் பிரவேசித்திட முடியும்! 2) சோதனை நேரத்தில் தொடர்ச்சியாய் சிலுவையில் அறையப்பட்ட மாம்சமோ இறுதியில்* **மரணமடைகிறது!** *(ஓர் குறிப்பிட்ட பாவத்திற்காக). ஆம், இங்கேதான் நாம் திவ்விய சுபாவத்தில் பங்கடையும் கிரியை நடைபெறத் துவங்குகிறது! இங்கு இனிமேல் 'போராடுவது' தேவையில்லாமல் பூரண இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்து விடுகிறோம்!*

*இப்போது, தூய சிந்தை கொள்வதும், சத்துருவை சிநேகிப்பதும், சபிப்பவர்களை ஆசீர்வதிப்பதும் இயற்கையாகவே "சுபாவமாய்" ஊற்றெடுப்பதை நாம் ருசித்திட முடியும்! பார்த்தீர்களா, நம் நம்பிக்கை இதுதான்!! ஆம், தேவனின் சுபாவத்தையே நாம் பெற்றுவிட முடியும்!! சத்துருவை சிநேகிப்பதற்கும், கவலை கொள்ளாமல் இருப்பதற்கும், தூய சிந்தை கொள்வதற்கும் தேவன் போராட வேண்டியதில்லையே! இதே அவருடைய சுபாவத்தைச் சுதந்தரிப்பதற்குத்தான் நாமும் அழைக்கப்பட்டிருக்கிறோம்!*

*".... திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் நமக்கு அருளப்பட்டிருக்கிறது" (2 பேதுரு 1:4). இந்த அழைப்பு ஆச்சரியமன்றோ! பவுலைப் போல, கடந்தகாலப் பின்னானவைகளை மறந்துவிட்டு.... இனி எஞ்சியுள்ள நாட்களில், இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டு, இலக்கை நோக்கி ஆசையாய்த் தொடரக்கடவோம்!!*

***ஜெபம்*** : *பரம சற்குருவே! உம்போன்ற "சற்குணத்தை" நாங்களும் பங்கடைந்திட, வழிவகுத்த இயேசுகிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்திற்காக உமக்கு நன்றி! இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

**மனுஷர் முன்பாக அல்ல, தேவனுக்காக வாழ்ந்திடுங்கள்!**

*நீங்கள் ஏராளமான நற்கிரியைகளைச் செய்துவிட்டால் மனுஷருடைய பார்வையில் நீங்கள் அளவற்ற புகழைப் பெற்றுவிடுவீர்கள். இவ்வாறு நீங்கள் பெற்ற, ஏராளமான மனுஷர் புகழும் நீதிகள் யாவும் 'அதிக அளவாகத்' தோன்றும் மரம், புல், வைக்கோல் போலவே இருக்கும் என 1 கொரி.3:12 கூறுகிறது. தேவனைப் பொறுத்தவரையில் நீங்கள் எவ்வளவு கொடுத்தீர்கள்? அல்லது நீங்கள் எத்தனை மணி நேரங்கள் ஜெபித்தீர்கள்? என்பது அவ்வளவு முக்கியமான கேள்வி இல்லை! மாறாக, தேவனுடைய மகிமைக்காகவே கொடுத்தீர்களா? அல்லது ஜெபித்தீர்களா? அல்லது, உங்கள் மகிமையைத் தேடுவதற்காக அவைகளைச் செய்தீர்களா? என்பதே முக்கியமான கேள்விகள் ஆகும். பவுல், 1 கொரி.10:31-ல் கூறுகிறபடி, நாம் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்றே செய்திட வேண்டும் என்பதே நம்மைக் குறித்து இயேசுவின் இன்றைய எதிர்பார்ப்பாகும்!*

*இவ்வாறு, புசிப்பது குடிப்பது முதற்கொண்டு நம் அன்றாட ஜீவியத்தின் ஒவ்வொரு சாதாரண நிகழ்ச்சிகளும் தேவனுடைய மகிமைக்காகவே செய்யப்படவேண்டும்!*

*பழைய ஏற்பாட்டில், மார்க்க சம்பந்தமான கிரியைகள் யாவும் ஏழாம் நாளாகிய ஓய்வுநாள் அன்றே செய்யப்பட்டது. தங்களின் மற்ற சொந்த அலுவல்களை ஜனங்கள் அந்த வாரத்தின் 6 நாட்களும் செய்தார்கள். ஆனால் புதிய ஏற்பாட்டிலோ பரிசுத்த ஓய்வுநாள் என்றும், சாதாரண நாட்கள் என்றும் வித்தியாசம் இல்லாமல் சகல நாட்களும் பரிசுத்த நாட்களாகவே கருதப்படுகிறது! இப்போது, புதிய ஏற்பாட்டில் நாம் எதைச்செய்தாலும் அவைகளை தேவனுடைய நாம மகிமைக்காகவே செய்திடவேண்டும். இதற்கு இயேசுவே நமக்கு நல்ல மாதிரியாகத் திகழ்கிறார்! அவர் நாசரேத் ஊரில் வாழ்ந்த 30 ஆண்டு ஜீவியத்திலும் மார்க்க சம்பந்தமான ஊழியம் எதுவும் செய்யவே இல்லை. ஆம், நாற்காலிகளையும், மேஜைகளையும் தன் தச்சுக் கூடத்தில் செய்தே தேவனை மகிமைப்படுத்தினார்!! பூமிக்குரிய தன் பெற்றோர்களுக்கு கீழ்ப்படிந்து தேவனை மகிமைப்படுத்தினார்!! இவ்வாறாகத்தான் இயேசுவைப் பின்பற்றும் ஜீவியத்தின் மெய்யான அர்த்தத்தை நாம் விளங்கிக் கொள்கிறோம்!!*

***ஜெபம்** : அன்பின் பரம பிதாவே! இன்றிலிருந்து, 'மனுஷர் காண' வாழ்ந்த வாழ்க்கையிலிருந்து மனந்திரும்பி, உமக்காக வாழ உம்மண்டை வருகிறோம்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**சுத்த இருதயத்தின் சந்தோஷமே, மெய் சந்தோஷம்!**

*சிந்தையில் சுத்தமாயிருப்பதைக் காட்டிலும் உள்ளத்தில் (இருதயத்தில்) சுத்தமாயிருப்பது இன்னும் அதிக விசேஷமானது. தேவனேயன்றி வேறொன்றுக்கும் தன் இருதயத்தில் இடங்கொடா திருப்பதே அது! அநேகர் சுத்தமும் செம்மையுமான வாழ்வு வாழ்ந்த போதிலும், தேவன் தங்களுக்குக் கொடுத்த ஒரு சில வரங்களுடனோ, ஊழியங்களுடனோ, விக்கிரக ஆராதனைக்கு நடத்தும் பிணைப்புகளை கொண்டவர்களாய் இருக்கிறார்கள். தேவன் கொடுத்த ஈசாக்கை பலிபீடத்தின்மேல் திரும்ப தேவனுக்கே அர்ப்பணிக்க அவர்கள் கற்றுக் கொள்ளவில்லை!*

*நாம் எதை விரும்புகிறோம்? - தேவனும் கூடவே சில வரங்களும் அல்லது தேவனும் கூடவே சில ஊழியங்களும் அல்லது தேவனும் கூடவே மனுஷரின் நல் அபிப்பிராயங்களும் அல்லது ஒருவேளை தேவனும் கூடவே நம் சரீர சுகமுமோ? தேவனும் கூடச் சில ஈசாக்குமா? அல்லது* **தேவன் மாத்திரமே நமக்குப் போதுமா?** *இந்த சோதனையில் வெற்றி பெறாத ஒருவரும் அங்கீகரிக்கப்படுவதில்லை! நாம் கர்த்தரை நோக்கி "பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யாருண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை" (சங்கீதம் 73:25) என உண்மையிலேயே சொல்லும் நிலைக்கு வந்து சேரும்பொழுதுதான், தேவனைப் பொருத்தவரை நாம் தகுதியடைந்தவர்களாகிறோம்!*

*நமக்கு அருமையான எல்லாவற்றையும் தேவனுடைய பலிபீடத்தின்மேல் அர்ப்பணித்துவிட்டு தேவனோடு மாத்திரம் தனித்துவிடப்பட்ட, இந்த மோரியா மலையை நாம் ஒவ்வொருவரும் ஏறவேண்டியுள்ளது!*

*நமது வருவாய் உயரும்போது அல்லது பதவி உயரும்போது நமக்கு சந்தோஷம் பெருகுமானால், கேட்கக் காதுள்ளவர்களாய் இருப்போமானால்.... நம்முடைய சந்தோஷம் தேவனிலும் கூடவே வருவாயிலும் (அல்லது பதவி உயர்விலும்) இருக்கிறது என்று, தேவன் நம்மோடு பேசுவதைக் கேட்கலாம். அப்பொழுது நாம் கர்த்தருக்குள் (மட்டும்) சந்தோஷமாயிருக்க கற்றுக்கொள்ளும்வரை, நமது சந்தோஷத்தை 'சுத்திகரிக்க' வேண்டும். அநேக விசுவாசிகளால் "எப்பொழுதும்" சந்தோஷமாயிருக்க ஏன் முடிவதில்லையென்றால் அவர்களுடைய சந்தோஷம் தேவனிடம் மட்டுமில்லாமல் தேவனிலும் கூடவே ஏதாவதொன்றிலும் இருப்பதினால்தான்!?*

*நமது இருதயம் சுத்தமாய் இருந்தால் - தேவனுக்கு மட்டும் இடமளித்திருந்தால் - நமது சந்தோஷமும் சுத்தமாய் இருக்கும்!*

**ஜெபம்** : *எங்கள் பரம பிதாவே, எங்கள் சந்தோஷம் அவ்வப்போது மாறுவதாய் உள்ளதே! உம்மையே அன்றி, 'யாதொன்றும்' எங்கள் சந்தோஷத்தின் மூலதனமாய் இல்லாதிருக்க அருள் செய்தருளும்!! ஆமென்.*

**ஞானத்தில் வளரும் வழி!**

**வ**னாந்திரத்தில் ஆசரிப்புக்கூடாரம் கட்டுவது பற்றி சொல்கிற போது, யாத்திராகமம் 39, 40 அதிகாரங்களில் பதினெட்டு முறை திரும்ப திரும்ப சொல்லப் பட்டிருக்கிற வார்த்தை "கர்த்தர் மோசேக்கு கற்பித்தபடியே" என்பதாம்! தேவனால் கொடுக்கப்பட்ட ஆசரிப்புக் கூடாரத்தின் அமைப்பு ஒரு எளிய சாதாரணத் தோற்றமுடையதாகும். மோசே பார்த்திருந்த, எகிப்தில் கட்டப்பட்டுள்ள பிரம்மாண்டமான பிரமிடுகளுக்கு ஒப்பிடும்போது அது வெகு தூரமானது. ஆசரிப்புக் கூடாரத்தின் அமைப்பு, மோசேக்கு 40-வது வயதில் அவனுக்குள் இருந்த சுயம் பூரண பலம் வாய்ந்ததாய் இருக்கும்போது கொடுக்கப்பட்டிருக்குமானால், அவன் அதை நிச்சயம் மாற்றி யமைத்து, கவர்ச்சிகரமான தோற்றமுடையதாய் செய்திருப்பான். ஆனால் எண்பதாவது வயதில் கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்யுமளவிற்கு, அவனிடத்தில் சுயம் அவ்வளவாய் செத்திருந்தது. மேலும் அதுவேதான் கர்த்தருடைய மகிமையை கூடாரத்திற்குள் கொண்டு வந்தது!

தெய்வீக ஞானத்தை நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் நம்முடைய மனுஷ ஞானம் சிலுவையில் அறையப்பட வேண்டும் (1கொரி.3:18). தேவன் மோசேயை அங்கீகரிக்க வேண்டுமானால் அவனுக்குள்ளிருந்த எகிப்தின் ஞானமாகிய பதரெல்லாம் அடித்து நீக்கப்பட்ட பின்பே, அது சாத்தியமாகும். எருசலேம் வேதாகமப் பள்ளியிலுள்ள இறையியல் பேராசிரியரான கமாலியேலின் பாதபடியில் பவுல் மூன்று வருடங்கள் பயின்றான். ஆகையால் அவன் மனந்திரும்பின பின்பு, தெய்வீக ஞானம் அடையும்படி தன்னிலிருந்து கமாலியேலின் ஞானம் போரடித்து நீக்கப்பட, அரேபிய வனாந்திரத்தில் மூன்று வருடங்கள் அவன் செலவு செய்ய வேண்டியதாயிற்று!! (கலா.1:17,18). அதன் பிறகுதான் பவுல் கர்த்தருடைய ஊழியக்காரன் என்று, தேவனால் அங்கீகரிக்கப்பட முடிந்தது.

இது நாம் கற்றுக்கொள்ள வேண்டிய அவ்வளவு முக்கியமான ஒரு பாடம் - ஆனாலும் உண்மையில் சிலரே இதை கற்றுக் கொள்கிறார்கள்!

**ஜெபம்** : *எங்கள் அன்பின் பிதாவே! எங்கள் சொந்த அறிவின் மேன்மையில் வீணராகிப்போகாமல், தெய்வீக ஞானத்தில் வளரும் வழியை காண்பித்ததற்கு உமக்கே நன்றி! ஆமென்.*

**நம்மை சீர்படுத்த இடைபடும் நல்ல தேவன்!**

*யாக்கோபை தேவன் தன் திவ்விய சிட்சையினால் சிட்சித்தார். ஆம், தேவன் யாக்கோபிற்கென்று வைத்திருந்த உயர்ந்த பங்கை பெற்றுக் கொள்வதற்கு "திவ்விய சிட்சையே" தேவன் தெரிந்து கொண்ட வழியாயிருந்தது!!*

*இந்த திவ்விய சிட்சையின் ஆரம்பமாக, "யாக்கோபைப் போலவே சாமர்த்தியமான எத்தனாயிருந்த" லாபானை அவன் அருகில் தேவன் வைத்தார்! இந்த லாபான் யாக்கோபைப் போலவே ஓர் எத்தனாயிருந்தபடியால், அவர்கள் நெருங்கி சேர்ந்து வாழ்ந்த காலங்களில் "ஏராளமான உரசல்கள்" ஏற்பட்டு அதன்மூலமாய் யாக்கோபின் குணாதிசயத்தில் இருந்த கரடு முரடான பகுதிகள் வெகுவாய் பாதிக்கப்பட்டு 'சீராக' உரசப்பட்டுவிட்டன!!*

*நம் வாழ்வின் கோணலான பகுதிகளை தூய்மையாக்கி செம்மைப்படுத்திட யாரை நம் அருகில் வைத்திட வேண்டும் என்பதை தேவன் அறிந்திருக்கிறார்! இருப்பினும், அவரவருடைய தேவையை அறிந்து தன் சிட்சை களை கவனமாய் கணக்கிட்டுத்தான் நமக்கு அனுப்புகிறார்! இவ்வாறு தேவனுடைய பாதுகாப்பின் பெட்டகத் திற்குள் அடங்கி யிருக்கும் பட்சத்தில், எவ்வளவு மோசமான லாபானை நமதருகில் தேவன் வைத்தாலும் "சகலமும் நன்மைக் கேதுவாய் நடக்கும்படியே" செய்திடுவார்! தங்களைப் போலவே 'கரடாண' குணாதிசயம் கொண்ட நபர்களை திருமணம் செய்யும்படி தேவன் நடத்தியதினிமித்தம் அநேக ஜனங்கள் "பரிசுத்தமாகுதலை" தங்கள் வாழ்வில் கற்றுக்கொண்டிருக் கிறார்கள். ஆம், "இரும்பை இரும்பு கருக்கிடும்" (நீதி. 27:17) என்ற வசனத்தின்படி, தம்பதியினர் இருவரும் உரசலில் சீராக்கப்படு கிறார்கள்!!*

*இப்போது, நடந்ததென்ன? யாக்கோபு கடைசியாக தான் விதைத்ததை அறுக்கத்தொடங்கிவிட்டான்! இவன் முதலாவது தன் ஜீவகாலமெல்லாம் மற்றவர்களை ஏமாற்றிக் கொண்டிருந்தான்! இப்போது அவனே லாபானால் ஏமாற்றப்பட்டான்! மற்றவர்களுடைய வாழ்வில் இவன் லாவகமாய் போட்ட கசப்பு மாத்திரை இப்போது அவன் வாயிலேயே சுழன்று விழுந்து கசந்தது!!*

*யாதொரு நோக்கமும் இல்லாமல் தேவன் நம்மை ஒருபோதும் சிட்சிக்கமாட்டார். அவரவர்களுக்குத் தேவையான மருந்து எவ்வளவு கொடுக்கவேண்டுமென்பதை தேவன் அறிந்திருக்கிறார். "தயவுள்ள வனுக்கு அவர் தயவுள்ளவராகவும், மாறுபாடுள்ளவனுக்கு அவர் மாறுபடுகிறவராகவும்..." (சங்.18:25), 'ஒவ்வொரு யாக்கோபையும்' கையாள வேண்டிய விதத்தை தேவன் அறிந்திருக்கிறார்!*

**ஜெபம்** : *பரம சற்குருவே! நங்கள் வாழ்வில் சீர்திருந்த வேண்டிய பகுதிகளை நன்கு அறிந்து, எங்களோடு இடைபடும் உம் செயல்களுக்கு நன்றி! உமக்கு இணங்கி, நற்சீர் பெற்றிட அனுகிரகியும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**தீமைக்கு தீமை செய்யாதிருப்பதே இயேசுவின் இரக்க சுபாவம்!**

"நியாயத்தீர்ப்புக்குமுன்பாக இரக்கம் மேன்மை பாராட்டும்" என யாக்கோபு 2:13 இரக்கத்தின் மேன்மையை கூறுவதைப் பாருங்கள். நாம் யாரேனும் ஒருவரால் தீமையாய் நடத்தப்படும்போது, ஓர் மறுபடியும் பிறந்த விசுவாசியின் இருதயத்திலிருந்து இரண்டு சப்தங்கள் ஒலிக்கின்றன. 1) "அவன் உன்னை நடத்தியதைப்போலவே நீயும் அவனிடம் கடினமாய் நடந்து கொள்" என்ற மாம்சத்தின் சத்தம். 2) "பரவாயில்லை, அவனிடம் இரக்கமாயிருந்து அவனை மன்னித்து விடு" என்ற பரிசுத்த ஆவியான வரின் சத்தம். முதலாவது தொனித்த மாம்சத்தின் சப்தமோ, "நியாயந் தீர்த்துவிடு!" என்ற ஓலமேயாகும்! ஆனால் ஆவியானவரின் சப்தமோ இரக்கத்தின் சப்தமாகும்! இவ்வாறு என் இருயத்தில் தொனித்த இரண்டு சப்தங்களில் "நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டிவிட்டால்" அது எத்தனை அருமையாய் இருக்கும். ஆம், ஒருநாளில் நமக்கு வரப்போகும் நியாயத்தீர்ப்பில், நாம் காட்டிய இரக்கம் நம்மை சூழ்ந்து பாதுகாக்கும் என்பதை அறியக்கடவோம்! அன்று நமக்கும் இரக்கம் தேவை!!

எபிரெயர் 12:24-ம் வசனம், "ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இயேசுவின் இரத்தத்தினிடத்திற்கு வந்து சேர்ந்தீர்கள்" எனக் கூறுவதைப் பாருங்கள். காயீன் ஆபேலுக்கு கொடிய அநீதியை . . . அதாவது, அவனைக் கொலையே செய்துவிட்டான்! அச்சமயம் ஆபேலின் இரத்தம், "பூமியிலிருந்து தேவனை நோக்கிக் கூப்பிட்டது" (ஆதி. 4:10) என நாம் வாசிக்கிறோம். எதற்காக ஆபேலின் இரத்தம் கூப்பிட்டது? "தேவரீர்! விரைந்துவந்து நியாயம்செய்யும்!!" என்ற கூக்குரலே அந்த சத்தமாகும். ஆனால் இதற்கு நேர்மாறாக 'கல்வாரிமலையில் இயேசுகிறிஸ்துவும் அநியாயமாய் குற்றஞ் சாட்டப்பட்டு தன் சகோதரர்களால் கொலை செய்யப்பட்டார்'. அக்கொடிய நிகழ்ச்சியின்போது இயேசுவின் இரத்தமும் தேவனை நோக்கிக் கூப்பிட்டதை நாம் காண்கிறோம். ஆம், "பிதாவே, இவர்களுக்கு மன்னியும்! தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்!" என பிதாவை நோக்கிக் கூப்பிட்ட இயேசுவின் இரத்தம்!! ஆபேலின் இரத்தத்திற்கும் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை இப்போது நாம் தெளிவாகக் கண்டுகொள்ள முடிகின்றது. ஆம், இந்தப் புதிய உடன்படிக்கையின் இரக்கத்திலே நாம் யாவரும் ஐசுவரியவான்களாகக் கடவோம்! தேவனுடைய இரக்கம் ஒரு மனுஷனுக்குக் கிட்டாத பட்சத்தில் அவன் ஆவிக்குரிய வளர்ச்சியடைவது ஒருக்காலும் முடியாது என்ற உண்மையை நாம் யாவரும் மனதில் கொள்ளக் கடவோம்!!

**ஜெபம் :** *அன்பின் பிதாவே! தீமைக்கு பதில் செய்யவிரும்பும் 'ஆபேலின்' இரத்தம் அல்ல! தீமைக்கு நன்மைசெய்த 'இயேசுவின்' இரத்தத்தின் இரக்க சுபாவத்திற்குள் எங்களை ஈர்த்துக்கொள்ளும்! ஆமென்.*

## சாட்சியான வாழ்விற்கும் ஊழியத்திற்கும் அபிஷேகம் வேண்டும்!

நாம் கர்த்தருக்கு ஊழியஞ் செய்வதற்கும், அவருக்கென வல்ல சாட்சியாய் விளங்குவதற்கும் பரிசுத்தாவியின் அபிஷேகம் மிகவும் அவசியமாயிருக்கிறது. இன்று அநேக விசுவாசிகள், மனந்திரும்பிய வுடன், ஆண்டவருக்கென சாட்சிபகர வேண்டு மென்பதை உணருகிறார்கள். ஆனால் பெரும்பாலோர் இச்சமயத்தில் தங்கள் நாவு கட்டப்பட்டு சாட்சி பகருவதற்கு வல்லமையற்று இருப்பதையும் காண்கிறார்கள். இவ்வாறிருப்பதை சிலர், "தங்களின் துரதிருஷ்டமான குணாதிசயம்" என எண்ணிக் கொண்டு இனியும் தாங்கள் கிறிஸ்துவுக்கு வல்லமையுள்ள சாட்சியாய் விளங்க முடியுமா? என எல்லா நம்பிக்கையையும் இழந்துவிடுகிறார்கள்!

இவர்களைத் தவிர, வெகு சிலராகிய வாஞ்சையுள்ள கூட்டத்தார், தேவன் தங்களுக்கு பரிசுத்தாவியின் வல்லமையைத் தருவதாக வாக்களித்திருக்கிறார் என்பதைக் கண்டறிகிறார்கள். இவர்கள்தான், முழு மூச்சாய் தேவனைத் தேடி இந்த வல்லமையை அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளுகிறார்கள்! இப்போது இவர்கள் மிகுந்த "தைரியத்தினால்" நிரம்பிவிடுகிறார்கள்!! மேலும் கிறிஸ்துவுக்கென வெட்கமின்றி அனல்கொண்ட வல்ல சாட்சிகளாயிருப்பதற்கு, இயற்கைக்கு அப்பாற்பட்ட தெய்வீக வரங்களையும் தேவனிடம் கேட்டு பெற்றுக் கொள்ளுகிறார்கள்.

நாம் ஆவியினால் பிறப்பதென்பது வேறு! அப்படித்தான் நாம் தேவனுடைய பிள்ளைகளாய் மாறினோம். ஆனால், நாம் பரிசுத்த ஆவிக்குள் மூழ்கி அபிஷேகம் பெறுவதென்பது முற்றிலும் வேறு!! இவ்விதமாகவே, நாம் எப்படி வாழ தேவன் விரும்புகிறாரோ அதற்குரிய வல்லமையையும், நாம் என்ன ஊழியம் செய்ய தேவன் விரும்புகிறாரோ அதற்குரிய வல்லமையையும், தரித்துக் கொள்ளுகிறோம்!!

இயேசு நிறைவேற்றப்போகும் இரண்டு ஊழியங்களை யோவான்ஸ்நானகன் சுட்டிக்காட்டினார். 1) பாவத்தை சுமந்து தீர்ப்பதும் 2) தம் ஜனங்களைப் பரிசுத்தாவியினால் அபிஷேகிப்பதுமே அவ்விரு ஊழியங்களாகும் (யோவான் 1:29,33). நாம் இவ்விரு ஊழியங்களையுமே நம் ஜீவியத்தில் அனுபவமாக்கியிருக்க வேண்டும்!

**ஜெபம்:** எங்கள் பரம தகப்பனே! இரட்சிக்கப்பட்ட பிறகு சாட்சியாய் வாழ பெலனற்று இருப்பதை உணர்கிறோம்! தயவாய் உம் பரிசுத்தாவியின் அபிஷேகத்தை தந்தருளி, சாட்சியுள்ள வாழ்க்கை வாழ பெலன் தாரும்! இயேசுவின் நாமத்தில் ஆமென்.

**பரம நோக்கத்தை அறிந்து ஜீவியுங்கள்!**

*நம்மில் அநேகர் முதலாவது கிறிஸ்துவண்டை சேரும்போது, நமக்கென ஏதேனும் நன்மைகளைப் பெறலாம் என்ற சுயநலமான நோக்கத்தோடுதான் கிட்டிச் சேர்ந்திருக்கிறோம். அந்த நன்மை ஒருவேளை தெய்வீக சுகமாகவோ அல்லது நரக அக்கினியிலிருந்து காக்கப்படவேண்டும் என்பதாகவோகூட இருக்கலாம். இவ்வாறெல் லாம் நாம் சுயநலமான நோக்கங்களைக் கொண்டிருந்தாலும், தேவன் நம்மை ஏற்றுக்கொள்ளத்தான் செய்தார்! கெட்டகுமாரன் தன் வயிற்றுப்பசியை போக்கத்தான் வீடு திரும்பி வந்தான். அவ்வாறிருந்தும் அவனுடைய தகப்பன் அவனை அளவுகடந்து நேசித்த நேசத்தினி மித்தம், அம்மகனைத் திரும்பவும் மகிழ்வோடு வரவேற்று ஏற்றுக் கொண்டார். ஆம், அவ்வளவாய் நல்லவர் நம் தேவன்!*

*ஆனால் நாம் பரலோகம் போகவேண்டும் என்ற நோக்கத்தோடு மாத்திரமே நம் கிறிஸ்தவ ஜீவியத்தைத் தொடர்ந்து ஜீவித்துக் கொண்டிருப்போமென்றால், அது உண்மையிலேயே துக்ககரமான தாகும். நம் ஜீவியத்திற்கான தேவனுடைய நோக்கத்தை நாம் அறியத் துவங்கியவுடன், அவைகளை நம் வாழ்க்கையில் முற்றிலும் நிறைவேற்றி முடிப்பதற்கு வாஞ்சை கொண்டவர்களாகவே நாம் இருக்கவேண்டும். எபேசுக் கிறிஸ்தவர்களின் மனக்கண்கள் பிரகாசமாக்கப்பட்டு அவர்கள் "தேவனுடைய அழைப்பின் நம்பிக்கையைக்"* (The hope of His calling) *காண வேண்டுமென்றே அவர்களுக்காக பவுல் ஜெபித்தார் (எபே.1:18).*

*தேவனுடைய அழைப்பின் நம்பிக்கை யாது? என்பதை ரோமர் 8:29,30 நமக்கு எடுத்தியம்புகிறது. அவ்வசனங்களில் தேவனுடைய அழைப்பைக் கேளுங்கள்: "தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கொப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்." இவ்வாறு நாம்* **இயேசுவின் சாயலுக்கொப்பாய் மறுரூபமாகி**, *நாம் அவருடைய இளைய சகோதரர்களாய் மாறவேண்டுமென்பதே தேவனுடைய நோக்கமா யிருக்கிறது. இதை நாம் தெளிவாகவே இவ்வசனத்தில் வாசிக்கிறோம். இவ்வாறு நாம் தொடர்ச்சியாக இயேசுவைப்போல் மாறிடும் வளர்ச்சிதான் பரிசுத்தமாகுதலின் முழு நோக்கமுமாகும். ஆம், இது ஓர் கிறிஸ்தவ ஓட்டப்பந்தயமாகும்! நம் எல்லோருக்கும் முன்பாக இந்த ஓட்டப்பந்தயத்தை இயேசு கிறிஸ்துவே முதலாவதாய் ஓடி முடித்தார். இப்போது நம் கண்களை நமக்கு முன்னோடியாய் ஓடிய இயேசுவின் மீது பதித்து நாமும் அதே ஓட்டத்தை ஓடும்படி புத்திசொல்லப் பட்டிருக்கிறோம்! (எபி.12:1-2).*

***ஜெபம்*** *: பரம தந்தையே! உமது குமாரன் இயேசுவைப்போல் மாறும்படி எங்களை அழைத்த பரம அழைப்பை இன்று அறிந்து கொண்டோம்! இனிவரும் நாட்களில் அந்த அழைப்பை நோக்கி ஓடிட அருள்புரியும், ஆமென்.*

**சுயம் உடைவதே, மெய் ஆசீர்வாதம்!**

*'வல்லமை' தந்திடும் பரிசுத்த ஆவியானவர் நம்மை எங்கே நடத்திச் செல்வார்? ஆம், "சிலுவைக்கே" அவர் நம்மை நடத்திச் செல்கிறார். "நாம்" சிலுவையில் அறையப்பட்டால் மாத்திரமே, கிறிஸ்து தன் முழு நிறைவோடும் நமக்குள் வாசம் செய்து ஜீவித்திட முடியும்! இயேசுவும் அவ்வாறே ஞானஸ்நானமாகிய தண்ணீருக்குள் அடக்கம் செய்யப் பட்டு, அதன் மூலமாய் மரணத்தைத் தனக்கென ஏற்றுக்கொண்ட பிறகுதான் பரிசுத்த ஆவியானவர் அவர்மீது வந்திறங்கினார்! (மத்தேயு 3:16). அதுபோலவே, யாக்கோபு நொறுங்கின பின்புதான் அவன் ஆசீர்வதிக்கப்பட்டான்! அதுபோலவே, மோசே புறஜாதி தேசத்தில் 40 ஆண்டுகளாய் ஆட்டுமந்தையை மேய்த்த அனுபவத்தின் மூலமாகவே அவனின் "சுய-நம்பிக்கை" உடைந்து, இப்போது இஸ்ரவேலை விடுவிப்பதற்கு ஆயத்தம் பெற்றான்! ஜீவத்தண்ணீர் பாய்ந்தோடுவதற்கு முன்பாக 'கன்மலை' அடிக்கப்பட வேண்டும்! வாக்குத்தத்த பூமியாகிய கானானுக்குள், அதாவது ஆவியின் நிறைவுக்குள் செல்வதற்கு முன்பாக, இஸ்ரவேலர்கள் முதலாவது யோர்தான் நதிக்குள், அதாவது மரணமாகி அடக்கத்திற்குள் சென்றிட வேண்டும்! உள்ளான ஒளி வெளியே பிரகாசிக்க வேண்டுமென்றால், முதலாவது கிதியோனின் அந்த மண்பானை உடைக்கப்பட வேண்டும்! வீடு முழுவதும் நறுமணம் வீச வேண்டுமென்றால், அந்த நளதக்குப்பி உடைபட வேண்டும்! பெந்தெகொஸ்தேயின் வல்லமைக்குள் பிரவேசிப்பதற்கு முன்பாக பேதுருவின் மேன்மை பாராட்டும் சுய-நம்பிக்கை உடைந்து சிதற வேண்டும்! இவ்வாறு ஆசீர்வாதம் பெறுவதற்கான விடையானது வேத வாக்கியங்கள் முழுவதிலும் நிறைந்து காணப்படுகிறது!!*

*உடைபடாத ஒரு மனிதனை தன் வல்லமையால் தேவன் நிரப்புவது பெருத்த அபாயமே ஆகும்! அது எப்படியெனில், ஒரு ஆறுமாத குழந்தையிடம் கூர்மையான கத்தியைக் கொடுப்பது போலவும், இருபதாயிரம் வோல்ட் மின்சாரக் கம்பியை அதற்குரிய காப்பு குழாய் இல்லாமல் பயன்படுத்துவது போலவும் ஆகும்! தேவனோ மகா கவனமுள்ளவர்!*

*இன்னமும் சுயம் உடைபடாமல் இருக்கும் மனிதனுக்கு அவர் தன் ஆவியின் வல்லமையை ஒருபோதும் தந்திட மாட்டார்! அதே போல், தொடர்ந்து நொறுங்கி வாழ மறுத்துவிடும் மனிதனிடமிருந்து தன் வல்லமையை மீண்டும் எடுத்துக் கொள்வார்!!*

***ஜெபம்*** *: அன்பின் பிதாவே! உம் சிலுவைப் பாதையில், எங்களை உடைத்து, உமக்கென பயனுள்ள பாத்திரமாய், மாறிட எங்களை ஆசீர்வதித்தருளும்! இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

**தன் மீது தீராத வாஞ்சை உண்டோ? என்பதை தேவன் காண விரும்புகிறார்!**

*யாக்கோபைத் தேவன் முழுமையாய் ஆசீர்வதிப்பதற்கு முன்பாக அவனுடைய வாஞ்சையைத் தேவன் சோதித்துப் பார்த்தார்! ஆகவே தான் அவனிடம் "நான் போகட்டும்" என கூறினார். இதுவரை யாக்கோபு தான் பெற்றதில் திருப்தி அடைந்துவிட்டானா? அல்லது இன்னமும் தேவன் மீது அதிக வாஞ்சை கொண்டிருக்கிறானா? என்பதையே சோதித்துப் பார்த்தார். இப்போது தேவன் யாக்கோபை சோதித்துப் பார்த்தது. . . பின் வருடங்களில், எலியா தன்னைப் பின்தொடர்ந்து வந்த எலிசாவைச் சோதித்ததற்கு ஒப்பாகவே இருந்தது. எலியா திரும்பத் திரும்ப எலிசாவிடம் "நான் போகட்டும்!" என்றே கூறிக் கொண்டிருந்தான். ஆனால் எலிசாவோ, பிரிந்து சென்றிட மறுத்தவனாய், மிகுந்த ஆர்வத்தோடு பின்தொடர்ந்து எலியாவின் ஆவியில் இரட்டிப்பான பங்கைப் பெற்றுவிட்டான் (2 இராஜா. 2). இதைப்போலவே இயேசுவும்கூட எம்மாவு 2-சீஷர்களையும் சோதித்துப் பார்த்தார்! சம்பாஷணையின் பாதியில் அந்த சீஷர்களின் வீடு வந்துவிட்டது. அப்போது, அவர்களை விட்டு அப்புறமாய் விலகிப்போவது போல் இயேசு பாவனை செய்தார்! ஆனால், அந்த சீஷர்களோ அவர் தங்களை விட்டுப் போய்விட அனுமதிக்கவில்லை.... அதன் விளைவாய், அவரிடமிருந்து ஆசீர்வாதத்தை அந்த ராத்திரியில் பெற்று விட்டார்கள் (லூக்கா 24:15-31).*

*இன்றும், தேவன் நம்மையும் சோதித்துப் பார்க்கிறார். "தேவனுடைய மேலானவைகளை நான் பெற்றே தீர வேண்டும்!" என்ற தீராத ஏக்கத்தை ஒருவனில் தேவன் காணாதவரை அவனை அவர் ஒருபோதும் முழுமையாய் ஆசீர்வதிப்பதே இல்லை! யாக்கோபைப் போலவே நாமும் தாகம் கொண்டவர்களாய், "ஆண்டவரே! நான் இதுவரை அனுபவிப்பதைக் காட்டிலும் மேலான ஜீவியம் கிறிஸ்தவ வாழ்க்கையில் உண்டு. இப்போது நான் திருப்தி அடைந்திடவில்லை! என்ன விலைக்கிரயமானாலும், எனக்கு உம்முடைய பரிபூரணமும் வேண்டும்!!" என்றே கெஞ்சிட வேண்டும். இந்தப் பொன்னான இடத்திற்கு நாம் வந்துவிட்டால், தேவனுடைய சம்பூரண ஆசீர் வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்கு "ஒரு அடி எடுத்து வைத்தால் உள்ளே போய் விடலாம்!" என்பதுபோல் அவருடைய ஆசீர்வாதம் நமக்கு மிக அருகாமையில் வந்துவிடும்!!*

***ஜெபம்*** *: பரம தந்தையே! உம் கரத்தின் ஆசீர்வாதம் "உம்மீது தாகம் கொண்டவர் களுக்கே" உரியது என்பதை கண்டுகொண்டோம். "நீரே எங்கள் வாஞ்சை" என அறிக்கை செய்து உம்மிடம் வருகிறோம், இயேசுவின் நாமத்தில் எங்களை ஏற்றருளும், ஆமென்.*

**சிலுவையின் பாதையே வல்லமையின் பாதை!**

*"சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவே, தேவபெலனாயிருக்கிறார்" என்றே கொரிந்தியர்களுக்குப் பவுல் எழுதினார். மேலும், "அவர் பெலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தும், தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக்கிறார். நாங்களும் அவருக்குள் பெலவீனராயிருந்தும், தேவனுடைய வல்லமையினால் அவருடனே கூடப் பிழைத்திருக்கிறோம்" (1 கொரிந்தியர் 1:23,24; 2 கொரிந்தியர் 13:4) என்றும் பவுல் அவர்களுக்கு எழுதினார். இந்த கொரிந்திய கிறிஸ்தவர்களோ "அந்நிய பாஷை வரமே தேவவல்லமையினால் தரிக்கப்படுவதின் அடையாளம்" என தவறாய் கருதியிருந்தார்கள். . . ஆகவேதான், அந்தத் தவற்றைப் பவுல் அவர்களுக்குத் திருத்த வேண்டியதாய் இருந்தது. அந்த கொரிந்தியர்களுக்குப் பவுல் முடிவாய் கூற வந்த செய்தி இதுதான் : "சகோதரர்களே, அந்நிய பாஷை பேசும் வரத்தில் "தேவனுடைய வல்லமை" ஒருக்காலும் காணமுடியாது! அந்த வரம் உங்களிடத்தில் இருப்பதற்காக கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!! ஆனால், அதனிமித்தம் எந்தத் தவறும் செய்து விடாதீர்கள். மெய்யாகவே, தேவனுடைய வல்லமை "சிலுவையிலும்" "சிலுவையின் மூலமாகவும்" மாத்திரமே வெளிப்படுகிறது! ஆம், மனுஷனுடைய பெலஹீனத்திலிருந்துதான், தேவனுடைய வல்லமை காணப்பட முடியும்!!" என ஆணித்தரமாய் கூறினார்.*

*ஒரு தேவமனிதன், தனக்குத் தேவன் "ஆவிக்குரிய வல்லமையின் இரகசியத்தை" எவ்வாறு விளங்கச் செய்தார் என்பதைக் கூறிய ஓர் செய்தியை நான் கேட்டிருக்கிறேன். அந்த செய்தியில், அந்த தேவ மனிதன் "ஆண்டவரே! ஆவிக்குரிய வல்லமையைக் கண்டுணர ஓர் மகத்துவமான செயலை எனக்கு நீர் செய்திட வேண்டும்!" என ஜெபித்து சில காலமாய் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்தார். கடைசியில், ஆண்டவர் அந்த தேவமனிதனைப் பார்த்து, "உன் பாவமன்னிப்பை நீ எவ்வாறு பெற்றுக் கொண்டாய்?" என வினவினார். அதற்கு அந்த தேவமனிதர் "ஆண்டவரே, இந்த பூமியில் நான் ஒரு மிகக் கேடான பாவி என்பதை உணர்ந்து உம்மிடம் வந்தேன்! நீரும் என்னை இலவசமாய் மன்னித்துவிட்டீர்!" என பதிலளித்தார். பின்பு ஆண்டவர் அவரைப் பார்த்து, "அதைப் போலவே, இப்போது இப்பூமியில் நீ தான் மகா பெலவீனமான மனுஷன் என்பதை உணர்ந்து என்னிடம் வா! அப்போது, நீ என் வல்லமையைப் பெறுவாய்!!" எனக் கூறினார். இப்படித்தான் அந்த தேவமனிதன் தன்னுடைய வாழ்க்கையில் "தேவனுடைய வல்லமையை" அனுபவிக்கத் தொடங்கினார்!!*

*ஆம், "சிலுவையின் பாதையே வல்லமையின் பாதை!"*

***ஜெபம்*** : *அன்பின் பிதாவே! எங்கள் சுயபெலன் உடைத்திடும் "சிலுவைப் பாதைக்காய்" உமக்கு ஸ்தோத்திரம்! அதுவே, தேவ பெலன் பெற்றிடும் வழி என அறிந்தோம், இயேசுவின் நாமத்தில் உமக்கே நன்றி, ஆமென்.*

**சிக்கலான குடும்ப சூழ்நிலையை இயேசு மாற்றிட முடியும்!**

யோவான் 4-ம் அதிகாரத்தில் தேவை மிகுந்த ஒரு சமாரிய ஸ்திரீயைக் குறித்து வாசிக்கிறோம். அவளுடைய வாழ்க்கை ஓர் புறக்கணிக்கப்பட்ட வாழ்க்கையாகவே இருந்தது. திருமணம் செய்து, கணவன் மரித்ததால் பின்பு மறு திருமணம் செய்து . . . . இவ்வாறு ஐந்துமுறை அவளுக்கு சம்பவித்து விட்டது! இப்போது அவளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மனுஷனோ அவளுடைய கணவர்கூட இல்லை! தன்னுடைய ஜீவியத்தைக் குறித்து அவளே மிகவும் சலிப்படைந்தவளாய் இருந்தாள். யூதர்கள், சமாரியர்களை "ஓர் தாழ்ந்த ஜாதி" என்றே நிந்திப்பார்கள். பொதுவாய் சமாரிய ஸ்திரீகள், தங்கள் கிராமத்திலுள்ள கிணற்றுக்கு காலையிலேயே சென்று தண்ணீர் மொண்டு வருவார்கள். ஆனால் இவளோ இந்தக் கிராமத்தின் மற்ற பெண்களின் மத்தியில் அநேக துன்பமான அனுபவங்களை அடைந்திருக்க வேண்டும். அந்தப் பெண்கள் இவளை உதாசீனம் செய்து, அவளைத் தங்களைவிட்டுப் புறக்கணித்து விட்டார்கள்! அவளுக்கோ, சமாரியாவில் வெட்கமும், புறக்கணிப்பும், வருத்தமுமே ஓர் தொடர்ச்சியான பங்காயிருந்திருக்க வேண்டும். இதனிமித்தமே தன்னைச் சுற்றி ஒருவரும் வராத மதிய வேளையில் அவள் கிணற்றுக்குச் சென்றாள்! தன்னுடைய இவ்வித சூழ்நிலையில், ஓர் புருஷனை கிணற்றண்டையில் கண்டபோது எவ்வளவு ஆச்சரியமடைந் திருப்பாள் என்பதை எண்ணிப் பாருங்கள்!

நம் எஜமானனாகிய ஆண்டவரோ அவளைச் சந்திக்க வேண்டுமென்பதற்காகவே சமாரியாவின் வழியாய் பயணம் மேற்கொண்டிருந்தார்!

மேலும், அந்த மத்தியான வேளையில் அந்தக் கிணற்றண்டையமர்ந்து அவளோடு பேசுவதற்கு காத்துக் கொண்டிருந்தார்!! அப்போது, அவருக்கிருந்த "தாகத்தை" தன் சம்பாஷணையின் துவக்கமாய் வைத்துக்கொண்டு . . . . படிப்படியாய், "ஜீவத்தண்ணீரின்" தேவையை அவளுக்கு அவர் உணர்த்தினார்! முடிவில், அந்த முழு கிராமத்தையும் அழைத்து வந்து மனந்திரும்பச் செய்யும்படியாய் ஆண்டவர் அவளைப் பயன்படுத்தினார்!!

பார்த்தீர்களா, சமுதாயத்தால் புறக்கணித்துத் தள்ளப் பட்டவர்களுக்கு இயேசு எவ்வளவாய் நம்பிக்கையைத் தருகிறார்! நீங்களோ ஒடுக்கப்பட்டவர்களாய், அற்பமாய் கருதப்படும் தாழ்ந்த ஜாதியினராய். . . . உங்கள் உரிமைகளுக்காய் போராடிட ஒருவர்கூட இல்லாதவர்களாய் இருக்கக்கூடும்! உங்களுக்கு இதோ ஓர் நற்செய்தி! ஆம், இனியும் நீங்கள் கலங்கிடத் தேவையில்லை! உங்களுக்காகவே உங்கள் மீட்பர் இதோ வந்துவிட்டார்!!

***ஜெபம் :*** *எங்கள் பரம பிதாவே! மாறிமாறி வந்த சூழ்நிலைகளில் குடும்பத்தின் சிக்கல் பெரிதானாலும், அதை விடுவிக்க நீர் வருவீர்! என காத்திருக்கும் விசுவாசம் தாரும்! ஆமென்.*

**உங்களை தேவனிடமே மௌனமாய் ஒப்புவிக்கப் பழகுங்கள்!**

*மோசேயிடம் காண்கிற நேர்த்தியான விஷயம் என்னவெனில், அவனைப்பற்றி அவதூறு பேசப்பட்ட போதும் அல்லது அவன் எதிர்க்கப்பட்ட போதும், அவன் நடந்துகொண்ட விதம்.... ஜனங்கள் கலகக்காரர்களாய் 'நமக்கு வேறொரு தலைவனை ஏற்படுத்துவோம்' (எண்.14:5) என்று சொன்னபோது மோசே முகங்குப்புற விழுந்து மவுனமாயிருந்தான். தன் பாரிசத்தில் நியாயம் பேச அவன் மறுத்து விட்டான். கோராவும், இஸ்ரவேலின் மூப்பர்கள் 250 பேரும் மோசேயின் தலைமைக்கு விரோதமாக எதிர்த்தபோதும், மோசே மீண்டும் முகங்குப்புறக் கிடப்பதை நாம் பார்க்கிறோம் (எண். 16:4).*

*அவன் தன்னை பாதுகாத்துக் கொள்ளவும் இல்லை, தன் ஸ்தானத்தைப் பற்றிக்கொள்ளவும் இல்லை. தன் அதிகாரத்தை நிலைநாட்டவும் இல்லை.*

*அவனுடைய சொந்த சகோதரியும் சகோதரனும் அவனுக்குப் புறம்பே குறைபேசும்போது, தேவன் அதற்காக தீர்ப்பு செய்ய எத்தனித்த போது, மீண்டும் மோசே முகங்குப்புற விழுந்து அவர்களுக்காக இரங்கும்படியே கர்த்தரிடம் மன்றாடுகிறான் (எண்12:13). அவன் வாழ்ந்த காலத்தில் பூமியின்மேல், மெய்யாகவே மிகவும் தாழ்மையான மனிதனாய் இருந்தான்! தேவன் அப்படிப்பட்டவர்களிடமே தன்னை ஒப்புவிக்க முடியும்!!*

*மற்றவர்களின்மேல் அதிகாரமும், ஆளுகையும் செலுத்துகிற போது, மனிதர்கள் கெட்டுப்போகிறார்கள். ஆனால் மோசே அப்படி கெட்டுப் போகவில்லை. தன்னுடைய மந்தையின் கலகத்தினால், தேவன் மோசேயை திரும்பத் திரும்ப சோதித்துப் பார்த்தார். ஆனால் அந்த பரீட்சைகளிலெல்லாம் மோசே மீண்டும் மீண்டும் வெற்றி பெற்றான்!*

*ஆவிக்குரிய வாழ்க்கையின் தலைமைப் பொறுப்பில் அநேக ஆபத்துக்கள் இணைந்துள்ளன. ஆயினும் மண்ணில் மீண்டும் மீண்டும் முகங்குப்புற விழுந்து, எவ்விதத்திலும் தனக்காக வாதாடாமலும்; தன் உரிமையைப் பாதுகாக்காமலும்; நாவடக்கி இருக்கக் கற்றுக் கொண்டோர் பாக்கியவான்கள். 'கர்த்தர்தாமே' தனது ஊழியக்காரர் களுக்காக வழக்காடுவார் என்று அவர் வாக்கு கொடுத்திருக்கிறார் (ஏசா.54:17). ஆகையால், அவ்வித காரியங்களை நாம் நமது கரங்களில் எடுத்துக்கொள்ளாமல் தேவனிடமே விட்டுவிடுவது சாலச் சிறந்தது! நீதியாக நியாயம் தீர்ப்பவர் எவரோ அவரிடம் நமது காரியத்தை ஒப்புக்கொடுத்துவிடுவதுதான் நமது ஒரே வேலை!! (1 பேதுரு 2:23).*

***ஜெபம் :** பரம தந்தையே! பதறிப் பேசும் எங்கள் வாழ்விற்காக வருந்துகிறோம்..... எந்த நிலையிலும், "மௌனமாய்" உம்மிடம் எங்களை ஒப்புவிக்க கிருபை தந்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**பாவ கூண்டிலிருந்து விடுதலை!**

பழைய ஏற்பாட்டின் கீழ் "பாவம் செய்வதை நிறுத்தும்படி" (Stop Sinning!) எவ்விதப் புத்திமதியும் சொல்லப்பட வில்லை. ஆனால் புதிய உடன்படிக்கையிலோ, இரு பக்கங்களையுடைய சுவிசேஷ செய்தியாக 1) ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுதலை! 2) பாவத்தை விட்டு ஓய்ந்திருத்தல்!! என்ற இயேசுவின் செய்தியை காண்கிறோம்.

பவுல் கூறுகையில், "நீங்கள் பாவஞ்செய்யாதீர்கள்" (1 கொரி.15:34) எனவும், யோவான் கூறுகையில், "என் பிள்ளைகளே நீங்கள் பாவஞ் செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்" (1 யோவா.2:1) எனவும், பேதுரு கூறுகையில், "பாவங்களை விட்டு ஓய்ந்திருங்கள்" (1 பேதுரு 4:2) எனவும் ஒரே தொனியில் கூறினார்கள்!

பவுல், ரோமர் 5-ம் அதிகாரத்தில் விசுவாசத்தினால் நீதிமானாக்கப் படுதலை விவரித்துக் கூறியபின்பு, ரோமர் 6-ம் அதிகாரத்தில், "ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்கு பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா?" என்று கேள்விக்கணையைத் தொடுக்கின்றார். மீண்டும் 15-ம் வசனத்தில், "இதினாலென்ன? நாம் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் ஒரு தடவைகூட பாவஞ்செய்வது முறையாகுமா?" (ரோமர் 6;15 எழுத்தின்படியான மூல மொழிபெயர்ப்பு) என மிகவும் அழுத்தமாக வினவுகிறார். மேற்கண்ட இரு வசனங்களின் கேள்விகளுக்கும் "கூடாதே!" என பவுல் ஆணித்தரமாக பதில் உரைத்தார். ஆம், இனியும் நாம் 'அறிந்து' ஒருதடவைகூட பாவம் செய்யவே கூடாது!

இப்போது நீங்கள் கேட்கும் செய்தி ஓர் பாரமான செய்தியாக உங்கள் செவிகளில் தொனிக்கிறதா? தொடர்ந்து பாவம் செய்ய விரும்பு பவர்களுக்கு மாத்திரமே இச்செய்தியோ பாரமானதாகத் தென்படும்! ஆனால் பாவத்தின் அடிமைத்தனத்தில் சிக்கி உழன்று தவிப்பவர் களுக்கு இச்செய்தி மகிழ்வூட்டும் விடுதலையின் செய்தியாகும்!! ஓர் சிறைக்கூண்டில் அடைபட்டிருப்பவன் "நீ விடுதலையாகப் போகிறாய்!" என்ற செய்தியைக் கேட்டு எங்ஙனம் பரவசமடையாமல் இருக்கக் கூடும்? நீங்களே சொல்லுங்கள், சிறையில் கட்டுண்டிருந்த அம்மனிதனுக்கு இச் செய்தி பாரமானதாயிருக்குமா? இல்லை. . . . அப்படி ஒருக்காலும் இருக்கவே இருக்காது!

"(பாவத்தினால்) சிறைப்பட்டவர்களை விடுதலை செய்யவும்; (சாத்தானால்) நொறுங்கி நசுக்கப்பட்டவர்களை விடுதலையாக்கவுமே" இயேசு புதிய உடன்படிக்கையின் அபிஷேகத்தைப் பெற்று நம்மிடம் வந்தார்! (லூக்கா 4:18).

**ஜெபம் :** அன்பின் பரம தகப்பனே! மாபெரும் விடுதலை தரும் இயேசுகிறிஸ்துவின் புதிய உடன்படிக்கை வாழ்விற்கு ஸ்தோத்திரம்! 'இனியும்' அறிந்த பாவங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்திட உம் கிருபை தந்தருளும்! இரட்சகர் நாமத்தில் ஆமென்.

**சோதனையில் ஜெயித்திட முடியும்!**

*நாம் சோதிக்கப்படுவதற்கும், பாவஞ் செய்வதற்கும் இடையில் பெருத்த வித்தியாசம் உண்டு.*

*யாக்கோபு 1:14,15 இவ் வித்தியாசத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. அவ்வசனம் கூறுவது யாதெனில், "அவனவன் தன் தன் இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும்." நம் மாம்சத்திலிருக்கும் இச்சையானது கர்ப்பந்தரிக்க அனுமதிக்கப்படு மட்டும், நம் இருதயத்தில் ஒருபோதும் பாவம் பிறந்திட முடியாது! நம் மனதைத் தூண்டும்படி இச்சை மேலே பொங்கிவரும்போது நாம் சோதிக்கப் படுகிறோம். அவ்வேளையில், அச்சோதனைக்கு நம்முடைய மனதை சம்மதிக்கச் செய்துவிட்டால் அச்சமயத்தில்தான் கருத்தரித்தல் ஏற்பட்டு பாவமும் பிறந்துவிடுகிறது!*

*நாம் சோதிக்கப்படுவது, நம்மை எவ்விதத்திலும் தீமையாக்கிட முடியாது. நம்மைப்போலவேதான் இயேசுவும் சோதிக்கப்பட்டார். ஆனால் அவர் எவ்விதத்திலும் ஒருதடவைகூட பாவம் செய்யவே இல்லை! இதனிமித்தமே அவர் முற்றிலும் பரிசுத்தமுள்ளவராய் இருந்தார்.*

*"அவர் எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது" என்றும்; "எல்லாவிதத்திலும் அவர் நம்மைப் போலவே சோதிக்கப்பட்டார்" என்றும் வேதம் இயேசுவை சுட்டிக் காட்டி போதிக்கிறது (எபி.2:17; 4:15). இவ்வாறு மிகத் துல்லியமாக இயேசு நம்மைப்போல அப்படியே சோதிக்கப்பட்டார். இருப்பினும், அவரோ ஒருபோதும் பாவம் செய்யவே இல்லை!*

*அன்றியும், "தேவ பக்திக்குரிய இரகசியமானது. . . . கிறிஸ்து மாம்சத்திலே வெளிப்பட்டார். . . ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார்" (1 தீமோ.3:16). ஆம், அவர் நம்முடைய மாம்சத்தை உடையவராயிருந்தும், தன் ஜீவியகாலம் முழுவதும் தன் ஆவியை அவர் தூய்மையுள்ளதாய் காத்துக்கொண்டார்!*

*அவர் ஜெயம் பெற்றதுபோலவே நாமும் ஜெயம் பெறமுடியும் என்ற நம்பிக்கையின் இரகசியம் இங்குதான் அடங்கியுள்ளது!*

***ஜெபம்*** *: பரம தந்தையே! எங்களைப்போல் "சோதிக்கப்படக்கூடிய" மாம்சத்தில் வெளிப்பட்டு, பாவத்தை ஜெயித்த ஆண்டவர் இயேசுவைப்போல், நாங்களும் ஜெயித்திட அருள்புரியும்! இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

### தேவனால் பிறந்தவன் பாவம் செய்வதில்லை!

*ஓர் விசுவாசி பாவம் செய்வதற்கும்; ஓர் அவிசுவாசி பாவம் செய்வதற்கும் பெருத்த வித்தியாசம் உண்டு! அதெப்படியெனில், ஒரு பூனை தவறி சகதிக்குள் விழுவதற்கும்; ஒரு பன்றி மன விருப்பத்தோடு அதே சகதிக்குள் பாய்ந்து விழுவதற்கும் உள்ள வித்தியாசத்தைப் போலவேயாகும்! பூனை சகதியான சாக்கடையை வெறுக்கிறது. இருப்பினும் அப்பூனை அச்சகதிக்குள் தவறி விழ முடியும். ஆனால் பன்றியோ சகதிக்குள் விழுவதை விரும்பித் தெரிந்துகொள்ளுகிறது. இதற்கெல்லாம் சுபாவமே அடிப்படைக் காரணமாகும். இப்படித்தான் இயேசுவின் சீஷன் ஓர் புதிய சுபாவத்தைப் பெற்று, தூய்மையை நேசித்து; பாவத்தை வெறுக்கிறான்!*

*பழைய மனிதன் பாவம்செய்ய விரும்புகிறான். புதிய மனிதனோ பாவம்செய்ய ஒருபோதும் விரும்பவே மாட்டான். ஆனால் புதிய மனிதன் பெலசாலியாய் இல்லாவிட்டால், மாம்சத்தின் இச்சைகள் நுழைந்திடாதபடி தன் இருதயத்தின் கதவை இழுத்து மூடுவதற்கு அவனால் முடியாமற்போகலாம்!*

*அதற்கு காரணம் அவன் இச்சைகளை விரும்புகிறான் என்பது அல்ல. அப்படி அல்லவேயல்ல! அதற்கு ஒரே காரணம், அப் புதிய மனிதன் இச்சைகளை எதிர்த்து நிற்பதற்குப் போதிய பெலனற்று இருக்கிறான்! அதற்கு காரணம், ஒருவேளை அவன் தன்னை வேதவசனத்தினால் போஷிக்காமல் இருந்திருக்கலாம். அல்லது அவன் ஜெபத்தின் மூலமாய் பெலனடையாமல் இருந்திருக்கலாம். . .!*

*இப்போது, பாவம் செய்வதற்கும் (Committing Sin) பாவத்தில் விழுவதற்கும் (Falling into Sin) உள்ள வித்தியாசத்தைத் தெளிவாக அறிந்து கொண்டீர்களா? ஆம், இந்த வித்தியாசத்தை நாம் அறிய வேண்டியது மிகவும் முக்கியமாகும். அப்போதுதான் எண்ணற்ற தேவையில்லாத குற்றவுணர்வுகள் நம் இருதயத்தைத் தாக்குவதிலிருந்து நம்மை நாம் தவிர்த்துக்கொள்ள முடியும்.*

*யோவான் அப்போஸ்தலர் தன் முதல் நிருபத்தில் இந்த வித்தியாசத்தை மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றார். 1) "பாவஞ் செய்கிறவன்" (அறிந்து பகிரங்கமாய் பாவம் செய்கிறவன்) பிசாசினாலுண்டாயிருக்கிறான் (1 யோவான் 3:8) என யோவான் எழுதினாலும், விசுவாசிகளுக்கு எழுதும்போது, 2) "உங்களிலொருவன் பாவஞ் செய்வானானால் (அதாவது தவறி பாவத்தில் விழுவானானால்), நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிற வராயிருக்கிறார்" (1 யோவான் 2:1) என்றே தைரியப்படுத்தி எழுதினார்!!*

**ஜெபம்:** *பரிசுத்த பிதாவே! உம்மால் பிறந்த நாங்கள் பாவம் செய்வதில்லையே! நாங்கள் தவறிவிழும்போது "உடனே" தூக்கிவிடுகின்ற உம் அன்பிற்கும் பரிவிற்கும் ஸ்தோத்திரம்!! இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

**தேவ கிருபையின் ஆச்சரியமான உதவி!**

*நாம் சோதிக்கப்படும் நேரமே நம்முடைய தேவையான ஏற்ற வேளையாகும். கலிலேயாக் கடலில் பேதுரு மூழ்கிவிடும் அபாயத்தில் இருந்ததற்கொப்பாகவே நாமும் தவறிவிழப்போகும் நேரமே நாம் உதவி பெறத் தேவையான நேரமாகும் (மத்.14:30). அவ்வேளையில் பேதுருவைப் போலவே நாமும் கிருபைக்காக கூக்குரலிட வேண்டும். எங்ஙனம் பேதுரு கூப்பிட்ட வேளையில் உடனடியாக இயேசு தன் கையை நீட்டி அவனை மூழ்க விடாமல் தூக்கி எடுத்தாரோ, அதைப்போலவே நாமும் கிருபையைப் பெற்று கீழே விழாமல் உறுதியாக நின்றிட முடியும்!*

*நாம் வழுகி கீழே விழுவதிலிருந்து தேவன் நம்மைக் காப்பார் என்ற நிச்சயத்தை அளிக்கும் அற்புதமான வாக்குத்தத்தங்கள் தேவனுடைய வார்த்தையில் உள்ளன. அவைகளில் சில வசனங்களை இங்கே பாருங்கள்:*

*எல்லாவற்றிற்கும் முதலாக, நம்மை மேற்கொள்ளும்படியான எவ்வித வலிமையான சோதனையும் நம்மைச் சோதித்திட தேவன் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார் என இந்த நல்ல தேவன் வாக்குரைத்திருக்கிறார். அந்த அருமையான வாக்குத்தத்தத்தைக் கேளுங்கள்: "தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்! உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக சோதனையோடு கூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்" (1 கொரி.10:13).*

*இன்னும் தேவனுடைய வார்த்தை சொல்வதைக் கேளுங்கள்: "வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமை உள்ளவர்" (யூதா 24) என்றும் வாசிக்கிறோம்.*

*இதுபோன்ற அருமையான வாக்குத்தத்தங்களும், இன்னும் அதிகமான வாக்குத்தத்தங்களும் தேவனுடைய வார்த்தையில் அடங்கியிருக்கும்போது இனியும் நாம் பாவம் செய்ய வேண்டியது ஒருபோதும் அவசியமே கிடையாது! இனிமேல் 1 பேதுரு 4:2-ம் வசனம் கூறுகிறபடி, தேவனுடைய சித்தம் மாத்திரமே செய்து நாம் பிழைத்து வாழ முடியும்!*

***ஜெபம்** : பரலோக தந்தையே! சோதனையில் எமது கூக்குரலுக்கு ஓடோடிவந்து "கிருபையின்" உதவியைத் தரும் உம் அன்பிற்கு நன்றி! வழுவாதபடி வாழ கிருபைதாரும், இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

**பரிசுத்தமாகுதலில் நாளுக்குநாள் வளர்ச்சி அடைந்திட வேண்டும்!**

*தேவன்தான் நம்மை முற்றிலும் பரிசுத்தமாக்குகிறவர்! (1 தெச.5:23). இச்சீரிய கிரியையை நாமாகவே நிறைவேற்றிட முடியாது. நாம் அவரையே முழுவதுமாய்ச் சார்ந்துகொள்ள வேண்டும். ஏனெனில் நாம் அவருடைய சித்தத்தைச் செய்வதற்குரிய விருப்பத் தையும் அவைகளை நிறைவேற்றி முடிப்பதற்குரிய செய்கையின் திறனையும் நமக்குத் தரும்படி அவரே நமக்குள் கிரியை செய்கிறார்! இருப்பினும் நாம்தான், "பயத்தோடும் நடுக்கத்தோடும் நம்முடைய இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்பட வேண்டும்" (பிலி.2:12, 13). பார்த்தீர்களா, தேவன் நமக்குள் கிரியை செய்வதை (*Works IN*) நாம்தான் செயல்படுத்தி (*Work OUT*) நிறைவேற்றுகிறோம். ஆம், இந்த நல்ல தேவன் நம்மை வெறும் "ரோபோட்ஸ்" (*Robots — *இயந்திர மனிதன்) ஆக மாற்றிட விருப்பங்கொள்ளவே இல்லை!*

*அதேபோல், நம் பாவத்தின் குற்றங்களையும் தேவன்தான் கழுவுகிறார். இருப்பினும், "நம் மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைநாமே சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்த மாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்" (2 கொரி.7:1) என்றும் நாம் கட்டளையிடப்பட்டிருக்கிறோம்! எப்போதெல்லாம் நாம் நமக்குள்ளிருக்கும் அசுசியை வெளிச்சத்தில் காண்கிறோமோ அப்போதெல்லாம் நாம்தான் அவைகளைவிட்டு சுத்திகரிக்கும் கிரியையில் ஈடுபட வேண்டும்!*

*இவ்வாறாகத்தான் நாம், "ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழிக்கிறோம்" (ரோமர் 8:13). இக்கிரியை தொடர்ந்து நமக்குள் நடந்தால் நம் ஜீவியத்தில் ஆவியின் கனியாகிய — அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகிய திவ்விய சுபாவங்கள் அதிகமதிகமாய் நம்மில் நிச்சயமாய் வெளிப்பட்டு மிளிர்ந்துவிடும். இதுவே, நாம் கிறிஸ்துவின் சாயலாய் மறுரூபமடைவதின் பொருளாகும்!*

*இங்ஙனமே, நம்முடைய பாதை அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப் பிரகாசத்தைப்போல் மாறுகிறது (நீதி.4:18). இவ்வாறு தேவன் நமக்காக உண்டுபண்ணிய பரிசுத்தமாகுதலின் மகிமையான பாதைக்கு நாம் யாவரும் செவிமடுப்போமாக!*

***ஜெபம் :*** *நேசமுள்ள தகப்பனே! எங்களுக்குள் பரிசுத்தமாகுதலின் கிரியையை தீவிரமாய் நடப்பிப்பதற்காக ஸ்தோத்திரம்! நாங்கள் இப்பாதையில் கவனமாய் வளர்ந்துவர உதவிசெய்தருளும், இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

## வேத தியானமின்றி தேவ வளர்ச்சி இல்லை!

இவ்வுலகில் ஓர் குழந்தை பிறந்தவுடன் அக்குழந்தைக்கு உணவும்; காற்றுமாகிய இவ்விரண்டும் மிகவும் தேவையாயிருக்கிறது. இதற்கொப்பாகவே ஓர் ஆவிக்குரிய பிறப்பின் அனுபவமும் இருக்கின்றது. ஓர் புதிதாய்ப் பிறந்த தேவனுடைய குழுந்தை புசிக்கவும்; சுவாசிக்கவும் வேண்டும். அக்குழந்தைக்கு தேவனுடைய வசனமே உணவாகவும்; ஜெபமே ஜீவசுவாசமாகவும் மாறுகிறது!

தேவனுடைய வசனம் - நம்முடைய ஆவிக்குரிய உணவாகும்:

ஓர் குழுந்தை வளர்வதற்கு, ஆரம்பத்தில்தான் பால் உணவு தேவையாயிருக்கின்றது. ஆனால் அக்குழந்தை வளர்ச்சியடையும் போதோ பலமான ஆகாரம் (Solid food) தேவையாயிருக்கின்றது. "கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேசங்களே" பால் உணவாகும் (எபி. 6:1). "நீதியின் வசனமோ" (The word of Righteousness) (எபி. 5:13) பலமான ஆகாரமாயிருக்கிறது. தேவன் நமக்குத் தரும் வெளிச்சத்திற்கு எவ்வளவு துரிதமாய் நாம் கீழ்ப்படிகிறாமோ அதைப்பொறுத்துத்தான் நாம் எவ்வளவு சீக்கிரத்தில் பலமான ஆகாரத்தைப் புசித்திட ஆரம்பிப்போம் என்ற கால அளவு நிர்ணயிக்கப்படுகின்றது.

நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சி விசுவாசத்தையும் (FAITH) + கீழ்ப்படிதலையும் (OBEDIENCE) சார்ந்திருக்கிறது. நாம் தேவனையே விசுவாசித்து சார்ந்துகொள்ளும்படி, தேவன் தன்னுடைய வார்த்தையில் நமக்கு வாக்குத்தத்தங்களைத் தந்திருக்கின்றார். அதேபோல நாம் கீழ்ப்படிவதற்காகவே தேவன் நமக்கு அவருடைய வார்த்தையில் கட்டளைகளையும் தந்திருக்கின்றார். நாம் ஒழுங்காக (Regularly) தேவனுடைய வார்த்தையைத் தியானித்து அவரை விசுவாசித்து சார்ந்துகொண்டு, தேவனுக்குக் கீழ்ப்படிவோமென்றால், நாம் தேவனுக்குள் ஆழமாய் வேர்விட்டு ஓர் இலையுதிராதிருக்கும் கனிதரும் மரம்போல் செழித்தோங்கி நிற்பதை நம்மில் நாம் கண்டுகொள்ள முடியும். மேலும், நாம் செய்வதெல்லாம் வாய்க்கும்படியாகவும் இந்த நல்ல ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்திடுவார்! (சங்கீதம் 1:2, 3).

***ஜெபம் :*** *பரம தந்தையே! உணவில்லாமல் சரீர வளர்ச்சி இல்லையே.... உம் அனுதின வேத வசன தியானமில்லாமல் நாங்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்திட இயலாது என்பதை உணர்ந்திருக்கிறோம்! நாள்தோறும் வேத தியான வாழ்வை பற்றிவாழ அருள்புரியும், ஆமென்.*

**குற்றம்சாட்டும் சாத்தானை ஜெயித்திட வேண்டும்!**

*சா*த்தான் ஓர் குற்றஞ்சாட்டுகிறவன்! சாத்தானின் குற்றஞ் சாட்டுதலுக்கும்; பரிசுத்தாவியின் உணர்த்துதலுக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் வேறு பிரிக்கத் தெரிந்தவர்களாயிருக்க வேண்டும். தன்னுடைய குற்றஞ்சாட்டுதல்களின் மூலமாய் நாம் ஆக்கினை உணர்வடைந்து மனமடிந்துபோகவே சாத்தான் சதா முயற்சி செய்து கொண்டிருக்கிறான். இதற்கு மாறாக பரிசுத்தாவியின் உணர்த்துதலோ மென்மையும், முழு நம்பிக்கையையுமே எப்போதும் தருவதாய் இருக்கும்!

இக் குற்றஞ்சாட்டும் சாத்தானை நாம், "ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், நம் சாட்சியின் வசனத்தினாலும்" மாத்திரமே ஜெயித்திட முடியும் (வெளி.12:11). நம் கடந்தகால பாவங்களைக் குறித்த அவனுடைய குற்றஞ்சாட்டுதல்களுக்கு, வேதத்தின்படியான நம்முடைய சாட்சியை அவனுடைய முகத்திற்கு நேராக கூறும்போது மாத்திரமே நாம் ஜெயித்திட முடியும்: "என் எல்லாப் பாவங்களையும் இயேசுகிறிஸ்துவின் இரத்தம் கழுவி விட்டது! நான் அத்தூய இரத்தத்தினால் முற்றிலும் நீதிமானாக்கப்பட்டுவிட்டேன்" என்பதே அந்த சாட்சியாகும்! இவ்வாறு நாமும் "இப்படி எழுதியிருக்கிறதே. . . ." என இயேசு உபயோகித்த அதே ஆயுதத்தை சாத்தானுக்கு எதிராக நாம் உபயோகித்திட வேண்டும்!!

இவ்வாறு சாத்தானுடைய குற்றஞ்சாட்டுதல்களை மாத்திரமல்லாமல், அவன் பல்வேறு சோதனைகளால் நம் மனதைத் தாக்கி நமக்குக் கொண்டுவரும் அதைரியத்தையும் பதட்டத்தையும் கவலையையும் ஜெயிப்பதற்கு இவ்விதமே தேவனுடைய வார்த்தையை சாத்தானுக்கு முன்பாக நாம் தைரியமாய் அறிக்கை செய்திட வேண்டும்! இதனிமித்தமே நாம் தேவனுடைய வார்த்தையை நன்கு அறிந்து வைத்திருப்பது மிகவும் முக்கியமாகும். அப்போதுதான், நம்முடைய ஏற்ற சமயத்தில் பரிசுத்தாவியானவர் சரியான வேத வசனங்களை நம் மனதில் கொண்டுவந்து நிறுத்த முடியும்!

***ஜெபம் :*** *அன்பின் பிதாவே! எங்கள் இரட்சிப்பையே துவம்சம் செய்யும் சாத்தானின் குற்றம் சாட்டுதலை "வேத வசன சாட்சி அறிக்கை" மூலம் ஜெயித்திட கிருபை செய்தீரே, உமக்கு ஸ்தோத்திரம்! ஆமென்.*

**ஜெபவாழ்வு ஓர் ரம்மியமான வாழ்வு!**

**வ**ல்லமையான ஜெபத்திற்கு இரண்டு பிரதானமான காரியங்கள் கட்டாயமாகத் தேவை!

முதலாவது, தேவனால் அருளப்பட்ட **மனபாரம்** நமக்குள் இருக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் தேவன் மூலமாக, நம் இருதயத்திற்குள் வழங்கும் மனபாரமே, வலிமையான ஜெபத்திற்கு முதல் தேவையாகும்!

இரண்டாவது பிரதானமான தேவை, **விசுவாசம்**. நாம் அவரில் நம்பிக்கை வைத்திடவே தேவன் நம்மில் எதிர்பார்க்கிறார். நம் அவிசுவாசம், அவரை அவமதிப்பதற்கு ஒப்பாகும். ஏனெனில், அவிசுவாசம் தன்னில் மறைத்து வைத்திருக்கும் செய்தி : "ஓர் பூமிக்குரிய தகப்பன் தன் பிள்ளைகளிடம் அக்கறை கொள்வதைக் காட்டிலும், இந்த தேவன் என்மீது வைத்திருக்கும் அக்கறை குறைவுள்ளது!" என்பதுதான். இவ்வித அவிசுவாசத்தில் செய்திடும் ஜெபத்தில் எந்த பலனும் கிடைப்பதில்லை!!

மேலும், ஜீவியத்தை சார்ந்தே ஜெபம் இருக்கிறது! ஓர் நீதியுள்ள நம் வாழ்க்கையைப் பொறுத்தே நம் ஜெபம் வலிமை கொண்டதாய் இருக்க முடியும்!! இவ்வித மனிதன் மாத்திரமே, தேவனுடைய மனதிற்கு உகந்த விதத்தில் ஜெபித்திட முடியும்!

நம் சரீரம் ஜீவிப்பதற்கு "சுவாசம்" எவ்வளவு அத்தியாவசியமோ, அதேபோல் நம் ஆவிக்கு "ஜெபம்" என்ற சுவாசம் அத்தியாவசியமாய் இருக்கும்படி தேவன் செய்திருக்கிறார். சுவாசிப்பதற்கு நமக்கு கஷ்டமாகிவிடுமென்றால், நம்மில் வியாதி இருப்பதைச் சுட்டிக்காட்டும் அறிகுறியாகத்தான் அது இருக்கும்!!

நாம் நம் வாழ்வின் "முதலிடமானவைகளை" சரிசெய்து கொண்டு, தேவனையே நம் வாழ்வின் மையமாக்கும்போது, சுவாசத்திற்கு இடைஞ்சலான இந்த "ஆஸ்துமா" வியாதி பஞ்சாய்ப் பறந்தே போய்விடும். ஆம், ஜெபமோ ஓர் வலுக்கட்டாயமான சடங்காச்சாரமாக ஒருக்காலும் இருந்திடாது!! ஜெபம், பேரானந்த மாயும்; மிகுந்த பரவசமாயுமே இருந்திடும்!!

***ஜெபம்*** : *பரம தந்தையே! உம்மை சார்ந்து வாழும் "ஜெபம்" எங்கள் வாழ்வில் ஒருபோதும் மந்தமாய் போய்விடாதிருக்க தயைபுரியும், இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

**மாய்மாலமற்ற ஜீவியம் வேண்டும்!**

*'மாய்மாலக்காரன்'* (HYPOCRITE) *என்ற வார்த்தை கிரேக்க பதத்திலிருந்து தோன்றியதாகும். அதன் சரியான பொருள் 'நடிப்பவன்' என்பதாகும். 'ஆலிவுட் திரையில்'* (Hollywood Movie) *யோவான் ஸ்நானகனாக நடித்த நடிகனை எண்ணிப் பாருங்கள். இவனோ, தன் நிஜ வாழ்க்கையில் குடிகாரனாகவும்; இரண்டு அல்லது மூன்று மனைவிகளை விவாகரத்து செய்து வாழ்ந்த வேசிக்கள்ளனாகவும் இருந்தான். ஆனால் திரைப்படத்திலோ இவன் 'பரிசுத்தமான தீர்க்கதரிசி!' இவ்விதம் தன் நிஜ வாழ்க்கையில் மாறுபட்ட வாழ்க்கை வாழ்ந்து கொண்டு, மனுஷர் முன்போ நேர்மையாளனைப் போல நடிப்பவனே 'மாய்மாலக்காரன்.'*

*இவ்வித மாய்மாலக்காரன், தான் ஒரு முழு இருதயமான கிறிஸ்தவனைப் போலவே மற்ற விசுவாசிகளுக்கு முன்பாக நடிப்பான். ஆனால், அவன் வீட்டில் தன் மனைவியை நடத்தும் விதத்தையும், அவன் தன் அலுவலகத்தில் உள்ள மற்றவர்களோடு பழகும் விதத்தையும் காண்பீர்களென்றால், அங்கு அவனை முற்றிலும் மாறுபட்ட மனிதனாகவே காண்பீர்கள். ஏன்? இங்கு இவன், 'இப்போது' நடிக்கவில்லை! ஆம், அவன் தன் வீட்டிலும், தன் அலுவலகத்திலும், தன் உண்மை சொரூபத்தைக் காட்டும் மனிதனாய் இருக்கிறான். இப்படிப்பட்டவன் ஓர் மதஸ்தனாய் இருக்கலாம், ஆனால் ஆவிக்குரியவன் அல்லவே அல்ல!*

*இவ்வித மாய்மாலத்திலிருந்து உண்மையாகவே நீங்கள் விடுதலையாக விரும்புகிறீர்களா? அப்படியானால், "தேவனே! மனுஷர்கள் என்னைப் புகழ்வதைவிட நீர் என்னைப் புகழ்வதையே மேலாக விரும்பி நாட்டம் கொள்வதற்கு, என் உள்ளத்தில் உம்மைக் குறித்த அதிகமான தெய்வபயத்தைக் கொடுத்தருளும்" என கெஞ்சி ஜெபியுங்கள்.*

*எந்தப் பாவத்தையும்விட இயேசு இந்த 'மாய்மாலத்தையே' அதிகமாகக் கண்டித்தார்!*

***ஜெபம்** : அன்பின் தகப்பனே! மனுஷருக்கு முன்பாக "மாய்மால நடிப்பை" நாங்கள் வெறுக்கிறோம்! எப்பக்கத்திலும் "நிஜமான பக்தி வாழ்க்கை" வாழ தெய்வபயம் ஈந்தருளும்!! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## நெஞ்சில் நேர்மை வேண்டும்!

சத்திய வேதம் 1 யோவான் 1:7 நாம் ஒளியில் நடக்காவிட்டால் தேவனோடு ஐக்கியம்கொள்ள முடியாது என ஆணித்தரமாகக் கூறுகிறது. நாம் ஒவ்வொருவரும் ஒளியில் நடந்துவிட்டால், நாம் நிச்சயமாக எதையும் மறைத்துவைத்திட முடியாது! ஏனெனில் ஒளியானது சகலத்தையும் வெளியரங்கத்திற்குக் கொண்டுவந்துவிடும். தன் ஜீவியத்தில் மறைத்து வைக்கும்படியானவைகள் உள்ளவன் மாத்திரமே இருளில் நடப்பான். நம்முடைய ஜீவியம் ஓர் திறந்த புத்தகத்தைப் போலிருக்க வேண்டும்! அவ்வாறிருக்கும்போது மாத்திரமே, நம் தனிப்பட்ட ஜீவியத்தையும்; நம் வரவு-செலவு கணக்குப் புத்தகத்தையும்; மற்ற வேறு எதையும் வந்து சோதிக்கும்படி நாம் பிறரை அழைத்திட முடியும். நாம் ஒன்றையும் மறைத்திட விரும்பவே மாட்டோம். இதற்குப் பொருள், நாம் பூரணராகிவிட்டோம் என்பதல்ல. மாறாக, இதற்குப் பொருள் நாம் நேர்மையாக நடந்து கொள்கிறோம் என்பதுதான்.

நாம் தேவனுக்கு முன்பாக எவ்விதம் காணப்படுகிறோமோ அதுவே நம்முடைய உண்மையான ஆவிக்குரிய மதிப்பு என்பதையும், இதைத்தவிர வேறு எதுவும் செல்லுபடியாகாது என்பதையும், நாம் யாவரும் தெளிவாக உணர்ந்திருக்க வேண்டும். நமக்கு எவ்வளவு வேதஅறிவு உள்ளது? நாம் எவ்வளவு நேரம் ஜெபிக்கிறோம்? எத்தனை ஆவிக்குரிய கூட்டங்களுக்குச் செல்கிறோம்? நம்முடைய மூப்பர்கள் மற்றும் சபையில் உள்ளவர்கள் நம்மைக் குறித்து என்ன எண்ணுகிறார்கள்? என்பதை வைத்து நம் ஆவிக்குரிய நிலையை நாம் கணக்கிடவே முடியாது. இதற்கு மாறாக, "என் ஜீவியத்தின் ஒவ்வொரு எல்கைப் பகுதியையும் உற்றுப்பார்க்கிற தேவன் என்னைக் குறித்து என்ன எண்ணுகிறார்?" என்ற கேள்வியை உங்களுக்கு நீங்களே கேட்டுப் பாருங்கள். இக்கேள்விக்கு நீங்கள் பெறும் பதில் மாத்திரமே உங்கள் உண்மையான ஆவிக்குரிய நிலையை நிர்ணயம் பண்ணும் அளவுகோலாகும். இவ்விதமாய் உங்களை நீங்களே கேட்டுக் கொள்வதும்... அதற்கு நீங்கள் பதில் பெறுவதும், நாள்தோறும் தொடரட்டும்!

இயேசு நாத்தான்வேலைப் பார்த்து, "இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" (யோவான் 1:47) எனக் கூறிய வார்த்தைகள் என்னைக் கவர்ந்த மிக அருமையான வார்த்தைகளாகும். இதே பொன்னான வார்த்தைகளைக் கொண்டு இயேசு என்னையும் உங்களையும் வைத்து கூறிவிடுவாரென்றால் அது எத்தனை பெரிய நற்சான்றாய் இருக்கும்! இந்த, அவரளிக்கும் நற்சான்றுக்கு வேறு எதுவுமே இணையாகிட முடியாது!!

**ஜெபம்** : *பரலோக பிதாவே! நேர்மையற்ற எங்கள் ஜீவியத்தை மன்னித்து, வெளிச்சத்தில் நடக்கும் கபடற்ற உத்தம வாழ்க்கையை எங்களுக்குத் தந்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**பொருள் அறிந்து ஜெபித்திடுங்கள்!**

*அஞ்ஞானிகளைப் போல அர்த்தமில்லாமல் ஒரே வாக்கியத்தைத் திரும்பத் திரும்பக் கூறி ஜெபிக்கக்கூடாது என இயேசு எச்சரித்தார் (மத்தேயு 6:7).*

*நாம் எத்தனை வார்த்தைகளைக் கூறி ஜெபிக்கிறோம் என்பதை தேவன் ஒருபோதும் காண்பதில்லை. அவர் காண்பதெல்லாம் நம் ஜெபத்தோடு இணைந்துவரும் இருதயத்தின் வாஞ்சையைத்தான்! வாஞ்சையோடுகூடிய இருதயத்தின் ஏக்கமே உண்மை ஜெபமாகும். இந்த வாஞ்சையின் ஏக்கம்தான் தேவனை கிட்டிச் சேர்ந்து பதிலையும் பெற்றுத் தருகிறது.*

*நீங்கள் உண்மையாகவே பொருளை உணர்ந்து ஜெபிக்கும் பட்சத்தில், திரும்பத் திரும்ப ஒரே வார்த்தையைக் கூறினாலும் அது சரியே! கெத்சமேனே தோட்டத்தில் ஒரே ஜெபத்தை இயேசு மூன்று தடவை ஜெபித்தார் (மத். 26:44). ஆனால் அவ்விதம் அவர் திரும்பத் திரும்ப ஜெபித்த வார்த்தைகள் அர்த்தமற்ற "கிளிப்பிள்ளையின்" ஜெபமல்ல! அவர் ஜெபித்த ஒவ்வொரு நேரமும், வார்த்தைகள் இருதயத்தின் பாரமாகப் பொங்கி வந்தது.*

*இன்று கிறிஸ்தவர்கள் வாரத்தின் ஆறு நாட்களைவிட ஞாயிற்றுக்கிழமைகளில்தான் தேவனிடம் ஏராளமான பொய்களைக் கூறுகிறார்கள். ஏன் தெரியுமா? ஏனெனில் இவர்கள் ஞாயிற்றுக்கிழமை களில்தான், "என்னை முற்றும் ஒப்புவித்தேன் இயேசுவே!" என்றும் "பொன்னும் வெள்ளியும் உமக்கே, அதில் ஒரு சல்லியும் எனக்கல்ல!" போன்ற வாசகங்கள் கொண்ட பாமாலை கீர்த்தனைகளை மிகவும் துணிந்து தேவனிடம் கூறி வாய் இனிக்கப் பாடுகிறார்கள்.*

*பாடல் புத்தகத்தில் மேற்கூறிய வார்த்தைகள் இருப்பதால் அதை நீங்கள் பாடுவதில் தவறில்லை. ஆனால் நீங்களோ அவ்வார்த்தைகளின் அர்த்தத்தை உணர்ந்து பாடவில்லையே! இவ்வித பாமாலைகளைப் பாடும் நீங்கள், "நான் தேவனுடன் நேருக்கு நேராய் பேசுகிறேன்" என்பதையும் உணரவில்லையே! இவையெல்லாம் என்ன? நீங்கள் தேவனிடம் பொய் சொல்லுகிறீர்கள்.*

*"மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்புநாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும்"(மத். 12:36) என்றல்லவா இயேசு கூறினார். ஆனால் இன்றோ, தேவனுக்குரிய பயம் சிறிதும் இல்லாமல், இவ்வித ஆண்டவரின் கண்டிப்பான எச்சரிக்கையை உதாசீனம் செய்யும் கிறிஸ்தவ சந்ததியின் நடுவிலேயே நாம் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம்! நாம் அப்படி இருக்கலாகாது!*

***ஜெபம்*** : *பரலோக தந்தையே! அர்த்தமில்லாமல், திரும்பத்திரும்ப கூறி இதுவரை வீணாகிவிட்ட எங்கள் ஜெபவாழ்வில், பொருள் உணர்ந்து ஜெயித்திட கிருபைதாரும், ஆமென்.*

### பதில்பெற்றிடும் ஜெபமே, ஜெபம்!

கர்மேல் பர்வதத்தின் நிகழ்ச்சியை நாம் யாவரும் அறிவோம். அங்கே ஒரு பக்கம் பாகாலின் தீர்க்கதரிசிகளாகிய 450 பேர் நின்று கொண்டிருந்தார்கள். மறுபக்கம் எலியா நின்று கொண்டிருந்தான். யாருடைய தெய்வம் உண்மையான தெய்வம் எனக் கண்டு கொள்ளும்படி இவர்கள் இருவருமே வானத்திலிருந்து அக்கினி கொண்டு வருவதற்கு முயற்சித்தார்கள். பாகாலின் தீர்க்கதரிசிகள் ஒரு நீண்ட ஜெபக்கூட்டத்தை ஒழுங்கு செய்தார்கள். அவர்கள் ஜெபித் தார்கள்...ஜெபித்தார்கள்...ஜெபித்துக் கொண்டேயிருந்தார்கள்! பின்பு குதித்தார்கள். . . நடனமாடினார்கள். . . கூக்குரலிட்டார்கள்!! ஆனால் அக்கினியோ இறங்கி வரவில்லை. இருதயத்தை ஆராய்ந்து பார்க்கும் தேவன் இவர்களின் உணர்ச்சிப் பெருக்கத்தைக் கண்டோ அல்லது அவர்களின் பலத்த சத்தத்தைக் கேட்டோ கொஞ்சமும் ஈர்க்கப்படவேயில்லை (1 இராஜா.18:20-29).

இப்போது எலியா ஜெபித்தான்! அவனின் ஜெபம் ஒரு நிமிடத்திற்கும் குறைவாகவே இருந்தது! ஆனால் .... வானத்திலிருந்து அக்கினி இறங்கியது!! இதுதான் உண்மையான பரிசோதனை. நீங்கள் ஒரு நிமிடம் ஜெபித்தீர்களா, அல்லது முழு இரவும் ஜெபித்தீர்களா என்பதல்ல கேள்வி. மாறாக, தேவன் உங்கள் ஜெபத்திற்குப் பதில் கொடுத்தாரா அல்லது இல்லையா என்பதுதான் அந்த பரிசோதனையாகும்.

நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாய் இருக்கிறது (யாக்.5:16) என வாசிக்கிறோம். இந்தத் திருவசனத்தைக் குறிப்பிட்ட யாக்கோபு, இதைத் தொடர்புபடுத்தி எலியாவையே மாதிரியாக வைத்து எழுதினார். ஆம், பல மணி நேரங்கள் எலியா கூக்குரலிட்டதற்காக அவனின் ஜெபம் கேட்கப்படாமல், அவன் ஒரு நீதிமானாய் இருந்தபடியால்தான் அவனின் ஜெபம் கேட்கப்பட்டது!

***ஜெபம்:*** *அன்பின் தந்தையே! ஏனோ, தானோ என பொறுப்பில்லாமல் ஜெபித்த எங்கள் ஜெப ஜீவியத்தை மாற்றும்! மெய்யாக பதில் பெறும் ஜெபத்தையே நாடிட தயை செய்தருளும், ஆமென்.*

### தேவாதிதேவன், நம் சொந்த தகப்பன்!

யார் வேண்டுமானாலும் தேவனைப் பிதா என அழைத்துவிட முடியாது. இந்த பூமியில் நாம் யார் மூலமாகப் பிறந்தோமோ, அவரையே நாம் பிதா என அழைத்திட முடியும். இதையே, நாம் தேவனிடத்தில் ஜெபிக்கும்பொழுதெல்லாம் நினைவிற்கொள்ள வேண்டும். ஒருவன் தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவைத் தன் வாழ்வின் ஆண்டவராக இருக்கும்படி அவருக்குத் தன்னை ஒப்புக்கொடுத்து, தேவனுடைய பிள்ளையாக மறுபடியும் பிறப்பவனே, தேவனை நோக்கிப் "பிதா" அல்லது "தகப்பனே" என அழைத்திட முடியும்!

இஸ்ரவேலர்கள் தேவனைத் தங்கள் பிதா என ஒருபோதும் அழைக்க முடியவில்லை. "பிதா" என்ற பெயரை முதன் முதலாக இயேசுதான் அறிமுகம் செய்தார். பரமண்டலத்திலிருக்கும் பிதாவிடம் இயேசு தொடர்பு கொண்ட போதெல்லாம் பிதா என்ற பெயரையே தொடர்ச்சியாக உபயோகித்தார். தேவனை **"என் பிதா"** என அழைப்பது சொல்லிமுடியா ஒப்பில்லா சிலாக்கியமாகும். இந்த சிலாக்கியத்தை இன்று அநேகர் உணராமல் இருப்பது துரதிருஷ்டமேயாகும்!

புதிய உடன்படிக்கையின் கீழ் வாழும் நமக்கு இந்த ஒப்பில்லா சிலாக்கியம் கையளிக்கப்பட்டுவிட்டதே! ஆம், திரை இரண்டாகக் கிழிக்கப்பட்டுவிட்டது!! இப்போது நாம் பிதாவின் சமூகத்திற்குள் பிரவேசிக்கும் தைரியத்தையும் பெற்றுவிட்டோம்! அவரை 'அப்பா' 'பிதாவே' என அழைக்கவும் செய்கிறோம்! புதிய உடன்படிக்கையின் இந்த ஒப்பில்லா சிலாக்கியத்தை எண்ணி எண்ணி வியக்க வேண்டுமென்றால் நீங்கள் பழைய ஏற்பாட்டை நன்றாக வாசித்திருக்க வேண்டும்!?

கெட்டகுமாரனின் உவமையில், நாம் தேவனை ஓர் தகப்பனின் இருதயமுடையவராகக் காண்பது மிகுந்த வியப்பிற்குரியதாகும். அந்த கெட்டகுமாரன் தகப்பனின் ஆஸ்தியை வீணாக்கி, தன் தகப்பனின் பெயருக்கு அபகீர்த்தி உண்டுபண்ணிவிட்டு, மீண்டுமாக அவரிடம் திரும்பினான். அவனைக் கண்ட மாத்திரத்தில் அந்தத் தகப்பன் உடனடியாக ஓடிச்சென்று அவனைத் தழுவிக்கொண்டான். இங்கு தேவனைப் பிதாவாகச் சித்தரிக்கும் காட்சியை உங்களால் காணமுடிகின்றதா? முழு வேதாகமத்திலும், இந்த ஒரு இடத்தில்தான் தேவன் ஓடிச்சென்று, மனந்திரும்பும் ஒரு பாவியைத் தழுவிக்கொள்ளும் காட்சியை நாம் காண்கிறோம்!! (லூக்கா 15:20).

***ஜெபம்*** : *பரமண்டலங்களிலிருக்கின்ற எங்கள் பிதாவே! உம்மை எங்கள் சொந்த தந்தையாய் பெற்றிருக்கும் இந்த சிலாக்கியத்தை அருளிய எங்கள் இரட்சகர் இயேசுவுக்காய் நன்றி செலுத்துகிறோம்! ஆமென்.*

**பரம தகப்பனின் அன்பை விசுவாசியுங்கள்!**

இன்று அநேகர் பிதாவாகிய தேவனை ஓர் மிகுந்த கண்டிப்புள்ளவராகவும்; இயேசு மாத்திரமே தங்களை நேசிப்பதாகவும் தவறாக அபிப்ராயம் கொண்டிருக்கிறார்கள். சத்தியத்தை சாத்தான், ஜனங்களுக்குள் எவ்வளவாய் திரித்து வழங்கியிருக்கிறான் என்பதற்கு இது ஒரு சான்றாகும். நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்கும்படி இயேசுவை அனுப்பியதே பிதாவினுடைய அன்புதான்! இயேசு சீஷர்களுக்கு கூறும்போது, "பிதாதாமே உங்களை சிநேகிக்கிறார்!" எனச் சொன்னார். மேலும் அவர் சீஷர்களிடம் கூறும்பொழுது, "உங்கள் பரமபிதா" ஆகாயத்துப்பறவைகளைப் போஷித்துக், காட்டுப் புஷ்பங்களை உடுத்துவிப்பாரென்றால், உங்களை பராமரிப்பது அதிக நிச்சயமல்லவா! என கூறினார். தொடர்ந்து அவர் கூறும்போது, "உங்களின் பரமபிதா உங்கள் எல்லாத் தேவைகளையும் அறிந்திருக்கிறபடியால், நீங்கள் ஒன்றிற்கும் கவலைப்படாதீர்கள்" (மத்.6:26-34) எனவும் கூறினார். மேலும் அவர் தன் சீஷர்களிடம், "இந்த உலகத்தகப்பன் தன் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது பரலோகத்திலிருக்கிற **உங்கள் பிதா,** நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?" (மத்.7:11) என்றும் கூறினார்.

"இதெல்லாம் என்ன? சாதாரண அற்பக் காரியங்கள்தானே!" என நீங்கள் கூறலாம். ஆனால் நீங்கள் தேவனிடம் ஜெபிக்கும்பொழுது, அவர் உங்கள் வேண்டுதல்களைக் கேட்டுப் பதில் தருவாரென நீங்கள் உண்மையாகவே விசுவாசிக்காமலிருந்த எத்தனையோ நேரங்களை எண்ணிப்பாருங்கள். நீங்கள் ஏன் அவ்விதம் விசுவாசிக்கவில்லை? ஏனெனில், அவர் உங்கள் மீது வைத்திருக்கும் பட்சமும் பாசமுமான தகப்பனுடைய அன்பை திட்டவட்டமாக உங்கள் கண்கள் காணாததினாலேயே நீங்கள் விசுவாசிக்கவில்லை.

அவர் அன்போடு, "சிறியவன் முதற்கொண்டு பெரியவன் வரைக்கும் எல்லாரும் என்னை (பிதாவாக) அறிவார்கள்" (எபி.8:11) எனக் கூறினார். அவர் "சிறியவனை" முதலாவதாக குறிப்பிட்டதைக் கவனித்தீர்களா!!

ஒருவேளை நீங்கள், நேற்றுதான் மறுபடியும் பிறந்தவராக இருந்தாலும், நீங்களும் தேவனைத் தைரியத்தோடு கிட்டிச் சேர்ந்து, "ஓ தேவனே, நீர் என் தகப்பன்! நான் உம்முடைய பிள்ளை! உம்மோடு பேசி உறவாடும் உரிமை எனக்கும் உண்டே!!" எனக் கூறிடலாம். தேவனிடம் ஜெபிக்கும்பொழுது இவ்விதமே அவரைக் கிட்டிச் சேரும்படி இயேசு கூறினார்.

**ஜெபம்** : *எங்கள் பரம தந்தையே! தகப்பனின் அன்பை 'திரை விலக்கி' காண்பித்த ஆண்டவர் இயேசுவுக்கு நன்றி! அவிசுவாசமான கவலைதோய்ந்த எங்கள் ஜெபவாழ்வை மாற்றி புதிதாய் மலரச் செய்திடும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**நம்மை 'கண்டித்து' நடத்தும் நல்ல தகப்பன்!**

*நாம் தேவனை பயபக்தியோடும் அண்டிச் சேருகிறோம். ஏனெனில், "நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே!" (எபிரெயர் 12:29).*

*இன்று ஏராளமான கிறிஸ்தவர்கள், தேவனைத் தங்கள் "தாத்தாவாகவே" (*Grand Father*) எண்ணி வைத்திருக்கிறார்கள்!! தாத்தாக்கள் எவ்விதம் நடந்துகொள்வார்கள் என்பதை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம். "தாத்தாக்கள்" தங்கள் பேரப்பிள்ளைகள் எந்தத் தீய செயல்கள் புரிந்தாலும், அவைகளைக் 'கண்டும் காணாததுபோல' அலட்சியமாக விட்டுவிடுவார்கள். இன்று அநேகக் கிறிஸ்தவர்கள் தேவனைத் தங்களுக்கு தாத்தாவாக வைத்திருப்பதினிமித்தமே, பாவத்தை அவர்கள் கொடிய பயங்கரமாக எடுத்துக்கொள்வதே இல்லை! தேவனைத் தாத்தாவாகக் கொண்டிருக்கும் இந்த 'ஐடியா' முழுக்க முழுக்கத் தவறாகும். தேவனோ, நமக்கு ஓர் தகப்பன்!*

*அவர் தகப்பன் மாத்திரமல்ல, தேவாதி தேவனுமானவர். பரலோகத்தில் இந்த மகத்துவமானவருக்கு முன்பாக சேராபீன்களும் தங்கள் முகத்தை செட்டைகளினால் மூடி, "சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என பயபக்தியுடன் கூப்பிடுகிறார்கள் (ஏசாயா 6:3). ஒருபோதும் பாவம் செய்யாதவர்களே இந்த சேராபீன்கள்! இருப்பினும், தேவனை அவர்கள் கிட்டிச்சேரும்போது, தங்கள் முகத்தை மூட வேண்டியுள்ளதே! ஏனெனில், தேவனாகிய கர்த்தரின் பரிசுத்தத்தை இவர்களால் நேருக்கு நேர் காணக்கூடாமல் இருந்ததே அதற்கு காரணம்!*

*வேதாகமத்தில் தேவனுடைய தரிசனத்தைப் பெற்ற பரிசுத்தவான்கள் அடைந்த அனுபவத்தை எண்ணிப்பாருங்கள். ஏசாயா, தேவனுடைய மகிமையைக் கண்ட மாத்திரத்தில், தான் மிகவும் கேடான கொடிய பாவி என்ற உணர்வைப் பெற்றான் (ஏசாயா 6:5). மோசே, தேவனை நோக்கிப் பார்க்க பயந்து, தன் முகத்தை மூடிக்கொண்டான் (யாத்.3:6). தானியேல் தேவ தரிசனத்தைக் கண்டபடியால், தன் பெலனெல்லாம் போயிற்று என்றான் (தானி.10:8). யோவான் அப்போஸ்தலன், இயேசுகிறிஸ்துவின் தரிசனத்தைப் பெற்று, அவர்முன் செத்தவனைப்போல் விழுந்தான் (வெளி.1:17). பார்த்தீர்களா! இப்படியெல்லாம் இருக்க, இன்று அநேகர் தேவனை இவ்வித பயபக்தியுடன் அறிந்து கொள்ளாததினாலேயே அவர்களின் ஜீவியம் ஆழமற்றதாயும், மேலோட்டமாயும் உள்ளது!!*

***ஜெபம்*** *: பரம தந்தையே! தந்தைக்குரிய அன்போடு, எங்களை கண்டித்துப் போதித்து நடத்துகிறீரே, அவ்வாறே எங்களை நடத்தும், இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

### ஜெபமின்றி கிறிஸ்தவ ஜீவியம் இல்லை!

"எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும்" (லூக்.18:1) என்றே இயேசு நமக்கு சொல்லியிருக்கிறார். நம் அன்றாட ஜீவியத்தில் ஒவ்வொரு சிறிய விஷயங்களையும் தேவனுக்குத் தெரியப்படுத்தி அவரோடு உறவாடி சம்பாஷிக்க நாம் கற்றுக்கொள்ளுவது மிகமிக நல்ல பழக்கமாகும்! இந்த அனுபவம் நம்முடைய தினசரி பழக்கத்திற்கு வந்துவிட்டால், நாம் அந்நாள் முழுவதும் ஓர் ஜெப ஆவியால் நிறைந்தவர்களாயிருப்போம்! இவ்விதமாய் நாம் தேவனோடு பேசி உறவாடும் நேரம் ஓர் மகிழ்ச்சியின் நேரமாகவே நமக்கு மாறிவிடும். நமக்கு ஜெபம் ஒருக்காலும் சடங்காச்சாரமாய் இருக்கவே இருக்காது. மேலும் நாம் ஆச்சரியப்படத்தக்க வகையில், தேவன் நம்முடைய இருதயத்தில் நம்மோடு பேசுவதையும் அந்த ஜெபவேளையில் கண்டுகொள்ளுவோம்!!

அதே சமயம், நாம் ஜெப ஜீவியத்தில் வளர்ச்சியடையும்போது ஜெபம் நமக்கு ஓர் கடினப்பணியாக இருப்பதையும் காண்போம்! அதாவது, தேவன் நம் இருதயத்தில் வழங்கும் சிறுசிறு பாரங்களுக்காக உண்மையுள்ளவர்களாயிருந்து ஜெபித்தால், இந்த தேவன் நமக்கு அதிக அதிகமான பாரங்களை நம் இருதயத்தில் தருவதையும் காணமுடியும்! இவ்விதமாய் பிறரை தேவன் ஆசீர்வதிக்கும் பணியில் நாமும் அவரோடு இணைந்து "தேவனுக்கு உடன் வேலையாட்களாய்" (Co-workers with God) மாறிவிடுகிறோம்!!

இயேசு 'பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும்' ஜெபித்திருக் கிறார் (எபி.5:7). ஒருசமயம் அவர் கெத்செமனேயில் ஜெபித்தபொழுது, அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்ப் புரண்டு விழுந்தது! (லூக்கா 22:44). ஆம், அவர் அவ்வளவாய் ஜெபத்தில் தீவிரங்கொண்டிருந்தார். ஒரு சமயம், அவர் ஓர் இரா முழுவதும் ஜெபத்தில் தரித்திருந்தார்! (லூக்கா 6:12). மேலும் அவர் அடிக்கடி தனியே வனாந்தரத்திற்கு சென்று ஜெபிக்கும் பழக்கத்தை உடையவராகவும் இருந்தார்! (லூக்கா 5:16).

ஜெபம் எவ்வளவு முக்கியமானது என்பதை இயேசுவின் முன்மாதிரி நமக்குத் தெளிவாகக் காண்பிக்கிறது. அவரே இவ்வளவு அதிகம் ஜெபிக்க வேண்டியிருந்தால் நீங்களும் நானும் எவ்வளவு அதிகம் ஜெபிக்க வேண்டும்! ஆகவே, சோம்பலுக்கெதிராக கடும் யுத்தம் செய்து "என்ன விலைக்கிரயமானாலும்" ஓர் ஜெபிக்கும் மனிதனாக அல்லது மனுஷியாக நீங்கள் மாறிவிடுவதற்கு தீர்மானமாய் உறுதி பூண்டுவிடுங்கள்!!

**ஜெபம்** : *பரம தந்தையே! ஜெபத்தின் வழியை எங்களுக்கு மாதிரியாக காண்பித்த எங்கள் ஆண்டவர் இயேசுவுக்கே ஸ்தோத்திரம்! அவரைப்போலவே நாங்களும் ஜெபித்திட அருள்புரியும், ஆமென்!!*

**இயேசுவின் அடிச்சுவடு பின்பற்றுவர்களூடனே ஐக்கியப்படுங்கள்!**

*தேவன் நம்மை கிறிஸ்துவின் சாயலாய் மாற்றுவதற்கே விரும்புகிறார். ஆனால் இவ்வித மறுரூபம் (Transformation) இயேசுவின் பிற சீஷர்களைத் தள்ளிவைத்துவிட்டு நமக்கு மாத்திரம் 'தனியாக' ஏற்படாது! அவர்களோடு இணைந்திருக்கும் ஐக்கியத்தில்தான் நாமும் சேர்ந்து மறுரூபமடைய முடியும்!! (மத்தேயு 18:20).*

*நீங்கள் மனந்திரும்பிக் குணப்பட்டவுடன், தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வாஞ்சித்து இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றத் தீவிரிக்கும் ஓர் சீஷர்களின் ஐக்கியத்தோடு சேர்ந்துகொள்ள நீங்கள் முயற்சிக்கவேண்டியது அவசியமாகும்.*

*இங்குதான் ஓர் புதிய விசுவாசி தன்னைச் சுற்றியுள்ள கிறிஸ்தவ உலகில் காணும் எண்ணற்ற ஸ்தாபனங்களையும் குழுக்களையும் கண்டு குழப்பமடைந்திட முடியும்! துரதிர்ருஷ்டமாக உபதேசத்தின் ஒரு முனையிலிருந்து மறுமுனை வரைக்கும் ஏராளமான ஸ்தாபனக் குழுக்கள் தோன்றிவிட்டன. இக்குழுக்களில் ஒருவர் பாக்கியில்லாமல், தாங்கள்தான் இப்பூமியில் கிறிஸ்துவை வெளிப்படுத்தும் உண்மையான ஸ்தானாதிபதிகள் எனவும் மார்தட்டிக் கொள்கிறார்கள்!!*

*இக்குழுக்களில் அநேகர், "நீங்கள் எங்கள் குழுவில் சேராவிட்டால் கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாயிருக்க முடியாது!" என தங்கள் வேதாகமத்தை 'அடித்து' ஆணித்தரமாகக் கூறி, உங்களிடம் நிரூபிக்கவும் செய்வார்கள்!?*

*"அவர்களின் குழுவில் இல்லாமலும், அவர்கள் பற்றிக்கொண்டிருக்கும் அதே 'விந்தை உபதேசங்களைப்' பற்றிக்கொள்ளாமலும் இருக்கும் அநேகம் பிள்ளைகள் தேவனுக்கு உண்டு!" என்ற உண்மையை பெரும்பாலான இக்குழுவினர்களுக்கு உணர்த்துவிப்பது கிட்டத்தட்ட சாத்தியமற்ற செயலாகவே இருக்கிறது. அவ்வளவாய் இவர்களின் "அகந்தை" வலிமை நிறைந்திருக்கிறது! இவ்வாறு இன்றைய கிறிஸ்தவ உலகத்தைப் பீடித்திருக்கும் பரிசேயத்துவத் திற்கும், தனி நபர் ஆதிக்க உணர்வுகளுக்கும் நீங்கள் சிக்கிக் கொள்ளாதபடி எச்சரிக்கையாயிருங்கள்!!*

*ஆகவே, தன் ஆண்டவரை நேசித்து அவரை உத்தமமாய்ப் பின்பற்ற வாஞ்சிக்கும் எல்லோரிடமும் நீங்கள் திறந்த மனதுள்ளவர்களாயிருங்கள்.*

***ஜெபம்** : அன்பின் பிதாவே! உம் சாயல் பெற்றிட, அருமை ஆண்டவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் மெய் சீஷர்களின் ஐக்கியத்தை கண்டடைய உதவி செய்தருளும், இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**சிலுவையின் வழியில் அன்பின் ஐக்கியம் வேண்டும்!**

*"நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்ளுவார்கள்" (யோவான் 13:35) என இயேசு கூறினார்.*

*இவ்வாறு தேவனுடைய வார்த்தை எங்கு வல்லமையாய் பேசப்படுகிறதோ; எங்கு தேவனுடைய அன்பு ஆளுகை செய்கிறதோ; எங்கு தேவனுடைய பிரசன்னம் நெருக்கமாய் உணரப்படுகிறதோ; அப்படிப்பட்ட ஓர் ஸ்தல சபையில்தான் நீங்கள் அங்கம் வகிக்க வேண்டும்!*

*நாம் பிறரோடு அன்பான ஐக்கியம் கொண்டு சேர்ந்து வாழ பிரயாசப்படும்பொழுதுதான் "நான் எவ்வளவாய் என் சுயத்தை வெறுக்கவேண்டுமென்ற தேவையையும்; அனுதினமும் நான் சிலுவையை எடுக்கவேண்டுமென்ற தேவையையும்" நாம் கண்டு கொள்ள முடியும். இவ்விதக் கிரியை நமக்குள் நடைபெறும் பொழுது மாத்திரமே ஐக்கியம் நமக்குள் நிலைவரப்படும்!!*

*சபையின் ஐக்கியத்தில் சொல்லிமுடியா வல்லமை அடங்கியுள்ளது. ஒன்றாய் இணைந்திருக்கும் ஓர் சபையில் மாத்திரமே சாத்தான் ஜெயிக்கப்பட முடியும். "இரண்டு விசுவாசிகளே இருந்தாலும்" தங்கள் ஆவியில் முழுமையாய் ஒன்றாகி, சீரிய ஐக்கியம் கொண்டிருந்தால், அவர்கள் பிதாவைக் கேட்பதெதுவோ அவ்விண்ணப்பங்கள் அவர்களுக்கு கேட்கப்படும்! ஏனெனில் இவ்விதம் "பரிசுத்தாவியினால் இரண்டு அல்லது மூன்று இணைந்த ஆத்துமாக்கள் எங்கு ஒன்றாய் கூட்டப்பட்டார்களோ அங்கே நான் (இயேசு) என்னுடைய வல்லமையோடு பிரசன்னமாகுவேன். இவ்வித ஐக்கியத்தைக்கொண்ட விசுவாசிகள், உன்னதங்களிலுள்ள சாத்தானின் அதிகாரங்களையும், பூமியிலுள்ள அவனுடைய அதிகாரங்களையும் கட்டி சாத்தானின் வல்லமைகளைச் சிதறடிப்பார்கள்!! மேலும் இவ்வித ஐக்கியம் கொண்டவர்கள் தங்கள் ஜெபங்களின் மூலமாய் ஜனங்களை சாத்தானின் கட்டுகளிலிருந்து விடுவிக்கவும் செய்வார்கள்!"(மத்.18:18-20 விரிவாக்க வசனங்கள்) என இயேசு கூறினார்.*

***ஜெபம்*** : *அன்புள்ள தந்தையே! ஒருவரையொருவர் அன்புகூரும் மெய்யான இயேசுவின் சீஷர்களாய் எங்களை மாற்றியருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## "ஆமென்!" என்பது நம் வாழ்வில் மெய்யாய் மாற வேண்டும்!

நம் வாயின் அறிக்கை அத்தனையாய் முக்கியமானதாகும். தேவனுடைய வார்த்தையை அறிக்கை செய்வதென்பது, தேவன் சொன்னதை அப்படியே திரும்பச் சொல்லுவதாகும்! இவ்வாறு சொல்லுவது நம்மில் யாருக்கும் கஷ்டமாக இருக்குமோ?! ஆம், நாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு "ஆமென்" (அப்படியே ஆகக்கடவது!) எனக் கூறுவது மாத்திரமே தேவையாயிருக்கிறது.

வேதவாக்கியங்களில் "விசுவாசித்தான்" என்ற பதம் முதன் முதலாக ஆதியாகமம் 15-ம் அதிகாரத்தில்தான் உபயோகிக்கப் பட்டுள்ளது. அந்த அதிகாரத்தில், பிள்ளை இல்லாமலிருந்த ஆபிராமை நோக்கி தேவன், "வானத்து நட்சத்திரங்களைப்போல உனக்குச் சந்ததி உண்டாயிருக்கும்!" எனக் கூறினார். அதற்கு "ஆபிராம் கர்த்தரை விசுவாசித்தான்" என ஆதி.15:6 பதிலுரைக்கிறது. "விசுவாசித்தான்" என்று இங்கு கூறப்பட்டிருக்கும் வார்த்தைக்கு எபிரெய பாஷையில் 'ஆமென்' என்ற பதமே குறிப்பிடப்பட்டுள்ளது. 'ஆமென்' என்பதற்கு "அப்படியே ஆகக்கடவது" என்பதே பொருளாகும். எனவே இங்கு தேவன் உரைத்த வாக்குத்தத்தத்திற்கு ஆபிராம் செய்ததெல்லாம் "ஆமென்" என கூறியது மாத்திரமே! இங்ஙனம், தேவனிடம் "ஆமென்!" எனக் கூறுவதே உண்மையான விசுவாசமாகும்!!

ஆபிராம், இதற்குப் பிறகு "திரளான ஜாதிகளுக்குத் தகப்பன்" என அர்த்தங்கொண்ட "ஆபிரகாம்" என்ற புதிய பெயரை தேவனிட மிருந்து இப்போது பெற்றுவிட்டான்! இருப்பினும் அவனுடைய மனைவியாகிய சாராளோ இன்னமும் பிள்ளையற்றவளாகவே இருந்தாள். ஆபிரகாமோ இதினிமித்தம் சிறிதுகூட கிலேசம் கொள்ளவேயில்லை. அவன் இன்னமும் தன்னை "திரளான ஜாதிகளுக்குத் தகப்பன்" என்றே அழைத்துக்கொண்டான். ஏன் தெரியுமா? தேவன் அவனுக்கு அப்படிச் சொல்லியிருந்தார்! அதை ஆபிரகாம் அப்படியே விசுவாசித்தான்!! விசுவாசத்தை அறிக்கை செய்வதென்பதின் பொருள் இதுதான்: "தேவன் உரைத்த வாக்குத்தத்தம் நிறைவேறுவதை நம் கண்கள் காணாதிருக்கும்போதே "தேவன் சொன்னதை" அப்படியே அறிக்கை செய்வதுதான் உண்மையான விசுவாச அறிக்கையாகும்"

இதைத்தான் நாமும் செய்யும்படி தேவன் கூறுகிறார்.... அவர் தன் வார்த்தையில் கூறியதை அப்படியே மறுபடியும் அறிக்கை செய்து கூறவேண்டும்! அவ்வளவுதான்!!

**ஜெபம் :** *பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே! உம்மோடு சேர்ந்து கூறுவதே "ஆமென்" என்பதை நாங்கள் அறிந்து கொண்டது எத்தனை பாக்கியம்! இனி எங்கள் ஜெப ஜீவியத்தில் "விசுவாசத்தோடு" ஜெபித்திட வகை செய்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாகக்கடவோம்!**

*கிறிஸ்து வரும்பொழுது, அவருக்குச் சொந்தமானவர்களாகிய நாம் அனைவரும் ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்படுவோம். அச்சமயம், முதிர்வயதும் சாவாமையும் இல்லாத புதிய சரீரங்களை நாம் யாவரும் தரித்துக்கொள்வோம் (1 கொரி.15:51-53). நாம் அடையும் புதிய சரீரம், இயேசு உயிர்த்தெழுந்தபின் பெற்ற அதே மகிமையான சரீரத்திற்கொப்பாகவே இருக்கும் (பிலி.3:20,21). மேலும், அச்சமயம் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களும் தங்கள் கல்லறைகளிலிருந்து புதிய சரீரத்தோடு உயிர்த்தெழுந்து, உயிரோடிருக்கும் இயேசுவின் சீஷர்களோடு சேர்ந்து, தங்கள் ஆண்டவரை மத்திய ஆகாயத்தில் சந்திக்கும்படி துரிதமாய் வானங்களில் ஏறுவார்கள் (1 தெச.4:13-17).*

*பின்பு, கிறிஸ்து தன்னுடைய நியாயத்தீர்ப்பின் சிங்காசனத்தில் வந்து அமர்வார். அவ்வேளையில் கிறிஸ்து நம் ஒவ்வொருவருக்கும் சரியான மதிப்பீடு தந்து நியாயந்தீர்ப்பார். மேலும், நாம் இப்பூலோக ஜீவியத்தில் ஜீவித்த உண்மையான ஜீவியத்தின் அளவின்படி, தனித் தனியாக நாம் ஒவ்வொருவரும் நம்முடைய பிரதிபலனை அவரிடமிருந்து அச்சமயத்தில் பெறுவோம்!!*

*அந்நாளில், "முந்தினோர் அநேகர் பிந்தினோராயும், பிந்தினோர் அநேகர் முந்தினோராயும்" இருப்பதை நாம் கண்கூடாகக் காண்போம் (மத்.19:30). இப்பூமியில், நம்முடைய பார்வைக்கு ஆழ்ந்த ஆவிக்குரிய மனிதர்களைப்போல் காணப்பட்ட அநேகர், தேவனுடைய பார்வையில் உண்மையற்றவர்களாய் ஜீவித்ததை அன்று நாம் கண்டு வியப்போம்! இதற்கு மாறாக, நாம் சாதாரணமாக எண்ணிய சிலர் தேவனுடைய பார்வையில் மகா உத்தமமான வாழ்க்கை வாழ்ந்ததையும் அன்று நாம் கண்டு வியக்கப் போகிறோம்!!*

*அந்நாளில் 'ஒருவரும் அறியாத' உத்தமமாய் ஜீவித்த அற்பமான விதவை, உலகப்புகழ் கலாநிதியான உண்மையற்ற பிரசங்கியை முந்திச் சென்றிருப்பதை நம் கண்கள் கண்டு வியக்கும்!*

*அந்நாளில், இப்பூமியில் மனுஷர்கள் விலையேறப்பெற்றதாக மதிப்பிட்ட பணம்; புகழ் போன்ற ஏராளமானவைகள் தேவனுக்கு முன்பாக கடுகளவும் மதிப்பு பெறாததையும் நாம் காண்போம். ஆனால், மனுஷர்கள் மதிப்பு கொடுக்காத பரிசுத்தம்; தாழ்மை; சுயநலமின்மை; இரக்க குணம்; நன்மை செய்யும் நற்குணம் போன்ற அநேக தெய்வ சுபாவங்களையோ அன்று தேவன் பெருமதிப்பு கொடுத்து அங்கீகரிப் பதையும் நாம் கண்டுகொள்ளுவோம்!*

***ஜெபம்*** *: பரம தந்தையே! கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக அடைந்திடப் போகும் பிரதிபலனே நிரந்தரமானது! அதற்கு ஏதுவான தெய்வ சுபாவத்தை இப்பூமியில் வாழ்ந்து ஆயத்தமாயிருக்க கிருபைதாரும், ஆமென்.*

**பிழைத்துவாழ சுயத்திற்கு மரியுங்கள்!**

*1. நீங்கள் மறக்கப்பட்டுப் போனீர்களோ? வேண்டுமென்றே உங்களை ஒதுக்கி விட்டார்களோ? அப்படியிருந்தும். . . ஏற்பட்ட அவமானத்திற்காக அவர்களுக்கு தீமை செய்யாமல், ஆ!. . . கிறிஸ்துவுக்காகப் பாடுபட நானும் தகுதிபெற்றேனே!! என இருதயத்தில் மகிழ்ச்சியுடன் இருப்பீர்களென்றால், அதுவே சுயத்திற்கு மரித்தல்!*

*2. உங்கள் நன்மையைத் தீமையாகத் தூற்றியும், உங்களின் கருத்துக்களை பகடியும் செய்கிறார்களா? இச்சமயம். . . உங்கள் இருதயத்தில் கோபம் எழுவதற்கும், உங்கள் நியாயங்களை முன்வைத்து தற்காத்துக் கொள்ள மறுத்துவிட்டு, அவர்களை அன்பான மௌனத் தோடு ஏற்றுக்கொள்வீர்களென்றால், அதுவே சுயத்திற்கு மரித்தல்!*

*3. சகலமும் குழப்பம்! ஒழுங்கின்மை! காலந்தாழ்த்தி வருதல்! இதுபோன்ற எந்த முறைகேடுகளையும், அன்போடும் பொறுமை யோடும் தாங்கிக் கொள்வீர்களா? உங்கள் கண்களுக்கு முன்பாகவே வீணாக்கப்படுவதையும், அறிவற்ற செயலையும், கொஞ்சம்கூட ஆவிக்குரிய உணர்வற்ற செயலையும் இயேசு சகித்தது போல நீங்களும் சகிப்பீர்களென்றால், அதுவே சுயத்திற்கு மரித்தல்!*

*4. ஒருவரோடொருவர் உரையாடும்போது உங்களைக் குறிப்பிட்டுப் பேசவேண்டுமென ஆர்வமற்றவர்களாய் இருக் கிறீர்களா? உங்கள் நற்கிரியைகளை பகிரங்கம் செய்வதற்கு ஆர்வம் அற்றவர்களாய். . . நீங்கள் "ஓர் அறியப்படாதவராக" இருப்பதை உண்மையாகவே விரும்புவீர் களென்றால், அதுவே சுயத்திற்கு மரித்தல்!*

*5. எவ்வித உணவானாலும்; உடையானாலும்; எப்படிப்பட்ட சமுதாய சூழலானாலும்; தனித்து விடப்படும் நிலையானாலும்; தேவ சித்தத்தின்படி ஏற்படும் எவ்வித இடையூறானாலும் - அவைகளில் மனதிருப்தி கொள்வீர்களென்றால், அதுவே சுயத்திற்கு மரித்தல்!*

*6. உங்களின் தேவை ஏராளமாகி, உங்கள் சகோதரனின் தேவைகளோ சந்திக்கப்பட்டு ஐசுவரியமடைவதைக் காணும்போது. . . உங்கள் சகோதரனோடு சேர்ந்து 'ஆவியில்' களிகூர்ந்து, பொறாமை அடையாதிருப்பீர்களென்றால், அதுவே சுயத்திற்கு மரித்தல்!*

*7. உங்களைவிட குறைவான ஒருவர் உங்களுக்கு புத்திசொல்லும் போது, உங்கள் இருதயத்திற்குள் எதிர்ப்பு எழாமல், அவைகளை. . . தாழ்மையோடு உங்கள் உள்ளத்தில் மாத்திரமல்லாமல், வெளியரங் கமாயும் ஏற்றுக் கொள்வீர்களென்றால், அதுவே சுயத்திற்கு மரித்தல்!*

"ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை **அனுதினமும்** எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்" *(லூக்கா 9:23).*

***ஜெபம்*** *: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே! "எங்கள் சிலுவை சுமப்பது " எங்கள் சுயத்திற்கு மரிக்கவே! என்பதை காண தயை செய்தீர்! அனுதினமும் சிலுவை சுமந்துவர அருள்புரியும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**சிலுவையின் உபதேசமே, தேவபெலன்!**

*"நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும். . ." (1 கொரி. 1:23) என வாசிக்கிறோம். கிறிஸ்து நமக்காக சிலுவையிலறையப்பட்டாரே அதுவா இன்றைய கிறிஸ்தவ மார்க்கத்தாருக்கு இடறல்? இல்லை! "நாம் சிலுவையிலறையப்படுகிறோமே" அதுதான் இவர்களுக்கு இடறல். ஏனென்றால், இங்குதான் நம் எல்லா சுயமும், அது எவ்வளவு அருமையாயிருந்தாலும் அல்லது எவ்வளவு லாபமாயிருந்தாலும் அவைகள் கொஞ்சமும் இரக்கமில்லாமல் புறக்கணித்துத் தள்ளப் படுகிறது! அதன் சுயமரியாதைக்கோ கிஞ்சித்தும் இடமே இல்லை!! ஆ, இங்குதான் இவர்கள் கோபம் கொள்ளுகிறார்கள். தங்கள் பார்வையில் இவர்கள் எவ்வளவு திறமையாய்க் காணப்பட்டு, சுயத்தில் மகிழ்கிறார்களோ அவ்வளவு அதிகம் கோபக்கனலாகிறார்கள்! ஆனால் உண்மை என்ன தெரியுமா? நமக்கு அருமையான இந்த எல்லா சுயமும் மரணத்திற்கே உரியது! அது கிறிஸ்து இயேசுவின் மூலமாய் சிலுவையில் அறையப்பட்டுவிட்டது!! அது இருக்க வேண்டிய இடம் அதுதான்!!*

*1 கொரிந்தியர் 1:17-ம் வசனத்தில், "கிறிஸ்துவின் சிலுவை வீணாய் (அல்லது வல்லமையற்றுப் போகாதபடிக்கு)..." என்றும், 18-ம் வசனத்தில் "சிலுவையைப் பற்றிய உபதேசம். . . நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது" என்றும் வாசிக்கிறோம். சிலுவையின் உபதேசத்தில் அல்லது சிலுவையில் அப்படியென்ன வல்லமை யிருக்கிறது என்று கேட்கிறீர்களா? கேளுங்கள்: அது பழைய மனிதனுக்கும் அவன் கிரியைகளுக்கும் சாவு மணி அடிக்கிறது! அவ்வல்லமை பாவத்திலிருந்து விடுதலை அளிக்கிறது! மாம்சத்தின் கிரியைகளை ஒழிக்கிறது! ஏற்கனவே நாம் பாவம் என்று அறிந்து கொண்டவைகளிலிருந்து விடுதலை அளிக்கிறது! மட்டுமல்ல, நாட்கள் செல்லச்செல்ல நாம் இனி பாவம் என அறிந்து கொள்ளப்போகும் எல்லாப் பாவத்திலிருந்தும் விடுதலை! விடுதலை!! சுயத்தை ஆக்ரோஷமாய் சிலுவையில் அறைகிறோமே, அதுவே சிலுவையின் வல்லமையான கிரியைகள். ஆம்! அந்த ஆணிகள் சிலுவையிலறையப் பட்டவனை, அவன் விரும்பும் இடத்திற்குப் போக முடியாமல் வலிமையாய் சிலுவையின் மேல் இருத்தி வைக்கிறது. . . பின்பு. . . பின்பு. . . கொஞ்சம் கொஞ்சமாய் சீக்கிரத்தில் அவன் செத்துப்போகிறான். இவ்வாறு மாம்சத்தின்படியான என்னை சாகடிக்கிறதே அதுதான் இச்சிலுவையின் வல்லமையான கிரியைகள்!!*

***ஜெபம் :*** *பரம தந்தையே! நாங்களும் இயேசுவைப்போலவே சிலுவையில் அறையப்பட வேண்டும் என்ற இந்த உபதேசத்தை மனதார ஏற்றுக்கொள்கிறோம்! நடைமுறையில் அதை வாழ்ந்திட கிருபைதாரும், ஆமென்.*

*ஏப்ரல்-3*

**பாவமன்னிப்பு மாத்திரமல்ல, பாவத்தின்மீது ஜெயம் தரும் சிலுவை!**

*"தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின் செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்" (லூக்கா 14:27) என இயேசு கூறினார். "அப்பொழுது அவரைச் சிலுவையில் அறையும்படிக்கு பிலாத்து அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தான். அவர்கள் இயேசுவைப் பிடித்துக்கொண்டு போனார்கள். அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு. . . கொல்கொதா இடத்திற்குப் புறப்பட்டுப் போனார். . . " (யோவான் 19:16-17). தன் சிலுவையைச் சுமக்க வேண்டும் என்பதற்கு இதைவிட வேறு என்ன விளக்கம் வேண்டும்? அதாவது, நாம் சிலுவையிலறையப்படுவதற்கு எதிர்ப்பில்லாமல் வாய்ப்பு அளிக்கிறோமே, அதுதான் சரியான பொருள்! சிலுவையில் அறையப்படுவதன் அவசியத்தை உணர்ந்து கொண்டவர்கள் எவர்களோ, அவர்களே அதை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவார்கள்!!*

*உதவாக்கரை குற்றவாளிகளே சிலுவையிலறையப்படுவார்கள்! தானே சிலுவையிலறையப்படப்போகும் சிலுவையை சுமக்க யார் விரும்புவார்கள்? யாரெல்லாம் மாம்சத்தின்படியான தங்களை உதவாக்கரை குற்றவாளிகளாய் கண்டு, இப்போது அவனை ஒழித்துக் கட்டும்படி தங்களுக்கு வாய்ப்பு கிடைத்ததற்காக நன்றி சொல்கிறார்களோ, அவர்கள்! தன் மகிழ்ச்சிக்கும், ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் தடைக்கல் தன் சுயமே என கண்டுபிடித்தவர்கள் தங்கள் மாம்சத்தை மகிழ்வுடன் சிலுவையில் அறைவார்கள்!!*

*"சிலுவையின் நிழலுக்கு வாருங்கள்" என்று பாடுவதை அதிகமாய் கேட்டிருக்கிறோம். ஆனால் வேதம் இவ்விதமான வார்த்தையை ஒரு இடத்தில்கூட குறிப்பிட்டுக் கூறவில்லையே! அதற்கு நேர்மாறாக "கிறிஸ்துவோடுகூட சிலுவையிலறையப்படுங்கள்!" அல்லது 'சிலுவையின் மேல் இருப்பதையே' வேதவசனம் கூறுகிறது. ஒருவேளை பாவமன்னிப்பை இச்சிலுவையின் நிழலில் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் பாவத்தின்மேல் ஜெயத்தை ஒருக்காலும் பெறவே முடியாது. அந்த ஜெயம் சிலுவையின் மேல்தான் பெற்றுக்கொள்ள முடியும்! சிலுவையின் கீழ் உள்ளவர்கள் பாவம் செய்ய முடியும். ஆனால் சிலுவையின் மேல் உள்ளவர்களால் அது முடியாது!! இந்த விசுவாசத்தின் இரகசியத்தைக் காணும்படி தேவன் இந்நாட்களில் அநேகருடைய கண்களைத் திறப்பாராக!!*

***ஜெபம்*** *: எங்கள் அன்பின் தகப்பனே! சிலுவையில் இத்தனை சிலாக்கியம் உண்டு என காணாத எங்கள் அறியாமையை மன்னியும்! இழந்த சிலாக்கியத்தை மீட்டு, பாவத்தை ஜெயித்திட அருள் புரியும், ஆமென்.*

### மாம்சத்தில் பாடுபட்டு, பாவத்திலிருந்து ஓய்ந்திருங்கள்!

**பா**வம் நமக்கு வெளியில் இல்லை! "பாவம் எனக்குள்ளேயே வாசமாயிருக்கிறது!!" (ரோமர் 7:20) என பவுல் கூறினார். "நான் கிறிஸ்துவுக்குள் நன்றாக இருந்தேன். இந்த அழகுள்ள ஸ்திரீ அல்லது ஆடவன் என்முன் வந்ததால் என் சிந்தையில் நான் பாவம் செய்துவிட்டேன்" என கூறாதீர்கள். ஏனெனில் உங்களுக்குள் இருக்கும் பாவமே உங்களை பாவம் செய்யத் தூண்டியது. இவ்வாறு நமக்குள்ளிருக்கும் "பாவ மாம்சம்" அல்லது "மாம்சத்தையும் அதன் ஆசை இச்சைகளையும்" சோதனை வேளையில் தேவகிருபை கொண்டு சிலுவையில் அறைந்து கொல்லுவதே இயேசுவைப்போல பாவத்தின்மீது நாம் அடையும் வெற்றியாகும்! இயேசு இவ்வாறுதான் தன் மாம்சத்தில் பாடுபட்டு பாவத்தை ஜெயித்தார் (1 பேதுரு 3:18). கிறிஸ்துவைப் போலவே நாமும் மாம்சத்திலே பாடுபட்டால் (Suffered in the flesh), அதாவது நம்மில் தூண்டப்படும் மாம்ச இச்சைகளை அதன் ஆசைகளை சிலுவையில் அறைந்தால், நாமும் பாவத்தை விட்டு ஓய்ந்திருப்போம்! (1 பேதுரு 4:12) என தேவ வார்த்தை நமக்கு உத்திரவாதம் அளிக்கின்றது. ஆம், பாவத்தின் விளைவாய் உண்டாகும் 'மரணத்தை' நாமும் ஜெயித்திட முடியும்!!

இவ்வாறு பாவத்தை ஜெயிப்பதென்பது, வலுசர்ப்பத்தையும், சிங்கத்தையும் கொல்லுவதற்கு ஒப்பாகும்! இவர்களே கிருபை பெற்றவர்கள்! இவர்கள் ஒரே சோதனையில் வீழ்ந்து கொண்டேயிராமல், இயேசுவைப்போல் "எல்லாவிதத்திலும்" சோதிக்கப்படுவதற்கு தகுதியுடையவர்கள். உதாரணமாய், பாலிய இச்சையை எடுத்துக் கொள்ளுங்கள். இது கண்களின் இச்சையிலிருந்து தொடங்கி ஒன்றன்பின் ஒன்றாய் ஏராளமான அசுசிகளை நம்மில் கொண்டிருக்கிறது!

தன் மாம்சத்தில் பாடுபட தீவிரம் கொண்ட ஒரு வாலிபன் அல்லது வாலிப ஸ்திரீக்கு தேவன் அதி நிச்சயமான தன் கிருபையைத் தருகின்றபடியால், சுமார் 1 வருடத்திற்குள் "கண்களின் இச்சையிலிருந்து ஓய்ந்துவிட முடியும்!" (2 பேதுரு 2:14).

இவ்வாறு பரிசுத்தத்தில் வளர்ந்து வரும் ஒரு பரிசுத்தவான், பாலிய இச்சையினால் தன் ஆவியில் ஏற்படும் சிறு சலனம் அல்லது உணர்ச்சிகளைக்கூட ஏற்றுக்கொள்ள மறுத்துத் தன் மாம்சத்தை அவ்வளவாய் பாடுகளுக்குள் பங்கடையச் செய்திடுவான். இவ்வாறு இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர்களே "கிருபையின் மேல் கிருபையைப்" பெற்றுக் கொண்டேயிருப்பார்கள்!!

**ஜெபம்** : அன்பின் பிதாவே! இந்நாள்வரை, எங்கள் மாம்சம் எங்களுக்குள் செழிப்புடன் வாழ விட்டுவிட்டோமே! இனியும் அப்படியில்லாமல், சிலுவை சுமந்து "மாம்சத்தில் பாடுபட்டு" பாவத்தில் ஓய்ந்திருக்க கிருபைதாரும், ஆமென்.

## கிறிஸ்துவின் மகிமையை அள்ளித்தரும் சிலுவை!

**சோ**தனைக்கும் (Temptations) உபத்திரவங்களுக்கும் (Trials and Tribulations) வித்தியாசங்கள் உண்டு. நாம் பாவம் செய்திட தூண்டப்படுவதே சோதனை! உபத்திரவங்களோ நம்முடைய "சுயத்தை" தூண்டுகிறது! பாவத்தை "கறுப்பு நிறமாகக்" காணும் அனேக கிறிஸ்தவர்கள், 'சுயம்' அல்லது தங்கள் சொந்த ஜீவனாகிய "சுய-விருப்பங்கள், சுய-உரிமைகள், சுய-கௌரவங்கள், சுய-நியாயங்கள், சுய-பட்சாதாபங்கள். . ." ஆகிய இவைகளை பாவத்திற்கு இணையாய் "கறுப்பு நிறமாய்" கண்டதில்லை. ஏனெனில் தங்கள் நியாயத்திற்காகப் போராடுவதையும், உரிமைகளைத் தட்டி கேட்பதையும், சுய-கௌரவம் இழக்காமல் பார்த்துக் கொள்வதையும் இவ்வுலகம் பாவமாகக் கருதுவதில்லை.

சோதனையில் அடைந்திடும் "மாம்சத்தின் மரணம்" பாவத்தை ஜெயித்திட நடத்துகிறது. உபத்திரவங்களில் அடைந்திடும் "சுயத்தின் மரணம்" கிறிஸ்துவின் மகிமையை அல்லது அவருடைய சாயலை நமக்கு கொண்டுவருகிறது!

நமக்கு முன்னோடியான நம் கேப்டன் இயேசுகிறிஸ்து "தேவனுடைய கிருபையினால் முழுமையாக மரணத்தை (இந்த இருவகையான மரணத்தையும்) ருசித்தார்" என எபிரெயர் 2:9-ல் வாசிக்கிறோம். தேவ கிருபையைக் கொண்டு தங்கள் பாவத்திற்கு சாகாத கிறிஸ்தவர்கள் ஒருக்காலும் "சுயத்திற்கு மரிக்கும்" இடத்தை நெருங்கவே முடியாது.!

தண்டில் சேவகம் பண்ணுகிற நமக்கு (இயேசுகிறிஸ்துவின் ராணுவத்தில் இணைந்திருக்கும் நமக்கு), இவ்வுலக வாழ்வின் பல்வேறு சூழ்நிலைகளுக்குள்ளும், பாடுகளுக்குள்ளும் பிரவேசிக்கும் போதுதான் யுத்தம் ஆரம்பிக்கிறது. இந்த யுத்தம் மனுஷர்களையும், சூழ்நிலைகளையும் எதிர்த்து நடத்தும் யுத்தம் அல்லவே அல்ல! நாமோ எல்லா சூழ்நிலைகளுக்காகவும், எல்லா மனுஷர்களுக்காகவும் ஸ்தோத்திரமே செய்கிறோம்!

ஆம், மனுஷர்கள் மூலமாய், சூழ்நிலைகள் மூலமாய் நமக்குள்ளிருந்து எழும்பும் வலிமையான சுயத்தை எதிர்த்தே யுத்தம் செய்கிறோம்!

நமது கேப்டனாகிய "இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றும் போர்ச் சேவகர்களாய்" இருக்கும் நாம் "நம்மை நாமே வெறுத்து" (சுயத்தை வெறுத்து) சுயத்திற்கு மரணத்தைக் கொண்டுவரும் ஆயுதமாகிய சிலுவையை "அனுதினமும்" எடுத்தே அவரைப் பின்பற்றி வரவேண்டும்!! (லூக்கா 9:23).

**ஜெபம்** : பரம தந்தையே! எங்கள் அனுதின சிலுவை மூலமாய், உபத்திரவங்களின் வழியாய், கிறிஸ்துவின் மகிமையை சுதந்தரிக்க வழி காண்பித்தீரே! உமக்கே ஸ்தோத்திரம்! குருவின் வழிநடக்க பெலன் தாரும், ஆமென்.

## தேவசித்தம் செய்வது ஒன்றே நிலைத்திருக்கும் ஜீவியம்!

இயேசு இந்த பூமிக்கு ஏன் வந்தார்? என்ற கேள்விக்கு "பிதாவின் சித்தம் செய்யவே இயேசு வந்தார்" என வேதம் கணீரென ஒலிக்கிறது. இதை இயேசுவே யோவான் 6:38-ல் "என் சித்தத்தின்படியல்ல என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன்" எனக் கூறினார். இவ்வுலகத்தின் பாவங்களுக்காக மரிக்கும்படி மாத்திரமே அவர் பிரதானமாய் இப்பூமிக்கு வரவில்லை! ஆம், தன் பிதாவின் சித்தம் செய்யவே இப்பூமிக்கு அவர் வந்தார். இயேசு கல்வாரிக்குச் சென்று தன் ஜீவனைக் கொடுத்தார். ஆகிலும், அவ்விதம் கல்வாரியில் மரித்ததும் அவர் தன் வாழ்வில் பிதாவின் சித்தம் செய்வதின் ஒரு பங்காகவே இருந்தது!!

"நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமா யிருக்கிறது" என இயேசு யோவான் 4:34-ல் கூறினார். கடும்பசி கொண்ட ஓர் மனிதன், உணவிற்காக கூக்குரலிடுவது போல, இயேசுவின் முழு ஆள்த்துவமும் பிதாவின் சித்தம் செய்வதற்கு கூக்குரலிட்டது. இவ்விதம் தங்கள் ஜீவியத்தின் ஒவ்வொரு பகுதியிலும் இயேசுவைப் போலவே பிதாவின் சித்தம் செய்யவேண்டும் என வாஞ்சித்துத் தவிப் பவர்கள் மாத்திரமே இயேசுவை உண்மையாய்ப் பின்பற்றுகிறவர்கள்!

"இப்படியிருக்க கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்ட படியால் நீங்களும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாகத் தரித்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் மாம்சத்தில் பாடுபடுகிறவன் இனி மாம்சத்திலிருக்கும் காலம் வரைக்கும் மனுஷனுடைய இச்சைகளின் படி பிழைக்காமல் தேவனுடைய சித்தத்தின்படியே பிழைக்கத்தக்கதாக பாவங்களை விட்டோய்ந்திருப்பான்" என 1 பேதுரு 4:1,2 வசனங்களில் பேதுரு கூறினார். இதைப்போலவே யோவான் அப்போஸ்தலன் தன் நிருபத்தில், "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்" (1 யோவான் 2:17) எனக் கூறினார்.

விசுவாசிகளுக்காக அப்போஸ்தலர் கொண்டிருந்த பாரம் நிறைந்த ஜெபமெல்லாம், "அவர்கள் தேவனுக்குச் சித்தமானவைகள் எல்லாவற்றிலும் தேறினவர்களாய் நிலைநிற்க வேண்டும்" என்பதாகவே இருந்தது (கொலோ.4:12). ஓர் மனிதன் தன் மீதியான ஜீவிய காலமெல்லாம் தேவசித்தம் செய்வதற்கு அர்ப்பணிக்கும்படி அவனை நடத்தாமல், வெறும் பாவமன்னிப்பிற்கு மாத்திரம் நடத்திடும் இரட்சிப்பு, ஓர் நிலையற்ற இரட்சிப்பு என்பதை அப்போஸ்தலர்கள் தெளிவாக அறிந்திருந்தார்கள்.

**ஜெபம்** : *அன்பின் தந்தையே! எங்கள் வாழ்வின் பாரம் வேறேதுமில்லாமல், "தேவ சித்தம்" செய்வதே எங்கள் பிரதானபாரமாய் மாறிட தயைபுரிந்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**சரீர ஒடுக்கமல்ல "சுயம்" சாக வேண்டும்!**

*$33\frac{1}{2}$ ஆண்டுகள் தன் பிதாவுக்கு முன்பாக சிலுவை சுமந்து வாழ்ந்த நமது ஆண்டவரின் கடைசி சில மணி நேர சிலுவைப்பாடுகள் "மனுஷர் பார்வைக்கு" தவிர்க்க முடியாததொன்றாய் இருந்தது. ஆகவே, பாடுகளின்* **வெளிப்புற சூழ்நிலையைக் கண்ட** *எருசலேம் குமாரத்திகள் புலம்பி அழுதார்கள்! அப்போது நமது ஆண்டவர் கூறிய பதில் ஆழமான பல செய்திகளைக் கொண்டிருந்தாலும், அவர் 'பளிச்சென்று' கூறிய கெம்பீர பதில் என்னவெனில், தான் "பச்சை மரம்" எனக் கூறியதுதான்! (லூக்கா 23:27-31). அதாவது தன் சுய சித்தத்தை ஒருபோதும் செய்யாமல் அவைகளைச் சிலுவையில் அறைந்து பிதாவின் சித்தம் செய்கிறபடியால் தான் 'பசுமையாக' இருப்பதாகவே கூறினார்! தங்கள் சுய சித்தங்களையே எப்போதும் நிறைவேற்றி, விண்ணின் மகிமைக்குள் நடத்தும் சிலுவையின் பாதையைக் காணாதவர்களைப் "பட்ட மரம்" என்றும் கூறினார்! ஆ, எத்தனையாய் பிதாவின் நாம மகிமைக்கென நமது கேப்டனாயிருக்கும் ஆண்டவர் "சிலுவையின் மேன்மையை" விளங்கச் செய்துவிட்டார்!! 'பட்ட மரத்தின்' வாழ்க்கை வாழும் ஜனங்கள்தான் இனிமேல் தங்கள் 'சுய வாழ்விலிருந்து' விடுபடுவதற்காக துயரம் கொண்டு அழவேண்டும். . . "எனக்காக அழாதீர்கள்" என்றே கூறினார். எதைச் செய்ய வேண்டாம் எனக் கூறினாரோ அதைத்தான் இன்றைய கிறிஸ்தவம் "லெந்து நாட்கள்" என இயேசுவுக்காய் துக்கம் கொண்டாடுகிறார்கள்.*

*இவர்களின் "புனித வெள்ளி" ஆசரிப்புகளை இயேசு கேட்கவில்லை! இவ்வாறெல்லாம் அனுசரிப்புகளை ஏற்படுத்தி, சாத்தான் ஜனங்களின் கண்களை குருடாக்கி. . . வாழ்நாளெல்லாம் (அனுதினமும்) பின்பற்ற வேண்டிய உன்னத "சிலுவையின் பாதையை" அவர்களுக்கு மறைத்து விட்டான்!*

*வெளிப்புற சரீர ஒடுக்கம் மிக எளிது. அதற்கொன்றும் தேவ கிருபை தேவை இல்லை. கடினம் கொண்ட நம் சுயம் "கிறிஸ்துவின் பாடுகளுக்குள்" உட்பட்டு மரிப்பதற்கே ஒருவன் கிருபையில் பலப்பட வேண்டும்!*

***ஜெபம்:*** *பரம தந்தையே! உலக அனுசாரத்தைப் போலவே எளிதான சரீர ஒடுக்கத்தை, 'சிலுவை' என கருதிய எங்கள் மதியீனத்தை மன்னியும்! "சுயத்தை" அழிக்கும் மெய்யான ஜெயத்தை தந்தருளும், ஆமென்.*

**'இலேசான' உபத்திரவங்களே நித்திய 'கன' மகிமை தருகிறது!**

*பல வருடங்களுக்கு முன்பாக 'பெர்கென்' நகரில் வாழ்ந்த ஒரு சகோதரன் இவ்விஷயத்தில் ஓர் நல்ல மாதிரியாய் பிரகாசித்து ஜொலித்திருக்கிறார். அச்கோதரனின் மனைவி முழுக்க முழுக்க தீய குணத்தினால் நிறைந்தவள். ஆகிலும் அச்கோதரன் தன் மனைவியை அழகுறக் கையாண்ட விதமோ. . . மிகவும் அற்புதம்! இந்த அருமை சகோதரன் தன் மனைவிக்கு முன்பாகவே மரித்துவிட்டார். இச்சகோதரன் மரணப்படுக்கையிலிருந்து மரித்துக் கொண்டிருந்த கடைசி சமயத்தில், அவனுடைய மனைவி இந்த சகோதரன் அருகே வந்து பயங்கர தீய வார்த்தைகளைக் கொட்டித் திட்டினாள். ஆம், உண்மையிலேயே அச்சம்பவம் கொடூரமாய்த்தான் இருந்தது. ஆனால் விந்தையிலும் விந்தை யாதெனில், இந்த அருமை சகோதரன் பூரண சற்குணத்தோடு அச்சம்பவத்தைத் தாங்கிக் கொண்டார்!! இவ்வாறிருக்க, இதுபோன்ற 'அருமையை' அநேக சகோதரர்கள் இழந்துவிட்டார்களே. இவர்கள் 'ஒத்துப்போக முடியாத மனைவி யைப்'* (impossible wife) *பெற்றிருந்த ஒரே காரணத்தினிமித்தம், வெள்ளப் பிரவாகத்திற்குள் மூழ்கி மாய்ந்தே போனார்கள். . .!*

*"அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும்அதிகமான நித்திய கன மகிமையை உண்டாக்குகிறது" (2 கொரி. 4:17) என தேவ வார்த்தை கூறுவதைப் பார்த்தீர்களா! அதாவது, நீங்கள் உபத்திரவத்தை வேதம் சொல்லுகிறபடியே ஏற்றுக்கொண்டு அவைகளைச் சரியான முறையில் கையாளுவீர்களென்றால், நீங்கள் பெற்றுவிடும் நித்திய கன மகிமை ஒப்பிட முடியாத அளவிற்கு திரட்சியாயிருக்கும்!! அப்படியிருந்து விட்டால். . .!*

*எந்த மானிடப் பிறவியும் அல்லது எந்த கொடிய தீய சம்பவங்களும் உங்கள் பூரித்த செழிப்பான வாழ்க்கைக்கு எவ்விதத்திலும் பங்கம் ஏற்படுத்திடவே முடியாது!!*

***ஜெபம் :*** *அன்புள்ள பரம பிதாவே! எங்களுக்கு வரும் உபத்திரவங்களை "கஷ்டம்" என எண்ணாமல், ஞானமாய் கையாண்டு, நித்திய கன மகிமையை சுதந்தரிக்க கிருபைதாரும்! ஆமென்.*

**'நொறுங்குண்டு' தேவனைசார்ந்து, கோலில் சாய்ந்த யாக்கோபு!**

*யாக்கோபின் சாட்சியை எபிரெயர் 11-ம் அதிகாரம் நேர்த்தியாய் பறைச்சாற்றுகிறது! அந்த அதிகாரத்தில், பழைய ஏற்பாட்டு விசுவாச வீரர்கள் புரிந்த மாபெரும் செயலான 'சிங்கத்தின் வாயை அடைத்தார்கள்!' 'மரித்தோரை உயிரோடே எழுப்பினார்கள்'. . . என்றெல்லாம் எழுதப் பட்டிருக்கிறது. அந்தப் பட்டியலில் இந்த யாக்கோபின் பெயரும் எழுதப்பட்டிருக்கிறது! அவனைக் குறித்து என்ன எழுதப்பட்டிருக்கிறது தெரியுமா? "தன் கோலின் முனையிலே சாய்ந்து கர்த்தரைத் தொழுது கொண்டான்" (வசனம் 21) என்றே எழுதப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரம் முழுவதும் அற்புத நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டிருந்த வேளையில் "ஒரு சாதாரண நிகழ்ச்சியாய்" யாக்கோபைக் குறித்து எழுதியிருப்பது ஆச்சரியமாயில்லையா?*

*யாக்கோபு புரிந்த செயல் "விசுவாசத்தின் அற்புதமாய்" நமக்குத் தோன்றவில்லை என்பது உண்மைதான். ஆனால் உண்மை என்னவென்றால், பதிவு செய்யப்பட்ட விசுவாச வீரர்களின் அற்புதத்தைக் காட்டிலும் யாக்கோபின் செயலே மேலான அற்புதம் என நாம் கூறிட முடியும்! இந்த யாக்கோபிற்கு 'கோல்' அவசியமாயிருந்தது. ஏனெனில், பெனியேலில் அவனுடைய தொடைச்சந்தை தேவன் தொட்டு சுளுக்கி விட்டார்!! இப்போது கோலின்மேல் சாய்ந்துகொண்ட யாக்கோபு, தன் வாழ்க்கையில் "சுயத்தில் எத்தனாயிருந்த தன்னை தேவன் நொறுங்கச் செய்த" அற்புதத்தை சதா எண்ணி தியானிக்கிறவனாய் மாறினான்!*

*கோலின்மேல் அவன் சாய்ந்து கொண்ட செயல், தன் நாதியற்ற நிலையை வெளிப்படுத்துவதாகவும். . . அவன் தேவனையே சார்ந்து வாழ்வதைப் பிரகடனம் செய்வதாகவும் இருந்தது!! நொறுங்குண்ட அந்த யாக்கோபு தேவனைத் தொழுதுகொண்டான்!! தன்னுடைய பெலவீனத்திலும் தன் இயலாமையிலும் அவன் மேன்மை பாராட்டினான்... அதுதான் அவனிடத்தில் நாள்தோறும் நாம் காணும் ஒப்பற்ற சாட்சியாக விளங்கியது! அதே சாட்சியைத்தான் அப்போஸ்தலனாகிய பவுலும் பெற்றிருந்தார்! யுகங்களாய் தொடர்ந்து வரும் மாபெரும் தேவபுருஷர்களும் ஸ்திரீகளும் இதே சாட்சியைத்தான் பெற்றிருக்கிறார்கள்! தங்கள் பெலனற்ற இயலாமையில் அவர்கள் மேன்மை பாராட்டினார்களேயல்லாமல். . . சாதனையில் ஒருக்காலும் மேன்மை பாராட்டியதே இல்லை!*

*தாழ்மையின் சிகரத்தில் வாழ்ந்து சென்ற இந்த சீலர்களின் வாழ்க்கை... இன்றைய 20-ம் நூற்றாண்டின் அகங்காரமும், பெருமையும், சுய-நம்பிக்கையும் கொண்ட கிறிஸ்தவர்களுக்கு சீர்மிகுந்த பாடமாய் இருப்பதாக!!*

**ஜெபம்** : *பரம பிதாவே! 'நொறுங்குண்டு' உம்மையே சார்ந்து வாழும் யாக்கோபின் ஒப்பற்ற சாட்சி, எங்கள் சாட்சியாய் மாறிட அருள் புரியும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**இயேசுவின் சாட்சிக்காக துன்பம் அடைவது நமது பாக்கியம்!**

இயேசுவுக்காய் தைரியமான சாட்சிகளாய் நிற்பவர்கள், தாங்கள் இருக்கும் ஸ்தலங்களில் "பல நதிகள் உள்ளதுபோல . . . இரட்சிக்கப்படுவதற்கு எத்தனையோ வழிகள் உண்டு" என மற்றவர்கள் கூறுவதைக் கேட்டால் இவர்கள் என்ன செய்வார்கள் தெரியுமா? "இரட்சிக்கப்படுவதற்கு இயேசுதான் ஒரே வழி!" என தைரியமாய் கூறுவார்கள். மேலும் இவர் ஒருவரே உலகத்தின் பாவங்களுக்காக மரித்தவர் என்றும், இவர் ஒருவரே மரித்து உயிர்தெழுந்தவர் என்றும், ஒருவன் தெய்வத்தை (பிதாவை) இயேசுகிறிஸ்து மூலமாக மாத்திரமே அடைய முடியும் என்றும் தைரியமாய் சாட்சி சொல்வார்கள். இவ்விதநிலையில், உறுதியாக நிற்கும் ஒருவன் ஏதாகிலும் ஒருவகையில் துன்பப்படத்தான் வேண்டியிருக்கும். ஆனால் . . . அவ்வேளையில் இயேசு உங்களைப் பார்த்து, "நீ பாக்கியவான்!" எனக் கூறும் குரலை கேட்க மறந்து விடாதீர்கள். இவ்வாறு துன்பப்படும் வேளையில் நாம் ஒருபோதும் முகவாடலாய் இருக்கக்கூடாதென்றும் அதற்குப் பதிலாக "அந்நாளிலே சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்" என்றே இயேசு கட்டளையிட்டார். உங்களைப்போலவே தீர்க்கதரிசிகளும் துன்பப் பட்டபடியால், இயேசுவினிமித்தம் துன்பப்படும் நீங்கள் தீர்க்கதரிசி களின் அடிச்சுவட்டில் நடந்துவருகிறீர்கள் என்பதை அறிந்து சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள் என்று இயேசு கூறினார் (லூக்.6:23).

மேலும் இயேசு கடைசி நாட்களைக்குறித்து எச்சரித்த போது, "உங்களை ஜெபஆலயங்களுக்குப் (சபைக்குப்) புறம்பாக்குவார்கள்; மேலும் உங்களைக் கொலைசெய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டுசெய்கிறவனென்று நினைக்குங் காலம் வரும்" (யோவான் 16:2) எனக் கூறினார். ஆம், கடைசி நாட்களின் உபத்திரவங்கள் சக கிறிஸ்தவர்கள் மூலமாகவும் வரும்! நீங்கள் தேவனுடைய முழு ஆலோசனைகளையும் கடைப்பிடித்து அவைகளைத் தைரியமாய் அறிவிப்பதை இவர்கள் எதிர்ப்பார்கள்!

இச்சூழ்நிலையில் நாம் தேவனுடைய முழு ஆலோசனை களையும் கூறாமல் நமக்கு ஏற்படவிருந்த உபத்திரவங்களை மிக எளிதில் தவிர்த்துக்கொள்ள முடியும். ஆனால், நாமோ உபத்திரவங் களினிமித்தம் தேவனுடைய முழு ஆலோசனைகளையும் அறிவிப்பதற்கு சிறிதும் அஞ்சவேகூடாது! நீங்கள் சத்தியத்திற்கு உறுதியாக நிற்பதினிமித்தம் சபையைவிட்டு தூக்கியெறியப்பட்டால் கூட சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள் என்றே இயேசு நம்மை அழைக்கிறார்!!

***ஜெபம்*** : *பரலோக தகப்பனே! இயேசுகிறிஸ்துவின் பூரண சுவிசேஷத்தை பிரசங்கிப் பதில் துன்பம் உண்டு எனவும் அதில் உறுதிபட நிற்பவர்கள் பாக்கியவான்கள் எனவும் உணர்த்தியமைக்கு உமக்கு நன்றி, ஆமென்.*

**"சுயம் சிலுவையில் அறையப்படுவதே" அபிஷேகம் பெற்றிட வழி!**

*ஜெஸி-பென்-லூயிஸ் என்ற சகோதரி எழுதின புத்தகங்கள், ஏராளமான ஜனங்கள் "சிலுவையின் பாதையை" தெளிவாக அறிந்து கொள்வதற்குப் பெரிதும் உதவியது. இந்த சகோதரி மனந்திரும்பிய பத்து வருடங்களுக்குப் பிறகுதான் பரிசுத்தாவியின் நிறைவை நாடினார்கள். அச்சமயம், அவர்கள் தேவனிடமிருந்து பெற்ற ஓர் தரிசனம் மிகவும் பயங்கரமானதாகவே இருந்தது : "ஒரு கரம் ஏராளமான கந்தையான குப்பைகளைப் பிடித்துக் கொண்டிருக்க, அதன் பின்னாலிருந்து ஓர் மெல்லிய குரல் 'நீ காணும் இவைகள் அனைத்தும் கடந்த ஆண்டுகளில் நீ தேவனுக்குச் செய்த ஊழியங்களின் விளைவுகளேயாகும்' என தொணித்தது!" இந்த தரிசனத்தைக் கண்ட அந்த அம்மையார், அந்தக் கூற்றை உடனடியாக மறுத்து, கடந்த ஆண்டுகளில் "தன்னை தேவனுக்கு அர்ப்பணம் செய்து ஊழியம்" செய்ததாகவே கூறினார்கள்! ஆனால், அதற்கு ஆண்டவர் "உன்னுடைய ஊழியங்கள் அனைத்தும் உன் சொந்த முயற்சியிலும், திட்டத்திலும் உருவான சுய-அர்ப்பணிப்புகளேயாகும்!" எனக் கூறிவிட்டார். பின்பு* "**சிலுவையிலறைப்படுவாயாக**" *என்ற ஒரே ஒரு வார்த்தை மாத்திரம் தனக்கு சொல்லப்பட்டதையும் அந்த அம்மையார் தரிசனம் கண்டார்.*

*இந்த தரிசனத்தைக் கண்ட அந்த அம்மையார், நானோ "பரிசுத்தாவியினால் நிறையப்பட" விண்ணப்பித்தேன் ! தேவனோ "சிலுவையிலறையப்படுவாயாக" எனக் கூறுகிறாரே எனப் பேதலித்தார்!!*

*ஆகிலும், அன்றிலிருந்து "சிலுவையிலறைப்படுவாயாக" என்ற அந்த ஒரு வார்த்தையில் முழு கவனம் வைத்து அந்த அம்மையார் தியானிக்கத் தொடங்கினார்கள்! அதன் விளைவாய் "இயேசுவைத் தனக்குச் சொந்தமான உயிர்த்தெழுந்த ஆண்டவராய்"அறிந்து கொள்ளும் பாக்கியத்தைப் பெற்றார்கள்!!*

*ஆம், தேவனுக்குப் பிரியமானதாய் எந்த ஒரு ஊழியமும் இருக்க வேண்டுமென்றால் "முதலாவதாக சுயம் சிலுவையிலறையப்பட வேண்டும்!" அதைவிடுத்து, நம் முழு இருதயமாய்கூட தேவனுக்கு ஊழியம் செய்துவிட்டு. . . "ஆண்டவரே, நான் உருவாக்கிய இந்த 'இஸ்மவேலர்களை' தயவு செய்து ஏற்றுக் கொள்ளும்" எனக் கூறினால், அதற்குத் தேவன் இன்றும் "முடியாது" என்று தான் பதில் கூறுவார். . . நித்தியத்திலும் முடியாதென்றேதான் கூறுவார்!*

***ஜெபம் :*** *பரம பிதாவே! எங்கள் சுயபெலன் முற்றிலும் ஒழிந்து பரிசுத்தாவியின் அபிஷேகத்தை எங்களுக்குத்தர வழி வகுத்த "உம் சிலுவை வழிக்காக" ஸ்தோத்திரம்! ஆமென்.*

### "ஜீவபலியான" சமர்ப்பணமே புத்தியுள்ள ஆராதனை!

*சொந்த மகன் ஈசாக்கையே பலி செலுத்தும்படி அழைத்த அந்த கடினமான அழைப்பைப் போன்று, உங்களை தேவன் எப்போதாவது அழைத்திருக்கிறாரா? அல்லது எல்லா நேரங்களிலும் ஆறுதல் செய்யும் வாக்குத்தத்தங்கள் மாத்திரமே உங்கள் செவிகள் கேட்டதா? ஆஸ்வால்ட் சேம்பர்ஸ் என்ற பக்தன் கூறும்போது, "கடினமான செயலுக்கு அழைக்கும் தேவனுடைய குரலை நாம் கேட்டதே இல்லையென்றால், இதுவரை தேவன் நம்மோடு பேசியதாக எண்ணிக் கொண்டதும் சந்தேகத்துக்குரியதேயாகும்!" என அவர் கூறினார்.*

*ஆனால் ஆபிரகாமோ கேட்பதற்கு காதுள்ளவனாய் இருந்தான்! அவன் இருதயம் தேவன் கட்டளையிடும் எதற்கும் கீழ்ப்படிந்திட விருப்பம் கொண்டதாகவே இருந்தது. ஆகவே, கட்டளையைப் பெற்றவுடன், அதிகாலமே தேவனுக்குக் கீழ்ப்படிய துரிதமடைந்தான்!!*

*தன் வயது முதிர்ந்த பக்தனிடம் தேவன் இவ்வாறு பேசிய அந்த ராத்திரியை அவன் எவ்வாறு கழித்தான் என வேதம் கூறவில்லை. இருப்பினும், அந்த ராத்திரியில் அவன் தூங்கியிருக்க மாட்டான். அந்த ராத்திரியில் அவன் அடிக்கடி எழுந்து சென்று, நித்திரையிலிருந்த தன் செல்ல மகனை மீண்டும் மீண்டுமாய் பரிதாபத்தோடு பார்த்து வந்தான். பொழுது விடிந்ததும் தன் மகனுக்கு ஆபிரகாம் செய்யப் போகிற செயலை எண்ணி எண்ணி கண்ணீர் வடித்திருப்பான்!*

*அந்தத் தள்ளாத வயதில் தன் மகனை பலி செலுத்த வேண்டியிருப்பது ஆபிரகாமின் உள்ளத்திற்கு எத்தனை பாரமாய் இருந்திருக்க வேண்டும்! என்ன விலைக்கிரயம் செலுத்தியாகிலும், தேவனுக்குக் கீழ்ப்படிந்திட அவன் முழுமனதாய் இருந்தான்!!*

*சுமார் 50-வருடங்களுக்கு முன்பாக, ஊர் தேசத்திலிருந்து தன்னை தேவன் அழைத்தபோது, கலப்பையில் வைத்த தன் கையை, இப்போது எடுத்துவிட்டுத் திரும்பிப் பார்க்க துளியும் அவன் விரும்பவில்லை! அதற்குப் பதிலாக, அவன் கூறியது என்ன தெரியுமா? :*

> *"தேவா! நான் திரும்பிப் பார்க்காதிருக்க கிருபை தாரும்*
> *நான் பிடித்த கலப்பையின் கைப்பிடி கண்ணீரால் நனைந்துவிட்டது*
> *கலப்பையின் கொழுவும் துரு ஏறி தேய்ந்துபோனது... ஆகிலும்*
> *என் தேவனே! திரும்பிப் பார்ப்பது மட்டும் எனக்கு வேண்டாம்!*
> *தயவுகூர்ந்து கிருபை பொழிந்து என்னை ஆண்டுகொள்ளும்!!"*

*என்றே அவன் வேண்டி நின்றான். தான் தேவனைத் தொழுது கொள்ளப் போவதாகவே அவன் கூறிச் சென்றான். ஆ... இங்குதான் நாம் "தொழுது கொள்ளுதலின்" உண்மையான அர்த்தத்தை ஓரளவு விளங்கிக்கொள்ள முடிகிறது! (ரோமர் 12:1,2).*

**ஜெபம்** : *அன்பின் பிதாவே! உமக்கு உகந்த பலி, எங்களை "ஜீவ பலியாய்" சமர்ப்பிக்கும் பலியே என அறிந்துகொண்டோம், இந்த மெய்யான 'ஆராதனை' எங்கள் வாழ்வில் நாள்தோறும் தொடர கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## "தியாக சிலுவையே" நம் அனுதின பங்காய் மாறட்டும்!

*தங்களையே முழுவதுமாக அர்ப்பணித்த தியாக புருஷர்களோடு ஒப்பிடும்போது, நம் ஜீவியமும், கர்த்தருக்காய் செய்திடும் ஊழியமும் எத்தனை ஆழமற்றதாய் இருக்கிறது! தேவனை சேவித்திட நாம் என்ன கிரயம் செலுத்தியிருக்கிறோம்? பணத்தை இழந்தோமா? வசதிகளை இழந்தோமா? மதிப்பை இழந்தோமா? சரீர சுகத்தை இழந்தோமா? இந்த உலகம் "அருமை" என மதிக்கும் அனைத்தையும் நம் கிறிஸ்தவம் கிரயமாய் அர்ப்பணிக்காவிட்டால், தேவனைத் தொழுது கொள்வதின் மெய்யான பொருளை நாம் இன்னமும் அறிந்திருக்கவில்லை என்பதை உங்களால் உணர முடிகிறதா? "ஆம், அனைத்தும் ஈந்த சிலுவையின் பாதையே. . . தொழுகையின் பாதை!!"*

*'மார்க்ரெட் கிளார்க்சன்' என்ற பக்தன் சிலுவைப் பாதைக்கு அழைத்திடும் சவாலை ஒரு பாடலாக எழுதியிருக்கிறார் :*

*"நான் உன்னை அனுப்புகிறேன்:*
*உபகாரம் இல்லாது உழைத்திட*
*அறியப்படாமல் வாழ்ந்து- நிந்தையிலும், எனக்காக உழைத்திட*
*நான் உன்னை அனுப்புகிறேன்!*
*நான் உன்னை அனுப்புவது தனிமைக்கு!*
*நேசத்துக்குரியவர்கள் இல்லாத இடத்திற்கு!*
*இல்லத்தையும், சிநேகிதர்களையும் விட்டுவிடும்படி.....*
*ஆகிலும், என் அன்பைமாத்திரமே நீ அறிவதற்கு!*
*நான் உன்னை அனுப்புகிறேன்!!"*

*இதுவே, வல்லமை வெளிப்படும் வழியாகும்! குறுக்கு வழியைத் தேடும் இக்கொடிய நாட்களில், ஆவிக்குரிய வல்லமையை 'சில அனுபவம்'மூலமாய் பெற்றுக் கொள்ளலாம் என மயங்கி நிற்கும் இந்த வஞ்சக நாட்களில், நாமோ "**சிலுவையின் பாதையை**" மீண்டும் மீண்டும் நம் மனதில் வைத்து நினைவு கூர்ந்து வாழ்வது மிகவும் அவசியமாயிருக்கிறது (லூக்கா 9:23). இயேசு தன் முகத்தை சிலுவைக்கு நேராய் செல்வதற்கே உறுதிகொண்ட நெஞ்சுடன் எப்போதும் திருப்பி வைத்திருந்தார்! இன்று நம்மைக் குறித்து என்ன? இந்த தெரிந்து கொள்ளுதல் ஒவ்வொரு நாளும் நமக்கு முன்பாக வைக்கப்படுகிறது! நாமோ ஜெய வாழ்க்கையை ஏதோ 'மூன்றுபடிகள்' கொண்டதாக நோக்குகிறவர்களாயிருந்தால், நம்மோடு பேசுவதற்கு வேதாகமத்தில் யாதொரு செய்தியுமில்லை! ஆனால், விலைக்கிரயத்தை செலுத்துவதற்கு முழுமனம் கொண்டு, நம்மை வெறுத்து, நம் சிலுவையை ஒவ்வொரு நாளும் எடுத்து இயேசுவைப் பின்பற்றிவிட்டால்!. . .மெய்யாகவே தேவனுடைய ஆவியானவர் நம் ஜீவியத்திலும், ஊழியத்திலும் வந்திறங்கும் வல்லமையை நாம் அறிந்து கொள்வது திண்ணம்!!*

**ஜெபம்** : *பரம தந்தையே! எங்கள் எஜமானாகிய இயேசு காண்பித்த "சிலுவையின் தியாக பாதையில்" நாள்தோறும் நடந்துவர அனுகிரகம் செய்தருளும்! ஆமென்.*

### "மனந்திரும்புங்கள்.... பின்பு, ஜெயம் பெறுங்கள்"

இன்று அவிசுவாசிகளுக்குப் (Unbelievers) பிரசங்கிக்கப் படும் பிரசங்கத்தில் மங்கி மறைந்துபோன "மனந்திரும்புங்கள்!" என்ற செய்தியை வலியுறுத்தியே இப்போது நாம் பேசுகிறோம்.

அதேபோல், இன்று விசுவாசிகளுக்குப் (Believers) பிரசங்கிக்கப் படும் பிரசங்கத்தில் மங்கி மறைந்துபோன "ஜெயம் பெறுங்கள்!" என்ற செய்தியை வலியுறுத்தியும் இப்போது நாம் பேசுகிறோம்.

மனுஷன் பாவத்தில் வீழ்ந்த நாள்துவங்கி, அவனுக்கு தேவன் அழைக்கும் அழைப்பு "ஜெயம் பெறுங்கள்" என்ற அழைப்புதான்! அவ்விதமே காயீனுக்கும் ஆரம்பத்தில் அழைப்பு விடுத்தார், "பாவம் உன் வாசற்படியில் (இருதயக் கதவருகில்) படுத்திருக்கிறது. நீ அதை அடக்கி ஆண்டுகொள்வாயாக" (ஆதி.4:7) என்றார். இதே அழைப்பு வேதாகமத்தின் கடைசி புத்தகத்தில் திரும்பவும் தரப்படுவதைப் பாருங்கள், "ஜெயம் பெறுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்!" (வெளி.21:7).

தேவனோடு நெருங்கி ஐக்கியம்கொண்டு அவருடைய நோக்கத்தை நம் வாழ்வில் நிறைவேற்றுவதற்கொப்பான மகிமையை இவ்வுலகத்திலுள்ள வேறு எதற்கும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கவே முடியாது. இப் பாருலகில் வாழ்ந்த எந்த மனிதனுடைய வாழ்க்கையைக் காட்டிலும் இயேசு இவ்வுலகில் வாழ்ந்த வாழ்க்கை மகா ஆச்சரியம் நிறைந்ததும்! மகா மகிமை பொருந்தியதும்! சொல்லிமுடியா சந்தோஷம் நிறைந்ததுமான வாழ்க்கை ஆகும்! அவர் உலகப்புகழ் பெற்ற நபர் அல்ல. . . ஓர் ஐசுவரியவானுமல்ல !! "ஆனால்" தன் ஜீவியத் தின் மூலமாய் தெய்வ மகிமையை சுடர்விட்டுப் பிரகாசித்து விட்டார்!!

இன்று உங்களை அணுகிவரும் சுவிசேஷத்தின் நற்செய்தியை தயவுகூர்ந்து கேளுங்கள்: ஆம், நீங்களும் இயேசுவிடம் ஜொலித்த அதே மகிமையை உங்கள் வாழ்க்கையில் ஜொலித்துப் பிரகாசித்திட முடியும்! இவ்வையகத்தில் நீங்கள் வாழும் நாட்களெல்லாம் ஓர் ஜெயம் பெற்றவராய் எந்நாளும் திகழ்ந்திட முடியும்!!

இனி என்ன? இன்றிலிருந்து நித்தியத்தின் சொல்லிமுடியா மதிப்பையே எப்போதும் மனதிற்கொண்டவர்களாய் வாழுங்கள்! இவ் வாழ்க்கையில் உண்மையுள்ளவர்களாய் நிலைத்திருங்கள்!

**ஜெபம் :** *அன்பின் தகப்பனே! ஜெயித்துவாழ அழைத்திடும் உம் சுவிசேஷத்தை எங்கள் செவிகளில் கேட்டுவிட்டோம்..... அந்த அழைப்பிற்கு பாத்திரராய் நாங்கள் நடந்துகொள்ள கிருபை தாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**சோதனை வேளையில், தேவனுடைய வழி தவறிடக்கூடாது!!**

மோசே விசுவாசமில்லாதவனாய், கீழ்ப்படியாமல் நடந்தபோது, அதுவும் மிகச் சொற்ப காலமே நடந்தபோது. . . வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் நுழைய, சற்றும் தயங்காமல் தேவன் அவனுக்கு அனுமதி மறுத்துவிட்டார். (எண்.20:8-12).

மோசேயிடம், ஏற்கனவே 40 வருடங்களுக்கு முன், ஒருமுறை 'அடிக்கச்' சொன்ன கன்மலையிடம், தேவன் இப்பொழுது தண்ணீர் வரும்படி 'பேசச்' சொன்னார் (யாத்.17:6). ஆனால் மோசே உணர்ச்சிவசப்பட்டவனாய் நிதானமிழந்து கன்மலையை அடித்தான் (எண்.20:10). தேவ மனுஷன் கீழ்ப்படியாமல் போனபோதும், தண்ணீர் புறப்பட்டு வந்தது! அது, தாகமாயுள்ள ஜனங்களை நேசித்தார் என்பதைத்தான் நிரூபித்தது. தேவ மனுஷனுடைய கீழ்ப்படியாமையை, தேவன் அனுமதித்துவிட்டதாக எண்ண முடியாது. தேவ கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் போகும் தேவனுடைய மனிதர்களின் ஊழியங்களில்கூட ஏன் ஆசீர்வாதம் தங்குகிறது என்பதையே இந்த சம்பவம் எடுத்துரைக்கிறது!

ஆம், தண்ணீர் பொங்கி வந்ததினால், மோசே தப்பித்துக் கொள்ள முடியவில்லை! அவன் கடுமையாக தண்டிக்கப்பட்டான்!! கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும் நாளுக்காக அவன் 40 வருடங்கள் நோக்கமாயிருந்தும், கானான் தேச எல்லையில் "தானே" பிரவேசிக்கிற தகுதியை இழந்தான்! மற்றவர்களுக்குப் பிரசங்கித்தும், ஒருவன் தன் தகுதியை வாழ்வின் முடிவில் கூட இழந்துபோவது சாத்தியமே! (1 கொரி. 9:27).

இஸ்ரவேலர் தேவனுடைய செய்கைகளை மட்டும் காண முடிந்தது. ஆனால் அவருடைய வழிகளை அறியும் சிலாக்கியத்தை மோசே பெற்றிருந்தான் (சங்கீதம் 103:7). ஆதலால், இஸ்ரவேலரைக் காட்டிலும் அவனிடமிருந்து அதிகமாக எதிர்பார்க்கப்பட்டது!

தேவ ஊழியர்களின் சிலாக்கியங்கள் அநேகம்! அந்த அளவிற்கு அவர்களுடைய பொறுப்புகளும் அதிகம்!!

தேவன் தன்னைச் சோதிக்கிறார் என மேரிபாவில் மோசே உணரவில்லை. அவன் அறிந்திருந்தானானால், வெகு ஜாக்கிரதையாக இருந்திருப்பான். நமது நினைவுகளையும் செய்கைகளையும் நிறுத்துப் பார்க்கும்படி, அனுதினவாழ்வில் நாம் சந்திக்கும் சூழ்நிலைகளால் தேவன் நம்மை சோதிக்கிறார் என நாம் உணர்ந்தவர்களாய் ஜீவிக்க வேண்டும்!

**ஜெபம்** : பரம பிதாவே! எவ்வித சூழ்நிலையிலும், "உம் வழி" அறிந்து செயல்பட கிருபைதாரும்! ஊழிய பொறுப்பில் உள்ள நாங்கள், பிழையின்றிவாழ அருள்புரியும்! இயேசுவின் நாமத்தில் ஆமென்.

**பழிவாங்குதல் கூடாது! அவரது கிரியைக்கு காத்திருப்பதே நலம்!!**

*சவுல் தாவீதின் தயவில் நிராகதியாய் கிடந்தபோது, சவுலைப் பழிவங்கிட தாவீது தேவனால் சோதிக்கப்பட்டான் - ஒருமுறை அல்ல இருமுறை!! (1 சாமுவேல்.24:3-7, 26:6-12). ஒவ்வொரு முறையும் அவன் வெற்றி பெற்றான்! பழி வாங்குதல் கர்த்தருக்கு மட்டுமே உரியது என அவன் அறிந்திருந்ததால், அவன் பழிவாங்க விரும்பவில்லை. தீமையை நன்மையால் வெல்லவே விரும்பினான் (ரோமர் 12:19-21). தன்னை தேவன் ஏற்கனவே அபிஷேகம் செய்து தகுதிப்படுத்திவிட்ட சிங்காசனத்தைக் கைப்பற்றும்படி சவுலைக் கொன்றிட எண்ணவில்லை! தேவன் நமக்குத் தருவேன் என்று வாக்குப்பண்ணின ஒரு காரியத்திற்கு காத்திருப்பது, நமது விசுவாசத்திற்கும் பொறுமைக்கும் உண்மையிலேயே ஒரு சோதனையாகும். தேவனுக்கு காத்திருந்ததாலும்; நம்பியிருந்ததாலும்; தாவீது ஒன்றும் இழந்துவிடவில்லை. தாவீதின் 30-ஆம் பிறந்தநாள் நிறைவேறின உடனே தாவீதை அரசனாக்க தேவன் திட்டமிட்டிருந்தார்! தேவன் திட்டமிட்டபடி சூழ்நிலைகளும் அப்படியே துல்லியமாய் நடந்தேறின (2 சாமு.5:4). தாம் குறித்த நேரத்தில் தேவன் ஒருவனைச் சிங்காசனத்தில் அமரப்பண்ண அவர் வல்லவராயிருக்கிறார் என யோசேப்பின் சரித்திரத்திலிருந்து தாவீது அறிந்திருந்தான்!*

*யோசேப்பை, மிகுந்த சோதனை நிறைந்த சூழ்நிலைகளில் பல வருடங்கள் கர்த்தருடைய வார்த்தை புடமிட்டது (சங்கீதம் 105:18,19). ஆனால் யோசேப்பின் முப்பதாவது பிறந்தநாள் நிறைவேறின உடனே கர்த்தருடைய வேளை வந்தது. அவன் எகிப்து தேசத்தின் இரண்டாம் அதிபதியானான் (ஆதி.41:46).*

*அவனுடைய சகோதரனின் பொறாமையோ, போத்திபார் மனைவியின் குற்றச்சாட்டோ, யோசேப்பின் வாழ்வைக் குறித்த தேவனுடைய திட்டத்தை நிறைவேறாமல் தடுத்து நிறுத்த முடியவில்லை!*

*தேவனுடைய சித்தம் நிறைவேறுவதை ஒருநாள் கூட தாமதப்படுத்த அவர்களால் உண்மையிலேயே முடியவில்லை!*

*யோசேப்பின் சரித்திரத்தை தாவீது படித்திருந்தான். இப்போது தனது சொந்த வாழ்விலும் தேவன் உண்மையுள்ளவரென்பதையும், சர்வவல்லவர் என்பதையும் நிரூபிக்க வைராக்கியமுள்ளவனாய் இருந்தான். மேலும் யோசேப்புக்கு தேவன் எதைச் செய்தாரோ, அதையே தேவன் தனக்கும் செய்வார் என்பதை தாவீது கண்டான்!*

***ஜெபம்*** : *பரம தந்தையே! நீர் எங்கள் வாழ்விற்கு கொண்டுள்ள திட்டத்தை யாதொருவரும் பறித்திட இயலாது! நாங்களோ தீமைக்கு, பழிவாங்காமல் நன்மை செய்து, வாக்குதத்தத்தை பொறுமையாய் சதந்தரித்திட தயைபுரியும், ஆமென்.*

**தோல்விகளில் மனம்திரும்ப தாழ்மையான இருதயம் வேண்டும்!**

*மனுஷரீதியில் சாதாரணமாய் எண்ணப்படும் குற்றத்தைப் புரிந்த சவுலிடமிருந்து 'இராஜ்யபாரத்தை' தேவன் ஏன் எடுத்தார்? மேலும் அதைவிட மாபெரும் பாவங்கள் என எண்ணப்படும் விபச்சாரமும், அதைத் தொடர்ந்து கொலையும், தாவீது செய்தபின்பும், தேவன் அவனை அரசனாக இருக்கும்படி ஏன் அனுமதித்தார்? இதற்கு பதில்: இந்த இரண்டு மனிதர்களும் தங்கள் பாவத்தை அறிந்தவுடன், அவர்கள் எப்படி நடந்துகொண்டார்கள் என்பதிலேயே இருக்கிறது. சவுல் சாமுவேலிடம் 'அந்தரங்கமாக' தன் பாவத்தை ஒப்புக்கொண்டான்! ஆனால் ஜனங்கள் முன்பாக, தனக்கு மரியாதையைத் தேடினான் (1சாமு.15:30). அவன் பாவஞ்செய்தான், இருப்பினும் மனுஷருடைய கனத்தையும் எதிர்பார்க்கிறான்! தாவீதோ அப்படியல்ல, தன் பாவங்களை மறைக்கப்பார்க்காமல் எல்லோரும் அறியும் வண்ணம் சங்கீதம் 51-ஐ எழுதி வெளிப்படையாக ஏற்றுக்கொண்டான்!!*

*இவ்விரு மனுஷரை தேவன் நடத்திய முறையினின்று நாம் என்ன கற்றுக்கொள்கிறோமெனில்: மனுஷருடைய மரியாதையைத் தேடுவது.... விபச்சாரம், கொலை போன்ற பாவங்களிலும்... மிகப்பெரிய பாவமாக தேவனுடைய பார்வையில் காணப்படுகிறது. இதனால்தான் சிலுவையிலிருந்த கொலையாளியையும், விபச்சாரத்தில் பிடிக்கப் பட்ட ஸ்திரீயையும் இயேசுவால் மன்னிக்க முடிந்தது. ஆனால் மனுஷருடைய மகிமையைத் தொடர்ந்து தேடின பரிசேயர்களை அவரால் மன்னிக்க முடியவில்லை! மனுஷருடைய கனத்தைத் தேடுவது ஒருவகையில் விக்கிரக ஆராதனையாகும். மேலும், கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் அதிகமாய் சோதித்துப்பார்ப்பது, இந்தப் பகுதியிலேதான்! இந்தச் சோதனையில் வெற்றி பெறுவோர் பாக்கியவான்கள்!!*

*நமது சென்றகாலத் தோல்விகளை - நாம் தாழ்மையாக ஏற்றுக்கொள்ள சம்மதிப்போமானால் - தேவனுடைய நோக்கத்தை நாம் நிறைவேற்ற அவை நமக்கு தடையாய் இருப்பதில்லை! ஏனெனில், தாழ்மையுள்ளவர்களுக்கே தேவன் கிருபை அளிக்கிறவராயிருக்கிறார்!!*

**ஜெபம் :** *அன்பின் பிதாவே! எங்களின் வீழ்ச்சியைவிட, எங்களிடம் தாழ்மையையே எதிர்நோக்குகிறீர். வீழ்ச்சியில், மனுஷர் கனத்தை தேடாமல் உடனே ஒப்புரவாகி தாழ்த்திவிடும் நல்ல இருதயத்தை என்றென்றும் எங்களுக்குத்தாரும்! ஆமென்.*

**தேவனின் உன்னத பங்கை நாடுவோர் வெகுசிலரே!**

*இஸ்ரவேலின் சிறந்த தீர்க்கதரிசியான எலிசாவை தேவன் அங்கீகரித்ததின் அடையாளமாக, எலியா பெற்றுக்கொண்டது போல் இருமடங்கு அபிஷேகத்தை அவன் மேல் அனுப்பினார்!*

*மற்ற எல்லா மெய்யான தேவ ஊழியர்களைப் போலவும் எலிசா விஷயத்திலும், அவன் தனது லௌகீகத் தொழிலை உண்மையுடன் செய்து வந்தபோது அழைக்கப்பட்டான் (1 இரா.19:19). அதன்பின்பு அவன் எலியா தீர்க்கதரிசிக்கு பல வருடங்கள் எடுபிடி வேலை செய்து வந்தான் (2 இரா.3:11). அவன் தனக்குப் பெரிய காரியங்களை தேடவில்லை, ஆகிலும் தேவனோ அந்த வாலிபனுக்குப் பெரிய திட்டங்களை வைத்திருந்தார்.*

*எலியா பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் முன்பாக, எலிசா சோதிக்கப்பட வேண்டும். ஆதலால், தான் மட்டும் பெத்தேலுக்குச் செல்லத் தீர்மானித்து எலிசாவை கில்காலிலே நின்றுவிடும்படி எலியா கூறுகிறான். ஆனால் ஒரே தீர்மானத்துடன் எலியாவைத் தொடரும்படி முடிவெடுத்திருந்த எலிசா, நின்றுவிட மறுத்துவிடுகிறான். பெத்தேலிலே எலிசாவை தன்னைவிட்டு உதறிவிட மீண்டும் முயற்சித்து, தான் இன்னும் எரிகோவுக்குச் செல்ல வேண்டுமென கூறினான். ஆனால் எலிசா "அட்டையைப்" போல ஒட்டிக் கொண்டான். கடைசியாக எரிகோவிலும் எலிசா அதேவிதமாக சோதிக்கப்படுகிறான். மீண்டும் எலிசா "இடைவிடாமல் தொடரும் சோதனையில்" வெற்றி பெற்று, எலியாவைப் பின்தொடர்ந்து யோர்தான்வரைச் செல்லுகிறான் (2 இரா.2:14). தனது வாழ்க்கைக்கு, தேவனிடத்திலிருந்து உன்னதமான மிகச் சிறந்ததொன்றை, இருமடங்கு அபிஷேகத்தை அவன் இப்படியாகப் பெற்றான்!*

*நமக்கு இதில் என்ன செய்தி அடங்கியிருக்கிறது? ஆவிக்குரிய வளர்ச்சியில் பல நிலைகள் இருக்கின்றன. அவைகளில், நாம் ஏற்கனவே பெற்றுவிட்டதில் திருப்தி அடைந்துவிட்டோமா அல்லது தேவனுடைய அதி உன்னதத்திற்கு நாம் தொடருகிறோமா என தேவன் சோதித்துப் பார்க்கிறார். வெகுசிலரே, கடைசிவரை வந்து, சுயத்திற்கு முழுவதும் செத்து, முழுமனதுடன் கிறிஸ்துவை பின்தொடர்பவர்களாய் தேவனுடைய சிறந்ததான இருமடங்கு பங்கைப் பெறுகின்றனர்!!*

***ஜெபம் :*** *எங்கள் பரம தகப்பனே! உம் உத்தம தாசர்களைப்போலவே, உன்னதத்தின் பாதையில் இறுதிவரை நிலைத்திருந்து பின்பற்றி உன்னதத்தின் "நல்ல பங்கை" கண்டடைய தயை செய்தருளும், ஆமென்.*

### சர்வ வல்ல தேவனின் ஆளுகையில் மகிழ்ந்திருங்கள்!

*சங்கீதம் 46:10-ல் அவர் ஜனங்களைப் பார்த்து, "நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்; ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன்" எனக் கூறினார். ஆம், அவர் பூமிக்கு மேலாக சர்வத்தையும் ஆளும் வல்லவராக வீற்றிருப்பதால், நாம் அமர்ந்து இளைப்பாறிக் கொண்டிருக்கலாம்!*

*அவரின் சர்வ வல்லமையுள்ள ஆளுகையை அறிந்து கொள்ளும் படியான ஓர் நிகழ்ச்சியைப் பாருங்கள். இன்று இஸ்ரவேல் தேசத்தின் எதிரிகளில் மிகப் பிரதானமான எதிரி சோவியத் ரஷ்யா என்பதை நாம் யாவரும் அறிவோம். இஸ்ரவேல் தேசம் பூமியிலிருந்து அழிக்கப்பட்டு போகுமானால், அதனிமித்தம் ரஷ்யா மகிழ்ச்சிக்கடலில் ஆழ்ந்துவிடும். ரஷ்யாவின் மனநிலை இவ்வாறிருக்கும் சமயம் ஓர் நிகழ்ச்சி நடந்தது. அதாவது 1948-ம் ஆண்டு மே மாதம் பிரிட்டன், யூதர்களுக்குப் பாலஸ்தீனா தேசத்தைத் தருவதாக கொடுத்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டது. அச்சமயம் இஸ்ரவேலுக்கு ஆதரவாக ரஷ்யா போட்ட ஓட்டானது ஐக்கிய நாடுகள் (The United Nations) இஸ்ரவேல் மாநிலம் மீண்டும் ஸ்தாபிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ளும்படி செய்துவிட்டது. ஆனால் உண்மையில் ரஷ்யா ஓட்டு போட்டதின் நோக்கம், பிரிட்டிஷ் அரசை பாலஸ்தீனாவிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்பதற்குத்தான்! அப்படியிருக்க, நடந்தேறி விட்ட நிகழ்ச்சிகள் தேவன் எவ்வளவாய் சர்வத்தையும் செம்மையாய் ஆளுகிறார் என்பதை அழகூட்டிச் சித்தரிக்கின்றது. ஆம், ஓர் "கிறிஸ்தவ நாடு" என அழைக்கப்பட்ட தேசம் தன் வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டது:! ஆனால் தேவனோ, யூதர்களுக்கு அவர்களின் தேசத்தைத் திரும்பத் தருவேன் என்ற வாக்குறுதியை நிறைவேற்றத் துரிதம் கொண்டார். அவரோ தன் சர்வ ஆளுகையின் வல்லமையினால், ஓர் "நாத்திக தேசத்தையே" தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தித் தன் வார்த்தையை நிறைவேற்றிவிட்டார்!!*

*சர்வலோகத்திற்குமுரிய மகா சிங்காசனத்தில் தேவன் வீற்றிருக்கிறார்! இவ்வுலகத்தின் நிகழ்ச்சிகள் அத்தனையும் அவருடைய ஆளுகைக்குள் அடங்கியே இருக்கிறது!! இந்த சத்தியத்தில் நம்முடைய விசுவாசம் வேரூன்றி நிலைத்திருக்கும்போதுதான், இனிவரும் நாட்களில் நம்மைச் சுற்றி என்ன சம்பவித்தாலும், நம்முடைய இருதயம் பூரண இளைப்பாறுதலுக்குள் இருந்திட முடியும்!*

***ஜெபம்*** : *பரம தகப்பனே! உமது சர்வ வல்லமையுள்ள ஆளுகையில், சகலமும் செம்மையாய் நடந்தேறும் என்ற விசுவாசம் எங்கள் உள்ளத்தில் வேரூன்றிவிட கிருபை தாரும், ஆமென்.*

**பிரதம மந்திரி நம தகப்பனாயிருந்தால்? அவரைவிட தேவன் பெரியவரன்றோ!**

நீதிமொழிகள் 21:1, "ராஜாவின் இருதயம் கர்த்தரின் கையில் நீர்க்கால்களைப் போல இருக்கிறது; அதை தமது சித்தத்தின்படி அவர் திருப்புகிறார்" எனக் கூறுகிறது.

இந்தியாவின் பிரதம மந்திரி உங்கள் தகப்பன் என வைத்துக் கொள்ளுங்கள்! அப்படியானால், உங்கள் வாழ்வில் நீங்கள் சந்திக்கும் எந்தக் கஷ்டங்களையும் பிரச்சனைகளையும் ஓர் பொருட்டாக எண்ணுவீர்களா? உங்கள் வீட்டுச் சொந்தக்காரர் உங்களைப் பயமுறுத்தினாலோ; அல்லது உங்கள் மேலதிகாரி இடைவிடாமல் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தாலோ; அல்லது யாரேனும் ஒருவர் உங்களிடத்தில் அநீதியாய் நடந்து கொண்டாலோ; அல்லது ஏதேனும் ஒரு காரியம் துரிதமாய்ச் செய்யப்பட வேண்டும் என்பதற்காகவோ - நீங்கள் கவலைப்படுவீர்களா? ஒருக்காலும் இல்லை! பிரதம மந்திரியைத் தகப்பனாகக் கொண்ட நீங்கள் என்ன செய்வீர்கள்? உடனே உங்கள் அப்பாவிற்கு நீங்கள் 'போன்' செய்து, அந்தப் பிரச்சனையைத் தீர்த்துவைக்கும்படி பேசிவிட்டு, நிம்மதியாக போனைக் கீழே வைத்துவிடுவீர்கள்!

உங்கள் ஆண்டவர் இந்தியாவின் பிரதமரைக் காட்டிலும் பெரியவரல்லவா? சற்றே சிந்தியுங்கள்!

ஆனால், வாழ்க்கையின் பிரச்சனைகளைச் சந்திக்கும் நாம் என்ன செய்கிறோம்? "ஐயோ, இந்த சமயத்தில் எனக்குத் தெரிந்த ஓர் மத்திய மந்திரியோ அல்லது ஓர் போலீஸ் ஆபீஸரோ இருந்தால் எவ்வளவு நலமாய் இருந்திருக்கும்! அப்படி இருந்திருந்தால், அவர்கள் எனக்கு உடனே உதவி செய்திருப்பார்களே!!" எனக் கூறுகிறோமா? இந்த இரண்டில், நம் ஜீவியத்தின் பிரச்சனைகளில், எது நம்முடைய முதலிடமான நடவடிக்கையை ஆக்கிரமிக்கிறது?

இன்று அநேகக் கிறிஸ்தவர்கள், அன்றாட தங்களின் நடைமுறை ஜீவியத்தில் பிரச்சனைகள் வரும்பொழுது, "நாத்திகர்களாகவே" மாறிவிடுகின்றனர். இவர்கள், "தேவன்மேல் விசுவாசம் வைத்திடுங்கள்!" என கூட்டங்களிலேயும், தங்கள் வீடுகளிலேயும் 'வாயாரப்' பேசுகிறார்கள். ஆனால் ஜீவியத்தில் நடைமுறைப்படுத்த தவறுகிறார்கள்!!

**ஜெபம் :** சர்வ வல்ல எங்கள் பிதாவே! மானிடர் தயவை பிரதானமாய் நாடும் எங்கள் இருதயத்தை "உம்மையே பிரதானமாய் நாடும்" விசுவாசத்திற்குள் எங்களை ஈர்த்துக்கொள்வீராக! இயேசுவின் நாமத்தில், ஆமென்.

**பயத்திலிருந்து விடுதலைதரும் விசுவாசம்!**

*இன்று பயமானது, நம் நாட்களில் இருப்பதுபோல் இதற்கு முன் ஒருபோதும் இருந்ததில்லை! "கடைசி நாட்களில் பூமியின்மேல் இனி என்ன ஆபத்து வருமோ என எதிர்பார்த்துப் பயப்படுவதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோகும்" (லூக்கா 21:26) என்றார் இயேசு. ஆனால் நாமோ, இப்படிப்பட்ட சமயத்தில்தான், பயமின்றி நிமிர்ந்து பார்த்து கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கி, நம்முடைய தலையை உயர்த்த வேண்டும் என இயேசு புத்தி சொன்னார் (லூக். 21:28).*

*நமக்கு ஓர் சர்வ வல்லமையுள்ள பிதா இருக்கிறபடியால் நாம் நிச்சயமாக . . . அனாதைகள் இல்லை! எனவே இனியும் நாம் அனாதைகள்போல் நடந்து கொள்ளாதிருப்போமாக! நீங்கள் பயத்தினாலும் பதட்டத்தினாலும் ஆட்கொள்ளப்படுவீர் களென்றால், உங்கள் பரமதகப்பனை நீங்கள் நிந்திக்கிறீர்கள் என்பதுதான் பொருள். இதன் மூலம் நீங்கள் அவரிடம் கூறுவது யாதெனில், "தேவனே! எனக்கு உம்மீது நம்பிக்கையில்லை" என்பதுதான். மேலும், "என்னுடைய கஷ்டமான சூழ்நிலையில் எனக்கு உதவி செய்வதற்கு நீர் சத்துவமற்ற கையாளாகாதவர்" என்றும், "என் மீது உமக்கு அக்கறையே இல்லை" என்றும் கூறுகிறவர்களாய் இருப்போம். ஆம், அவிசுவாசத்தால் நிறைந்த ஓர் இருதயத்திலிருந்து வருவதே இவ்வித சாட்சியாகும்.*

*நீங்கள் நிஜமாகவே, தேவன் உங்களை அன்புகூர்ந்து விசாரிக்கிறவரென்று விசுவாசிப்பவர்களாயிருந்தால், நீங்கள் எதற்காகிலும் கவலைப்பட அவசியமுண்டோ? இரு பறவைகள் பேசிக்கொள்வதைப் போன்ற ஓர் பாடல் எனக்கு மிகுந்த சவாலாக இருந்தது. அந்தப் பாடல் யாதெனில்,*

**ராபின் குருவி ஓர் சிட்டுக் குருவியிடம் கேட்டது :**

*"சின்னஞ்சிட்டுக் குருவியே சின்னஞ்சிட்டுக் குருவியே*
*இவ் வையகத்து மானிடர், இவ்விதம் சிதறிய மனமும்*
*பதறியே ஓடி பயந்தே வாழும் காரணம் யாதோ?*
*இனிய சிட்டுக்குருவியே இதன் காரணமும் நீ அறிவாயோ?"*

**உடனே சிட்டுக்குருவி ராபின் குருவிக்குப் பதில் கூறியது :**

*"நேசமுள்ள ராபினே நேசமுள்ள ராபினே!*
*நானறிந்த பதிலையும் கூறிட நீ கேளாயோ,*
*என்னையும் உன்னையும் காத்திடவே*
*பரம தகப்பன் தான் உண்டே - இந்த நல்ல*
*பாக்கியமும் இம் மானிடர்க்கு இல்லையோ?*
*இதுவே என் பதிலாக ஏற்றிடுவாய் ராபினே!"*

*"பயப்படாதிருங்கள், அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்" (மத்.10:31).*

**ஜெபம் :** *அன்பின் சற்குருவே! பயம் நிறைந்த இந்த உலகில் பிதாவண்டையில் காணப்படும் சம்பூரண பாதுகாப்பை அருளும் உம் அன்பை விசுவாசித்து, பயமின்றி வாழ்ந்திட கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

### தேவன் நம் முழு குடும்பத்திற்கும் பிதாவாயிருக்கிறார்!

நாம் தேவனை 'என்னுடைய பிதாவே' என்றல்ல "எங்கள் பிதாவே" என்றுதான் அழைக்கவேண்டுமென இயேசு நமக்குக் கற்பித்ததை நினைவிற் கொள்வோமாக. இதில் ஓர் முக்கியமான விஷயம் அடங்கியுள்ளது. இயேசு கற்பித்த ஜெபம் ஓர் குடும்ப ஜெபமாகும்! நம் பரமதகப்பனுக்கு அநேகம் பிள்ளைகள் இருக்கிறார்கள். நான் அவர் சமூகத்தைக் கிட்டிச்சேரும்போதெல்லாம் இந்த உண்மையை மனதிற் கொண்டிருக்க வேண்டும். ஆம், அவரின் அநேகம் பிள்ளைகளில் நானும் ஒருவனாக இருக்கிறேன்! இந்தக் குடும்பத்தில் ஒருவரும், இன்னொருவரைக் காட்டிலும் விசேஷித்தவர்களல்ல. எல்லோரும் ஒரே சமமானவர்களே! அவர் நம்முடைய தகப்பன்!!

இந்த சத்தியத்தின்படி, தேவனுடைய குடும்பத்திலிருக்கும் என்னுடைய சக விசுவாசிகளோடு நான் கொண்டிருக்கும் உறவு சரியாக இல்லையென்றால், நான் தேவனோடு சரியான முறையில் உறவு கொள்வதும் ஒருக்காலும் முடியாது. இரண்டு மரங்களால் செய்யப்பட்டதே சிலுவை ஆகும். ஒரு மரம் செங்குத்தாகவும், இன்னொரு மரம் படுக்கையாகவும் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு மரங்களுக்கொப்பாகவே நாம் உறவுகொள்ளும் ஐக்கியத்திற்கும் 'இருதிசையான உறவு' உள்ளது. ஒன்று தேவனோடு கொள்ளும் நேர் செங்குத்தான (Vertical Relationship) உறவு. மற்றொன்று தேவனுடைய குடும்பத்திலிருக்கும் மற்றவர்களோடு கொள்ளும் படுக்கைவசமான (Horizontal Relationship) உறவு. அதாவது தேவனுடைய குடும்பத்திலிருக்கும் என்னுடைய சகோதர, சகோதரிகளிடம் கொண்டிருக்கும் உறவு சுமூகமாய் இல்லையென்றால் . . . . அவர்களில் யாராகிலும் ஒருவரோடு என்னால் பேச முடியாதிருக்குமென்றால்; அல்லது யாராகிலும் ஒருவர்மீது மனதிற்குள் கசப்பு இருக்குமென்றால்; அல்லது ஒருவர்மீது எனக்குக் கோபம் இருக்குமென்றால்; அல்லது யாராகிலும் ஒருவரை நான் மன்னிக்காமல் இருந்தால், நான் நிச்சயமாய். . . . தேவனைக் கிட்டிச்சேர்ந்து "எங்கள் பிதாவே" என ஒருக்காலும் கூறிட முடியாது. நான் யாரை மன்னிக்கவில்லையோ அவருக்கும் தேவன் பிதாவாகத் தானே இருக்கிறார்!? ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நம் சகோதர சகோதரிகளிடம் அன்புடன் ஜீவிப்போமாக!!

***ஜெபம்*** : *பரலோக பிதாவே! உம்மை நேசிக்கும் நாங்கள், எங்கள் குடும்பத்தில் உள்ள யாவரையும் நேசித்து வாழ்ந்திட உதவிபுரியும், இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**நம் வாழ்வின் தலையாய பகுதியாய் தேவன் இருந்திட வேண்டும்!**

*தேவனை மையமாகக் கொண்டே மனிதனை தேவன் சிருஷ்டித்தார். தேவனையே தலையாகக் கொண்டு, அத்தலைக்குக் கீழ்ப்பட்ட சரீரமாக இருக்கும்படியே மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான். நம் சரீரத்தில் தலையானது உயரத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமாக தலையானது சரீரப்பிரகாரமாக "மேலே வைக்கப்பட்டது" மாத்திரமல்லாமல், நம் முழு சரீரத்தையும் இந்தத் தலையே ஆளுகை செய்வதையும் காண்கிறோம். இவ்விதம் நம் சரீரத்தின் கிரியைகளை நம் தலையே முழு பொறுப்பெடுத்து ஆளுகை செய்யும் பட்சத்தில் மாத்திரமே நாம் மிகுந்த ஆரோக்கியத்துடன் வாழ்ந்திட முடியும். மாறாக, ஒரு மனிதனின் தலை (மூளை) சரிவர வேலை செய்யவில்லையென்றால், அந்த மனிதனின் சரீரம் கிரமமாக ஆளுகை செய்யப்பட முடியாத நிலைக்கு ஆளாகிவிடும். இந்நிலையி விருக்கும் ஒரு மனிதனை புத்தி சுயாதீனமற்றவனென்றும், பைத்திய மென்றுமே அழைக்கிறோம். ஆனால் மனிதன் இக்கதியை அடைவற்கு தேவன் ஒருபோதும் விரும்பவேயில்லை.*

*ஆவிக்குரிய பிரகாரமாக "நாம் தலை நிமிர்ந்து நடந்திடவே" தேவன் விரும்புகிறார் (லேவி.26:13). இன்று அநேக விசுவாசிகளிடம் காணும் பிரச்சனை யாதெனில், அவர்களின் தலை அது இருக்கவேண்டிய உரிய இடத்தில் இல்லாதிருப்பதுதான்! தங்கள் வாழ்வில் தேவன் இருக்கவேண்டிய ஸ்தானத்தை இவர்கள் தேவனுக்குக் கொடுக்க மறுத்துவிடுகிறார்கள். நம் ஜீவியத்தில்; நம் வாஞ்சைகளில்; நம் விருப்பங்களில்; நம் குறிக்கோள்களில் தேவனுக்கு முதலிடம் தரப்படுகிறதா?*

*இன்று நம் ஜீவியத்தில் அநேக காரியங்கள் ஏன் சீராக இல்லை? ஏன் ஒழுங்கின்மையும் குழப்பமும் நிறைந்துள்ளது? இதற்கு ஒரே காரணம், நமக்கு தேவனே முதலாவதாக இல்லாதிருப்பதுதான்! மேலும் நாம் ஜெபிக்கும் பொழுதெல்லாம் ஈவுகளை கொடுப்பவரைவிட, அவர் கொடுக்கும் ஈவுகளையே அதிகம் விரும்புகிறவர்களாய் இருக்கிறோம்.*

*ஓர் ஆவிக்குரியவனின் மிகச் சிறந்த அடையாளம் யாதெனில், ஈவுகளைவிட அந்த ஈவுகளைக் கொடுப்பவரையே அதிகமாய் சிநேகிப்பான்!*

***ஜெபம்** : பரம பிதாவே! உம்மையே எங்கள் வாழ்வின் மையமாய் கொண்டு, உமக்கே முதலிடம்தந்து, உம்மையே பிரதானமாய் அன்புகூர்ந்து வாழ, எங்கள் ஜீவியத்தை சீர்ப்படுத்தும், இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**இயேசுவின் சீஷர்களாய் பண ஆசைக்கு விலகியிருக்கக்கடவோம்!**

*கர்த்தருடைய ஆவி தங்கியிருந்த தீர்க்கதரிசி பிலேயாம் (எண். 24:2,3) வழிதப்பிப்போனது பண விஷயத்தில்!! அநீதியாய் நடந்து கொண்டதினால் அல்ல! மாறாக, பணத்தை நேசித்தபடியால்!! பணத்தின் மேலும், மண்ணுக்குரிய ஒரு ராஜாவினால் கிடைக்கும் கனத்திலும் அவன் கொண்ட மோகம், தான் தேவசித்தத்திற்கு விரோதமாய் செல்வதைக்கூட காணக்கூடாதபடிக்கு பிலேயாமின் கண்களைக் குருடாக்கியது!*

*தேவன் அவனுடைய இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதை காணும்படியே அவனை சோதித்தார்!!*

*ஆரம்பத்தில் பிலேயாம் தேவசித்தத்தை நாடினபோது, 'பாலாக்கு ராஜாவிடம் போகவேண்டாம்' எனத் தெளிவான பதிலை தேவன் அளித்திருந்தார். ஆனால் பாலாக்கு, அதிக பணத்தையும், மரியாதையையும் அளித்தபோது பிலேயாம் இழுப்புண்டு, மீண்டுமாய் பாலாக்கிடம் செல்லும்படி தேவனிடம் அனுமதி கேட்டான். தேவன் அவனுடைய வேண்டுதலைத் தந்தருளி, அவன் ஆத்துமாவிலோ இளைப்பை அனுப்பினார் (சங். 106:15). தான், இப்போது சோதிக்கப் பட்டதையும், பணமோகம் தன்னை வழிதவறப் பண்ணியதையும் அவன் உணரவில்லை!*

*பண ஆசையே எல்லாத் தீமைக்கும் வேராய் இருக்கிறது. தேவன் நமது உண்மையையும் தேவ பக்தியையும் சோதிக்கும்படியே உலகப் பொருட்களை கவர்ச்சிகரமாகச் செய்திருக்கிறார். தமது சீஷர்கள் உலகப்பொருட்களை தேடி நாடவேண்டும் என இயேசுகிறிஸ்து விரும்பவில்லை. நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அதன் நீதியையும் முதலாவது தேடும்படியே அழைக்கப்பட்டிருக்கிறோம். அப்பொழுது, நமது எல்லா உலகத் தேவைகளும் நிறைவாய் நம் மடியில் வந்து விழும்! நமது தேவைகளை மனிதரிடம் சொல்லி யாசித்து கேட்பதினாலோ, வேண்டுவதினாலோ அல்லது மறைவாக அறிவித்து உணர்த்துவதனாலோ நமது உலகத்தேவைகள் சந்திக்கப்படப் போவதில்லை! மாறாக, தேவனை மட்டுமே நம்புவதால் மாத்திரமே சந்திக்கப்படும்! கர்த்தரிடத்திலிருந்து வரும் ஆசீர்வாதத்தினால் நமது உலகத்தேவைகள் எல்லாம் சந்திக்கப்பட்டிருக்கும். அதனோடு எவ்விதமான வேதனையும் வராது (நீதி.10:22, பிலி.4:19).*

***ஜெபம் :*** *பரம தகப்பனே! உம்முடைய வழியில் நடப்பதிலிருந்து எங்களைப் பிரித்திடும் எதிரியாக "பண ஆசையை" உணர்த்தியமைக்கு நன்றி! விழிப்புடன் ஜீவித்திட கிருபை தாரும், ஆமென்.*

**தேடிவரும் செல்வம் நம்மை தேவராஜ்ஜியத்திலிருந்து பிரிக்கக்கூடும்!**

ஒருநாள், இயேசுகிறிஸ்து பேதுருவின் படகில் ஏறி, படகை ஆழ்கடலுக்கு கொண்டு சென்று மீன் பிடிக்கும்படி வலையைப் போடச் சொன்னார். பேதுரு அப்படியே செய்தபோது, தன் வாழ்க்கையில் இதுவரை பிடித்திராத அளவு அதிகமான மீன்களைப் பிடித்தான் (லூக்கா 5:1-11). தற்கால கிறிஸ்தவ வியாபாரிகளைப் போல பேதுரு இருந்திருந்தால், "கர்த்தாவே இது மிகவும் ஆச்சரியமாய் இருக்கிறது. நீரும் நானும் பங்குதாரராய் இருக்கலாம். நீர் பிரசங்கம் செய்யும், நான் உம்மைப் பணம் கொடுத்து ஊழியத்தைத் தாங்குகிறேன்! என்னுடைய மீன் வியாபாரம் இப்படி பெருகுமானால் சீக்கிரம் இஸ்ரவேலிலேயே நான் பணக்கார வியாபாரியாக ஆகிவிடுவேன்!! மேலும் என்னுடைய தசமபாகம், உமக்கு மட்டுமல்ல, இந்த தேசத்தில் பல இடங்களில் இருக்கிற கிறிஸ்தவ ஊழியர்களுக்கும் உதவியாக இருக்கும்" என பலவாறு அவன் இயேசுவிடம் சொல்லியிருப்பான். மேலும் பேதுரு, உலகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று தனது சாட்சியை வியாபாரிகளுக்கான அநேக கூட்டங்களில் சொல்லி, வியாபாரத்தைச் செழிக்க வைக்கிற கிறிஸ்துவிடம் வியாபாரிகளை இழுத்துக் கொள்ளலாம் எனவும் எண்ணியிருக்கக் கூடும். மாம்சத்திற்குரியவர்களின் யோசனை இப்படித்தான் இருக்கும்!

ஆனால், பேதுரு அப்படிச் செய்யவில்லை! தனது மீன் பிடிக்கிற தொழிலையே விட்டுவிட்டு இயேசுவைப் பின்பற்றினான். ஆம், அவன் அந்தச் சோதனையில் வெற்றி பெற்றான். மிகுந்த பொருள் சம்பாதிக்க அனுகூலமாய், தங்கள் வழிகளை செழிப்பாக்குவதன் மூலம் தேவன் தங்களை சோதிக்கிறார் என்பதை, கிறிஸ்தவர்கள் கொஞ்சமும் உணர்வதில்லை. அநேகக் கிறிஸ்தவர்கள் இந்தச் சோதனையில் தோற்றுப்போகிறார்கள். அவர்கள் ஒருவேளை அப்போஸ்தலர்களாய் ஆகியிருந்திருக்கலாம். இதற்கு மாறாக, மாயையான 'கோடீஸ்வரர் களாய்' ஆகிவிடுகிறார்கள்! பல வருடங்களுக்குப் பிறகு பேதுரு, ஒரு பணக்கார வியாபாரியின் வங்கித் தொடர்பிற்கு வெகு தூரமாகி "வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை" என்று சொல்ல முடிந்தது (அப்.3:6). ஆனால் அதைவிட மேலானதொன்று அவனிடமிருந்தது. கிறிஸ்துவின் இராஜ்ஜியத்திற்குரிய நித்திய செல்வத்தைப் பெறும்படிக்கு குப்பையான இவ்வுலகச் செல்வத்தை இழந்தான்!!

**ஜெபம் :** *அன்பின் தகப்பனே! எங்களுக்கு கிடைத்த செல்வத்தில் நாங்கள் சோதிக்கப்படுகிறோம் என்ற எச்சரிப்பைத் தந்தமைக்கு நன்றி! சோதனையில் உண்மையாய் இருந்திட கிருபைதாரும், ஆமென்.*

## 'மீதியான' கூட்டத்தாரோடு இருந்திடக்கடவோம்!

வெளிப்படுத்தின விசேஷம் 14-ம் அதிகாரம், 1-5 வசனங்களில், தங்கள் உலக வாழ்வில் கர்த்தரை முழு இருதயத்துடன் பின்பற்றின சீஷர்களின் சிறு கூட்டத்தைப் பற்றி படிக்கிறோம். கடைசி நாளில் இவர்களே ஜெயங்கொண்டவர்களாய் இயேசுவுடன் நின்றார்கள்!

பாவமன்னிப்பு பெற்றவர்களின் பெருந்திரளோ ஒருவரும் எண்ணக்கூடாததாய் இருந்தது (வெளி.7:9,10). ஆனால் இந்த சீஷர்களின் கூட்டமோ அதைவிட பன்மடங்கு சிறிய ஒன்றேயாகும்! இதை எண்ணிவிட முடியும்!

பூமியின்மேல் தேவனுக்கு உண்மையும் செம்மையுமாய் இருந்த மீதியானவர்கள் இவர்களே. இவர்களே சோதிக்கப்பட்டு தேவனுடைய நற்சான்றிதழைப் பெற அங்கீகாரம் பெற்றவர்கள்! இவர்களைக் குறித்து "தங்களை கறைப்படுத்தாதவர்கள். . . , ஆட்டுக்குட்டியானவர் எங்கு சென்றாலும் பின்பற்றுகிறவர்கள். . . , இவர்கள் வாயிலே கபடம் காணப்படவில்லை. . . , மாசில்லாதவர்கள்" என்று தேவனே நற்சான்று வழங்குகின்றார்!! (வெளி. 14:4,5).

இவர்களே தேவனுக்கு முதற்பலனானவர்கள்! இவர்களே கிறிஸ்துவின் மணவாட்டியும் ஆவர்! ஆட்டுக்குட்டியானவரின் கலியாண நாளிலே (வெளி.19:7), சிறிதும் பெரிதுமான எல்லாக்காரியத்திலும் இவர்கள் தேவனுக்கு முற்றிலும் செம்மையும் உண்மையுமாய் இருந்தது தகும் என்பது, அன்று ஒவ்வொருவருக்கும் தெளிவாகும்.

தங்களுக்கானதைத் தேடி உலக லாபத்தை தேடுபவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு என்பதையும் அந்த நாளில்தான் முழுவதும் உணருவார்கள். தங்களுடைய தகப்பனையோ, தாயையோ, மனைவியையோ, பிள்ளைகளையோ, சகோதரர்களையோ, சகோதரிகளையோ கர்த்தரைக் காட்டிலும் அதிகமாய் நேசிப்பவர்கள் அந்தநாளில் தங்கள் நித்திய இழப்பை கண்டுகொள்வர்!

அந்த நாளில், இயேசுவின் கட்டளைகளுக்குப் பூரணமாய் கீழ்படிந்து, அவர் நடந்ததுபோலவே தாங்களும் நடக்க தேடினோரே... பூமியின்மேல் மிகவும் ஞானமுள்ளவர்கள் என்பதும் வெளிப்படும்! கிறிஸ்தவத்தின் போலி மரியாதைகள் மெய்யாகவே குப்பைகள்தான் எனவும் அந்த நாளில் தெளிவாய் காணப்படும்!!

ஓ. . . , அந்தநாளில் நாம் காணப்போகும் நிதரிசனமான சிலவற்றை இப்போதே தெளிவாகக் காணும்படி நமது கண்கள் திறக்கப்படட்டும்!ஒரு மனுஷன் எக்காலத்தும் அடையக்கூடிய மிகப்பெருங் கௌரவம், தேவனாலே சோதிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டவனாகி, கிறிஸ்துவின் மணவாட்டியாகப் பங்கடைவதேயாகும்!

**ஜெபம் :** பரம பிதாவே! காலசக்கரத்தின் முடிவில், சோதனை நேரங்களில் உம்மையே பற்றிக்கொண்டு வாழும் "அந்த உத்தம மீதியானவர்களின்" கூட்டத்தில் நாங்களும் இருந்திட அருள்புரியும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.

**இயேசுவின் சிலுவை கற்பிக்கும் ''தெய்வ அன்பே'' நமக்கு வேண்டும்!**

அன்பற்ற சூழ்நிலையை நாமும் அன்பற்ற உள்ளத்தோடு சந்திக்கலாமா? இவ்வித சூழ்நிலைகளில்தான், "தேவரீர் என் இருதயத்தில் தோன்றும் எல்லாத் தடைகளையும் அகற்றிவிட்டு உம்முடைய அன்பை எனக்குள் ஊற்றிவிடும்!'' (ரோமர் 5:5) என ஜெபித்து கதறுபவர்களாய் இருக்க வேண்டும்!!

தேவ அன்பு நம்மில் பூரணமாய் ததும்பி வழியும் மட்டும் இக்கதறல் நம்மோடு இருக்கட்டும்! இவ்வாறு நம்முடைய அன்பற்ற தன்மைக்காய் தீராத துயரம் கொண்டு தேவனிடத்தில் நாம் திரும்பி, "தேவனே என் இருதயத்தை உம்முடைய அன்பினால் நிறைத்துவிடும்!'' என நாம் ஜெபித்திடும் நிலைக்கு வருவதை காண்பதற்கு தேவன் எவ்வளவாய் தவித்து காத்துக் கொண்டிருக்கிறார் என்பதை விவரிப்பதற்கு வார்த்தைகளே இல்லை எனலாம்!

இந்த அன்பின் ஜீவியத்தை வாழ்ந்துவிடும்படி தீராத வாஞ்சை கொண்டவர்கள் மாத்திரமே, பரிசுத்த அவியானவர் தங்களை நிறைத்துவிடும்படியாய் எப்போதும் தங்கள் இருதயத்தை கழுவி சுத்திகரித்துக்கொள்ள ஜாக்கிரதையாய் இருக்கிறார்கள். தேவனும் இவர்களின் இதயக் கூக்குரலைக் கேட்டு அவர்களை மீண்டும் மீண்டுமாய் தம் அன்பினால் நிறைத்துக்கொண்டே இருக்கிறார்.

நம்முடைய ஆண்டவராகிய இயேசுவை இந்த தெய்வீக அன்பே சம்பூர்ணமாய் நிறைத்து அவரை சிலுவைக்கு நடத்திச் சென்றது.

ஆம், இந்த அன்பே நம் இரட்சகரை சிலுவையில் தொங்கும்படி செய்தது! அதே அன்பு நம் உள்ளத்தை நிரப்பி விட்டால்...! நம்முடைய சகோதரர்களுக்காக ஜீவனையே கொடுப்பதற்கும் ஆயத்தமான மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையாய் 'அந்த அன்பு' நம்மை மாற்றிவிடும்!!

**ஜெபம்** : *அன்பின் தகப்பனே! அருமை ஆண்டவர் இயேசுவின் மாதிரியின்படியே "சிலுவையில் நாங்கள் மரித்து'' பிறரை நேசித்திட அருள்புரியும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**இறுதிவரை ஒத்தவேஷம் தரியாத உத்தம ஊழியர்கள் வேண்டும்!**

*கர்த்தருக்கு முன்பாக ஊழியம் செய்வது தரத்தின் அடிப்படையில் மனுஷர்களுக்கு முன்பாய் ஊழியம் செய்வதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். கர்த்தருக்கு முன்பாய் ஊழியம் செய்வது பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்களால் கட்டுவதாய் முடியும்!*

*தங்கள் காலங்களில், கொஞ்சம்கூட ஒத்துப்போகாமல் தேவனுக்காய் உறுதியாய் நின்ற உத்தம சாட்சிகளால் வேதம் நிறைந்திருக்கிறது.*

*ஒத்தவேஷம் தரியாதவர்களில் நோவா ஓர் உன்னத சாட்சி. அவன் 120 வருடங்கள் பிரசங்கித்தான்! ஆனால் ஒருவர்கூட அந்தச் செய்தியில் ஆர்வம் கொள்ளவில்லை!! ஏன்? ஏனெனில், அவன் ஓர் கட்டுக்கதை கூறி கிலுகிலுப்பூட்டும் பிரசங்கி அல்ல! "நீதியைப் பிரசங்கிக்கும் பிரசங்கி!!!" (2பேதுரு 2:5).*

*ஆனால் இந்த 120-வருடங்களில் கொஞ்சமும் சோர்வடையாமல் நிலைத்து நின்றபடியால், அவன் முழுக்குடும்பமும் இரட்சிக்கப் பட்டது! ஆம், பிரசங்கியின் குடும்பத்திற்குத்தானே அவருடைய அந்தரங்க வாழ்க்கை தெரியும். அவர்கள் மனம்மாறவில்லையென்றால், அது அனேகமாய் அப்பிரசங்கியின் மாய்மாலத்தை இவர்கள் கண்டதால் ஏற்பட்ட விளைவாய்தான் இருக்க வேண்டும். ஆனால் நோவாவோ வாழ்ந்து காட்டி நீதியை பிரசங்கித்தவன்.*

*ஒருவேளை சாத்தான், நோவா நீதியைப் பிரசங்கித்த சில வருடங்களுக்குப் பின் கொஞ்சம் 'பலன்' கிட்டும்படி பிரசங்க தரத்தை குறைக்கும்படி சோதித்திருக்க கூடும். ஆனால் நோவா, தான் எவ்வளவு ஊழியம் செய்திருக்கிறேன் என்பதைப் காட்டும் ஜெபசுற்றறிக்கையை 'அமெரிக்கா' அனுப்பி பணம் பெறவேண்டிய அவசியம் இல்லையே! அவன்* ***தேவனுக்கு மாத்திரமே ஊழியக்காரன்!!*** *எனவே அவன் ஒத்தவேஷம் தரிக்க மறுத்தான். சற்றே எண்ணிபாருங்கள். 120-வருடங்கள்! ஒருவர்கூட இரட்சிக்கப் படவில்லை. ஆனால் நோவாவோ கடைசிவரை உண்மையுள்ளவனா யிருந்ததால் அவன் குடும்பம் மாத்திரம் இரட்சிக்கப்பட்டது!! இன்றும் இவ்விதமான சத்தியத்தில் உறுதியான குடும்பங்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.*

***ஜெபம் :*** *பரம தந்தையே! எங்கு பார்த்தாலும் 'மனுஷருக்காக' சத்தியத்தை இழந்து 'ஒத்தவேஷம் தரித்திடும்' ஊழியங்கள் மத்தியில், உமக்கு முன்பாய் வாழ்ந்து உத்தம ஊழியம் செய்திட எங்களுக்கு உதவும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**நொறுங்குண்ட ஜீவியமே, தெய்வீக பிரதிபலிப்பை தர முடியும்!**

"தேவ சமூகத்தை அப்பியாசித்தல்" என்ற சிறந்த புத்தகத்தின் மூலமாய் சகோதரர் லாரன்ஸ் அநேகருக்கு அறிமுகமானார். இந்த லாரன்ஸ் ஒரு கல்வி நிலையத்தின் சமையல் அறையில் வேலை செய்த ஒரு சாதாரண சகோதரன். அவர் வேலை செய்து கொண்டிருந்த சமையலறையிலிருக்கும் மற்றவர்கள் எப்போதும் வெவ்வேறு காரியங்களினிமித்தம் "கூச்சல்" உண்டுபண்ணிக் கொண்டே இருப்பார்கள். பாத்திர பண்டங்களின் இரைச்சலும் அவரைச் சுற்றி எப்போதும் இருந்து கொண்டே இருக்கும். இருப்பினும் இவைகளின் மத்தியில் அவருடைய ஆவியோ சிறிதும் பாதிக்கப்படாமலிருந்தது! தன்னுடைய தனி ஜெபத்தில் எந்த அளவு தேவ சமூகத்தை உணர்ந்தாரோ, அதே அளவு சமையலறை இரைச்சலின் மத்தியில் தேவனுடைய பிரசன்னத்தை அவரால் உணர முடிந்தது! அந்த அளவிற்கு சகோதரர் லாரன்ஸ் தன்னுடைய மனுஷீக ஆத்தும ஜீவனை வெறுத்து, தன்னுடைய ஆவியில் தேவனோடு நெருங்கிய தொடர்பு கொள்ளக் கற்றுக் கொண்டிருந்தார்!! ஆ, இது பாக்கியம்!!

இன்று அநேகர் தங்களைச் சுற்றிலும் பாத்திர ஓசைகள் போன்ற தொந்தரவிலிருந்து விடுபட்டால்தான் தேவபிரசன்னத்தை பெற்றிட முடியுமென எண்ணுகிறார்கள்! மனுஷர்களை விட்டு எவ்வளவு தூரம் விலகியிருக்கிறார்களோ அவ்வளவாய் தேவ பிரசன்னத்தை உணர முடியுமென இவர்கள் எண்ணுகிறார்கள். இது எவ்வளவு பெரிய தவறு!! தொந்தரவு, பாத்திர பண்டங்களிலோ அல்லது மற்ற ஜனத்திடமோ இல்லை. . . மாறாக, இவர்களேதான் இவர்களுக்குத் தொந்தரவாயிருக்கிறார்கள்!! பாத்திர பண்டங்களின் ஓசையிலிருந்து தேவன் நம்மை விடுவிக்கப் போவதில்லை. ஆனால் இவைகளின் மூலமாய் உண்டாகும் பிரதிபலிப்புகளிலிருந்து அவர் நம்மை நிச்சயம் விடுவிக்கமுடியும்.

நம்மைச் சுற்றிலும் வெளியே உள்ள சத்தம் எவ்வளவு இருந்தாலும், நாம் நொறுக்கப்பட்டு விட்டால், நமக்குள்ளிருந்து பிரதிபலிப்பு ஏதும் தோன்றாது (யோவான் 12:24,25). நம்முடைய வெளிப்புற கடின ஓடு ஆண்டவரால் உடைக்கப் பட்டபடியால் எந்த சத்தத்தையும் கேட்காதவர்களைப் போலவே நம்முடைய பரதிபலிப்பு இருந்திட முடியும்!

**ஜெபம்:** *அன்பின் பிதாவே! எங்கள் ஜீவியத்தின் பிரதிபலிப்பு தேவபக்திக்கு ஏற்றதாய் இருக்க வகைசெய்திடும் "சுயம் நொறுங்கும் வாழ்வை" எங்களுக்கு கற்றுத்தாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**மனுஷர்களை கவர்ச்சிக்கும் நமது சுபாவம் மாறிட வேண்டும்!**

மனுஷர்களைக் கவரும்படி இயேசுவிடம் எந்த வெளித்தோற்ற கவர்ச்சியும் இல்லாதிருந்தது. அது போலவே, இன்று நம்மிலும், நம் சபைகளிலும் காணப்பட வேண்டும். அழகு கட்டிடம், அற்புத இன்னிசை, பிரசங்க பீடத்தின் அடுக்கு மொழிப் பிரசங்கங்கள் போன்றவைகளால் நாம் ஒருபோதும் ஜனங்களை நம் மத்தியில் வரும்படி கவர்ச்சிக்கவே கூடாது (லூக்கா 16:15). தேவ பக்தியினால் மாத்திரமே ஜனங்களை நம்மண்டையில் சேர்ப்பவர்களாய் இருக்க வேண்டும். எனவே இப்போது, நம்மிடம் காணப்படுபவர்கள் அத்தனை பேரும் தேவ பக்தியில் பிரியம் கொண்டவர்கள் மாத்திரமே என்ற உறுதி கிடைத்து விட்டதே!

செவிக்கினிய இன்னிசை, தேவனுடைய ராஜ்யம் கட்டப் படுவதற்குப் பெறும் மதிப்பெண் "பூஜ்யமே!" அப்போஸ்தலர்களில் ஒருவர்கூட பாடகர்களாய் இருக்கவில்லை. ஆயினும் இவர்களே உலகத்தை தலைகீழாய் திருப்பினார்கள். இன்று கிறிஸ்தவ உலகில் காணப்படும் இன்னிசை, பரிசுத்தாவிக்கு ஒரு மாற்றாக மாறிவிட்டது! இது எத்தனை பெரிய இழப்பு! பாடுகின்ற திறமை ஓர் மனுஷீக தராதரமே ஆகும். இத்திறமையை மனந்திரும்பாத ஜனங்களும் பெற்றிருக்கிறார்கள். பாடுவதற்கோ அல்லது வாத்தியக் கருவி போடுவதற்கோ நாம் ஒருபோதும் எதிப்பாளர்கள் கிடையாது. இவைகளை தேவன் உங்களுக்குத் தந்தருளியிருப்பார் என்றால் தாராளமாய் அதைப் பிரயோகியுங்கள். "ஆனால்" வாத்தியக் கருவி இருப்பதாலும், எல்லோரும் இனிமையாய் பாடுவதாலும் நம் துதி தேவனுக்கு அதிக பிரியமாய் இருக்கும் என எண்ணுவதுதான் சுத்த மதியீனம்! தேவன் நம் இருதயத்தையே எப்போதும் காண்கிறார். அனேகம் சமயங்களில் நடப்பது என்ன தெரியுமா? எல்லோரும் இனிமையாய் பாடிக்கொண்டிருக்கும்போது, சில சகோதர-சகோதரிகள் ஒருவருக் கொருவர் தங்களுக்குள் "முறுமுறுப்பு" கொண்டு விடுகிறார்கள்! ஆ..... அந்தரங்கத்தில் தாளம் தப்புகிறதே, இதைத்தான் உண்மையாய் தேவன் கேட்கிறார்!! உங்கள் ரசனை சொட்டும் பாடல்களை ரசித்துக் கொண்டிருப்பதெல்லாம், அங்கு அமர்ந்திருக்கும் மனுஷீக சிந்தை நிறைந்த மானிடரே!!

இதைப்போலவே, இன்றைய கிறிஸ்தவ உலகில் எத்தனையோ ஜெபங்களும், பிரசங்கங்களும். . . அலங்கார வார்த்தைகளோடும், கைகளை அங்கும் இங்கும் நீட்டி செய்கையோடும் செய்கிறார்கள். எதற்கு? எல்லாம் இந்த மனுஷர்களைக் கவர்வதற்குத்தான்! தேவனுடைய பார்வையிலோ இவை அத்தனையும் அருவருப்பானவைகள்!!

**ஜெபம்** : *பரம தந்தையே! உமது பார்வைக்கு அருமையாய் வாழாமல், மனுஷர் பார்வைக்காய் வாழ்ந்த, ஊழியம் செய்த எங்களை மன்னியும்! தேவனுக்கு முன்பாகவே வாழ்ந்திட கிருபைதாரும், ஆமென்.*

## பரிசுத்தாவியானவரின் நடத்துதலுக்கு நாம் இணங்கக்கடவோம்!

பரிசுத்தாவியானவர் சர்வ ஆளுகை கொண்டவர் என்பதையும், 'பல்வேறு வழிகளில் கிரியை செய்பவர்' என்பதையுமே நாம் முதலாவதாக அறிந்திருக்க வேண்டும். இதை இயேசு குறிப்பிட்டு கூறும் போது, "காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது. . . ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும் இன்ன இடத்திற்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது! அதுபோலவே தான் ஆவியானவரும் இருக்கிறார்!!" (யோ. 3:8 - LB) எனக் கூறினார். உண்மைதான், காற்றை நாம் ஆளுகை செய்திட முடியாது! என்ன வேகத்தில் வீசவேண்டுமென்றோ அல்லது அது வீசும் திசையையோ மாற்றி அமைத்திட நம்மால் முடியாது. அதுபோலவேதான் பரிசுத்தாவியானவரும் இருக்கிறார்! இருப்பினும் இன்றைய அநேக விசுவாசிகளோ பரிசுத்தாவியானவரைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து, அவர்கள் விரும்பிடும் வழி முறைகளுக்கேற்ப அவரின் கிரியையை நடப்பிக்கலாம் என்றே எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்!!

திரித்துவத்தின் இரண்டாமவர் (ஆண்டவராகிய இயேசு) இப் பூமியில் இருந்த போதும், பரிசேயர்கள் அவரைத் தங்களின் சின்னச் சின்ன விதிகளையும், பாரம் பரியங்களையும் வைத்து அவரைக் கட்டி வைக்க முயற்சித்தார்கள். ஆனால், அவரே அவர்களின் 'குறுகலான அறைக்குள்' பூட்டப்பட மறுத்துவிட்டார்! இந்த பரிசேயர்களின் வழித் தோன்றல்களாக, இன்றும் சுவிசேஷ ஊழியங்களில் இருப்பவர்கள் திரித்துவத்தின் மூன்றாவது நபரை (பரிசுத்த ஆவியானவரை) தங்கள் கட்டிற்குள் கொண்டுவந்து, தங்கள் பாரம்பரியங்களின்படியும் மனுஷீக அறிவின்படியும் அவரைக் கொண்டு கிரியை நடப்பித்திட முயற்சிக் கிறார்கள். ஆனால் பரிசுத்தாவி யானவரோ மனுஷர்கள் வகுத்த விதிமுறைகளின் படி கிரியை செய்திட எக்காலத்தும் மறுத்துவிடுகிறார்! ஆம், அவர் எங்கே விரும்புகிறாரோ அங்கேதான் வீசுவார்! அவர் கிரியையின் சத்தத்தை நாம் கேட்கலாம், ஆனால் அவரோ நம்முடைய எந்த கட்டுப்பாட்டிற்கும் அல்லது எந்த திசை திருப்புதலுக்கும் இணங்கவே மாட்டார்!! அவர் நம்மிடத்தில் கிரியை செய்தது போலவே பிறருடைய வாழ்விலும் கிரியை செய்ய வேண்டுமென நாம் ஒருக்காலும் எதிர்பார்த்திட முடியாது! அதுபோலவே, கடந்த காலத்தில் அவர் எப்படி கிரியை செய்தாரோ அதுபோலவேதான் இப்போதும் கிரியை செய்திட வேண்டும் எனவும் நாம் எதிர்பார்த்திட முடியாது! ஆம், அவர் சர்வ ஆளுகை கொண்டவர்!

நாம் செய்திடக் கூடிய சிறந்த காரியம் என்னவென்றால், காற்று வீசும் திசையை நோக்கி நம் முகத்தைத்திருப்பி, அந்தக் காற்று எங்கு நம்மை எடுத்துச் சொல்ல விரும்புகிறதோ அதற்கு இணங்குவதேயாகும்!

**ஜெபம் :** *எங்கள் பரம தந்தையே! நாங்களாக வாழ்ந்த வாழ்க்கை வெறுமை! எம்மை ஆட்கொண்ட பரிசுத்தாவியானவரின் நடத்துதலுக்கு மகிழ்ச்சியுடன் எங்களை ஒப்புவிக்கிறோம்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**எங்கள் சரீரம் உமக்கு உகந்த பலியாகட்டும்!**

*தேவனுடைய சத்தியவசனத்தை "இஸ்ரவேலின் ஆசாரியர்கள்" தரம் குறையப்பண்ணியதினிமித்தம், கர்த்தருடைய உடன்படிக்கையைக் கெடுத்துப்போட்டார்கள் (மல்கியா 2:1-9). யூதா தன் சகோதரர் களோடு மோசமாய் நடந்தும், தங்கள் மனைவிகளுக்குத் துரோகம் செய்தும், கர்த்தருடைய மேன்மையான வழியைப் பரிசுத்தக் குலைச்ச லாக்கினார்கள் (மல்கியா 2:10-17). இவ்வாறாகவே, கிட்டத்தட்ட நாம் கேள்விப்படுகிற எல்லா விசுவாசிகளின் குழுக்களுமே, ஒருவருக் கொருவர் புறங்கூறுவதும், கோள்சொல்வதும் அவர்களிடம் சர்வ சாதாரணமாகிவிட்டது. சிந்தை வாழ்வில் (Thought Life) தங்கள் மனைவிக்கு உண்மையாய் இருக்கிறோம் என்று சாட்சி சொல்லக் கூடியவர்கள் எத்தனைக் கொஞ்சம் பேர்!! இப்படிப்பட்ட அருவருப்புகள் இன்னமும் இருதயத்தில் இருக்குமென்றால், சுவிசேஷ ஊழியத்தினாலோ, "முழுநேர ஊழியத்தினாலோ" என்ன பிரயோஜனம்? "உங்கள் பலிகளின் திரள் எனக்கு என்னத்துக்கு?" என்றல்லவா கர்த்தர் சொல்லுகிறார் (ஏசாயா 1:11). மேலும், "உங்களின் விசேஷித்த நாட்களாகிய உபவாச ஜெபங்களும், பக்திக்கூட்டங்களும் சரியான பித்தலாட்டம் (வசனம் 15). இவைகளை நான் வெறுக்கிறேன் . . . . உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள். தீமை செய்தலை விட்டு ஓயுங்கள்!" (வசனம் 16) என்பதுதான் இன்றும் ஆண்டவருடைய அறைகூவலாய் இருக்கிறது.*

*சேனைகளின் கர்த்தருடைய தூதனாய் வந்த இயேசு, சபையைச் சுத்திகரிக்கும்படி, "புடமிடுகிறவனுடைய அக்கினியைப்" போலவே வந்தார்! (மல். 3:1-3). நம்முடைய காணிக்கைகள் நீதியுள்ளதாய் இருக்கும்படி, அவர் தன் வசனத்தின் மூலமாகவும், பரிசுத்தாவியின் மூலமாகவும் வெள்ளியும் பொன்னும் புடமிட்டுச் சுத்திகரிக்கப்படுவது போல தன் அக்கினியால் நம்மை சுத்திகரிக்க விரும்புகிறார். ஆகவே, இன்றைக்கு தேவன் நம்மிடம் காணிக்கையாய் விரும்பும் பலி "நம்முடைய சரீரமே" ஆகும் (ரோமர் 12:1). ஆம், அது ஒன்றே அவருக்குப் பிரியமான பலி ஆகும்! இதன் பொருள் என்ன? நாம் நம்மை கிறிஸ்துவோடு அறைய ஒப்புக்கொடுத்து, நம்முடைய அவயவங்கள் இனி ஒருபோதும் பாவத்திற்கு அடிமையாய் இல்லாமல், பாவத்திற்கு மரித்து நீதிக்கு அடிமையாய் இருக்கும்படி அவரோடு உயிர்த்தெழுவதாகும்!! இந்த நம் சரீரத்திலேயே நம்முடைய சிலுவையை அனுதினமும் சுமந்து நாம் இயேசுவைப் பின்பற்ற வேண்டியவர்களாயிருக்கிறோம்!!*

***ஜெபம்** : பரம தகப்பனே! யாதொன்றைக் கொடுத்தும் உம்மைப் பிரியப்படுத்த இயலாது என்பதை அறிந்தேன்! என் சரீரமே..... அக்கினியினால் சுத்திகரிக்கப்பட ஜீவியமே உமக்கு உகந்த பலியாகட்டும்! ஆமென்.*

## தொடர்ச்சியான "ஆவியில் நிறைந்த ஜீவியம்" வேண்டும்!

*எபேசு கிறிஸ்தவர்களுக்கு எபேசியர் 5:18-ல் பவுல் கூறும் போது, அவர்கள் ஏற்கனவே பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெற்றிருந் தாலும், அவர்களை "ஆவியில் நிறைந்திருக்கும்படி" (Be being filled) புத்தி சொன்னார். அதனுடைய பொருள், அவர்கள் ஆவியினால்* **தொடர்ச்சியாய்** *நிரப்பப்பட வேண்டுமென்பதுதான்! தொடர்ச்சியான ஆவியின் நிறைவில் நடந்திடும் புருஷர்களும், ஸ்திரீகளுமே "ஆவியில் நிரம்பினவர்கள்" (FULL OF THE SPIRIT) என கூறப்படத் தகுதியுள்ள வர்கள். இருப்பினும், அவ்வாறு நான் நிறைந்திருப்பதை மற்றவர்கள் கூறலாமேயல்லாமல், நாம் சாட்சி சொல்லக் கூடாது! மோசேயினுடைய முகம் தேவனுடைய மகிமையினால் பிரகாசித்த போது, மற்றவர்கள் கண்டார்கள்! ஆனால், அவனோ அதை அறியாதிருந்தான்!! (யாத்திராகமம் 34:29,30).*

*ஆவியில் நிறைந்திருப்பதின் பொருள், "கிறிஸ்துவின் ஆவியினால்" நிறைந்திருப்பதேயாகும்! ஆகவே நம் ஜீவியத்தில் கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பான சுபாவத்தின் கனி நம்மிடத்தில் இருந்தால் மாத்திரமே, நாம் ஆவியில் நிறைந்திருக்கிறோமென்பதை மற்றவர்கள் அறிந்து கொள்வார்கள்! இதைக் குறித்த சாட்சியை நாம் சொல்லிடத் தேவையில்லை ... ஏனெனில், நம் ஜீவியத்தின் தொனி நம் வார்த்தைகளின் தொனியை விட அதிக சத்தமுள்ளதாகும்!*

*ஆவியில் - நிறைந்த ஜீவியத்தை தெளிவாக விளக்குவதற்கு பவுல் கலாத்தியர் 2:20-ல் கூறிய வசனத்தை விட வேறு சிறந்த விளக்கம் எதுவும் காண முடியவில்லை. அந்த வசனம் கூறும் விளக்கம் : "கிறிஸ்துவுடனே கூட சிலுவையிலறையப்பட்டடேன்; ஆயினும் இனி நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்பதேயாகும். இயேசுவின் ஜீவியத்தை நமக்குள் உருவாக்குவதேயன்றி, ஆவியில் நிறைந்திருப்பதின் நோக்கம் வேறு என்ன இருக்கிறது?*

*ஆகவே, எந்த அளவு நம் சுய-வாழ்க்கை சிலுவையிலறையப்பட்டு கிறிஸ்துவின் ஜீவியம் நமக்குள் வெளிப்பட்டிருக்கிறதோ, அந்த அளவே நாம் பரிசுத்தாவியினால் நிறைந்திருக்கும் மெய்யான அளவா யிருக்கிறது!*

***ஜெபம்*** *: அன்பின் தகப்பனே! நாள்தோறும் "ஆவியில் நிறைந்து" வாழும் ஜீவியமே, எங்களில் கிறிஸ்துவின் சாயலை கொண்டுவரும் என அறிந்தோம்.... மெய்யான அந்த திவ்ய ஜீவியத்தையே எங்களுக்கு தந்தருளும், ஆமென்.*

## முழுமையான அர்ப்பணமே உத்தம கிறிஸ்தவ ஜீவியம்!

*அப்போஸ்தலர் 27:23-ல் "என்னை ஆட்கொண்டவரும், நான் சேவிக்கிறவருமான தேவன்!" என்றே பவுல் கெம்பீரித்தார்!! இவ்வாறு தன் தேவனுக்கு ஓர் அடிமையாகவே பவுல் இருந்தார். அவர் சகலத்தையும் தன் எஜமானுக்கே அர்ப்பணித்துவிட்டார்!!*

*அர்ப்பணத்திற்கு சரியான அஸ்திபாரமாய் இருப்பதெல்லாம், "என் முழுவதும் தேவனுக்கே சொந்தம்" என உணர்ந்து அவருக்கே முதலிடம் தருவதாகும். தேவன் நமக்காக செய்த யாவற்றிற்கும் நன்றியுள்ளவர்களாய், அந்த நன்றியின் உணர்வாய் நம்மையே தேவனுக்கு அர்ப்பணிப்பதுகூட - அர்ப்பணத்திற்கு ஓர் உறுதியான அடிப்படையல்ல!*

*"கிறிஸ்துவின் அன்பே" நம்மை உந்தித் தள்ளும் நோக்கம் எனவும் கூறலாம். ஆனால், நம் ஜீவியத்தை தேவனுக்கு அர்ப்பணம் செய்வதற்கு அடிப்படையான ஆதாரமாய் இருக்க வேண்டிய தெல்லாம், "***நம்மை அவர் சிலுவையிலே கிரயமாய் கொண்டார்***" என்ற சத்தியம் மாத்திரமேயாகும். அவ்வாறு கிரயமாக்கப்பட்ட நாளிலிருந்து, இனிமேல் நாம் தேவனுக்குச் சொந்தமான உடைமையாகி விட்டோம்! இனியும் நமக்கு நம்மீது யாதொரு உரிமையுமில்லை!!*

*அந்நாட்களில் தங்கள் எஜமான்களுக்கு அடிமைகள் ஊழியம் செய்தது, பிரதானமாய் அவர்கள் தங்கள் எஜமான்களை அன்பு கூர்ந்தபடியால் அல்ல! மாறாக, அவர்கள் அந்த எஜமானுக்குரிய சொத்து!! அவ்வளவுதான்.*

*ஆகவே, ஒருவன் தன் முழு ஜீவியத்தையும் தேவனுக்கே அர்ப்பணம் செய்துவிட்டால், அது ஒன்றும் தேவனுக்காக அவன் செய்துவிட்ட விசேஷமான அனுகூலம் எதுவுமில்லை! இவ்வாறு அவன் செய்த தெல்லாம் "தேவனிடமிருந்து அவன் திருடியதையே, இப்போது அவருக்கு திரும்பக் கொடுத்திருக்கிறான்!" அவ்வளவுதான்.*

*ஒருவருடைய பணத்தை நான் திருடிய பிறகு, அதற்காக மனம் வருந்தி அதை அவரிடம் நான் திரும்பச் செலுத்தியிருந்தால், அந்த மனுஷனுக்கு நான் யாதொரு சகாயமும் செய்துவிடவில்லை! மாறாக, ஓர் மனந்திரும்பிய திருடனாகவே அவரிடம் நான் செல்வேன். நாம் தேவனிடத்திலே நம் ஜீவியத்தை அர்ப்பணிக்கும்போது, இவ்வித மனப்பான்மையோடுதான் அவரிடம் செல்ல வேண்டும்! ஏனெனில் தேவன் நம்மை விலைக்கிரயமாக வாங்கிவிட்டார்! இதை நாம் உணர்ந்து கொண்ட பிறகுதான் அர்ப்பணத்தின் சரியான அஸ்தி பாரத்தை நாம் கண்டடைய முடியும்!*

**ஜெபம் :** *எங்கள் பரம தந்தையே! கல்வாரி சிலுவையில் எங்களை கிரையமாகக் கொண்ட உமக்கு, எங்களை முற்றிலும் அர்ப்பணிப்பது அன்பின் கடமை என்பதை உணர்ந்து உம்மிடம் எங்களை சமர்ப்பிக்கிறோம்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**“உத்தம அடிமையாய்” இருப்பதே தேவனுக்கு உகந்த ஜீவியம்!**

*ஓர் அடிமை தான் நினைத்ததையெல்லாம் செய்யும்படி அங்குமிங்கும் போய் விடமாட்டான்! அதற்குப் பதிலாக, தங்கள் எஜமானிடம் வந்து “எஜமானே, நான் செய்ய வேண்டுமென்று நீர் என்ன விரும்புகிறீர்?” என்றே கேட்டு நிற்பான். எஜமான் சொன்னதை ‘அப்படியே’ செய்துவிடுவான்!!*

“ஒரு உக்கிராணக்காரனுடைய மிக முக்கியமான காரியம் யாதெனில், அவன் எஜமான் சொல்வதெதுவோ அதை மாத்திரமே செய்வான்!” *(1 கொரிந்தியர் 4:2 - LIVING BIBLE)* என்றே வேதம் கூறுகிறது.

எவ்விதமான மனிதனை தேவன் தனக்கென தேடுகிறார் என்பதையும் ஓர் பக்தன் கீழ்கண்டவாறு நேர்த்தியாகக் கூறியுள்ளார் :

*“எனக்கு காத்திருந்து விழித்திருப்பவனையே தேடுகிறேன்*
*என் கை அசைவின் அழைப்பைக் கண்டவன்*
*என் கண் இமை அசைவைக் காண்பவன்!*
*நான் தந்த வேலையை நான் விரும்பியபடி செய்பவன்,*
*நான் தராத வேலையை ஒருபோதும் செய்யாதவன்!*
*இத்தகைய தாசனை நான் கண்டுபிடித்தால்,*
*என் உள்ளம் மகிழ்ச்சியால் பொங்காதோ!*
*அவ்விததே, தன் எஜமானின் மனதைக் கற்றறிந்து*
*அவர் சித்தம் அனைத்தும் செய்திட*
*இப்பாரினில் மனிதர் யாருண்டு?”*

ஒரு சமயம் ஆண்டவர் “ஒரு மனுஷனைத் தேடினேன்” எனக் கூறினார். ஆனால், “ஒருவரையும் காணேன்” என்றே அந்த வசனம் சோகமாய் முடிந்தது! (எசேக்கியேல் 22:30). ஆம், இன்றும் தேவன் இந்த “அன்பின் - அடிமைகளையே” தேடிக் கொண்டிருக்கிறார். ஆனால் வெகு சொற்பமானவர்களையே அவரால் காண முடிகிறது!!

***ஜெபம் :*** *பரம தந்தையே! எங்கள் விருப்பத்தின்படி செய்திடும் கிரியை அல்லது ஊழியம் அல்ல! நீர் பணித்திடும் கட்டளை நிறைவேற்றும் அடிமைகளாயிருக்க கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**நம் ஒவ்வொருவருக்கும் தரப்பட்ட ஊழியத்தை நிறைவேற்ற வேண்டும்!**

*ஆவியில் நிறைந்த உழியம், தேவன் தங்களை அழைத்த "குறிப்பிட்ட" ஊழியத்தை நிறைவேற்றி முடிப்பதாகவே இருக்கும்! பவுல் கூறும் போது, "நான் ஊழியக்காரனானேன்!"என்றும்"நான் அப்போஸ்தலனாக நியமிக்கப்பட்டிருக்கிறேன்" (கொலோசெயர் 1:23,25; 1 தீமோத்தேயு 2:7) என்றும் கூறினார். பார்த்தீர்களா, இந்த பவுல் ஆணிகடாவிய தன் இரட்சகரின் கரத்தினால் நியமனம் செய்யப் பட்டாரே அல்லாமல், எந்த மனுஷனாலும் அவர் நியமனம் செய்யப்படவில்லை! ஓர் அப்போஸ்தலனாயிருக்கும் பொருட்டு, தேவன்தான் அவரை அழைத்திருந்தார்!! இந்த அழைப்போ தனக்கு 'தரப்பட்டது' என கொலோசெயர் 1:25-ல் கூறினார். அதாவது, தேவன் அவருக்குத்தந்த வரமேயல்லாமல், தானாகவே முயன்று சாதித்து சுதந்தரித்துக் கொண்ட ஒன்று அல்ல என்பதையே தெளிவுபடுத்தினார்! மேலும் இந்த வசனத்தில் "தான் பிறருக்கு ஊழியம் செய்திடும் பொருட்டே" இந்த அழைப்பை பெற்றதாகவும் கூறினார்.*

*நம் யாவருக்குமே* **ஓர் விசேஷ அழைப்பை** *தேவன் வைத்திருக்கிறார். ஆகவே, தேவன் நம்மை அழைக்காத ஒன்றிற்கு நம்மை அவர் மாற்றும்படி ஜெபிப்பது வீணான செயலேயாகும். ஏனெனில், அவனவனுக்குரிய வரத்தை பரிசுத்தாவியானவரே தீர்மானிக்கிறார்!!*

*ஓர் அப்போஸ்தலனாய் இருப்பதற்கு பவுல் அழைக்கப்பட்டார்! ஆனால் எல்லோருக்கும் இந்த அழைப்பு இல்லை!! ஆகவே, நாம் தேவனுடைய முகத்தைத்தேடி கேட்க வேண்டியதெல்லாம், "நாம் செய்திடும்படி தேவன் அழைத்த அழைப்பை நிறைவேற்றுவதற்குரிய வல்லமையே" ஆகும்! பவுல் அர்க்கிப்புக்கு புத்தி சொல்லுகையில் "நீ கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும்படி கவனமாயிருப் பாயாக!" (கொலோசெயர் 4:17) என்றே புத்தி சொன்னார்.*

*தேவன் ஒரு போதும், வட்டமான துவாரங்களில் சதுரமான மர உருளைகளை வைப்பவரல்ல! ஒரு குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட ஒரு ஸ்தலத்தில் தன் சபைக்குரிய தேவை இன்னதென்பதை தேவன் அறிந்திருக்கிறார். அதன்படியே நம் ஒவ்வொருவரையும் அவர் ஆயத்தம் செய்கிறார். நமக்கென அவர் தெரிந்துகொண்ட ஊழியமானது, நாம் செய்திட விரும்பும் ஊழியத்தைக் காட்டிலும் மிகவும் வித்தியாசமானதாய் இருக்கக்கூடும்! ஆகிலும், நாமோ அவரது அழைப்பிற்கு அடங்கியவர்களாயிருந்தால், அந்த அழைப்பை நிறைவேற்றிட நம்மை அவர் நேர்த்தியாய் ஆயத்தம் செய்துவிடுவார்!!*

**ஜெபம் :** *அன்புள்ள தகப்பனே! நீர் எங்களுக்குத் தந்த ஊழியத்தை தீர்க்கமாய் உணர்ந்திட உதவிசெய்தருளும்! அந்த ஊழியத்தை எங்கள் ஜீவ காலத்தில் நிறைவேற்றி முடித்திட கிருபை செய்தருளும், ஆமென்.*

**"பரிபூரண ஜீவன்" முழுமையும் அர்ப்பணித்த சீஷர்களுக்கே சொந்தம்!**

*பரிபூரண ஜீவனைக் கண்டடைய வகை செய்யும் ஒப்பற்ற சத்தியங்களையே ஆண்டவர் இயேசு மலைப் பிரசங்கத்தின் மூலமாய் தன் சீஷர்களுக்கு உபதேசித்தார். பெருமான் இயேசு திருவாய் மலர்ந்த அந்த சத்தியங்கள் இன்று புதிய உடன்படிக்கையில் இயேசுவின் சீஷர்களாக அவரைப் பின்தொடரும் யாவர்க்குமே சொந்தம் ஆகும்!*

*புதிய உடன்படிக்கையின் இக்காலத்தில், "ஊழியம் செய்கிறோம்" எனக் கூறுபவர்கள் யாவரும் ஆண்டவர் இயேசுவை சற்றே நோக்குவார்களாக! ஆம், இயேசுவைப் பொறுத்தமட்டில் சீஷர்களை உருவாக்காத ஓர் ஊழியத்தை அவர் சுவிசேஷ ஊழியமாகக் கொள்ளவேயில்லை. இந்த உண்மையை மலைப்பிரசங்கத்தின் துவக்க அதிகாரத்திலேயே நாம் காண்கிறோம். மலைப்பிரசங்க அதிகாரங்களுக்கு முன்பான மத்தேயு 4-ம் அதிகாரம் கடைசி இரண்டு வசனங்கள், அவர் "திரளான ஜனங்களை சொஸ்தமாக்கி அவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்" (மத்தேயு 4:23-25) எனக் கூறுகின்றது. இவ்வாறு சுவிசேஷ ஊழியத்தை செம்மையாய் துவக்கிய இயேசு, மத்தேயு 5:1-ல் தன்னைப் பின்பற்றிய "திரளான ஜனங்களைக்" கண்டபோது அவர்களுக்கு மீண்டுமாய் மனந்திரும்புதலைப் பிரசங்கிக்கவில்லை. மாறாக, அவர்கள் சீஷர்களாகும்படி உபதேசிக்கவே மலையின்மேல் ஏறினார்! அந்த மலையில் திரளான ஜனங்களல்ல.... சீஷர்களாகும்படி வாஞ்சித்தவர்கள் மாத்திரமே அவரைச் சுற்றி அமர்ந்திருந்தார்கள்! (மத். 5:1,2). விலைமதியா இவ்வுபதேசங்களின் பெருமதிப்பை உணர்ந்தவர்கள் இவர்களே யாவர்!! நீங்களும் அவர்களில் ஒருவர்தானே . . .?*

*உங்கள் பாவங்களுக்காய் நீங்கள் மனந்திரும்பி, இயேசுவிடம் வந்து உங்கள் பாவங்களையெல்லாம் அறிக்கையிட்டு, அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தால் கழுவப்பட்டு தேவனுடைய இராஜ்ஜியத்தில்* **மறுபடியும் பிறந்து** *விட்டீர்களா? (யோவான் 1:12). திருவசனத்திற்கு கீழ்ப்படிந்து தண்ணீர்* **ஞானஸ்நானமும்**, *பரிசுத்தாவியின்* **அபிஷேகமும்** *பெற்று விட்டீர்களா? (அப்.2:38) .....இருப்பினும், இன்னமும் நீங்கள் இயேசுவைப் பின்பற்றும்* **சீஷனாக**வில்லையா? *இப்போது, சற்றே அமர்ந்து, உங்கள் ஜீவகால மெல்லாம் அவரைப் பின்பற்றி வாழமுடியுமா என்பதை சிந்தித்துப் பாருங்கள்! (லூக்.14:25-33). என்ன....இயேசுவின் சீஷனாவதற்கு முடிவு செய்துவிட்டீர்களா? அதுவே அற்புதம்! அன்று, அந்த மலையில் இயேசுவைப் புடைசூழ அமர்ந்திருந்த சீஷர்களோடு நீங்களும் இப்போது அமர்ந்து விட்டீர்கள்!! பரிபூரண ஜீவனை அள்ளித்தரும் அவருடைய உபதேசங்கள் யாவும் இப்போது உங்களுக்கும் சொந்தம்!!*

**ஜெபம்** : *பரலோக பிதாவே! ஆண்டவர் இயேசுவை குருவாய் ஏற்று, அவருடைய சீடனாய் மாறிட முற்றிலும் எங்களை அர்ப்பணிக்கிறோம்! தயவாய் எங்களை பரிபூரணஜீவனுக்குள் நடத்தியருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**பரலோக இராஜ்ஜியத்தை சுதந்தரிக்கும் வழி அறிய வேண்டும்!**

"ஆவியில் ஏழ்மையாய் இருத்தல்" (மத்தேயு 5:3) என்பதற்கு உண்மையான அர்த்தம் யாது? என ஜனங்கள் அறியாத பட்சத்தில் அவர்கள் பரலோகராஜ்யத்திற்குள் ஒருக்காலும் பிரவேசித்திடவே முடியாது. இன்று எண்ணற்ற விசுவாசிகள் பல வருடங்களாகியும் பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்காமல் இருப்பதற்கு இதுவே பிரதான காரணம் ஆகும். ஆவியில் ஏழ்மை என்றால் அதற்கு உண்மையான அர்த்தம் என்ன? இந்தப் பேருண்மையை நன்றாய் விளங்கிக்கொள்ள, இவ்வுலகத்தில் ஒருவன் பொருளாதாரத்தில் ஏழையாய் இருக்கும் உதாரணத்தைசிந்தித்துப் பாருங்கள். ஒரு ஏழையான பிச்சைக்காரன் தன் அடிப்படைத் தேவைக்குரிய வீடோ, வேலையோ, உணவுப்பொருட்களோ ஆகிய எதுவுமே இல்லாதவனாய் இருக்கிறான். அவன் வீடு வீடாய் சென்று தன் பாத்திரத்தில் தனக்குரிய உணவை வாங்குகிறான். அன்று அவைகளை சாப்பிட்டு முடிந்ததும் அவனுடைய பாத்திரம் காலியாகிவிடுகிறது! எனவே மறுநாள் காலையிலும் வழக்கம் போல பிச்சை கேட்க செல்கிறான். இதுவே, அவனுடைய தினசரி வாழ்க்கை கோலமாயிருக்கிறது! பொருளா தாரத்தில் ஏழையாய் இருப்பதின் உண்மையான பொருள் இதுவே ஆகும்.

இப்போது மேற்கண்ட உதாரணத்தை ஆவிக்குரிய ஏழ்மைக்கு ஒப்பிட்டுப் பாருங்கள். ஆம், ஆவியில் ஏழ்மையாய் இருப்பதென்பது, நம்முடைய ஆவிக்குரிய தேவையை அந்தப் பிச்சைக்காரனைப்போல நாள்தோறும் உணர்வதே ஆகும். அவனைப்போலவே ஒவ்வொரு நாளும் ஆவிக்குரிய ஜீவியம் செய்ய பெலனற்றவர்களாய் . . . அவருக்கென ஊழியம் செய்வதற்குத் திராணியற்றவர்களாய், மிகுந்த தேவையோடு தேவனிடம் செல்கிறோம். இவ்வித ஆவிக்குரிய ஏழ்மையானது சுய-திருப்தி (Self-sufficient), சுய-நம்பிக்கை (Self-confident) என்பவற்றிற்கு முற்றிலும் எதிரிடையான ஜீவியமேயாகும். இயேசுவுக்கு முன்பு ஆதாமைத் தலைமையாகக்கொண்ட ஓர் பழைய வழியையே மக்கள் அறிந்திருந்தார்கள். இந்த ஆதாமின் தலைமையில் சுய-திருப்தியும், சுய-நம்பிக்கையும் பெரும் மதிப்புடையதாகும்! ஆனால் பரலோகராஜ்யத்தின் தகுதியோ தேவை நிறைந்த தரித்திரனாகவும், சுயபெலன் குன்றியவனாகவும் தேவனுக்கு முன்பாய் அங்கலாய்த்து வந்து நிற்கிறான். ஆ, இவனையே "பரலோகராஜ்யம் அத்தனையும் சுதந்தரிக்கத் தகுதியானவன்" என சத்தியவேதம் முத்திரை பதிக்கிறது! ஆவிக்குரிய தன் இயலாமையை உணர்ந்த இவனே பரலோகராஜ்ய மாளிகைக்குரிய சாவியைப் பெற்றுவிடுகிறான்!

***ஜெபம்*** : *அன்பின் தந்தையே! எங்கள் ஆவிக்குரிய ஜீவியமும், ஊழியமும் "சுய-பெலன்" அற்ற ஏழ்மையின் மூலமாகவே செழித்திட முடியும் என உணர்ந்தோம்! இவ்வழி சென்று உம் இராஜ்ஜியம் சுதந்தரிக்க அருள் செய்தருளும், ஆமென்.*

## ஆவிக்குரிய துயரமே நம்மை கிறிஸ்துவைப்போல் மாற்றும்!

"துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்" (மத். 5:4) என இயேசு குறிப்பிடும் ஜீவியமே ஓர் உண்மையான ஆவிக்குரிய தன்மையென காண்கிறோம். அப்படியானால், இவ்வுலகில் "நாம் எதற்காக துயரம் கொள்ளவேண்டும்?" என நாம் கேட்பது நல்ல கேள்வியேயாகும். இன்று ஜனங்கள் தாங்கள் அநீதியாய் நடத்தப்பட்டதற்காக துயரம் கொள்கிறார்கள். ஏதோ ஒருவகையில் பிறர் தங்களுக்கு தீங்கிழைத்ததற்காக துயரப்படுகிறார்கள். ஆனால் இயேசுவோ 'இப்படிப்பட்ட' துயரம் கொள்வதை குறிப்பிடவேயில்லை. ஏனெனில் இதுபோன்ற துயரத்தில் எவ்வித மகிழ்ச்சியும் பாக்கியமும் இல்லை! ஆவிக்குரிய பிரகாரமாய் சொல்வோமென்றால், இதுபோன்ற துயரம் பாக்கியமல்ல . . . பரிதாபமே ஆகும்!

ஜனங்களை நமக்காகப் பரிதாபம் கொள்ளச்செய்வதும், அல்லது நமக்கு நாமே சுய-அனுதாபம் (Self-pity) கொள்வதும் சாத்தானின் ஆவியே ஆகும்!!

இயேசு தனக்காக ஒருபோதும் சுய-அனுதாபம் கொண்டதே யில்லை. தனக்கு நேர்ந்த துன்பங்களுக்காக அவர் ஒரு தடவைகூட கண்ணீர்விடவேயில்லை. இந்த நல்ல இயேசுவின் மாதிரியையே நாம் யாவரும் பின்பற்றுவோமாக. ஆம், நமக்கு நேரிடும் துன்பங்களுக்காக ஒருபோதும் கண்ணீர் வடிக்காதவர்களாய் இருக்கக் கடவோம்!

பின் எவற்றிற்காக நாம் துயரம் கொள்ளவேண்டும்? நாம் துயரம்கொள்ள வேண்டியவைகளில் முதலாவது, நம் பாவத்திற்காகவே ஆகும். இப்போது எவைகளெல்லாம் பாவம் என நம்மில் கேள்வி எழக்கூடும். நான் அறிந்திருக்கிறபடி, என் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு இடையூறான அனைத்துமே பாவம்தான்! சில ஜனங்கள் கொலை, விபசாரம், களவு ஆகிய கொடிய தீமைகளையே பாவமாக எடுத்துக்கொள்கிறார்கள். தீயபழக்கங்கள் தங்கள் கிறிஸ்தவ ஜீவியத்தை அழித்துவிடும் என்பதை நிச்சயமாய் அறிந்திருக்கிறார்கள். இன்னும் சிலர் இயேசு வகுத்துத்தந்த உயர்ந்த ஜீவியதரமான அசுத்த சிந்தைகள், பண ஆசைகள் போன்றவற்றை பாவமாக எடுத்துக்கொள்கிறார்கள்.

அது சரிதான், ஆனால் இவை எல்லாவற்றிற்கும் மேலான உயர்ந்த தரம் யாதெனில், "கிறிஸ்துவைப்போல் அல்லாத ஒவ்வொன்றும்" பாவம் எனக் கூறுவதேயாகும்! இவைகளுக்காக நாள்தோறும் தங்கள் இருதயத்தில் துயரப்படுகிறவர்கள், நிச்சயமாய் கிறிஸ்துவைப்போல் மாற்றம் அடைவார்கள். இதுவே, உத்தம கிறிஸ்தவர்களுக்கு கிடைத்திடும் ஆறுதலான பாக்கியமாகும்!!

**ஜெபம் :** *எங்கள் பரலோக தந்தையே! "கிறிஸ்துவைப்போல் மாற வேண்டும்" என்ற எங்கள் தீராத துயரத்திற்கு 'பதில் தந்து' எங்களை ஆறுதல் செய்திடும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**பாவ தோல்வியில் வடித்த கண்ணீருக்கு பலன் உண்டு!**

*நாம் எந்தப் பாவங்களுக்காக துயரம் கொள்கிறோமோ அந்தப் பாவத்தின்மீது நாம் நிச்சயமாய் ஜெயமும் பெற்று விடுவோம். "பாவத்தை நான் ஜெயித்து வாழமுடியவில்லை!" எனக்கூறும் சகோதரனே, நீங்கள் அசுத்த சிந்தைகளால் தோற்கடிக்கப்பட்டு படுக்கைக்குச் சென்றபோது, துயரத்தின் மிகுதியால் நீங்கள் உங்கள் தலையணையை கண்ணீரினால் நனைத்ததுண்டோ? இவ்வித துயரத்தை நீங்கள் அடையாமல் "நான் இன்னமும் பாவத்தை ஜெயிக்க முடியவில்லையே" என நீங்கள் கூறுவதில் எவ்விதப் பொருளும் இல்லை. பாவத்தினால் ஏற்பட்ட தோல்விக்காக துயரப்படுகிறவர் களுக்கு பரிசுத்த ஆவியானவர் பலத்த அரணைப்போல் அவர்களைச் சூழ்ந்து கொண்டு, அவர்களைத் தாக்கும் குறிப்பிட்ட பாவத்தை ஜெயிப்பதற்கும் நிச்சயம் உதவிசெய்வார். இவ்வாறு யாரெல்லாம், மனுஷர்களிடம் நற்சாட்சிபெற்ற தங்கள் வெளிப்புற ஜீவியத்தில் திருப்தி கொள்ளாமல், தேவன் மாத்திரமே காணும் தங்கள் அந்தரங்க ஜீவியத்தின் தோல்விகளுக்காக துயரம் கொள்கிறார்களோ அவர்களே மெய்யான தெய்வபயம் கொண்டவர்கள். தங்கள் அந்தரங்க ஜீவியத்தின் தோல்வி, தேவனை கனவீனப்படுத்திவிடும் என துயரப்பட்டு வாழும் இவர்களே தங்கள் ஜீவியத்தில் தேவனுடைய நாமம் மகிமைப்பட வேண்டும் என்ற சீரிய நோக்கத்தைக் கொண்டவர்களாய் இருப்பார்கள்.*

*இவ்வாறு தங்கள்* **தனிப்பட்ட ஜீவியத்தில்** *தேவனுடைய நாமம் மகிமைப்பட வேண்டும் என்ற கரிசனையோடு வாழ்பவர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் வளர்ச்சியடைந்து... தேவனுடைய நாமம்* **தங்கள் தேசத்தில்** *கனவீனப்படுகிறதே என்ற துயரம்கொள்ளும் உயர்ந்த நிலைக்கு வழிநடத்தப்படுவார்கள்!*

*தன் அந்தரங்க ஜீவியத்தில் பிதாவை மகிமைப்படுத்திய இயேசு, எருசலேம் நகரத்தில் தேவனுடைய நாமம் கனவீனம் அடைந்ததற்காக கண்ணீர்விட்டார்! இயேசுவைப்போல் வளர்ச்சியடைபவர்களும், தங்கள் தேசத்தில் தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுவதின் நிமித்தம் வியாகுலமடைந்து கண்ணீரோடு ஜெபிப்பவர்களாய் மாறிவிடுவார்கள். எப்படியாகிலும் தேவனுடைய நாமம் தங்கள் தேசத்தில் மகிமைப் படுவதைக் காண்பதற்கு இவர்களின் உள்ளம் அவ்வளவாய் இயேசுவைப்போல் தவித்து நிற்கும்! இவ்வித உயர்ந்த நிலைக்கு இன்று அநேகர் இன்னமும் நம் மத்தியில் எழும்பவில்லை!!*

***ஜெபம் :*** *அன்பின் பிதாவே! எங்கள் பாவ-தோல்வியில் இயேசுவைப்போல் கண்ணீர் விட்டு ஜெபிக்காத எங்கள் மெத்தனத்தை மன்னியும்! கண்ணீரோடு ஜெபித்து, பாவத்தை ஜெயித்துவாழ கிருபைதாரும், ஆமென்.*

## பூமிக்குரிய வாக்குவாதம் இல்லாத ஜீவியம் வேண்டும்!

இன்று பூமியில் ஜனங்கள் எதனிமித்தம் வாக்குவாதம் செய்கிறார்கள்? பொதுவாய் "பூமிக்குரியவைகளுக்காகவே" வாக்கு வாதம் செய்கிறார்கள். தங்கள் உரிமை, தங்கள் பெயர் பிரஸ்தாபம், சொத்துக்கள் . . . ஆகிய பூமிக்குரியவைகளைத் தங்களுக்கென சுதந்தரிப்பதற்காகவே வாக்குவாதம் செய்கிறார்கள். உதாரணமாய், சொத்திற்காக வாக்குவாதம் செய்பவர்கள் தங்களுக்கென இவ்வுலகில் அதிகமாக "பூமி வேண்டும்" என்ற குறிக்கோளையே வைத்திருக் கிறார்கள். இதற்காக வழக்கு மன்றங்களுக்கும் ஏறுகிறார்கள். ஆனால் இயேசு கற்பிக்கும் ஆவியின் பிரமாணங்களோ இவ் வழிமுறைக்கு முற்றிலும் முரணாகவே உள்ளது.

ஆச்சரியமான இந்த வழிமுறை யாதெனில், யாரெல்லாம் தங்கள் உரிமைகளை இழப்பதற்கு விட்டுத்தருகிறார்களோ, யாரெல்லாம் வாக்குவாதம்செய்து போராட மறுத்து நிற்கிறார்களோ . . . அவர்களே "பூமியைச் சுதந்தரிப்பார்கள்!" எனக் கூறினார் (மத்தேயு 5:5).

தேவன் கிரியைசெய்யும் இந்த அற்புத நிகழ்ச்சிக்கு பழைய ஏற்பாட்டில் ஆபிரகாம், லோத்தின் வாழ்க்கை ஓர் அருமையான பாடமாய் இருக்கிறது. ஆதியாகமம் 13-ம் அதிகாரத்தில், ஆபிரகாமின் மந்தைமேய்ப்பருக்கும் லோத்தின் மந்தை மேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. ஏனெனில் மந்தையை மேய்ப்பதற்கு இருவருக்கும் ஒரேபூமி போதுமானதாக இல்லாதபடியால், அவர்களுக்குள் வாக்குவாதம் மூண்டது. இச்சூழ்நிலையில் ஆபிரகாம் தன் மருமகனான லோத்திடம் நடந்துகொண்ட விதமோ, ஓர் ஆச்சரியமான சாந்தகுணத்தின் வழியாய் இருந்தது. ஆபிரகாம், லோத்தை நோக்கி: "நமக்குள் வாக்குவாதம் வேண்டாம்" எனக்கூறி முழு பூமியையும் லோத்திற்கு முன்பாக வைத்து, அவன் விரும்பிய பூமியைச் சுதந்தரிப்பதற்கு முதல் சந்தர்ப்பத்தை லோத்திற்கே கொடுத்து விட்டான்! இப்படியெல்லாம் ஆபிரகாம் செய்யவேண்டியது இல்லை. ஏனெனில் உண்மைபூர்வமாக ஆபிரகாமைத்தான் தேவன் கானானுக்கு அழைத்திருந்தார். லோத்தைவிட வயது முதிர்ந்தவரும், அவனுடைய மாமாவாகவும் இருந்தார். ஆகவே பூமியைச் சுதந்தரிப்பதற்கு தெரிந்து கொள்ளவேண்டிய முதல் சந்தர்ப்பம் ஆபிரகாமுக்குத்தான் உண்டு. ஆனால் இந்த நல்ல ஆபிரகாம் தன் உரிமையை விட்டுக்கொடுத்து விட்டார். இவ்வித ஜீவியமே சாந்தகுணமாய் இருப்பதின் பொருளாகும். சகலமும் இழந்து நின்ற ஆபிரகாமிற்கு தேவன் தரிசனமாகி, நான்கு திசைகளையும் பார்க்கும்படி கூறினார்! அவன்கண்ட அத்தனை பூமியும் அவனுக்கு சுதந்தரம் என கூறிவிட்டார்!! ஆம், சாந்த குணமுள்ளவர்கள் பூமியை சுதந்தரிப்பார்கள்!!

**ஜெபம்** : *அன்புள்ள தகப்பனே! இப்பூமியை பற்றிக்கொண்டு வாழ்ந்த எங்களை மன்னித்து, இம்மண்ணுக்குரியவைகளை இழக்கும் மனதுடைய "சாந்த குணத்தை" எங்களுக்கு தாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**தேவபக்தியான வாழ்க்கை, அதன்மீது தாகம் கொண்டவர்களுக்கே சொந்தம்!**

**யோ**வான் 7:37-ல் ஒருவன் பரிசுத்தாவியின் நிறைவைப் பெறும்பொருட்டு இயேசு சத்தமிட்டு, "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்" எனக்கூறினார் என வாசிக்கிறோம். ஆம், தாகமில்லாத ஒருவன் இயேசுவினிடத்தில் கிட்டிச்சேரவே முடியாது. ஒருவன் அவரிடத்தில் நெருங்கிச் சேர்ந்திட இவ்வுலகத்தின் எந்த தகுதியும் அவனுக்குத் தேவையேயில்லை. ஒருவேளை இவ்வுலகத்தில் நீங்கள் ஓர் மிக அற்பமான கொடிய பாவியாகக்கூட இருக்கலாம். ஆனால் நீங்கள் இயேசுவிடம் கிட்டிச்சேரும்படி தீராத தாகம் கொண்டிருந்தால், அவரை நீங்கள் கிட்டிச் சேர்ந்துவிடுவீர்கள்! எதற்குரிய தாகம்? சுகம் வேண்டும், பணம் வேண்டும், பிள்ளைகள் படித்து உயரவேண்டும், பிள்ளைகளுக்கு நல்ல வாழ்க்கைத்தரம் அமையவேண்டும், நல்ல உத்தியோகம் கிடைக்க வேண்டும் . . . போன்ற தாகமா? இதுபோன்ற உலக காரியங்களுக்காக தாகம் கொண்டவர்கள் இப்பூமியில் ஏராளமாய் இருக்கிறார்கள். இவர்களைப் பார்த்து, "என்னிடத்தில் வாருங்கள்!" என இயேசு ஒருக்காலும் அழைப்பதேயில்லை. மாறாக, தன் ஜீவியத்தில் பரிசுத்தத்தையும், நீதியையும் கொண்டுவரும் பரிசுத்தாவியின் வல்லமைக்காய் தாகம் கொண்டவர்களையே இயேசு அழைத்தார். இவ்வாறு, இன்று எத்தனைபேர் ஓர் நேர்மையான நீதியுள்ள வாழ்க்கைக்கு தாகம் கொண்டிருக்கிறார்கள்? எத்தனைபேர் தன் வருமான வரியை நேர்மையாகக் கட்டவேண்டும் என தாகம் கொண்டிருக்கிறார்கள்? எத்தனைபேர் எந்த மனுஷரிடத்திலும் கடன்படாத ஜீவியத்திற்காய் தாகம் கொண்டிருக்கிறார்கள்? எத்தனைபேர் பண விஷயத்தில் நூற்றுக்கு நூறு நேர்மையாய் இருக்கவேண்டுமென தாகம் கொண்டிருக்கிறார்கள்? எத்தனைபேர் தங்கள் பேச்சினாலோ அல்லது செயலினாலோ ஒருவருக்குக்கூட தீங்கு செய்யக்கூடாதென தாகம் கொண்டிருக்கிறார்கள்? இவ்வாறெல்லாம் ஓர் மனிதனுடைய ஜீவியத்தில் பசிதாகம் ஏற்பட்டுவிட்டால் அவன் பாக்கியவான்! அவன் நிச்சயமாய் திருப்தி அடைவான்!! (மத்.5:6).

நாம் தேவநீதியை அடைவதற்கு இந்தவசனமே பரலோக ராஜ்யத்தின் சூத்திரமாகும்! ஓர் நேர் விகிதாச்சாரத்தைப்போல, நாம் எவ்வளவு தாகம் கொண்டிருக்கிறோமோ அந்தளவு மாத்திரமே தேவ நீதியையும் சுதந்தரித்திட முடியும். ஆகவே, நீங்கள் எவ்வளவு பரிசுத்தமாய் வாழ்கிறீர்கள்? என்ற கேள்விக்குரிய விடை, பரிசுத்த ஜீவியத்திற்கு நீங்கள் எவ்வளவு தாகம் கொண்டிருக்கிறீர்கள் என்ற கேள்வியைப் பொருத்ததேயாகும்!

***ஜெபம்*** *: பரம பிதாவே! எல்லா மானிடர்களைப்போல் இப்பூமிக்குரிய தாகத்தில் மாய்ந்துவிடாமல், உமது பரிசுத்தத்திலும், நீதியிலும் பசிதாகம் கொண்டு "திருப்தி" அடைந்திட அருள்புரியும், ஆமென்.*

### தேவ பக்தியின் தாகம் நாளுக்குநாள் பெருகிட வேண்டும்!

ஓர் உயர்ந்த தேவபக்தியான வாழ்க்கையை பவுலால் எங்ஙனம் வாழமுடிந்தது என்ற இரகசியத்தை பிலிப்பியர் 3-ம் அதிகாரத்தில் நாம் காணமுடிகின்றது, "நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாச மூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாய் இருப்பதற்கு... ஆசையாய்த் தொடருகிறேன்" என்ற அவரது வாஞ்சையே காரணமாகும்! இதுவே பவுல் ஓர் உன்னத கிறிஸ்தவஜீவியம் செய்வதற்குரிய இரகசியமாயிருந்தது. நியாயப் பிரமாணத்தினால் வரும் நீதி ஒரு மனிதன் வெளியரங்கமான பரிசுத்தம் அடைவதற்கு மட்டுமே வழிநடத்த முடிந்தது. வெளியரங்கமான கொலை செய்யாதிருக்க நியாயப்பிரமாணம் நடத்தியது. அதேபோல் வெளியரங்கமான விபசாரம் செய்யாதிருக்கவும் நியாயப்பிரமாணம் நடத்தியது. ஆனால் பவுலோ இவைகளில் திருப்தி காணவில்லை. மாறாக கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் வருகிற "தேவனுடைய நீதியையே"பெற்றுவிட பவுல் வாஞ்சித்தார். இயேசுகிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையின் நீதியோ, ஒருவன் தன் உள்ளான அந்தரங்க ஜீவியத்திலேயே விபசாரம் செய்யாதிருக்க வேண்டும்! தன் இருதயத்தில் கோபம் கொள்ளாதிருக்கவும் தன் சிந்தையிலேயே தூய்மையாய் இருப்பதற்கும் புதிய உடன்படிக்கையின் நீதி ஒருவனை நடத்தமுடிந்தது. இவ்வாறு தேவனிடமிருந்தே புறப்பட்டுவரும் நீதியை அடைந்துவிடுவதற்கு பவுல் தீராத தாகம்கொண்டார். இந்த மேன்மையான தேவநீதியோடு நியாயப்பிரமாணத்தின் நீதியை பவுல் ஒப்பிட்டுப் பார்த்து அவைகளை வெறும் "குப்பை" என மதிப்பிட்டார்! (வசனம் 11). ஆ, இது அன்றோ மெய்யான தாகம்!! நம் இருதயத்திலேயே பரிசுத்தத்தை கொண்டுவரும் புதிய உடன்படிக்கையின் நீதியின் மேன்மையைக் கண்டு கொண்ட வர்கள் மாத்திரமே பவுலைப்போன்ற தாகம் கொண்டிடமுடியும்.

நாம் முதலில் கிறிஸ்துவண்டை வரும்போது நம்முடைய இருதயத்தின் தாகம் ஓர் சிறிய குவளை அளவாகவே இருந்தது. அதை தேவன் நிரப்பினார்! இப்போது நம் இருதயத்தின் அளவு விரிவடைந்து ஓர் 'பக்கெட்' அளவு தாகம் நம்மில் உண்டாகிறது. அதையும் தேவன் நிரப்புகிறார்!! படிப்படியாக... இத்தாகம் வளர்ந்து, நதியாக . . . பல கிளைகளுள்ள நதியாக தாகம் உண்டாகி . . . நமக்குள் ஜீவதண்ணீர் நதிகள் புரண்டு ஓடிவிடும்!! இவ்வாறு தாகத்தோடு இயேசுவினிடத்தில் வருகின்றவர்களின் ஜீவியம், இயேசு குறிப்பிட்டதுபோல் "அவன் உள்ளத்திலிருந்து ஜீவதண்ணீருள்ள நதிகள் ஓடும்!" என்ற நிலையை அடைந்து விடும் என்பதில் சந்தேகமேயில்லை!!

**ஜெபம் :** *பரிசுத்த பிதாவே! தேவ பக்தியின் தாகம் பவுலைப்போல் "தீராத வாஞ்சையாய்" இருந்திட கிருபைதாரும்! வாஞ்சையின் அளவு நாளுக்கு நாள் பெருகிட தயை புரியும்! ஆமென்.*

## எந்த சூழ்நிலையிலும் ஸ்தோத்திரம் நிறைந்த வாழ்க்கை வேண்டும்!

ஓர் திருப்தியான வாழ்க்கையை வாழ்ந்த பவுல் "நான் எந்த நிலைமையில் இருந்தாலும், மனரம்மியமாயிருக்க கற்றுக் கொண்டேன்"(பிலிப்பியர் 4:11) எனக் கூறினார். ஆம், இதுபோன்ற திருப்தியான ஜீவியம் தன்னோடுகூட எப்போதும் நிறைவான சந்தோஷத்தையும் சமாதானத்தையும் நிச்சயமாய் கொண்டுவரும்!! போதுமென்ற திருப்தியில் வாழ்ந்த பவுல், அது அளித்த சந்தோஷத்தையும் சமாதானத்தையும், தான் நிறைவாய் அடைந்திருப்பதாகவே 4-ம் 7-ம் வசனங்களில் குறிப்பிட்டார்.

இவ்வித திருப்தியான வாழ்க்கையை கண்டவர்கள் மாத்திரமே, தேவன் தங்களோடு இடைபடும் எல்லா சூழ்நிலைகளுக்காகவும் ஸ்தோத்திரம் செலுத்திடவும் முடியும்! மேலும் தங்கள் வாழ்க்கையில் குறுக்கிடும் ஒவ்வொன்றையும் தங்களுடைய நன்மைக்காகவே கிரியை செய்திடும் தேவனுடைய சர்வ வல்லமையை விசுவாசிப்பவர்கள் மாத்திரமே, எந்த சூழ்நிலைகளிலும் மனதிருப்தியாக இருப்பார்கள்! இவர்கள் மாத்திரமே, ஆபகூக் போல, தங்கள் தோட்டத்தில் விளைச்சல் இல்லாது போனாலும் ஆண்டவரை ஸ்தோத்தரிப்பார்கள்! அல்லது, தங்களுடைய ஆட்டு மந்தையில் ஒரு சில ஆடுகள் மரித்துப்போனாலும் ஆண்டவரை ஸ்தோத்தரிப்பார்கள்! அல்லது அதிகமான பொருளாதார நஷ்டம் ஏற்பட்டாலும், இன்னும் இதுபோன்ற 'எந்த' சூழ்நிலையானாலும் ஆண்டவரை ஸ்தோத் தரிப்பார்கள்!! (ஆபகூக் 3:17,18).

பரிசுத்த ஆவியினால் எப்போதும் நிறைந்திருக்கும் ஒருவனின் இருதயம் மாத்திரமே, கர்த்தரைத் துதிக்கும் ஸ்தோத்திரத்தினால் வழிந்தோடும் என எபேசியர் 5:18-20 வசனங்கள் நமக்குப் போதிக்கின்றன. சிறைச்சாலையில் தன்னுடைய கால்கள் தொழு மரத்தில் கட்டப்பட்டு இருந்தபோதுகூட, அப்போஸ் தலனாகிய பவுல் தேவனை முழுமனதாய் துதித்திட முடிந்தது (அப்போஸ்தலர் 16:25). அக்கொடிய சூழ்நிலையிலும், யாதொன்றைக் குறித்த குறை சொல்லுதலும் இல்லாமல் "பூரண திருப்தி கொண்டவராகவே" பவுல் இருந்ததை நாம் காண்கிறோம்.

ஒரு கிறிஸ்தவனிடத்தில் முறுமுறுக்கும் ஜீவியம் காணப்பட்டால், அவன் ஆவியில் நிறைந்து வாழும் ஜீவயம் கொண்டவன் அல்லவே அல்ல! அப்படிப்பட்டவர்கள் வனாந்திரத்தில் தேவனுக்கு முன்பாய் முறுமுறுத்த இஸ்ரவேலர்களைப்போல் இருக்கிறபடியால், இன்னமும் வாக்குத்தத்தமாகிய ஜெய வாழ்க்கைக்குள் பிரவேசிக்க முடியாதவர்களாகவே தேங்கி நின்றுவிடுகிறார்கள்!!

**ஜெபம்** : பரம தந்தையே! வெவ்வேறான சூழ்நிலைகளில், ஸ்தோத்திரத்தோடுகூடிய திருப்தியான வாழ்க்கையை நாங்கள் கற்றுக்கொள்ள உதவிபுரியும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.

**உபதேசமல்ல ''பரிசுத்தமாகுதலின் விருப்பமே'' நம்மை மாற்றிடும்!**

பரிசுத்தமாகுதலைக் குறித்த என்ன உபதேசத்தை நாம் பெற்றிருக்கிறோம் என்பது ஒரு பொருட்டே அல்ல! மெய்யான பரிசுத்தம், தன் முழு இருதயத்தோடு அதை நாடும் ஒருவருக்கு கிட்டுமேயல்லாமல், தன் தலையில் சரியான போதகத்தைப் பெற்றிருப் பவனுக்கு அந்த மெய் பரிசுத்தம் கிட்டுவதில்லை!

உதாரணமாய், கடந்த நூற்றாண்டுகளில் வாழ்ந்த பரிசுத்தவான்கள் கொண்டிருந்த உபதேசங்களை இங்கு மாதிரியாய் கூறிட முடியும். பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஜான் ஃப்லெட்சர் என்ற பரிசுத்தவான் கொண்டிருந்த பரிசுத்தமாகுதலின் உபதேசத்தின்படி : “தாங்கள் ஏற்கனவே முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டதாக விசுவாசிப்பதும், தங்களிடம் உள்ள அறியாத பாவங்களையோ அவைகள் யாவும் “தவறுகள்தான்” (MISTAKES) என கூறுகிறவர்களாயும்” இருந்தார்கள்.

இதற்கு மாறாக டேவிட் ப்ரைய்னார்டு போன்ற பக்தர்கள் வாழ்ந்தகாலங்களில் “அறியாத பாவங்களும் பாவங்கள்தான் என கூறுகிறவர்களாயும், இன்னமும் தங்களிடமிருக்கும் பாவத்தின் தன்மை களுக்காகவும், தேவன்மீது கொண்ட தியானத்தின் குறைச்சலுக் காகவும், தங்கள் ஜீவகாலமெல்லாம் துயரம் கொள்ளும்” உபதேசத்தைக் கொண்டவர்களாய் இருந்தார்கள்! இந்த இரு குழுவினரும் தங்கள் ஜீவியத்தின் பரிசுத்தத்தை மதிப்பீடு செய்வதில் முற்றிலும் வேறுபட்டிருந்தாலும், தேவனுடைய பார்வையில் இந்த இரு குழுவினரின் பரிசுத்தமும் சமமாகவே காணப்பட்டது!!

பரிசுத்தமாகுதலின் உபதேசத்தை விளங்கிக் கொண்ட இவர்களின் வித்தியாசமான அணுகுமுறைகள், அவரவர் இருதயத்தின் பரிசுத்தத்தை அவரவர்களுக்குரிய வித்தியாசமான கோணத்தில் சீர்தூக்கிப் பார்க்கிறவர்களாகவே இருந்தார்கள்! ஆகவே, பரிசுத்தமாகுதலின் இரகசியம், கிரேக்க வார்த்தைகளின் அர்த்தத்தை விளங்கிக் கொள்வதாலோ அல்லது புதிய ஏற்பாட்டின் போதகங்களை சரியான அணுகுறையில் கற்றுக்கொண்டதாலே வருவதில்லை!

மாறாக, ஓர் முழு இருதயமான வாஞ்சையையும். . . தேவனைப் பிரியப்படுத்துவதற்கு கொண்ட தீராத விருப்பத்தையும் வைத்தே மெய்யான பரிசுத்தத்தை நாம் கண்டடைந்திட முடியும்!

ஏனெனில், நம்முடைய இருதயத்தின் வாஞ்சையை காண்பதற்கே தேவன் ஆர்வமாய் இருக்கிறார். . . நம் மூளையில் உள்ள அறிவை காண்பதில் அவருக்கு எந்த பரவசமும் இருப்பதில்லை!

***ஜெபம் :*** *பரலோக பிதாவே! பரிசுத்தத்தைக் குறித்து அறிந்து கொண்டது எங்கள் மேன்மையல்ல! வாஞ்சையோடு அதை அடைந்திடும் வாழ்வை எங்களுக்குத் தாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**நாம் சிலுவையில் அறையப்படும் வாழ்வே, ஆவியில் நிறைந்த வாழ்வு!**

*"சிலுவையில் அறையப்பட்டு வாழும்" வாழ்க்கையே ஆவியில் நிறைந்து வாழும் ஜீவியமாயிருக்கிறது. "கிறிஸ்துவுடனேகூட நான் சிலுவையில் அறையப்பட்டேன்" (கலாத்தியர் 2:20) என்பதே பவுலின் ஜீவியமாயிருந்தது! சிலுவையின் பாதையே ஆவியின் நிறைவான பாதையாகும்!! இயேசுவை சிலுவைக்கு நடத்திச் சென்றதைப் போலவே, நம்மையும் ஆவியானவர் சிலுவை நோக்கியே எப்போதும் நம்மை நடத்திச் செல்வார்! ஏனெனில், ஆவியானவரும் சிலுவையும், பிரிக்க முடியாததொன்றாகவே எப்போதும் செயல்படுகிறது!!*

*பெலஹீனத்திற்கும், அவமானத்திற்கும், மரணத்திற்குமே சிலுவை அடையாளமாயிருக்கிறது! நாம் தியானிக்கும் அப்போஸ்தலனாகிய பவுலின் ஜீவியத்திலும் அவ்விதமே பயமும், கலக்கமும், வருத்தங்களும், கண்ணீர்களும் நிறைந்த வாழ்க்கையையே நாம் காண்கிறோம் (2 கொரிந்தியர் 1:8; 4:8; 6:10; 7:5). ஓர் பைத்தியத்தைப்போலவும், மதிமயங்கியவனைப்போலவுமே பவுல் ஜனங்களால் கருதப்பட்டார். அநேக சமயங்களில் குப்பையைப்போலவும், எல்லாராலும் துடைத்துப் போடுகிற அழுக்கைப்போலவும் பவுல் நடத்தப்பட்டார் (1 கொரிந்தியர் 4:13). இது போன்ற இழிவான வாழ்க்கையிலிருந்து மீட்கப்படுவதல்ல ஆவியில் நிறைந்து வாழும் வாழ்க்கை! மாறாக, ஆவியில் நிறைந்து வாழும் மனிதனோ, தேவன் தன்னை மேலும் மேலும் தாழ்மைப்படும் வாழ்க்கைக்குள் நடத்தி, முடிவில் தன் சுய-வாழ்க்கைக்கு அவர் மரணத்தைக் கொண்டுவருவதையே காண்பான்!!*

*ஆவியில் நிறைந்த மனிதன் மனுஷருடைய புகழ்ச்சியை சற்றேனும் பொருட்படுத்தவே மாட்டான்! அவன், தனக்கு ஏற்படும் இழிவுகளையும், நிந்தைகளையும் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்வான்!! அவன் மேன்மை பாராட்டுவதெல்லாம் "சிலுவை ஒன்றேயல்லாமல்" வேறு எதையும் குறித்து மேன்மைபாராட்டிட மாட்டான்!! (கலாத்தியர் 6:14). தன் வரங்களிலும் அல்லது திறமைகளிலும் அல்லது தான் பெற்ற ஆழ்ந்த ஜீவியத்தின் அனுபவங்களிலும்கூட அவன் மேன்மை பாராட்டவே மாட்டான்! ஆம், சிலுவையில் தன் சுய-வாழ்க்கைக்குத்* **தொடர்ச்சியாக மரிப்பது** *ஒன்றைக்குறித்தே பவுல் மேன்மை பாராட்டினார்!!*

*தெய்வீக அன்பின் சின்னமாய் திகழ்வதும் இந்த சிலுவைதான்! தேவன் மனுஷர்மீது கொண்டிருந்த தன் அன்பை வெளிப்படுத்திட, இந்த சிலுவையிலேதான் இயேசு மனுஷருக்காய் மரிக்க வேண்டியிருந்தது!!*

***ஜெபம் :*** *பரம பிதாவே! சூழ்நிலைகளில் எங்களைத் தாழ்த்தி, மெய்யாகவே சிலுவையில் அறையப்படும் வாழ்வே எங்களின் மேன்மையாய் இருந்திட உதவிபுரியும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## பரிசுத்தாவி வழங்கும் ''நடைமுறை'' சாட்சி வாழ்க்கை வேண்டும்!

*சீனதேசத்தில் வாழ்ந்த இரண்டு கிறிஸ்தவ விவசாயிகளைக் குறித்து வாட்ச்மேன் நீ கூறுவதுண்டு. இவர்களுடைய தோட்டம் ஓர் மலைச்சாரலின் நடுவே இருந்தது. ஒவ்வொருநாள் அதிகாலையிலும் இந்த இரண்டு விவசாயிகளும் மலைக்குச் சென்று தங்கள் தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவார்கள். மலைச்சாரலிலிருந்த அவர்களின் தோட்டத்திற்கு கீழாக, வேறொருவருடைய தோட்டமும் இருந்தது! ஒருநாள் இரவில், கீழேயிருந்த அந்த விவசாயி, மேலேயிருக்கும் இந்த இரண்டு கிறிஸ்தவ விவசாயிகளின் தோட்டத்துக் கால்வாய்களில் பெரிய துவாரத்தைப் போட்டுவிட்டு சென்றுவிட்டான். அதிகாலையில் எழுந்து, மேலே தங்கள் தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சிய கிறிஸ்தவ விவசாயிகளின் தண்ணீர் யாவும், கால்வாய் துவாரம் வழியாக, கீழ் தோட்டத்திற்குச் சென்று பாய்ந்துவிட்டது! இவ்வாறு தொடர்ந்து ஏழு இரவுகளிலும் கீழ் தோட்டத்து விவசாயி செய்துகொண்டிருந்தான்!*

*இந்த இரண்டு கிறிஸ்தவ விவசாயிகளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை! முடிவாக, விவசாயிகளாயிருக்கும் தாங்கள் அந்த கீழ் உள்ள விவசாயிக்குத் தங்களிடமுள்ள* **கிறிஸ்துவின் அன்பைக்** *காட்டுவதென்று தீர்மானம் செய்துகொண்டார்கள்! அதன்படி, அடுத்தநாள் அதிகாலையில் எழுந்து, 'முதலாவது' கீழ் விவசாயின் தோட்டத்திற்கே தண்ணீர் பாய்சினார்கள்! 'பின்பு' தங்கள் தோட்டடத்திற்கு தண்ணீர் பாய்ச்சினார்கள்! இவ்வாறாக, தங்களுக்கும் அந்த கீழ் விவசாயிக்கும் நடுவாக* **சிலுவையை** *வைத்து, தங்கள் சொந்த உரிமைகளுக்கு முற்றிலுமாய் மரித்துவிட்டார்கள்!! இவ்விதமாய் தொடர்ந்து இந்த சகோதரர்கள் இரண்டு அல்லது மூன்று நாட்கள் செய்ததும், கீழுள்ள கிறிஸ்தவரல்லாத அந்த விவசாயி, இந்த கிறிஸ்தவ சகோதரர்களிடம் மன்னிப்பு கேட்கும்படி வந்து நின்று,''உங்களின் சீரிய நடக்கைகள்தான் கிறிஸ்தவம் என்றால், அந்த கிறிஸ்தவத்தை நானும் அறியும்படி விரும்புகிறேன்!'' என பணிவுடன் கூறினார்.*

*பரிசுத்தாவி சீஷர்கள் மீது வந்திறங்கும்போது, அவர்கள் பெலனடைந்து (POWER) தனக்கு சாட்சிகளாயிருப்பார்கள் (அப்.1:8) என இயேசு கூறினார். ஆம், நடைமுறை வாழ்க்கையில் கிறிஸ்துவின் அன்பைக் காட்டிட ''சிலுவைக்கே'' பரிசுத்தாவியானவர் நம்மை நாள்தோறும் நடத்திட வேண்டும்!!*

***ஜெபம்*** *: அன்பின் பரலோக தந்தையே! நடைமுறை ஜீவியத்தில் உமக்கு சாட்சியாய் வாழ்ந்திடவே உம் பரிசுத்தாவியின் வல்லமையை நாள்தோறும் நாடுகிறோம்! தயவாய் எம்மை நிறைத்து 'சிலுவையின் பாதையில்' நடத்தியருளும், ஆமென்.*

**'இலக்கை' அடையும்வரை ஓடிட வேண்டும்!**

**தா**ன் மனந்திரும்பி 30 ஆண்டுகளுக்குப் பிறகும், தன் ஜீவியத்தின் முடிவை நெருங்கிய அந்த வேளையிலும் "இன்னமும் ஆசையாய்த் தொடருகிறேன்" என்றே பவுல் கூறினார் (பிலிப்பியர் 3:12-14). ஆம்,அவர் 'இன்னமும்' அடைந்திடவில்லை! தன் ஜீவியத்தில் தேவனுடைய ஆவியின் அதிகமான நிறைவையே இன்னமும் பவுல் வாஞ்சித்தார். அந்த இலக்கை எப்படியும் அடைந்துவிடும்படி தன் ஆவிக்குரிய ஒவ்வொரு தசைநார்களையும் பயிற்றுவித்தார்.

"நான் முற்றிலும் தேறினவன் அல்ல!" என பிலிப்பியர் 3:12-ல் பவுல் கூறினார். ஆனால் 15-ம் வசனத்திலோ "நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்த சிந்தையாயிருக்கக்கடவோம்" என நேருக்கு மாறாய் கூறுவது போல் காண்கிறோம். ஆவியில் நிறைந்து வாழும் வாழ்க்கை இவ்வித எதிர்மறை அர்த்தம் கொண்டதாகவே எப்போதும் இருக்கிறது, "தேறினேன், ஆனால். . . இன்னமும் தேறவில்லை!" இதன் நேரடி பொருள் என்னவெனில், "நிறைந்திருக்கிறேன், ஆனால். . . இன்னும் அதிகமாய் நிறைந்திடவே வாஞ்சிக்கிறேன்" என்பதுதான்!

ஆவியில் நிறைந்த ஜீவியம், ஓர் வரையறை கணக்கிற்கு உட்பட்ட ஜீவியம் அல்லவே அல்ல! ஆம், "நிறைந்த ஜீவியம்" ஒரு அளவிற்குமேல் இன்னும் அதிக அளவு நிறைவதற்கு வாஞ்சை கொண்ட ஜீவியமாகவே இருக்கிறது!! இதை வேதாகமம் குறிப்பிடும்போது, "பரிசுத்தாவியானவர் நம்மை மகிமையின்மேல் மகிமை அடையும்படி நடத்துகிறார்!" என்றே கூறுகிறது (2 கொரி. 3:18). ஒரு கப்பில் தண்ணீர் நிறைந்திருக்கலாம். . . அதேபோல் ஓர் பக்கெட்டிலும் நிறைந்திருக்க முடியும்... இன்னமும், ஒரு குளத்திலும் தண்ணீர் நிறைந்திருக்க முடியும். . . இன்னும் அதிகமாய், ஒரு ஆற்றிலும் தண்ணீர் நிறைந்திருக்க முடியும்! ஒரு கப் நிறைந்திருப்பதற்கும், ஒரு ஆறு நிறைந்திருப்பதற்கும் இடையில்தான் எத்தனை பெரிய வித்தியாசம் இருக்கிறது!!

புதிதாய் மறுபடியும் பிறந்த ஒருவன், தான் குணப்பட்ட அன்றே ஆவியில் நிறைந்திவிட முடியும்! அப்போஸ்தலனாகிய பவுலும் தன் பல்லாண்டு பரிசுத்த ஜீவியத்தின் இறுதியில் ஆவியில் நிறைந்திருந்தாரே! அப்படியானால் என்ன?. . .

ஆம், புதிதாய் மறுபடியும் பிறந்தவன் பெற்ற நிறைவிற்கும், முதிர்ச்சியடைந்த பவுல் அப்போஸ்தலன் பெற்ற நிறைவிற்கும் இடையில் ஏராளமான வித்தியாசங்கள் இருப்பதையே இப்போது நாம் அறிந்து கொள்ளுகிறோம்! ஒன்று, ஒரு கப் நிறைவும். . . மற்றொன்று, ஒரு ஆற்றின் நிறைவுமாயிருக்கிறது!! அந்த 'இலக்கை' நோக்கி ஓடக்கடவோம்!!

**ஜெபம் :** *அன்புள்ள தகப்பனே! 'இலக்கை' அடையும்வரை எங்கள் ஜீவிய ஓட்டம் "இன்னமும் அடையவில்லை...." என்ற ஏக்கத்தோடு ஓடிவர கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## அனுதினம் கிறிஸ்து நம்மில் பிழைத்திருக்க வேண்டும்!

ஓர் புதிதான மறுபிறப்பு நம் வாழ்வில் நிகழும் ஒப்பற்ற செயல் என்பது உண்மைதான். ஆனால், நிகழ்காலமாகிய இன்றுள்ள நம்முடைய ஆவிக்குரிய ஜீவியமே இப்போது மிகவும் முக்கியமாகும். இதற்கு மாறாக, நாம் எந்தத் தேதியில் மறுபடியும் பிறந்தோம் என்ற குறிப்பு மாத்திரம் போதுமானது அல்ல! சிலர், தங்கள் வாழ்வில் நடந்தேறிய மறுபிறப்பின் நாளைச் சரியாக ஞாபகத்தில் வைத்திருக்காமலே இருக்கிறார்கள். அதினால் என்ன? ஒரு மனிதன் தன் பிறந்த தேதியை ஞாபகத்தில் கொண்டிராததினிமித்தம், அந்த மனிதன் 'செத்தவன்' என நாம் கூறுவதில்லையே! இருப்பினும், இன்று அநேக கிறிஸ்தவர் கள், தங்கள் மறுபிறப்பின் அனுபவ சாட்சியை தங்களின் நிகழ்கால ஜீவியத்திற்கு சாட்சியாக வைத்திருப்பது, கொடிய துயரமேயாகும்!!

அதுபோலவேதான், ஆவியில் நிறைந்த ஜீவியமும் இருக்கிறது. ஆம், நடைமுறையில் நிகழ்காலத்தில் வாழ்ந்திடும் கிறிஸ்துவைப் போன்ற வாழ்க்கையும், ஊழியமுமே மிக முக்கிமானதாகும்! இதற்கு மாறாக, கடந்த கால அனுபவங்களின் நினைவுகள் எத்தனை அற்புதமும் பரவசமும் கொண்டதாய் இருந்தாலும், அதினால் ஒரு பிரயோஜனமுமில்லை!!

அனுபவங்களையும், ஆசீர்வாதங்களையுமே வைத்து திருப்தி காணாமல், சிலுவையை அனுதினமும் எடுத்து இயேசுவைப் பின்பற்றி "இனி நான் அல்ல! கிறிஸ்துவே என்னில் பிழைத்திருக்கிறார்!!" (கலா.2:20) என்ற ஜீவவார்த்தையை தங்கள் ஜீவியத்திலும், ஊழியத்திலும், நடைமுறையில் வாழ்ந்துகாட்டும் புருஷர்களையும் ஸ்தீரிகளையும் காணவே தேவன் வாஞ்சையுடன் காத்திருக்கிறார்!!

இதுவே. . . ஆம்,இது ஒன்றே ஆவியில் நிறைந்து வாழும் அற்புத ஜீவியமாகும்!

*"இனி நான் அல்ல. . . கிறிஸ்துவே கனப்பட்டு,*
*அன்புகூரப்பட்டு, உயர்ந்திருப்பாராக!*
*இனி நான் அல்ல. . . கிறிஸ்துவே காணப்பட்டு,*
*அறியப்பட்டு, கேட்கப்படுவாராக!*
*இனி நான் அல்ல. . . கிறிஸ்துவே என் பார்வையிலும்,*
*செயலிலும் காணப்படுவாராக!*
*இனி நான் அல்ல. . . கிறிஸ்துவே என் சிந்தையிலும்,*
*வார்த்தையிலும் நிறைந்திருப்பாராக!!"*
*"என்னிலிருந்து இரட்சிப்படைந்து,*
*உம்மில் நான் உறைந்து போயிட,*
*இனி ஒருபோதும் 'நான்' என இல்லாமல்*
*கிறிஸ்துவே என்னில் பிழைத்தோங்கிட*
*அன்புள்ள ஆண்டவா. . . அருள்புரிவாய்!"*

ஆமென்! ஆமென்!!

***ஜெபம் :*** *பரலோக பிதாவே! எங்கள் அனுதின சிலுவை எடுத்துவரும் ஜீவியம் "இனி நான் அல்ல.... கிறிஸ்துவே என்னில் ஜீவிக்கிறார்" என்ற பாக்கியத்திற்குள் பிரவேசித்திட கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**நித்தியத்திற்கு தரவேண்டிய மதிப்பை நாம் இழந்திடக்கூடாது!**

ஒரு குருடன் தன் கையில் கிடைத்த ஆயிரம் ரூபாய் காசோலையை தூக்கி எறிந்துவிட்டு, எந்த மதிப்பும் இல்லாத ஓர் பளபளப்பான பேப்பரை மடித்து வைத்துக்கொண்டான்! ஏனென்றால் அந்த பேப்பர்தான் தொடுவதற்கு வழுவழுப்பாயும், அவனுக்குப் பிரியமாயும் தென்பட்டது!! அவன் குருடனாய் இருந்தபடியால் "உண்மையான மதிப்பிற்கு" உணர்வற்றவனாய் இருந்தான். அது போலவே, இரண்டு வயது குழந்தையும் நூறு ரூபாய் தாளை உதறி விட்டு ஓர் மலிவான பொம்மையை எடுத்துக்கொள்கிறது! இந்தக் குழந்தையும் "உண்மையான மதிப்பைக் குறித்த" அறியாமையில் இருக்கிறது. ஏனென்றால், குழந்தைக்கு வளர்ச்சி இருப்பது இல்லை!!

மனிதன் ஆவிக்குரிய குருடனாகவே பிறந்திருக்கிறான். ஆகவேதான் அவனவன் தன்தன் காலத்தில் 'அவன் கருதும்' மதிப்புள்ள வைகளை, நித்தியத்தின் மதிப்புள்ளவைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் திறனை இழந்தவனாய் இருக்கிறான். அதன் விளைவாய், அவன் தன் நேரத்தையும், தன் சக்திகளையும் இந்த உலகில் அவன் மதிப்பிடும் ஆஸ்தி, அந்தஸ்து மற்றும் உள்ள உலக இன்பங்களைத் தேடுவதற்கென்றே செலவழித்து சீரழிந்து போகிறான். சத்திய வேதம் குறிப்பிடுகின்ற "காணப்படுகிறவைகள் (அனைத்தும்) அநித்திய மானவைகள்; காணப்படாதவைகளோ (அவைகள் மாத்திரமே) நித்தியமானவைகள்" (2 கொரிந்தியர் 4:18) என்ற சரியான உணர்வு அவனுக்கு சிறதளவுகூட இருப்பதில்லை! ஆண்டவராகிய இயேசு, தன் காலத்தில் வாழ்ந்த பக்தியுள்ள ஜனங்களிடம்கூட "தவறாக மதிப்பிடும் உணர்வு" இருந்ததைக் கண்டு அவர்களை வெகுவாய் கடிந்து கொண்டார். அவர்களைத் துயரத்தோடு பார்த்து, "ஒரு மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தி விட்டால் அதினால் அவனுக்கு எந்த இலாபமும் இல்லையே!" என கூறினார். இவ்வுலகில் உள்ள எந்த மனுஷனா னாலும், இயேசுகிறிஸ்துவின் மூலமாய் தேவனோடு சரியான உறவைப் பெற்று நித்தியத்தின் மதிப்பை கண்டடைய வேண்டும்! அப்படியில்லை யென்றால், ஒருநாளில் தன்னை சிருஷ்டித்த கர்த்தாவுக்கு முன்பாக நிற்கப் போகும் வேளையில், இந்த பூமியிலிருந்து அவன் சாதித்து, தனக்கென சொந்தமாக்கிக் கொண்ட அனைத்தும் "ஒன்றிற்கும் மதிப்பில்லாதவைகள்" என்ற உண்மையைக் கண்டு திகைத்துப் போவான்!! இது நிச்சயம்.

**ஜெபம் :** *எங்கள் பரம தகப்பனே! எங்கள் ஆத்துமத்துக்குரிய நித்தியமானவைகளை மதித்து ஆதாயம் செய்திட கிருபைதாரும்! உலகத்தின் அனைத்து ஆதாயமும் ஒன்றும் உதவாது என்ற உணர்வோடு வாழ உதவி செய்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**தேவனுடைய சிந்தை நமக்கும் வேண்டும்!**

இயேசு பேதுருவைப் பார்த்து கூறுகையில், "நீ தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் இருக்கின்றாய்" என அவனை இடித்துரைத்தார் (மாற்கு 8:33). இப்பேதுருவின் நிலையைப் போன்று தான் இவ்வுலகில் வாழும் அநேக சகோதர சகோதரிகளின் நிலையும் உள்ளது. இவர்கள் தேவனைத்தேடி, அவரிடம் ஜெபித்து, இரட்சிப்பிற்குள் கடந்துவரவே விரும்புகிறார்கள். ஆனால் அவர்களுடைய வளர்ச்சியோ "தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல்" "மனுஷருக்கு ஏற்றவைகளையே சிந்திக்கும்" தரம் குறைந்த பின்மாற்ற நிலையில் தேங்கியுள்ளது!

"எவைகளெல்லாம் மனுஷனுக்கேற்ற சிந்தைகள்?" என்பதை உங்களுக்குள் கேட்டுப்பார்த்து அவைகளை வரிசையாக ஒரு பேப்பரில் எழுதுங்கள். இவ்வாறு எழுதிய உங்கள் பட்டியலை அடிக்கடி வாசித்துப் பார்த்து "மனுஷருக்கேற்ற சிந்தைகள்" எவை எவைகள் என்பதைக் குறித்த வெளிச்சத்தைப் பெறுங்கள்! இவ்வாறு நீங்கள் செய்வது உங்கள் சுயநிலையை நீங்கள் அறிந்து கொள்வதற்கு நிச்சயம் உதவும்!!

நாம் எந்த அளவு நம் சுயநிலையை அறிந்திருக்கிறோமோ அந்த அளவுதான் அவற்றிலிருந்து விடுதலையாகவும் முடியும்!

"மனுஷருக்குரிய சிந்தைகள்" எவ்வளவு கொடூரமானதென நாம் காணவேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது. ஏனெனில், இவ்வித மனுஷருக்கேற்ற சிந்தைகள்தான் நாம் தேவனுக்கு எதிரிடையாய் கிரியை செய்வதற்கே நம்மை நடத்துகிறது. இவ்வாறாக நம் ஆத்துமாவின் இரட்சிப்பிற்காய் கிரியை நடப்பிக்கவேண்டிய நாமே, நம்முடைய சொந்த இரட்சிப்பிற்குத் தடையை உண்டுபண்ணுகிறோம்!

தேவனின் மனதில் இருக்கும் சிந்தைகளோ, மனுஷரின் மனதில் இருக்கும் சிந்தைகளுக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். உதாரணமாய், "தன்னைத்தானே தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (மத்.23:12) எனக் கூறிய இயேசுவின் வார்த்தைகள், "நம்மை நாமே நாம் தாழ்த்த வேண்டும்" என்ற தேவனுடைய சிந்தையை நமக்கு வெளிப்படுத்துகிறது. இவ்வாறு, அவருடைய ஆர்வமான சிந்தனையின்படி நம்மை நாமே தாழ்த்திவிட்டால், நம்மை தேவன் உயர்த்தும்படி நாம் கேட்காவிட்டாலும், அவரே நிச்சயமாய் நம்மை உயர்த்துவார்!

**ஜெபம்** : *எங்கள் அன்பின் தகப்பனே! மனுஷருக்குரிய சிந்தையில் நாங்கள் வீணராகிவிடாமல், "உமது சிந்தையை" அதிகமதிகமாய் அறிந்து வாழ எங்களுக்கு உதவும்! குறிப்பாக, இயேசு கொண்டிருந்த "தாழ்மையின் சிந்தையை" எங்களுக்குத் தந்தருளும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

**இயேசுவின் பாதம் அமர்ந்திடும் "நல்ல பங்காகிய" தியானம் வேண்டும்!**

மார்த்தாள் இயேசுவை மகிழ்ச்சியுடன் தன் வீட்டிற்குள் ஏற்றுக்கொண்டாள். . . சமையலறையில் தனக்காக அல்ல, அவருக்கும் அவருடைய சீஷர்களுக்குமே சமைத்துக் கொண்டிருந்தாள். இந்த மார்த்தாள் இன்றுள்ள ஒரு விசுவாசியின் நிலையையே இங்கு சித்தரிக்கிறாள். இவர்கள் தங்கள் இருதயத்தில் ஆண்டவரை ஏற்றுக் கொண்டார்கள். மேலும், சுயநலமின்றி ஆண்டவரையும் அவருடைய ஊழியங்களையுமே செய்திட்டார்கள்! இருப்பினும் இப்படிப்பட்ட வைராக்கியம் கொண்ட மார்த்தளைப் போன்றவர்களைத்தான் இயேசு கடிந்து கொண்டார்! இவர்களுடைய செயலில் அப்படி என்ன தவறு இருந்தது? இதற்கான விடை இயேசு கூறிய அந்த இரண்டு வார்த்தைகளில்தான் அடங்கியிருக்கிறது : ஆம், "தேவையானது ஒன்றே!" என்பதே அந்த விடையாகும். அவள் செய்த ஊழியத்திற்காக அவள் கடிந்துகொள்ளப்படவில்லை. ஆனால், **முதலாவது எதுவோ** அதை முதலாவது வைத்திடாதபடியால் கடிந்து கொள்ளப்பட்டாள்!!

"மரியாள் தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்" என்றே ஆண்டவர் கூறினார். இயேசு இங்கு குறிப்பிட்ட "நல்ல பங்கு" யாது? அவள் இயேசுவின் பாதத்தில் அமர்ந்து, அவருடைய வார்த்தையைக் கேட்டாள் ...அவ்வளவுதான்! இதுவே இயேசு குறிப்பிட்ட நல்ல பங்காகும். வேறு யாதொன்றைக் காட்டிலும், எல்லாவற்றிற்கும் மேலாக, இது ஒன்றே தேவையானதாகும்!

நம்முடைய ஜீவியத்தில் "**கர்த்தரை கவனித்துக் கேட்பதில்**" எவ்வளவு முக்கியத்துவம் தந்திருக்கிறோம்? கர்த்தருடைய பாதத்தில் எவ்வளவு நேரம் அமர்ந்து, அவருடைய வார்த்தையை வாசித்து, அதன் மூலம் அவர் பேசுவதைக் கேட்க வாஞ்சையாயிருக்கிறோம்? இந்த வாஞ்சை இன்று அநேகரிடத்தில் இல்லையே! அதற்குப் பதிலாய் ஏராளமான பல்வேறு காரியங்கள் நம்மை சூழ்ந்து கொள்கிறபடியால், மார்த்தாள் செய்த அதே தவற்றின் குற்றஉணர்விற்கே நாம் ஆளாகி றோம். உலக அலுவல்கள் மாத்திரமே நம்மைஆட்கொள்கிறது என்பதில்லை, கிறிஸ்தவ ஊழியங்கள் கூட நம்மை ஆட்கொண்டிருக்க முடியும்! கூட்டங்களுக்குச் செல்வது... மற்றும், சுறுசுறுப்பான நம்முடைய ஆவிக்குரிய ஊழியத்தின் நடுவில்தான், மார்த்தாளைக் கடிந்து கொண்டதைப் போலவே நம்மையும் கடிந்துகொள்ளும் ஆண்டவரின் சத்தத்தை நாம் கேட்கிறோம்.

"மரியாள் நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்". ஆம், இன்று நம்மை சூழ சம்பவிக்கும் அனைத்து உலக நிகழ்ச்சிகளிலும் "தேவனுடைய ஜீவ வார்த்தைகளே!" சகல முடிவுக்கும் நல்ல பங்காய் திகழ்கிறது!

***ஜெபம்*** *: அன்பின் தந்தையே! இன்றைய அவசர உலகில் "ஊழியம்" என்ற அவசரத்தில்கூட உம் பாதம் அமரும் தியான வாழ்வை இழக்காதிருக்க எங்கள் ஒவ்வொருவருக்கும் கிருபைதாரும், ஆமென்.*

**தேவனின் வார்த்தை கேளாமல் பேசும் நம் வார்த்தைகள் வீணானதே!**

*நம் ஆண்டவருக்கு வலிமை கொண்ட சாட்சியாய் நாம் இருக்க வேண்டுமென்றால், அவருடைய பாதத்தில் ஒவ்வொருநாளும் அமர்ந்து அவரது சத்தத்தை கவனித்துக் கேட்க வேண்டியது மிகமிக அவசியமானதாகும். இன்று பிரசங்கிப்பதற்கு ஆர்வங்கொண்ட அநேகர், அனுதினமும் தேவனுடைய சத்தத்தை கவனித்துக் கேட்கும் பழக்கமுடையவர்களாய் இல்லை! இதனிமித்தம் "கர்த்தருடைய வார்த்தைக்கு" பஞ்சமுண்டாகி, பிணி உண்டாக்கும் மனுஷருடைய வார்த்தைகளே ஏராளமாய் பெருகி இருக்கும் துயர விளைவு ஏற்பட்டிருக்கிறது. இன்று "கர்த்தருடைய வார்த்தை அவனிடத்தில் இருக்கிறது" (2 இராஜாக்கள் 3:12) எனக் கூறும் பாக்கிய நிலையை வெகு குறைவான ஊழியர்களே பெற்றிருக்கிறார்கள்.*

*ஒருவன் முதலாவது "தேவன் என்ன சொல்லுகிறார்" எனக் கேட்பதற்கு நேரத்தை செலவழிக்காமல், யாதொரு மனிதனுக்கும் தேவனைப்பற்றிய காரியங்களைப் பேசுவதற்கு எந்த உரிமையும் இல்லை! அது, தனிப்பட்ட சாட்சி சொல்வதாக இருந்தாலும் அல்லது பொதுவான இடங்களில் பேசுவதாக இருந்தாலும், இந்த உரிமை அவனுக்கு இல்லவே இல்லை!*

*மோசே கர்த்தருடைய சமூகத்திற்கு முன்பாகச் சென்று, பின்பு "அவன் வெளியே வந்து தனக்கு கற்பிக்கப்பட்டதை இஸ்ரவேல் புத்திரரோடே சொன்னான்" (யாத். 34:34) என்றே எழுதப் பட்டிருக்கிறது! யோசுவா கர்த்தருடைய வார்த்தையை இரவும் பகலும் தியானித்தால் மாத்திரமே, அவனுடைய வழிகள் வாய்க்கப் பண்ணப்படும் எனவும் அவனுக்கு தேவனால் கூறப்பட்டது! (யோசுவா 1:3). இவ்விஷயத்தில் சாமுவேலும் நல்ல மாதிரியாய் திகழ்கிறான். அவன் "கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன்!" என மிகப் பொறுமையோடு காத்திருந்து கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு ஜனங்களிடத்தில் பேசினான்!*

*ஆண்டவராகிய இயேசுவைக் குறித்து ஏசாயா 50:4-ல் சொல்லப் பட்ட வசனத்தின்படி "காலைதோறும் என்னை எழுப்புகிறார். கற்றுக் கொள்ளுகிறவர்களைப்போல நான் கேட்கும்படி என் செவியை கவனிக்கச் செய்கிறார்" என நாம் வாசிக்கிறோம். இதன் விளைவாய், இந்த வசனம் மேலும் குறிப்பிடுகிறபடி "இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல இயேசு எப்போதும் ஆயத்த முள்ளவராயிருந்தார்" என இயேசு பெற்ற பாக்கியத்தை நாம் காண்கிறோம்!!*

***ஜெபம்*** *: பரலோக சற்குருவே! நாங்கள் உம் வார்த்தை கேட்கும்படி உம்மிடம் கிட்டிச்சேராததாலேயே உம்வார்த்தைக்கு இன்று எங்கள் மூலம் பஞ்சம் உண்டாகிவிட்டது! மனம்திரும்பி வாழ எங்கட்கு உதவும், ஆமென்.*

**தேவனோடு நடந்து பாவத்தை உலகத்தை வெறுத்திட வேண்டும்!**

*தன் காலத்தில் அவபக்தியாய் வாழ்ந்த ஜனங்களுக்கு வரப்போகும் நியாயத்தீர்ப்பை ஏனோக்கு தீர்க்கதரிசனமாக முன்னறிவித்தான் என யூதா 14,15 வசனங்கள் கூறுகிறது. ஆம், இந்த ஏனோக்கு ஒரு தீர்க்கதரிசியாய் இருந்தே தேவனோடு இசைந்து நடந்தான்!*

*என் ஜீவியத்தில் பிரபல்யமான பிரசங்கிகள் அநேகரை நான் சந்தித்திருக்கிறேன். ஆனால் அப்பிரசங்கிகளில் வெகுசிலரே தேவனோடு இசைந்து நடந்ததைக் கண்டேன்! இருப்பினும் இந்த வெகுசிலரே, நானும் தேவனோடு இசைந்து நடந்திட ஓர் தீராத வாஞ்சையின் வேட்கையை என் இருதயத்தில் உருவாக்கி விட்டார்கள்!*

*மெத்தூசலாவின் கொள்ளு பேரன்தான் நோவா! இந்த நோவா மெத்தூசலாவோடு 600 வருடங்கள் வாழ்ந்தான். ஆகவே நோவாவும் மெத்தூசலாவை சந்தித்த போதெல்லாம் அவன் அப்பா ஏனோக்கு எவ்வாறு* **தேவனோடு நடந்தார்** *என அடிக்கடி கேட்டு விசாரித் திருப்பார்! அதன் மூலமாய் தானும் தேவனோடு இசைந்து நடக்க வேண்டுமே என்ற தீராத வாஞ்சையின் வேட்கை நோவாவின் இருதயத்திற்குள்ளும் வந்துவிட்டது!! ஆம், ஆதியாகமம் 6:9 கூறுகிறபடி, "நோவா தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான்." இவ்வாறு நோவா தேவனோடு இசைந்து நடந்தபடியால்தான், பூர்வ உலகை தான் நியாயந்தீர்க்கப்போகிறதின் நோக்கத்தையும் அவனுக்குத் தேவன் வெளிப்படுத்தினார்.*

*இவ்வாறு தன்னோடு இசைந்து நடந்த முதல் இரண்டு மனிதர்களுக்கு தேவன் வெளிப்படுத்திய சத்தியம் "பாவத்திற்கு எதிரான நியாயத்தீர்ப்பின் சத்தியமே" யாகும். இந்த சத்தியத்தின் செய்தியை ஏனோக்கும், நோவாவும் மிகுந்த உத்தமத்தோடு பிரசங்கித் தார்கள்! அவர்களின் செய்தியை ஒருவர்கூட விசுவாசிக்காததைக் குறித்து சற்றேனுங்கூட அவர்கள் சஞ்சலமடையவில்லை!!*

*ஏனோக்கும், நோவாவுமே வேதாகமத்தில் குறிப்பிடப்பட்ட முதல் பிரசங்கிகளாய் இருக்கிறார்கள்! அந்த இருவரும் தேவனோடு நடந்தார்கள்!! தேவன் தனக்கென கொண்ட உத்தமமான ஒவ்வொரு பிரசங்கிகளும், இவ்வாறாகவே அவரோடு இசைந்து நடக்கிறவர்களாய் இருப்பார்கள்... பாவத்தையும், உலகத்தையும் கண்டித்துப் பேசுகிறவர் களாயும் இருப்பார்கள்!!*

***ஜெபம்*** *: பரம பிதாவே! உம்மோடு இசைவாய் நடந்த உம் தாசர்கள் பாவத்தையும் உலகத்தையும் வெறுத்து நியாயம் தீர்த்ததுபோலவே நாங்களும் வாழ்ந்திட உமது இனிய ஐக்கியத்தை நாடுகிறோம்! கிருபை செய்தருளும், ஆமென்.*

**தெய்வ பக்திக்கு ஏற்படும் நிந்தையைவிட நீர் எங்களோடு இருப்பதே பாக்கியம்!**

*ஆதியாகமம் 39-ம் அதிகாரத்தில் வாலிபனாகிய யோசேப்பின் நிகழ்ச்சி இன்றைய வாலிபர்களுக்கு சவாலிடும் ஓர் சாட்சியாகும்! இந்த ஏழை வாலிபன் யோசேப்பு, ஓர் கவர்ச்சிமிக்க வல்லமை பொருந்திய ஸ்திரீயினால் கடும் சோதனைக்கு ஆளானபோது எவ்வாறு தேவனுக்கு உண்மையுள்ளவனாய் நிலைத்திருந்தான் என்பதையே இந்த அதிகாரம் பறைசாற்றுகிறது! வாலிபர்கள் தங்கள் வாலிபத்தின் வேசித்தனத்திற்கு விலகி வாழ்ந்திட ஒரேஒரு வழிதான் உண்டு... ஆம், வேசித்தனத்திற்குத் தூண்டும் ஸ்தலத்தைவிட்டே விலகி ஓடுவதுதான் அந்த வழியாகும் (1 கொரி. 6:18). இதைத்தான் யோசேப்பு செய்தான்! தன்னோடு வேசித்தனம் செய்யும்படி பார்வோனின் பிரதான அதிபதியின் மனைவி யோசேப்பை கட்டாயப்படுத்தினாள் (ஆதி.39:7). ஆனால் யோசேப்போ, மறுத்துவிட்டான்! அது மாத்திரமல்லாமல், அவள் இருக்கும் இடத்திற்கு அருகில் செல்வதற்குக் கூட மறுத்து விட்டான் (வசனம் 10). "முடியாது!" என சும்மா சொல்வதற்குப் பதிலாய், அவனோ அந்த சோதனை தோன்றும் முகாந்திரத்தை விட்டே விலகி ஓடினான். அந்தப் பொல்லாத பெண்மணி அவனைப் பின்தொடர்ந்து தேடி நெருங்கிய போதெல்லாம் யோசேப்பு எங்காவது தூரம் சென்று விடுவான்! ஆம், உங்களை சோதிப்பவர்களைச் சுற்றியே நீங்கள் தயங்கி நின்று கொண்டிருந்தால், நீங்கள் ஒருக்காலும் அந்த சோதனையை ஜெயித்திட முடியாது! இந்தப் பாலிய சோதனையிலிருந்து "விலகி ஓடும்" புருஷர்களையே இன்றும் தேவன் தேடுகிறார்!*

*திடீரென்று ஒருநாள் இக்கட்டான வேளையில், அவனை அவள் பிடித்துக் கொண்டாள். அச்சமயத்தில் தன் அங்கியை அவள் பிடித்துக்கொள்ள விட்டு விட்டு, தன்னையோ அவள் கையிலிருந்து பலவந்தமாய் விடுவித்து ஓடி விட்டான் இந்த உத்தம யோசேப்பு! கடுங்கோபம் கொண்ட அவள் "யோசேப்பு தன்னை விபச்சாரம் செய்ய முயற்சிப்பதாகப்" பொய்யாய் குற்றம் சாட்டினாள்! அவள் கணவன் வெகுண்டெழுந்து, யோசேப்பை சிறையில் அடைத்தான்!!*

*தேவனுக்குப் பயந்து வாழ்ந்ததினிமித்தம் யோசேப்பு அடைந்த துன்பங்கள் ஏராளம்! தன் சகோதரரிடமிருந்து பொறாமை, ஒரு பெண்மணியின் பொய்க் குற்றச்சாட்டு... சிறைச்சாலை! அந்த நாட்களில் சிறைச்சாலை என்பது எலிகளும், புழுக்களும், கரப்பான் பூச்சிகளும் ஏராளமாய் நிறைந்த கொடிய பாதாளமாகவே இருந்தது! இருப்பினும்,* **"கர்த்தரும் யோசேப்போடே இருந்தார்!"** *(ஆதி.39:21). நீங்கள் தேவனுக்குப் பயந்து தீமையைவிட்டு விலகியோடி வாழ்ந்து விட்டால், அதுபோதும். . . உங்களைச் சூழ எவ்வித நெருக்கங்கள் இருந்தாலும் கர்த்தர் உங்களோடு இருப்பார்... அது ஒன்றே போதும்!*

**ஜெபம்** : *அன்பின் தந்தையே! உமக்கு பயந்து பாவத்தை வெறுப்பதால் ஏற்படும் துன்பங்களை ஒரு பொருட்டாய் எண்ணாமல், அவ்வேளையில் எங்களோடிருக்கும் உம்மை காணும் கண்களைத் தந்தருளும், ஆமென்.*

**வாக்குத்தத்தம் சுதந்தரிக்க சோதனைகளில் உறுதியாய் நிற்கவேண்டும்!**

ஆபிரகாம் கானானை அடைந்தவுடன் "கர்த்தர் ஆபிரகாமுக்குத் தரிசனமாகி உன் சந்ததிக்கு இந்த தேசத்தைக் கொடுப்பேன் என்றார்" (ஆதி.12:5,7). இவ்வாறு செழிப்பான தேசத்திற்கு வந்த பிறகுதான் தேவன் ஆபிரகாமை பரீட்சித்தார்! ஆம், தேவன் ஆதாமை பரீட்சித்தார்! ஆபிரகாமை பரீட்சித்தார். . . அதுபோலவே, தேவன் உங்களையும் என்னையும் பரீட்சிப்பார்!! இந்தமுறை"தேசத்தில் ஏற்பட்ட பஞ்சமே" பரீட்சையாய் இருந்தது (ஆதி.12:10). தேவன் உங்களை கானான் தேசத்திற்குள் போகும்படி கூறிவிட்டு, பின்பு அந்த செழிப்பான கானானில் ஒரு பஞ்சம் ஏற்பட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்? அவ்வேளையில் உங்கள் உணர்வின் எண்ணங்கள் சொல்வதைவைத்து ஜீவிப்பீர்களா? அல்லது தேவன் உங்களுக்குத் தம்முடைய ஆவியின் மூலமாய் உங்களுக்குச் சொல்வதைக் கேட்டு ஜீவிப்பீர்களா? இவ்வித சூழ்நிலையில் இயேசு எப்படி இருந்தார் என்பதைக் கூறும் ஓர் அற்புதமான வசனத்தைக் கேளுங்கள், "அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும் தமது காது கேட்டபடித் தீர்ப்புச் செய்யாமலும் இருப்பார்" (ஏசா.11:3,4) என்றே வாசிக்கிறோம்.

ஆனால் மனுஷனோ இயேசு காண்பிக்கும் இந்த வழியின்படி செய்வதில்லை! "**கானானில் பஞ்சம்**" என நம் செவியினால் கேள்விப் பட்டவுடன் அல்லது அதைக் கண்டவுடன் நம்முடைய கண்களும், நம்முடைய காதுகளும் என்ன சொன்னதோ, அதை வைத்தே நம் சாமர்த்திய மூளையினால் உடனடியாக ஒரு தீர்மானத்தை எடுத்து விடுகிறோம். ஆம், நாம் உடனடியாக "கானான் இப்போது வசிக்கத் தகுந்த ஒரு இடம் இல்லை!" என்றே தீர்மானித்துவிடுவோம். அந்த இடத்தை விட்டு சென்றுவிடுவோம். இவ்வாறு நம்முடைய சொந்த உணர்வுகளை வைத்தே நாம் ஜீவிக்கிறபடியால் **தேவனை ஆலோசிப்பது இல்லை**. நம்மைப் போலவேதான் ஆபிரகாமும் செய்தார். "ஆபிராம் எகிப்து தேசத்தில் தங்கும்படி அவ்விடத்துக்குப் போனான்" (ஆதி.12:10). அவனை எகிப்திற்கு போகும்படி கூறியது யார்? தேவனல்ல. . . அவனுடைய உணர்வுகளே அவ்வாறு கூறியது!

ஒரு மனிதனை பஞ்சக் காலத்திலும் பாதுகாத்துக் கொள்ள தேவனால் முடியாதா? நிச்சயமாய் முடியும். "கர்த்தரைத் தன் நம்பிக்கையாய்க் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் மழைத் தாழ்ச்சியான பஞ்ச வருஷத்திலும் வருத்தமின்றி தப்பாமல் கனி கொடுக்கிற மரத்தைப் போலிருப்பான்" (எரேமியா 17:5-8) என்றல்லவா வேதம் கூறுகிறது. ஆகவே, கர்த்தர் மீது நம்பிக்கை கொண்ட மனுஷன் தேவன் சொல்லும்வரை "கனிகொடுக்கும் மரம்போல்" தன்னுடைய இடத்தை விட்டு ஒருபோதும் அசைய மாட்டான்!!

**ஜெபம் :** *பரலோக பிதாவே! நீர் நடத்தும் வாக்குதத்தத்தை எத்துன்பத்திலும் உறுதியாய் விசுவாசத்தில் நின்று சுதந்தரித்திட அருள்புரியும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**மண்ணுலகில் அல்ல, தேவனிடமே ஐசுவரியவானாய் இருந்திடுங்கள்!**

*ஒரு வாலிபன், இன்று மிக பிரபல்யமாய் மாறிவரும் "பங்கு சந்தை" வியாபாரத்தில் முன்னோடியான தரகனாயிருந்தான்! எந்த கம்பெனி அல்லது தொழிற்சாலையில் முதலீடு செய்தால் "பங்கு விலை" உயரும் என்பதிலேயே இவன் எப்போதும் சிந்தித்துக் கொண்டிருப்பான்!*

*5-நாள் விரதத்திற்குபின் தோன்றிய 'ஜின்' ஆவி "உன் விருப்பம் என்ன? அதை நான் தருகிறேன்" என அவனிடம் கேட்டது. சற்றும் தயங்காமல் "அடுத்த வருடம் இதே மாதத்தில் பங்கு சந்தையின் நிலவரம் இப்போதே எனக்குத் தெரிந்தால், என் பணத்தையெல்லாம் லாபகரமான கம்பெனியில் நான் முதலீடு செய்திட முடியும்! ஆகவே, ஒரு ஆண்டிற்கு பிறகு உள்ள ஸ்டாக்-மார்கெட் (பங்கு சந்தை) நிலவரம் கொண்ட நியூஸ் பேப்பர் எனக்குக் காண்பி!!" எனக் கேட்டான். அந்த 'ஜின்' அவன் கேட்ட நியூஸ் பேப்பரைக் கொண்டு வந்து காட்டியது!*

*சொல்லி முடியாத மகிழ்ச்சி நிறைந்த ஆர்வத்தோடு "பங்கு சந்தை நிலவரம்" அடங்கிய பக்கத்தை இந்த வாலிபன் திருப்பினான்! அடுத்த வருடத்தில் பெருத்த லாபம் தரும் பங்கு கம்பெனியைக் கண்டு, "அந்த கம்பெனியில் தன் பணம் முழுவதையும் முதலீடு செய்துவிட வேண்டியதுதான்" என ஆனந்தமடைந்தான். ஆனால், தற்செயலாய் அதே பக்கத்தின் எதிர் பக்கத்தில் தன் போட்டோ இருப்பதைக் கண்டு துணுக்குற்றான்! போட்டோவுக்கு கீழ் அவன் பெயரை குறிப்பிட்டு, ஒரு கோர வாகன விபத்தில் அவன் இறந்து விட்ட "காலமானார்" செய்தியும் அதே நாளில் வெளியாயிருந்ததைக் கண்டு வெலவெலத்துப் போனான்! "என்ன, அடுத்த வருடத்தில் நான் ஒரு வாகன விபத்தில் மரித்துப் போவேனா? நான் என் செய்வேன்" என அவன் புலம்பினான்!!*

*உடனே 'ஜின்' கேட்டது "தாமதமின்றி பதில் சொல், உன் முதல் விருப்பம் என்ன?" என்றது. "சாகப்போகும் உன் சரீரத்திற்கு ஐசுவரியம் வேண்டுமா? நிரந்தர உன் ஆத்துமாவிற்கு ஐசுவரியம் தேடப் போகிறாயா? சீக்கிரம் சொல்" என கேட்டது!! அவனோ, மண்ணிற்கே தன் ஐசுவரியம் கேட்டு... மடிந்து மண்ணாய் போனான்!! ஐசுவரியத்தில் தன் மனதை வைத்திருந்த ஒரு ஐசுவரியவானைப் பார்த்து "மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும்..."(லூக்.12:20,21) என இயேசு குறிப்பிட்ட "மதிகேடனாகவே" இந்த வாலிபனும் மங்கி மறைந்து போனான்! வாலிபரே... நீங்களும் அப்படியே 'மதிகேடனாய்' வாழ்வது நன்றோ? இன்றே மாயையிலிருந்து விடுபட்டு தேவனைத் தேடும் வாழ்விற்கு உங்களை அர்ப்பணித்திட உறுதியான தீர்மானம் செய்யுங்கள்!!*

**ஜெபம் :** *அன்பின் தகப்பனே! எங்கள் சிந்தை மண்ணின் மாயையில் சிககிவிடாதபடி, உம்மோடு கொண்ட தேவபக்தியில் ஐசுவரியவானாய் மாறிட உதவி செய்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**திருமண நேரத்தில் வாலிபர்கள் சீர் குலைந்திடக் கூடாது!**

"திருமணவிஷயத்தில்" வாலிபர்களும் வாலிப பெண்களும் அதிகமாய் சோதிக்கப்படுகிறார்கள். ஏராளமான விசுவாசிகள் தேவனுடைய வார்த்தையில் மிகத் தெளிவாய் போதிக்கப்பட்ட சத்தியத்தை அறிந்திருந்தும் "அவிசுவாசிகளைத் திருமணம் செய்கிறார்கள்!" தங்கள் மாணவப்பருவத்தில் கிறிஸ்துவுக்காக தைரியமாய் நின்ற அநேகர், திருமணத்தின் பிற்காலத்தில் மா வீழ்ச்சி அடைந்துவிட்டார்கள். தேவனுக்கு வல்லமையாய் பயன்படுவதற்கு துவங்கிய இவர்கள் வாழ்க்கையின் "முழு பயனும்" இத்திருமண விஷய ஒத்த வேஷத்தால் தவிடு பொடியாகிவிட்டது!

நம் இந்திய தேசத்தில் உள்ள இளைஞர்களுக்கு திருமண விஷயம் வரும்போது, அவர்களைச் சந்திக்கும் அழுத்தங்கள் ஏராளமான தாய் இருக்கிறது. இவர்களின் பெற்றோர்களிடமிருந்து வரும் அழுத்தங்கள், மனம்திரும்பாத, மெய்யான அக்கறையே இல்லாத உறவினர்களிட மிருந்து வரும் அழுத்தங்கள் ஏராளம் ஏராளம்! இதோடு சேர்த்து பொருளாதார அழுத்தங்களும் இவர்களுக்கு ஏற்படுகிறது. வரதட்சணை சம்பிரதாயங்களும் இவர்களை வாட்டி வதைக்கிறது!

இதைக் காட்டிலும் துயரமாய், இந்த இளைஞர்கள் கிறிஸ்துவுக்குள் வந்த பிறகுகூட நம் தேசத்தின் புறஜாதியார் கலாச்சாரமாகிய "ஜாதி முறைகளை" இன்னமும் விட்டுவிடாமலே பற்றிக் கொண்டிருக்கிறார்கள்!இவ்வாறு பிசாசினால் கொண்டு வரப்படும் மேற்கண்ட அழுத்தங்களுக்கு எண்ணற்ற வாலிப கிறிஸ்தவர்கள் அவனுக்குத் தாழ்பணிந்து "ஆவிக்குரிய பொருத்த மில்லாதவர்களுக்கு இணங்கி" திருமணம் செய்து கொள்கிறார்கள்.

உங்கள் ஜீவியத்தில் இதுபோன்ற இந்த திருமண "இக்கட்டு நேரம்" வந்துவிட்டதா? நான் உங்களை அன்புடன் வேண்டுகிறேன் :

நீங்கள் பெற்ற விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தோடு உறுதியுடன் நில்லுங்கள்! பிசாசு கொண்டு வந்த ஒவ்வொரு அவிசுவாச திருமண நுகத்தடியையும் மறுத்துவிடுங்கள்! அவன் கொண்டு வந்த நுகத்தடியை உங்கள் மீது பூட்டுவதற்கு பெரும் படையே திரண்டு வந்தாலும் இணங்கி விடாதீர்கள்! அவருடைய சித்தத்திற்காக ஜெபத்துடன் தேவனுடைய உதவியை நாடுங்கள்! அவர் ஒருபோதும் உங்களை கைவிட மாட்டார்! அவரைக் கனப்படுத்திவிடுங்கள்... அப்போது, தான் தெரிந்து கொண்ட துணையை அவர் உங்களுக்குத் தருவார்! தேவனே தெரிந்தெடுத்து நமக்குத் தருவது எதுவோ, அதுமாத்திரமே நம் வாழ்வில் மகா மேன்மையும் அருமையுமானதாகும்!!

**ஜெபம்** : *பரம தந்தையே! உம்மீது கொண்டிருந்த வாலிப வைராக்கியம், எங்கள் திருமண நேரத்தில் சீர்குலைந்த வேத வாக்கிற்கு பூறம்பாய் சென்றுவிடாதிருக்க அருள்செய்தருளும், ஆமென்.*

**இக்கொடிய காலத்தில், வேதவசனமே நம் ஜீவிய ஆதாரம்!**

*ஒரு பாதிரியார் தன் சபையிலிருந்த மக்களிடம் "உங்களைப் போன்ற அதிகம் படிக்காதவர்களால் வேதப்புத்தகத்தை புரிந்து கொள்ளவே முடியாது!" எனக் கூறியிருந்தார். ஆனால் அந்த சபையிலிருந்த ஒரு சகோதரனுக்கு தற்செயலாய் ஒரு புதிய ஏற்பாடு கிடைத்தபடியால் அதை அவர் வாசிக்கத் தொடங்கினார். அதன் பலனாய் அவர் வெகு சீக்கிரத்தில் இரட்சிக்கவும்பட்டார்! ஒரு நாள் அந்த புதிய ஏற்பாட்டை தனக்குமுன் விரித்துவைத்து அவர் படித்துக் கொண்டிருக்கையில், பாதிரியார் அவர் வீட்டிற்கு வந்துவிட்டார். நீ என்ன வாசித்துக் கொண்டிருக்கிறாய்? என கேட்கவும், அந்தப்புத்தகம் வேதாகமம் என அந்தச் சகோதரன் பதில் உரைத்தார். உடனே அந்தப் பாதிரியார் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, வேதப்புத்தகத்தை நீ படிக்கலாகாது எனக் கூறினார். ஏனெனில், இந்த வேதப்புத்தகம் கற்றுத்தேர்ந்த அறிஞர்களுக்கு மாத்திரமேயாகும் எனவும் கூறினார்.!!*

*அதற்கு அந்த சகோதரன் "ஆனால். . . ஐயா! இந்த புத்தகத்தை வாசித்ததின் விளைவாய் நான் இரட்சிக்கப்பட்டு விட்டேன்! அது மாத்திரமல்லாமல், நான் கிறிஸ்துவுக்குள் வளர்வதற்கு திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் நான் வாஞ்சையாய் இருக்க வேண்டும் எனவும் இதோ 1 பேதுரு 2: 3 வசனம் எனக்குக் கூறுவதையும் நான் காண்கிறேன்!" என்றார்.*

*அதற்கு அந்த பாதிரியார் "அது சரிதான், ஆகிலும் பாதிரியாராகிய எங்களைத்தான் பால் கறக்கிறவர்களாக தேவன் நியமனம் செய்து, நாங்கள்தான் உங்களுக்குப் பால் கறந்து தரும்படி வைத்திருக்கிறார்!" என பெருமிதத்தோடு பதில் கூறினார்.*

*அதற்கு அந்த சகோதரன் சற்றும் தயங்காமல் "எனக்கும் கூட ஒவ்வொருநாளும் பால் கொண்டுவந்து தரும் பால்காரன் இருந்தான். ஆனால் அவன், பாலில் தண்ணீர் கலப்பதை நான் சீக்கிரத்தில் கண்டு பிடித்துவிட்டேன். ஆகவே இந்த பால்காரனக்குப் பதிலாய் ஒரு பசுவை வாங்கிவிட நான் தீர்மானித்துவிட்டேன். ஐயா, இப்போது எனக்கு சுத்தமான பால் கிடைக்கிறது!" என தைரியத்துடன் பதிலளித்து விட்டான்.*

*அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, நாமாக வேதவசனத்தை ஆராய்ந்து கற்றால் மாத்திரமே கறையற்ற உபதேசமாகிய சுத்தமான பாலை நாம் பெற்றிட முடியும். பாவம் நிறைந்த இருளான இவ்வுலகத்தில் நாம் முன்னேறி நடந்து செல்ல நமக்கு கிடைத்திருக்கும் "ஒரே வெளிச்சம்" தேவவசனம் மாத்திரமேயாகும்!*

***ஜெபம்*** *: அன்பின் பிதாவே! இன்றைய கலப்பட உபதேசங்கள் மத்தியில், நீர் தந்தருளிய "களங்கமில்லா ஞானப்பாலாகிய" உம் வசனத்தை கவனமாய் பற்றிவாழ உதவிசெய்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**மெய் கிறிஸ்தவ ஜீவியத்தில் 'பயம்' இருப்பதில்லை!**

*மரித்து கீழே விழும் 'ஒரு அடைக்கலான் குருவியைகூட' அவர் காணத் தவறுவதில்லை! அது போலவே, நம் தலையில் இருந்து விழும் முடியையும்கூட அவர் காணத் தவறுவதில்லை!! "தன் சொந்தக் குமாரன் என்றும் பாராமல் நம் எல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு நிச்சயமாக அருளுவார்" (ரோமர் 8:32). யாதொரு நன்மையையும் நமக்கு அவர் தராது இருக்கவே மாட்டார்! எல்லாம் நம்முடையதே!! (1 கொரிந்தியர் 3:22).*

நம்மால் தாங்கிக் கொள்ள முடியாத எந்த சோதனையையும் அவர் அனுமதிக்கவே மாட்டார். இவ்வாறு தேவன் நமக்கு தந்திருக்கும் உத்தரவாதத்தை 1 கொரிந்தியர் 10:13-ம் வசனத்தில் நாம் காண்கிறோம். இந்த உத்தரவாதம் நிரந்தர "ஆயுட்கால - உத்தரவாதமாகும்."

நம் வாழ்வில் சந்திக்கும் ஒரு யூதாஸ்காரியோத்து கூட, அவருடைய நோக்கம் நம்மில் நிறைவேறுவதற்காக பயன்படும் ஓர் உபகரணமாகவே நம் அன்பின் பிதாவின் கையில் செயல்படுகிறது! ஆகவே, நம் ஜீவிய பாதையில் "விரோதமான சூழ்நிலைகள்" குறுக்கிடும்போது, கெத்செமனேயில் பேதுரு செய்ததுபோல நம்முடைய பட்டயத்தை நாம் எடுக்க வேண்டிய அவசியமேயில்லை! அதற்கு மாறாக, இயேசுவைப் போலவே "மெய்யான ராஜாக்களைப்போல்" நின்று, கண்ணியமாய் நடந்து, எந்த சூழ்நிலைக்கும் நம்மை ஒப்புக் கொடுத்திட முடியும்! கவர்னராய் இருந்த பிலாத்துவிற்கு முன்பாக இயேசு நின்று, "பரத்திலிருந்து உமக்கு கொடுக்கப்படாதிருந்தால் என்மேல் உமக்கு ஒரு அதிகாரமும் இராது!" என முழங்கினார் (யோவான் 19:11). இயேசு கூறியபடியே இதே தைரியமான வார்த்தைகளை நாமும் "நம்மைச் சுற்றியுள்ள முழு உலகத்தையும் இதன் குடியிருப்புகளையும்" பார்த்து கூறிட முடியும்!!

தேவனுடைய திட்டங்கள் அனைத்தும் நம்முடைய நன்மைக் கென்றே வைத்திருக்கிறார். அவருடைய சிட்சையுங்கூட 'நமக்கென்று பரிசுத்தம்' எனத் தோன்றியவற்றில் தேங்கிவிடாதபடி "அவருடைய பரிசுத்தத்தில்" நாம் பங்கடைய வேண்டும் என்பதற்காகவே அவர் அனுமதிக்கிறார் (எபிரெயர் 12:10).

"ஒவ்வொன்றும்" ஆம், ஒவ்வொன்றும் நம்முடைய நன்மைக் கென்றே திட்டம் வகுக்கப்பட்டதாயிருக்கிறது! இதனிமித்தமே இயேசு வின் சீஷனாய் வாழும் ஒருவனுடைய வாழ்க்கையில் கவலையோ அல்லது பயமோ தங்கிவிட இடம் இருப்பதில்லை!!

**ஜெபம்** : *பரலோக பிதாவே! உமக்கே அர்ப்பணித்துவிட்ட எங்கள் சீஷத்துவ வாழ்க்கையில், 'சகலத்தையும்' நீரே பொறுப்பேற்றபடியால், யாதொரு சூழ்நிலைகளிலும் நீர் விரும்புவதுபோலவே கவலையில்லாது வாழ்ந்திட கிருபை தாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## "பூரண அன்போடு" ஒருவரையொருவர் அன்புகூர்ந்திட வேண்டும்!

பூரண அன்பினால் நிறைவதற்கு நாடாத பட்சத்தில், ஒருவருக் கொருவர் புத்தி சொல்லும் பகுதியை சிறப்பாய் செய்திட ஒருக்காலும் முடியாது. ரோமர் 5:14 குறிப்பிடுகிறபடி "நற்குணத்தினால் நிறைந்தவர் கள் மாத்திரமே... ஒருவருக்கொருவர் புத்தி சொல்ல வல்லவர்களாகிட" முடியும்! ஏனென்றால், ஓர் அன்பின் இருதயத்திலிருந்துதான் "மெய்யான புத்திமதி" புறப்பட்டு வருகிறது. நாம் முதலாவது அன்பை நாடின பிறகுதான் தீர்க்கதரிசனமான புத்தி சொல்ல விரும்ப வேண்டுமென வாசிக்கிறோம் (1 கொரி.14:1,3).

திவ்வியமான அன்பே ஆவியின் கனியாக இருக்கிறது! சபைக்கு "மனுஷீக அன்பு" எந்தப் பிரயோஜனமுமில்லை. திவ்விய அன்பில் நாம் பங்குபெற விரும்புகிறவர்களாக இருந்தால், இந்த 'மனுஷீகம்' மரணத்திற்குள் ஊற்றப்பட வேண்டும். 'பரிசுத்தாவியானவரே' நம் இருதயங்களில் தேவ அன்பை ஊற்றுகிறார் (ரோமர் 5:5). நாம் திராட்சைச் செடியில் நிலைத்திருந்தால் மாத்திரமே அதன் சாரமாகிய பரிசுத்த ஆவி நமக்குள் பாய்ந்து, தேவனுக்கு மகிமையாக கனி கொடுத்திட முடியும்.

சபையில் இருக்கும் நாம், தேவனுடைய உயர்ந்த மேன்மைக்கு குறைவான யாதொன்றிலும் திருப்தி காணவே கூடாது! ஏனெனில், நமக்காக கொண்ட தேவனுடைய சித்தம் "பிதாவும் குமாரனும் ஒன்றாயிருக்கிறதுபோல நாமும் ஒருமைப்பாட்டில் தேறினவர்களாய் இருக்க வேண்டும்" என்ற ஆதங்கமாகவே இருக்கிறது (யோ.17:21-23).

தங்களை விசுவாசிகள் என்று அழைத்துக்கொண்டு, தாங்கள் 'ஏற்கனவே' உயர்ந்த அன்பில் வாழ்வதாக தேங்கி விட்டவர்களின் ஜீவியத்தோடு நம்மை ஒருபோதும் ஒப்பிட்டு பார்த்துவிடக் கூடாது. நாமோ, தேவன் காண்பிக்கும் தரத்தோடு மாத்திரமே நம்மை எப்போதும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். ஆம், நாம் **அன்பில் பூரணமடைய வேண்டும்** என்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது!

இயேசு நம்மை அன்புகூர்ந்ததுபோலவே நாமும் ஒருவரை ஒருவர் அன்புகூர்ந்தால், அவர் ஒளியில் இருக்கிறதுபோல நாமும் ஒளியில் நடந்து ஒருவரோடு ஒருவர் ஐக்கியப்பட்டிருக்க முடியும். அப்போது, சபையாயிருக்கும் நம் நடுவிலிருந்து பிரகாசமான வெளிச்சம் ஒளி வீசிவிடும்! இவ்வாறாக, தேவன் விரும்புகின்ற விளக்குத்தண்டாய் நாம் மாறி, எரிந்து பிரகாசித்து, நம்மைச் சுற்றியுள்ள இருளின் அந்தரங்கங்களை வெளியரங்கத்தில் கொண்டுவரும் சபையாய் மாறிவிடுவோம்!! (மாற்.4:21,22; எபே.5:11).

***ஜெபம்*** : *அன்புள்ள தகப்பனே! உமது தெய்வீக பூரண அன்பினால் எங்கள் உள்ளங்களை நிரப்பும்! அந்த அன்பில் சிறிதும் குறை இருக்க வேண்டாம்! அன்பின் குடும்பமாய் நாங்கள் கட்டப்பட அருள்புரியும், ஆமென்.*

**பிறரை மன்னித்திடும் மென்மையான இரக்க சுபாவம் வேண்டும்!**

*ஓர் கடின இருதயத்தில் "மன்னிக்காத சுபாவம்" இருப்பதை காண்கிறோம். தனக்குத் தீங்கிழைத்துவிட்ட ஒருவரின் செயலை எப்போதும் தங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, அவர்களைக் காணும்பொழுதெல்லாம் மன்னித்திட மறுக்கும் கண்களோடு பார்க்கிறார்கள்! இப்படியெல்லாம் இருப்பது இயேசுகிறிஸ்துவின் ஆவிக்கு முற்றிலும் மாறுபட்ட குணமேயாகும். எபேசியர் 2:4 "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர்" என அவருடைய சுபாவத்தை மிக அழகாய் எடுத்துக்கூறுகிறது. தேவன் எத்தனையோ பல காரியங்களில் பூரண ஐசுவரியமுள்ளவராய் இருந்தாலும் அவரோ "இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர்" எனக் குறிப்பாக உயர்த்திக் கூறப்பட்டிருப்பது நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது. அந்தப்படியே ஓர் உண்மையான ஆவிக்குரிய மனுஷனும் உலகசம்பத்துக் களைக்காட்டிலும் தெய்வசுபாவமாகிய இரக்கத்தில் ஐசுவரியமுள்ள வனாய் திகழ்வான். உலக ஐசுவரியங்களுக்கு நித்தியத்தில் எந்த மதிப்பும் கிடையாது! ஆனால் இரக்கத்தின் ஐசுவரியமோ நித்தியத்தில் விலையேறப்பெற்ற மதிப்பையுடையதாகும்!!*

*இரக்க குணமுள்ளவர்களே இரக்கம் பெறுவார்கள் என இயேசு கூறினார். யாக்கோபு 2:13, 14-ல் "இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்பு கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்." மேலும் "ஒருவனுக்கு விசுவாச மிருந்தும், வஸ்திரமோ ஆகாரமோ இல்லாதவனைப் பார்த்து அவனுடைய சரீரத்திற்கு வேண்டியவைகளைக் கொடாவிட்டால் பிரயோஜனம் என்ன?" என்றும் யாக்கோபு கூறினார். இரக்க குணத்தின் முக்கியமான இரண்டு பகுதிகளை இவ்வசனங்கள் சுட்டிக்காட்டுகிறது. 1) தீமை செய்தவர்களுக்கு இரக்கமற்ற நியாயத்தீர்ப்பு செய்யாமல் அவர்களை மன்னிப்பது 2) தேவையுள்ள மனுஷர்களுக்கு இரங்கி உதவிசெய்வது. ஆகாரமோ, வஸ்திரமோ ஆகிய அன்றாட தேவையில் குறைவுபட்டிருக்கும் தன் சகோதரனிடமோ அல்லது சகோதரி யிடமோ "நீயே உன் தேவையை சமாளித்துக்கொள்" எனக்கூறிவிட்டு அவர்களுக்குத் தேவையானதைக் கொடுப்பதற்கு மனமில்லாது இருந்தால், அதுவே கொடிய இரக்கமில்லாத சுபாவம் ஆகும் (வசனம் 15,16). இவ்வாறு நீங்கள் இருந்தால், உங்களுக்கு ஒரு தேவை வரும்போது, உங்கள் தேவைக்கும் தேவன் எதுவும் தரமாட்டார்! ஏனெனில் பிறருடைய தேவைக்கு அக்கறை கொண்டவர்கள் மீதே தேவன் அவர்களின் தேவைக்கு அக்கறை கொள்கிறார். ஆம், இரக்கமுள்ளவனே தேவனிடமிருந்து இரக்கம்பெறுவான்.*

**ஜெபம்:** *பரலோக பிதாவே! இப்பூவுலகில் யாரேனும் ஒருவரைக்கூட மன்னிக்க முடியாத கடின இருதயத்தை நாங்கள் வெறுக்கிறோம்! தேவை உள்ளவர்களிடத்தில் உமது மென்மையான இரக்க சுபாவம் காண்பித்திட கிருபைதாரும்! ஆமென்.*

**சுய புத்தியை சாராது தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டும்!**

ஓர் சீஷனுடைய வாழ்க்கையில் ஞானஸ்நானமே கீழ்ப்படிதலின் முதல்படியாய் இருக்கிறது. இக் கீழ்படிதலில் ஆரம்பிக்கும் இந்த சீஷனே....... தொடர்ந்து தன் ஜீவிய காலமெல்லாம் கீழ்படியும் வாழ்விற்குள் பிரவேசிக்கிறான். மேலும் இவ்வித கீழ்ப்படிதல் காரண யுக்திக்கு(reason) உட்பட்டதாயில்லாமல் விசுவாசத்திற்குட்பட்டு "விசுவாசத்திற்கு கீழ்படிதலாகவே" இருக்க வேண்டும்!

இயேசு தன் காரண யுக்தியை சார்ந்திருப்பாரென்றால், தான் ஞானஸ்நானம் எடுக்கும்பொருட்டு யோவான்ஸ்நானகனிடம் ஒருபோதும் சென்றிருக்கமாட்டார். ஏனெனில் அவர் ஏன் ஞான ஸ்நானம் எடுக்கத் தேவையில்லை என்பதற்கான வாதங்களை, குறிப்பாக "அவர் ஒருபோதும் பாவம் செய்யாதிருந்ததை" காரண யுக்தி ஒன்றன்பின் ஒன்றாய் இயேசுவுக்கு எடுத்துக்காட்டியிருக்கக் கூடும்! இயேசுவே ஞானஸ்நானம் எடுக்கவேண்டிய அவசியமென்ன? என்பதை யோவான்ஸ்நானகனால்கூட புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் இயேசுவோ தன் காரண யுக்தியின் வாதங்களையெல்லாம் புறம்பே தள்ளிவிட்டு, பரிசுத்தாவியின் சத்தத்திற்கே கீழ்ப்படிந்துவிட தீவிரம் கொண்டார் (மத்.3:15).

"உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிரு" என நீதி.3:5 எடுத்துரைக்கிறது. ஆம், நம்முடைய சுய புத்தியின் காரணங்களே விசுவாசத்திற்கு முதல் எதிரியாகும்! ஏனென்றால் "மனுஷீக காரணங்கள்" ஒருக்காலும் ஆவிக்குரிய சத்தியங்களைப் புரிந்து கொள்ளாது!!

ஞானஸ்நானமா. . . ? அதெல்லாம் அற்பமான காரியம்! என கிறிஸ்தவர்களில் ஒரு கூட்டத்தார் எண்ணுகிறார்கள். "இதைப் போலவே" நாகமானும் முதலில் எலியாவின் கட்டளையை அற்பமாக எண்ணினான்! தன்னுடைய குஷ்டரோகம் சுகமாவதற்கு யோர்தான் நதியில் ஏழுதரம் மூழ்கும்படி கூறிய எலியாவின் கட்டளையை நாகமான் உதாசினம் செய்ய முற்பட்டான். ஆனால், பின்பு அவன் அக்கட்டளைக்கு அப்படியே கீழ்படிந்தவுடன் ஆச்சரியமான சுகம் பெற்றான்! (2 ராஜா.5:10-14). இதுபோன்ற சின்னச் சின்ன காரியங்களில்தான் தேவன் நம்முடைய கீழ்படிதலை சோதித்தறிகிறார்.

**ஜெபம் :** *அன்பின் தகப்பனே! உம் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்திட தடையாய் வரும் எங்கள் சுய புத்தியை மறுத்துவாழ கிருபை செய்தருளும்! இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.*

**பரிசுத்த இருதயத்தில் தேவனை தரிசிக்கும் சிலாக்கியம்!**

புதிய ஏற்பாட்டில் பரலோகராஜ்யத்தை சுதந்தரிப்பவர்களின் பரிசுத்தமோ "இருதயத்தின் பரிசுத்தம்" ஆகும். இவ்வாறு இருதயத்தில் பரிசுத்தமாகும் செயலை நியாயப்பிரமாணத்தினால் செய்யக் கூடாதிருந்தது (ரோமர் 8:3). ஒரு மனிதன் வெளியரங்க வாழ்க்கையில் பரிசுத்தமாய் ஜீவிப்பதற்கே நியாயப்பிரமாணம் உதவியது. வெளியரங்கமாய் கொலை செய்யாமல் இருப்பதற்கும், விபசாரம் செய்யாமல் இருப்பதற்கும் நியாயப்பிரமாணம் உதவியது. வெளியரங்கத்தில் நற்சாட்சிப் பெற்ற இவர்கள், தங்கள் இருதயத்தில் அசுத்த சிந்தைகொண்டு, பிறரிடம் தீமையான நோக்கம் கொள்ளும்போது அவைகளை ஜெயிப்பதற்கு இந்த நியாயப் பிரமாணம் அவர்களுக்கு உதவிசெய்ய முடியவில்லை! இதினிமித்தமே பழைய உடன்படிக்கை அழிந்து புதிய உடன்படிக்கை தோன்றியதென எபிரெயர் 8-ம் அதிகாரம் கூறுகிறது. இப்போது "நியாயப்பிரமாணம் செய்யக்கூடாத . . . நமக்குள் (Inside us) நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படியே தேவன் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்" (ரோமர் 8:3,4) என வாசிக்கிறோம். ஆம், இருதயத்திற்குள்ளேயே நாம் பரிசுத்த ஜீவியம் செய்யமுடியும் என்பதே புதிய உடன்படிக்கை வழங்கும் உன்னத ஆசீர்வாதமாகும்.

இருதயத்தில் பரிசுத்தமாய் இருப்பதினிமித்தம் "தேவனை தரிசிக்கும்" அனுபவத்தைப்போல் ஓர் சிலாக்கியமான வாழ்க்கை வேறு எதுவுமே இல்லை எனலாம்! பழைய ஏற்பாட்டில் ஆரோனும், மிரியாமும் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்தபோது தேவன் அவர்களுக்கு முன் தோன்றி, "உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் . . . சொப்பனத்தில் அவனோடே பேசுவேன். ஆனால் மோசேயிடமோ மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்" (எண்ணாகமம் 12:6,7,8) எனக் கூறினார். தரிசனத்தையும், சொப்பனத்தையும் காட்டிலும் கர்த்தரை பிரத்தியட்சமாய் முகமுகமாய் காண்பதே மகாமேன்மையானது என இதிலிருந்து அறிந்துகொள்கிறோம். இந்நாட்களில், "தரிசனம் கிடைத்தது!" என்ற பரவசத்தில் வாழும் ஜனங்களைத்தான் நாம் பார்க்கிறோம். ஆனால் தேவனை முகமுகமாய் தரிசித்து அவரோடு உறவாடும் வாழ்க்கையின் மேன்மையை இவர்கள் இன்னமும் அனுபவியாமல் இருப்பது மிகுந்த துயரமே ஆகும்!

***ஜெபம்*** *: பரலோக தந்தையே! இருதயத்திலேயே பரிசுத்தமாய் வாழ கற்றுத்தந்த எங்கள் இயேசுவிற்காய் ஸ்தோத்திரம்! அனுதினமும் உம்மை தரிசித்து வாழ அனுகிரகம் செய்தருளும்! ஆமென்.*

**நம் இருதயத்தில் 'விக்கிரகம்' அல்ல, தேவனே இருந்திட வேண்டும்!**

பழைய ஏற்பாட்டில் 'விக்கிரகங்கள்' வெளிப்படையான மரம் அல்லது தங்கம் அல்லது வெள்ளியினால் செய்யப்பட்ட சொரூபங்களேயாகும். ஆனால் புதிய ஏற்பாட்டில் "உலக இலட்சியங்கள், உத்தியோகங்கள், அல்லது மனைவி அல்லது பிள்ளைகள்கூட" மிகத் தந்திரமான விக்கிரகங்களாய் நம்மைப் பற்றிக் கொண்டிருக்கிறது. மேற்கண்டவைகளெல்லாம் ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் எளிதில் முதலிடத்தைப் பற்றிக்கொண்டு தேவனை இரண்டாவது இடத்திற்கு கீழே தள்ளிவிடமுடியும்!

ஒருவன் தீமையானவைகளை மிக எளிதில் விட்டுவிடலாம்! ஆனால் இதுபோன்ற பூமிக்குரிய நல்லவைகளையும் விட்டுவிடும்படி தேவன் விரும்புகிறார் என்ற சத்தியத்தையோ இன்று அநேகர் ருசிக்கவேயில்லை!! இஸ்மவேல் தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாய்த் தோன்றியவன் என்பதை நாம் யாவரும் அறிவோம். இந்த இஸ்மவேலை அனுப்பிவிடும்படி தேவன் ஆபிரகாமிடம் கூறியபோது ஆபிரகாம் அப்படியே செய்தான்... பின்பு ஆபிரகாம் தன் வாழ்நாள் முழுவதும் இஸ்மவேலைக் காணவேயில்லை! இது எப்படியெனில் தீமையானவைகளை வெறுத்துவிட்டு நல்மனசாட்சியோடு வாழும் வாழ்க்கைக்கு ஒப்பாகும். ஆனால் ஆபிரகாமுக்குத் தேவனே அருளிய அவனுடைய ஏக சுதன் ஈசாக்கை விட்டுவிடவேண்டும் என தேவன் கூறியதுதான் ஓர் கடுமையான பரீட்சையாய் இருந்தது. தான் உரிமை கொண்டுள்ள, நல்லவைகளையும் ஒருவன் விட்டுவிடுவதே சுத்த இருதயத்திற்குரிய பரீட்சையாகும். பிரசங்கிப்பது, போதிப்பது, ஊழியம் செய்வது போன்ற ஆவிக்குரிய ஊழியங்கள்கூட ஒருவனுக்கு விக்கிரகமாய் மாறக்கூடும்! அவைகளை விட்டுவிடும்படி தேவன் கூறும்போதுதான் . . . அவ்வாறு விட்டுவிட அநேகர் தயங்குகிறார்கள். இந்த சோதனைதான் ஆபிரகாமுக்கு வந்தது. ஆனால் மோரியா மலையில் நிகழ்ந்த இந்தச் சோதனையை ஆபிரகாம் ஜெயித்து விட்டார்!

இன்று சிலர் ஏதோ ஒருவகையில் தங்கள் பணத்தை இழக்கும்போது அதோடுகூட தங்கள் சந்தோஷத்தையும் இழந்து விடுகிறார்கள். இவர்களுடைய சந்தோஷம் பணத்தின்மீது இருக்கிறது என்பதையே இவ்வித நிகழ்ச்சி வெட்ட வெளிச்சமாக்குகிறது. ஆனால் தேவனோ, அவர்மீது மாத்திரமே நிறைவான மகிழ்ச்சியடையும் வாழ்விற்குள் நம்மை நடத்த விரும்புகிறார். இவ்வாறு, தேவன் ஒருவரை மாத்திரமே தங்கள் மகிழ்ச்சியாய் கொண்டு அவருக்கு முதலிடம் கொடுத்து வாழ்பவர்களே சுத்த இருதயம் கொண்டவர்கள்!

***ஜெபம்*** : *பரலோக தகப்பனே! உம்மைத்தவிர வேறொரு 'விருப்பம்' உள்ளத்தில் இல்லாதிருப்பதே நீர் விரும்பும் சுத்த இருதயம் என அறிந்தோம்! 'விக்கிரகத்திற்கு' விலகி வாழ தயை செய்தருளும்! ஆமென்.*

**யாதொருவர் மீதும் சமாதானம் இழந்திடக் கூடாது!**

*இந்த மனிதனிடம் யார் எவ்வளவு முயற்சித்தாலும் அவனிடம் வாக்குவாதத்தைக் காணவே முடியாது என்ற நல்லசாட்சியையே ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைகளும் பெற்றிருக்கவேண்டும்.*

*நான் என்னைப் பொறுத்தமட்டில் எல்லோரோடும் சமாதான மாய் இருந்திடமுடியும் என்பதே ரோமர் 12:18-ன் செய்தியாகும். சமாதானத்திற்குப் பங்கம் ஏற்படுமென்றால் அதற்கு ஒரே காரணம். . . இன்னொருவருடைய குறையாக மாத்திரமே இருக்கவேண்டும்! இவ்விதநிலையில் இவ்வுலகத்திலுள்ள எந்த மானிட னிடத்திலும் நாம் சமாதானமாய் வாழ்ந்திட நிச்சயமாய் முடியும்!*

*சமாதானமாய் இருக்கவேண்டும் என்பதற்குப் பொருள் எல்லோரிடமும் ஒத்துப்போக வேண்டும் என்பதல்ல. யாவரோடும் சமாதானமாய் இருக்க நாம் அழைக்கப்பட்டிருந்தும், சிலர் சத்தியத்தில் முரண்பாடாக நிற்கும்போது நாம் அவர்களோடு ஒத்துப்போய் சமாதானமாய் இருக்கமுடிவதில்லை என்பது ஓர் வருத்தமிகு உண்மையேயாகும். நாம் சத்தியத்திற்காக உறுதியுடன் நிற்கவேண்டியது உண்மைதான். ஆகிலும் நாம் அதற்காக ஒருபோதும் வாக்குவாதம் செய்யவோ, சண்டையிடவோ கூடாது. இதை 2 தீமோத்தேயு 2:24-26 வசனங்கள் தெளிவுபடக் கூறுகிறது, "கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்த முள்ளவனும் . . . எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி . . . சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும்" என வாசிக்கிறோம். எனவே நாம் சத்தியத்திற்காக உறுதிபூண்டு நிற்கும் அதேவேளையில், இன்று அநேகர் செய்வதுபோல வாக்குவாதமும், சண்டையுமிட்டு சாதிப்பதற்கு நாம் ஒருபோதும் முயலக்கூடாது. கிருபை பொருந்திய வர்களாய், சாந்தத்தோடுதான் சத்தியத்திற்காக நிற்க வேண்டும்! இயேசு கிறிஸ்துவினிடத்தில் காணப்பட்ட தேவ மகிமை "சத்தியத்தினால் நிறைந்தவராய்" என்று மாத்திரம் காணப்படாமல் "கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய்" (யோவான் 1:14) என்றே நாம் இயேசுவின் மகிமையைக் காண்கிறோம். ஆகவே நம்மைப் பொறுத்தவரையில் நாம் எப்போதுமே சமாதானமாய் இருப்பது சாத்தியமே ஆகும்!*

***ஜெபம் :*** *பரம பிதாவே! என் சமாதானம் பிறரை சார்ந்ததல்ல என உணர்த்தி, என்றென்றும் பிறரிடம் சமாதானம் கொண்டு வாழ வழிநடத்தும் உம் போதனைக்கு நன்றி! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## உத்தம கிறிஸ்தவ ஜீவியத்திற்கு துன்பம் உண்டு!

அப்போஸ்தலர் மூலமாய் ஆதியில் சபை உருவானபோது, அவர்கள் அச்சபை மக்களிடத்தில், "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும்" எனக்கூறி அவர்களை திடப்படுத்தினார்கள் (அப்.14:22). ஆம், புதிய உடன்படிக்கையில் பரலோகராஜ்யத்திற்குள் பிரவேசிக்க வாஞ்சிக்கும் ஒருவன் உபத்திரவங்களின் வழியாய்தான் பிரவேசித்திடமுடியும். பவுல் தீமோத்தேயுவிடம், "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருந்த யாவரும் துன்பப்படுவார்கள்" (2 தீமோ.3:12) என ஆணித்தரமாய் கூறினார். "துன்பப்படுதலுக்கு" எதிர்பதமான ஜீவியம் "புகழ் பெறுதல்" என்பதேயாகும். இந்த இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை லூக்கா 6-ம் அதிகாரத்தில் இயேசு சுட்டிக்காட்டினார். நீதியினிமித்தம் துன்பப்படும் ஜீவியத்தை சுட்டிக்காட்டி "மனுஷ குமாரன் நிமித்தமாக ஜனங்கள் உங்களைப் பகைத்து, . . . தள்ளிவிடும்போது ... சந்தோஷப்பட்டு களிகூருங்கள்... அவர்களுடைய பிதாக்கள் தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்" (வசனம் 22,23). ஆனால், இதற்கு நேர்மாறான மனுஷரின் புகழ்ச்சியைப் பெறும் ஜீவியத்தை சுட்டிக்காட்டி, "எல்லா மனுஷரும் உங்களைக்குறித்துப் புகழ்ச்சியாய் பேசும் போது உங்களுக்கு ஐயோ; அவர்கள் பிதாக்கள்.... கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்"என்றார் (வசனம் 26).

துன்பப்படும் ஜீவியத்தில் நீதியினிமித்தமே நாம் துன்பப்பட வேண்டும். மெய்யாய் கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களாகிய நாம் எங்கிருந்தாலும் நீதியாயும், நேர்மையாயும் நடந்துகொள்கிறோம். உதாரணமாய் ஓர் மருத்துவ மனையில் மருத்துவராகப் பணியாற்றும் நீங்கள் "கருக்கலைப்பு" (Abortion) செய்வதற்கு திட்டவட்டமாய் மறுப்பீர்கள்! ஏனென்றால் இவ்வித செயல் மனுஷகொலை என்பதைத் திட்டமும் தெளிவுமாக நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். இதினிமித்தமாய் நீங்கள் துன்பப்படவோ அல்லது வேலையை விட்டு நீக்கப்படும் படியோ நிலை ஏற்படக்கூடும்.! அல்லது மெய் தேவனை ஆராதிக்கிற நீங்கள் புறஜாதியாரின் விக்கிரகங்களின் பண்டிகைக்கு நன்கொடை தர மறுப்பீர்கள்! இதனிமித்தமும் நீங்கள் ஏதாகிலும் ஒருவிதத்தில் துன்பமடைவீர்கள் என்பதும் நிச்சயம். மேலும், இயேசுவின் சுவிசேஷத்தின் நிமித்தமும் நாம் துன்பம் அடைந்திடக்கூடும்! ஆனால் இயேசுவோ இத்தகைய சமயத்தில்தான் நம்மை "பாக்கியவான்கள்" எனக்கூறி மகிழ்ச்சியடைகிறார்!!

**ஜெபம் :** *அன்பின் தந்தையே! உமது சத்தியத்தின் நீதியின்படி வாழும் எங்களுக்கு வரும் துன்பங்களை ஏற்றுக்கொள்ளவும், அதுவே பரலோக ராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்கும் பாக்கியம் எனவும் உணர்ந்து ஜீவிக்க கிருபைதாரும், ஆமென்.*

**ஜீவியமும் ஊழியமும் தேவ பெலனால் கட்டப்பட வேண்டும்!**

நித்தியத்தில் என்றென்றும் நிலைத்து நிற்கும் தரம் கொண்ட ஊழியம் யாதெனில், மிகுந்த மனத்தாழ்மையுடன் பரிசுத்தாவியின் வல்லமையை சார்ந்து கொண்டு செய்திடும் ஊழியமேயாகும்! ஆகவேதான் நம் சுயத்தை வெறுமையாக்கும் பாடத்தை "இப்பொழுதே" நாம் கற்றுக்கொள்ள வேண்டும்!

நம் சுய வாழ்க்கை மிகுந்த தந்திரம் கொண்டதாயிருக்கிறபடியால், ஊழியம் என்ற பெயரில் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்திற்குக் கூட துணிந்து செல்லும் அளவிற்கு வஞ்சனை நிறைந்ததாயிருக்கிறது! ஆகவே, தேவனுக்கு ஊழியம் செய்வதில்கூட சுயம் தோன்றுவதைக் கவனித்து, அந்த சுயத்தையும் நாம் மரணத்திற்குட்படுத்த வேண்டும்.

தேவனுடைய ஊழியம் 'விசுவாசத்தின் கிரியையாக' மாத்திரமே இருந்திட வேண்டும்! அதாவது, தன்னால் யாதொன்றும் இயலாமல் தேவனையே முழுவதுமாய் சார்ந்து கொள்வதிலிருந்து பொங்கிவரும் விசுவாசக் கிரியைகள் அல்லது விசுவாச ஊழியங்கள்! ஆகவே நம்முடைய ஊழியங்கள் மனுஷருடைய கண்களுக்கு முன்பாக எவ்வளவு வல்லமை பொருந்தியதாக இருந்தது? என்ற கேள்விக்கு யாதொரு இடமுமில்லை. நமக்கு முக்கியமான கேள்வியாக இருப்பதெல்லாம், நம்முடைய ஊழியம் பரிசுத்தாவியின் கிரியை களினிமித்தம் தோன்றிய ஊழியமா? அல்லது நம் சொந்த முயற்சியில் தோன்றிய ஊழியமா? என்ற கேள்வியே மிக முக்கியமாகும். எவ்வளவு ஊழியங்கள் நடந்தது என்பதைக் குறித்து தேவன் ஆர்வம் காட்டுவதேயில்லை... அந்த ஊழியப் பணிகள் "எந்த வல்லமையினால்" செய்யப்பட்டது? என்பதிலேயே தேவன் ஆர்வம் கொண்டிருக்கிறார்.

அந்தஊழியங்கள் பணத்தின் வல்லமையினால், புத்திக் கூர்மையின் வல்லமையினால் செய்யப்பட்டதா? அல்லது பரிசுத்தாவியின் வல்லமையினால் செய்யப்பட்டதா? என்ற கேள்விகளே முக்கியமாகும்!! நாம் செய்வது மெய்யாகவே விசுவாசக் கிரியையான ஆவிக்குரிய ஊழியங்கள்தானா? என்பதை அறிந்து கொள்ள இந்தக் கேள்விகள் மிக நல்ல பரீட்சையாயிருக்கிறது! ஆம், தேவன் "அளவில்" அல்ல... 'தரத்திலேயே' அதிக ஆர்வம் உள்ளவராய் இருக்கிறார். அன்று பழைய ஏற்பாட்டின் நாட்களைப் போலவே இன்றும் தேவனுடைய மெய்யான ஊழியங்கள் 'பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலுமல்ல, பரிசுத்தாவியின் வல்லமையைக் கொண்டுதான்' செயல்படுகிறது (சகரியா 4:6). இந்த அடிப்படையான சத்தியத்தை நாம் மறந்துவிட்டபடியால் தான், ஜீவியத்திலும், ஊழியத்திலும் தேவன் மகிமைப்படவில்லை!

**ஜெபம்** : *அன்புள்ள தகப்பனே! எங்கள் சுய பெலனை மரணத்திற்கு ஊற்றி, பரிசுத்தாவியின் உம் பெலனைப் பெற்று அதன் மூலமாய் ஜீவித்து, ஊழியம் செய்திட கிருபை தாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**நம்மையே பார்த்து அல்ல, இயேசுவைக்கண்டு விசுவாச ஓட்டம் வேண்டும்!**

*முதலாவது "நமக்குள் இருப்பதை" நாம் கண்டு வாழ்ந்திடக் கூடாது. அவ்வாறு காணும்படி தேவன் நமக்கு கற்றுத்தரவும் இல்லை! நமக்குள்ளாய் இருப்பதைப் பார்த்துக் கொண்டு நாம் எவ்வாறு "பந்தயத்தில்" ஓட முடியும்? பரிசுத்தத்தைப் பிரசங்கித்திடும் நல்ல சபைகளில் தான் இந்த தவறு நடைபெறுவதை நான் கண்டிருக்கிறேன். சபையில் உள்ள அனேகர் இன்னமும் "தங்களைத்தான்" பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு ஜீவிப்பது பெருத்த மனச்சோர்வைத்தான் நமக்குள் கொண்டுவரும். ஏனெனில், நம் மாம்சத்தில்தான் 'நன்மை ஏதும்'வாசமாய் இல்லையே!!*

*ஓர் ஆவிக்குரிய மனிதன் 'எப்போதும்' முதலாவதாக, மேல்நோக்கி காண்பவனாகவே இருப்பான்! அந்த மேல்நோக்கிய பார்வையில் இயேசுவைக் கண்டு, இயேசுவின் அந்த மகிமைப் பிரகாசத்தில் பரிசுத்தாவியானவர் அவனுடைய தேவைகளை உணர்த்தி அவனுக்கு காட்டுவார் (எபிரெயர் 12:1).*

*தேவன் வகுத்த இந்த செம்மையான வழியில் நம்மைக் காணும் போதுதான், நாம் சோர்ந்து போய்விட மாட்டோம்!! "மனோதத்துவ ரீதியில்" தங்கள் ஜீவியத்தை மேம்படுத்த விரும்புகிறவர்கள் மாத்திரமே"தங்களையே" பார்த்துக்கொண்டிருப்பார்கள்!*

*தேற்றரவாளனாகிய பரிசுத்தாவியானவர் வரும்போது, "என்னிடத்திலுள்ள யாவற்றையும் அவர் உங்களுக்கு எடுத்துக் காண்பிப்பார்!" என்றே இயேசு கூறினார். நாம் மெய்யாகவே ஆண்டவரோடு சேர்ந்து நடக்கிறோம் என்பதற்கும், நாம் பரிசுத்தாவி யின் அபிஷேகத்தில் தொடர்ச்சியான நிறைவோடுதான் வாழுகிறோம் என்பதற்கும், உள்ள ஓர் முக்கியமான அடையாளம் என்னவெனில், "தேவ ஆவியானவர் இயேசுவை இன்னமும் சற்று அதிகமாய் நமக்கு வெளிப்படுத்தி காண்பிப்பார்!" என்பதேயாகும்.*

*எபேசியர் 4:24-ம் வசனத்தை சற்று கருத்தூன்றி வாசியுங்கள்: "மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்" என எவ்வளவு ஆணித்தரமாய் இந்த வசனம் கூறுகிறது! இன்று பரிசுத்தத் தைப் பின்பற்றும் அநேகர் "பொய்யான பரிசுத்தத்தையே" பின்பற்றி ஓடிக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் சொந்த கண்களுக்கு பரிசுத்தர்களாய் காணப்படும் பொய்யான பரிசுத்தம்! ஆகவேதான் ஒரு ஆவிக்குரிய மனிதன் மேல் நோக்கி "இயேசுவை" முதலாவது கண்டு. . . பின் அந்த வெளிச்சத்தில் தன்னையும் கண்டு, இயேசுவின் பரிசுத்தத்தில் முன்னேறுகிறான்!!*

**ஜெபம்** : *பரலோக தந்தையே! எங்களையே கண்டு கண்டு மனம் நோகிப்போன எங்களை, உம்மைப் பார்த்து ஓடும்படி அழைத்த உற்சாகத்திற்கு மிக்க நன்றி! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**நம் ஜீவியம் கிறிஸ்துவுக்கு சுகந்த வாசனையாய் இருந்திட வேண்டும்!**

*2 கொரிந்தியர் 2:14-ம் வசனம் கூறுவதைக் கவனியுங்கள்: "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்." பார்த்தீர்களா, நமக்குள்ளிருக்கும் கிறிஸ்துவை மற்றவர்கள் உணரும்படிச் செய்யும் "ஓர் வாசனை" நம்மிலிருந்து வெளிப்படுவதாக இங்கு பவுல் குறிப்பிடுகிறார். நாம் பேசும் யாதொன்றைக் குறித்தோ அல்லது நாம் செய்திடும் யாதொன்றைக் குறித்தோ இங்கு குறிப்பிடவில்லை. அது "**வாசனை**" மட்டுமேயாகும்! இந்த 'வாசனை' நாம் உபயோகிக்கும் "ஓர் வாசனை திரவியத்திற்கு" ஒப்பானதேயாகும். வாசனை திரவியத்தை உபயோகிப்பவர், யாதொன்றும் அது குறித்து கூற வேண்டியதில்லை! ... வாசனை தானாகவே வெளிப்பட்டுவிடும்!! அவர் பழகும் விதம், உங்களிடம் அவர் பேசும் தன்மை, அவரிடம் நெருங்கிப் பழகிடத் தூண்டும் குணம்... ஆகிய யாவற்றிலும் பிரதிபலிக்கும் "ஏதோ ஒன்று" நிச்சயமாய் இருக்கிறது. இவ்வாறு 'சொல்லப்படாத' அநேக குணநலன்கள் உண்டு..... அவைகளில், "ஓர் வாசனையை" மாத்திரமே நம்மால் முகர முடிகிறது!!*

*2கொரிந்தியர் 2:15-ம் வசனம் தொடர்ந்து கூறுகையில், "இரட்சிக்கப் படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப் போகிறவர்களுக்குள்ளேயும் நாங்கள் **தேவனுக்கு** கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக் கிறோம்!!" என்றும் கூறுவதைப் பாருங்கள். இந்த வசனம் நமக்கு கூறும் விடுதலையான செய்தி என்னவெனில், "நாம் ஜனங்களுக்கு சுகந்த வாசனையாய் இருப்பதற்கென முயற்சித்துவிடக்கூடாது" என்பது தான். ஆனால், இதுபோன்ற செய்தியைக் கேட்கும் அநேகர் உடனடியாக "சரி தான், இன்றிலிருந்து நான் மற்ற ஜனங்களுக்கு சுகந்த வாசனையாயிருக்கப் போகிறேன்" எனக் கூறுகிறார்கள். ஆனால் இதுபோன்ற முயற்சி அனைத்தும் செயற்கையானதேயாகும். உண்மையில் வசனம் நமக்கு கூறும் புத்திமதி யாதெனில், நாம் முதலாவதாக "தேவனுக்கே" கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்க வேண்டும் எனக் கூறுகிறது. ஆம், முதலாவது தேவன் தான் நமது நற்கந்த சுகந்த வாசனையை முகர்ந்து பார்க்க வேண்டும். அவ்வாறு தேவனுக்கு நாம் நற்கந்தமாய் இருந்து விட்டால், மற்ற ஜனங்களும் அந்த நற்கந்த வாசனையை முகர்ந்து விடுவார்கள் என்பது நிச்சயம்!*

***ஜெபம்**: பரம சற்குருவே! எங்களின் கேடு நிறைந்த "ஜீவிய வாசனையை" வெறுத்து, உம்மண்டை வருகிறோம்! தயவுடன் எங்களை ஏற்று, கிறிஸ்துவின் சுகந்த வாசனை எம்மில் வீசச் செய்திடும்! ஆமென்.*

**பிறர் கண்களுக்கு முன்பாக 'சிறியராய்' இருந்தே ஜீவித்திட வேண்டும்!**

நாம் மற்றவர்களிடம் எவ்வாறு பழகி நடந்து கொள்கிறோம் என்பதைத் தேவன் கவனித்துப் பார்க்கிறார்! "தெய்வ அன்பு, பிறரை 'சிறியவர்களாக' எண்ணும்படி ஒருக்காலும் செய்யாது!" ஊழியத்திலும் இவ்வாறே நாம் செய்துவிட முடியும். நம் ஊழியம் வல்லமை நிறைந்ததாய், அநேகரை ஆசீர்வதிப்பதாய் இருந்துவிட்டால் . . . அந்த ஜனங்களிடம் நாம் சுலபமாய் ஆதிக்கம் பெற்றுவிட முடியும்! அந்த மரியாதையைப் பயன்படுத்தி, அவர்கள் எனக்கு ஏதாகிலும் ஒருவிதத்தில் எனக்குப் பணிவிடை செய்திட சுலபமாய் அவர்களைக் கையாண்டிட முடியும்! அப்படி நான் செய்துவிட்டால், அவர்களுக்கு நான் பெரியவனாய் மாறிவிடுவேன். இவ்வித நிலைக்குத்தான் நான் அதிகம் பயப்படுவதுண்டு. நானோ, தாழ இறங்கி, சிறியவனாகவே இருந்து "பிறருக்கே பணிவிடை செய்திட" விரும்புகிறேன். ஏனென்றால், நான் "ஊழியம் செய்திடவே" அழைக்கப்பட்டவன்!!

"மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல் தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்" எனக் கூறும் ரோமர் 12:16-ம் வசனத்தைப் பாருங்கள். தாழ்மையுள்ளவர்களோடு நாம் பழகி ஐக்கியம் கொள்வதையே வேதம் போற்றியுரைக்கிறது. அதாவது, நான் ஒரு சாதாரண மனுஷனாய் இருந்து, சாதாரண ஜனங்களோடு, அந்நியோன்யமாக இருந்திடும் ஐக்கியம்! இயேசு தனக்கென "ஒரு பட்டத்தை" வைத்து அழைத்துக் கொண்டதை நான் மிகவும் நேசிக்கிறேன்! அவர் சொன்னார் "நான் மனுஷகுமாரன்!" அதாவது, நான் ஒரு சாதாரண மனிதன்!!

அவர் என்ன நிஜத்தில் சாதாரண மனிதரா? அல்லவே அல்ல. அவர் தேவன்... சர்வவல்ல தேவன்!! ஆனால் பூமியிலோ ஒரு சாதாரண மனிதனாகவே ஜீவித்தார்.

எனக்கு யாதொரு வரம் இல்லாவிட்டாலும், என்னால் சரியாகக் கூட பிரசங்கிக்கத் தெரியாவிட்டாலும், நான் ஒரு சாதாரண மனுஷனாய் இருந்துவிட்டால், நான் நிச்சயமாய் "அவரைப்போல்" மாறிட முடியும்!

***ஜெபம் :*** *அன்பின் தகப்பனே! எங்கள் எஜமானின் சாயல், ஊழியம் செய்திடும் எளிய மானிடனின் சாயல்! அவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இயேசுவைப் போல் மாறிட உதவிசெய்தருளும், ஆமென்.*

**தேவனே நம் எஜமான், அவரது அங்கீகாரமே நாடவேண்டும்!**

"தேவரீர் நீர் மெய்யாகவே உம்மை மறைத்துக் கொண்டிருக்கிற தேவனாயிருக்கிறீர்" என்று தேவனுடைய மறைத்துக் கொள்ளும் சுபாவத்தை ஏசாயா 45:15 கூறுகிறது. நான் எவ்வளவு அதிகம் தேவனைப்போல் மாறியிருக்கிறேனோ அவ்வளவுக் கதிகம் என்னை நானே மறைத்துக்கொள்பவனாய் இருப்பேன்! சர்வலோகத் தையும் தேவன் நேர்த்தியாய் சிருஷ்டித்திருந்தபோதும், அதை காணும் ஒரு நாத்திகன் "தேவன் இல்லை!" என்று பகிரங்கமாய் கூறுகிறான். அந்த அளவிற்கு, தேவன் தன்னை மறைத்துக் கொள்கிறார்!! அது போலவே விசுவாசிகளின் ஜெபத்திற்கு தேவன் நேர்த்தியாய் பதில் செய்த போதிலும், அந்த விசுவாசிகளோ "இந்த ஆஸ்பத்திரியில்தான் நான் சுகமானேன்" என்றோ "இந்த மருந்துதான் என்னை குணப்படுத்தியது" என்றோ கூறிவிடுகிறார்கள். இவ்வாறு ஒரு மருத்துவரோ, மருந்துகளோ போன்ற மற்றவைகளே தங்களுக்கென மகிமையைப் பெற்றுக்கொள்கிறார்கள். ஆனால் உண்மையில் தேவன் தான் எல்லாவற்றையும் செய்தார்... இருப்பினும், அவரோ தன்னை ஒளித்துக் கொண்டார்!

இந்திய தேசத்திலுள்ள வீடுகளில் பணிபுரியும் வேலைக் காரர்களை நான் கவனித்துப் பார்த்திருக்கிறேன். வீட்டில் வேலை செய்யும் வேலைக்காரர்கள்தான் துணிகளைத் துவைப்பார்கள். ஒரு விருந்தாளி வீட்டிற்கு வரும்பொழுது துணிகள் துவைத்து மடித்து வைக்கப் பட்டிருக்கும்! சமைத்த உணவு மேஜையில் இருக்கும்! வீடு சுத்தமாய் பெருக்கப்பட்டிருக்கும்... ஆனால், இத்தனை வேலை களையும் செய்த வேலைக்காரரையோ உங்களால் அங்கு பார்க்க முடியாது!! இதைக் குறித்து நான் தியானித்து "ஆண்டவரே, நான் ஒரு ஜெயமுள்ள தேவனுடைய ஊழியனாய் இருக்க வேண்டுமென்றால், இந்த வேலைக்காரரைப்போலத்தான் நானும் இருக்க வேண்டும்! எல்லாவற்றையும் செய்து முடித்து, என்னை மறைத்துக்கொள்ள அருள் புரியும்!!" என்றே ஜெபிக்கிறேன். தான் வேலை செய்து அதன் பலனைப் பெற்ற 'விருந்தினரைக்' குறித்து வேலைக்காரருக்கு யாதொரு சஞ்சலமும் இருப்பதில்லை. அவர்களின் எஜமான் தரும் சம்பளமே அந்த வேலைக்காரருக்குப் போதும்! அது போலவே என் எஜமானா கிய தேவன் எனக்கு வழங்கும் "அங்கீகாரம்" எனக்கு கிடைத்தால் அது போதும்!! நான் என்ன செய்கிறேன் என்பதை இந்த பூமியிலுள்ள வேறு யார் அறிந்திட நான் விரும்ப வேண்டும்? ஓர் ஆத்தும ஆதாயம் செய்கிற ஊழியமோ அல்லது வேறு எந்த ஊழியமோ நான் செய்தாலும்... என் எஜமான் வழங்கிடும் அங்கீகாரத்தில் மாத்திரமே நான் மகிழ்ச்சியாய் இருக்க முடிகிறதா? என்பதே காரியமாகும்.

***ஜெபம்*** : *பரம பிதாவே! 'சகலமும்' படைத்த நீர் மறைந்து நிற்பதுபோல், நாங்களும் எதைச் செய்தாலும் உம்மைப்போல் மறைந்து, உமது அங்கீகாரம் ஒன்றே தேடிட அருள்புரியும், ஆமென்.*

**யாவரும் நம்மை நெருங்கி வரும்படியான ஐக்கியமே நமக்கு வேண்டும்!**

**யோபு** 33:7 கூறுகையில் "இதோ நீ எனக்கு பயப்பட்டு கலங்கத் தேவையில்லை! என் கை உம்மீது பாரமாயிருக்க மாட்டாது!!" என நேர்த்தியாய் கூறுவதைப் பாருங்கள். இயேசுவைக் குறித்து தவறான கண்ணோட்டத்தையே நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். அவர் எப்போதுமே தன் முகத்தை சீரியஸாக வைத்துக் கொண்டவரல்ல! அவ்வாறெல்லாம் முகத்தை சீரியஸாக வைத்துக்கொள்வதை, நான் பரிசுத்தம் என்றும் கருதுவதில்லை! நான் சந்தித்த சில 'பரிசுத்த ஜனங்களிடம்' விடுதலையாய் பேசவோ அல்லது அவர்களை நெருங்கவோ கூட முடியாதிருந்ததை நான் கண்டிருக்கிறேன். நானோ ஆண்டவரிடம் "ஆண்டவரே இது போன்ற இழி மனிதனாய் நான் வாழ விரும்பவில்லை! என்னோடிருப்பவர்கள், என்னிடம் அவர்கள் பேசுவதெல்லாம் அல்லது தாங்கள் செய்வதெல்லாம் 'சரியாய்தான் இருக்குமோ' என்ற அச்சத்தோடு என்னிடம் பழகிவிடக்கூடாது. மாறாக, அவர்கள் எதையும் விடுதலையோடு என்னிடம் பேசவும் செய்திடவும் வேண்டும்" என்றே ஜெபிக்கிறேன்.

ஒரு அரேபிய பழமொழி கூறிடும் வாசகத்தைப் பாருங்கள் : "ஒருவன் தன் சகோதரனிடம் யாதொரு தடையுமின்றி, தான் பேச விரும்பியதையெல்லாம் "கலகலவென" கூறிச் சென்றவுடன், அந்த சகோதரனோ பேசிய வார்த்தைகளிலுள்ள 'பதர்களைக்களைந்து போட்டுவிட்டு' மிக மகிழ்ச்சியுடன் கோதுமைமணிகளை மாத்திரமே வைத்துக் கொள்வாரென்றால், அதுவே நட்பின் இலக்கணமாகும்!" என்றே நேர்த்தியாக எடுத்துரைக்கிறது. அந்த அளவிற்கு நாம் ஜனங்களுக்கு அன்புள்ள சுயாதீனம் கொடுத்திருக்கிறோமா? அல்லது உங்களிடம் பேசுகிறவர்கள் எங்கே சில 'பதர்கள்' தோன்றிவிடுமோ வென்றும், அதனிமித்தம் பிரச்சனை வந்திடுமோவென்றும் பயப்படு கிறார்களா? தன் மனைவியோடு நல்ல ஐக்கியமாய் வாழ்கிறவன் என்ன பேசினாலும், அதை அவன் மனைவி சரியாகவே புரிந்துகொள்வாள். அதற்கு பெயர் தான் சகோதரத்துவம்! நாம் அனைவரும் இப்படிப்பட்ட ஐக்கியத்தில்தான் இருக்க வேண்டும். ஐக்கியமில்லா பரிசுத்தம் போலியான பரிசுத்தமே ஆகும்! உண்மையான பரிசுத்தம் எப்போதும் ஆழமான ஐக்கியத்தையே ஒருவருக்கொருவர் கொண்டுவரும்!!

***ஜெபம்*** *: பரம தந்தையே! ஆண்டவர் இயேசு பாவிகளுக்கு நண்பராய் இருந்தது போல, யாராயிருந்தாலும் எங்களிடம் நெருங்கிவரச் செய்திடும், இயேசுவின் அன்பின் சிநேக வாழ்க்கை தந்தருளும், ஆமென்.*

**பரிசுத்தமுள்ளவர்களாயும், பட்சமுள்ளவர்களாயும் இருக்க வேண்டும்!**

*எபேசியர் 4:24 கூறும் மெய்யான பரிசுத்தத்தைப் பெற்றிருந்த ஒரு சகோதரனைக் குறித்து நான் கேட்டிருக்கிறேன். அவர் மிகுந்த அறிவும், புத்திக்கூர்மையும் கொண்டவர். அவர் காரியங்கள் எல்லாவற்றிலேயும் தூய்மையாகவும், நல்ல சீராகவும் மிகுந்த ஒழுக்கத்தோடும் செய்வார். ஆனால் தேவனுடைய அளவில்லாத ஞானத்தின்படி, எந்த ஒழுங்கையும் தன் வாழ்வில் கற்றுக்கொள்ளாத ஒரு மனைவியை இந்த சகோதரன் திருமணம் செய்தார். 'அதுவே' அவர்கள் இருவருக்கும் இரட்சிப்பாய் இருந்தது! இதுபோன்ற திருமணமே "தேவனால் நியமனம் செய்யப்பட்டது" என்பதை உறுதியுடன் ஊர்ஜிதப் படுத்துவதாயிருக்கிறது! ஏனென்றால் நம்முடைய பரிசுத்தமாகுதலில் தேவன் ஆர்வம் கொண்டிருக்கிறாரேயல்லாமல், அதைவிட அதிக அக்கறையாய் வீட்டிலுள்ளவைகள் சுத்தமாயும் ஒழுங்காயும் இருக்கிறதா? எனக் காண தேவன் ஆர்வம் கொள்வதில்லை! சுத்தமும் ஒழுங்குமிக்க ஒரு வீடு நல்லதுதான்! ஆனால் அதுவெல்லாம் தேவனுக்கு இரண்டாவது ஸ்தானமேயாகும். அதிக முக்கியமான முதல் ஸ்தானமாயிருப்பதெல்லாம் "**பரிசுத்தமாகுதலின்**" **ஜீவியம்** மாத்திரமே யாகும். இந்த அருமையான ஞானத்தை அந்த பரிசுத்தவான் பெற்றிருந்தார். இந்த சகோதரன், சமையலறையில் பயன்படுத்திய சாப்பாட்டு பிளேட்டை அதற்குரிய அறையிலும், டம்ளர்களை அதற்குரிய அறையிலும், ஸ்பூன்களை அதற்குரிய அறையிலும் ஒழுங்காகவும், வரிசையாகவும் அடுக்கி வைப்பார். ஆனால், திருமணமாகி வந்த அவரது மனைவியோ எல்லாப் பாத்திரங்களையும் குழப்பி தாறுமாறாய் வைத்துவிடுவார்!! இந்த சகோதரனுக்கோ இவ்வித நிலை முற்றிலும் விகாரமானதாகும்! ஆகிலும், அவர் என்ன செய்தார் தெரியுமா? மனைவிக்கு சமையலறையில் உதவி செய்யும் அவர், தன் மனைவியைப் போலவே தானும் அவ்வாறே பாத்திரங்களை தாறுமாறாய் ஒழுங்கற்று வைத்துச் செல்வார்!! ஏன் அவ்வாறு செய்தார்? தன்னோடிருக்கும் மனைவி, அவள் தன்னைத்தானே ஒருக்காலும் மனம்மடிந்த நோக்கத்தோடு பார்த்து விடக்கூடாது என்ற காரணமேயாகும். உண்மையிலேயே அவர் மகா ஞானமுள்ள மனிதர்! அவரின் சமையலறை ஒழுங்கற்றிருக்கலாம்... ஆனால் தம்பதியர்களோ மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர்!! உங்களுக்கு எது வேண்டும்? மிக ஒழுங்கான சமையலறையும், அதோடு சேர்த்து சண்டையும் வேண்டுமா? அல்லது ஒழுங்கற்ற சமையலறையும் அதன் மூலம் அந்த சமாதானமும் வேண்டுமா? சமையலறையை மறந்து விடுங்கள், சகோதரனே! நீங்கள் மனைவியோடு மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும், அவ்வளவுதான்! அன்பான சகோதர சகோதரிகளே! சற்று ஞானமுள்ளவர்களாய் வாழ முயற்சியுங்கள்!! அதுவே மேலானது.*

***ஜெபம்*** *: அன்புள்ள தகப்பனே! பரிசுத்தம் என்ற பெயரில் அன்பையும், பட்சமாய் நடப்பதையும் இழந்திடாதிருக்க உதவி புரிந்தருளும்! ஆமென்.*

**நித்திய வழியில் நடத்தும் நம் தேவன்!**

*தேவன் நம்மிடம் பல்வேறு வழிகளில் பேசி எப்படியாவது நமக்கு வெளிச்சத்தைத் தந்து நம்மை அழிவுக்கு நேரான நரகத்திலிருந்து இரட்சித்திடவே விரும்புகிறார் (யோபு 33:14-17). உதாரணமாக, அசுத்தமான கனவுகளைக் கண்டவர்கள் என்ன செய்திட வேண்டும்? "உன் சிந்தை வாழ்க்கை கெட்டுப்போயிருப்பதைப் பார்!" என்ற தேவனுடைய குரலையே அங்கு கேட்டிட வேண்டும்!! பயம் தரும் கனவு களைக் கண்டவர்கள் என்ன செய்திட வேண்டும்? "இளைப்பாறுதலை இழந்த உன் இருதயத்தின் நிலையைப் பார்!" என்ற தேவனுடைய குரலையே அங்கு கேட்டிட வேண்டும்!! தாங்கள் சுகவீனமானதி னிமித்தம் உடனே மருத்துவரிடம் ஓடுகிறார்களே, அவர்கள் என்ன செய்திட வேண்டும்? "உன் செயலினிமித்தம் சிட்சிக்கும் தேவனுடைய கரத்தைப் பார்!" என்ற தேவனின் குரலையே அங்கு கேட்டிட வேண்டும்!!*

*ஆம்,* **கர்த்தருடைய சிட்சையை** *நாம் அற்பமாய் எண்ணிவிடக் கூடாது! ஏனெனில், தான் பிரியமாய் நேசித்திடும் புத்திரர்களை மாத்திரமே அவர் சிட்சிக்கிறார். "நம் குரலில் தொனித்த கடுமையி னிமித்தம்கூட" அவர் நம்மை சிட்சித்தால், நம்மீது கொண்ட அவரது அளவற்ற அன்பினிமித்தம் நாம் உண்மையாகவே களிகூர்ந்து மகிழ்ந்திட வேண்டும்!*

*இதுபோலவே, தேவனோடு நெருங்கிய உறவு கொண்ட ஒரு தேவ மனிதன் நம்மை எச்சரித்து புத்தி சொல்வதும், நமக்கு கிடைத்த பாக்கியம் என்றே கூறவேண்டும் (யோபு 33:23).*

*அதுபோன்ற தேவமனிதர்களின் எச்சரிப்பிற்கு நாம் இணங்கி விட்டால், நாம் தேவனுடைய முகத்தையே கண்டவர்களாய் களிகூர்ந்து, "நான் படுகுழியில் இறங்காதபடி தேவன் என்னை இந்த தாசன் மூலமாய் மீட்டுக்கொண்டார்!" (யோபு 33:27,28) என சாட்சி பகர்ந்திட முடியும்!!*

**ஜெபம் :** *அன்பின் தந்தையே! உம்மைச் சார்ந்து வாழும் எங்களை வழி தவறிடாமல், பல்வேறு சிட்சையின் சம்பவங்களில் உம் குரலை நாங்கள் கேட்டு சரியான பாதை நடந்திட கிருபை தாரும், ஆமென்.*

**நம் இருதயம் நாள்தோறும் தேவனால் சோதிக்கப்பட வேண்டும்!**

சங்கீதக்காரன் ஜெபித்த ஆழமான ஜெபங்களில், தேவன் தன் இருதயத்தை சோதித்து அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஜெபம் முக்கியமானதாகும். "தேவனே, என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்து கொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும்" என்றே மிகுந்த உருக்கமாய் ஜெபித்தார். இந்த ஜெபம் சங்கீதக்காரனாகிய தாவீதுக்கு மாத்திரமல்லாமல், தேவனுடைய இருதயத்தை துக்கப்படுத்தாமல் அவருக்குப் பிரியமாய் வாழத் துடிக்கும் எல்லா பரிசுத்தவான்களுக்குமுரிய ஜெபமாகும்.

தத்துவ மேதை சாக்ரடீஸ் ஒருசமயம் கூறும்போது, "தன்னை சோதித்துப்பார்த்து வாழாதவனின் ஜீவியம் ஒருக்காலும் உருப்படாது!" என்றார். இவ்வுலகத்தின் சாதாரண தத்துவ ஞானி இவ்வாறு கூறுவார் என்றால், பரிசுத்த ஆவியானவர் நம்மிடம் "உங்களை சோதித்து அறியுங்கள்!" என்ற கட்டளைக்கு கிறிஸ்தவர்களாகிய நாம் எத்தனை அதிகமாய் செவி கொடுக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது. தன்னைச் சோதித்துப் பார்த்து வாழாத ஒரு கிறிஸ்தவனின் ஜீவியம் "**பராமரிக்கப்படாத தோட்டத்திற்கு**" ஒப்பானதேயாகும். உங்கள் தோட்டத்திற்கு நீங்கள் சில வாரங்கள் அல்லது சில மாதங்கள் செல்லாமல் வீட்டிலேயே இருந்துவிடுங்கள். பின்பு உங்கள் தோட்டத்திற்கு சென்று பாருங்கள். அங்கே நீங்கள் காண்பது என்ன? ரோஜாமலர்களும் தக்காளிப்பழங்களும் அல்ல! மாறாக, தோட்டத்தின் நாலுதிசையிலும் "களைகள்" மண்டியிருப்பதையே காண்பீர்கள்!!

அதுபோலவே, தன்னை சோதித்துப் பார்க்காதவனின் கிறிஸ்தவ ஜீவியம் "ஓர் **பூட்டிய வீட்டிற்கு** ஒப்பானதேயாகும்." இதை நீங்கள் அறிய வேண்டு மென்றால், உங்கள் வீட்டை கவனமாக பூட்டி வைத்து விட்டு சில வாரங்கள் கழித்து திறந்து பாருங்கள்! "எங்கிருந்துதான் தூசி வந்ததோ" என நீங்கள் ஆச்சரியப்படும் அளவிற்கு வீடு முழுவதும் தூசி அடைந்திருப்பதைக் காண்பீர்கள்! இதைவிட மோசமாய், தன்னை சோதித்துப் பார்த்து வாழாத கிறிஸ்தவனின் ஜீவியம் "**கற்று தேறாத ஒரு சிறு பிள்ளைக்கு**" ஒப்பாகவும் இருக்கிறது. ஒரு பிள்ளை முறைப்படி கற்று தேறவில்லையென்றால், அந்தப் பிள்ளை நிச்சயமாய் ஒரு காட்டு மிராண்டியைப் போல்தான் இருக்கும். ஒரு பள்ளியில் படிக்கும் பிள்ளைக்கு பரீட்சை உண்டு! போதனைகள் உண்டு! புத்திமதிகள் உண்டு! ஒழுக்கம் நிறைந்த கட்டுப்பாடு உண்டு! கவனமான பராமரிப்பு உண்டு! சுத்தம் செய்தல் உண்டு! ஊட்டச்சத்து தரப்படுதல் உண்டு! ஆம், இவை அனைத்தும் இருந்தால்தான் அந்தப் பிள்ளையின் ஜீவியம் மகிழ்ச்சியுள்ள நிறைவான ஜீவியமாய் இருந்திட முடியும்!

**ஜெபம்** : பரலோக பிதாவே! சோதித்தறியாத இருதயம் "பூட்டிய வீட்டிற்கு ஒப்பாக" தூசி அடைந்த வீடு என்பதை உணர்த்தியமைக்கு நன்றி! எங்களை நாள்தோறும் சோதித்தறிந்து வாழ கிருபைதாரும், ஆமென்.

**சாட்சியுள்ள ஜீவிய உப்பின் சாரத்தை இழந்திடக்கூடாது!**

*"நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப் போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது" (மத்தேயு 5:13) என இயேசு கூறினார்.*

*உப்பானது, இயேசுவின் நாட்களில் இறைச்சி உணவு கெடாமல் இருப்பதற்கு பயன்படுத்தப்பட்டது. அதாவது தீமையை எதிர்க்கும் சின்னமாய் உப்பு விளங்கியது! அதேபோலவே ஓர் மெய்கிறிஸ்தவனும் தன் உத்தம சாட்சியுள்ள ஜீவியத்தின்மூலமாய் இவ்வுலகத்தின் தீமைகளை எதிர்த்து அவைகளைக் கட்டுப்படுத்துகிறான். இந்த சிலாக்கியம் இயேசு குறிப்பிட்டபடி ஒவ்வொரு மெய்கிறிஸ்தவனுக்கும் உரியதாகும்.*

*தீமைகளை இந்த உலகத்தைவிட்டே நாம் இப்பொழுது விரட்டிவிட முடியாது! அவ்வித செயலை இயேசு மகிமையில் திரும்பி வரும்பொழுது அந்நாளில் செய்வார். ஆனால், நாமோ இப்போது உலகத்தின் தீமைகளை நம் சாட்சியுள்ள ஜீவியத்தின் மூலமாய் கட்டுப்படுத்துகிறவர்களாய் இருக்க முடியும்!!*

*உதாரணமாய், உங்கள் அலுவலகத்திலுள்ள ஓர் அறையில் அநேகர் உட்கார்ந்து கெட்டவார்த்தை பேசிக்கொண்டு ஜோக்கடித்துக் கொண்டிருக்கிறார்கள் என வைத்துக் கொள்ளுங்கள். அச்சமயத்தில் ஓர் சாட்சியுள்ள உத்தம கிறிஸ்தவ ஜீவியம் செய்யும் நீங்கள் அந்த அறைக்குள் பிரவேசிக்கிறீர்கள். நீங்கள் பிரவேசித்த அடுத்த கணமே சலசலப்பு நீங்கி அமைதி உண்டாகிறது! ஆம், இதுவே ருசியுள்ள உப்பின் தீமையைக் கட்டுப்படுத்தும் சுபாவம் ஆகும்!! ஆனால் இதற்குப் பதிலாய் நீங்கள் ருசியற்ற உப்பாக சாரமில்லாதிருந்தால் நீங்கள் அந்த அறைக்குள் சென்ற பின்பும் 'ஜோக்கும்' 'கெட்ட வார்த்தைகளும்' தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கும்!!*

*ஆனால் நாமோ நம் அலுவலகத்திற்கோ, மனம்திரும்பாத உறவினர் வீடுகளுக்கோ அல்லது வேறு எந்த இடத்திற்கோ சென்றாலும் நம்முடைய பிரவேசத்தால் பாவத்தையும் தீமையையும் கட்டுப்படுத்துகிறவர்களாய் இருக்க வேண்டுமென்பதே இயேசுவின் எதிர்பார்ப்பாய் இருக்கிறது. இதுவே உப்பின் சாரமுள்ள வாழ்க்கை! இவ்வித ஜீவியத்தை இயேசுவே முன்மாதிரியாக வாழ்ந்து காண்பித்தார்.*

**ஜெபம் :** *பரலோக தந்தையே! மெய் கிறிஸ்தவ சாட்சியின் வாழ்க்கையை இழந்திடாது, அனேகரை விழிப்படையச்செய்திடும் "சாரமுள்ள உப்பின்" வாழ்க்கை எம்மில் நிலைத்திருக்க கிருபை தாரும்! ஆமென்.*

**நம் ஜீவியம் இயேசுவின் ஒளியாய் பிரகாசித்திட வேண்டும்!**

**யோ**வான் 1:4-ல் மனுஷருக்குள்ளிருக்கும் ஜீவியமே, ஒளி அல்லது வெளிச்சம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஜீவன் இயேசுவுக்குள் இருந்ததென்றும், அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாய் இருந்ததென்றும், இவ்வசனம் 'ஜீவனுக்கு' இயேசுவையே அடிப்படையாக வைத்துக் கூறுகிறது. இருள் சூழ்ந்த இந்த உலகத்தில், "இயேசுவின் ஜீவன் அல்லது இயேசுவின் ஜீவியம்" ஒன்றே ஒளியாக அழைக்கப்படுகிறது. அந்த இயேசுவின் ஜீவன் அல்லது ஒளி எனக்குள்ளும் பிரவேசித்து என் ஜீவிய வழிகளை ஆளுகை செய்து நடத்துமென்றால், நானும் இப்போது இவ்வுலகத்திற்கு ஒளியாய் இருந்திடமுடியும். எப்படியெனில், "நான் உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறேன்" (யோவான் 8:12) எனக்கூறிய இயேசு, இப்போது சீஷர்களிடம் திரும்பிப்பார்த்து, "நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" எனக் கூறியதை கவனியுங்கள்!

"விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல்" எனக் கூறப்பட்டதற்கு காரணம், இன்று அநேகர் தாங்கள் இயேசுவின் சீஷன் எனத் தங்கள் ஸ்தலங்களில் பகிரங்கமாய் அறிக்கை செய்வதற்குத் தயங்கி, தாங்கள் பெற்ற வெளிச்சத்தை மறைத்துக்கொள்கிறார்கள். "மரக்கால்" என்பது வியாபாரத்திற்கு உபயோகப்படுத்தப்படும் "அளவுபடி" ஆகும். அதாவது, நம்முடைய சாட்சியின் ஜீவியத்தை நம் வியாபார ஸ்தலத்திலோ, அல்லது வேலை ஸ்தலத்திலோ ஒருபோதும் மறைத்து வைக்கவே கூடாது! அதேபோல நம் வீட்டிலும் விளக்கை விளக்குத்தண்டின் மீதுதான் வைக்கவேண்டும்! கிறிஸ்துவைப் பின்பற்றும் நம்முடைய தூய சாட்சி நம் வீட்டிலுள்ள அனைவருமே பகிரங்கமாகக் காணும்படி பிரகாசிப்பதாய் இருக்கவேண்டும். இவ்வாறு நாம் எங்கு சென்றாலும் இயேசுவின் ஜீவனாகிய ஒளியை பிரகாசிக்கச் செய்திட வேண்டும். இங்கு மீண்டும் "தரமே" ஒளியின் பிரகாசத்திற்கு வலியுறுத்தப்படுகிறது. உதாரணமாய், வீட்டிலுள்ள ஓர் 100 வாட்ஸ் பல்பு அளவில் சிறியதே ஆகும். இருப்பினும் அதிலுள்ள பிரகாசத்தின் வலிமை ஓர் பெரிய அறையையும் ஒளிமயமாக்குகிறது. எனவே அளவையல்ல ஜீவியத்தின் தரத்தையே இயேசு மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறினார்!!

***ஜெபம்*** *: பரம பிதாவே! நாங்கள் எங்கிருந்தாலும் "உமது ஒளியை" எங்கள் ஜீவியத்தில் பிரகாசித்திட தயவாய் அனுகிரகியும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## நியாயப்பிரமாணம் நமக்குள் நிறைவேறிட வேண்டும்!

இயேசு போதிக்கையில், *“நியாயப் பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்று கிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப் பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதின் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” (மத்.5:17,18)* என்றார்.

இன்று அநேகர் புதிய உடன்படிக்கையின் கிருபைக்குக் கீழ் நாம் இருக்கிறபடியால் ‘இனியும்’ பிரமாணங்களைக் கைக்கொள்ள வேண்டியதில்லை என்று எண்ணுகிறார்கள். இதுபோன்றவர் களுக்காகவே இயேசு, *“நியாயப்பிரமாணத்தை அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்”* எனக் கூறினார். இவ்வாறு புதிய ஏற்பாட்டின் கிருபையை காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டுவார்கள் என யூதா தன்னுடைய நிருபத்தில் முன்கூட்டியே எச்சரித்தார் (யூதா 4). ஆங்கில வேதாகமத்தில் ‘காமவிகாரத்திற் கேதுவாய்’ என்ற வார்த்தை பாவம் செய்வதற்கு ‘லைசென்ஸாகப்’ புரட்டுவார்கள் என்றே கூறப்பட்டுள்ளது. தேவனுடைய பிரமாணங்களை ‘மிக எளிதாய்’ எடுத்துக்கொள்ளும்படி கிருபை உதவிசெய்கிறது என்றே இவர்கள் எண்ணிக்கொள்கிறார்கள். இவ்வாறு ஓர் தரம் குறைந்த வாழ்க்கைக்காக தேவகிருபை தரப்படவேயில்லை. புதிய ஏற்பாட்டில் ஒருவன் பெற்றுக்கொள்ளும் **தேவகிருபை** அவனைப் பாவத்தின் வல்லமை யிலிருந்து விடுதலை யாக்கும் என்றே ரோமர் 6:14 கூறுகிறது. அதாவது நாம் பிரமாணங்களைக் கைக்கொள்ளும்படியே இக்கிருபை உதவி செய்கிறது. பழைய உடன்படிக்கையில் தன் சொந்த பெலனால் கைக்கொள்ள முயற்சித்துத் தோற்றுப்போன ஒருவன், புதிய உடன்படிக்கையின் கீழ் பரிசுத்தாவியின் பெலனாகிய கிருபையைப் பெற்று, தான் முன்பு தோற்றுப்போன பிரமாணங்களையெல்லாம் ஜெயமாய் கைக்கொண்டிடமுடியும்! இவ்விதமாகவே நாம் நியாயப் பிரமாணத்திலிருந்து விடுதலை பெற்றிருக்கிறோம். எப்படியெனில், கிருபையின் மூலமாய் பிரமாணங்களை என் இருதயத்திலேயே கீழ்ப்படிகிறபடியால், வெளியரங்கமான பிரமாணத்திற்கு நான் கட்டுப்பட அவசியமில்லாமல் விடுதலை பெற்றிருக்கிறேன். இதைத் தெளிவுபடுத்தியே, நியாயப்பிரமாணத்தை அழிக்க அல்ல, அதை நிறைவேற்றுகிறதற்கே வந்தேன் என இயேசு கூறினார். *“விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக . . .”* என்ற வெளி யரங்கமான கற்பனையை இயேசு நிறைவேற்றாமல் இப்பிரமாணங் களைத் “தனக்குள்” தன் சிந்தை வாழ்க்கையில் நிறைவேற்றினார்!!

**ஜெபம் :** *அன்பின் தகப்பனே! இயேசுவின் கிருபையை விருதாவாய் பெற்று பாவம் செய்யும் இந்நாட்களில், நாங்கள் கிருபை பெற்று “இருதயத்திற்குள்” பரிசுத்தமாய் வாழ தயை செய்தருளும், ஆமென்.*

## ‘தேவனுக்கு நண்பர்களே’ பிறரிடம் மன்னிப்பு கேட்பர்!

*நாம் முற்றிலுமாய் இரட்சிக்கப்படவேண்டுமென்பதே தேவனுடைய சிந்தையாய் இருக்கிறது. ஆனால், நாம் தேவனுடைய வார்த்தையில் ஓர் உயிருள்ள விசுவாசம் பெற்று அவைகளுக்கு கீழ்ப்படியும்போது மாத்திரமே நமக்குள் இம்மகா இரட்சிப்பின் கிரியை துவங்குகிறது. உதாரணமாய், இன்று எத்தனை பேர் தங்களைத் தாங்களே தாழ்த்துவதற்கு ஆர்வம் கொண்டிருக்கிறார்கள் என எண்ணுகிறீர்கள்? (லூக்கா 18:14).*

*இன்று ஜனங்கள் எந்த மனிதரிடத்திலாகிலும் எந்தக் காரியத்திற்காகிலும் மன்னிப்பு கேட்டதுண்டா என்றால், கிட்டத்தட்ட ஒருவருமே இல்லை எனக் கூறலாம். பிறரிடம் மன்னிப்பு கேட்டால், தாங்கள் பிறரால் குறைவாக மதிப்பிடப்படுவோம் என்றே சிந்திக்கிறார்கள். உங்கள் பாவத்தை நீங்கள் பிறரிடம் அறிக்கை செய்து மன்னிப்பு கேட்கும் போது நீங்கள் குறைவாய் மதிப்பிடப்படுவீர்கள் என்பது உண்மைதான்... இருப்பினும், அவ்வித மதிப்பிடுபவர்கள் இம்மைக்குரிய ஜனங்களே ஆவர்! இவ்வித இம்மைக்குரிய ஜனங்களால் நீங்கள் குறைவாய் மதிப்பிடப்படும் போது, தேவனுடைய பார்வையில் உயர்வாய் எண்ணப்படுவீர்கள் என்பதோ அதிக நிச்சயம்!! ஆனால், இந்த ஒப்பற்ற சிந்தை இன்று ஜனங்களிடத்தில் இல்லையே! உண்மையை அப்படியே ஒத்துக் கொண்டு உங்களை நீங்கள் தாழ்த்தும்போது, தேவனுக்குரிய மேன்மையில் நீங்கள் உயருவீர்கள் என்பது ‘பளிச்செனத்’ தோன்றும் வெளிப்படையான உண்மையாய் இருக்கிறது. எனவே மதியீனமான ஜனங்கள் உங்களை கனவீனப் படுத்துவதை மறந்துவிடுங்கள்! ஏனென்றால் நீங்கள் தேவனால் கனப்படுத்தப்படுகிறீர்கள்!! நமக்குத் தேவையாய் இருப்பதெல்லாம் அது ஒன்றுதானே.....! தேவனோடு "நல்ல நண்பனாய்" மாறுவதற்கே நீங்கள் இப்போது கிரியை நடப்பித்திருக்கிறீர்கள்.*

*"தாழ்மையே" ஆவிக்குரிய செழித்த வாழ்விற்கு நல்ல நிலமாய் உள்ளது! இந்த நிலத்தில் வளர்ந்திடும் ஆவிக்குரிய வளர்ச்சியே "ஆவிக்குரிய கனியை" மிகுந்தியாய் தந்திட முடியும்.*

***ஜெபம் :*** *அன்பின் பிதாவே! எங்களைத் தாழ்த்தி பிறரிடம் மன்னிப்பு கேட்கும் தாழ்மையின் சிந்தையை எங்களுக்குத் தாரும்! மனுஷருக்கு முன்பாக அல்ல, உமக்கு நண்பர்களாய் இருக்கும் பாக்கியமே எங்களின் மேன்மை! ! இயேசுவின் மூலம் ஜெபம் கேளும், ஆமென்.*

**செயலைவிட நம் அந்தரங்க நோக்கத்தில் தூய்மையாய் வாழக்கடவோம்!**

*பழைய ஏற்பாடு மனுஷருடைய வெளிப்படையான "செயலை" வலியுறுத்துகிறது. ஆனால், புதிய ஏற்பாட்டிலோ ஓர் தீயசெயலுக்குள் நம்மை நடத்தும் ஒவ்வொரு அந்தரங்கமான "நோக்கங்களையே" வலியுறுத்திக் கூறுகிறது. இவ்வாறு அந்தரங்க நோக்கங்களுக்கு இயேசு அதிக முக்கியத்துவம் கொடுத்ததற்குக் காரணம், கடைசிநாளில் தேவன் நம்முடைய வெளிப்படையான வார்த்தைகளையும், செயலையும் மாத்திரமல்ல நம்முடைய ஒவ்வொரு அந்தரங்க நோக்கங்களையும் நியாயந்தீர்ப்பார் என்பதினிமித்தமேயாகும். பழைய ஏற்பாட்டு தரத்தின்படி தேவன் ஜனங்களை உள்ளான அந்தரங்க ஜீவியத்தின்படி நியாயந்தீர்க்கவில்லை. அது ஏன் என்பதை மத்தேயு 19-ம் அதிகாரத்தில் இயேசு விளக்கிக்கூறினார். இந்த அதிகாரத்தில், பரிசேயர்கள் இயேசுவிடம் வந்து, "தள்ளுதற் சீட்டைக் கொடுத்து மனைவியைத் தள்ளிவிடலாமென்று (Divorce) மோசே ஏன் கட்டளையிட்டார்?" எனக் கேட்டார்கள். அதற்கு பதிலளித்த இயேசு "உங்கள் இருதய கடினத்தினிமித்தமே மோசே அவ்வாறு கட்டளையிட்டான்" எனக் கூறினார் (வசனம் 7, 8). அதாவது, பழைய ஏற்பாட்டு ஜனங்கள் பரிசுத்தாவியைப் பெறாதபடியால் **அவர்களின் இருதயம்** கடினமாய் இருந்தது. இதினிமித்தமே அவர்களின் அந்தரங்க ஜீவியத்தில் உயர்ந்த தரத்தை அவர்களிடமிருந்து தேவன் எதிர்பார்க்கவில்லை! எனவேதான் தாவீது அநேகம் மனைவிகளை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்ட செயல் தொடங்கி, அநேகக்காரியங்களை தேவன் பழைய உடன்படிக்கையில் அனுமதித்திருந்தார். ஆனால், இப்போதோ தேவன் நமக்கு **பரிசுத்தாவியானவரைக்** கொடுத்துவிட்டார்!*

*இப்பரிசுத்தஆவியானவர் நம்மிடத்திலுள்ள கடினமான இருதயத்தை எடுத்துப்போட்டு இப்போது மென்மையான இருதயத்தை நமக்குள் தருகிறார். இதனிமித்தமே பழைய உடன்படிக்கையின் பரிசுத்தவான்கள் அடைந்த ஜீவிய தரத்தைக் காட்டிலும் உயர்ந்த தரத்தை இப்போது நம்மில் எதிர்பார்க்கிறார்.*

*இவ்வாறு புதிய உடன்படிக்கையின் உயர்ந்த நீதியின்படி வாழ்பவர்களைச் சுட்டிக்காட்டியே, "பரலோகராஜ்யத்தில் சிறியவனாய் இருக்கிறவன், பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களைக் காட்டிலும் பெரியவனாய் இருப்பான்" எனக் கூறினார். ஆம், பழைய ஏற்பாட்டில் கடைசியாக வந்த மாபெரும் தீர்க்கதரிசியாகிய யோவான்ஸ்நானகனைக்காட்டிலும் பெரியவனாயிருப்பான் என்றே இயேசு குறிப்பிட்டார்!! (மத்தேயு 11:11,12).*

***ஜெபம்*** : *அன்பின் பிதாவே! எங்கள் அந்தரங்க வாழ்வில் உயர்ந்த தரத்தை எதிர்நோக்கி, உமது தூயஆவியை எங்களுக்குள் தந்தமைக்கு, நன்றி! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**குடும்ப ஐக்கியத்தில் சாத்தானை அனுமதித்துவிடக்கூடாது!**

*ஆதியில், தான் சிருஷ்டித்த ஆதாமை ஏதேன் தோட்டத்திற்கு அழைத்து வந்து அத்தோட்டத்தைப் பண்படுத்தவும், காக்கவும் அவனை தேவன் வைத்தார் (ஆதி.2:15). இந்த சம்பவத்திற்கடுத்து, அவனுக்கு ஏற்றதோர் "துணையையும்" தேவன் தந்தார்! எனவே அந்த இனிய நாளில் ஆதாம் தேவனிடமிருந்து இரண்டு வெகுமதிகளைப் பெற்றான் என்றே நாம் கூறவேண்டும்! முதலாவது வெகுமதி, தோட்டம்.... அதை ஆதாம் பண்படுத்திக் காத்திட வேண்டும்! இரண்டாவது வெகுமதி, ஓர் துணை அல்லது ஓர் மனைவி.... அவளோடும் ஆதாம் நல்ல உறவை ஏற்படுத்திக் கொண்டு, அவளையும் அவன் பண்படுத்திக் காத்திட வேண்டும்!! இவ்வாறு ஏதேன் தோட்டத்தையும், தனக்குக் கொடுக்கப்பட்ட மனைவியையும் காத்துக்கொள்ளும் உன்னதப் பணியை அந்நாளில் ஆதாம் தேவனிடமிருந்து பெற்றான்.*

*ஆனால், இந்த ஒப்பற்ற பணியை நிறைவேற்றிட ஆதாம் தவறி பெரும் தோல்வியைக் கண்டான். விழிப்புடன் காத்துக் கொள்ள வேண்டிய தோட்டத்திற்குள் சாத்தான் வரும்படி அனுமதித்து விட்டான்! இப்போது என்ன நடந்தது? ஓர் வசந்த சோலையாய் இருக்க வேண்டிய அந்தத் தோட்டம் பாலைவனமாய் மாறி "முள்ளும் குருக்குமே" அங்கு வளர்ந்தது. இந்த நிலை, தோட்டத்திற்கு மாத்திரமல்ல, ஆதாம் ஏவாளின் உறவிலும் ஏறபட்டுவிட்டது. ஆம், "எலும்பில் எலும்பும் மாம்சத்தில் மாம்சமுமாய்.... ஒரே மாம்சமாய்" இசைந்திருந்த ஆதாம்-ஏவாள் உறவைப் பிரிக்க அவர்கள் நடுவிலும் சாத்தான் புகுந்து விட்டான் (ஆதி.2:23,24; 3:1). பார்த்தீர்களா, தேவன் இணைத்ததைப் பிரித்திட 'ஒருவன்' எப்போதும் காத்துக் கொண்டிருக்கிறான். இருவரும் ஒரே மாம்சமாய் இருப்பார்கள் என தேவன் ஒன்றாய் இணைத்த வசனத்திற்கு உடனடியாக அடுத்த வசனத்தில் 'தோட்டத்தில் சாத்தான் பிரவேசித்து விட்டானே!' இதை நாம் ஒருக்காலும் மறந்துவிடவே கூடாது. சர்ப்பத்தின் ஒரே நோக்கம் தேவன் ஒன்றாய் இணைத்தவர்களைப் பிரிப்பதேயாகும்! நம் குடும்பத்திலும், கணவன்-மனைவி-பிள்ளைகள் அன்பின் உறவிலும் சாத்தானாகிய 'சர்ப்பம்' பிரவேசித்திடாது காத்துக்கொள்ள பொறுப்புள்ளவர்களாய் நாம் இருந்திட வேண்டும்.*

**ஜெபம் :** *அன்பின் பிதாவே! நீர் இணைத்த தெய்வீக குடும்ப உறவில் எத்தனை சமையங்களில் 'விரிசல்' ஏற்படுத்த சாத்தான் முயற்சிக்கிறான்! தெய்வ பயத்தோடு ஐக்கியமாய் வாழ உதவி செய்தருளும், ஆமென்.*

## குடும்பத்தை கட்டுவதற்கு பிரயாசம் வேண்டும்!

நம் தோட்டம் எவ்வாறு பலைவனமாய் மாறமுடியும் என்பதை விளக்கும் எச்சரிப்பின் வசனங்களை நீதிமொழிகள் 24:30,31-ஆம் வசனங்களில் காண்கிறோம் "சோம்பேறியின் வயலையும், மதியீனனுடைய திராட்சைத்தோட்டத்தையும் கடந்துபோனேன். இதோ அதெல்லாம் முள்ளுக்காடாய் இருந்தது. நிலத்தின் முகத்தைக் காஞ்சொறி மூடினது, அதின் கற்சுவர் இடிந்துகிடந்தது. அதைக்கண்டு சிந்தனை பண்ணினேன். அதை நோக்கி புத்தியடைந்தேன்." பார்த்தீர்களா, தோட்டத்தில் நீங்கள் விழிப்புடன் கவனம் செலுத்தா விட்டால் அத்தோட்டம் எவ்வளவு மோசமாய் மாறிவிடுகிறது. நீங்கள் வீதியில் கடந்து செல்லும்போது ஒருவர் வீட்டின் அருகில் செழிப்பான தோட்டத்தையும், மற்றொருவர் வீட்டின் அருகில் வறண்ட முட்புதர்களையும் பார்த்திருப்பீர்கள் அல்லவா?

ஒரு அழகான தோட்டம் தானாய் உண்டாவதில்லை! அந்த வீட்டில் உள்ளவர் தன் தோட்டத்தில் பயிர் செய்து, களையெடுத்து.... இவ்வாறாக நிச்சயம் அதிகப் பிரயாசப்பட்டிருப்பார்.

மற்றொருவர் வீட்டில் நீங்கள் கண்ட முட்புதர் எவ்வாறு வந்தது? அந்த வீட்டிலுள்ளவர் முட்களையும், புதர்களையும் விதைத்து பிரயாசப்பட்டா வந்தது? இல்லை, அது தானாகவே வனாந்தரமாய் மாறிவிட்டது. ஆம், வனாந்திர பாலைவன வாழ்க்கை உருவாகிட நீங்கள் ஒன்றுமே செய்ய வேண்டியதில்லை! ஆனால் உங்கள் தோட்டம் "வசந்த சோலையாய்" இருக்க வேண்டுமென்றால், அதற்கு நீங்கள் கண்டிப்பாய் பாடுபட வேண்டும்!!

இதைப்போலவேதான் திருமண வாழ்வும் இருக்கிறது. ஒருவருடைய திருமண வாழ்க்கை வசந்த சோலையாகவும், மற்றொருவருடைய திருமண வாழ்க்கை பாவைவனமாகவும் இருப்பதை நாம் கண்கூடாகவே காண்கிறோம். வசந்தசோலையாய் இருக்கும் தோட்டத்தில் (குடும்பத்தில்) கணவனும், மனைவியும் சேர்ந்து நிச்சயமாய் பாடுபட்டு வளர்த்து, விழிப்புடன் தோட்டத்தைப் பாதுகாத்திருப்பார்கள். இதற்கு மாறாக, உங்கள் திருமண உறவு பாலைவனமாய் மாறுவதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும்? அதற்கு நீங்கள் கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் சத்தம்போட்டு திட்ட வேண்டிய அவசியமில்லை.....

நீங்கள் ஒன்றும் செய்யாமலிருந்தாலே உங்கள் குடும்ப உறவு பாலைவனமாய் மாறிவிடும்!

**ஜெபம்** : *பரம தந்தையே! 'குடும்பத்தை' ஓர் பயிரிட்டுபாடுபடும் தோட்டமாய் காண்பித்ததற்கு உமக்கு நன்றி! கனியுள்ள தோட்டமாய் எங்கள் குடும்பம் மாறுவதற்கு பிரயாசப்பட அர்ப்பணிக்கிறோம்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**குடும்பத்தை கணவனே தலைமைதாங்க வேண்டும்!**

மானிடவர்க்கத்தில் ஒருவரும் செய்திடாத "தீர்மானிக்கும் முதல் தீர்மானத்தை" ஏவாள் செய்துவிட்டாள்! அவள் அன்று எடுத்த முக்கிய அத்தீர்மானத்தை, தன் கணவனிடம் ஆலோசனைகூட கேட்காமல் எடுத்துவிட்டாள். இங்குதான் பாவம் உள்ளே பிரவேசித்தது! இங்குதான் "பாலைவனம்" தொடங்கியது!! இந்த உண்மையை மனைவியாக இருக்கும் நீங்கள் யாவரும் எப்போதும் மனதில் கொள்ளவேண்டும். அவ்வேளையில் ஏவாள் சாத்தானிடமிருந்து உண்மையில் எதைப் பெற்றாள் தெரியுமா? ஆளுகைக்கு அடங்கியிருக்க விரும்பாத முரட்டாட்டமான "சாத்தானின் ஆவியையே" தனக்கென வாங்கிக் கொண்டாள்!

ஏவாள் வஞ்சிக்கப்பட்டபோது அவள் ஒன்றும் தோட்டத்தில் தனியாய் இல்லை! அவளோடு ஆதாமும் நின்று கொண்டுதான் இருந்தான். எனவேதான், ஸ்திரீயானவள் அந்த விருட்சத்தை நல்லதென்று கண்டு, "அதன் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்!" (ஆதி.3:6) என நாம் வாசிக்கிறோம். இந்த இடத்தில் தேவன் குடும்பத்திற்கு நியமித்த தலைமையை மனைவி எடுத்துக் கொள்வதை, தன் கண்களுக்கு முன்பாகவே ஆதாம் பார்த்துக் கொண்டிருந்தான். அவன், தேவன் தனக்குக் கூறியதை ஏவாளிடம் எடுத்துக்கூறி "அக்கனியைத் தொடாதே, அது பாவமானது!" எனக் கூறினானா? இல்லை. அவன் தன் மனைவியைத் தடுக்கவில்லை. எனவேதான் தேவன் மிகுந்த வருத்தத்துடன் "நீ உன் மனைவியின் வார்த்தைக்கு செவிகொடுத்து விட்டாயே!" என ஆதாமைப் பார்த்து கூறினார் (ஆதி.3:17). ஆம், இன்றும் அநேக கணவன்மார்கள் சாத்தான் தங்கள் மனைவியை ஆட்கொண்டு "அவள் தலைமையேற்று செய்வதை சும்மா நின்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்".

ஒரு மிக முக்கியமான பாடத்தை இங்கு நாம் கற்றுக்கொள்ள முடிகிறதல்லவா? ஆதியிலேயே தேவன், குடும்பத்தில் கணவனைத் தலைவராகவும், மனைவி அத்தலைமைக்கு மகிழ்ச்சியுடன் அடங்கியிருக்கும்படியும் ஏற்படுத்தியிருந்தார். அவள் அடங்கி யிருக்காமல் தானாகவே ஒரு தீர்மானத்தை எடுக்கக் கூடாது. ஏவாளோ தன் கணவனிடம் ஒரு ஆலோசனைகூட கேட்கவில்லை! ஆதாம் அவளோடுதான் தோட்டத்தில் நின்று கொண்டிருந்தான். "தன் புருஷனிடத்தில் கேட்போமே" என்ற ஒரு சிறிய சிந்தைகூட இல்லாமல்..... சாத்தானிடம் கலந்தாலோசித்து அவளே ஒரு முடிவு எடுத்துவிட்டாள். நாம் அப்படி இருக்கலாகாது!

**ஜெபம்** : *பரலோக தகப்பனே! குடும்பத்தில் எங்கள் ஒவ்வொருவர் பொறுப்பையும், ஸ்தானத்தையும் இழந்திடாது வாழ கிருபை செய்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**'அடங்கியிருக்கும் ஆவி' கொண்ட மனைவியே தன் குடும்பத்தை கட்டுவாள்!**

*குடும்பத்திலுள்ள மனைவியர்கள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் திடன் கொண்ட மனைவியராய் மாற விரும்பினால் "அடங்கியிருக்கும் ஆவியை" எல்லாச் சூழ்நிலையிலும் பெற்றுக் கொள்ளும்படி நாட வேண்டும். தனக்குத் தரப்பட்ட ஆளுகைக்கு அடங்கியிருக்கும் ஆவி கிறிஸ்துவின் ஆவியே ஆகும். இதைத்தான் 1 பேதுரு 3:1-ல் "அந்தப்படி (இயேசுவைப் போலவே) மனைவிகளே உங்கள் சொந்தப் புருஷர்களுக்கு கீழ்ப்படிந்திருங்கள். இவ்வாறு அடங்கி கீழ்ப்படிந் திருப்பதில் வல்லமை இருக்கிறபடியால், உங்கள் புருஷர்கள் திருவசனத்திற்கு கீழ்ப்படியாதவர்களாய் இருந்தாலும் அப்படிப் பட்டவர்களுக்கும் எப்போதும் அடங்கியிருங்கள்" எனக் கூறப் பட்டிருப்பதைக் காண்கிறோம்.*

*"புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள், புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளால் அதை இடித்துப் போடுகிறாள்" (நீதி.14:1). இந்த வசனத்தில் புத்தியுள்ள கணவன் என்று எழுதப்படவில்லையே!*

*ஏனென்றால் ஒரு மனைவி அடங்கியிருக்கும் ஆவியை பெற்றிருப்பாளா? அல்லது பெற்றிருக்க மாட்டாளா? என்பதை வைத்தே வீடு கட்டப்படுவது நிர்ணயிக்கப்படுகிறது!*

*தன் வீட்டில் தேவனுடைய பிரதிநிதியாய் இருக்கும் தன் கணவனின் ஆளுகைக்கு விரோதமாய் ஒரு ஸ்திரீ முரட்டாட்ட ஆவியைக் கொண்டிருந்தால் அவள் உண்மையில் தன் சொந்த வீட்டையே இடித்துப் போடுகிறவள். இது போன்றவளை "புத்தியில்லாத அல்லது பைத்தியம் போன்ற ஸ்திரீ" எனக் கூறுவதில் எவ்வித பிழையுமில்லை. ஏனெனில் இவள் தன் வீட்டு ஜன்னல்களையும், சுவர்களையும் ஓர் பைத்தியத்தைப் போல் உடைத்து இடித்துக் கொண்டிருக்கிறாள்! ஞானமுள்ள "அடங்கியிருக்கும் ஆவியுடைய" மனைவியர் கொண்ட நல்ல பக்தியுள்ள குடும்பங்களாய் திரளான கிறிஸ்தவ குடும்பங்கள் கட்டப்பட தேவன் கிருபைசெய்வாராக!*

**ஜெபம்** : *அன்புள்ள தந்தையே! மனைவியர்களின் முக்கிய பங்காகிய கணவனுக்கு "அடங்கி இருக்கும்" நல்ல ஆவியை தயவாய் தந்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**நம் பிழைமாத்திரமே உணர்ந்து வாழ வேண்டும்!**

இயேசுவை சற்று நோக்கிப் பாருங்கள். அவர் ஒருதடவைகூட தன் விரலை யார் மீதும் சுட்டிக்காட்டவேயில்லை. அவர் ஜனங்களின் பாவத்திற்கான குற்றத்தைத் தன்மீதே ஏற்றுக்கொண்டார்! ஒன்று அல்லது இரண்டு ஜனங்கள் அல்ல.... இவ்வையகத்தில் வாழும் எல்லா ஜனங்களின் பாவத்திற்கான குற்றங்களையும், அவர் தன்மீதே ஏற்றுக்கொண்டார். ஆனால் உண்மையில் அவைகள் அவருடைய சொந்த பாவமல்ல!! "குற்றம் தன்னுடையதாய் இல்லாதிருந்தும்" அவைகளைத் தன்மீது ஏற்றுக்கொள்ளும் ஆவிதான் கல்வாரி சிலுவையின் ஆவியாகும்!! இந்த ஆவியை நம்முடைய குடும்பங்களில் நாம் பெற்றுவிட்டால், அக்குடும்பம் வசந்தசோலையாய் நிச்சயம் மாறிவிடும்.

எப்படியெனில், அக்குடும்பத்தில் உள்ள கணவனும், மனைவியும் தன்னைத்தானே நியாயந்தீர்க்கும் செய்தியினால் இறுக பற்றப்பட்டு விட்டால் அப்படியாகும்! "நியாயத்தீர்ப்பு முதலாவது தேவனுடைய வீட்டிலே துவங்குங்காலமாய் இருக்கிறது" (1பேதுரு 4:17) என நாம் வாசிக்கிறோம். இந்த வசனம் உங்கள் வீட்டை நீங்கள் எவ்வாறு தேவனுடைய வீடாய் மாற்றியமைக்க முடியும் என்பதைத் தெளிவாய் எடுத்துக் கூறுகிறது.

உங்களை நீங்களே நியாயந்தீர்த்து, ஒருபோதும் பிறரை சுட்டிக்காட்ட உங்கள் விரலை நீட்டாதிருந்தால், உங்கள் வீடு தேவனுடைய வீடாய் மாறும் என்பதில் சந்தேகமேயில்லை.

ஆம், நீங்கள் ஆதாமைப் போல் விரலை நீட்டாமல், "ஆண்டவரே, இச்சூழ்நிலையில் நிச்சயம் என்னிடம் ஏதாவது தவறு இருக்கக்கூடும். ஏனென்றால், நான் தேவனல்ல! நான் இன்னமும் இயேசுவைப் போல் மாறவில்லை. எனக்கு வாழ்க்கைத் துணையாய் இருப்பவரிடம் 99% தவறு இருந்து என்னிடம் 1% மட்டுமே தவறு இருக்கக்கூடும். நான் அந்த 1% தவறைக் காண்பதற்கு உதவி செய்யும்" என்று தன்னை மாத்திரம் நியாயந்தீர்ப்பவர்களே தேவனுக்கு முன்பாய் நின்று ஜீவிப்பவர்கள். ஆ, இந்த வீடு "தேவனுடைய வீடாய்" மாறுவது அதிக நிச்சயமல்லவா!!

**ஜெபம்** : பரலோக பிதாவே! பிறருடைய பிழையையே கண்டு வாழ்ந்த எங்கள் ஜீவியத்தை மாற்றி, இன்றிலிருந்து எங்கள் பிழைகண்டு திருந்தி, எங்கள் வீடு தெய்வீகமாய் மாற உதவிபுரியும், ஆமென்.

**ஒருவருக்கொருவர் கசப்பை அனுமதித்துவிடக் கூடாது!**

நாவைக் குறித்து கவனம் கொள்ளும் புத்திமதிகளை குடும்பத்திலுள்ள கணவனும் மனைவியும் தங்களுக்குரியதாய் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால், கொலோசெயர் 3:19, "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், அவர்கள் மேல் கசந்து கொள்ளாதிருங்கள்" என நாம் வாசிக்கிறோம். இந்த வசனம் புருஷர்களாகிய நீங்கள் கசப்பான வார்த்தையைப் பேசுவதை மாத்திரம் குறிப்பிடவில்லை. மாறாக, நீங்கள் உங்கள் இருதயத்திற்குள் கசப்பாயிருப்பதையே இவ்வசனம் குறிப்பிடுகிறது! நீங்கள் ஒரு வார்த்தையும் பேசாமலே "கசப்பான ஆவி" கொண்டவர்களாய் இருக்க முடியும். இதைத்தான் எபிரெயர் 12:15-ல் "கசப்பான வேர்" என வேதம் குறிப்பிடுகிறது. இக்கசப்பு உங்கள் உதடுகளில் "கனிகளாய்" இன்னமும் தோன்றவில்லைதான்! ஏனெனில் இக்கசப்பு உங்கள் உள்ளத்தில் ஆரம்ப வேராக மாத்திரமே உள்ளது. உங்கள் மனைவி ஏதோ செய்த அல்லது பேசியவைகள் உங்கள் உள்ளத்திற்குள் கசப்பை உண்டுபண்ணியிருக்கக்கூடும். அல்லது "இவள் ஏன் இன்னமும் தன் பெற்றோர்களோடு பிடிப்பு கொண்டவளாய் இருக்கிறாள்" என்ற சிறிய கசப்பான எண்ணம் உங்கள் உள்ளத்தில் தோன்றியிருக்கக்கூடும். இவைகளை நீங்கள் பேசவில்லைதான்! ஏனெனில், உங்கள் வீட்டில் வாக்குவாதமும் சண்டையும் உண்டாகக் கூடாதே என்ற எண்ணம் உங்களுக்குள் இருந்திருக்கலாம். ஆனால் "கசப்பின் வேர்" உங்கள் இருதயத்திற்குள் முளைத்துவிட்டதே!

இந்த வேர் அப்படியே இருந்துவிடும் என்று எண்ணுகிறீர்களா? நீங்கள் விரும்பாவிட்டாலும் கூட இந்த வேருக்கு சாத்தான் தண்ணீர் ஊற்றி அதை வளரச் செய்துவிடுவான். இவ்விதமாய் கசப்பின் வேரை செழித்து வளரும்படிச் செய்வதற்கு சாத்தான் எப்போதுமே ஆர்வம் கொண்டவனாயிருக்கிறான். கசப்பின் வேரைக் களைவதற்கு நீங்கள் கவனம் கொள்ளாதபடியால், திடீரென்று எதோ ஒரு நாளில் கசப்பான வார்த்தைகளோ அல்லது செய்கைகளோ உங்களிடமிருந்து வெளிப் பட்டுவிடும்! ஆம், குற்றம்சாட்டும் ஆவிக்கும், கசப்பான ஆவிக்கும் எதிராக உங்கள் இருதயத்தை காத்துக் கொள்ள வேண்டும். இவையாவும் உங்கள் இருதயத்திற்குள் தோன்றி முளைத்திடும் போதே நீங்கள் அதைப் பிடுங்கி எறிந்துவிட வேண்டும்!

**ஜெபம் :** பரம தகப்பனே! குடும்பத்தில் ஒருவருக்கொருவர் யாதொரு சூழ்நிலை யிலும் "கசப்பான" வேர் தோன்றிடாமல் எங்களை உமது வல்லமையால் காத்துக் கொள்ள கிருபைதாரும்! ஆமென்.

## 'கர்த்தருடைய ஜெபம்' நம் ஜீவியத்தையே மாற்ற வேண்டும்!

*ஆவிக்குரிய மனிதன், ஒரு ஈவுகளைக்கூட தேவனிடத்தி லிருந்து பெறாவிட்டாலும், ஈவுகளை வழங்குகிறவர்மீது கொண்டிருக்கும் அவனின் சிநேகமோ சிறிதுகூட குறைந்திடாது!!*

*நாம் ஆவிக்குரிய மனம் உடையவர்களாயிருக்கிறோமா? இல்லையா? என்பதை கண்டுகொள்வதற்கான பரிசோதனைகளில் கீழ்காணும் கேள்விக்குரிய விடையும் ஒன்றாகும் : "தேவன் நம் ஜெபங்களுக்குப் பதில் தருவார் என எதிர்பார்த்திருந்த ஜெபத்திற்கு பதில் தராவிட்டாலும், மனநிறைவோடு, இருப்பதுபோதும் என்று திருப்தியாக இருக்கின்றோமா?"*

*இன்று ஏன் அநேக விசுவாசிகள் தங்கள் ஜெபங்களுக்குத் தேவன் பதிலளிக்காததினிமித்தம் குறை கூறி முறுமுறுக்கிறார்கள்? ஏனென்றால் இவர்கள் அவரின் ஈவுகளை மாத்திரமே விரும்புகிறார்கள். ஈவுகளை வழங்குகிறவர் மீதோ இவர்களுக்கு நாட்டம் இருப்பதில்லை! இப்படிப்பட்டவர்களே கெட்டகுமாரனைப் போலிருக்கிறார்கள். இந்த கெட்டகுமாரன் தன் தகப்பனிடமிருந்து பெற விரும்பியதைப் பெற்றவுடன், தகப்பனின் சமூகத்தை விட்டு விலகி உல்லாசமாய் இருக்கச் சென்றுவிட்டான். இவனுக்கு வேண்டியதெல்லாம் தகப்பனின் சொத்துக்கள்தான்! இவன் தகப்பனின் ஈவுகளைத் தின்று தீர்த்த பின்பே மீண்டுமாகத் தகப்பனிடம் வந்தான். அதுவும், ஏதாவது தகப்பனிடம் கிடைக்கும் என்ற எண்ணத்துடனேதான் வந்தான்!! (லூக்கா 15:11-24).*

*கர்த்தருடைய ஜெபத்தில் 50% தேவனையும் அவரின் மகிமையையும் குறித்தே இருப்பதைக் கவனித்தீர்களா! அவர் கற்றுத்தந்த ஜெபத்தின்படி ஜெபிக்க வேண்டும் என தீர்மானித்து, ஓர் சடங்காச்சாரமான முறையில், "ஆண்டவரே, உம்முடைய நாமம் மகிமைப்படுவதையே முதலாவதாக நானும் விரும்புகிறேன்" என்ற ஒரு வாக்கியத்தை ஒரு நிமிடம் ஜெபித்துவிட்டு, அடுத்த ஒரு மணிநேர ஜெபத்தில் . . . . நாம் விரும்புகிற உலகப்பொருட்களின் நீண்டப்பட்டியலை அவரிடம் கொடுப்பது முறையாகுமா? எனவே இங்கு நாம் கூறுவதெல்லாம், ஓர் குறிப்பிட்ட ஜெப வடிவத்தை அல்ல! மாறாக, நம் முழு நோக்கமும் மாற்றப்பட்டு, தேவனும்-அவரின் மகிமையுமே பிரதானச் சிந்தையாக நம்மில் இருப்பதற்கு நம் மனம் புதிதாக சீர்பொருந்தப்பண்ணப்பட வேண்டும். இந்த மாற்றத்தையே கர்த்தருடைய ஜெபம் நம்மில் கொண்டுவர வேண்டும்!*

**ஜெபம்** : *அன்பின் பிதாவே! உம்மையும் உம் மகிமையை தேடுவதுமே எங்கள் ஜெபவாழ்வின் மையமாய் மாறிட அருள் செய்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**தேவனுடைய ராஜ்யம் வந்திட மெய்யான ஏக்கம் வேண்டும்!**

*உம்முடைய ராஜ்யம் வருவதாக என்ற ஜெபத்தை, இவ்வுலகத்தின் பொல்லாத தீமைகளைக் கண்டு சலித்தவர்கள் மாத்திரமே ஜெபித்திட முடியும். "நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்" (2 பேதுரு 3:13) என பேதுரு வாஞ்சையோடு கூறினார்.*

*இன்று இவ்வுலகத்தை நிறைத்திருக்கும் பயங்கர கொடூரத்தையும் (Violence) சீரழிந்திருக்கும் கற்பு ஒழுக்கத்தையும் (Immorality) சற்று ஏறிட்டுப்பாருங்கள். இன்று நாம் செய்தித்தாள்களைப் படிக்கும்போது நம் இருதயத்திலிருந்து, "ஆ, என் பிதாவே! உம்முடைய ராஜ்ஜியம் வருவதாக!! என் தனிப்பட்ட சௌகரிய வாழ்விற்காக உம்முடைய ராஜ்ஜியம் வர நான் விண்ணப்பிக்கவில்லை. மாறாக, வெகு சீக்கிரத்தில் உம்முடைய நீதியின் ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டு, உம்முடைய மகிமைக்கென்றே படைக்கப்பட்ட இந்த பூமியில் உம்முடைய நாமம் என்றென்றும் மகிமைப்பட்டிட வேண்டும்!" என்ற ஜெபமே புதுவெள்ளமெனப் பொங்கியெழுந்திட வேண்டும்! கடைசி நாட்கள் நோவாவின் நாட்களைப்போல் இருக்கும் என இயேசு கூறினார். அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த முழு உலகத்திலும், நீதியுள்ள ஓர் தனி மனிதனாக நோவா அன்று காணப்பட்டான். அவன் தன்னைச் சுற்றி வாழ்ந்த மனிதர்களின் பொல்லாத பாவங்களைக் கண்டு தன் மனதில் வேதனை கொண்டவனாய் நீதியைப் பிரசங்கித்தான் (2 பேதுரு 2:5). இந்த நோவா தன் இருதயத்தின் ஆழத்தில் நீதி வாசம் செய்வதை வாஞ்சிக்கவும், அதைப் பிரசங்கிக்கவும் செய்தான். அன்றிருந்த 'நோவாவின் ஜெபமும்' "உம்முடைய ராஜ்ஜியம் வருவதாக!" என்றே இருந்திருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.*

*இன்று எல்லா விசுவாசிகளுமே, "கிறிஸ்து சீக்கிரமாக திரும்ப வருவார் என்றும், இப்பூமியில் தன் ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்றும்" கூறத்தான் செய்கிறார்கள். ஆனால் இவ்விதம் அவர்கள் கூறுவதை உண்மையாகவே விசுவாசிக்கிறார்களா என்பதைக் கண்டுகொள்வதற்கு என்ன அத்தாட்சி இருக்கிறது? இங்கு 1 யோவான் 3:3-ல், "அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்" என்றே பறைசாற்றுகிறது. ஆகவே கிறிஸ்து இப்பூமிக்கு திரும்ப வருவார் என உண்மையாகவே ஒருவன் விசுவாசிக்கிறானா என்பதற்கு அத்தாட்சி, "தன் மணவாளனுக்காகத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளும் ஓர் மணவாட்டியைப்போல் துரிதமாய் ஆயத்தப்படுவதே" அந்த அத்தாட்சியாகும்!*

*ஜெபம் : பரம தந்தையே! சீரழிந்த இன்றைய சமுதாய கேட்டிலிருந்து நாங்கள் விடுதலையாவது மாத்திரமல்ல, இவை அனைத்தையும் மாற்றி, உம்முடைய இராஜ்ஜியம் இந்த பூமியில் வரவேண்டும் என்பதே எங்கள் ஜெபம்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## அன்றாட ஜீவியத்தில் தேவனோடு சேர்ந்து வாழ வேண்டும்!

உங்கள் வீட்டின் வாழ்க்கையை (Home Life) எடுத்துக் கொள்ளுங்கள்! நீங்கள் இப்போது வீட்டில் அமர்ந்திருக்கிறீர்கள்! நீங்கள் எழுந்து உங்கள் வீட்டு ஜன்னல் வழியாய் வெளியே பார்க்கிறீர்கள். அங்கே வீதியிலிருந்து இயேசு கிறிஸ்துவே உங்கள் இல்லத்திற்கு வருவதைக் கண்டுவிட்டீர்கள்! இப்போது உங்கள் நடவடிக்கைகள் என்னவாயிருக்கும்? இச்சமயம் நீங்கள் துரிதமாய் செய்திடும் நடவடிக்கையே, தேவனுடைய ராஜ்ஜியம் இப்பூமியில் வருவதற்கு ஆயத்தமாயிருக்கிறீர்களா? இல்லையா? என்பதை அறிந்துகொள்ளும் ஓர் நல்ல பரீட்சையாகும். நீங்கள் இயேசுவைக் கண்ட மாத்திரத்தில், உங்கள் புத்தக அலமாரியிலுள்ள சில புத்தகங்களை இயேசு கண்டுவிடாதபடி அவைகளை மிகுந்த பதட்டத்தோடு மறைக்க வேண்டியதுள்ளதா? ஒருவேளை நீங்கள் உங்கள் வீட்டில் 'கேபிள்-டெலிவிஷன்' வைத்திருப்பீர்களென்றால், அதையும் விரைந்து சென்று மறைக்க வேண்டியிருக்கும்! நடந்துவந்த இயேசு இப்போது வீட்டிற்குள் பிரவேசித்து அமருகிறார். இப்போது நீங்கள் வழக்கமாய் சாப்பாட்டு மேஜையை சுற்றி உட்கார்ந்துகொண்டு புறங்கூறும் வம்பான கதைகளையெல்லாம் ஒரு துளிகூட சம்பாஷித்துவிடமாட்டீர்கள்!? இவ்விதம் இயேசு உங்கள் வீட்டில் தங்கியிருக்கும் வரை உங்கள் குடும்பத்தில் உள்ளவர்களோடும், வேலை செய்பவர்களோடும், உங்கள் வழக்கமான சம்பாஷணைகளில் தொனிக்கும் கடுமையான வாசகங்களையெல்லாம் தவிர்த்துவிட்டு அவர்களிடம் 'அன்பாகவும்' 'மரியாதையாகவும்' நடந்துகொள்ள விசேஷ கவனம் எடுக்க வேண்டியுள்ளதா? மேலும் இயேசு உங்கள் வீட்டில் அமர்ந்திருக்கும் போது உங்கள் எல்லா நண்பர்களும் வந்து, இயேசுவைச் சந்தித்துப் பேசுவதற்காக நீங்கள் மகிழ்ச்சியடைய முடிகின்றதா? அல்லது இயேசு உங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கும்போது 'குறிப்பிட்ட ஒரு சில நண்பர்கள்' உங்களைச் சந்திக்க உங்கள் வீட்டிற்கு வந்துவிடக் கூடாது என்ற அங்கலாய்ப்பிலுள்ளீர்களா? இன்றுபோலவே இயேசு உங்கள் வீட்டில் சதா காலமாய் தங்கியிருந்தால், நீங்கள் பேரானந்தம் கொள்ள முடியுமா? அல்லது, அவர் உங்கள் இல்லத்தை விட்டுச் சென்றவுடன்... அப்பாடா! நல்லவேளை போய்விட்டார்!! என பெருமூச்சு விடுகிறீர்களா?

இந்நிகழ்ச்சிக்கு உங்கள் நெஞ்சைத் தொட்டு நேர்மையாகப் பதில் கூறுங்கள்! நம் வீட்டில் ஏதோ சில நாட்கள் மாத்திரம் அவர் தங்கியிருப்பதை மிகுந்த பாரமாக எடுப்போமென்றால், நித்தியத்தில் அவரோடு சதா எங்ஙனம் வாழ முடியும்?!

**ஜெபம் :** *பரம தகப்பனே! எங்களின் அன்றாட ஜீவியத்தில் உம்மோடு சேர்ந்து வாழ பிரியம் இல்லாமல் 'நித்தியத்தில்' உம்மோடு வாழ்வது எங்ஙனம்? உம்மோடு சேர்ந்து வாழும் தெய்வ பயமுள்ள வாழ்வை இன்று எங்களுக்கு கற்றுத்தாரும், ஆமென்.*

**முதன்மையானதை தேவனுக்கு மனப்பூர்வமாய் தரவேண்டும்!**

ஒரு சமயம், ஒரு விவசாயி தன் மனைவியைப் பார்த்து, "நம் வீட்டுப் பசு, இரண்டு குட்டிகள் போட்டிருக்கிறதே! அவைகளில் ஒரு கன்றுக்குட்டி வெள்ளையாகவும், இன்னொரு கன்றுக்குட்டி ப்ரவுன் (Brown) நிறமாகவும் உள்ளது. இவைகள் வளர்ந்தவுடன் ஏதாவது ஒரு கன்றுக்குட்டியை நம் ஆண்டவருக்கு கொடுக்கலாம்!" எனக் கூறினான். உடனே அவனுடைய மனைவி, "நீங்கள் ப்ரவுன் நிற கன்றுக் குட்டியையா? அல்லது வெள்ளைநிற கன்றுக்குட்டியையா எதை ஆண்டவருக்குத் தரப்போகிறீர்கள்?" எனக் கேட்டாள். அதற்கு அந்த விவசாயி, "இக்கன்றுக்குட்டிகள் வளர்ந்தபின்பு அதைக்குறித்து முடிவு செய்வோம்" என பதில் கூறிவிட்டான். அதேபோல இரண்டு கன்றுகுட்டிகளும் கொழு கொழு என்று வளர்ந்துவிட்டன! திடீரென்று, மிகுந்த வருத்தமான முகத்தோடு விவசாயி தன் வீட்டிற்குத் திரும்பி வந்தான். அவன் தன் மனைவியைப் பார்த்து, "ஓர் துக்கமான செய்தி.... 'ஆண்டவருடைய' ப்ரவுன் கன்றுக்குட்டி செத்துவிட்டது!!" எனக் கூறினான். உடனே அவன் மனைவி தன் கண்களை அகல விரித்து, "நாம்தான் எது ஆண்டவருடைய கன்றுக்குட்டி என முடிவு செய்யவில்லையே? அப்படியிருக்க இறந்த ப்ரவுன் நிற கன்றுக்குட்டிதான் ஆண்டவருடைய கன்றுக்குட்டி என எப்படி அறிந்தீர்கள்?" என ஆச்சரியத்துடன் வினவினாள். அதற்கு அந்த விவசாயி சற்றும் தாமதியாமல், "அடடா, உனக்குத் தெரியாதா? என் மனதில் ப்ரவுன் நிறக் கன்றுக்குட்டியைத்தான் ஆண்டவருக்குத் தரவேண்டுமென நான் முன்பே எண்ணியிருந்தேன். இப்போது 'கரெக்ட்டாக' அந்தக் கன்றுக்குட்டிதான் இன்று காலையில் செத்துவிட்டது!" என துணிந்து பதில் கூறினான்.

இன்று இப்படித்தான் அநேக விசுவாசிகள் இருக்கிறார்கள். இவர்களுக்கு எப்போதுமே, சாகும் கன்றுக்குட்டிதான் – ஆண்டவருடைய கன்றுக்குட்டி! இவ்விதமாய், இவர்கள், "தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராதபடியால்" தங்கள் வாழ்நாள் முழுவதும் ஆவிக்குரிய தரித்திரத்திலேயே தேங்கித் தங்கிவிடுகிறார்கள் (லூக்.12:21).

இன்று உங்கள் ஜீவியத்தின் நிலை என்ன? நீங்கள் தேவனுக்கு மிக அருமையானதைக் கொடுக்காததற்கு எப்போதும் ஏதேனும் சில காரணங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களோ? அப்படியானால் உங்கள் இருதயம் எங்கிருக்கிறது என்பதையே உங்களின் நிலை தெளிவாகக் காட்டுகிறது. உங்களின் முதன்மையான பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கேதான் உங்களின் இருதயமும் இருக்கும்!

**ஜெபம்** : பரம பிதாவே! எங்கள் வாழ்வில், உமக்கே "முதன்மையானதை" தந்து உள்ளத்தில் பரலோக பொக்கிஷம் பெற்றிட எங்களுக்கு தயைசெய்தருளும், ஆமென்.

**இம்மண்ணுக்குரிய ஜீவியத்தில் கவலையில்லாமல் வாழவேண்டும்!**

நம்முடைய எல்லா விருப்பங்களையும் இப்பூமிக்குரியவைகளிலிருந்து விலக்கி பரலோகத்தில் வைத்துவிட்டால்- நாம் கவலை கொள்வதென்பது ஒருக்காலத்தும் நிகழாததொன்றாய் மாறிவிடும் என்பதில் துளியும் சந்தேகமே இல்லை!

ஆகாரத்திற்காக கவலைகொள்ள வேண்டாம் என்றும், "ஆகாரத்தைப் பார்க்கிலும் "ஜீவன்" விசேஷித்தவை அல்லவா?" (மத்தேயு 6:25) என்றும் இயேசு வினவினார். உங்களுக்குத் தழ்மையின் "ஜீவியம்" வேண்டுமா? அல்லது கொழுத்த உணவுப் பதார்த்தங்கள் வேண்டுமா? இன்று ஜனங்கள் தங்கள் ஜீவியத்தில் கிறிஸ்துவைப்போல மறுரூபமாக வேண்டும் என்ற "ஜீவிய" ஆர்வத்தைக்காட்டிலும் உணவின்மீதே அதிக நாட்டம் கொள்கிறார்கள். கிறிஸ்துவைப் போன்று வாழும் ஜீவியத்தைக்காட்டிலும் உணவா விசேஷித்தவைகள்? நிச்சயமாய் இல்லை!

மேலும் என்னத்தை உடுப்போம் என்றும் கவலைப் படாதிருங்கள். "உடையைப் பார்க்கிலும் 'சரீரம்' விசேஷித்தவை அல்லவா?" என இயேசு வினவினார். தேவசித்தம் செய்வதற்கென நம் சரீரத்திற்கு நல்ல சுகத்தைத் தேவன் நமக்குத் தருவார். இவ்வாறு தேவ சித்தத்திற்காக வாழும் சரீரத்தைக்காட்டிலும், உடை முக்கியமல்ல. ஆனால், இன்றோ ஜனங்கள் உடையின்மீதே கவலைகொள்கிறார்கள். உடுத்துவதற்கு இல்லையென்பதற்காக அல்ல, அன்றன்றைக்குரிய "பேஷன்" படி (Fashion) உடுத்த வேண்டுமே என்ற விருப்பமே இவர்களுக்குக் கவலையாக மாறுகிறது. இவ்வாறெல்லாம் இவர்கள் விரும்புவதற்கு காரணமென்ன? தேவனை மகிமைப்படுத்துவதற்கல்ல, ஜனங்களைக் கவர்ச்சிப்பதற்கேயாகும்! நாமோ நம் சரீர சுகத்தைப் பாதிக்கும் தீயபழக்கங்களின்மீதே கவனமாயிருக்க வேண்டும். ஏனெனில் இந்த சரீர வாழ்க்கையின் மூலமாய் நாம் அதிகமான திவ்வியசுபாவம் பெற்று தேவனை மகிமைப்படுத்த அல்லவோ விரும்புகிறோம்! காரியம் இவ்வாறு இருப்பதினிமித்தமே ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் நமக்கு விசேஷித்தவைகளாய் இருக்கிறது! நம்முடைய உணவும், உடையும் எளிமையாய் இருப்பதே சாலச்சிறந்தது ஆகும். தேவனுடைய மகிமையே அல்லாமல், உணவின்மீதும், உடையின்மீதும் நமக்கு விசேஷித்த நாட்டம் ஏதும் இல்லை என்ற பாக்கியமான இடத்தையே நாம் யாவரும் அடைந்திடவேண்டும்!

***ஜெபம்*** *: அன்பின் தந்தையே! உடலைவிட, உணவைவிட.... இந்த சரீர மண்ணின்வாழ்வைவிட மேலான வாழ்வின் நாட்டமே எங்கள் உள்ளம் நிறையட்டும்! உலக கவலை ஒழியட்டும்! அருள் செய்வீராக, ஆமென்.*

## ஸ்தோத்திரத்தோடேகூடிய ஜெபம் வேண்டும்!

*பிலிப்பியர் 4:6-ம் வசனத்தில், "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல்..." என இயேசுவின் கட்டளையை மீண்டுமாய் வலியுறுத்தி பவுல் கூறினார். ஒன்றுக்கும் கவலைப்படாமல் என்ற வாக்கியத்தின் பொருள் "ஒன்றுக்கும் கவலைப்படாமல்" என்பதேயாகும்! அப்படியானால் நம்மை நாள்தோறும் சந்திக்கும் கஷ்டங்களையும், சோதனைகளையும் எவ்வாறு கையாள்வது? சில பிரச்சனைகள் நம்மை கவலைகொள்வதற்கு தூண்டுவதாககூட இருக்கிறதே? நாளை அல்லது அடுத்தவாரம் என்னுடைய பிள்ளை களுக்கோ அல்லது குடும்பத்திற்கோ சம்பந்தப்பட்ட காரியங்கள் என்னைக் கவலைக் கொள்ளத் தூண்டுகிறதே? இப்போது நான் என்ன செய்ய வேண்டும்? அதற்கு விடையை பவுல் அதே வசனத்தில் உடனடியாகக் கூறினார். ஆம், நாம் உடனே ஜெபிப்பதே அந்த விடையாகும்! அதாவது பொதுவான ஜெபம் மாத்திரமல்லாமல், "உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப் படுத்துங்கள்" (பிலிப்பியர் 4:6) என பவுல் புத்தி கூறினார். விண்ணப்பங்கள் என்பதற்குப் பொருள், நாம் குறிப்பாக வலியுறுத்திக்கூறும் தேவைகளேயாகும். அவ்வாறு தேவனுக்குத் தெரியப்படுத்தும்பொழுது "ஸ்தோத்திரத்தோடே" அல்லது "நன்றி செலுத்தி" தெரியப்படுத்த வேண்டுமெனக் கூறினார். அதாவது ஒரு விண்ணப்பப்படிவத்தை பரமபிதாவுக்கு எழுதி (நம்மை கவலை கொள்ளத் தூண்டும் பிரச்சனைகளை எழுதி) அதை அவரிடம் சமர்ப்பிக்கிறோம். அவ்விண்ணப்பப் படிவத்தை நம் பரம தகப்பன் வாங்கியவுடன், அவர் அவ்வாறு வாங்கியதற்காக "நன்றி" (Thanks!) என நாம் கூறுகிறோம். இவ்வாறு ஸ்தோத்திரம் அல்லது நன்றி சொல்வதே விசுவாசத்தின் மாறாத அடையாளமாகும். என் விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்ட தேவன் ஆவன காரியத்தை நிச்சயமாய் செய்வார் என்ற உறுதியான விசுவாசம்! பவுல் புத்தி கூறியபடியே நீங்கள் செய்துவிட்டால், "எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" என அவர் உறுதிபட கூறினார்.*

***ஜெபம்*** : *பரம பிதாவே! எந்நிலையிலும் உம்மிடம் நெருங்கி, ஸ்தோத்திரத்தோடே விண்ணப்பம் செய்து சமாதானம் பெற்றிடும் விசுவாசத்தை எங்களுக்குத் தந்தருளும், ஆமென்.*

**தேவனோடு சீர்பொருந்தி அவர் சத்தம் கேட்க வேண்டும்!**

*"கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காள சத்தம் போன்ற பெரிதான ஒரு சத்ததைக் கேட்டேன்" (வெளி.1:10) என யோவான் கூறுகிறார். சற்றே கவனியுங்கள்....! யோவானுக்குக் கிட்டிய இப்பொற்பாக்கியம் நமக்கும் உண்டு! நான் பரிசுத்தாவிக்குள்ளாய் நிறைந்து வாழ்ந்து, பாவத்திற்கு அதிகம் உணர்வுள்ளவனாகவும்; சுத்த மனசாட்சியைக் காத்துக் கொள்பவனாகவும்; ஆண்டவருடைய பார்வையில் தாழ்மையில் தரித்து நடப்பவனாகவும் இருந்தால், நானும் ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்க முடியும்!.... ஓர் வானொலிப்பெட்டியைப்போல!! நாம் கேட்கமுடியாத பல சப்தங்கள் நிறைந்த ஓர் அறையில், வானொலிப் பெட்டியை இயக்கி அதைச் சரியான அலைவரிசையில் வைத்தால் "கணீர்" என்று அச்சப்தத்தைக் கேட்கிறோமே, அதுபோல்தான்!!*

*காரியம் இப்படியாய் இருக்க, இன்று அநேக விசுவாசிகளிடம் காணும் பரிதாபம் கேளீர்! தேவன் அவர்களோடு பேசுகிறார், ஆனால் அவர்களோ கேட்பது இல்லை! ஏன்? அவர்களின் வானொலிப்பெட்டி "சரியான அலைவரிசையில்" இல்லை!? அது, உலகத்தின் சார்பில் முடுக்கப்பட்டுள்ளது... எப்படி அதிக பணம் சம்பாதிக்கலாம்? என்னைக் குறித்து தவறாய் தூற்றிக்கொண்டிருக்கும் அந்த மனிதனிடமிருந்து என்னை நியாயப்படுத்தித் தற்காத்துக்கொள்வது எப்படி?... என் குடும்ப சொத்தின் பங்கைப் பெறுவது எப்படி?.... இப்படி ஏராளம், ஏராளம்! இதனிமித்தம், சாத்தான் 24-மணி நேரமும் ஒலிபரப்பிக் கொண்டிருக்கும் பொய், கசப்பு, பதட்டம்... ஆகிய அவனின் குரலையே கேட்கிறார்கள்!!*

*இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய சத்தத்தைக் கேட்கவே முடியாது. ஆனால் இவர்களோ, "தேவன் எங்களிடம் பேசவில்லையே?" என்பார்கள். அவர் பேசிக்கொண்டுதான் இருக்கிறார்! உங்கள் வானொலிப்பெட்டி சரியான அலைவரிசையில் முடுக்கப்படவில்லை, இதுதான் உண்மை! யோவானும் ஆவிக்குள்ளாக இல்லாமலிருந்தால், அவரும் ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டிருக்க முடியாது. ஆனால் யோவானோ, "நான் ஆவிக்குள்ளாய் இருந்தேன். அவருடைய சத்தத்தைக் கேட்டேன்" என கெம்பீரித்துக் கூறுகிறார். நாம் கடைசி நாட்களை நெருங்கிவிட்டோம். கிறிஸ்துவின் வருகையும் மிகவும் சமீபமாகி விட்டது. பாவத்திற்கு உணர்வுள்ளவர் களாய் இருந்து, சுத்த மனசாட்சி கொண்டிருங்கள். தாழ்மையில் தரித்து தேவனுடைய பார்வையில் ஜீவியுங்கள்! ஆண்டவரின் சத்தத்தை தொடர்ச்சியாய் கேளுங்கள்!!*

**ஜெபம் :** *அன்பின் தகப்பனே! நாள்தோறும் உமது குரல் கேட்டு வாழுவதற்கு, எங்கள் இருதயம் உம்மோடு செம்மையாய் வாழ்ந்திட அனுகிரகம் செய்தருளும், இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**உன்னதங்களில் உயர்த்தப்பட்டவரை நம் கண்கள் காண வேண்டும்!**

*தீர்க்கதரிசி எலியா உயிருடன் "பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட" நிகழ்ச்சியை 2 இராஜாக்கள் 2:1-22 வசனங்களில் நாம் வாசிக்கிறோம். அவன் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு, அவனுடைய ஊழியத்தை எலிசா ஏற்றுக்கொள்வான் என தேவன் எலியாவிடம் முன்கூட்டியே கூறியிருந்தார். இதற்கு ஒப்பனையாகவே, ஆண்டவர் இயேசுகிறிஸ்து இந்த பூமியிலிருந்து "பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதும்" தான் மேற்கொண்ட ஊழியப் பணியை தன் சீஷர்களிடத்தில் ஒப்படைத்துச் சென்றார்! எலிசா எவ்வாறு எலியாவின் ஆவியைப் பெற்றானோ, அதேபோல் சீஷர்களும் கிறிஸ்துவின் ஆவியை பெந்தெகொஸ்தே நாளில் பெற்றார்கள் என அப்போஸ்தலர் 1:1-9 வசனங்களில் நாம் காண்பது எத்தனை பரவசமாயிருக்கிறது!!*

*தீர்க்கதரிசியின் புத்திரர்கள் எலிசாவிடம் வந்து "கர்த்தர் இந்நாளில் உன் எஜமானாகிய எலியாவை உன்னைவிட்டு எடுத்துக்கொள்வார்" என கூறினார்கள் (2 இராஜா.2:3,5). ஆனால் எலியா எடுத்துக்கொள்ளப்பட்ட பின்போ, "அவர் மெய்யாகவே பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்!" என்பதை அவர்கள் விசுவாசிக்கவில்லை! அதற்கு பதிலாக, இந்த பூமியிலேயே அங்கும் இங்கும் அவரைத் தேடினார்கள்! இதைப்போலவே, இன்றும் திரளான கிறிஸ்தவர்கள் "எங்கள் ஆண்டவர் பரலோகத்தில் இருக்கிறார்!" என்றே கூறுகிறார்கள். ஆனால், அண்டசராசர சர்வ சிருஷ்டிப்பிற்கும் மேலாக ஆண்டவர் இயேசு உயர்த்தப்பட்டு இருக்கிறார் என்ற உண்மையை இவர்களின் கண்கள் 'நிஜமாய்' காணவில்லை!! எலிசாவைப் பார்த்து "நான் உன்னைவிட்டு பரத்திற்கு மேலாக எடுத்துக்கொள்ளப்படுகையில்,* **என்னை நீ கண்டால் மாத்திரமே** *என்னுடைய ஆவியின் இரட்டிப்பான வரம் உனக்குக் கிடைக்கும்!" என்று எலியா கூறியிருந்தார்.*

*ஆம், சர்வ சிருஷ்டிப்பிற்கும் மேலாக ஆண்டவர் இயேசு உயர்த்தப்பட்டு இருப்பதை நம் விசுவாசக் கண்களால் கண்டால் மாத்திரமே, நாமும் ஆவியின் நிறைவை பெற்றுக்கொள்ள முடியும்!*

*இவ்வாறாக, கிறிஸ்து வானங்களுக்கு மேலாய் உயர்த்தப்பட்டதை எபேசுவின் விசுவாசிகள் தங்கள் மனக்கண்களால் காண வேண்டுமென்றே பவுல் அவர்களுக்காக ஜெபித்தார் (எபே.1:18-23).*

**ஜெபம்** : *அன்புள்ள பரம தகப்பனே! மரித்து உயிர்த்து உன்னதங்களில் உயர்த்தப்பட்ட ஆண்டவர் இயேசுவின் "சர்வ வல்லமையை" நாங்கள் நிஜமாய் கண்டு, ஆவியின் வல்லமையை நாங்களும் பெற்றிட கிருபைதாரும், ஆமென்.*

## கிறிஸ்துவின் தாழ்மையான சிந்தை வேண்டும்!

*நம்மை நாமே தாழ்த்துவதுதான் ஆவிக்குரிய ஜீவியத்தில் முதல் நிபந்தனையாய் இருக்கிறது. இதை தேவனுடைய வார்த்தை குறிப்பிடும்போது "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது.... அவர் அடிமையின் ரூபமெடுத்து.... தம்மைத்தாமே தாழ்த்தினார்" என்றே கூறுகிறது (பிலிப்பியர் 2:5-8).*

*எத்தனையோ காரியங்களைக் குறித்து நாம் பெருமை கொண்டவர்களாய் இருந்திட முடியும். நம்முடைய தகுதியும், நாம் பெற்ற பிரபல்யமும் நமக்கு பெருமையைத் தந்துவிட முடியும். இயேசு இப்பூமியில் "பிரபல்யம்" (Popular) கொண்டவராய் இருந்தாரா? "அவர் அசட்டை பண்ணப்பட்டவரும் மனுஷரால் புறக்கணிக்கப் பட்டவருமாயிருந்தார்!" என்றல்லவா ஏசாயா 53:3 கூறுகிறது! ஆம், இப்பூமியில் நம் ஆண்டவர் இயேசு ஒருபோதும் 'பிரபல்யமான' மனிதனாய் காணப்படவேயில்லை. அதைக்குறித்து இயேசுவே குறிப்பிட்டு கூறும்போது, "எல்லா மனுஷரும் உங்களைக்குறித்துப் புகழ்ச்சியாய் பேசும்போது உங்களுக்கு ஐயோ!" என்றே கூறினார் (லூக்கா 6:26). நம் எஜமானனே அப்படியிருக்க, "சீஷன் எஜமானனைக் காட்டிலும் மேலானவன் இல்லையே!". ஆகவே, நாம் பிரபல்யமாய் இருப்பதை நாடுவதற்கு நமக்கு எந்த உரிமையும் கிடையாது!*

*இதைப்போலவே, நம்முடைய கல்வித் தகுதியை வைத்து நாம் பெருமை அடையலாம்! நம் அழகைக் குறித்து பெருமை அடையலாம்! நம் திறமையை எண்ணி பெருமை அடையலாம்! நம் மூதாதையாரைக் குறித்து பெருமை அடையலாம்! இவை ஒன்றில்கூட இயேசு பெருமை கொள்ளவில்லை என்பதை யோவான் 7:15, ஏசாயா 52:14, யோ. 5:19,30, மத்தேயு 1-ம் அதிகாரம்.... ஆகிய வசனங்களில் வாசித்து அறியுங்கள்.*

*நாம் கட்டிய வீட்டைக்குறித்து கூட நாம் பெருமையாய் இருக்கலாம்! ஆனால், நம் எஜமானனோ "தலைசாய்க்க இடமில்லாதவராய்" இருந்தார் என்றல்லவா வேதம் கூறுகிறது. நம் ஆண்டவராகிய இயேசுவோ எல்லா மனுஷருக்கும் ஓர் அடிமையாய் அல்லவா இருந்தார்! மேஜையில் அமர்ந்திருப்பவர்களோ? பரிமாறுகிறவர் களோ? இவர்களில் யார் பெரியவன்? மேஜையில் அமர்ந்திருப்பவன் அல்லவா பெரியவன்! "ஆனால் நானோ உங்களிடம் பணிவிடை செய்கிறவனாகவே இருந்தேன்!" என்றே இயேசு கூறினார். இயேசு காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த ராத்திரியில், மேல் அறையில், ஓர் சீலையை கட்டிக்கொண்டு தன் சீஷர்களின் கால்களைக் கழுவினாரே! இந்த இழிவான அடிமையின் வேலையை சீஷர்களில் ஒருவர்கூட செய்திடத் துணியவில்லையே!! இந்த குருவின் சிந்தையே நம் அனைவருக்கும் வேண்டும்!*

**ஜெபம்** : *பரம பிதாவே! எங்கள் குருவாகிய இயேசுவின் தாழ்மைக்கு நாங்கள் வெகுதூரமாய் நிற்கிறோம்! மனந்திரும்பி, உம்மைப்போல் தாழ்மையாய் வாழ கற்றுத்தாரும், ஆமென்.*

**'தேவனே எனது விருப்பம்' என வாழ்பவர்களே மாறாத மகிழ்ச்சி கொண்டவர்கள்!**

*தாவீது தன்னுடைய சங்கீதம் 27:4-ம் வசனத்தில் "கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்! நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்!!" என கூறினார். தாவீது ஓர் பேரரசன்! எண்ணற்ற யுத்தங்களை வென்றவன்! ஆகிலும், "ஆண்டவரே, இவைகளில் நான் திருப்தி அடையவேயில்லை. உம்மிடத்தில் நான் விரும்பிக் கேட்பது ஒன்றே ஒன்றுதான்! அந்த விருப்பம், இந்த முழு உலகத்திற்கும் நான் ராஜனாய் வரவேண்டும் என்றோ அல்லது நான் புகழ் ஏணி ஏறவேண்டும் என்றோ இல்லை! மாறாக, என் ஜீவிய காலமெல்லாம் நான் உம்முடைய மகிமையின் அழகை தரிசித்திருக்க வேண்டும்!!" என கெஞ்சி நின்றான். தாவீதின் இந்த "ஒரே விருப்பமே" நம் ஜீவியத்தின் விருப்பமாயும் இருக்கிறதா?*

*ஆண்டவரை அதிகமாய் நேசித்த ஒரு ஏழை விதவையைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒரு சிறிய குடிசையில் தன் ஐந்து பிள்ளைகளுடன் அந்த ஏழை விதவை வசித்து வந்தாள். அந்த அம்மாளின் வீட்டிற்கு வந்த ஒருவர் மிகுந்த ஆச்சரியத்துடன், "நீங்கள் நிறைந்த மகிழ்ச்சியோடும், சமாதானத்தோடும் எப்போதும் காணப்படுகிறீர்களே! அது எப்படி? உங்களுக்கோ அதிக பணமும் இல்லை! ஏராளமான உபத்திரவங்கள்தான் உண்டு! உங்கள் பிள்ளைகள் அடிக்கடி நோய்வாய்படுகிறார்கள்! ஆகிலும், அவர்கள் எப்போதுமே சிரித்த முகமாய் இருக்கிறார்கள்! இந்த இனிமையான உங்கள் வாழ்க்கையின் ரகசியம் என்ன?" என்று கேட்டார். இந்த கேள்விக்கு அந்த ஏழை விதவை "ஐயா, இயேசுகிறிஸ்துவே எனக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமுமாயிருக்கிறார்! இந்த உலகத்தில் அவரைத்தவிர எனக்கு வேறு எதுவுமே தேவையில்லை!!" என்றே முகமலர்ச்சியுடன் பதில் கூறினார்கள்.*

*ஆண்டவர் இயேசுவே நமக்கும் 'எல்லாமுமாய்' மாறிவிட்டால், நாமும் அந்த விதவையின் மகிழ்ச்சியில் பிரவேசித்துவிடலாமே!*

*அதற்குப் பதிலாக, ஒரு சிறு துன்பம் ஏற்பட்டவுடன் நாம் குறை சொல்லுவோமென்றால், ஆண்டவர் நமக்கு எல்லாமுமாய் இன்னமும் மாறவில்லை என்பதே உண்மையாகும். இன்றிலிருந்தாவது, ஆண்டவர் இயேசு நமக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமுமாய் மாறுவாராக! அப்போது மாத்திரமே நாமும் சங்கீதக்காரனைப்போல "ஆண்டவர் இயேசுவே, இந்த பூமியில் எனக்கு உம்மையன்றி வேறு விருப்பம் ஏதுமில்லை!" எனக் கூறிடமுடியும் (சங்கீதம் 73:25).*

**ஜெபம் :** *பரம தந்தையே! நீர் நிறைந்த உள்ளத்தில் துன்பம் சென்று ஆட்கொள்வதில்லை! 'வருவது வரட்டும்' ஆகிலும், உம் மகிழ்ச்சியை அது பறித்திட இயலாது! என வாழ்ந்திட கிருபைதாரும்! ஆமென்.*

**நாம் தூய்மையான சாட்சியாய் வாழ்ந்திட வேண்டும்!**

*"சூரியன் உதிக்கிற திசை தொடங்கி, அது அஸ்தமிக்கிற திசை வரைக்கும்,. . . . எல்லா இடங்களிலும் (Every place) என் நாமத்துக்குத் தூபமும் சுத்தமான காணிக்கையும் (Pure offering) செலுத்தப்படும்" (மல்கியா 1:11)என வாசிக்கிறோம்.*

*தரமும்,தூய்மையுமே அல்லாமல் அளவும், எண்ணிக்கையும் தேவனுக்கு ஒருபோதும் பொருட்டல்ல! அளவு (size) மனிதனைக் கவர்ச்சிக்கலாம் . . . . ஆனால் தேவனோ அப்படி இல்லை!! சிருஷ்டிப்பு (Creation) நமக்குப் போதிக்கும் சத்தியமும் இதுதான். பூமியானது சிறிய கோளங்களில் ஒன்றாகவும், ஆகாயவிரிவில் உள்ள நட்சத்திரங்களை ஒப்பிடும்போது "கடுகு போன்ற" சிறிய அளவிலேயே பூமி இருக்கிறது. "இருப்பினும்" தேவன் மனிதனுடன் வாசம் பண்ணும்படி இந்த பூமிக்கே இறங்கி வந்தார்!! இன்றும், உலகமெங்கும் உள்ள கிறிஸ்தவர்கள், தாவீது செய்ததுபோலத் (2சாமு.24) தொகை யிட்டு எண்ணிப்பார்த்து, அளவிலும் எண்ணிக்கையிலும் திருப்தி கொள்கிறார்கள்! எத்தனை பேர் மாறினார்கள்? (Converted) என்ற கணக்கின்படியே ஒரு சுவிசேஷகனுடைய ஊழியத் திறமை இன்று நிதானிக்கப்படுகிறது! சபை மக்களின் அதிக எண்ணிக்கை, வரவு செலவு போன்ற அடிப்படையின் பேரிலேயே ஒரு சபையின் வளர்ச்சியும் இன்று கணிக்கப்படுகிறது!!*

*நாம் முதலில் வாசித்த வசனத்தில், மல்கியாவின் மூலமாகத் தன் இருதய வாஞ்சையைத் தேவன் வெளிப்படுத்தியதைப் பார்க்கிறோம். மல்கியாவின் நாட்களில் தேவன் இஸ்ரவேலின்மேல் குறைவுபட்டதெல் லாம், அவர்கள் எண்ணிக்கையில் அதிகமாய் இல்லை என்பதற்காய் அல்ல! அல்லது அவர்களின் காணிக்கை குறைவாயிருக்கிறது என்பதற் காகவும் அல்ல! அவர்களுடைய "காணிக்கை அசுத்தமாய்" இருந்தது என்பதற்காகவே ஆகும் (மல்கியா 1:6-11). தேசத்தில் இன்றுள்ள கிறிஸ்தவர்களின் ஜனத்தொகை சதவீதம் குறைவாயுள்ளதே என்று, இன்றுள்ள சுவிசேஷம் அறிவிக்கும் கிறிஸ்தவர்கள் வருந்தவோ அல்லது வருந்துவது போன்ற பாவனையோ செய்கின்றனர். "ஆனால்" தேவனோ தங்களை விசுவாசி என்று அழைத்துக் கொள்பவர்களின் அசுத்த ஜீவியத்தைக் குறித்த மனப்பாரமே அல்லாமல், அதில் லட்சத்தில் ஒரு பகுதிகூட கிறிஸ்தவ ஜனத்தொகையின் எண்ணிக்கைக்காக தேவன் வருந்தியது இல்லை! பூமியின் "எல்லா இடங்களிலும்" தேவன் விரும்புவதெல்லாம் "சுத்தமான காணிக்கையே" — Pure Offering (மல். 1:11) ஆகும்!!*

**ஜெபம் :** *அன்பின் பிதாவே! அளவை அல்ல, நீர் தரத்தையே எங்களில் விரும்புகிறீர்! உம் வாஞ்சையின்படி உமக்கு தூய்மையான சாட்சியாய் வாழ்ந்துவிட எங்களுக்கு கிருபைதாரும், ஆமென்.*

### 'பரிசுத்தாவியே' நாம் பெற்றிடவேண்டிய பிரதான பரிசு!

பரிசுப் பொருளை சுற்றிவரும் கலர்பேப்பர்களைப் (உணர்ச்சிமய எழுச்சிகளை) "பரிசாக" நாம் எண்ணிவிடக்கூடாது. உயிர்த்தெழுந்த ஆண்டவர் தன் சபைக்கருளிய "பரிசாய்" இருப்பது, பரிசுத்தாவியானவரேயாவார்! அவர் ஜனங்களின் மீது வரும் போது 'அல்லேலூயாவின் ஆர்ப்பரிப்போடோ' எழுச்சி கொண்ட 'மகிழ்ச்சியின் கண்ணீரோடோ' அல்லது 'அந்நிய பாஷையின் வரத்தோடோ' அல்லது எந்த எழுச்சியுமில்லாமல் 'மெதுவான சப்தத்தோடோ' வரக்கூடும்! ஒவ்வொருவரிடத்திலுமுள்ள இயற்கை யான சுபாவங்கள் வித்தியாசமானதாகவே இருக்கிறது. இன்றைய அநேக கிறிஸ்தவர்களைப்போல் வித்தியாசமான-மற்றவர்களோடு இணக்கம் இல்லாதவர்களாய் இல்லாமல், பரிசுத்தாவியானவரோ அவரவருடைய சுபாவங்களுக்கேற்ப இணைந்து சென்றிட மனதுள்ளவராகவே யிருக்கிறார்!

எனவே பரிசுத்தாவியின் வரத்தை, நான் பெற்றுக்கொண்ட "பரிசுப் பேப்பரின் கலர் போலவே" மற்றவர்களும் பெற்றிருக்க வேண்டுமென எண்ணுவது நமது மதியீனமேயாகும்! பரிசை சுற்றிவந்த மினுமினுப் பான கலர் தாள்களில் சிறு பிள்ளைகள்தான் எப்போதும் ஆர்வம் கொண்டிருப்பார்கள். முதிர்ச்சி அடைந்தவர்கள் மாத்திரமே, பரிசைச் சுற்றி வந்த அட்டையைவிட "பரிசுதான்" முக்கியமானது என்பதை அறிந்திருப்பார்கள்! (அப். 1:8).

அப்போஸ்தலனாகிய பவுல், இயேசுவை தரிசனமாய்க் கண்டு மனந்திருப்பியவரேயாவார்! இருப்பினும், அவர் ஒரு பிரசங்கத்தில்கூட 'இரட்சிக்கப்படுவதற்கு' தான் பெற்ற தரிசனத்தையே எல்லோரும் பெற்றிருக்க வேண்டுமென பிரசங்கிக்கவில்லை!!

பரிசு எந்தக் கலர் பேப்பரில் சுற்றி வந்தாலும், அதற்குள்ளே யிருக்கும் பொருள்தான் முக்கியமென்பதை அவர் அறிந்திருந்தார். அதுபோலவேதான் பரிசுத்தாவியின் நிறைவும் இருக்கிறது!

**ஜெபம்** : பரலோக பிதாவே! அனுபவங்களை சார்ந்திடும் இந்நாட்களில், மெய்யான உமது பரிசை "பரிசுத்தாவியின் வல்லமையை" அதிக நிச்சயத்தோடு நாங்கள் பெற்றிருக்க உதவி செய்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.

**கிறிஸ்துவின் சரீரத்தில் பொறாமை இருப்பதில்லை!**

*ஆதி மனுஷன் ஏதேன் தோட்டத்திலிருந்து தள்ளப்பட்ட பின்பு, மனுஷனின் "முதல் பாவமாக" கூறப்பட்ட பாவம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? அந்த முதல் பாவம் "பொறாமை" என்பதை உங்கள் மனதில் எப்போதும் பதித்து வையுங்கள்! இந்த "காயீனுடைய பாவத்தை" அப்போஸ்தலனாகிய யோவான், தன் காலத்திலிருந்த சபைகளின் சகோதர சகோதரிகளுக்கு எச்சரித்து நிருபம் எழுதியது எத்தனை முக்கியத்துவம் கொண்டதாய் இருக்கிறது!! யூதாவும் தன் நிருபத்தில், இதை "காயீனுடைய வழி" என்ற அடைமொழியோடு கூறி எச்சரிக்கை விடுத்தாரே!!*

*"காயீனுடைய வழி" என்றால் என்ன? ஆம், அவனுடைய வழி "பொறாமையின் வழியே"யாகும்! இந்த வழி தனிமை. . . . நிம்மதியற்று அலைதல். . . . ஆகிய பாதைக்குள் நம்மை நடத்தி, முடிவில். . . . "ஐக்கியத்தை" நாசம் செய்யும் கொடிய விளைவை நமக்குள் ஏற்படுத்திவிடும்!! இந்த காயீனுடைய வழியில் நாம் சென்றுவிட்டால் "யாரோ சிலரை. . . ." தேவன் ஆசீர்வதிப்பதைக் காண நம்மால் பொறுத்துக் கொள்ளவே முடியாது! அதிலும் குறிப்பாக, 'அந்த சிலர்' நமக்கு சமமானவர்களாகவோ அல்லது நம்மைவிட இளையவர்களா கவோ இருந்து விட்டால், இந்தப் பொறாமையின் நர்த்தனத்திற்கு ஒரு அளவே இருக்காது!*

*ஒருவரின் இருதயத்தில் பொறாமை தங்கிவிட்டால், "அந்த சகோதரன், இன்னமும் கிறிஸ்துவின் சரீரத்தைக் குறித்த வெளிச்சத்தைப்" பெறவில்லை என்பதையே அதன் மூலமாய் நிரூபணம் செய்கிறார். நம்முடைய சொந்த சரீரத்தையே சற்று நோக்குங்கள்! நம் அவயவங்களுக்குள் எந்தப் பொறாமையும் இல்லையே!! எல்லா முக்கியமான அலுவல்களையும் செய்திடும் வலது கையைப் பார்த்து இடதுகை பொறாமைப்படுவதே இல்லை....அதற்கு மாறாக, களிகூர்ந்து மகிழ்ச்சியே அடைகிறது!! நாம் கிறிஸ்துவின் சரீரத்தைக் "கண்டவர்களாய்" இருந்தால், இந்த இடது கையைப் போலவே, "முக்கியமான ஊழியங்களைச் செய்திடும்" மற்றொரு சகோதரனினிமித்தம் களிகூர்ந்தே மகிழ்ந்திடுவோம்! கிறிஸ்துவின் சரீரத்தில், "தேவனே அவரவர்களுக்குரிய ஊழியத்தைத் தருகிறார்" என்பதை நாம் காணத் தவறுவதாலேயே பொறாமை வெளிப்படுகிறது (1 கொரிந்தியர் 12:18). கிறிஸ்துவின் சரீரத்தில், நம் ஒவ்வொருவருக்கும் உரிய ஸ்தானத்தை தேவனே சரியாய் தெரிந்து வைத்திருக்கிறார். ஆகவே, அவருடைய தெரிந்துகொள்ளுதலைக் குறித்து "யாதொரு குறைசொல்" நமக்கிருந்தாலும், அந்த குறைசொல் உண்மையில் தேவனுக்கு விரோதமான குறைசொல்லேயாகும்!*

**ஜெபம்** : *எங்கள் பரம பிதாவே! 'காயீனின்' பொறாமை வழியில் நாங்கள் சென்று யாரையும் 'கொலை' செய்யாதிருக்க அதிக கிருபை தாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## நொறுங்குண்ட ஜீவியங்கொண்டோரே தேவனுடைய ஊழியத்துக்குத் தேவை!

நொறுங்காத ஒரு மனிதனிடத்தில் "தன்னுடைய ஆவிக்குரிய அதிகாரத்தை" தேவன் ஒருக்காலும் ஒப்புக்கொடுப்பதே இல்லை! அப்படிச் செய்வது, அபாயம் நிறைந்ததாகும்!! ஆம், பரிசுத்தாவியின் வல்லமையை ஒருவன் பெற்றுவிட்டால், அது போதுமானது அல்ல. . . அவன் நொறுங்கவும் வேண்டும்!! இந்த நொறுங்குதலின் அனுபவம், தேவன் ஏற்பாடு செய்யும் வெவ்வேறு சூழ்நிலைகளில் "தேவன் நம்மை நொறுக்குவதற்கும் நம்மைத் தாழ்த்துவதற்கும்" நாம் மனப்பூர்வமாய் அனுமதிக்கும்போது மாத்திரமே கிடைத்திடும். "கர்த்தரோ அவரை நொறுக்க விருப்பம் கொண்டவராயிருந்தார்" (ஏசாயா 53:10) என்றே இயேசுவைப்பற்றி கூறப்பட்டிருப்பதைக் காண்கிறோம். ஆம், இவ்வாறாக மாத்திரமே நாம் ஆவிக்குரிய அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

உடைபட்டு நொறுங்காத எந்த ஒரு மனுஷனையும் அல்லது மனுஷியையும் தேவன் ஒருக்காலும் பயன்படுத்துவதே இல்லை!!

தேவன் உங்களுக்கென்று ஓர் திட்டத்தை (Plan) வைத்திருக்கிறார். அந்தத் திட்டத்தை இவ்வுலகி லுள்ள ஒரு மானிடன்கூட குலைத்துப்போடவே முடியாது.... ஆம், எத்தனை தீவிரமாய் உங்களை கீழே இழுத்துவிட முயன்றாலும் அது முடியாது!! தேவனுடைய திட்டத்தில், ஒவ்வொன்றிற்கும் ஒரு காலமும் நேரமும் உண்டு. ஆகவே, 'ஒருவர்கூட' தேவனுடைய திட்டத்தை உங்கள் ஜீவியத்தில் தடைசெய்திடவே முடியாது!!

ஒரு சகோதரனுடைய சில ஊழியமுறைகள் தவறாய் இருந்த போதும், தேவன் அந்த சகோதரனின் ஊழியத்தில் அபிஷேகத்தை எப்படித் தந்தார்? என நீங்கள் சில சமயங்களில் ஆச்சரியப்பட்டிருக்கக் கூடும். அது ஏனெனில், நீங்கள் நினைத்ததுபோல் "உபதேசத்திற்கு" தேவன் அத்தனை முக்கியத்துவம் தரவில்லை என்ற உண்மைதான்! இன்றும் கூட, நாம் 'எதை எதையோ' முக்கியம் என எண்ணுகிறோம். ஆனால், அவைகளைத் தேவன் 'முக்கியம்' என எண்ணுவதில்லையே! அதுபோலவே, "முக்கியமில்லை!" என நாம் கருதிடும் அனேக காரியங்கள் தேவனுக்கு "முக்கியம்!" உள்ளதாய் இருக்கிறது!! அடிப்படை ரீதியில் "தாழ்மையை" மிக முக்கியமாகவே தேவன் எப்போதும் கருதுகிறார். அதுபோலவே "பண ஆசையிலிருந்து விடுபடுவதையும்" மிக முக்கியமாகவே தேவன் கருதுகிறார்! இன்றைய விசுவாசிகள், வேதாகம உபதேசங்களில் தாங்கள் சரியாக இருப்பதினிமித்தம் மேன்மை பாராட்டிவிட்டு, மிக முக்கியமான தங்கள் குணாதிசயத்திற்கு உரியவைகளை அசட்டை செய்வதை ஓர் சாதாரண செயலாகவே நாம் எங்கும் காண்கிறோம்.

**ஜெபம்:** எங்கள் பரம தந்தையே! உபதேசத்தைவிட "நொறுங்குண்ட மனிதனே" உமது ஊழியத்திற்கு தகுதியாயிருப்பதை அறிந்திட உதவியதற்கு உமக்கு நன்றி:! நொறுங்குண்ட ஜீவியம் செய்திட கிருபைதாரும்! ஆமென்.

**வாலிபரே! காலத்தைப் பிரயோஜனப் படுத்துங்கள்!**

*ஆதியாகமம் 43:1,2 வசனங்களில் தேசத்தின் கொடிய பஞ்சத்தினால், தன் குமாரர்கள் எகிப்திற்குச் சென்று தானியம் வாங்கிவரும்படி அவர்களிடம் யாக்கோபு கூறினான். எப்போதெல்லாம் ஒரு பஞ்சம் வருகிறதோ, அப்போதெல்லாம்.... பஞ்சகாலத்திற்கு முன்பே ஞானமாய் இருந்தவர்களிடம் சென்றுதான் நீங்கள் உணவு வாங்க வேண்டும்! அந்த முதல் செழிப்பான 7 வருடங்களில் யோசேப்பு ஞானமாய் நடந்து கொண்டு தானியங்களைச் சேர்த்துவைத்தான். ஆகவே தங்கள் செழிப்பின் நாட்களில் சோம்பேறிகளாய் இருந்த யாவரும் இப்போது யோசேப்பிடம் வரவேண்டியதாயிருந்தது. "சோம்பேறியே, நீ எறும்பினிடத்திற்குச் சென்று கற்றுக்கொள்! அது மழைக்காலத்திற்கு முன்பே தனக்கு வேண்டிய உணவுகளை கோடைக்காலத்தில் எவ்வாறு சேர்த்து வைக்கிறது என்பதைப் பார்" என்றே வேதாகமம் நமக்குப் புத்தி சொல்கிறது.*

*இந்த சத்தியத்தை ஆவிக்குரிய ரீதியாகவும் ஒப்பிட்டுப் பாருங்கள். தேவனுடைய வார்த்தையை ஆராய்ந்து கற்றுக்கொள்வதற்கு ஏராளமான சந்தர்ப்பங்கள் கிடைத்திடும் இந்த வாலிப காலத்தை ஞானமாய்பயன்படுத்தி ஆவிக்குரியஐசுவரியத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்! பின்பு பல வருடங்கள் கழித்து வேதத்தைத் தியானித்திட அதிக நேரம் இல்லாதபடி வாழ்க்கைப் பிரச்சனை உங்களை சூழ்ந்திருக்கும் வேளையில், உங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் தேவையான ஞானத்தை "அப்போது" உங்களுக்கு ஏராளமாய் கிடைத்திடும் பாக்கியத்தைக் காண்பீர்கள். இந்த நல்ல காலத்தில், தேவனுடைய வார்த்தையிலிருந்து நீங்கள் சேகரிக்கும் ஞானம் உங்களைப் பூரண திருப்தியாக்குவது மாத்திரமல்லாமல், அதை மற்றவர்களுக்கும் பகிர்ந்துகொடுக்கும் அளவிற்கு ஏராளம் பெற்றவர்களாய் இருப்பீர்கள்!*

*இது குறித்து என் சாட்சியை நான் கூற விரும்புகிறேன்! இன்று நான் அறிந்திருக்கும் வேதவாக்கியங்கள் அனைத்தும் நான் மனந்திரும்பிய 19 வயது தொடங்கி எனக்குத் திருமணமான 28 வயது வரை உள்ள காலங்களில் நான் ஆராய்ந்து கற்றுக் கொண்டவைகளே யாகும். நான் வேதாகம கல்லூரிக்குச் சென்றதே இல்லை! மாறாக, நான் இந்திய கப்பற்படையில் பணியாற்றிய உபரி நேரத்தில் இயேசுவின் பாதத்தில் அமர்ந்தே வேதவாக்கியங்களைக் கற்றுக்கொண்டேன்!! இவ்வாறு வேதவாக்கியங்கள் மீது நான் கொண்ட பழக்கம் ஏராளமான சோதனைகளிலிருந்தும் என்னை விலக்கிக் காத்துக் கொண்டது. இந்தக் காலமே..... அதாவது, என் திருமணமாகாத வாலிப காலமே எனக்கு ஏராளமான நேரம் கிடைத்த செழிப்பின் காலமாய் இருந்தது.*

***ஜெபம்** : எங்கள் பரம தகப்பனே! சாதகமான எங்கள் தனிமை காலத்தில் "சோம்பலை உதறி" உம்மையும், உம் திருவசனத்தையும்..... ஏராளம் ஏராளம் பெற்று சேர்த்து வைத்திட அருள் புரியும்! ஆமென்.*

## பெலன்கொண்ட கிறிஸ்தவன் 'சொகுசு வாழ்விற்கு' தூரமானவன்!

*"அவர்கள் உனக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுவார்கள். . . ஆனாலும் உன்னை மேற்கொள்ளமாட்டார்கள். . . உன்னை இரட்சிக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்" என கர்த்தர் தன் தாசனுக்கு நேரடியாகக் கூறிய இந்த அற்புத வசனத்தைப் பாருங்கள்! (எரேமியா 1:19).*

*மேற்கண்ட வசனத்திலிருந்து, "ஆண்டவருடைய சீஷர்களுக்கு" மூன்று நிகழ்ச்சிகள் நிச்சயமாய் நிகழும் என்பதை நாம் காண முடிகிறது. 1) சாத்தானும் அவனுடைய கைக்கூலிகளும் நமக்கு விரோதமாய் யுத்தம் செய்வார்கள். 2) அவர்கள் நம்மை மேற்கொள்ளமாட்டார்கள். 3) நம்மை விடுவிக்கும்படி ஆண்டவர் நம்மோடு எப்போதும் இருப்பார்!*

*நாம் இந்த உலகத்தில் இருக்குமட்டும் உபத்திரவங்களையும், துன்புறுத்தப்படுவதையும், பரீட்சைகளையும் நிச்சயமாய் சந்திக்க வேண்டியதாயிருக்கிறது. இவைகளை சந்திக்காமல் ஒருபோதும் நம்மைத் தவிர்த்துக்கொள்ளவே முடியாது. ஆகவே, இனிவரும் நாட்களில் நம்முடைய பணி ஸ்தலத்திலோ, நம் சொந்த ஜீவியத்திலோ . . . ஓர் இலகுவான வாழ்க்கையை நாம் எதிர்பார்த்திட முடியாது!*

*அதேபோல், பொருளாதார நெருக்கடிகளும் நம் யாவருக்குமே ஏற்படக்கூடும். ஆகவே, இப்போதிருந்தே ஓர் எளிமையான வாழ்க்கையை வாழ்வதற்கு நாம் யாவரும் கற்றுக்கொள்ள வேண்டும். இனிவரும் எதிர்காலத்தில் "சொகுசாய் வாழ்பவர்கள்" கண்டிப்பாய் அனேக கஷ்டங்களுக்கு ஆளாவார்கள். மேலும், நாம் பிறரை சார்ந்து கொள்ளும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடாதபடி, வருங்காலத்திற்காக நம்மால் முடிந்தஅளவு கொஞ்சம் பணத்தை சேமித்து வைப்பதற்கும் நாம் ஞானமுள்ளவர்களாய் இருந்திட வேண்டும்! அப்படியிருந்தும், 'நம்முடைய சேமிப்புகளை' நாம் ஒருபோதும் சார்ந்து கொள்ளவே கூடாது. நம் முழு நம்பிக்கையையும் ஆண்டவர்மீது மாத்திரமே வைத்திருக்க வேண்டும்! நம் தேவன், நம்மீது வைராக்கிய வாஞ்சை கொண்டவராய் இருக்கிறபடியால், சிருஷ்டிக்கப்பட்ட பொருட்கள் மீது நம்முடைய நம்பிக்கையை நாம் வைத்திட ஒருபோதும் அனுமதித்திட மாட்டார். இன்றைய உலகத்தின் பொருளாதாரத் தூணை தேவன் வெகு சீக்கிரத்தில் அசைக்கப்போகிறார்! அச்சமயத்தில், யாரெல்லாம் சிருஷ்டிக்கப்பட்ட பொருட்கள்மீது தங்கள் நம்பிக்கையை வைத்திருக்கிறார்களோ, அவர்கள் முற்றிலுமாய் நிலைகுலைந்து போவார்கள்!! நாமோ பெலன்கொண்ட கிறிஸ்தவர்களாய் வாழவே தேவன் விரும்புகிறார்.*

**ஜெபம் :** *எங்கள் பரம பிதாவே! எங்களை பெலன் கொண்டவர்களாய் மாற்றும்படி அனுமதிக்கும் துன்பங்களுக்கு, 'சொகுசு' எதிர்பாராமல் அர்ப்பணிக்கிறோம்! ஏற்று நடத்தும்! ஆமென்!*

**தைரியம் இழக்காத கிறிஸ்தவர்கள் நாம்!**

*நாம் எப்போதும் நன்மை மாத்திரமே செய்திட நாடுகிறவர்களாயிருந்தால், ஒரு மனுஷனும் நமக்குத் தீங்கு செய்துவிட முடியாது என 1பேதுரு 3:13 ஆணித்தரமாய் கூறுவதைப் பாருங்கள். ஆகவே, தேவ கிருபையின் பெலத்தோடு "யாவருக்கும் நாம் நன்மை மாத்திரமே செய்திட வேண்டும்" என்ற உறுதியான தீர்மானம் எடுத்துக் கொள்வோமாக! ஆம், நம்மைப் பகைக்கிறவர்களை அன்புகூருவோமாக! நம்மை சபிக்கிறவர்களை ஆசீர்வதிப்போமாக! நம்மைத் துன்பப்படுத்துகிறவர்களின் மன்னிப்பிற்காக ஜெபம் செய்வோமாக! அப்படி நாம் இருந்துவிட்டால், நமக்கு ஒரு மனுஷனும் தீங்கு செய்துவிட முடியாது!! சாத்தானும் அவன் கைக்கூலிகளும் நம்மை ஏமாற்றவோ, இடையூறுகள் செய்திடவோ, நம்மைத் திருடவோ, நம்மை காயப்படுத்தவோ, நம்மை சிறையில் அடைக்கவோ. . . ஏன், நம் சரீரத்தைக் கொல்லவோகூட செய்யலாம்!? அப்படி அவர்கள் செய்துவிட்டுப்போகட்டும், அதுவெல்லாம் நமக்கு ஒரு பொருட்டல்ல!! ஏனெனில், இவைகளைக்கொண்டு நம் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பாதிப்பை ஏற்படுத்த அவர்களால் ஒருக்காலும் முடியவே முடியாது!!*

நம் தேவன் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார்... இனியும் தொடர்ந்து எக்காலத்தும் வீற்றிருப்பார்! இந்த வானத்தின்மீதும் இந்த பூமியின் மீதும் நம் இயேசுவிற்கு சகல அதிகாரமும் உண்டு! கல்வாரி சிலுவையில், சாத்தான் முற்றிலுமாய் தோற்கடிக்கப்பட்டுவிட்டான். ஆகவே, அவனை நாம் மீண்டுமாய் தோற்கடிக்க வேண்டும் என்பது இல்லவே இல்லை! இப்போது நாம் செய்ய வேண்டியதெல்லாம், "சாத்தான் சிலுவையில் தோற்கடிக்கப்பட்டுவிட்டான்! இனியும் அவனுக்கு என்மீது எந்தவித அதிகாரமும் இல்லை!!" என்பதை நம் இருதயங்களில் விசுவாசித்து, வாயினால் அறிக்கை செய்வது மாத்திரமேயாகும். இந்த அறிக்கை நம் நாவில் இருக்குமட்டும், 'எதைக்கொண்டும்' சாத்தான் நம்மை தைரியம் இழக்கச்செய்யவோ அல்லது சோர்வுறச்செய்யவோ அல்லது அச்சுறுத்தவோ ஒருக்காலும் முடியவே முடியாது!! ஆம், இந்த "சாட்சியின் விசுவாச வார்த்தைகளைக்கொண்டு" நாம் சாத்தானை மேற்கொண்டுவிட முடியும்!! (வெளி. 12:11).

**ஜெபம் :** *எங்கள் பரம தந்தையே! இவ்வுலகில் யாதொரு தீமையும் எங்களை 'தைரியம்' இழக்கச் செய்ய தேவையில்லை என்பதை அறிந்தோம்..... ஜெயித்து வாழ தயைபுரியும், ஆமென்.*

### நம் தோல்விகளிலும் நம்மைவிட்டு விலகாத ஆண்டவர்!

ஆண்டவர் நம்மைவிட்டு ஒருபோதும் விலகவும் மாட்டார், நம்மை கைவிடவும் மாட்டார்! நாம் சறுக்கி... விழந்துவிட்டாலும்கூட, அவர் நம்மைவிட்டு விலகவே மாட்டார்! நம் தோல்விகளைக் குறித்து அவரிடம் நேர்மையாய் நடந்துகொள்ள மாத்திரமே அவர் விரும்புகிறார். அவ்வித நேர்மையில் 'இருதயம் நொருங்குண்டவர்களுக்கு' அவர் எப்போதும் சமீபமாகவே இருக்கிறார்!!

நாம் விழுந்துவிட்டாலும், கர்த்தர் தம் கரத்தினால் நம்மைத் தாங்கிக்கொள்கிறபடியினால், நாம் தள்ளுண்டு போவதில்லை என்பதே சங்கீதம் 37:24 நமக்குத் தரும் வாக்குத்தத்தமாகும். மற்றவர்கள் நமக்குச் செய்யும் தீமைகளும், நம்முடைய நன்மைக்கு ஏதுவாகவே ஆண்டவர் நடத்துவார் என்பது மாத்திரமல்லாமல்... நம் தோல்விகளும் நம்முடைய நன்மைக்கு ஏதுவாகவே கிரியை செய்திடச் செய்வார்!

எத்தனை தீமைகளாயிருந்தாலும், அவைகள் ஒவ்வொன்றிலிருந்தும் நம்மை விடுவித்து வெற்றி வாகை சூடும்படி செய்வார்! அவர் நம்மை வழுவாதபடி காத்துக்கொண்டு, ஒருநாளில் பிதாவிற்கு முன்பாக நம்மை மாசற்றவர்களாய் நிறுத்துவார்! இவ்வாறு, முடிவுபரியந்தமும் நம்மை காக்க வல்ல "அவருடைய வல்லமையில்" நம்முடைய நம்பிக்கை இருக்கிறதேயல்லாமல், நம்முடைய சொந்த பெலனில் இல்லவே இல்லை. ஆகவேதான், நமக்கு முன்னிருக்கும் எதிர்காலத்தை மிகுந்த தைரியத்தோடும், மிகுந்த நம்பிக்கையோடும் நாம் எதிர்கொண்டு முன்னேறுகிறோம்!!

ஆகவே வேறு எவைகளையெல்லாமோ காண்பதிலிருந்து நம் கண்களைத் திருப்பி, இயேசுவை மாத்திரமே நோக்கிப்பார்த்து நம் ஓட்டத்தை நாம் ஓடக்கடவோம் (எபிரெயர் 12:2). 'இப்போது' நம்மைச் சுற்றி நெருக்கியிருக்கும் பெலவீனங்களையோ அல்லது நம் கடந்தகால தோல்விகளையோ இனி ஒருபோதும் நோக்காது இருப்போமாக! "நமக்குள் ஒரு நன்மையும் வாசமாயிருக்கவில்லை!" என ஏற்றுக்கொள்வதுதான் மெய்யான தாழ்மை! (ரோமர்7:18). அவ்வாறு, உங்களுக்குள் ஒரு நன்மையும் வாசமாயில்லையென்றால், பின் ஏன் நீங்கள் உங்களுக்குள் இருப்பதையே கண்டுகொண்டு இருக்கிறீர்கள்?!!

அதேபோல், உங்கள் கடந்தகாலத் தோல்விகளை நோக்கிப் பார்ப்பதையும் நிறுத்துங்கள்! அப்படியெல்லாம் நீங்கள் நோக்கிப் பார்ப்பது உங்களுக்கு அதைரியத்தையே கொண்டுவரும்!

**ஜெபம்** : *எங்கள் பரம தகப்பனே! எந்த தோல்வியிலும் துவண்டு போகாதபடி, எங்களோடு இருந்து தூக்கிவிடும் உமது அன்பிற்கு நன்றி! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**எக்காலத்தும் துணை நிற்கும் தேவன்!**

மருத்துவர் உங்கள் நலனைக் குறித்த துர்ச்செய்தியைக் கூறியபடியால் நீங்கள் அழுகிறீர்களோ? நீங்கள் ஏன் இயேசுவிடம் கதறி கூப்பிடக்கூடாது? கொடிய வேதனைகளையும் அவர் தாங்கியிருக்கிறபடியால், நீங்களும் தாங்கிக் கொள்ளும்படி உங்களுக்கு அவர் அருள் செய்திட முடியுமே! உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் இடங்கொடாமல், ஒவ்வொரு சோதனையையும் தாங்கும்படியான கிருபையையும் பெலனையும் அவர் உங்களுக்கு தந்தருளுவார்!! இந்தப் பூமியில் உள்ள வேதனைகள் யாவும் “இனி வேதனையும் அல்லது வருத்தமும் இல்லாத ஒரு சிறந்த ஸ்தலத்தை” நாம் எதிர்நோக்கி யிருக்கும்படியே நம்மைத் தூண்டுகிறது!

எங்கள் நாட்களில் அடிக்கடி பாடும் ஒரு பல்லவி உண்டு:

*“கர்த்தர் சமூகம் என்றும் சந்தோஷமே*
*கண்ணீரும் கவலையும் அகன்றேபோம்*
*கர்த்தர் சமூகம் என்றும் சந்தோஷமே!”*

தொடர்ந்து வரும் அந்தப் பல்லவியில் “கர்த்தர் சமூகம் என்றும் சமாதானமே”, “கர்த்தர் சமூகம் என்றும் வல்லமையே”, கர்த்தர் சமூகம் என்றும் ஜெயமே” என இனிமையாய் கூறப்பட்டிருக்கும். பாடுவதில் தான் எத்தனை ஆறுதல் அளிக்கும் வல்லமை அடங்கியிருக்கிறது! அதுவும், வேதனையிலும், துன்ப சூழ்நிலைகளிலும் பாடிடும் பாடல் மிகுந்த ஆறுதலை நமக்குத் தருகிறது!!

உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியும் ஆண்டவருக்கு முழுமையாய் அர்ப்பணம் செய்யப்பட்டிருந்தால், சரீர வேதனை உங்களுக்கு வரும்போது, அது உங்களுக்கு சற்றே இலகுவாயிருப்பதை நீங்கள் காண்பீர்கள். கடந்த நாட்களில், ஓர் தலைவலிகூட உங்களால் தாங்க முடியாததாய் இருந்திருக்கக்கூடும். ஆனால் இப்போதோ, உங்கள் உயிருக்கே ஆபத்தான வியாதி வந்தாலும், நீங்கள் அதற்காக ஜெபித்து.... பின்பு கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருந்திட முடியும்! “நாம் தண்ணீர்களைக் கடக்கும் வேளையில் அது நம்மேல் புரளுவதில்லை” என்றும் அவர் உறுதியளித்து வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். இந்த வசனங்களை Living Bibble மொழி பெயர்ப்பு நேர்த்தியாகக் கூறுகிறது:

*“ஆழமான தண்ணீர்களின் கொடிய துன்பங்கள் மத்தியில் நான் உன்னோடேயிருப்பேன். கஷ்டத்தின் ஆறுகளை நீ கடந்து செல்லும் போது நீ மூழ்கிப் போகமாட்டாய்! நெருக்கத்தின் அக்கினியில் நடந்து செல்லும்போது நீ எரிந்து போகமாட்டாய்! அக்கினி ஜூவாலைகள் உன்னைத் தீண்டாது! நீ பயப்படாதே! நான் உன்னோடேயிருக்கிறேன்!” (ஏசா.43:2,5).*

**ஜெபம்** : *எங்கள் அன்பின் தந்தையே! உம்முடைய நீங்காத துணையும், உம்மீது கொண்ட மகிழ்ச்சியும் வாழ்வின் துன்பங்களை எதிர்கொள்ள போதுமானதாய் இருப்பதற்கு நன்றி, ஆமென்.*

## நம் நம்பிக்கையின் வாசஸ்தலம்!

ஒரு தேவனுடையப் பிள்ளை கர்த்தரிடத்தில் சென்ற பிறகு, தனக்கு அன்பானவர்களிடத்தில் பேசியதைப் போன்ற ஒரு கவிதை:

**நான் சென்ற ஸ்தலத்தை நீங்கள் கண்டிருந்தால். . .**

*நான் இருக்கும் ஸ்தலத்தை நீங்கள் கண்டிருந்தால்.....*
*ஆ, அந்த ரம்மியம்..... உங்கள் வருங்கால வீடு!*
*இரட்சகரின் பரவச முகம்! ஆழந்த சமாதானம்!*
*யாது பயம் இன்றி... மட்டில்லா மகிழ்ச்சி!*
*இத்தனையும் கண்டபின், நான் இல்லா பூமியின் துயரத்திற்கு*
*"மீண்டும் நான் பூமிவர" நிச்சயம் விரும்பிடீர்!!*

*நான் இருக்கும் ஸ்தலத்தை நீங்கள் கண்டிருந்தால்....*
*என் பயணம் தனிமையல்ல என் இரட்சகரும் உடனிருந்தார்*
*யாத்திரையில் கரம் பிடித்தே இம் மகிமை தேசம்*
*அழைத்து வந்தார் அவரன்றோ! ஆச்சரியமும் அடைந்திடுவீர்!*

*நான் இருக்கும் ஸ்தலத்தை நீங்கள் கண்டிருந்தால்....*
*நான் கண்ட காட்சி நீங்களும் பார்த்திருந்தால்*
*தனிமையும் உணர்ந்திடீர்! பயத்தையுமே களைந்திடுவீர்!*
*அவர் கரத்தின் பாதுகாப்பை கண்கண்டு வியந்திடுவீர்!!*
*கரிசனையாம் காருண்யம் வியந்திடவே பார்த்திடுவீர்!!*

*நான் இருக்கும் ஸ்தலத்தை நீங்கள் கண்டிருந்தால்....*
*என்னோடு தேவனும் இருப்பதுமே கண்டவர்கள்*
*அனைவருமே அவரண்டை வந்திடவும் வாஞ்சையாய்*
*வழிகாணத் தவிப்பாரே! இழந்தது ஒரு ஆன்மா எனினும்*
*அவரிதயம் துடிக்குதே! மீண்டுமே தன்னண்டை வந்திட்டால்*
*அவரிதயம் மகிழுமே!! காண்பாய் இவ்வதிசயம்!!*

*நான் இருக்கும் ஸ்தலத்தை நீங்கள் கண்டிருந்தால்....*
*அவரமைத்த நித்தியத்தை என்னோடு தங்கியே*
*பகிர்ந்த உம் உள்ளமும் "பரலோகம் காணுமே!"*
*இம் மகிழ்ச்சி விலகியே வாழந்திடேன் என்பீரே!*
*பரலோகம் என் இல்லம்! அது இன்றி நானில்லை!!*

*நான் இருக்கும் ஸ்தலத்தை நீங்கள் கண்டிருந்தால்....*
*"கூடிடுவோம் மீண்டுமென" அன்று நீ அறிந்திடுவாய்!*
*பிரிந்தாலும் இன்றுமே இடைவெளி சுருக்கமே!*
*அவரோடு நாளுமே பாதுகாப்பாய் என்றென்றும்*
*தங்கியே பரன் வாசல் காத்திருப்பேன் உனக்காக!*
*உன்னை வரவேற்கும் அந்நாளே மகிழ்ச்சியின் பொன்னாள்!!*

கிறிஸ்தவர்களாகிய நாம் பெற்றிருக்கும் மகிமையான நம்பிக்கை எவ்வளவு பெரிதென்பதை சற்றே தியானித்து இன்புறுங்கள்!!

***ஜெபம் :*** *எங்கள் பரம தகப்பனே! இம்மண்ணின் கூடாரம் ஒழிந்து, உம்மண்டை சேரும் "வாசஸ்தலம்" எத்தனை மேன்மை என அறிந்தோம்! விழிப்புடன் ஜீவித்து உம்மண்டை சேர கிருபை செய்தருளும்! ஆமென்.*

**சேமித்திடும் ஞானம் வேண்டும்!**

*எதிர்காலத்திற்காகப் பணம் சேமிப்பதைக் குறித்து என்ன? ஒரு இயேசுவின் சீஷன் தனக்கென்று ஓர் வங்கி சேமிப்பு கணக்கு அல்லது வைப்பு நிதி (fixed deposit) அல்லது வேறு எந்த ரூபத்திலான சொத்துக்கள் வைத்திருக்கலாமா? "பூமியிலே அல்ல, பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள்"(மத்.6:20) என்றல்லவா இயேசு கூறியிருக்கிறார்?! இங்கு இயேசு கூறிய சத்தியத்திலுள்ள உண்மையான கேள்வி என்னவென்றால் "உங்கள் சேமிப்புகளில் யாதொன்று "எந்த சமயத்தில்" 'உங்கள் பொக்கிஷமாய்' மாறுகிறது?" என்பதேயாகும். இந்த கேள்விக்கு தெளிவான பதிலை நாம் கூறிட முடியாது! அல்லது, இக்கேள்வியை வைத்து நாம் "பிறருக்கு" சட்டதிட்டங்கள் வகுத்திடவும் நிச்சயமாய் முடியாது!! இவ்வுலகின் 'யாதொன்று' 'எப்போது' என்னுடைய பொக்கிஷமாய் மாறுகிறது என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பை அவரவர்கள்மீதே ஆண்டவர் வைத்துவிட்டார்!! இதைக் கண்டு கொள்ள ஒரு வழி என்னவென்றால், "நான் எதைக் குறித்து அடிக்கடி சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்?" என்ற கேள்வியை நமக்கு நாமே கேட்டுப்பார்ப்பதுதான்! இந்த கேள்விக்கு "பணம்" என்பது 'உங்கள் விடையாக' உங்களுக்கு வருமென்றால், "பணமே உங்கள் பொக்கிஷமாய்" மாறிவிட்டது என்பதை கண்டுகொள்ளலாம். இதற்கு பதிலாய் "ஆண்டவரும் அவருடைய ஊழியமும்" 'உங்கள் விடையாய்' வருமென்றால். . . உங்களுக்கு எவ்வளவுதான் பூமிக்குரிய ஆஸ்தி அதிகமாயிருந்தாலும், "உங்கள் பொக்கிஷம் பரலோகத்தில்தான் சேமிக்கப்பட்டிருக்கிறது" என்பதை நீங்கள் தீர்க்கமாய் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்!!*

*எதிர்காலத்திற்காக எப்படி சேமிக்க வேண்டும்? என்ற பாடத்தை "எறும்பினிடத்தில் போய் கற்றுக்கொள்" என சத்திய வேதம் நமக்கு புத்தி சொல்லுகிறது (நீதி. 6:6-11). வரப்போகும் "மழைகாலத்திற்கான" உணவை சேமித்துக்கொள்! என புத்தி சொல்ல ஒரு மூப்பனும் அதற்கு இல்லை! அதைத் தாங்களே செய்துகொள்வதற்குரிய ஞானத்தை எறும்பு பெற்றிருக்கிறது. ஆனால் இன்றோ, அனேகம் விசுவாசிகளிடம் இந்த ஞானம் இல்லை! ஆகவே, ஏதாகிலும் எதிர்பாராத பெரிய செலவுகள் வரும் வேளையில், இவர்கள் பிறரிடம் சென்று பணத்திற்காக கெஞ்சும் நிலைக்கும், கடன் வாங்கும் நிலைக்கும் ஆளாகிறார்கள். கடந்த ஒரு வருடத்தில் உள்ள தங்கள் செலவீனத்தில் சற்று ஜாக்கிரதையாயிருந்து எதிர்காலத்திற்காக கொஞ்சம் சேமித்து வைத்திருந்தால், இதுபோன்ற கடன் வாங்கும் அவலநிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்காதே?! ஆகவே, உங்களால் முடிந்ததை சேமித்து வைப்பது நிச்சயமாய் நல்லதுதான்!!*

***ஜெபம் :*** *பரம பிதாவே! "எங்கள் பொக்கிஷம்" பணத்தில் மாறிவிடாதபடி, எங்களுக்கு உள்ளத்தில் ஞானமாய் சேமித்திட கற்றுக்கொடுத்தமைக்கு, உமக்கு நன்றி! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**'ஆவியில் நிறைந்த' தெய்வ பயம் கொண்ட வாழ்க்கை!**

'வெளித்தோற்றத்தில்' மிகவும் பரிசுத்தமாய் இருப்பதைப் போல் காணப்படும் அநேகர் "கிறிஸ்துவைப் போல்" இருப்பதில்லை. இந்த வேறுபாட்டை பிரித்துக் காட்டுவது எது தெரியுமா? "தெய்வ பயத்தின் ஆவியே" இந்த வித்தியாசத்தை நமக்கு தெளிவாகக் காட்டுகிறது. பவுல் தன்னுடைய சாட்சியில், "நான் தேவனுக்கு முன்பாக குற்றமற்ற மனசாட்சியுடன்" வாழ்ந்து வருகிறேன் எனக் கூறினார் (பிலி. 3:6). ஆனால் இந்த வசனத்தில் அவர் குறிப்பிட்ட குற்றமற்ற வாழ்க்கை நியாயப்பிரமாணத்தில் உள்ள எழுத்தின்படி உண்டானதே யாகும். எனவேதான், பரிசுத்தாவி அவரிடத்தில் வந்து தங்கியவுடன், எழுத்தின்படி தான் பெற்ற நீதியை இப்போது விரும்பாமல்.... எப்படி யாவது, இயேசுவை நெருக்கமாய் அறிந்து, கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தின் மூலமாய் வரும் நீதியை அடைவதற்கே வாஞ்சை கொண்டார்! (வசனம் 7-9). நாம் நல்லது செய்திட எடுக்கும் முயற்சியில் கூட "கிறிஸ்துவைப் போல் இல்லாத" பகுதிகளை பரிசுத்தாவியானவர் நமக்குச் சுட்டிக்காட்டுவதே அந்த மேன்மையாகும்!!

ஒரு மனுஷனுக்கு முன்பாக நின்றுகொண்டு நீங்கள் செய்யும் வாக்குவாதங்கள் மூலமாய் "நீங்கள் சொல்வதுதான் சரி" என சாதித்து ஜெயித்துவிடலாம். இது போன்றவர்கள், தங்களின் உள்ளான மனப்பான்மையில் "கிறிஸ்துவைப் போல் இல்லாமல்" கறைபட்டிருக் கிறார்கள் என்பதை கண்டித்துக் கூறும் பரிசுத்தாவியின் குரலை கேட்பதற்கு தவறியவர்களாயிருக்கிறார்கள்! எழுத்தின்படி எழுதப் பட்ட கற்பனைகளுக்கும் அதிகமாய் "தேவன் நம்மிடத்தில் பேச விரும்பியதை" கேட்கத் தவறியவர்கள், பரிசுத்தத்தின் பூரணத்தை நோக்கி முன்னேறவில்லை என்பதை அறிந்து கொள்வார்களாக!!

கடைசிநாளின் நியாயத்தீர்ப்பில் தேவன் நம் யாவரையும் நியாயந்தீர்ப்பார் என்ற சத்தியம் நம் யாவருக்குமே தெரியும். ஆனால், அதை அவர் எங்ஙனம் நிறைவேற்றுவார்? 1 கொரிந்தியர் 4:5 கூறுகிறபடி "இருளில் மறைந்திருக்கிறவைகளாகிய நம் இருதயங்களின் யோசனைகளையே (மன நோக்கங்களையே)" அவர் நியாயம் தீர்ப்பார்! இந்த வசனத்தை நீங்கள் உண்மையாகவே விசுவாசிக்கிறீர்களா? அப்படியானால், நம் "வாழ்வின் நோக்கம்" முழுவதுமாய் தேவனை மாத்திரமே பிரியப்படுத்தி வாழ்வதாய் மாறிவிடும்! ஆம், ஜனங்கள் நம்மை 'வெளித்தோற்றத்தில்' எப்படி காண்கிறார்கள் அல்லது காணவில்லை என்பதெல்லாம் நமக்கு ஒரு பொருட்டாய் ஒருக்காலும் இருப்பதே இல்லை!! இவ்வித பரிசுத்தத்தின் ஒப்பற்ற பாக்கிய வாழ்வு, "கர்த்தருக்குப் பயப்படுகிற ஆவியினால்" நிறைந்து வாழ்கின்ற யாவருக்குமே கைகூடும்!!

**ஜெபம் :** *அன்பின் தகப்பனே! வெளித்தோற்ற வாழ்க்கையில் திருப்தி கொள்ளாமல், அந்தரங்க வாழ்க்கையில் கிறிஸ்துவைப்போல் வாழ்ந்திட உம் தூய ஆவி எங்களுக்குள் ஊற்றும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**விசுவாச ஜீவியத்தில் தடைகள் தூள்தூளாகிவிடும்!**

*கர்த்தருடைய தூதன் "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும். . . பெரிய பர்வதமே, நீ செருபாபேலுக்கு முன்பாக சமபூமியாவாய்!" என கெம்பீரமாய் முழங்கினான்!! (சக.4:6,7). அப்படியானால், நம் ஜீவிய பாதையில் மனுஷர்களோ அல்லது பிசாசுகளோ உருவாக்கும் 'பர்வதங்களைக்' குறித்து நாம் ஏன் அஞ்சிட வேண்டும்? இன்று சபையின் தலைவர்களாய் இருப்பவர்கள்கூட, தங்கள் அவிசுவாசத்தினால் தேவனுடைய கரங்களைக் கட்டிப்போட்டு விடுகிறார்களே!?*

*ஆனால், தேவனோ இன்று யோசுவாவையும் காலேப்பையும் போன்ற மனுஷர்களைக் காண்பதற்கே வாஞ்சையுடன் நோக்கிக் கொண்டிருக்கிறார்! யார் இவர்கள்? "எங்கள் தேவனால் கூடாத காரியம் ஒன்றும் இல்லை!" என்பதை விசுவாசித்து அதைப் பாரெங்கும் பிரகடனம் செய்பவர்கள்!! சாத்தானுக்கு விரோதமாக தேவன் 'எப்போதும்' நம் பட்சத்திலேயே நிற்கிறார். அவர் நமக்காக செயல்படுவதை 'எதுவும்' தடை செய்திடமுடியாது. . . ஆம், நம் அவிசுவாசம் ஒன்றைத் தவிர!! இப்பாருலகின் 5,500 கோடி ஜனங்களும், அவர்களோடு சேர்ந்து சாத்தானின் கோடானுகோடி பிசாசுகளும் கைகோர்த்து நம்மை எதிர்த்து நின்றாலும், தேவன் நமக்கென வரைந்த அவரின் திட்டத்தை ஒருக்காலும் சீர்குலைத்திட அவர்களால் முடியாது. . . எப்போது? நாம் மாத்திரம் தேவனை உறுதியாய் நம்பி நின்றுவிட்டால் அப்படியாகும்!!*

*ஆகவே, என்ன நடந்தாலும் நாம் ஒருக்காலும் சோர்ந்து போவதோ அல்லது விட்டுவிடுவதோ இல்லை! நாம் செத்தே போனாலும், நம் சர்வவல்ல தேவன்மீது கொண்ட விசுவாசத்தில்தான் சாவோம்! ஆம், இவ்வித நம் சாவிலும் அவருடைய நாமம் மகிமைப் பட வேண்டும் என்பதே நாம் கொண்ட நம்பிக்கை!! நம்மோடு போரி டும் பிசாசுகளின் ரூபத்திலோ அல்லது நமக்கு விரோதமாய் குற்றம் சாட்டிடும் நூற்றுக்கணக்கான மனுஷர்களின் ரூபத்திலோ நாம் "பர்வதங்களைச்" சந்தித்திட தேவன் அனுமதிக்கும் போது, நாம் அவைகளின் மூலமாய் இன்னமும் பெலனடைந்து, ஆவிக்குரிய ஐசுவரியம் பெறுவதே நம்மைக் குறித்து தேவனின் திட்டமாய் இருக்கிறது!*

*பிசாசுகள் மூலமாய் மனுஷர்கள் மூலமாய் உருவாகும் 'பர்வதங்களை' நாம் விசுவாச துணிவுடன் எதிர்கொள்ளும் போதுதான், சகரியா 4:6,7-ம் வசனங்கள் வெறும் வசன போர்டுகளாய் நம் வீட்டில் தொங்காமல். . . நம் இரத்த ஓட்டத்தில் எழுதப்பட்ட ஜீவ வார்த்தைகளாய் மாறுகிறது!!*

***ஜெபம்** : பரலோக பிதாவே! எங்கள் வாழ்வில் ஏற்படும் 'பர்வதங்களான' தடைகளை விசுவாசத்தோடு எதிர்கொள்ளும்போது அது தூள்தூளாகிவிடும் என எங்களை ஊக்குவித்தற்கு நன்றி, ஆமென்.*

### எந்த வயதிலும் பெற்றோர்களை கனம் செய்திட வேண்டும்!

லூக்கா 2:51- விவரிக்கிறபடி, இயேசு தன் பெற்றோர்களாகிய யோசேப்போடும் மரியாளோடும் வாழ்ந்த 30-வருடங்களும் அவருக்கு கீழ்ப்படிந்து அடங்கியிருந்தார்! என்பதேயாகும். இவ்வாறு அடங்கி ஜீவிப்பது அவ்வளவு எளிதல்ல என்பதை அவரைப் போலவே அந்த பிராயத்தில் வாழ்ந்த நம் யாவருக்கும் தெரியும்.

ஆகவேதான், நாம் இப்போது நம்முடைய பிள்ளைகளுக்கு "இயேசுவின் மாதிரியை" உயர்த்தி காண்பித்திட முடிகிறது! பிதாக்கள் தங்கள் பிள்ளைகளை "கர்த்தருக்கேற்ற போதனையில்" வளர்க்க வேண்டுமென எபேசியர் 6:4-ல் கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள். இந்த வசனம் குறிப்பிடும் "கர்த்தருக்கேற்ற போதனை" எது தெரியுமா? ஆம், இயேசு நாசரேத்தூரில் வாழ்ந்த வருடங்களின் "அவருடைய சொந்த வாழ்வின் மாதிரியையே" பிள்ளைகளுக்குப் போதனையாகத் தந்திருக்கிறார். "நம் ஆண்டவரின் மாதிரியைப் பின்பற்றும்" யாதொரு பையனும் அல்லது பெண்ணும். . . இயேசுவுக்கு நடந்ததுபோலவே, அவர்களும் ஞானத்திலும் தேவகிருபையிலும் அதிகமதிகமாய் விருத்தியடைவார்கள்!! (லூக்கா 2:52).

நாம் வளர்ந்து திருமணமான பின்பும்கூட, தொடர்ந்து நம் வயது சென்ற பெற்றோர்களை கனம்பண்ணிடவே வேண்டும். ஆதியாகமம் 9:21-27 வசனங்களில், ஒருசமயம் நோவாவின் குமாரர்களில் ஒருவனான காம், தன் தகப்பன் குடித்து கூடாரத்தில் நிர்வணமாய்படுத்திருப்பதைக் கண்டான். இவன், தான் கண்ட காட்சியை தன் சகோதரர்களிடத்தில் கூறி தன் தகப்பனுக்கு அவகீர்த்தி கொண்டுவந்தான்! காம் சொன்னது பொய் அல்ல, மெய்தான். . . ஆனால், அவனோ தன் தகப்பனை கனவீனப்படுத்தி விட்டான்!! ஒருவன் உண்மையே பேசினாலும், புறங்கூருகிறவர்களைத் தேவன் சபிக்கிறார்!! புறங்கூறுகிறவன் யாராயிருந்தாலும், அவன் இயேசுவின் சீஷனாய் ஒருக்காலும் இருந்திட முடியாது.

ஆகிலும், நோவாவின் அடுத்த இரண்டு குமாரர்களும் தங்கள் தகப்பனின் நிர்வாணத்தைப் பார்க்கமால் ஒரு வஸ்திரத்தை தங்கள் தோளில் வைத்து பின்னிட்டு வந்து நிர்வாணத்தை மூடி, தங்கள் வயது சென்ற தகப்பனுக்கு கனம் செய்தார்கள்! இதனிமித்தமாய், அவர்கள் இருவரும் அவர்கள் குடும்பமும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்! இந்த நிகழ்ச்சியிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய போதகம் யாதெனில்,"தங்கள் பெற்றோர்களைக் கனம்பண்ணுகிறவர்களைத் தேவன் ஆசீர்வதித்திருக்கிறார்! தங்கள் பெற்றோர்களை அசட்டை செய்பவர்களைத் தேவன் சபிக்கிறார்!! " என்பதேயாகும்.

**ஜெபம்** : பரம தகப்பனே! இயேசுவைப்போலவே, எங்கள் பெற்றோர்களை எங்கள் சிறுவயதிலிருந்து, வயது சென்ற காலம்வரை கனம் செய்து வாழ்ந்திட கிருபைதாரும், ஆமென்.

**நம் வாழ்வில் தேவ சித்தம் நிறைவேறிட வேண்டும்!**

*தாவீதை "என் இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டேன்" என அப்போஸ்தலர் 13:22-ம் வசனம் குறிப்பிடுவதற்கு ஓர் உறுதியான காரணம் உண்டு! அது என்னவெனில், அவன் தேவ சித்தம் ஒன்றையே தன் மிகப்பெரிய விருப்பமாய் வைத்து அதை நிறைவேற்றிட வாஞ்சித்தான்! என்ற காரணமேயாகும். இதைத் தாவீதே தன் சங்கீதத்தில் குறிப்பிட்டு "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்" (சங்கீதம் 40:8) எனக் கூறினார். தாவீது ஒன்றும் பூரணமான மனுஷனல்ல! அவன் அநேகம் பாவங்கள் செய்திருக்கிறான். அவைகளில் ஒரு சில பாவங்கள் மிகக் கேடாக இருந்தபடியால் தேவன் அவனை வெகுவாய் தண்டிக்க வேண்டியதாயும் இருந்தது! அப்படியெல்லாம் இருந்தும், தேவனோ அவனை முழுவதுமாய் மன்னித்துவிட்டார்! அவன்மீது பிரியமும் வைத்தார்!! அது ஏனென்றால், "தன் வாழ்வில் தேவனுடைய சித்தம் முழுவதையும் நிறைவேற்றிவிட அவன் கொண்டிருந்த வாஞ்சையேயாகும்". ஆகவே, நம்மிடம் எவ்வளவுதான் குறைவான ஜீவியம் காணப்பட்டாலும், நாமும்கூட தேவனுடைய இருதயத்திற்கேற்ற புருஷர்களாயும், ஸ்திரீகளாயும் மாறிவிட முடியும்!*

*அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? தாவீதைக்போலவே, ஆண்டவருடைய சித்தம் செய்வதற்கே நம் முழு இருதயமும் 'திசைமாற்றம்' கண்டிருக்க வேண்டும்!!*

*இயேசுவின் மாதிரியைப் பின்பற்றி, அவர் நடந்ததுபோலவே விசுவாசிகளாகிய நாமும் நடந்திட வேண்டுமென்றே புதிய ஏற்பாடு வலியுறுத்துகிறது (1 யோவான் 2:6). இயேசு கிறிஸ்துவின் முழு ஜீவியத்திற்கும் ஓர் வழி நடத்தும் ஆதாரமாயிருந்த கோட்பாடு "தன் பிதாவின் சித்தத்தை மாத்திரமே செய்திட வேண்டும்" என்பதாக மத்திரமே இருந்தது. தன் பிதா தனக்கு யாதொன்றைச் சொல்லும்வரை எந்த இடத்திற்கும் அவர் சென்றிட மாட்டார்! ஆனால், தன்பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும்படி சென்றுவிட்டால், எதிரிகளுடைய அச்சுறுத்தலோ அல்லது நண்பர்களுடைய பரிவான கெஞ்சுதலோ அவரை ஒருக்காலும் நிறுத்தி வைக்க முடியவில்லை! ஆம், தன் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதே அவருடைய அன்றாட போஜனமா யிருந்தது (யோவான் 4:34). ஒரு மனிதன் தன் சரீரத்தை போஷித்திட உணவுக்காக ஏங்குவதைப்போலவே, தன்னை அனுப்பின வருடைய சித்தத்தை நிறைவேற்றி முடிப்பதற்கு இயேசு ஏங்கி நின்றார்!*

*தேவனுடைய முழு சித்தத்தையும் நம் வாழ்வில் நிறைவேற்றி முடிப்பதற்கு இயேசு கொண்ட அதே 'பசி' விசுவாசிகளாகிய நம் ஒவ்வொருவருக்கும் இருந்திட வேண்டும்!*

***ஜெபம்*** *: எங்கள் பரம தகப்பனே! தாவீதைப்போலவே, எங்கள் ஆண்டவர் இயேசுவைப்போலவே, எங்கள் வாழ்விலும் உம் சித்தம் நிறைவேறி முடியும் பாக்கியம் தந்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**நம்மை கரம்பிடித்து வழிநடத்த ஆர்வம் கொண்ட தேவன்!**

**கா**ரிருள் சூழ்ந்த ஓர் அடர்ந்த காட்டில் எந்த வழி செல்ல வேண்டும்? என திகைத்து நீங்கள் தனிமையாயிருந்தால், அது எவ்வளவு பெரிய கஷ்டமான சூழ்நிலை! அவ் வேளையில், அந்த அடர்த்தியான காட்டின் ஒவ்வொரு அங்குலத்தையும் நன்றாய் அறிந்த ஒருவர் உங்களோடிருந்தால், அது எத்தனை மகிழ்ச்சியுள்ளதாய் இருக்கும்!! அவர் எங்கு உங்களை நடத்திச் சென்றாலும், யாதொரு கேள்வியும் கேட்காமல் மிகுந்த மகிழ்ச்சியோடும், நம்பிக்கையோடும் அவரைப் பின் தொடர்ந்து நீங்கள் சென்று விடுவீர்கள்.

இனிவரும் எதிர் காலத்தில், இந்தப் பூமியில் இதுவரையில் நாம் கண்டிராத காரிருளே நம் கண்முன் வர இருக்கிறது! அடுத்து என்ன நடக்கும் என்பதை நம்மால் காண முடியவில்லை! இருப்பினும் நாமோ ஒவ்வொரு நாளும் அடியெடுத்து முன் செல்ல வேண்டியதாயும் இருக்கிறது!!

சில சமயங்களில் நான்கு அல்லது ஐந்து சாலைகளின் சந்திப்பில் வந்து நிற்கும் திகைப்பிற்கு நாம் ஆளாகியிருக்கிறோம்! அவ்வேளையில் சரியான முடிவை நாம் எடுக்கவில்லையென்றால், அது மிகக் கேடான விளைவுகளை நமக்கு ஏற்படுத்திவிடும். குறிப்பாய், நம் வேலையைத் தெரிந்து கொள்வதோ அல்லது நம் வாழ்க்கைத் துணையைத் தெரிந்து கொள்வதோ ஆகிய தீர்மானங்கள் நம் முழு எதிர்காலத்தையும் பாதிக்கச் செய்துவிடும்!! இதுபோன்ற சமயத்தில் நாம் எப்படித் தீர்மானம் எடுத்திடவேண்டும்? பாதையில் இருக்கும் அபாயங்கள், சாலைகளில் இருக்கும் ஆபத்தான குண்டு-குழிகள் யாதொன்றும் நமக்குத் தெரிவதில்லை. நம்மை சிக்க வைப்பதற்கென்று சாத்தான் விரித்த கண்ணி வலைகள் எதுவுமே நம் கண்களுக்குத் தெரிவதில்லை. இவ்வளவு கேடான சூழ்நிலையில், நாமோ வாழ்வின் பாதையைத் தீர்மானம் செய்திட வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறோம்!

இந்த இக்கட்டான வேளையில் நமக்கு முன் இருக்கும் எதிர் காலத்தை முழுவதுமாய் அறிந்த ஒருவர் நம்மோடிருப்பது எத்தனை நல்லதென்பது மாத்திரமல்ல. . . அது, நிர்ப்பந்தமான அவசியமாயும் இருக்கிறது!(மத்.28:20) அவ்வாறு நம்மோடிருப்பவர் நம் முழு நம்பிக்கைக்குப் பாத்திரராயும் இருக்க வேண்டும்! இத்தகைய முழு நம்பிக்கைக்குரிய நபரை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் மாத்திரமே நாம் காண முடிகிறது! நம்மைப் பாதுகாப்பான சிறந்த பாதையில் நடத்திச் செல்வதற்கு மாத்திரமல்ல, அவ்வாறு செய்திட சொல்லொண்ணா ஆர்வமுடையவராயும் அவர் இருக்கிறார்.

**ஜெபம் :** எங்கள் பரலோக தந்தையே! எங்கள் மனது விரும்பும் திசை அல்ல, நீர் நடத்த விரும்பும் திசையில் எங்களை நடத்திச்செல்ல எங்களை முழுவதும் உம்மிடம் அர்ப்பணிக்கிறோம்! இயேசுவின் நாமத்தில் ஆமென்.

## ஜீவியம் இல்லாத உபதேசம் கூடாது!

*எது ஆரோக்கியமான உபதேசம்? நீதிமானாக்கப்படுதலையும், பரிசுத்தமாகுதலையும் இன்னும் பல சத்தியங்களையும் விளங்கிப் பேசுவதை ஆரோக்கியமான உபதேசமென வேதம் குறிப்பிடவில்லை என தீத்து 2:1-10 வசனங்கள் தெளிவாகவே நமக்கு கூறுகிறது! அல்லது மனுஷீக பாரம்பரியங்களிலிருந்து நம்மை விடுதலை செய்த உபதேசங் களுக்காக நன்றியுள்ளவர்களாய் இருக்கிறோமே, அதுவும்கூட ஆரோக்கியமான உபதேசத்திற்குப் போதுமான தகுதி அல்ல! ஆம், நமக்கு இரட்சிப்பை அருளி, இந்த உலகத்தில்* **நாம் எவ்வாறு ஜீவிக்க வேண்டும்?** *என போதிக்கும்படியே தேவகிருபையானது நமக்கு வெளிப் பட்டிருக்கிறது என்றே 11,12-ம் வசனங்கள் தொடர்ந்து கூறுகிறது.*

*ஆகவே, நாம் பெற்ற உபதேசங்களை நம்முடைய ஜீவியம் அலங்கரித்தால் மாத்திரமே, அந்த உபதேசம் பிறரை கவர்ந்து கொள்ளும்படி இருந்திட முடியும்! ஒரு சரீரத்திற்கு எலும்புகளே ஓர் வடிவத்தையும், உறுதியையும் தருகிறது என்பது உண்மைதான். . . ஆனால், நம்முடைய எலும்பை மூடியிருப்பதற்கு சதைகள் இல்லா விட்டால் அந்த எலும்புக்கூடு விகாரமாய் இருப்பதைப் போலவே, ஓர் தேவபக்தியான வாழ்க்கை வாழாமல் வெறும் உபதேசங்களை மாத்திரம் பெற்றிருப்பவர்கள், பிறருக்கு விகாரமாகவே இருக்கிறார்கள்!*

*சிறந்த உபதேசங்களைப் பெறாத ஒருவனைவிட, சிறந்த உபதேசங் களைப் பெற்றவன் "ஓர் சிறந்த வாழ்க்கை" யைக் கொண்டிருப்பான் என நாம் எண்ணக்கூடும்! ஆனால், உபதேசங்களைப் பெறாத மற்றவர்களை நாம் சற்று நேர்மையுள்ள இருதயத்தோடு பார்த்தால், பிறமார்க்கத்தில் உள்ளவர்கள்கூட அதிக அன்புள்ளவர்களாயும், அதிக தயவுள்ளவர்களாயும் இருக்கிறார்கள் என்பதைக் காண முடியும்! இவ்வாறு உபதேசங்களே இல்லாத ஒருவனுடைய சிறந்த நடக்கையை நாம் காணும்போது, அது நம்மை தேவனுக்கு முன்பாக ஓர் தொடர்ச்சியான தாழ்மைக்குள் நடத்தி, நொறுங்குண்டு, நம்மை அதிகமாய் மனந்திரும்பச் செய்ய வேண்டுமல்லவா!?*

*அதிகமாய் பெற்றவனுக்கு அதிகமான பிரதிபலன் உண்டு என வேதம் கூறாமல். . . அதனிமித்தம் அதிக தண்டனையின் அபாயமே காத்திருக்கிறது என லூக்கா 12:47,48 வசனங்களில் காண்கிறோம். ஏனென்றால், உபதேசங்களை அறிகிற அறிவில் வளர்ந்த நாம் அந்த உபதேசத்திற்கேற்ற ஜீவியம் நமக்கு இல்லை என்றால், நம் சரீரத்திலிருந்து துருத்திக் கொண்டு வெளியே நிற்கும் எலும்புகளைப் போலவே நாம் காணப்படுவோம்!! ஆம், ஜீவிக்கக்கடவோம்!!*

***ஜெபம்** : எங்கள் பரம பிதாவே! உபதேச பரவசத்தில் நாங்கள் இருந்துவிடாமல், அதன்படி வாழ்ந்து உம் நாமத்தை மகிமைப்படுத்த எங்களுக்கு உதவியருளும், இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**பிறரை நியாயம் தீர்க்காத வாழ்க்கை வேண்டும்!**

ஒரு சமயம், விபச்சாரத்தில் பிடிபட்ட ஒரு ஸ்திரீயை இயேசுவினிடத்தில் பரிசேயர்கள் கொண்டு வந்து குற்றம் சாட்டினார்கள். ஆனால் இயேசு அவர்களிடம் பேசியவுடன் ஒவ்வொருவராய் அவருடைய சமூகத்தைவிட்டு வெட்கத்துடன் பின்வாங்கிச் சென்றுவிட்டார்கள்! இவர்கள் ஏன் ஆண்டவருடைய சமூகத்தை விட்டு வெட்கத்துடன் பின்செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது? ஏனென்றால் இயேசு அவர்களைப் பார்த்து "அவள்மீது கல்லெறியும் முதல் நபர் தனக்குள் பாவமில்லாதவனாய் இருக்க வேண்டும்" எனக் கூறியதே யாகும்! அங்கு இயேசுவின் சமூகத்தில் பிரவாகித்தஒளியில், தாங்கள் எந்த காரணத்திற்காக அந்த ஸ்திரீயைக் குற்றஞ்சாட்டினார்களோ, அவர்களே அக்குற்றத்திற்கு உரியவர்களாயிருந்ததை அந்த வேளையில் உடனடியாக உணர்ந்தார்கள். ரோமர் 2:1 ல் "மற்றவர்களைக் குற்றவாளியாகத்தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி, போக்குச் சொல்ல உனக்கு இடமில்லை. நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக் குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய்" என வாசிக்கிறோம். "நாம் பிறரை விரல் நீட்டிக் குற்றப்படுத்திய ஒவ்வொரு விஷயத்திலும் நாமே நம்முடைய வாழ்வில் குற்றமுள்ளவர்களாய் வாழ்ந்திருப்பதை நியாயத்தீர்ப்பு நாளில் நாம் காண்போம்".

இவ்வாறு யாரெல்லாம் பிறரைக் குற்றப்படுத்தியிருந்தார்களோ அவர்களே கர்த்தருடைய நாளில் வெட்கத்துடன் பின்வாங்கி நிற்பார்கள்!! அநேக விசுவாசிகள் கூர்மையான கண்களையுடையவர்களாய் பிறருடைய சிறுசிறு செயல்களையும், வார்த்தைகளையும்கூட நியாயம் தீர்க்கிறார்கள். எப்போதுமே, ஒருவர் செய்யும் எவ்வளவு நல்ல செயலாக இருந்தாலும், அதிலும்கூட ஏதாகிலும் குறைவுகள் காணப்படத்தான் செய்யும்!ஏனென்றால், நாம் எல்லாருமே நன்மையேதுமில்லாத ஓர் மாம்சத்தையே பெற்றிருக்கிறோம். அப்படியிருந்தும் குற்றம்சாட்டும் ஆவியையுடையவர்களோ ஒருநாளும் தங்களுடைய குறைகளைக் காணவே மாட்டார்கள்!

ஆண்டவருடைய வருகையில், அந்தப் பூரண வெளிச்சத்தில்தான் நாம் நம்முடைய சுயநலத்தையும், பெருமையையும் "முழு அளவில்" காண்போம் (1கொரி 13:12). ஆனால், நாம் இப்பொழுதே அவைகளைத் தேவனுடைய வெளிச்சத்தில் "முழு அளவையும்" கண்டுவிட்டால்... நாம் ஒருவரையும் மீண்டுமாய் குறைகூறி குற்றம் சாட்டவே மாட்டோம்!! இவ்வாறு "எவ்வளவு அதிகமாய்" நம்முடைய அசுசி களை நாம் காண்கிறோமோ, "அவ்வளவு குறைவாய்" பிறருடைய குறைகளை நாம் காண்போம்!

**ஜெபம் :** எங்கள் அன்பின் தகப்பனே! பிறருடைய குறைகளை குற்றமாய் காணாமல், எங்கள் குறைகளையே உமது வெளிச்சத்தில் அதிக அதிகமாய் கண்டு சுத்திகரித்து வாழ உதவி செய்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.

**ஒருவருக்கொருவர் நன்றியுள்ளவர்களாய் இருந்திட வேண்டும்!**

*நம்முடைய வீட்டில் எத்தனையோவிதத்தில் பாடுபட்டு உழைத்துக்கொண்டிருக்கும் மனைவிக்காக நம்மில் எத்தனை கணவன்மார்கள் நன்றியுள்ளவர்களாய் இருக்கிறார்கள்? (கலா. 3:15).*

*கணவனாகிய நீங்கள், உங்கள் மனைவிக்காக நன்றியற்றவர்களாய் இருந்தால், பின் எப்படி உங்கள் பிள்ளைகள் பெற்றோர்களாகிய உங்களிடம் நன்றியுள்ளவர்களாய் இருந்திட நீங்கள் எதிர்பார்க்க முடியும்?*

*ஆண்டவர் திரும்பவரும் வேளையில், நம்மில் அனேக கணவன் மார்கள் தங்கள் மனைவியிடம் நன்றியில்லாத கொடிய கடின இதயம் கொண்டிருந்ததை கண்டு கொள்வார்கள்! அதேபோல், அனேக மனைவிமார்கள் தங்கள் கணவனிடம் எவ்வளவு நன்றியில்லாமல் இருந்தார்கள் என்பதையும் "அன்று" கண்டு கொள்வார்கள்!!*

*ஒரு சமயம், வகுப்பு ஆசிரியர் தன் மாணவர்கள் முன்பாக, ஒரு மூலையில் சிறு கருப்பு புள்ளி கொண்ட பெரிய வெள்ளை பேப்பரை விரித்து வைத்தார். பின்பு மாணவர்களைப் பார்த்து "மாணவர்களே இங்கு நீங்கள் எதைக் காண்கிறீர்கள்?" எனக் கேட்டார். உடனே அனைவரும் "ஓர் கருப்புப்புள்ளி" எனக்கூறினர். அவர்களில் ஒருவர்கூட, அங்கிருந்த "பெரிய வெள்ளைத்தாளை" பார்த்ததாகக் கூறவில்லை! இப்படித்தான் நம் மனுஷீக சுபாவம் இருக்கிறது. மற்றவர்களிடம் காணும் நன்மையைக் காண்பதற்கு குருடர்களாயும், அவர்களிடமுள்ள "கருப்பு புள்ளியே" இவர்களின் பார்வைக்குத் தெளிவாகவும் தெரிகிறது! இவையாவும் அகந்தையான பெருமையின் விளைவேயாகும். தாழ்மையுள்ளவர்கள், தேவன் தங்களுக்குத்தந்த மூப்பர்களுக்காகவும், சகவிசுவாசிகளுக்காகவும் எப்போதும் நன்றி யுள்ளவர்களாயிருப்பார்கள்! இவ்வாறு தங்கள் சகோதர சகோதரி களினிமித்தம் நன்றியில்லாமல் இருந்திட "சாத்தானின் பெருமையே" அவ்விதம் அவர்களைத் தூண்டுகிறது! ஆம், நாம் ஒருவருக்கொருவர் நன்றியுள்ளவர்களாய் இருக்கும்படியே அழைக்கப்பட்டிருக்கிறோம்! (கொலோ.3:15). அந்த நபர் உங்களிடமிருந்து மறைந்து அல்லது மரிப்பதற்கு முன்பாக அவர்களுக்கு செலுத்திட மறவாதிருக்கக் கடவோம்!*

***ஜெபம்*** *: எங்கள் பரம தந்தையே! நன்றியில்லாத பெருமைகொண்ட இருதயத்தை வெறுக்கிறோம்! ஒருவருக்கொருவர் மெய்யான தாழ்மையுடன் நன்றியுள்ளவர்களாய் வாழ கிருபைதாரும், ஆமென்.*

**'கோபம்' நரகத்திற்கு நடத்தும் பாவம் என அறியவேண்டும்!**

*கோபத்தைக் குறித்து இயேசு கூறிய இவ்வசனங்களை தமிழ் வேதாகமத்தில் "தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன்" என துரதிருஷ்டமாய் 'நியாயமில்லாமல்' என்ற பதம் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால், மூலவார்த்தையில் இப்பதம் இல்லை யென்பதை அறிந்து கொள்ளுங்கள். இப்பூமியில் கோபமடையும் எந்த மானிடனுக்கும் ஏதாகிலும் ஒரு நியாயம் அல்லது காரணம் இருக்கத்தான் செய்கிறது!? எனவே இயேசு குறிப்பிடாத 'நியாயமில்லாமல்' என்ற பதம், இயேசு கூறிய புதிய உடன்படிக்கையின் சத்தியத்தின் வலிமையை குறைப்பதாகவே இருக்கிறது. எனவே சரியான அர்த்தத்தின்படி, "தன் சகோதரனை* **கோபித்துக்கொள்ளும் யாராயிருந்தாலும்** *அவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்" என்பதே உண்மையாகும் (மத்.5:22). கோபத்தின் இரண்டாவது படியாய், "ஒருவன் தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனை சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்." அதாவது ஒருவன் தன் சகோதரனை ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாதவன் எனக் கூறுவதே சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்லும் குற்றத்துக்கு ஏதுவாகும். இக்கோபம் வளர்ந்து மூன்றாவது படியாய், "தன் சகோதரனை மூடனே (Fool) என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்" என்று இயேசு கூறினார். அந்தரங்கத்தில் முதலில் கோபம் தோன்றி, அடுத்து அச்சகோதரனை வீணனென கருதி, அடுத்து மூன்றாவது படியாக 'முட்டாள்' எனக்கூறி உதாசீனம் செய்யும் எரிநரக தரத்தின் கோபத்திற்குள் ஒருவன் நடத்தப்படுகிறான்!*

*புதியஏற்பாட்டில் கோபத்தைக்குறித்த விளைவு இவ்வளவு கடுமையாய் இருப்பதினிமித்தமே, "நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில்.... முன்பு உன் சகோதர னோடே ஒப்புரவாகு" (மத்தேயு 5:23,24) என்று இயேசு கூறினார். உங்கள் பேரில் உங்கள் சகோதரனுக்கு ஏன் குறைவு உண்டானது? ஏனெனில் உங்கள் அந்தரங்கத்தில் அச்சகோதரன்மீது கோபமாகிய தீய மனநோக்கத்தை வளர்த்து, அதன் அடுத்த படியாக அச்சகோதரனை வீணனெனக் கருதி, அடுத்தபடியாக உங்கள் சம்பாஷணையில் அந்தரங்க கோபம் கொப்பளித்து 'முட்டாள்' என மனம் புண்படும்படி பேசிவிட்டீர்கள்! அவ்வார்த்தை உங்கள் சகோதரனுக்கு தீங்கு செய்துவிட்டது. எனவே உங்கள் நிமித்தமாய் அச்சகோதரனுக்கு உங்கள்மீது இப்போது குறைவுண்டாயிற்று! இக்குறை உண்டாவதற்கு காரணமாயிருந்த என் அந்தரங்கத்தில் உருவான கோபத்திற்காக நான்தான் வருந்தி அச்சகோதரனிடம் ஒப்புரவாக வேண்டும்!!*

***ஜெபம்** : அன்பின் தகப்பனே! எக்காலத்திலும், யார்மீதும் கோபம் அடையாதிருக்க எங்களுக்கு உதவிசெய்தருளும்! கோபமடைந்தால், உடனே ஒப்புரவாகிட தயை செய்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**யாவரோடும் ஒப்புரவாகிட, சுயத்தின் வலிமை சாகவேண்டும்!**

நம்மைப் பொறுத்தவரையில், நாம் யாவரோடும் சமாதானமாயிருக்கவே நாடவேண்டும். ஒருவேளை நீங்கள் யாரையேனும் தீமையாக பேசிவிட்டால் உடனடியாக அவரிடம் மன்னிப்புக் கேட்டு ஒப்புரவாகிவிட வேண்டும். இவ்வாறு செய்யும்படியே இயேசுவும் கூறினார். "உன் எதிராளியோடு வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து" என இயேசு கூறினார் (மத்தேயு 5:25).

இங்கு இயேசு குறிப்பிட்ட 'எதிராளி' தேவவசனமேயாகும். நம்மோடு பேசும் தேவனுடைய வார்த்தைக்கு அல்லது மனசாட்சிக்கு கீழ்ப்படியாதிருக்கும்போது அந்த தேவனுடைய வார்த்தை முடிவில் நமக்கே எதிராளியாக வந்து நிற்கும். "எதிராளியோடு வழியில் இருக்கும்போதே" என இயேசு குறிப்பிட்ட "வழியில் இருக்கும் போதே" என்பதற்கு பொருள், இன்னமும் நாம் உயிரோடிருக்கும் போதே என்பதே பொருளாகும். இவ்வாறு தன் வழியிலேயே . . . தன் ஜீவிய காலத்திலேயே, ஒப்புரவாகாத ஒருவனை, எதிராளியாய் மாறிய தேவ வார்த்தை முடிவில் நியாயாதிபதியாகிய தேவனிடத்தில் அவனை நியாயந்தீர்க்கும்படி ஒப்புக்கொடுத்துவிடும். இன்று தேவன் நம்முடைய தகப்பனாகவே இருக்கிறார்! ஆனால், இயேசுவின் வார்த்தைகளை மிகுந்த ஜாக்கிரதையாகக் கைக்கொள்ளாத ஒருவனுக்கு இந்த அன்புள்ள தகப்பன் ஒருநாளில் நியாயந்தீர்க்கும் நியாயாதிபதியாக வந்து நியாயதண்டனை வழங்குவார்!! இதை இயேசு குறிப்பிடும்போது, "நீ ஒரு காசும் குறைவுன்றிக் கொடுத்துத் தீர்க்குமட்டும் அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய்" (மத்தேயு 5:26) எனக் கூறினார். அதாவது அம் மனுஷனை, நியாயாதிபதி நித்திய ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து விடுவார் என்பதே இவ்வசனத்தின் பொருளாகும்.

எனவே இருதயத்தில் "கோபம் கொள்ளும்" இவ்விஷயத்தை நாம் யாவரும் மிகவும் 'சீரியஸாக' எடுத்துக் கொள்வோமாக. இவ்வசனத்திற்கு அப்படியே கீழ்ப்படிந்து தன் இருதயத்தில் நிதானமிழந்து கோபப்படாமலிருக்க வாஞ்சிக்கும் ஒருவன், தன் வலிமையான சுயத்திற்கு கண்டிப்பாய் மரித்திட வேண்டும்!

***ஜெபம்*** : *எங்கள் அன்பின் தந்தையே! விரைந்து கோபமடைந்த நாங்கள் "வழியில் இருக்கும்போது" விரைந்து ஒப்புரவாகி எங்கள் சுயத்திற்கு மரித்திட கிருபை செய்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**தேவகிருபையைக் கொண்டு கண்களின் இச்சையை ஜெயித்திட முடியும்!**

இயேசு மத்தேயு 5:27-ம் வசனத்திலிருந்து விபசாரத்தைக் குறித்துப் பேசினார். "விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று; உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப் போவது உனக்கு நலமாயிருக்கும்" (வசனம் 27-29). மலைப்பிரசங்கத்தில் இயேசு நரகத்தைக்குறித்து திட்டவட்டமாய் கூறியிருப்பதைப் பாருங்கள்! ஒருவன் தன் சிந்தையில் அருவருப்பான எண்ணத்திற்கு இடம்தந்து, முடிவில் தன் கண்களினால் பாவம்செய்தால் அல்லது தன் கைகளினால் பாலியத்திற்குரிய பாவம்செய்தால் அவனுடைய முழுசரீரமும் நரகத்தில் தள்ளப்படும் என்று இயேசு எச்சரித்தார்.

இவ்எச்சரிப்பின் வசனங்களை இன்று எத்தனைபேர் அப்படியே விசுவாசிக்கிறார்கள்? இன்று அநேகர், தேவன் தான் சொல்லுகிறபடியெல்லாம் செய்துவிடமாட்டார் என எண்ணிக் கொள்கிறார்கள். ஆனால் யோவான் 12:48-ல் "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்" என இயேசு கூறிய எச்சரிக்கையின் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள். உன் கண் இடறலுண்டாக்கினால் அதைப் பிடுங்கி எறிந்துபோடு என இயேசு கூறியது, "ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்ப்பதை" ஒப்பிட்டே கூறினார். இம்மனிதன் அந்த ஸ்திரீயைத் தொடவோ அல்லது எவ்வகையிலும் நெருங்கவோ இல்லை. அவன் இச்சையோடு பார்த்ததே பாவத்தில் இடறிவிழும்படி செய்து விட்டது! புதிய உடன் படிக்கையில் இவ்வித உயர்ந்த பரிசுத்தத்தின் தரத்தையே இயேசு வலியுறுத்தினார். ஒருவேளை நீங்கள் சொல்லலாம் "இவையெல்லாம் மிகவும் உயர்ந்த தரம், இப்படியெல் லாம் வாழ்வதற்கு ஓர் மானிடனால் ஒருக்காலும் முடியாது." நீங்கள் சொல்வது சரிதான், மனுஷரால் கூடாத இத்தரத்தின்படி வாழ்வதற்கே, கிருபையும் பரிசுத்தாவியின் பெலனும் அவசியமாயிருக்கிறது! இதினிமித்தமே நாம் கிருபாசனத்தண்டைக்குச் சென்று தேவனிடம் கிருபையைக் கேட்பது மிகுந்த அவசியமாயிருக்கிறது. இவ்வாறு கிருபையைப் பெறும் ஒருவன், "அவருடைய கிருபை எல்லாவற்றிற்கும் போதுமானது!" என்ற உண்மையைக் கண்டு கொள்வான். இக்கிருபை எவ்வித அசுத்த பார்வையையும், எவ்வித அசுத்த சிந்தைகளையும் ஜெயிப்பதற்கு நிச்சயமாய் போதுமானதேயாகும்!!

**ஜெபம்** : *எங்கள் பரம பிதாவே! பரிசுத்தமே எங்கள் விருப்பம்..... ஆகவே கண்களின் இச்சையாகிய பாவத்தை ஜெயித்திட தயவாய் எங்களுக்கு உமது கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## பொய் சொல்லும் பாவத்திலிருந்து விடுதலை பெறவேண்டும்!

சங்கீதம் 58:3 "தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் பொய்சொல்லி வழிதப்பிப் போகிறார்கள்" எனக் கூறுகிறது. தாயின் வயிற்றிலிருக்கும்போதே ஒருவன் எப்படி பொய் சொல்லுவான்? கர்ப்பத்திலிருக்கும்போது ஒருவன் பேசக் கூடுமோ? என நாம் கேட்கலாம். ஆனால் இவ்வசனம் கூறும் சத்தியம் யாதெனில் ஒருவன் பேசாமலிருந்தும்கூட பொய் சொல்ல முடியும்! என்பதையே வலியுறுத்துகிறது. அதாவது பொய்யானது வெறும் வார்த்தையைக் காட்டிலும் வலிமையானதாகும். ஒரு குறிப்பிட்ட தோற்றத்தின் மூலமாய் அல்லது நடக்கையின்மூலமாய், நாம் ஒரு வார்த்தைகூட பேசாமல் பிறரை ஏமாற்றி வஞ்சிக்கமுடியும்! வார்த்தை ஏதும் பேசாமலே நடந்திடும் மாய்மால ஜீவியம் (Hypocrisy) பொய்யின் வலிமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அப்போஸ்தலர் 5-ம் அதிகாரத்தில் அனனியாவும், சப்பீராளும், பேதுருவுக்கு முன்பாய் நின்றபோது ஒருவார்த்தைகூட பேசவில்லை! இருப்பினும் பேதுரு அனனியாவை நோக்கி: "பரிசுத்தஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?" எனக் கேட்டார் (வசனம் 3). இதிலிருந்து, ஒருவன் எந்த வார்த்தையும் பேசாமலே பொய்சொல்ல முடியும் என்ற உண்மையை அறியலாம். நம்மைக்குறித்து உண்மையல்லாத ஒன்றை ஒரு குறிப்பிட்ட தோற்றத்தின்மூலம் உண்மையாய் இருப்பதுபோல பாவனை செய்து நாம் யாவருமே பொய்சொல்ல முடியும் என்ற உண்மையை அறியலாம். இந்நிகழ்ச்சியில், சபை கூட்டத்துக்கு வந்த அனனியா கர்த்தருக்கென்று தனக்குண்டான முழுமையையும் தராதிருந்தும் தன் பணம் முழுவதையும் தந்துவிட்டதுபோன்ற பாசாங்குடன் வந்துநின்றான். இந்த அனனியா தனக்கென்று கொஞ்சம் பணத்தை எடுத்துக் கொண்டது எவ்விதத்திலும் பாவமாகாது. ஆனால் எல்லாம் கொடுத்துவிட்டதுபோல் அவன் **பாசாங்கு** செய்ததே கொடிய பாவமான பொய்யாக மாறி அவனை நியாயந்தீர்த்தது. பழைய ஏற்பாட்டின் தரத்தில் ஆணைக்குட்பட்டிருக்கும் ஒருவன் எப்போதும் உண்மையே பேசவேண்டும் என்பதாய் கூறப்பட்டது. ஆனால் புதிய உடன்படிக்கையில், "ஆணையே இடவேண்டாம்!" என இயேசு கூறிவிட்டார். இவ்வாறே யாக்கோபு 5:12ம் வசனத்திலும், "வானத்தின்பேரிலாவது பூமியின் பேரிலாவது வேறெந்த ஆணையினாலாவது சத்தியம் பண்ணாதிருங்கள். நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு உள்ளதை உள்ள தென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லக்கடவீர்கள்" என்று வாசிக்கிறோம்.

**ஜெபம்:** *எங்கள் பரம தகப்பனே! உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லாதென்றும் பேசிட கிருபை செய்து, பொய்யிலிருந்து விடுதலைபெற உதவிசெய்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**பழிவாங்கும் விஷம் நம்மிலிருந்து அகல வேண்டும்!**

பழிவாங்கும் கொடிய சுபாவமும் நம் ஒவ்வொரு நாடி நரம்புகளிலும் விஷம்போல் ஊறி இருக்கிறது. தனக்குத் தீங்கு செய்துவிட்ட ஒருவனை ஏதாகிலும் ஒரு விதத்தில் பழி வாங்கிட நாம் யாவருமே துடித்து நிற்கிறோம். பழைய ஏற்பாட்டின் தரத்தின்படி ஒருவன் இன்னொருவனுடைய உயிரைக் கொன்றால், கொன்றவனுடைய உயிரும் கொல்லப்படவேண்டும் என்பதாகவே இருந்தது. ஏதாகிலும் ஒரு சண்டையில் ஒருவனுடைய பல் உடைந்துவிட்டால், அவ்வாறு தாக்கிய மற்றவனுடைய பல்லும் அதேபோல் உடைக்கப்பட வேண்டும் என பழைய ஏற்பாட்டின் தரம் வைக்கப்பட்டிருந்தது. இப்போது புதிய ஏற்பாட்டில், நாம் பழைய ஏற்பாட்டின் இந்த தரத்தின்படி வாழத் தேவையில்லை. தெய்வீக உயர்ந்த ஜீவியதரத்தை ஸ்தாபித்த இயேசு, இதுபோன்று பழிவாங்காமல், "மன்னிக்கும் படியே" கற்றுத்தந்தார். யாராகிலும் ஒருவர் என்னுடைய ஒரு கண்ணைப் பிடுங்கி விட்டால் இப்போது நான் பதிலுக்கு அவருடைய கண்ணைப் பிடுங்கத் தேவையேயில்லை. தீங்கோடு எதிர்த்துநிற்காமல் வலது கன்னத்தை அறைந்தவனுக்கு மறுகன்னத்தைத் திருப்பிக் கொடுக்கும்படியே இயேசு புத்தி கூறினார்.

இவ்வாறெல்லாம் இயேசு கூறியதின் பொருள், யாரோ ஒருவர் உங்கள் உடைமைகளைத் திருடும்போது "பரவாயில்லை திருடிக் கொண்டு போகட்டும், விட்டுவிடுங்கள்" என்பதாக கூறவில்லை. ஆனால், நம் தனிப்பட்ட ஜீவியத்தில் பழிவாங்குதலின் நோக்கம் கொஞ்சமும் இருக்கக்கூடாது என்பதையே இயேசு வலியுறுத்தினார். பொருளாசையினால் உண்டாகும் விரோத மனப்பான்மைக்கு நாம் விலகிநிற்கவும், நம் சொந்தஉரிமைகளைத் தற்காப்பதற்காகப் போராடுவதைத் தவிர்க்கவுமே இயேசு வலியுறுத்திக் கூறினார். இதற்கு மாறாக நம்முடைய உரிமைகளுக்குரிய நியாயத்தை தேவனிடமே ஒப்புக்கொடுத்துவிட வேண்டும்! ரோமர் 12:10-ம் வசனம் இவ்வாறாகவே "பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன்" எனக் கூறுவதை வாசிக்கிறோம். எனவே நமக்கு தீங்குசெய்யும் ஒருவருக்கு நாம் பதிலுக்கு தீங்குசெய்யாமல் அதைக் குறித்த நியாயத்தை தேவனிடமே ஒப்புக்கொடுத்துவிட வேண்டும்.

"உன் சத்துரு விழும்போது சந்தோஷப்படாதே, அவன் இடறும்போது உன் இருதயம் களிகூராதிருப்பதாக" (நீதி. 24:17). இவ்வாறு சத்துரு விழும்போது களிகூருவதே பழிவாங்குதலின் நோக்கம் ஆகும்! இதற்கு மாறாய் நாம் அன்பின் நோக்கமே கொண்டிருக்கவேண்டும்.

**ஜெபம்** : *அன்பின் தந்தையே! எங்களுக்குத் தீமை செய்திடும் யாராயிருந்தாலும், அவர்கள்மீது பழிவாங்கும் மனப்பான்மை இல்லாமல் அவர்களிடம் 'அன்பின் நோக்கமே' கொண்டிட தயை செய்தருளும், ஆமென்.*

**பிதாவைப்போலவே யாவரையும் நேசித்து அவரது புத்திரனாக வேண்டும்!**

சூரியனோ அல்லது மழையோ, அவைகளைப் பாகுபாடின்றி நல்லோர்மீதும் தீயோர்மீதும் தேவன் வருஷிக்கச் செய்கிறார். நீதியுள்ளவனின் வயலைப்போலவே அநீதியுள்ளவனின் வயலும் மழைநீரைப் பெற்று, அநீதியுள்ளவனையும் தேவன் ஐசுவரியவானாக மாற்றுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். அவ்வாறில்லாமல் நீதியுள்ளவனை மாத்திரமே தேவன் ஆசீர்வதிப்பார் என்றால் அநீதியுள்ளவனின் நிலை இப்பூமியில் பரிதாபத்திற்குரியதாய் மாறிவிடும். ஏனென்றால், இவ்வுலகில் யாரும் பொருளாதார ஆசீர்வாதத்திற்கென்று தன்னிடம் பக்தியாய் வருவதை தேவன் விரும்பவேயில்லை. நீதிமான்களை தேவன் பொருளாதார ரீதியாய் ஆசீர்வதிக்கிறார் என ஜனங்கள் அறிந்துகொண்டால், ஏராளமான ஜனங்கள் தாங்களும் நீதிமான்களாக வேண்டுமென தேவனிடம் வந்துவிடுவார்கள்! அவ்வாறு அவர்கள் வருவது தேவனை நேசிப்பதினிமித்தமாய் அல்லாமல் அவரிடமிருந்து வெறும் ஆசீர்வாதங்களைப் பெறுவதற்காக மாத்திரமே இருக்கும்!! நீதியுள்ள விவசாயிக்கு மாத்திரம் தேவன் மழையை வருஷித்தால், ஏராளமான விவசாயிகள் தாங்களும் நீதிமான்களாய் மாறிவிடுவார்களே!! அவ்வாறு மாறுவது நீதியை நேசித்ததினால் அல்ல . . . அவர்களுடைய விவசாயப்பண்ணைக்கு மழைவேண்டும் என்பதற்காகவே அப்படிச் செய்தார்கள்!?

இதினிமித்தமே தனக்கென்று உண்மையாய் இருப்பவர்களைத் தெளிவாகக் காணும்பொருட்டு, அவர்கள் மிக எளிதில் அநீதி செய்வதற்குரிய சுதந்திரத்தை தேவன் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார். எனவே இப்போது தங்கள் அநீதியைவிட்டு மனந்திரும்பி தேவனிடம் வருகிற ஒருவன், அவ்வித செயலை தேவனை நேசித்துச் செய்யவேண்டுமே அல்லாமல் உலக ஆசீர்வாதங்களைப் பெறுவதற்காக அல்ல!

தேவனுடைய சுபாவமானது, தீமை செய்பவர்களையும் நன்மை செய்பவர்களையும், நீதி செய்பவர்களையும் அநீதி செய்பவர்களையும், நன்றியுள்ளவர்களையும் நன்றியில்லாதவர்களையும் ஒரேவிதமாய் அன்புசெலுத்தி நன்மை செய்வதேயாகும்! யாரெல்லாம் இப்பிதாவின் குணாதிசயத்தைத் தங்களில் பெற்றிருக்கிறார்களோ அவர்களே பரலோகப் பிதாவுக்கு புத்திரனாய் மாறிடமுடியும்! (மத்தேயு 5:45). இந்த அரிய சிலாக்கியத்தைப் புதிய உடன்படிக்கையில் வாழும் நமக்கென்றே தேவன் தந்தருளியுள்ளார்.

**ஜெபம்** : *எங்கள் பரம பிதாவே! தீமை செய்பவர்களுக்கும் நீர் நன்மை செய்வதைப்போலவே நாங்களும் எங்களுக்குத் தீமை செய்தவர்களுக்கு நன்மை மாத்திரமே செய்து உம் புத்திரர்களாய் மாறிடும் சிலாக்கியம் தந்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## பிதாவின் சித்தம் செய்வதே அவரை மகிழ்விக்கும் ஜீவியம்!

நம்முடைய அன்றாட ஜீவியத்தில் நாம் தேவ சித்தம் செய்திட விரும்பினால் மாத்திரமே, இயேசுவை "ஆண்டவர்" என அழைத்திடவும் முடியும். ஓர் மனிதன் தன் மனதிலும், உணர்ச்சியிலும் தூண்டப்பட்டதால் அல்ல. மாறாக அம்மனிதன் தன் சித்தத்தை வளைந்து கொடுத்து, "ஆண்டவரே என் சித்தமல்ல, உம் சித்தமே என் வாழ்வில் செய்யப்படட்டும்" எனக் கூறும்பொழுதுதான் அம் மனிதனுக்குள் உண்மையான மாற்றம் ஏற்படுகிறது. தன் ஆண்டவருக்கு முன்பாக இதே மனோபாவத்தைத் தொடர்ச்சியாகக் காத்துக் கொள்ளும் ஒருவனே தன் வாழ்வில் அதிகமதிகமாய் பரிசுத்தமாகி ஜொலித்திடுவான்!

தன் ஜீவிய காலம் முழுவதும், "என் சித்தமல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது" என இயேசு தன் பிதாவிடம் ஜெபித்தார் (யோவான் 6:38). தன் பிதாவை மகிழ்விப்பதற்கு இயேசு இவ்விதமாய் ஜீவிக்க அவசியமாயிருந்ததால், நாமும் பிதாவை மகிழ்விக்க இதைத்தவிர வேறு வழியே இல்லை! இந்த மனோபாவம் நம் ஜீவியத்தில் தொடர்ச்சியாக இல்லாவிட்டால், நாம் ஆண்டவரோடு இசைந்து நடப்பதில் ஒருக்காலும் வளர்ச்சி காணவே முடியாது.

நாமோ பலமணி நேரங்கள் ஜெபித்து; திரட்சியான வேத ஆராய்ச்சியில் ஈடுபட்டு; நூற்றுக்கணக்கான கூட்டங்களுக்கும் சென்றிருக்கலாம்! ஆனால், இவ்வாறு செய்த நாம், "பரமண்டலத்தில் உம்முடைய சித்தம் செய்யப்படுவதுபோல பூமியிலேயும் உம்முடைய சித்தம் (முதலாவது, நம்முடைய ஜீவியத்தில்!) செய்யப்படுவதாக" என ஜெபிக்கும் ஸ்தானத்தை அடைந்திராவிட்டால், நம்முடைய நேரங்களையெல்லாம் வீணாக்கிப்போட்ட பரிதாபத்திற்கே உள்ளாவோம்!! நாம் பெற்ற கிருபைகள் ஒவ்வொன்றும், நம் இருதயத்தின் ஆழத்திலிருந்து, "பிதாவே என் சித்தமல்ல.... உம் சித்தமே செய்யப்படட்டும்" என்ற ஸ்தானத்திற்குள் நம்மை நடத்தியிருக்க வேண்டும். இங்குதான் உண்மையான பரிசுத்தத்தின் இரகசியம் அடங்கியிருக்கிறது.

மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும்; ஆவி மாம்சத்திற்கு விரோதமாகவும் போராடுகிறது என கலாத்தியருக்குப் பவுல் எழுதினார் (கலா.5:17). மனுஷனுடைய சித்தத்திற்கும் தேவனுடைய சித்தத்திற்கும் இடையில் நிகழும் போராட்டத்தையே பவுல் இங்கு குறிப்பிட்டார்.

எனவே, என் சுய சித்தத்திற்கு 'இல்லை' என்றும் தேவனுக்கு 'ஆகட்டும்' என்றும் கூறி என் சுயம் சாவதற்கு வழி ஏற்படுத்திவிடும் மார்க்கமே உண்மையான பரிசுத்தமாகுதலின் மார்க்கமாகும்.

**ஜெபம்:** பரலோக பிதாவே! உம்மை "ஆண்டவராய்" கொண்டு உமது சித்தம் அல்லது உமது விருப்பம் மாத்திரமே செய்து, உமக்குப் பிரியமாய் வாழ கிருபை தாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.

**சிலுவை வீரரே! முன்னேறிச் செல்லுங்கள்!!**

*யுத்தத்தில் எதிரிகள் மீதே குறியாயுள்ள போர்ச்சேவகன் எவ்வாறு தன் பிழைப்பிற்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளாமல் அதிலிருந்து விடுதலையாயிருக்கிறானோ அதேபோல், நமக்கு ஏற்படும் சூழ்நிலைகளுக்குள் நாம் சிக்கிக் கொள்ளாமல் "சுயத்தை" அழிப்பதற்கே குறியாய் இருக்க வேண்டும்! ஆனால் காரியம் என்னவென்றால், இன்று கிறிஸ்தவ ராணுவத்தில் சேவகம் செய்திட தங்கள் பெயரைப் பதிவு செய்துகொண்ட அநேகர் தங்களுக்கு ஏற்படும் சூழ்நிலைகளுக்குள் சிக்கிக்கொண்டு உழலுகிறார்கள்! "மகிமை நிறைந்த" கிறிஸ்தவர்களாய் அல்ல, கஷ்டம் நிறைந்த கிறிஸ்தவர் களாகவே காணப்படுகிறார்கள்!*

*"கிறிஸ்துவின் பாடுகளுக்குள்" பிரவேசிக்க வேண்டிய இந்த வீரன், சூழ்நிலைகளின் வேதனைக்குள் சிக்கிக் கொள்ளுகிறான்!!*

*தங்கள் தலையில் கை வைத்துக்கொண்டு "ஏராளமான பாடுகள்" என இவர்கள் குறிப்பிடுவதெல்லாம் இவர்கள் பங்கு பெறவேண்டிய "கிறிஸ்துவின் பாடுகள்" அல்ல. . . "சூழ்நிலைகளின் வேதனைகளே"யாகும்!! இவர்கள் "சிலுவை" எனக் கூறுவதெல்லாம் "மனுஷரையும்" "சூழ்நிலைகளையுமே" சிலுவை எனக் கூறுகிறார்கள்! .இவர்களா கிறிஸ்துவின் போர்வீரர்கள்? இல்லை, சூழ்நிலைகளில் நசிந்து தளர்ந்துபோன கோழைகள்! இரட்சிப்பின் அதிபதியாகிய தங்கள் கேப்டனுக்குப் புகழ்ச்சியை அல்ல, இகழ்ச்சியைக் கொண்டு வருபவர்கள்!! இவர்கள் தேவ கிருபையில் பலப்பட்டவர்களா? இல்லவே இல்லை!*

*மெய்யான கிறிஸ்துவின் வீரன் உபத்திரவங்களில் மேன்மையே பாராட்டுவான்! (ரோமர் 5:4). கிறிஸ்துவின் பாடுகளில் தான் அதிக அதிகமாய் பங்கு பெறுவதை தனக்குக் கிடைத்த சிலாக்கியமாகக் கருதுவான். தான் அடையும் உபத்திரவங்களை, சூழ்நிலைகளை, தேவனுக்கு முன்பாக மாத்திரமே வைத்து, மகிமையில் பங்கடையச் செய்யும் தன் சிலுவையைச் சுமந்து தீவிரமாய் முன்னேறிக் கொண்டிருப்பான்!!*

***ஜெபம்*** *: அன்புள்ள பிதாவே! கிறிஸ்துவின் நல்ல போர்ச் சேவகனாய் சூழ்நிலைகளுக்குள் சிக்கிக்கொள்ளாமல், சிலுவை தாங்கி உம்மை விழிப்புடன் பின்பற்ற அனுகிரகம் செய்தருளும், ஆமென்.*

**தேவனுடைய கட்டளைக்கு மகிழ்ச்சியுடன் கீழ்ப்படிய வேண்டும்!**

*பரலோகத்தில் தேவன் ஏதேனும் ஒரு கட்டளையைப் பிறப்பித்தால், அவைகள் யாவும் முழுமையாக (Completely) நிறைவேற்றப்படுகின்றன! அக்கட்டளையை ஏற்றிடும் தேவதூதர்கள் தேவனுக்கு அரைகுறையாய் கீழ்ப்படிவதில்லை. தேவதூதர்களின் கீழ்ப்படிதல் எப்போதும் மகிழ்ச்சி நிறைந்ததாகவே இருந்தது. 'அவருக்குக் கீழ்ப்படிய வேண்டுமே' என முணுமுணுத்துக் கொண்டு குறை கூறிக்கொண்டு தூதர்கள் கீழ்ப்படிவதில்லை. எந்த ஒரு தூதனும் தனக்கு கொடுக்கப்பட்ட பணியை வேறொரு தூதனோடு ஒப்பிட்டுப்பார்த்து, "ஆண்டவரே, நீர் அந்த தூதனுக்கு கொடுத்த பணியைக் காட்டிலும் எனக்கு அதிக கஷ்டமான பணியைத் தந்துவிட்டீரே!" என்றும் ஒருபோதும் கூறுவதில்லை. ஆனால் இன்று அநேக விசுவாசிகளிடம் "இவ்வளவு அதிகமான தியாகமெல்லாம் நான் எதற்குச் செய்யவேண்டும்? அவனை அல்லது அவளைக் குறித்த காரியமென்ன?" என்றே முறுமுறுக்கிறார்கள். ஆனால் தூதர்களோ, அவருக்கு கீழ்ப்படியும் தருணத்தை ஓர் அரிய தருணமாகவே எடுத்துக் கொண்டு மகிழ்வுடன் கீழ்ப்படிகிறார்கள்!!*

*இன்று நீங்கள் இப்பூமியில் தேவசித்தம் செய்து வாழ்வீர்களென்றால், நீங்கள் விண்ணகத்திற்குள் பிரவேசிக்கும்போது இவ்விதம் வாழ்ந்ததற்காக ஒருபோதும் வருந்தவேமாட்டீர்கள்! அங்கே நம் நல்ல ஆண்டவரை முகமுகமாய் நீங்கள் காணும்பொழுது, "அடடா, நான் என் ஜீவியத்தை இன்னும் அதிகமாய் அவரிடம் அர்ப்பணிக்காமல் போனேனே! இன்னும் அதிகமாய் அவருக்கு முழுமையாய்க் கீழ்ப்படிந்திருக்கலாமே!!" என்றுதான் உங்களுக்குக் கூறிடத் தோன்றும்! இப்பூமியில் தேவனுடைய கற்பனைகளுக்கு உடனடியாகவும், முழுமையாகவும், மகிழ்ச்சியோடும் கீழ்ப்படியாமல் நீங்கள் பரலோகம் செல்லும்போது அங்கே பரலோகத்தின் இனிமையை முழுமையாய் ருசிக்க முடியாமல் அங்கலாய்த்துத் தவித்து நிற்பீர்கள்!*

*"நீங்கள் இந்த பூமியை விட்டுப் போய்விட்டால் இனிமேல் கிறிஸ்துவுக்காக சிலுவையை சுமக்கும் சந்தர்ப்பம் மீண்டும் ஒருபோதும் கிடைக்காது" என சாது சுந்தர்சிங் அடிக்கடிக் கூறுவதுண்டு. நீங்கள் ஆண்டவர்மீது கொண்டிருக்கும் அன்பை நிரூபிக்க விரும்பினால், அதை இந்த பூமியில் இப்பொழுதே நீங்கள் நிரூபித்தாக வேண்டும். இந்த அரிய சந்தர்ப்பம் ஒருவனுக்கு மீண்டும் பரலோகத்தில் கிட்டாது!*

***ஜெபம்*** *: எங்கள் பரம தகப்பனே! இந்த பூமியில் உமது கட்டளைகளை, சிலுவை சுமப்பதை.... 'இதுவே தருணம்' என மகிழ்ச்சியுடன் கீழ்ப்படிந்து உம்மீதுகொண்ட எங்கள் அன்பை வெளிப்படுத்த கிருபைதாரும், ஆமென்.*

## நம் சரீர தேவைகள்மீது அக்கறை கொண்ட தேவன்!

இன்றைய கிறிஸ்தவ உலகில், சரீரத்தைக் குறித்த போதகம் இரண்டு எதிர்முனைகளில் போதிக்கப்படுகிறது. ஒரு கூட்டத்தார் துறவற ஒழுக்கத்தைப் போதித்து, "சரீரத்தின் ஒவ்வொரு சுகத்தையும் வெறுத்து இந்த சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்தாவிட்டால் பரிசுத்தமாய் இருக்க முடியாது" எனக் கூறுகிறார்கள். ஆனால் சரீரம் மாத்திரமே பாவத்திற்குக் காரணமல்ல என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். பாருங்கள், சாத்தானுக்கு ஓர் சரீரமில்லை. ஆகிலும் அவன் முழுக்க முழுக்க பாவத்தினால் நிறைந்திருக்கிறான். அதேசமயம் இயேசுவோ ஓர் சரீரத்தை உடையவராயிருந்தும் ஒருபோதும் பாவம் செய்யவேயில்லை! இப்பாழும் துறவற ஒழுக்கத்தின் போதகம், "திருமண உறவுகூட" பாவம் என்றே போதிக்கின்றது! ஆனால் மனுஷனுக்குள்ளிருக்கும் காம ஆசையை தேவனே சிருஷ்டித்து அதையும் "நல்லது" என்றே கூறினார் (ஆதி.1:31) என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. உணவின் மீதுள்ள விருப்பமும், இளைப்பாறியிருக்கும் விருப்பமும், காம விருப்பமும் மனிதனின் சரீரத்திற்கேற்ற விருப்பங்களாகவே தேவன் படைத்து அவைகள் யாவையும் நலம் என்றே கண்டார். மேற்கூறிய விருப்பங்களில் ஒன்றைக் குறித்தாகிலும் நாம் வெட்கப்படவேண்டிய அவசியமே இல்லை. நாம் மிகுந்த ஜாக்கிரதையாயிருக்க வேண்டியதெல்லாம், ஏதாகிலும் இந்த விருப்பங்களில் ஒன்றை, தேவன் விலக்கி வைத்திருக்கும் வழிகளால் நாம் பூர்த்தி செய்யாமல் இருந்திட வேண்டும், அவ்வளவுதான்!!

மேற்கூறிய துறவற - ஒழுக்கப் போதனைக்கு முற்றிலும் மாறுபட்ட இன்னொரு எதிர்முனைப் போதகம் யாதெனில், "நாம் ஐசுவரியவானாய் மாறுவதற்கு தேவன் விரும்புகிறார்" என சில கிறிஸ்தவக் குழுக்கள் போதிக்கும் போதனையே ஆகும். இதன் விளைவாய், சரீரமும் அதன் சுகமும் விக்கிரகத்தைப் போலவே போற்றி வணங்கப்படுகிறது!

ஆனால் இயேசுவின் போதகமோ குன்றின் ஒரு முனையில் நின்று போதிக்கும் 'துறவற-ஒழுக்கப்' போதகமுமல்ல! உலகப் பொருட்களுக்காகவும், சரீரத்திற்காகவும் அதிக முக்கியத்துவம் கொடுத்து மூழ்கியிருக்கச் செய்யும் குன்றின் மறுமுனைப் போதகமுமல்ல!! மாறாக, அவருடைய போதகம் நம்முடைய சரீரத்தின் அத்தியாவசியத் தேவைகளுக்காக அக்கறை கொண்டு 'அதன்மூலம்' நாம் தேவனை முழு இருதயமாய் ஆராதிப்பதற்கே வகைசெய்கிறது!!

***ஜெபம்*** : *எங்கள் பரம பிதாவே! எங்கள் ஆவிக்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்ய விருப்பம் கொண்டதைப்போலவே, எங்கள் சரீர தேவைகளையும் பூர்த்தி செய்ய விரும்பும் உம் அன்பிற்கு நன்றி, ஆமென்.*

## நம்மை இளைப்பாறச் செய்திடும் தேவன்!

*நம் ஆவிக்குரிய நிலைமை நம் சரீர நிலைமையை ஓரளவு சார்ந்திருக்கிறது எனக் கூறிட முடியும். நாம் எலியாவைக் குறித்து வாசிக்கிறோம். அவன் வானத்திலிருந்து அக்கினியையும், மழையையும் ஜெபித்து இறக்கினான்! இந்நிகழ்ச்சிக்குப் பிறகு அவன் மிகவும் சோர்வுற்று, தேவன் தன் ஜீவனை எடுத்துக்கொள்ளும்படி ஜெபித்தான். 850 கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு முன்பாக மகா தைரியமாய் நின்ற இம்மனுஷன், யேசபேல் என்ற ஒரு ஸ்திரீயின் அச்சுறுத்தலுக்குப் பயந்து ஓடி ஒளிந்ததைப் பாருங்கள்! (1 இராஜா.18,19). இது எப்படி ஆகும்? சுமார் 3 ஆண்டுகளுக்கு மேலாக இந்த எலியா தானாகவே புசித்துப் பிழைத்து வந்தான். இந்த அவனுடைய சரீர பெலனெல்லாம் கர்மேல் மலையின்மேல் சம்பவித்த உச்சக்கட்டமான நிகழ்ச்சியோடு முற்றிலும் தொய்ந்து பெலனற்றுப் போனது.*

*இவ்வாறு சோர்வுற்று சூரைச் செடியின் கீழ் அமர்ந்திருந்த எலியாவிற்கு தேவன் ஒரு பிரசங்கத்தைச் செய்யவே இல்லை! இல்லவே இல்லை!! மாறாக, தேவன் ஓர் தூதனை அனுப்பி எலியாவுக்கு 'சுடச்சுட' அடையும் தண்ணீரும் கொடுத்தார். எலியா புசித்தான்; குடித்தான்; உறங்கினான்! அவன் விழித்தெழும்பியவுடன் மீண்டும் அவனுக்கு, தேவன் சூடான அடையும் தண்ணீரும் கொடுத்தார்!! (1 இராஜா.19:1-8).*

*எலியா பெலனிழந்து தொய்ந்து போனான் என்பதை தேவன் அறிந் திருந்தார். இப்போது அவனுக்குத் தேவையாயிருப்பதெல்லாம் நல்ல போஷாக்கே அல்லாமல்..... போதனையல்ல! இதையும் தேவன் அறிந் திருந்தார். இன்று நமக்கும் வேளாவேளைகளில் நீண்ட பிரசங்கமல்ல!? வயிற்றுக்கு நல்ல போஜனமும் ஓய்வுமே தேவையாயிருக்கிறது.*

*இன்று சில கிறிஸ்தவர்கள் தங்கள் சரீரங்களைக் குறித்து நூதன ஆவிக்குரிய கொள்கை கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மிகத் தீவிரமாய், "நான் தேவனுக்காய்ப் பற்றியெரிய விரும்புகிறேன்" எனக் கூறுவார்கள். இவர்கள் முனைந்து சென்று காலையும், மத்தியானமும், இரவும் தேவனுக்காக 'ஊழியங்கள்' செய்கிறார்கள். இவ்விதம் வாரத்தில் ஏழு நாட்களும் ..... ஒவ்வொரு வாரமும் செய்து கொண்டேயிருக்கிறார்கள். பின்பு இவர்கள் சோர்வுற்றுத் தொய்ந்து வீழ்ந்துவிடுகிறார்கள்! இப்படிப்பட்டவர்களுடைய கிரியைகள் யாவும் மனுஷீகமான வைராக்கிய கிரியைகளே ஆகும். இவர்களின் சோர்வு சரீரப்பிரகாரமாய் ஏற்பட்டதேயல்லாமல், ஆவிக்குரிய எந்த காரணமும் இல்லை! இப்படிப்பட்டவர்களைப் பார்த்தே ஆண்டவர், "வாருங்கள்! ஓரிடத்தில் தனித்து சற்றே இளைப்பாறும்படி போவோம்!" எனக் கூற வேண்டியதாயுள்ளது!! (மாற்கு 6:31).*

**ஜெபம் :** *அன்புள்ள தந்தையே! களைப்படையும் எங்கள் சரீரத்தேவையை உணர்ந்து எங்களுக்கு உதவிசெய்திடும் உமது அன்பை எண்ணி வியக்கிறோம்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**பிறரை நியாயம்தீர்த்திட கூடாது!**

*"நியாயத்தீர்ப்பு வழங்குவது" தேவனுடைய வழக்கமான பணி அல்ல என்றும், அவ்வாறு "நியாயத்தீர்ப்பு" செய்வது அவருடைய "வழக்கத்திற்கு மாறான அபூர்வமான பணி" என்றே வேதம் கூறுகிறது (ஏசா.28:21). ஆனால் இந்த குணாதிசயம் மனிதர்களாகிய நமக்கோ முற்றிலும் தலைகீழாய் இருக்கிறது! ஆம், நமக்கோ பிறரை நியாயந் தீர்ப்பதே வழக்கமான பணியாய் இருக்கிறது!! இங்குதான் சாத்தான் தன்னுடைய விஷத்தை நமக்குள் ஆழமாய் பாய்ச்சியிருக்கிறான். ஏசாயா 61:2-ம் வசனம், ஆண்டவராகிய இயேசு அநுகிரக வருஷத்தைப் பிரசித்தப் படுத்துவதற்கும்... தேவனுடைய நீதியை சரிக்கட்டுவதோ 1-நாள் பிரகடனம் செய்யவும் அபிஷேகிக்கப்பட்டார் என வாசிக் கிறோம். தேவன் தயவாயும், கண்டிப்பாயும் இருக்கிறார் என்பதை நாம் ரோமர் 11:22 மூலம் அறிகிறோம். ஆனால் அவருடைய தயவிற்கும் கண்டிப்பிற்கும் உள்ள விகிதாச்சாரத்தை ஏசாயா 61-ம் அதிகாரமே நமக்கு வெளிப்படுத்துகிறது. அந்த விகிதாச்சாரம் 50:50 அல்ல, 365:1 என்பதேயாகும்!! பார்த்தீர்களா, இந்த தேவனுடைய மென்மையான குணத்தை சுதந்தரிப்பதற்கே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். நம்மில் எத்தனைபேர் "தாங்கள் அறியாமலே" பிறருக்கு ஊறுவிளைவித்திருக் கவும், பிறரிடம் எவ்வித கரிசனையும் இல்லாமல் செயல்பட்டிருக்கவும், கடிதம் மூலம் பிறருக்கு சஞ்சலம் விளைவித்திருக்கவும்கூடும் என்பதை உணர்ந்திருக்கிறோம்? நம்மூலம் துன்பம் அடைந்தவர்களோ மிகவும் பொறுமையாய், ஒருவார்த்தைகூட பதில் பேசாமல், அவைகளைத் தாங்கிக் கொண்டதையும் நாம் உணராமலே இருக்கிறோம்?*

*ஆம், இயேசுவின் மகிமையை நமக்கு தேவன் மீண்டும் பசுமையாய் வெளிப்படுத்திக் காண்பிக்க நாம் தேவனிடம் கேட்கக் கடவோம்! அந்த பிரகாசமான வெளிச்சத்தில் நம் மாம்சத்திற்குள் ஆழமாய் காணும் சுயநலத்தையும், அடங்காத்தன்மையையும், சுய சித்தத்தையும், பெருமையையும், பிறரை நியாயந்தீர்க்கும் கடின இதயத்தையும் நாம் கண்டிட முடியும்! அவ்வாறு நாம் கண்டு கொண்டால் மாத்திரமே அவருக்கு முன்பாக, முகம் குப்புற விழுந்து மனந்திரும்பவும், துயரமடையவும் முடியும்! இவ்விதம் உங்கள் வாழ்வில் நடந்துவிட்டால், பிறரைக் குற்றப்படுத்தி நியாயந்தீர்ப்பதற்கு நாம் முழுவதுமாய் முற்றுப்புள்ளி வைத்துவிட முடியும்!!*

*நாம் "இயேசுவின் பரிசுத்ததரத்தை" அடையும்வரை நம்மை நாமே சுத்திகரித்துக்கொள்வதில் ஓயாதிருக்கக்கடவோம்! (1யோவான் 3:3). உண்மையில் இதுதான் நம்முடைய இலக்காய் இருந்தால், ஆண்டவர் திரும்ப வரும்வேளையில் நாம் ஒருக்காலும் வெட்க மடைந்து பின்னடையவே மாட்டோம்!!*

**ஜெபம்** : *அன்புள்ள பரம தகப்பனே! பிறரை நியாயம்தீர்க்கும் கொடிய கடினஉள்ளத்தை மாற்றி, பிறரிடம் மென்மையாய் வாழ்ந்திட கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## பிறர் நம்மிடம் "ஒளியை" காணவேண்டும்!

ஒரு சமயம், ஆண்டவர் தன்னைப் பற்றி கூறும் போது, "நான் உலகத்தில் இருக்கையில் உலகத்திற்கு ஒளியாக இருக்கிறேன்" எனக் கூறினார் (யோவான் 9:5). ஆனால் இயேசு இவ்வுலகத்தை விட்டு சென்ற பின்போ "உலகத்திற்கு வெளிச்சமாக" நம்மையே நியமனம் செய்தார்! (மத்தேயு 5:14). இதுவே எந்த உத்தம கிறிஸ்தவனுக்கும் உரிய மிகப் பெரிய பொறுப்பாகும்!!

இயேசு வெளிப்படுத்தின ஒளியானது சில உபதேசங்களோ அல்லது போதனைகளோ அல்ல! அது, புதிய உடன்படிக்கை சத்தியம் கூட அல்ல!! தன்னுடைய 'ஜீவியத்தையே' ஒளியாகப் பிரகாசித்தார். இயேசுவினுடைய ஜீவியத்திலிருந்துதான் தெய்வ சுபாவங்கள் நமக்கு ஒளியாக வீசியது!! "நாங்கள் வெளிச்சம் பெற்றிருக்கிறோம்" எனக் கூறி, பரிசுத்தாவியின் அபிஷேகத்தையும், பாவத்தின் மேல் பெற்றிடும் ஜெயத்தையும், இன்னும் இது போன்ற சத்தியங்களையே நாம் பெற்ற வெளிச்சமாக கூறிக் கொள்கிறோம். ஆனால் அது அல்ல..... "இயேசுவின் ஜீவியத்தையே" நாம் வெளிச்சமாக பிரகாசித்திட வேண்டும்!

புதிய ஏற்பாட்டில் இரண்டு முறை "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை" என எழுதப்பட்டிருக்கிறது. ஆம், முதன் முதலாக நமக்கு தேவனைப்பற்றி இயேசுவே வெளிப்படுத்தினார் (யோவான் 1:18). இயேசு தன் கரங்களை ஒரு குஷ்டரோகியின் தோளோடு வைத்து அணைத்துக்கொண்டபோது "தேவன் எப்படிப் பட்டவர்" என்று வெளிப்படுத்தினார்! அவர் காசுக்காரர்களை ஆலயத்திலிருந்து துரத்தியபோதும் "தேவன் எப்படிப்பட்டவர்" என்பதை வெளிபடுத்தினார்!........ இவ்வாறாக, "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்றே இயேசு தன் சீஷர்களிடம் திட்டமாக் கூறினார். அந்த இயேசுவோ இப்பொழுது பரலோகத்திற்கு சென்றுவிட்டார்!

பிதாவை, இயேசுவிடத்தில் சீஷர்கள் கண்டதைப்போலவே "நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பாய் இருந்தால்" தேவன் நமக்குள் நிலைத்திருப்பதையும், நம் சபையில் தேவன் இருப்பதையும் இன்றும் ஜனங்கள் காணமுடியும்! (1 யோவான்.4:12).சபையில் நம்மை கவனித்துப் பார்ப்பவர்கள் "கிறிஸ்து எப்படிப்பட்டவராக இருப்பார்!" என்பதை நம் மூலமாய் அறியக்கூடியதாக இருக்க வேண்டும்! இவ்வாறு நாம் ஜீவியத்தின் மூலமாய் "இயேசுவின் ஜீவனை" நம் வெளிச்சமாக பிரதிபலிக்கத் தவறியிருந்தால், நம்முடைய பிரதான அழைப்பிலிருந்தே தவறிவிட்டோம்! 'ஜீவிக்கும்' பொறுப்பையே நம்மிடம் தேவன் எதிர்பார்க்கிறார்!

**ஜெபம்** : *பரம பிதாவே! இயேசுவிடம் இருந்த "ஒளியான" ஜீவியத்தை ஜனங்கள் கண்டதுபோலவே, எங்கள் ஜீவிய ஒளியையும் பிறர் காணும்படி செய்து உம்மை மகிமைப்படுத்த உதவும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**நாம் "புறக்கணிக்கப்பட்டாலும்" பிறரை அன்புகூர வேண்டும்!**

*நாம் பலவருடங்களாய் தேவனுக்கு உண்மை உள்ளவர்களாய் ஜீவித்ததினிமித்தம் தேவன் நம்மை சோதிப்பதை அல்லது பரீட்சிப்பதை நிறுத்தி விடுவதே இல்லை! ஆம், இவ்வாறு முடிவுபரியந்தம் தேவனுடைய அன்பில் நிலைத்திருப்பவர்கள் மாத்திரமே இரட்சிக்கப்படுவார்கள்!!*

*நம் சொந்த சபை விசுவாசிகள் நம்மை புறக்கணிப்பதின் மூலமாயும் தேவன் நம்மை சோதித்திட முடியும்! இயேசுவுக்கும் இவ்வாறு நடந்ததாக வேதம் குறிப்பிட்டு, "அவர் தமக்கு சொந்தமானதிலே வந்தார், அவருக்கு சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" (யோவான் 1:11) எனக் கூறுகிறது. இயேசு இந்த பூமியில் கற்றுக் கொண்ட அதே பாடங்களை நாமும் கற்றுக் கொள்ள விரும்புகிறவர்களாக இருந்தால், அவர் அனுபவித்தது போலவே நாமும் "புறக்கணிக்கப்படுதலை" அனுபவிக்கும்படி நம்மையும் அவ்வாறு நடத்துவார். அதுபோன்ற அனுபவத்தை சந்திக்கும்போது, இயேசு செய்ததைப்போலவே நம்முடைய பிரதிபலிப்பும் முற்றிலுமாய் அன்பின் செய்கைகளாகவே இருந்திட வேண்டும்!*

*ஒரு சபையில் இருந்த வாலிப சகோதரன், தேவனுடைய வார்த்தையில் அதிக வரம்பெற்றவராய் இருந்தார்! அதனிமித்தமாய் அந்த சபையில் உள்ள மூத்த சகோதரர்களில் ஒருவர், தன்னைவிட 20-வயது குறைந்த வாலிபனிடமிருந்த 'வார்த்தை வளத்தைக்கண்டு' அந்த வாலிபனின் ஊழியத்தில் பொறாமை கொண்டார்! அதன் விளைவாய், சபையில் அந்த வாலிபன் பிரசங்கிப்பதை தடைசெய்து, கூட்டங்களில் அமைதியாக உட்காரும்படி செய்துவிட்டார். இவ்வாறு சம்பவிப்பது தான் "புறக்கணிக்கப்படும்" சோதனையாகும். அந்த வாலிபனோ, எந்த முரட்டாட்டமும் செய்யாமல் மூப்பர்களின் அதிகாரத்திற்கு கீழ்ப்படிந்து அமர்ந்து விட்டார். அதுமாத்திரமல்லாமல், அந்த மூப்பரோடு நல்ல ஐக்கியத்தையும் பாதுகாத்துக் கொண்டார்! அந்த வாலிபனுக்கு இத்தோடு சோதனை நின்று விடவில்லை! முப்பது வருடங்களுக்குப் பின்பு வயதான அந்த நிலையில், தேவன் அவரை "இந்தப் பகுதியில்" மீண்டுமாய் அவரை சோதித்தார்! ஆம், ஒரு சபையில் அவர் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. அந்த சூழ்நிலையை மௌனமாய் ஏற்றுக்கொண்டு, எந்த முரட்டாட்ட திற்கும் இடம் கொடாமல் அந்த சபையில் தன்னைவிட வயது குறைந்த மூப்பர்களுக்கு அடங்கியிருந்தார்!!*

*இவ்வாறு, நம் ஜீவியத்தின் முடிவுபரியந்தமும் பல்வேறு வழிகளில் நம் யாவரையும் தேவன் 'தொடர்ச்சியாக' சோதித்தறிகிறார்! நாம் கவனம் கொண்டிருப்போமாக!!*

***ஜெபம் :*** *எங்கள் பரம தந்தையே! பிறர் எங்களைத் தள்ளி, ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் எங்கள் செய்கைகள் எப்போதும் அன்பின் செய்கைகளாகவே முடிவுபரியந்தம் இருந்திட கிருபைதாரும், ஆமென்.*

**ஆவியானவரின் சத்தம் கேட்டிட கவனம் வேண்டும்!**

நம் ஜீவியத்தில் ஏற்படும் சில சூழ்நிலைகளில் நாம் என்ன செய்ய வேண்டும்? என்ன தீர்மானம் எடுக்க வேண்டும்? என திட்டமாய் அறிந்திட முடியாத நிலையில் நாம் பலமுறை இருந்திருக்கிறோம். எத்தனையோ விஷயங்களைக் குறித்து வேத வாக்கியங்கள் மௌனமாகவே இருக்கிறது. அதுபோன்ற சமயங்களில், ஆலோசனை கேட்பதற்கென ஒரு பக்கியுள்ள சதோதரனை தேடிப்போவது நமக்கு எப்போதும் சாத்தியமாயிருப்பதில்லை!

தேவ பக்தி நிறைந்த சகோதரர்களின் செய்கையை வைத்தோ அல்லது அவர் சொன்ன வாக்கியங்களை வைத்தோ ஒப்பிட்டு, தாங்கள் செய்த செயலை நியாயப்படுத்துகிறவர்கள், தங்களின் கெட்ட மனசாட்சியைத்தான் நிரூபணம் செய்கிறார்கள்! நம் யாவரையும் 'தனித்தனியாய்' நடத்திச்செல்வதற்கு "பரிசுத்தாவியானவரையே" தேவன் நமக்கு வழங்கியிருக்கிறார்!!

உதாரணமாய், சபையின் ஒரு கூட்டத்தில் "உலகத்தில் அன்பு கூராதிருக்கும்படியான" ஒரு புத்திமதியை ஒரு சகோதரி கேட்டிருக்கக் கூடும். இது ஒரு பொதுவான புத்திமதியே அல்லாமல் 'எதையும் குறிப்பாக' அது கூறவில்லை! புதிய ஏற்பாடு எப்போதுமே இதுபோன்ற பொதுவான புத்திமதிகளைதான் நமக்கு கூறுகிறது. இச்சமயத்தில் ஒரு திருமண வைபவத்திற்கு செல்லவிருந்த அந்த சகோதரி, அந்த வைபவத்தில் விலை உயர்ந்த பளபளப்பான ஆடையை உடுத்த வேண்டுமா அல்லது வேண்டாமா? என்பதைத் தீர்மானிக்கும் இக்கட்டான நிலையில் இருந்தார். அந்த கவர்ச்சியான சேலையை உடுத்தலாமென அவளின் மனது எத்தனையோகாரணங்களை அவளுக்கு கூறியிருக்கக் கூடும்! இந்த தருணத்தில்தான் அவளின் மனநோக்கத்தை சோதித்து அறிந்திடவல்ல பரிசுத்தாவியானவர் அவளிடம், "நீ இந்த ஆடம்பர உடுப்பை உடுத்த விரும்பிய ஒரே காரணம், உன் உலக நண்பர்களிடமிருந்தும், உறவினர்களிடமிருந்தும் நல்ல மதிப்பைப் பெறலாம் என்பதேயாகும்!" எனக் கூறினார். இவ்வாறாக, ஆவியானவர் அவளைக் குறித்த உண்மையைச் சொல்லுவதற்கு மிகுந்த பொறுப்புள்ளவராக இருக்கிறார். இருப்பினும் தனக்கு கீழ்படியும்படி அவளை ஒருநாளும் கட்டாயப்படுத்தவே மாட்டார்! எல்லாவற்றிற்கும் கடைசி முடிவானது அவளையே சார்ந்துள்ளது!!

நமக்குள் இருக்கும் அந்த அபிஷேகம், சபையிலுள்ள எந்த ஒரு சகோதரனும் அல்லது சகோதரியும் போதிக்காத எண்ணற்ற காரியங் களை நமக்குப் போதிக்கும்! இருப்பினும், நாமோ ஆவியானவருக்கு செவிகொடுத்திட மிகவும் கவனமாய் இருந்திட வேண்டும்.

**ஜெபம் :** பரலோக பிதாவே! அன்றாட நடைமுறை ஜீவியத்தில் எது பாவம்? எது உலகம்? என தெளிவாய் கூறும் உமது சத்தத்தை கேட்க அதிக கவனம் எங்களுக்குத் தாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.

## வாழ்வில் "நன்மை உண்டாயிருக்க" அடங்கியிருத்தல் வேண்டும்!

*இப்பூமியில் தனக்கு அருளப்பட்ட பெற்றோர்களாகிய யோசேப்பும் மரியாளும் எவ்வளவுதான் குறையுள்ளவர்களாக இருந்தாலும், இயேசு நாசரேத்தில் வசித்த காலங்கள் வரை அவர்களுக்குத் தாழ்மையுடன் அடங்கியிருந்தார். அது ஏனென்றால், அவ்வாறு அடங்கியிருக்கும்படி அவருடைய பரமபிதா விரும்பினார், அவ்வளவுதான்! ஆகவே, யேசேப்பும் மரியாளும் குறையுள்ளவர் களாய் இருந்தார்களா? என்பது கேள்வியல்ல! மாறாக, அடங்கியிருக்கும்படி பிதாவானவர் யாரை இயேசுவுக்கு நியமனம் செய்து வைத்திருந்தார்? என்பதே முக்கியமான கேள்வியாய் இருக்கிறது. யோசேப்பும் மரியாளும் தேவனுக்கு பயந்து வாழ்ந்தவர்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆகிலும், அவர்கள் பழைய உடன்படிக்கையின் கீழ் வாழ்ந்தவர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதாவது, அவர்கள் இன்னமும் கிருபைக்கு கீழாக வரவில்லை! ஆகவே அவர்களுக்குள் பாவத்தின் மீது வெற்றிகொண்ட வாழ்க்கை கிட்டியுமிருக்காது என்பதை நாம் நிச்சயிக்க முடிகிறது. இன்றும், புதிய உடன்படிக்கையில் இன்னமும் பிரவேசிக்காத தம்பதியர்கள் தங்களுக்குள் சண்டையும் கசப்பும் கொண்டிருப்பதுபோலவே, இயேசுவின் பெற்றோரும் இருந் திருக்கக்கூடும்!*

*அப்படி இருந்தும், பூரணம்நிறைந்த தேவமைந்தனாகிய அவர், பூரணமற்ற அந்த இருவருக்கும் முற்றிலுமாய் அடங்கியிருந்தார்! இவ்வாறு பூரணமற்ற அதிகாரங்களுக்கு அடங்கியிருப்பதே முதல்-மாதிரி அடிச்சுவடுகளாய் இருக்கிறது!!*

*இயேசு சென்ற அதே பாதையில் நாமும் சென்றிட மனதுள்ளவர்களாய் இருந்தால், தேவன் நமக்கு மேலாய் நியமனம் செய்த எந்த அதிகாரத்திற்கும் நாமும் அடங்கி நடப்பதற்கு ஆர்வம் கொண்டவர்களாய் இருக்கவேண்டும்..... அந்த அதிகாரங்கள் எவ்வளவு குறையுள்ளவர்களாய் இருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல! இதுவே பிள்ளைகளாய் இருப்பவர்களுக்குத் தரப்பட்ட முதல் கற்பனையா கவும் இருக்கிறது! இவ்வாறு அதிகாரங்களுக்கு அடங்கியிருக்கும் பிள்ளைகளுக்கு "நன்மை உண்டாயிருக்கும்" என்றே தேவன் வாக்குரைத்திருக்கிறார்! இதிலிருந்து, அதிகாரங்களுக்கு அடங்கியிருக் கும் விஷயத்தில் தேவன் அதிகமான முக்கியத்துவத்தை வைத்திருக் கிறார் என்பதை நாம் விளங்கிக்கொள்ள முடிகிறது. நம்முடைய பிள்ளைகளின் வாழ்வில் "நன்மை நடக்கும்படி விரும்புகிறவர்களாய்" இருந்தால், நம் பிள்ளைகளுக்கு கீழ்படியவும் அடங்கியுருக்கவும் நாம் கற்றுதர வேண்டும்!*

***ஜெபம்*** *: எங்கள் பரலோக தகப்பனே! இயேசுவின் மாதிரிப்படியே, பிள்ளைகளாகிய நாங்கள் ஆளுகைக்கு அடங்கி நடந்து, எங்கள் ஜீவியத்தில் "நன்மை" பெற்றுவாழ உதவி செய்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## நம் மனநோக்கம் தூய்மையாய் இருத்தல்வேண்டும்!

*நம்முடைய உள்ளான மனிதனுக்குள் காணப்படும் சகல பாவங்களையும் முற்றிலுமாய் கழுவிக்கொள்ள நாம் பிரயாசப்பட வேண்டும். குறிப்பாக, யாரோசிலர்மீதுகொண்ட 'தவறான மனநோக்கங்களை' மிககவனமாய் நம்மிடமிருந்து கழுவிக்கொள்ள வகை தேடுகிறவர்களாய் இருக்கவேண்டும். அப்படியில்லையென்றால், அந்த உள்ளான மனநோக்கங்கள் "மறைந்திருக்கும் புற்றுநோயைப்போல்" நம்மிடம் தங்கி ஒருநாள் நம்மை அழித்துவிடும்!*

*பழைய ஏற்பாட்டில் சவுல் ராஜாவின் உறவினனான 'சீமேயி' என்பவனைக் குறித்து நாம் வாசிக்கிறோம். சவுல் மரித்து, இஸ்ரவேலின் ராஜாவாய் தாவீது வந்தவுடன், இந்த மனுஷன் தன் இருதயத்தின் ஆழத்தில் தாவீதைக்குறித்து ஓர் கசப்பை வைத்திருந்தான் (2சாமு.16:5-14). இவ்வாறு நீண்டநாட்களாய் சீமேயின் இருதயத்தில் மறைந்திருந்தவைகள் ஒருநாள் வெளியேவந்துவிட்டது! தன் சொந்தமகன் அப்சலோமின் முரட்டாட்டத்தால், தன் ஜீவன் தப்ப தாவீது ஓடிக்கொண்டிருந்த சமயத்தில், இந்த சீமேயி தாவீதிடத்தில் வந்து, தேவனால் நியாயந்தீர்க்கப்பட்ட "இரத்தப்பிரியன்" என இழித்து அவன்மீது கற்களை எறிய தொடங்கினான்! ஆம், உங்களுக்குப் பிடிக்காதவர்கள் ஒரு துன்பத்தில் அகப்படும்போது, உங்கள் இருதயத்தில் மறைந்திருக்கும் சகல தீய எண்ணங்களும் வெளியரங்கமாகி கொட்டப்பட்டுவிடும்!!*

*பிற்காலங்களில், அப்சலோம் கொல்லப்பட்டு தாவீது மீண்டும் ராஜாவாய் திரும்பிவந்த சமயம், சீமேயி பயந்து தாவீதிடம் மன்னிப்புகேட்கும்படி ஓடிவந்தான். தாவீது அவனை மன்னித்து, "நான் உன்னைக் கொல்லமாட்டேன்" எனவும் அவனுக்கு வாக்கு தந்தான்!*

*இப்போது சக்கரம் மாற்றி சுழன்று, சீமேயின் மீதுகொண்ட உள்ளான கசப்பை தாவீது தன்னிடமிருந்து கழுவிக்கொள்ள தவறிவிட்டான்! அதனிமித்தமாய், அவன் மரிப்பதற்கு முன்பாக தன் மகன் சாலமோனைப் பார்த்து, "சீமேயி உன்னிடத்தில் இருக்கிறான். என்னைத் தூஷித்த அவனை நான் கொன்றுபோடுவதில்லை என்று கர்த்தர்மேல் ஆணையிட்டுக் கொடுத்தேன். ஆகிலும் நான் தந்த வாக்கு உனக்கு பொருத்தமாகாது. நீ ஞானமாய் நடந்து 'ஏதாகிலும் தந்திரமான வழியில்' சீமேயியை குற்றமுள்ளவனாய் கண்டு அவனைக் கொன்றுபோடு!" எனக் கூறினான் (1 இராஜா. 2:8-10). சாலமோனும் அவ்வாறாகவே சீமேயியை பழிவாங்கி, பின்பு மரித்துபோனான்! இது எத்தனை துயரமான மரணம்..... ஓர் தேவனுடைய மனுஷனாய் பலவருடங்கள் வாழ்ந்துவிட்டு முடிவில் பழிவாங்கி அடையும் இழிவான மரணம்! தீயமனநோக்கம் கூடவேகூடாது!*

***ஜெபம் :*** *எங்கள் பரம தந்தையே! பிறரைக்குறித்த "தவறான" மனநோக்கங்களை நாங்கள் நித்தமும் கழுவி வாழாவிட்டால், எங்கள் பக்தியின் ஜீவியம் வீணாகிவிடும் என காட்டியமைக்கு உமக்கு நன்றி! ஆமென்.*

**ஒரேவீட்டில் ஒருவர் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஒருவர் கைவிடப்பட முடியும்!**

*ஒரே வீட்டில், ஒரே வாழ்க்கை சூழ்நிலைகளில், மெய் தேவனைக் குறித்த ஒரே போதனையில், வளர்ந்து வந்த இரு பிள்ளைகள்! அப்படியிருந்தும், இவர்கள் இருவரின் வாழ்கையின் முடிவும் ஒருவருக்கொருவர் முற்றிலும் வித்தியாசமான முடிவை அடைந்தது!! இயேசுவும் தன் மணவாட்டிக்காய்த் திரும்ப வரும்போது, ஒரே படுக்கையில் இருவர் இருந்தாலும் ஒருவர் எடுத்துக் கொள்ளப்பட்டு ஒருவர் கைவிடப்பட முடியும் என்றே எச்சரித்தார். ஓர் சபையில் இருவர் ஐக்கியப்பட்டிருந்தாலும், ஒருவர் ஏற்றுக் கொள்ளப்பட்டும் ஒருவர் தள்ளப்படவும் முடியும்!*

*நீங்கள் மிகவும் நெருங்கிப் பழகும் ஒருவருக்கு சகல காரியமும் நன்றாய் நடந்தேறுகிறது என்பதைக் காணும்போது, உங்களின் மனோபாவம் எப்படியிருக்கிறது? 'அந்த' சகோதரன் எப்போதும் பாவத்தின்மேல் வெற்றியைக் குறித்தே பிரசங்கிப்பதையும் காண் கிறீர்கள்! மெய்யாகவே அச்சகோதரனின் வாழ்வில் பதட்டமோ கோபமோ, பொறுமையின்மையோ ஓர் சிறு தடயம்கூட இல்லா திருப்பதையும் காண்கிறீர்கள்! அதற்குப் பதிலாக, அவர் வாழ்வில் தொடர்ச்சியான வெற்றியும், சந்தோஷமும் பெருகிக்கொண்டே போவதையும் காண்கிறீர்கள்!! ஆனால் அந்தோ, இதற்கு நேர் எதிரிடையாக உங்கள் வாழ்க்கையோ துயர்நிறைந்ததாயும், பதட்டத்தின் புகையால் சூழப்பட்டதாயும், இவ்வுலகில் வெற்றி வாழ்க்கை வாழமுடியும் என்பதை நீங்கள் விசுவாசியாததினிமித்தம் தோல்வியின் படுகுழிக்குள் தடுமாறிக் கொண்டிருப்பதையும் காண்கிறீர்கள்!? 'இப்போது' உங்களுக்குள் பொறாமையின் வேர் மெதுவாய் தழுவிப்படர்கிறதல்லவா? அச் சகோதரன் வீழ்ச்சி யடைந்தால் மகிழும் பொருட்டு, எங்காவது ஓர் இடத்திலாவது அவர் விழமாட்டாரா என்ற ஆர்வம் உங்களைப் பற்றியிருக்கிறதல்லவா? எப்படியாவது அச்சகோதரனை சிலருடைய கண்களுக்கு முன்னால் கீழே இழுத்து தள்ள வேண்டும் என்ற ஆசையால் நிறைந்திருக் கிறீர்களல்லவா? நன்றாய் அறிந்து கொள்ளுங்கள்..... இதுவே உங்களை அழிக்க வகைதேடும் துன்மார்க்கத்தின் ஆவி!!*

*இந்த அருவருப்பான ஆவியை உடையவராய் இருந்து கொண்டே, உங்களை நீங்கள் "நான் கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாயிருக்கிறேன்" எனவும் சொல்லிக்கொள்கிறீர்கள்! உங்களின் இந்த மனோபாவம் திட்டவட்டமாய் கிறிஸ்துவின் ஆவி அல்லவே அல்ல! நீங்கள் சேற்றில் சிக்கி அமிழ்வதை விட, எவ்வளவு சீக்கிரம் இந்த "அருவருப்பின் நாற்றத்தை" உங்களால் உணர முடிகிறதோ அதுவே உங்களுக்கு நல்லது!*

***ஜெபம்*** : *எங்கள் பரலோக பிதாவே! எங்களோடு சேர்ந்து வாழும் சகோதர சகோதரிகளிடம் பொறாமை கொண்டு, கைவிடப்படாதிருக்க கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**தேவனுடைய பிரமாணத்தில் பாரபட்சம் இல்லை!**

*மனிதர்கள் மத்தியில் தேவன் ஓரவஞ்சகம் காட்டவே மாட்டார். அவர் பிரமாணமோ என்றென்றும் நிலைத்து நிற்கிறது! தன்னைத் தாழ்த்துகிறவன் "எவனோ" அவன் உயர்த்தப்படுவான்! தன்னை உயர்த்துகிறவன் "எவனோ" அவன் தாழ்த்தப்படுவான்! தன் ஒரே புதல்வனான இயேசுவிடம்கூட தேவன் எந்த "ஸ்பெஷலும்" காட்டவில்லை. இயேசு தம்மைத்தாமே* **தாழ்த்தினபடியால்** *மாத்திரமே, தேவன் அவரைத் தன் வலது பாரிசம் மட்டும் மேலாக உயர்த்தினார் என பிலிப்பியர் 2:8,9-ல் நாம் தெளிவாய் வாசிக்கிறோம். அவர் தேவ குமாரன் என்பதற்காக அல்லவே அல்ல... ஓர் மனுஷனாக அவர் தன்னைத் தாழ்த்தியபடியால் அப்படியாயிற்று!! நாம் மனுவர்க்கமாய் எவ்வாறு தேவனுடைய இயற்கை பிரமாணங்களுக்கு கீழ்ப்பட்டிருக் கிறோமோ, அதேபோல இயேசுவும் ஓர் மனிதனாக அதே பிரமாணங் களுக்குக் கீழ்ப்பட்டு வாழ்ந்தார். எந்த மனிதனையும் தேவன் நடத்துவது போலவே தன் சொந்த குமாரனையும் நடத்தினார். இயேசுவுக்கு தேவன் என்ன செய்தாரோ அதையே அவர் நமக்கும் செய்வார்! இயேசு வாழ்ந்தது போலவே நம்மை நாமே தாழ்த்தினால், நாமும் நிச்சயமாய் அவரைப்போலவே உயர்த்தப்படுவோம்!! அதில் சந்தேகமேயில்லை.*

*நாம் நன்மை செய்தால் நம் முகமும் உயர்த்தப்பட்டு, மகிழ்ச்சியினால் ஒளிர்விட்டுப் பிரகாசிக்கும்! தேவன், காயீனிடம் "நீ நன்மை செய்யாதிருந்தால், பாவம் உன் வாசற்படியில் முண்டிக்கொண்டு படுத்திருக்கும்" என அறிவித்தார். அவனை பீறியெறியக் காத்திருக்கும் சிங்கத்தைப் போல, பாவம் அவன் அருகில் மிக சமீபமாயிருந்தது. காயீனோ இதை அறியவில்லை, ஆனால் தேவன் உண்மையுள்ளவரா யிருந்து அவனை எச்சரித்தார்! காயீனோ இப்போது 'பொறாமை யினாலும்' 'கோபத்தி னாலும்' நிறைந்து விட்டான். ஆனால், இதைவிட மோசமான "கொலை வெறியின் ஆவி" காயீனைப் பற்றிக்கொள்ளும் படி வாசற்படியில் தயாராய் காத்திருந்தது. இருப்பினும், காயீனோ பாவத்தை ஜெயித்து ஆள வேண்டும் என்றே தேவன் வாஞ்சித்துக் கேட்டுக் கொண்டார். இன்றும், மனிதன் பாவத்தை ஜெயித்து ஆளவேண்டும் என்பதே தேவனின் நிரந்தரமான ஆசை! ஆனால், தன்னை நெருங்கிநின்ற பாவத்தை ஜெயித்து ஆண்டிட காயீன் தவறிவிட்டான்! நாமோ, பாவத்தை தேவகிருபையால் ஆண்டுகொள்ள கவனம் கொண்டிருக்கக் கடவோம்!*

***ஜெபம்** : எங்கள் பரம தகப்பனே! உமது பிரமாணங்களில் யாதொரு பாரபட்சமும் இல்லையே..... ஆகவே, நாங்கள் தெய்வ பயத்தோடு உமது பிரமாணத்தைப் பற்றிவாழ கிருபைதாரும், ஆமென்.*

**வரம் அல்ல, ஜீவிய கனிகள் கொண்டவர்களே ஆவிக்குரியவர்கள்!**

*பவுல் கொரிந்தியர்களைக் குறிப்பிட்டு "நான் உங்களை ஆவிக்குரியவர்கள் என்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்திற்குரியவர்கள் என்று எண்ணி பேசவேண்டியதாயிற்று" (1கொரிந்தியர் 3:1) என மிகுந்த வருத்தத்துடன் கூறினார். இத்தனை இழிவான ஆவிக்குரிய நிலையில் இருந்தபோதும், அவர்களோ வேத அறிவிலும், உபதேச பிரசங்கங்களிலும், ஆவிக்குரிய வரங்களிலும் சம்பூரணமுள்ளவர்களாக இருந்தார்களென 1 கொரிந்தியர் 1:5,7 வசனங்களில் வாசிக்கிறோம். இந்த மூன்று மேன்மையான வரங்கள் அவர்களிடம் இருந்தபோதிலும், அவர்களோ ஆவிக்குரியவர்களாக இல்லை!!*

*இவ்வாறு வரம்பெற்ற வல்லமையான பிரசங்கியாயிருந்து, வேதாகம அறிவிலும் பண்டிதம் பெற்று, ஆவிக்குரிய அற்புத வரங்களை கிரியை செய்யும் ஒருவர்கூட "ஆவிக்குரிய மனிதராய்" இல்லாமல் இருக்கக் கூடும் எனப் பகுத்தறியும் திறன் கொண்டவர்கள்! இன்றைய விசுவாசிகளில் வெகு சொற்பமானவர்களே இருக்கிறார்கள்! பவுல் குறிப்பிடுவதுபோல், இத்தனை அற்புத ஊழியங்களைக் கொண்டவர்களும் "முழுக்க முழுக்க மாம்சீகம் கொண்டவர்களாய்" இருந்திட முடியும்!*

*ஒரு மனிதனை "மெய்யான ஆவிக்குரியவனாய்" மாற்றுபவைகள் எவை என்பதை கீழ்காணும் மூன்று குணாதிசயங்கள் நமக்கு தெளிவுபடுத்துகின்றன. அவன் மேல் நோக்கி காண்பவன், உள்ளந்திரியங்களைக் காண்பவன், வெளியரங்கமானவைகளையும் காண்பவன்! ஆம், ஒரு ஆவிக்குரிய மனிதன் இந்த "மூன்றுதிசை களையும்" இடைவிடாது தொடர்ந்து காண்பவனாகவே இருக்க வேண்டும்!*

*1) மேல் திசை: தேவனையும் கிறிஸ்துவையும் பற்றிய தியானமும், ஆராதனையும் நிறைந்தவனாய் இருப்பான்.*

*2) உள் திசை: கிறிஸ்துவைப்போல் அல்லாத தன்அந்தரங்க ஜீவியத்திற்காய் இடைவிடாது மனந்திரும்புவான்!*

*3) வெளி திசை: சுற்றியுள்ள மற்ற ஜனங்களுக்கு எவ்வாறு உதவி செய்யலாம்? அவர்களை எவ்வாறு ஆசீர்வதிக்கலாம்? என்றே தொடர்ச்சியாக நாடுவான்! இதுபோன்ற ஜீவியம் கொண்டவன் நிச்சயமாய் கனிநிறைந்த வாழ்வை கண்டடைவான் என்பதில் சந்தேகமேயில்லை!!*

***ஜெபம்*** : *எங்கள் பரம பிதாவே! கனியுள்ள ஜீவியம் இல்லாமல், வரங்களில் நாட்டம் கொண்டு வெளித்தோற்ற வாழ்வில் திருப்திகண்ட எங்களை மன்னித்து, எங்களையும் ஆவிக்குரியவர்களாய் மாற்றும், ஆமென்.*

**தேவனை ஆராதிக்கிறவர்களிடம் உலகத்தின் குறைசொல் இல்லை!**

*“தேவனை ஆராதிக்கிறவர்களாகவே” பிரதானமாய் ஆண்டவர் நம்மை அழைத்திருக்கிறார். தேவன் மீது பசியும் தாகமும் கொண்ட மனிதர்களாய் இருந்திட வேண்டும்! ஆகவே, ஒரு ஆவிக்குரிய மனிதன் தேவனை இடைவிடாது ஆராதிப்பவனா யிருப்பான்!! அவனுக்குள்ள ஒரே ஒரு விருப்பம் “தேவன் மாத்திரமே” ஆகும்!! இந்தப் பூமியிலோ அல்லது பரலோகத்திலோ ‘தேவனை காட்டிலும்’ யாதொன்றையும் அல்லது யாதொருவரையும் அவன் விரும்பவே மாட்டான் (சங்கீதம் 73:25). ‘தேவனைக் காட்டிலும்’ பணம் அவனுக்கு பெரிதானதாகத் தோன்றுவதே இல்லை! ஒரு மான் நீரோடையை வாஞ்சித்து தவிப்பதைப் போலவே, ஒரு ஆவிக்குரிய மனிதன் தேவன் மீது வாஞ்சித்து தவிப்பான். கடும்வறட்சியினால் தாகம்கொண்ட ஒரு மனிதன் தண்ணீருக்காக தவித்துக் கதறுவதைப் போலவே இவன் தேவன் மீது தாக வாஞ்சை கொண்டிருப்பான்! தன்னுடைய சுகத்தையும் சொகுசையும்விட, ஒரு ஆவிக்குரிய மனிதன் தேவனுடைய ஐக்கியத்தையே மேலாக எண்ணி வாஞ்சிப்பான்! தன்னோடு தேவன் ஒவ்வொரு நாளும் பேசுவதைக் கேட்பதற்கு மிகுதியான வாஞ்சை கொண்டிருப்பான்!*

*இதற்கு மாறாக, பணத்தையும் தங்களது சொகுசையும் ஆராதனை செய்பவர்கள் தங்கள் வாழ்க்கையில் ஏதாகிலும் ஒன்றைக் குறித்து “எப்போதும்” குறை சொல்பவர்களாகவே இருப்பார்கள்!*

*ஆனால் ஆவிக்குரிய மனிதனோ தேவனை மாத்திரமே நாடுகிறபடியால், தேவன் அவனோடு எப்போதும் இருப்பதினிமித்தம் அவனுக்கோ “யாதொரு குறைச் சொல்லும் இருப்பதில்லை!”*

*மேலும், தனக்கு நேரிடுகிற எல்லா சூழ்நிலைகளிலும் தேவனுடைய பலத்த கரத்தை காண்கிறபடியால், அவருடைய கரத்தில் மகிழ்ச்சியுடன் எப்போதும் அடங்கியிருப்பான்!!*

*ஒரு ஆவிக்குரிய மனிதன் தேவனோடு தொடர்ச்சியான தொடர்பு உடையவனாக இருக்கிறபடியால், அவனது வாழ்வை நடத்திச் செல்வதற்கு இனி யாதொரு சட்டதிட்டங்களும் அவனுக்கு அவசியமாய் தோன்றுவதில்லை! ஜீவ விருட்சமாகிய தேவனை அவன் கண்டுகொண்டபடியால், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தை அவன் மனம் நாடுவதில்லை!! கிறிஸ்துவினிமித்தம் கொண்ட அன்பின் தியானத்தில் ஈர்க்கப்பட்டதினிமித்தம், இரண்டாந்தரமான உலக காரியங்களுக்கு அவன் வழி தவறிச் செல்வதில்லை!!*

**ஜெபம்** : *எங்கள் தந்தையே! உம்மை மாத்திரமே ஆராதித்து, இந்த உலகத்தை புறக்கணித்து வாழ்பவர்களின் நிறைவான.... குறைசொல் இல்லாத வாழ்வை எங்களுக்குத்தாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**நம் உலக தேவைகளையும் தன்னிடம் ஜெபித்திட தேவன் விரும்புகிறார்!**

*இயேசு தான் தூங்குவதாகக் காணப்படுவதில் அவர் எந்த வெட்கமும் கொள்ளவில்லை! மேலும் அவர் தாகமாயும் பசியாயு மிருந்த வேளைகளும் வந்தது. அவைகளெல்லாம் தனக்கு இருந்ததை அவர் தயக்கமின்றி ஒத்துக்கொண்டார். ஏனெனில், தன் சரீரத் தேவை களைக் குறித்து அவர் ஒருபோதும் வெட்கம் அடைந்ததே இல்லை. தேவன் மீது ஜனங்கள் கொண்டிருந்த தவறான அபிப்ராயத்தை திருத் தும்படிக்கே, கர்த்தருடைய ஜெபத்தின் கடைசி மூன்று விண்ணப்பங் களிலும் சரீரத் தேவைகளுக்கே இயேசு முதலிடம் கொடுத்தார்!!*

*பூமிக்குரிய நம் தேவைகள் யாவும் ஒட்டு மொத்தமாக, "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என்ற விண்ணப்பத்தில் அடங்கியிருப்பதைப் பாருங்கள். இந்த விண்ணப்பத் திற்குள், "தகப்பனே, ஒரு வேலையை எனக்குத் தாரும்; நான் வசிப்பதற்கு வீடு ஒன்று தாரும்; நானும் என் குடும்பத்தாரும் உடுத்திக் கொள்ள உடைகளைத் தாரும்; என் பிள்ளைகளுக்கு நல்ல கல்வியைத் தாரும் . . . . . ஏனென்றால், அவர்களும் ஓர் நாளில் தங்கள் அன்றாட ஆகாரத்தைப் பெற வேண்டும்!" போன்ற அனைத்து விண்ணப்பமும் அடங்கியுள்ளது. நாம் மாத்திரம் தேவனுடைய ராஜ்யத்தை முதலாவது தேடுபவர்களாய் இருப்போமென்றால், இப்பூமிக்குரிய தேவைகள் யாவையும் நமக்கு ஆண்டவர் நிச்சயமாகவே கூட்டி வழங்கிடுவார்!*

*நாம் ஏன், உணவு; உடை; வேலை; வீடு; நம் பிள்ளைகளின் கல்வி போன்றவைகளுக்காக மிகுந்த கவலை கொள்ளுகிறோம் தெரியுமா? ஏனென்றால் நம் இருதயத்தின் ஆழத்தில், தேவன் இவ்வித உலகக் காரியத்திற்கெல்லாம் உதவி செய்வதற்கு ஆர்வம் கொண்டிருக்க மாட்டார் என்ற நம்முடைய தவறான எண்ணமே ஆகும். நம் ஆவிக்குரிய நலன்களுக்கு மாத்திரமே தேவன் அக்கறை கொண்டுள்ளார் எனவும் நாம் எண்ணிக் கொள்ளுகிறோம்!*

*நம் நல்ல தேவனோ நம்முடைய ஆவி; ஆத்துமா; சரீரம் ஆகிய ஒவ்வொரு பகுதியிலும் அக்கறை கொண்டுள்ளார் என்ற உணர்வை பரிசுத்தாவியானவர் நமக்குள் நிலையாகக் கொடுத்துவிட்டால் அது எத்தனை அருமையாயிருக்கும்! நம் பூமிக்குரிய தேவைகளுக்காக நாம் அவரிடம் விண்ணப்பம் செய்வதையும் தேவன் விரும்புகின்றார். ஏனெனில் நாம் ஒருபோதும் கவலை கொண்டிருக்க அவர் விரும்புவதே இல்லை. எனவேதான் பரிசுத்த வேதாகமம், "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப் பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டு தலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" (பிலி.4:6) எனக் கூறுகிறது.*

***ஜெபம் :*** *எங்கள் அன்பின் தகப்பனே! நீர் கிருபையாய் எங்கள் சரீரத்தேவைகள்மீது அக்கறை கொண்டிருக்கிறீரே! எங்கள் சரீர தேவைகளை மகிழ்ச்சியுடன் விண்ணப்பிக்க முடியுமே! உமக்கு நன்றி! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**தன் சொந்த பிள்ளைகளின் "தேவையை" பூர்த்தி செய்திடும் தேவன்!**

*பூமிக்குரிய ஓர் தகப்பன்தன்னைச் சுற்றியுள்ள எல்லோருடைய தேவைகளையும் பூர்த்தி செய்வது அவனுடைய கடமை அல்ல. ஆனால் அவன் தன் சொந்த குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கோ நிச்சயமாய் கடமைப்பட்டிருக்கிறான். தன் பிள்ளைகளாய் இராத ஆகாயத்துப் பறவைகளுக்குக்கூட தேவன் ஆகாரம் கொடுக்க அவ்வளவு நல்லவராக இருக்கிறார். அவ்வாறிருக்க, தன் சொந்தப் பிள்ளைகளின் தேவைகளைத் தேவன் பூர்த்தி செய்து வழங்குவது எவ்வளவு நிச்சயம்! ஓர் சமயம், கானானிய ஸ்திரீ ஒருத்தி தன் மகளை இயேசு சுகமாக்கும்படி வேண்டிக்கொண்டாள். அப்போது இயேசு அவளை நோக்கி, "முதலாவது பிள்ளைகள் திருப்தி அடையட்டும்" (மாற்கு 7:27) எனக் கூறினார். அதற்கு அவள், "பிள்ளைகள் சிந்துகிற துணிக்கைகளையாகிலும் தனக்குக் கொடுத்தால் அதுவே எனக்குப் போதும்!" என்பதாகப் பதில் கூறினாள். அவளுடைய பதிலினிமித்தம், உடனே அவளுடைய மகள் பூரண சுகம் அடைந்தாள். இதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள்! கீழே விழும் மீதித் துணிக்கைகள், பிசாசின் பிடியிலிருந்தே விடுதலை அளிப்பதற்குப் போதுமானதாய் இருந்தது!! அப்படியானால், தேவனுடைய சொந்தப் பிள்ளைகளாகிய நாம் பெறும் ஓர் "முழு அப்பம்" எவ்வளவாய் நன்மைகளை ஈட்டித் தராது!! இவ்வாறு, "முதலில் பிள்ளைகள் திருப்தியடையட்டும்" என இயேசு கூறிய வார்த்தை உங்களைப் பரவசமூட்டவில்லையா!! இப்போது நீங்கள் மிகுந்த தைரியத்தோடு, "எங்கள் தகப்பனே எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என ஜெபிக்க முடிகிறதல்லவா!!*

*நம் ஆடம்பர வசதிகளுக்காக விண்ணப்பம் ஏறெடுக்கும்படி இயேசு ஒருபோதும் போதிக்கவில்லை என்பதை நாம் மனதிற் கொள்ள வேண்டும்! நாம், "தகப்பனே, எங்களுக்கு வேண்டிய ஐஸ்கிரீமை இன்று எங்களுக்குத் தாரும்" என்றல்ல, "எங்களுக்கு வேண்டிய (தேவையான) ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என்று ஜெபித்திடவே இயேசு கற்றுத் தந்தார். "நம் தேவன் தம் ஐசுவரியத்தின்படி நம்முடைய குறைவையெல்லாம் (need - நம் தேவைகளையெல்லாம்) நிறைவாக்குவார்" (பிலி.4:19) என்றுதான் வாக்குத்தத்தத்தைப் பெற்றிருக்கிறோம். அதாவது நாம் விரும்புகிற யாவையும் அல்ல, நமக்குத் தேவையானவைகளையே நாம் பெற்றிடுவோம். நாம் விரும்புவதற்கும், நமக்குத் தேவையாயிருப்பதற்கும் ஆகிய இந்த இரண்டிற்கும் ஏராளமான வித்தியாசம் உண்டு!*

**ஜெபம் :** *எங்கள் பரலோக பிதாவே! நாங்கள் உம்முடைய சொந்த பிள்ளைகள்.... எங்கள் 'தேவைகளை' நிச்சயமாய் பூர்த்தி செய்திடும் நல்லவராய் இருப்பதற்காக நன்றி, இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**அனுதினமும் தேவனை சார்ந்து வாழ வேண்டும்!**

*"எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" (மத்தேயு 6:11) என்றே நாம் ஜெபிக்க இயேசு கற்றுத் தந்தார். இருப்பினும் அநேக நாட்களுக்குத் தேவையான ஆகாரத்தை ஒரே நேரத்தில் மொத்தமாகத் தேவன் கொடுத்திடவும் கூடும்! ஆனால் நம்முடைய விண்ணப்பமோ ஒரு நாளுக்குரிய நம்முடைய சரீரத் தேவைகளுக்காக மாத்திரமே இருந்திட வேண்டும். நாளை சம்பவிக்கிறவைகளுக்காகக் கூட நாம் கவலைப்படக் கூடாது என இயேசு கூறினார். எதிர் காலத்துக்காக நாம் கவலைப்படக்கூடாது என்றே இந்த நல்ல ஆண்டவர் விரும்புகிறார். ஆகிலும், நாமோ, நாள்தோறும் நம் ஆண்டவரைச் சார்ந்தே சதா ஜீவித்திட வேண்டும். இவ்விதம் அவரைச் சார்ந்து ஜீவிக்கும் பாடத்தை இஸ்ரவேல் ஜனங்களுக்கு வனாந்தரத்தில் மிக அருமையான வழியில் தேவன் கற்றுத் தந்தார். வனாந்தரத்தில் அவர்கள் ஒவ்வொருநாள் காலையும் வெளியே சென்று மன்னாவை சேகரிக்க வேண்டும். அவர்களால் ஒரே சமயத்தில் அநேக நாட்களுக்குரிய மன்னாவை சேகரிக்க முடியவில்லை! ஆம், அவர்கள் நாள்தோறும் தங்கள் ஆண்டவரைச் சார்ந்தே ஜீவிக்க வேண்டியதாயிருந்தது. இவ்விதமாய் அவர்கள் 40 வருடங்கள் ஜீவித்தார்கள். இவ்வித வாழ்க்கை ஓர் கஷ்டமான வாழ்க்கையா? இல்லை, நிச்சயமாய் இல்லை! இவ்வித வாழ்க்கை அவர்களுக்கு மிகுந்த "பரவசத்தையே" கொடுத்தது!!*

*ஒரே நேரத்தில் நமக்கு தேவன் அதிகமாய்க் கொடுத்துவிட்டால், நம் இருதயம் அவரைவிட்டுத் தூரமாக விலகிச் சென்றுவிட முடியும். எனவேதான் சரீரப்பிரகாரமான நம் தேவைகள் "அவ்வப்போது உருவாகும்படி" தேவன் நம் ஜீவியத்தில் சூழ்நிலைகளைக் கட்டளை யிடுகிறார். இப்பூமியில் ஆவிக்குரியவைகளைவிட சரீரத்திற்குரியவை களே நம்மை அதிகமாய்த் தொட்டுக் கொண்டிருக்கிறது! எனவேதான் இவ்விதமாய் தேவைகள் நம் வாழ்க்கையில் தோன்றும்படி தேவன் அனுமதிப்பது மூலமாய், நாம் அவரை மறுபடியும் மறுபடியும் சார்ந்திருக்கும்படிச் செய்கிறார்!*

*மேலும் "ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது" (2 தெச.3:10) எனவும் தெளிவாகக் கூறுகிறது. நம் பரம தகப்பனே ஆகாயத்துப் பறவைகளை போஷிக்கிறார் என இயேசு கூறினார். ஆனால் அவர் நேரடியாக பறவைகள் வாய்க்குள் ஆகாரத் தைப் போடுவதில்லை! இப்பறவைகள் வெளியேறிச் சென்றுதான் தங்கள் இரையைத் தேடவேண்டும். இவைகளைப் போலவே நாமும் கடினமாய் உழைக்கவும் . . . . அதேசமயம், அவரை நம்பியிருக்கவும் தேவன் எதிர்பார்க்கிறார். ஆம், விசுவாசத்தை கடினஉழைப்பிற்கு ஓர் மாற்றாக நாம் ஒருபோதும் எண்ணிவிடக் கூடாது!*

***ஜெபம்*** *: எங்கள் பரம தந்தையே! எங்கள் இருதயம் உம்மை நாள்தோறும் சார்ந்து வாழ்வதிலிருந்து விலகாதிருக்க கிருபை செய்தருளும், ஆமென்.*

**கிறிஸ்தவ ஜீவியம், சுயநலமில்லாத ஜீவியம்!**

*தன் ஜீவியத்தில் தேவனை முதன்மையாக வைப்பவன், தன்னை 'இரண்டாவதாக' வைத்துக்கொள்ள முடியாததை சீக்கிரத்தில் கண்டுகொள்வான். நாம், பிதாவின் சாப்பாட்டு மேஜையைச் சுற்றி பந்தியிருக்கும் ஒரே குடும்பத்தின் அங்கத்தினர்களாவோம். தன்னோடு அமர்ந்திருக்கும் மற்றவர்களுக்கும் சாப்பிடப் போதுமானது இருக்கிறதா என்பதில் அக்கறை கொள்ளாமல், தானே எல்லாப் பண்டங்களையும் வாரிப் புசித்திடும் சுயநலமான பிள்ளைகளை பிதா ஒருபோதும் விரும்புவதில்லை!! இவ்வித சுபாவத்தை மனந்திரும்பாத மனுஷர்கள் கூட கெட்ட சுபாவம் என்றுதான் கூறுவார்கள். அப்படியானால், இத்தீய சுபாவத்தை ஓர் கிறிஸ்தவன் கொண்டிருந்தால். . . . . அது எவ்வளவு கொடுமை!*

*நியாயத்தீர்ப்பின் நாளைக் குறித்து இயேசு கூறிய வசனங்களை சற்று எண்ணிப் பாருங்கள். அவர் ஜனங்களை நியாயந்தீர்க்கும்படி தனது சிங்காசனத்தில் வீற்றிருக்கும்போது, தன்னைச் சுற்றியுள்ளவர்களைப் பார்த்து, "பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போஜனங் கொடுக்கவில்லை; வஸ்திரமில்லாதிருந்தேன், நீங்கள் எனக்கு வஸ்திரங் கொடுக்கவில்லை; வியாதியுள்ளவனாயிருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லை" எனக் கூறினார். அதற்கு அவர்கள், "ஆண்டவரே இதெல்லாம் எப்போது சம்பவித்தது? உம்மைப் பசியுள்ளவராகவும், வஸ்திரமில்லாதவராகவும் நாங்கள் ஒருபோதும் காணவில்லையே" என பதிலுரைத்தார்கள். அதற்கு ஆண்டவர் பிரதியுத்தரமாக, "நான் மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்கள் மத்தியில் வாழ்ந்தேன்! என்னுடைய சகோதரரிலொருவன் குறைச்சலிலிருப்பதை நீங்கள் கண்டபோது, அவ்விதம் குறைச்சலிலிருந்தது நான்தான் என்பதை உங்களால் கண்டுகொள்ள முடியவில்லை! நான்தான் பசியோடும் தாகத்தோடும் என் சகோதரர் மத்தியில் இருந்தேன் என்பதையும் நீங்கள் அறியவில்லை!!" என்றும் பதிலுரைத்தார் (மத்.25:31-46 - விரிவாக்க வசனங்கள்).*

*இதுவே, பரலோகத்திற்கும் பாதாளத்திற்கும் இடையில் காணப்படும் முக்கியமான அடிப்படை வித்தியாசங்களில் ஒன்றாகும். பாதாளம், பாவத்தாலும். . . . . சுயம்-மையம் கொண்ட வாழ்வாலும் நிறைந்திருக்கிறது. பாதாளத்தில் வாழும் ஒவ்வொரு மனுஷனும் தனக்காகவே ஜீவிப்பவனாவான். இவன், தேவனுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ இடந்தரமாட்டான். ஆனால் பரலோகத்தின் ஜீவியமோ இதற்கு முற்றிலும் நேர்மாறானதாகும். அங்கே தேவனே முதன்மை பெற்றிருப்பார்! இரண்டாவது இடத்தையோ, மற்றவர்களே பெற்றிருப்பார்கள்!!*

**ஜெபம்** : *எங்கள் பரம தகப்பனே! உமக்கு முதலிடம் கொடுத்து வாழ்ந்த எங்களை, இரண்டாவதாக 'எங்களை' வைத்து வாழாமல் "பிறருக்காய்" கரிசனை கொண்டு வாழ கிருபை செய்தருளும், ஆமென்.*

### பாவத்தை நேர்மையாய் அறிக்கை செய்திட வேண்டும்!

இன்று அநேக ஜனங்கள், "பிதாவே, எங்கள் பாவங்களை மன்னியும்" என்றே ஜெபிக்கிறார்கள். ஆனால், முதலாவது நாம் அவரிடம் பாவத்தை அறிக்கை செய்யாமல் நம் பாவங்களை மன்னிக்கும்படி தேவனிடம் கேட்க முடியாது என்பதையோ இந்த ஜனங்கள் உணர்வதேயில்லை. ஆம், நாம் முதலாவது நூற்றுக்கு நூறு நேர்மையான உள்ளத்தோடு, நம் பாவங்களை மறைக்காமல் அவைகளை ஆண்டவரிடம் அறிக்கை செய்ய வேண்டும். "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்" (நீதி.28:13) என தேவனுடைய வார்த்தை கூறுவதைக் கேளுங்கள். இருப்பினும், தன் பாவங்களை மறைக்கிறவன், "ஆண்டவரே, என்னை மன்னியும், மன்னியும்" என ஜெபித்துக் கொண்டேயிருக்கலாம். ஆனால் , இவ்வித ஒருவன் ஒருக்காலும் மன்னிக்கப்படவே மாட்டான்! "...அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ (அவன் மாத்திரமே) இரக்கம் பெறுவான்" என நீதி.28:13 - தொடர்ந்து கூறுவதைப் பாருங்கள். மேலும் பரிசுத்த வேதாகமம் கூறுவது யாதெனில், "நம்முடைய பாவங்களை **நாம்** அறிக்கையிட்டால் (இதை நாம்தான் செய்ய வேண்டும்), பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு **அவர்** உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார்.

ஆதாம் பாவத்தில் வீழ்ச்சியடைந்த நாளிலிருந்து, மனுஷன் தன் பாவத்தை அறிக்கை செய்வதற்குப் பதிலாக அவைகளை 'மறைக்கும்' சுபாவத்தையே பெற்றிருக்கிறான். ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தவுடன் அவர்களிடம் பிரதிபலித்த முதலாவது கிரியை என்ன தெரியுமா? அவர்கள் உடனே தேவனிடம் ஓடிச்சென்று, "ஓ! என் தேவனே!! எதைச் செய்யக்கூடாதென நீங்கள் என்னிடம் கூறினீர்களோ அவைகளைச் செய்துவிட்டோம்!" என்றா கூறினார்கள்? இல்லவே இல்லை! அவர்களோ, தேவனை விட்டு விலகிஓடித் தங்களை ஒளித்துக்கொள்ளவே முயற்சித்தார்கள். இது எவ்வளவு பெரிய மதியீனம்! சர்வ வல்ல தேவனுக்கு முன்பாக இந்த ஆதாமும் ஏவாளும் ஓர் மரத்திற்குப் பின்னால் ஒளிந்துகொள்ளக் கூடுமோ?

நாம் செய்த தவற்றிற்கு நாம் பொறுப்பாளி அல்ல, என சாதித்து நம்மை நியாயப்படுத்தவே எப்போதும் முயற்சிக்கிறோம். நாம் தவறு செய்யும்போது கையும்-மெய்யுமாய் பிடிக்கப்பட்டால்கூட "இந்த சூழ்நிலை என்னை இப்படிச் செய்ய வைத்துவிட்டது" என்றும் "இதெல்லாம் என் பெலவீனம்" என்றும் சாமர்த்தியமாகவே கூறிவிடுகிறோம். இப்போது சம்பவிப்பது யாது? 'இப்படிப்பட்ட நாம்' ஒருக்காலும் தேவனுடைய மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளவே மாட்டோம்! என்ற துரதிருஷ்டமேயாகும்!!

**ஜெபம்**: எங்கள் அன்பின் பிதாவே! எவ்வித பாவமாயிருந்தாலும், உமது மன்னிப்பின் மாட்சியை சந்தேகிக்காமல், பாவத்தை 'மறைக்காமல்' அறிக்கை செய்து உமது மன்னிப்பை பெற்றுக்கொள்ள கிருபை தாரும், ஆமென்.

**கவலை அகற்றும் பிதாவின் அன்பு!**

*ஒரு அடைக்கலான் குருவி மரித்து தரையில் விழுவதையும் அவர் காணத் தவறுவதில்லை. . . நம் தலையின் ஒரு முடி விழுவதையும் அவர் காணத் தவறுவதில்லை! தன் சொந்தக் குமாரனையே நமக்காக ஒப்புவித்தவர், அவரோடேகூட மற்ற "எல்லாவற்றையும்" நமக்குத் தருவார்! (ரோமர் 8:32)."நமக்கு, இல்லை" என சொல்லிவிட்டு எதையும் அவர் வைத்துக் கொள்ள மாட்டார்!! ஆம், "சகலமும் நம்முடைய வைகளே" (1 கொரிந்தியர் 3:22).*

*நம்மால் தாங்கிக்கொள்ள முடியாத ஒரு சோதனைகூட நம்மீது விழாது. . . ஒருக்காலும் விழாது! அதற்கு தேவனே உத்திரவாதம் அளித்திருக்கிறார் (1 கொரிந்தியர் 10;13). இந்த உத்திரவாதம் சில ஆண்டுகளுக்கு உரியதல்ல. . . நம் ஆயுள்-காலத்திற்கும் உத்திரவாதம் கொண்டதாகும்!! நம்மீது அவர் கொண்ட நோக்கத்தை நிறைவேற்று வதற்கு 'ஓர் யூதாஸ்காரியோத்தும்' நம் அன்பின் பிதாவின் கையில் ஓர் ஆயுதமாகவே பயன்படுத்தப்படுகிறான்!!*

*ஆகவே, எதிர்ப்பான சூழ்நிலைகள் நம் ஜீவிய பாதையில் குறுக்கிடும்போது, அன்று கெத்சமனேயில் பட்டயத்தை உருவிய பேதுருவைப்போல் நாம் பட்டயம் எடுக்கத் தேவையில்லை! அதற்கு மாறாக, ஒரு மெய்யான ராஜாவைப்போல் இயேசு நடந்து கொண்டது போலவே நாமும் கண்ணியமாய் நடந்து 'எது சம்பவித்தாலும்' அதற்கு நம்மை ஒப்புக்கொடுத்திட முடியும்! பிலாத்துவிற்கு முன்பாய் நின்ற இயேசு "பரத்திலிருந்து உமக்கு கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது!" என்றார் (யோ.19:11). இன்று நாமும் கூட நம்மைச் சுற்றியுள்ள உலகத்தையும் அதன் சகல குடியிருப்பு களையும் சுற்றிப்பார்த்து "இயேசு கூறிய அதே வாக்கியங்களை" கூறிட முடியும்!!*

*வாழ்வின் "ஒவ்வொரு" நிகழ்ச்சிகளையும் நம்முடைய நன்மைக்கு ஏதுவாகவே தேவன் திட்டம் வகுக்கிறார். ஆகவேதான், இயேசுவின் மெய் சீஷனின் வாழ்க்கையில் கவலைக்கோ அல்லது பயத்திற்கோ சிறிதும் இடம் இருப்பதில்லை! கவலையும் பயமும் பாவங்களேயாகும். . . ஏன் தெரியுமா? அவைகள் ஓர் அவிசுவாசம் கொண்ட பொல்லாத இருதயத்திலிருந்து உருவாகி வெளிவருபவைகளாகும்!! நாம் விசுவாசிப் பதாகக்கூறியும், கவலையும் பயமும் நம்மோடு வைத்திருப் பவர்களாயிருந்தால், நம்மை நாமே வஞ்சிப்பவர்களாய் இருப்போம், சத்தியம் நமக்குள் இராது!! இந்த அவிசுவாசத்தினிமித்தம் இயேசு பல தடவை தன் சீஷர்களைக் கடிந்திருக்கிறார். . . ஏனெனில், இந்த அவிசுவாசமே அவர்களில் கவலையையும் பயத்தையும் உருவாக்கியதை அவர் கண்டார்!*

***ஜெபம் :*** *எங்கள் பரலோக பிதாவே! உம்முடைய பூரண அன்பின் பாதுகாப்பில் நாங்கள் இருக்கிறபடியால், யாதொரு சம்பவமும் எங்கள் வாழ்வை கவலையில் ஆழ்த்தாதிருக்க கிருபைதாரும், ஆமென்.*

### அசுத்த கனவுகளிலிருந்து விடுதலை!

*அசுத்தமான சிந்தைகளை நாம் ஜெயித்திட முடியுமா? இப்பகுதியில் நாம் உண்மையுள்ளவர்களாயிருந்தால், கொஞ்ச காலத்திற்குள்அதற்கு மரணம் சம்பவிப்பதை நாம் கண்டிட முடியும்! நாம் மனந்திரும்பாத நாட்களில் அனேக ஆண்டுகளாய் இந்த "அசுத்தகனவாகிய" பாம்பிற்குத் தீனி போட்டிருந்தால், இப்பாம்பிற்கு மரணம் சம்பவிப்பதும் சில வருடங்கள் ஆகக்கூடும். நம் கனவுகள் (dreams) தூய்மையாய் இருப்பதை வைத்தே இதை அறிந்து கொள்ளலாம். அசுத்தமான கனவுகள், அறிந்து செய்யும் பாவங்கள் (Conscious Sins) அல்ல. அவை அறியாது செய்திடும் (Unconscious Sins) பாவங்கள்தான். அதாவது, மாம்சத்தின் அடிமைத்தனமே பாவப்பிரமாணத்திற்கு ஊழியம் செய்கின்றது. ஆகையால் நாம் அவ்வித கனவுகள் குறித்து குற்ற உணர்வு கொள்ளத் தேவையில்லை (ரோமர் 7:25; 8:1). நாம் இவைகளை அறிக்கை செய்யாமலே, இயேசுவின் இரத்தம் நம்மைக் கழுவி சுத்திகரித்துவிடும். ஆம், அறிந்த பாவங்கள் மாத்திரமே அறிக்கை செய்யப்பட வேண்டும் (1 யோவான் 1:7-ம் வசனம் அறியாத பாவங்களையே குறிப்பிடுகின்றது. நான் ஒளியில் நடந்தால், நம் எல்லா அறியாத பாவங்களையும் இயேசுவின் இரத்தம் 'தானாகவே' நம்மைச் சுத்திகரித்துவிடும். ஆனால், 9-ம் வசனமோ நாம் அறிந்த பாவங்களை அறிக்கை செய்து பெறும் மன்னிப்பைக் குறிப்பிடுகின்றது). ஆகிலும், நம் கனவுகள் படிப்படியாய்த் தூய்மையாகிக்கொண்டே வருவதுதான், நம் சிந்தை வாழ்வில் நாம் உண்மையுள்ளவர்ளாய் இருக்கிறோமா? இல்லையா? என்பதை அறிவதற்குரிய சிறந்த சாட்சியாகும்.*

*அவைகள் மறுபடியும் தோன்றினால்?. . சரிதான், நாம் சிந்தை வாழ்வில் மறுபடியும் பின்மாற்றமடைந்து வீழ்ச்சியுற்றதே இந்த அறிகுறி! இவ்விதம் நம் சிந்தை வாழ்வில் நாம் எவ்வளவு உண்மையுள்ளவர்களாயிருக்கிறோம்? என்பதை கணக்கிடுவதற்கு இந்தப் பரீட்சை நமக்கு மிகவும் உதவுகின்றது. 100% உண்மையான ஜீவியம் சம்பூரண வெற்றியை நமக்குக் கையளித்துவிடும்! பாலிய இச்சையில் நாம் 100% உ ண்மையாய் இருப்பதென்பது, ஒரு ஸ்திரீயின் அல்லது ஓர் ஆடவனின் சௌந்தர்யமான முகத்தை ரசிக்காமல் மாத்திரமல்லாமல், இவ்வித ரசனைக்கு முன்னோடியாய் அதைத் தழுவி நிற்கும் எவ்வித காம சிந்தையும் கொள்ளாமல் இருப்பதுதான்! இவ்வித உண்மையை நாம் கைக்கொள்ள கட்டளையிடுவதே நீதிமொழிகள் 6:25-ல் "உன் இருதயத்திலே அவள் அழகை இச்சியாதே" என கூறப்படும் வசனமாகும். இவ்விஷயத்தில் உண்மையாய் இருந்து தங்கள் கனவுகளில் தூய்மை பெற்றவர்களும் மிகவும் கொஞ்சமேயுள்ளார்கள்!!*

**ஜெபம்** : *அன்பின் தந்தையே! நாங்கள் அறிந்து வாழும் எல்லையில் சிந்தையில் தூய்மையாய் வாழ்ந்து அசுத்த கனவிலிருந்து விடுதலைபெற உதவி செய்தருளும், ஆமென்.*

**தெய்வீக அன்பே மெய்யான ஆவிக்குரிய வளர்ச்சி!**

*எல்லா ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் பிரதானமான ஒரே ஆதாரம் "அகாபே-அன்பில்" வளர்ந்திடும் வளர்ச்சிதான்! அதுபோல், எல்லா ஆவிக்குரிய வளர்ச்சியற்ற தன்மைக்கும் பிரதான காரணம் "அன்பில் முதிர்ச்சியில்லாதிருப்பதே" ஆகும்!! எனவே, எல்லா ஆவிக்குரிய தோல்விக்கும் பிரதான காரணம், "அன்பிலே ஏற்படும் வீழ்ச்சியே" ஆகும். நம்மில் அன்பில்லையென்றால், நாம் சீரழிந்து போவதும் நிச்சயம்!*

*"அகாபே-அன்பில்" (தெய்வீக சுபாவ அன்பில்) தோன்றி "அகாபே-அன்பில்" செயல்படாத எவ்வித சிந்தையும், வார்த்தையும், திட்டமும், நோக்கமும் அல்லது எவ்வித கிரியைகளும் ஒருநாளில் முழுவதுமாய் அழிந்துபோய்விடும்! அதாவது, அன்பில்லாத எந்த கிரியைகளும் தங்களைத்தாங்களே அழித்துக்கொள்ளும்!!*

*"அகாபே-அன்பு" ஜெயிக்க முடியாத எந்தப் பிரச்சனையும் இல்லை!*
*"அகாபே-அன்பு" சுகமாக்க முடியாத எந்த ஆத்ம நோயும் இல்லை!*
*"அகாபே-அன்பு" திறக்கக்கூடாத எந்த கதவும் இல்லை!*
*"அகாபே-அன்பு" பாலம் அமைக்கமுடியாத எந்தப் பிளவும் இல்லை!*
*"அகாபே-அன்பு" உடைத்திட முடியாத எந்த தடைச்சுவரும் இல்லை!*
*"அகாபே-அன்பு" மீட்டிட முடியாத எந்தப் பாவியும் இல்லை!*

*ஆம், நீங்கள் மாத்திரம் இந்த "அகாபே-அன்பினால்" நேசிக்கக் கற்றுக்கொண்டால் போதும், இவ்வுலகில் சொல்லிமுடியாத மகிழ்ச்சியும், வலிமை கொண்டவர்களாயும் மாறுவீர்கள் என்பது திண்ணம்!*

*கர்த்தருடைய மேஜைக்கு வந்து, அவருடைய சரீரம் இன்னதென்று உணர்ந்துகொள்ளாமல் புசிப்பவர்கள் அவருடைய சரீரத்தைக் குறித்தும், இரத்தத்தைக் குறித்தும் குற்றமுள்ளவர்களாயிருப்பார்கள் என பவுல் கூறினார். அதாவது, இன்று பூமியிலிருக்கும் கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள அன்பின் ஐக்கியத்தைப் பாதுகாக்கத் தவறியவர்கள் மீண்டுமாய் தங்கள் இரட்சகரை சிலுவையில் காயப்படுத்திய குற்றத்திற்கு ஆளாகிறார்கள் என்றே பவுல் சூசகமாய் குறிப்பிட்டார்!*

*ஒன்றாய் ஐக்கியப்பட்டிருக்கும் கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஊறுவிளைவிப்பவர்கள், அன்று சிலுவையில் தொங்கிய ஆண்டவரின் சரீரத்தில் ஏற்பட்ட "அதே வலியைத்தான்" இன்று மீண்டும் அவருக்குத் தருகிறார்கள் எனப் பவுல் கூறினார்!!*

***ஜெபம்*** *: எங்கள் அன்பின் பிதாவே! தெய்வீக அன்பிலிருந்து நாங்கள் குளிர்ந்து போகாமல் நாளுக்குநாள் அன்பில் வளர்ந்து, விசால இதயத்துடன் அனைவரையும் நேசித்திட கிருபை செய்தருளும்! ஆமென்.*

**இயேசுவின் சீடர்கள் தாழ்மையுள்ள வேலைக்காரர்கள்!**

*ஜனங்கள் தங்கள் கைகளைக் கழுவிக்கொள்ளும்படி தண்ணீர் வார்த்ததை மாத்திரம்தான் எலிசா செய்தானா? (2 இராஜா 3:11). இதே எலிசா "யோர்தான் நதியை இரண்டாகப் பிளந்தான்!"... "எரிகோவின் தண்ணீரினால் ஏற்பட்ட கொள்ளைநோயைத் தடுத்து நிறுத்தினான்!"..... இதுபோன்ற செயல்கள் யாவும் குறிப்பிடத்தக்க அபூர்வ செயல்கள் அல்லவா? ஆகிலும் அவனோ, "ஒரு வேலைக்காரனாகவே" இங்கு அறிமுகப்படுத்தப்பட்டான்!!*

*தனக்கு தரப்பட்ட "வேலைக்காரன்" என்ற பட்டத்தைக் குறித்து எலிசா எந்த சலனமும் அற்றவனாகவே காணப்பட்டான். அவனுடைய ஊழியத்தில் "எலியாவின் வேலைக்காரன்" என்பதையே ஜனங்கள் வெளிப்படையாகக் கண்டிருந்தபடியால், "அவன் ஒரு வேலைக் காரன்!" என்ற எண்ணம் ஜனங்கள் மனதில் அவ்வளவாய் பதிந்து விட்டது!! ஆகவேதான், ராஜாவின் வேலைக்காரன்கூட எலிசாவைத் "தண்ணீர் வார்ப்பவன்!" என குறிப்பிட்டான்.*

*இன்று நாமும்கூட "பிறருக்கு வேலைக்காரர்களாய்" இருப் பதற்கே அழைக்கப்பட்டிருக்கிறோம். நம் குருநாதர் இயேசுவேகூட "தன் சீஷர்களின் கால்களைக் கழுவ தண்ணீர் வார்த்தவராகவே" காணப்பட்டார். இதை இயேசுவே குறிப்பிட்டுக் கூறும்போது, "நான் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யும்படிக்கே வந்தேன்!" என கூறினார் (மத்தேயு 20:28). இந்த பூமியில் "ஓர் தலைமை ஸ்தானத்தை" விரும்பியவர்களைப் பார்த்து, "என்னுடைய ராஜ்ஜியமோ, இந்த பூமியிலுள்ள ராஜ்ஜியங்களின் மனோபாவத்திற்கு முற்றிலும் மாறுபட்டது" என்றே இயேசு கூறினார்.*

*ஆகவே, கர்த்தருடைய ஒவ்வொரு ஊழியக்காரனும் எல்லா மனுஷர்களுக்கும் ஓர் வேலைக்காரனாகவே இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில், "தேவனுடைய ஊழியக்காரன்!" என்ற கனத்தை அவன் நிச்சயமாய் இழந்துபோவான்!! ஒரு வேலைக் காரனுடைய சுபாவத்திற்கு முரணாக உள்ள இரண்டு காரியங்களை நாம் அறிந்திருக்க வேண்டும் : 1) எல்லாராலும் அறியப்பட்டு புகழடைய விரும்பும் நோக்கம். 2) மற்றவர்களை ஆளுகை செய்திடும் "தலைவா" வின் மனப்பான்மை (A bossy Attitute). ஆனால், நம் ஆண்டவர் இயேசுவிடமோ "இந்த இரண்டு" மனப்பான்மைகளுக்கும் முற்றிலும் எதிரிடையான மனப்பான்மை இருந்ததையே நாம் காண்கிறோம். ஆம், 1) அவர் தம்மைத்தாமே வெறுமையாக்கினார். 2) ஓர் அடிமையின் ரூபமெடுத்தார் (பிலிப்பியர் 2:7). இந்த இரண்டு திவ்ய குணாதிசயங்களை நாம் யாவருமே உற்று நோக்குவது நலம்!!*

**ஜெபம்** : *எங்கள் பரலோக தகப்பனே! எங்கள் குரு இயேசுவின் அடிச்சுவட்டில், அவரைப்போலவே தாழ்மையான வேலைக்காரனாய் வாழ்ந்திட கிருபை செய்தருளும், ஆமென்.*

**நாம் சாட்சி சொல்வதில் தெய்வ பயம் வேண்டும்!**

*நம் கிறிஸ்தவ ஜீவியத்தில் "சாட்சி கூறி" பிறரை கிறிஸ்துவுக்குள் கொண்டுவர வேண்டியது அவசியம்தான் இச்சமயத்தில் நம்மில் ஒருவராகிலும், "தேவனுடைய மகிமையில்" 'முழுவதுமோ' அல்லது 'அதிக பட்சமோ' நமக்கென எடுத்துக் கொள்ள துணியமாட்டோம் என்றே நான் நம்புகிறேன். ஆனால், அதில் 5% அல்லது 10% மகிமையைத்தானே நமக்கென எடுத்துக் கொள்கிறோம்!? "இத்தனை அரும்பாடுபட்ட எனக்கு இந்த குறைந்த அளவு கமிஷன்கூட வேண்டாமா?" என்றே நம் உணர்வுகள் நம்மை சமாதானப்படுத்த முயல்கிறது. காரியம் இவ்வாறாய் இருக்க, இன்றைய பெரும்பாலான சபைகளில் "இக்கபோத்" (தேவனுடைய மகிமை விலகிற்று!) என தேவன் எழுதிவிட்டது நம்மை ஆச்சரியப்பட வைத்திட அவசியமேயில்லை! ஆம், "தேவனுடைய மகிமையைத்" தொடுவதற்கு நாம் யாவரும் அச்சம் கொண்டிருக்க வேண்டும். நம் தேவன் "வைராக்கியம்" நிறைந்த தேவன், அவர் தன் மகிமையை குறைந்த சதவீதத்தில்கூட வேறொருவனுக்குத் தரமாட்டார்! (ஏசாயா 42:8). இங்குதான் "தெய்வ பயம்" நமக்கு அதிகமாய் வேண்டும்!!*

*இதனிமித்தமாய், "நாம் ஒருபோதும் சாட்சி சொல்லவே கூடாது" என வலியுறுத்துவதாக நீங்கள் எண்ணிவிடக் கூடாது. நம் ஜீவியத்தின் மூலமாகவும், நம் ஊழிய பிரயாசங்களின் மூலமாகவும் தேவன் செய்தருளிய மகத்துவங்களை "ஏற்ற நேரத்தில்" பிறருக்கு கூறுவது மிகவும் சரியானதே ஆகும்! ஆனால், நாமோ தேவனுடைய நேரத்திற்கு அடங்கியிருக்க கற்றுக்கொண்டு, அவருடைய நேரம் வரும்போது மாத்திரமே அவருடைய கிரியைகளைப் பேசி. . . உடனே நம்மை மறைத்துக்கொள்ளவும், நம்மையே முழுவதும் மறந்துபோகிறவர்களாயும் இருக்க வேண்டும்!*

*பவுல் ஒருசமயம் மூன்றாம் வானத்திற்கே எடுத்துக் கொள்ளப் பட்டும், அந்த சம்பவத்தை 14-வருடங்களாய் யாரிடமும் சொல்ல வில்லை. ஆனால், தன்னுடைய "அப்போஸ்தல அழைப்பை" நிரூபிக்க வேண்டிய தருணத்தில் மாத்திரமே அந்த சம்பவத்தைக் குறிப்பிட்டார். இருப்பினும், அதைக் குறித்த முழு விபரங்களையும் கூற மறுத்து விட்டார் (2 கொரிந்தியர் 12:2). சாட்சி சொல்லுவதிலும், அத்தனை "தெய்வ பயம்" பவுலிடம் இருந்தது!!*

***ஜெபம்*** *: எங்கள் பரம பிதாவே! சாட்சி என்ற பெயரில், எங்களின் சுயமதிப்பைத் தேடாதிருக்க கிருபை புரிந்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**மனுஷர் பார்வையில் சிறியோராய் இருப்போரே தேவனுடைய சம்பத்துக்கள்!**

*இவ்வுலகத்தில் சிலர், தாங்கள் மேலான பதவியைப் பெறுவதற்கு "யாருடைய தோளின் மீது ஏறினாலும் அல்லது யாரைத் தங்கள் காலின் கீழ் போட்டு மிதித்தாலும்" அதையெல்லாம் குறித்து கடுகளவுகூட அக்கறையற்றிருப்பார்கள். இன்று கிறிஸ்தவ - சுவிசேஷ ஊழிய உலகத்திலும் இவர்களைப்போலவே ஸ்தானத்தை இச்சித்து அதைப் பற்றிக்கொள்ள நாடுகிறவர்களை காண்பது ஆச்சரியமும், வேதனையுமாய் இருக்கிறது! இக்கேடான கிறிஸ்தவர்கள் தாங்கள் சூப்பரிண்டெண்ட் ஆவதற்கும், மூப்பர் ஆவதற்கும், பொக்கிஷதாரார் ஆவதற்கும், கமிட்டி செயலாளராய் மாறுவதற்கும், திட்டங்கள் வகுத்து, தனக்கு ஆதரவாக மெஜாரிட்டி ஆட்களைத் திரட்டி. . . தவியாய் தவிக்கிறார்கள்!!*

*இவை அனைத்தும் இயேசுவின் ஆவிக்கு முற்றிலும் விரோதமான வைகளேயாகும்! தேவனுடைய மகிமையைக் கண்ட எவனும், இந்த உலகத்தின் புகழையோ அல்லது சுவிசேஷ - ஊழிய உலகத்திலுள்ள புகழையோ அடைவதற்கு ஓடும் அருவருப்பான சுண்டெலி - ஓட்டப் பந்தயத்தில் ஒருபோதும் தன்னை சேர்த்துக்கொள்ளவே மாட்டான்!! அவனோ, தான் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பந்தயப் பொருளுக்காக (பரிசுக்காக!) இலக்கை நோக்கித் தொடர்வதிலேயே பேரார்வமும், சுறுசுறுப்பும் கொண்டவனாய் இருப்பான். இதைத் தவிர, பிறருக்கு தண்ணீர் வார்ப்பதற்கும், தரையைத் துடைப்பதற்கும் மாத்திரமே விருப்பம் கொண்டு... இந்த பூமியில் தன் தேவனை மகிமைப் படுத்துவதையே தன் பிரதான நோக்கமாய் கொண்டிருப்பான்!!*

*தேவனுடைய விலையேறப்பெற்ற சம்பத்துக்களாயிருப்பவர்கள் ...அனேகமாய், எளிய மக்கள் மத்தியிலும் நம் சபைகளில் அறியப்படாத ஜனங்களுமாய் இருக்கிறவர்கள் மத்தியிலுமே காணப்படுகிறார்கள்!!*

*யோவான் ஸ்நானகனைப்போலவே "கர்த்தருக்கு முன்பாக பெரியவனாயிருக்கும்" விருப்பத்தையே தேவன் நம் இருதயத்தில் அருளிச் செய்வாராக! (லூக்கா 1:15). தேவனுடைய கண்களுக்கு முன்பாக யோவான் ஸ்நானகன் எப்படி பெரியவனாய் காணப்பட்டார் என்பதற்கு ஓர் காரணம் உண்டு. அதை அவனே வெளிப்படுத்தியதின் படி, அவனுடைய வாழ்வின் தீராத வாஞ்சையாய் இருந்ததெல்லாம் "அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்!" (யோவான் 3:30) என்பதேயாகும்! ஆம், கிறிஸ்துவே எப்போதும் பிரதானமாய் இருக்கும்படி...... அவனோ தொடர்ச்சியாகப் பின்திரைக்குச் சென்று மங்கி மறைவதற்கே நாடினான்!!*

**ஜெபம்** : *எங்கள் பரம தந்தையே! கர்த்தருக்கு முன்பாக பெரியவனாய் இருக்கும் விருப்பமே எங்கள் முன் எப்போதும் இருந்து, இவ்வுலகிலோ தாழ்மையாய் ஜீவித்திட கிருபைதாரும், ஆமென்.*

**அக்கினிக்கு ஒப்புக்கொடுத்த பலிபோன்றதே இயேசுவின் சிலுவை!**

*தன்னைப் பின்பற்றியவர்களுக்கு இயேசு பறைசாற்றிய "சிலுவையை" நாம் மெய்யாகவே ஏற்றுக்கொண்டிருக்கிறோமோ? அப்படியானால், "நாம் மரிக்க வேண்டும்" என்ற செய்தியைத்தானே இந்த சிலுவை நமக்கு கற்பிக்கிறது! ஆம், கோதுமைமணி நிலத்தில் விழும்போது, அது பாதங்களுக்குக் கீழ் நசுக்கப்பட்டு... முடிவில், அதன் பளபளப்பான வெளித்தோல் கீறி உடைந்துவிடும்! இனியும் அந்த கோதுமைமணி அதற்குரிய சௌந்தரியமாய் இருப்பதில்லை!! இதைப் போலவே, தன் சிலுவையை எடுத்து இயேசுவின் பின்னே செல்லும் ஒரு விசுவாசியும் இந்த உலகத்திற்கு கவர்ச்சியாய் காணப்படுவதில்லை. . . இந்த உலகம் அவனை அலட்சியப்படுத்திவிடும்! ஒருவேளை இந்த 'சிலுவைக்கு முன்பு' அவனிடம் காணப்பட்ட கவர்ச்சி அநேகமாயிருக் கலாம். ஆனால், 'சிலுவைக்குப் பின்பு' அந்த சௌந்தரியம் இப்போது அவனிடம் இல்லை. தன் ஆண்டவரைப் போலவே இப்போது அவன் மனுஷர்களால் அலட்சியப்படுத்தப்பட்டு தள்ளப்பட்டுப்போவான்!!*

*பழைய ஏற்பாட்டு நாட்களில் பலிபீடத்தில் வைக்கப்பட்ட பலியை அக்கினி எரித்து சாம்பலாக்கியதைப் போலவே இப்போது 'கிறிஸ்துவின் சிலுவை' ஒரு மனிதனை மரணத்திற்கு கொண்டு வருகிறது!! தன் ஆண்டவருக்கு மெய்யான அர்ப்பணம் கொண்ட வாழ்க்கையின் பொருள் இதுதான், இதில் எந்த அளவும் மாற்றமில்லை. இவ்வாறு தனக்கு அர்ப்பணமாகத் தந்த யாதொருவன் ஜீவியத்தையும் தேவ அக்கினி பட்சித்து. . . இனியும் அந்த ஆத்துமா தனக்காகவோ அல்லது உலகத்திற்காகவோ வாழாமல் தேவனுக்காக மாத்திரமே வாழும்படி இந்த அக்கினி செய்துவிடும். கலாத்தியர் 6:14 கூறுகிறபடி, அவன் இந்த உலகத்திற்கு மரித்திருப்பான்! இந்த உலகமும் அவனுக்கு மரித்திருக்கும்!! ஆனால், இன்றைய கிறிஸ்தவ உலகம் ஓர் மேலோட்ட மான அர்ப்பணத்தை மாத்திரமே பேசுகிறபடியால், இந்த செய்தியை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. இருப்பினும் "ஒருவன் தன் சிலுவையை எடுக்கக் கடவன்" எனக் கூறிய இரட்சகரின் அழைப்பே மெய்யான அர்ப்பணமும் தேவனுக்குப் பிரீதியுமாயிருக்கிறது. பலிபீடத்தில்* **அக்கினி பட்சிக்காத** *எந்த அர்ப்பணமோ அல்லது பலியோ பழைய ஏற்பாட்டில் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படவேயில்லை!*

*அவருடைய ஆசீர்வாதங்களைப் பெறுவதற்காக நம்மை அவருக்கு கொடுத்திருக்க முடியும். . . ஆனால்,* **நாம் மரிப்பதற்காக** *இந்த சிலுவையின் வழிக்கு நம்மை கொடுத்திருக்கிறோமோ? இதுவே உத்தம கிறிஸ்தவம்!*

***ஜெபம்*** *: எங்கள் பரம பிதாவே! எங்களை முற்றிலும் தேவனுக்கு அக்கினிபலியாய் ஒப்புக்கொடுக்கும்படி ஆண்டவர் இயேசு காண்பித்த சிலுவையின் வழிக்கு எங்களை மனப்பூர்வமாக அர்ப்பணிக்கிறோம், ஆமென்.*

**ஒப்பற்ற சிலுவையின் ஜீவியம்!**

எவ்வாறு "மரணம்" ஒரு மனிதனை இந்த உலகத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு எடுத்துச் செல்கிறதோ அதுபோலவே, சிலுவையை தழுவிக்கொண்ட ஒரு விசுவாசியை "இந்த சிலுவை" கிறிஸ்துவின் ராஜ்ஜியத்திற்கு அவனை எடுத்துச் செல்கிறது (கொலோசெயர் 1:13).

கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தைக் கண்டவன், இந்த உலகத்தை இப்போது ஓர் புதிய வித்தியாசமான பார்வையில் காணத் தொடங்கு வான். பணம், உலகப்பொருட்கள், ஜனங்கள் ஆகிய யாவையும் சிலுவையின் வெளிச்சத்திலும், நித்தியத்தின் வெளிச்சத்திலும், கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தின் வெளிச்சத்திலும் இப்போது அவன் காணத் தொடங்குவான். இனியும் ஜனங்களை ஏழை-பணக்காரன் அல்லது பெரியவன்-சிறியவன் அல்லது சமுதாய ஏற்றத்தாழ்வு ஆகிய வித்தியாசத்தில் அவர்களைக் காணமாட்டான்! மாறாக, அவர்கள் யாவரையும் "ஆத்துமாக்களாகக்" கண்டு "அவர்களுக்காகவும் கிறிஸ்து மரித்தார்" என்பதை மாத்திரமே காண்பான் (2 கொரிந்தியர் 5:16).

இத்தகைய மனிதனுக்குப் பணமும், உலகப்பொருட்களும் முன்பிருந்த கவர்ச்சியின்படி இனியும் அவனுக்கு இருப்பதில்லை. நித்தியத்தின் பிரகாசமே அவனை இப்போது ஆட்கொண்டிருக்கும். இந்த உலகமும், அதில் உள்ளவைகளும் ஏற்கனவே தேவனால் ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டது என்பதையும் அவை அனைத்தும் ஒரு நாள் கடந்துபோய்விடும் என்பதையும், அவன் நன்கு அறிந்திருப்பான். ஆகவே அவன் இப்போது ஜீவிப்பதெல்லாம், தேவனுடைய சித்தம் மாத்திரமே செய்து பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைப்பதற்காகவே தான் ஜீவிக்கிறோம் என்பதையும் அவன் அறிந்திருப்பான் (1 யோவான் 2:17; 1 பேதுரு 4:1-3). இவ்வாறிருக்க இன்றுள்ள தேவனுடைய பிள்ளைகள், ஜனங்களையும் உலகத்தின் பொருட்களையும் ஓர் அவிசுவாசி காண்பதைப்போலவே "லௌகீக கண்களால்" இச்சித்து காண்பது மிகுந்த துயரமேயாகும். இதுபோன்ற ஒரு ஆத்துமா ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையின் 'மெய்யான அர்த்தத்தை' அறியவேயில்லை என திட்டமாய் கூறலாம்.

உங்கள் நிலையை இப்போது பரீட்சித்துப் பார்க்க உங்களுக்கு விருப்பம் உண்டா?

**ஜெபம் :** *அன்பின் தகப்பனே! எங்களை நித்திய மேன்மைக்குள் நடத்தும்படி நீர் காண்பித்த சிலுவையின் வழி சென்றிட, இவ்வுலகத்தை உம்மைப்போல் 'துச்சமாய்' கண்டிட கிருபைதாரும்! ஆமென்.*

**தோல்வியில் ஒருபோதும் துவண்டுவிட கூடாது!**

*நாம் பின்னிட்டுப் பார்ப்பதற்குத்தான் எவ்வளவாய் சோதிக்கப் படுகிறோம். கடந்த கால தோல்விகள் நம்மை வெகுவாய் சோர்வுறச் செய்து பின்தங்கிடச் செய்கிறதே! இதுபோன்ற பின்தங்கும் சமயங்களில், "இனிமேல் நீ தேவனுக்கு எந்த உபயோகமும் அற்றவன்" என பிசாசானவன் நம் செவிகளில் முணுமுணுப்பது நிச்சயம்! மத்தேயு 21:2,3 வசனங்களில் கூறப்பட்ட "ஒரு கழுதைகூட ஆண்டவருக்குத் தேவையாயிருந்தது" என்ற செய்தி எனக்கு எப்போதும் உற்சாகம் ஊட்டும் செய்தியாய் நமக்கு உள்ளது! மேசியாவின் ஓர் முக்கியமான நிகழ்ச்சியை நிறைவேற்றுவதற்கும், மற்றொரு சமயத்தில் ஒரு தேவ செய்தியை கூறுவதற்கும் (எண்ணாகமம் 22:28) ஓர் கழுதை நம் ஆண்டவருக்குத் தேவையாயிருந்தால் . . . நம் ஒவ்வொருவருக்கும் நிச்சயமாய் நம்பிக்கை உண்டு!! ரோமர் 15:4 கூறுகிறபடி, "தேவ வசனத்தில் முன்பு எழுதியிருக்கிறவைகள் எல்லாம் (பிலேயாம் கழுதை நிகழ்ச்சிகூட) நமக்கு ஆறுதல் செய்யும் போதனையாகவே எழுதியிருக்கிறது." உங்களையே நீங்கள் ஓர் மதிகெட்ட கழுதையாகவும், இதுவரை பதினாயிரம் தவறுகள் செய்தவர்களாயும் எண்ணியிருக்கலாம்... ஆகிலும், "நீங்கள்தான் ஆண்டவருக்குத் தேவை!" அவ்வாறு உங்களை அவர் தெரிந்துகொள்ளும்போது, உங்கள் மூலமாயும் ஆண்டவர் பேசுவார்!!*

*"நாளையைக் குறித்து கவலைப்படாதிருங்கள்" என மிகுந்த பரிவுடன் கூறும் நம் வேதப்புத்தகம் "பின்னாகத் திரும்பி கடந்தகால வாழ்க்கையினிமித்தம் சோர்ந்துவிடாதீர்கள்!" என்றும் மிகுந்த கவனத்துடன் நம்மை எச்சரிக்கிறது.*

*"நம் **நேற்றைய** தினங்களை மறந்து" அதற்கு முற்றுப்புள்ளி வைத்து, "**இன்றைய** தினத்தை" தைரியத்துடன் எதிர்நோக்கி, "**நாளைய** எதிர்காலத்திற்கோ" நம் ஆண்டவரையே சார்ந்து ஜீவிக்கக்கடவோம்!!*

*நாளைய தினத்தில் நீங்கள் தோல்வியடைந்தால், அந்த தோல்வி உங்ளை மனமுறிவுக்குள் அமிழ்த்தி விடாதபடி எச்சரிக்கை யாயிருங்கள். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஆண்டவரிடத்தில் சென்று உங்கள் தோல்விகளை அறிக்கை செய்து அவருடைய இரத்தத்தினால் 'மீண்டுமாய்' கழுவப்படுவது மாத்திரமே! அதன் பின்பு உங்கள் ஜீவிய பயணத்தில் 'மீண்டுமாய்' முன்னேறிச் செல்லுங்கள்! மறுபடியுமாய் தோல்வியடைந்தால்? நீங்கள் ஆண்டவரிடம் சென்ற அதே செயலை 'மீண்டுமாய்' தொடருங்கள்!! ஆம், எப்படியாகிலும் மனசோர்வில் மாத்திரம் தேங்கித் தங்கி விடாதீர்கள்.*

**ஜெபம்** : *எங்கள் பரம பிதாவே! நாங்கள் எத்தனை பெலவீனராயிருந்தாலும் நீர் எங்களை தெரிந்து கொண்டீரே! தோல்வியில் 'மனம் மடிந்துபோகாதபடி' ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேறிச் சென்றிட எங்களுக்கு கிருபைதாரும், ஆமென்.*

**நம் தேசத்தில் கர்த்தருடைய நாமம் மகிமைப்பட வேண்டும்!**

*கீழ்காணும் இரண்டு கேள்விக்குரிய பரீட்சையில், உங்கள் சொந்த பெயருக்கு நீங்கள் அக்கறை கொண்டிருக்கிறீர்களா? அல்லது தேவனுடைய நாமத்திற்கு (பெயருக்கு) அக்கறை கொண்டிருக் கிறீர்களா? என்பதை நீங்கள் கண்டுகொள்ள முடியும்.*

*1. உங்களைக் குறித்தோ அல்லது உங்கள் பிள்ளைகளைக் குறித்தோ அவதூறான செய்தியை யாரோ பரப்பிக் கொண்டிருக் கிறார்கள் என நீங்கள் கேள்விப்படும் நேரத்தில் உங்களுக்குள் தோன்றும் பிரதிபலிப்பு என்னவாக இருந்தது?*

*2. யாரோ சில கிறிஸ்தவ தலைவர்கள் பாவத்தில் வீழ்ந்து விட்டதாலும் அல்லது பணத்தை அநீதியாய் கையாடியதாலும் கர்த்தருடைய நாமத்திற்கு அவகீர்த்தி ஏற்பட்டுவிட்டது என நீங்கள் கேள்விப்பட்டபோது, உங்களுக்குள் தோன்றிய பிரதிபலிப்பு யாது?*

*இந்த இரண்டு கேள்விகளுக்கு நீங்கள் நேர்மையாகக் கூறும் பதில் மூலம், உங்கள் சொந்த பெயருக்கு எவ்வளவாய் நீங்கள் அக்கறை கொண்டிருக்கிறீர்கள் என்பதையும், கர்த்தருடைய பெயருக்கு எவ்வளவு 'சொற்பமாய்' நீங்கள் அக்கறை கொண்டிருந்தீர்கள் என்பதையும் நீங்கள் கண்டுகொள்ள முடியும்.*

*உங்கள் குடும்பத்தைப்பற்றிய அவதூறான கதைகளை யாரோ பரப்பிவிட்டதை நீங்கள் கேட்டதினிமித்தம் நீங்கள் எவ்வளவு ஆத்திரம் அடைந்தீர்கள்! அந்த ஆத்திரத்தின் பிரதிபலிப்பில் 10% வது கர்த்தருடைய நாமத்திற்கு ஏற்பட்ட தீமைக்கு நீங்கள் காட்டிய துண்டா? இங்குதான் நீங்கள் எவ்வளவாய் உங்களையே நேசிக்கிறீர்கள் என்பதையும், உங்கள் சொந்த பெயரில் எவ்வளவாய் அக்கறை கொண்டிருந்தீர்கள் என்பதையும் கண்டுகொள்ள முடியும்!*

*நம் இந்திய தேசத்தில் தேவனுக்கு இன்று அதிக பயனுடையவர் களாய் இருப்பவர்கள் சபைக்கு கிரமமாய் போகிறவர்கள் அல்ல! அல்லது அங்கு சென்று பிரசங்கிப்பவர்களும் அல்ல! மாறாக, தங்கள் இருதயத்தின் ஆழத்திலிருந்து "பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே உம் நாமம் எங்கள் இந்தியாவில் மகிமைப்படுவதாக" (மத்.6:9) என்ற பெருமூச்சோடு உண்மையாய் ஜெபிக்கிறவர்களும், அதற்காகவே வாழுகிறவர்களுமே தேவனுக்கு அதிக பயனுள்ளவர்களாய் இருக்கிறார்கள்.*

***ஜெபம்*** : *எங்கள் அன்பின் பிதாவே! கிறிஸ்தவர்களின் வீழ்ச்சியால், உம்முடைய பரிசுத்த நாமத்திற்கு ஏற்பட்ட அபகீர்த்தியை போக்கி உம் நாமம் எங்கள் மூலமாய் எங்கள் தேசத்தில் மகிமைப்பட கிருபை செய்தருளும், ஆமென்.*

**சர்வவல்லவரின் ஆளுகையில் நாம் இருப்பதே பாக்கியம்!**

வெளி.5:6 ஆம் வசனத்தில் "அப்பொழுது, இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக் கண்டேன்; அது ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாயிருந்தது; அதே கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம்." என வாசிக்கிறோம்

இந்த வசனத்தில் "ஏழு கொம்புகள்" இருப்பதாக வாசிக்கிறோம். ஏழு என்ற எண் பூரணத்தையும், கொம்புகள் என்பது வலிமையையும் குறிக்கிறது. அதாவது "சர்வ வல்லமை" (All Power) என்பதே இதன் பொருளாகும். வானத்தின் கீழும் பூமியின் மேலும் "சர்வ வல்லமையும்" எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என இயேசு கூறினார். மேலும், இங்கு காணும் "ஏழு கண்கள்" ஏழுவிதமான பரிசுத்த ஆவியானவரையே குறிக்கின்றது. முந்தைய வசனங்களில் அவர் "ஏழு அக்கினி தீபங்கள்" எனக் கூறப்பட்டார். இங்கேயோ அவர் "ஏழு கண்கள்" எனக் கூறப்படுகிறார். இந்த "ஏழு" என்ற எண்ணும் முழுமையைக் குறிக்கிறது. அதாவது, பூமியில் அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியானவர் "சர்வ அறிவும்" பொருந்தியவர் எனப் பொருளாகும். அவர் ஏன் 7 கண்களாக உலகத்தில் அனுப்பப்பட்டார்? இதற்கு 2 நாளாகமம் 16:9-ம் வசனம் நமக்கு விடையளிக்கிறது, "தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடு இருக்கிறவர்களுக்கு தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது." இவ்விதம் உலாவிக்கொண்டிருக்கும் கர்த்தருடைய கண்கள் சர்வஞானம் பொருந்திய ஏழு கண்களாகும்! வெளி.5:6-ம் வசனத்தோடு 2 நாளாகமம் 16:9-ம் வசனம் இசைவாக பொருந்துவது எவ்வளவு அழகாயிருக்கிறது. இனி எதிர்காலத்தில் வரப்போகும் எல்லா நிகழ்ச்சிகளையும் சர்வஞானம் பொருந்திய கண்கள் உற்றுப்பார்க்கிறது என்ற சத்தியம் 'பரலோகக் கண்ணோட்டத்தோடு' காண்பவர்களுக்குச் சொந்தமாகும்.

என்னுடைய இருதயம் உத்தமமாயும் அவருக்கே முழுமையும் சொந்தமாயும் இருக்குமென்றால் ஆங்கில மொழிபெயர்ப்பின்படி கர்த்தர் எனக்கு வல்லமையான உறுதுணையாய் நிற்பார் (Strongly support me). இந்தப் பரத்தின் தரிசனத்தை நீங்கள் பெற்றுவிட்டால் அது போதுமே! அப்படியானால், சாத்தானே நேருக்கேநேர் என்னை எதிர்த்தாலும் நான் கொஞ்சம்கூட அஞ்சிடமாட்டேன். ஆம், உங்கள் இருதயம் முழுமையும் கர்த்தருக்குத்தானா? அப்படியானால் 2 நாளாகமத்தில் சொல்லப்பட்ட வாக்குத்தத்தம் உங்களுக்குரியது என்பதை இன்று அறியுங்கள்!

**ஜெபம்:** *எங்கள் பரலோக பிதாவே! எங்கள் முழுமையும் உமக்காய் இருந்திடும்போது, உமது சர்வ வல்லமையின் ஆளுகையை எங்களுக்குத் தருகிறீரே! முழுஇருதயமும் அர்ப்பணித்திட கிருபைதாரும், ஆமென்.*

**நிபந்தனையற்ற தெய்வ அன்பு வேண்டும்!**

*இயேசு கூறுகையில், "உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால் உங்களுக்குப் பலன் என்ன?" எனக் கேட்டார் (மத்தேயு 5:46). சபையில் நம்மை நன்றாய் நேசிக்கின்ற சகோதர சகோதரிகளின்மீது அன்பு பாராட்டுகிறோம். அவர்களும் பதிலுக்கு நம்மை அன்பு கூருகிறார்கள். ஆனால், அவ்வித அன்புகூருதலுக்கு 46-ம் வசனத்தின்படி "நமக்குப் பலன் ஏதும் இல்லை" என்றே இயேசு அறிவிக்கிறார். ஏனென்றால் ஆயக்காரரும் இவ்வுலக அஞ்ஞான மக்களும் அப்படிச் செய்கிறார்களே என இயேசு கூறினார். எனவே நம்மை நேசிப்பவர்களை மாத்திரமே நாம் நேசித்தால் அஞ்ஞானிகளைக்காட்டிலும் நாம் ஒன்றும் மேலானவர்கள் அல்ல! அஞ்ஞானிகள் மாத்திரமல்ல தேவனற்றவர்களும், கம்யூனிசவாதி களும், தேவன் இல்லையென சொல்பவர்களும்கூட தங்களை நேசிப்பவர்களை ஒருவரையொருவர் தாங்களும் அன்புகூர்ந்து நேசிக்கிறார்கள். ஆனால் ஒருவர் நம்மை* **அன்புகூராவிட்டாலும்** *அவரை அன்புகூர்ந்தோம் என்றால் நாமே இயேசுகிறிஸ்துவின் மெய்யான சீஷர்களாயிருப்போம்!! இதன் அடிப்படையில் உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையை சோதித்தறிய கீழ்க்காணும் கேள்விகளை வைத்து உங்களையே நீங்கள் கேட்டுப்பாருங்கள் :1) என்னை வெறுத்தவர்களில் எத்தனைபேரை நான் அன்புகூர்ந்தேன்? 2)என்னைத் துன்புறுத்திய வர்களில் எத்தனை பேருக்காக நான் ஜெபித்தேன்? 3) எனக்குத் தீமை செய்தவர்களில் எத்தனை பேருக்கு நான் நன்மைசெய்தேன்?*

*பார்த்தீர்களா, மனுஷீக அன்பிற்கும், தெய்வீக அன்பிற்கும் ஏராளமான வித்தியாசங்கள் உள்ளன. மனுஷீக அன்பு தனக்கு நன்மை செய்தவர்களை எளிதாக அன்புகூர்ந்துவிடும். ஆனால், உங்களுக்கு ஒருவர் நன்மைசெய்யாதது மாத்திரமல்ல உங்களுக்குள்ளதைத் திருடிக்கொள்ளும்போதும். . . உங்கள் உரிமைகளையும், உங்கள் கௌரவங்களையும் பறித்துக் கொள்ளும்போதும் உங்கள் நிலை என்ன? இதுபோன்ற இடத்தில்தான் உங்களிடம் தெய்வீக அன்பு இருக்கிறதா? இல்லையா? என்பது சோதிக்கப்படுகிறது. இந்த இடத்தில்தான் உங்கள் நீதி பரிசேயர்களின் நீதியைக்காட்டிலும் மேலானதாய் இருக்கவேண்டும். அப்படி இல்லையென்றால், நீங்களோ அல்லது நானோ ஒருக்காலும் பரலோகராஜ்யத்திற்குள் பிரவேசித்திட முடியாது. இந்த உண்மையை இயேசு மிகத் தெளிவாகத் தன் சீஷர்களுக்கு எடுத்துரைத்தார்!*

***ஜெபம்*** *: எங்கள் பரம தந்தையே! மாறிவிடும் மனுஷீக அன்பு அல்ல, என்றென்றும் மாறாத தெய்வ அன்பால் ஒவ்வொருவரையும் நேசித்திட தயைபுரிந்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**தேவனுடைய மகிமை ஒன்றே நம் பிரதானம்!**

மத்தேயு 6-ம் அதிகாரத்தில், “மனுர்களின் புகழ்ச்சியைத் தேடுதல்” என்ற கொடிய சுபாவத்தை தீய மனநோக்கமாக இயேசு போதித்தார். வேறெந்த குறிப்பிட்ட குணாதிசயத்தைவிட இத்தீய சுபாவத்தை எச்சரிப்பதற்கு இயேசு 18 வசனங்களை உபயோகித்தார்! நாம் ஆவிக்குரிய சரியான செயல்களைச் செய்தாலுமே அவைகளைத் தவறான மனநோக்கத்தோடு செய்வதே இக்கொடிய சுபாவமாகும். இந்த 18 வசனங்களில், இயேசு குறிப்பாக மூன்று ஆவிக்குரிய செயல்களைக் குறிப்பிட்டார். 1) பிறருக்குக் கொடுத்து உதவுதல் (வசனம் 1-4). 2) ஜெபித்தல் (வசனம் 5-15). 3) உபவாசித்தல் (6-18) ஆகிய இம் மூன்று செயல்களும் ஆவிக்குரிய நல்ல செயல்களே ஆகும். இவைகளை இயேசு தன் வாழ்வில் கைக்கொண்டார். தன்னுடைய எல்லா சீஷர்களும் இவைகளைக் கைக்கொள்ளும்படியும் வலியுறுத்தினார். ஆம், நம் ஜீவியகாலமெல்லாம் இவைகளைத் தொடர்ந்து கைக்கொள்வது மிக மிக அவசியமேயாகும். ஆனால் இங்கு இயேசுவோ, இதுபோன்ற நல்ல செயல்களைத் தவறான மனநோக்கத்தோடு செய்வோமென்றால், நாம் கைக்கொண்ட நல்லசெயல்களும் கறைபட்டுவிடுமென எச்சரித்தார்!

பழைய ஏற்பாட்டில் “நம்முடைய மனநோக்கங்களைக் குறித்து” அதிகமாய் வலியுறுத்திக் கூறப்படவில்லை. ஏனெனில், பழைய ஏற்பாடு மனுஷனின் வெளியரங்கமான ஜீவியத்தைக் குறித்து மாத்திரமே வலியுறுத்தியது. நியாயப்பிரமாணம் இதுபோன்ற வெளியரங்கமான ஜீவியத்தின் குறைகளையே கண்டித்துப் போதித்தது. ஆனால் இப்போது புதிய ஏற்பாட்டிலோ நம்முடைய நீதி பரிசேயர்களின் நீதியைக் காட்டிலும் மேலான நீதியாக இருக்கவேண்டுமென இயேசு கூறினார் (மத்தேயு 5:20).

கொடுப்பது, ஜெபிப்பது, உபவாசிப்பது ஆகிய வெளியரங்கமான சிறந்த நீதிகளைப் பரிசேயர்கள், கைக்கொண்டார்கள். ஆனால் இவர்களின் இந்த எல்லா நல்ல செயல்களுக்குப் பின்பாகவும் சுயநலமான “மனுஷர்களின் புகழ்ச்சியைத் தேடுதல்” என்ற தீயமனநோக்கமே குடிகொண்டிருந்தது.

இப்போது நம்முடைய நீதி பரிசேயர்களின் நீதியைக் காட்டிலும் அதிகமாய் இருக்கவேண்டுமென்றால் நாம் கைக்கொள்ளும் நன்மையான எல்லா தேவநீதிகளும், தேவமகிமைக்காக மாத்திரமே செய்யப்படுவதாய் இருக்கவேண்டும்!

***ஜெபம்*** : எங்கள் அன்புள்ள தகப்பனே! எங்களின் செயலில் “மனுஷர் புகழ்ச்சியை” நாடும் தீய மனப்பான்மையை மாற்றி, சகலமும் தேவ மகிமைக்காகவே செய்திடும் கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.

**பாவிகளை நேசிக்கும் நல்ல இருதயம் வேண்டும்!**

பொதுவாய், பாவம் நிறைந்த ஜனங்கள் அதிக பரிசுத்தம் கொண்ட ஜனங்களோடு இருப்பதைக் காட்டிலும் குறைவான பரிசுத்தம் கொண்ட ஜனங்களோடு இருப்பதையே தங்களுக்கு சௌகரியமாய் கருதுவார்கள்! ஆகவே இயேசுவின் நாட்களில் இருந்த பாவிகள், பூரணரான இயேசுவோடு இருப்பதைக் காட்டிலும் பூரணமற்ற பரிசேயர்களோடு இருப்பதையே அதிக சௌகரியமாய் எண்ணி இருக்கவேண்டும். ஆனால், காரியம் அப்படி சம்பவிக்க வில்லையே! ஏனெனில், பரிசேயர்கள் அல்ல இயேசுவே "பாவிகளின் நண்பன்" என்ற புகழாரத்தைப் பெற்றார்!! இது எப்படி சம்பவித்தது? எப்படியெனில், பரிசேயர்கள் வெறும் எலும்புக்கூடுகளாய் மாத்திரமே இருந்தனர். எலும்புக்கூடு ஒரு மனுஷனை நோக்கி நடந்துவந்தால், அந்த மனுஷன் அலறியடித்து ஓடுவதைப்போலவே பாவிகளும் பரிசேயர்களைவிட்டு ஓடினர்!! ஆனால் அவர்களோ, இயேசுவைச் சூழ்ந்து கொண்டார்கள்!! ஏனெனில், இயேசு எவ்வளவுதான் பூரணப் **பரிசுத்தம்** நிறைந்தவராய் இருந்தாலும், அதைவிட வெளிப்படையாய் அவரிடத்தில் **மனதுருக்கமும்** பூரணமாய் நிறைந்து இருந்ததை அவர்கள் கண்டார்கள்!! (லூக்கா 6:36). இந்த உலகில் வாழும் பாவிகளான ஜனங்கள் கிறிஸ்துவிடம் வர முடியாமல் விரட்டப்படுவதற்கு, சுயநீதி கொண்ட கிறிஸ்தவர்களும், "உங்களைக் காட்டிலும் நாங்கள் பரிசுத்தவான்கள்" என்ற பரிசேய எண்ணம் கொண்ட சபைகளுமே காரணமாகும்.

அவர்களுக்குள் **நன்மை** வாசம் செய்திருக்கும் என்றால், அநேகம் பாவிகளை அவர்கள் கிறிஸ்துவண்டை ஈர்த்து இருப்பார்களே! நன்மையினால் நிறைந்திராமல், நீதியை மாத்திரம் பின்பற்றுவோரிடம், இழந்துபோன பாவிகளின் மீது உண்டாகும் மனதுருக்கம் ஒருபோதும் இருப்பதில்லை! இதனிமித்தமே பாவிகளைச் சந்திக்கும் சுவிசேஷ ஊழியத்திலும் அவர்களுக்கு நாட்டம் இருப்பதில்லை!!

பரிசுத்த வாழ்வு நிச்சயமாய் வேண்டும்! அதோடு சேர்த்து, மனதுருக்கமும் அன்பும் வேண்டும்! அதுவே மெய்யான திவ்வியமாகும்!!

***ஜெபம் :*** *இரக்கமுள்ள பிதாவே! எல்லா பாவிகளையும் மனதார நேசிக்கும் நற்குணம் தாரும்! அவர்களை நாடிச் சென்று சுவிசேஷம் கூறும் வாஞ்சையும் தாரும்!! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## உள்ளத்தில் உண்மை விரும்பும் ஆண்டவர்!

ஒருவன் ஒளிக்குள் பிரவேசிப்பதைக் குறித்து இயேசு கூறும்போது, "மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளையே விரும்புகிறார்கள். பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான். தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு ஒளியினிடத்தில் வராதிருக்கிறான். சத்தியத்தின்படி செய்கிறவனோ ஒளியினிடத்தில் வருகிறான்" (யோவான் 3:19-21) என இயேசு கூறினார். இங்கே உள்ள வேறுபாட்டைக் கவனியுங்கள். பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான் என்றுதான் இயேசு கூறினார். 'பொல்லாங்கு' என்ற வார்த்தைக்கு எதிர்ப்பதம் 'நன்மை' என்றே நாம் பொதுவாய் அறிந்திருக்கிறோம். எனவே இயேசு தொடர்ந்து கூறும்போது, "நன்மை செய்கிற எவனும் ஒளிக்குள் வருகிறான்" என கூறுவாரென்றே நாம் எதிர்பார்த்து எண்ணியிருப்போம்! ஆனால் இயேசுவோ அப்படிக் கூறவில்லை. மாறாக, "சத்தியத்தின்படி செய்கிறவனே" (Practices the truth) ஒளியினிடத்தில் வருகிறான், என்றுதான் இயேசு கூறினார்!

இங்கு கண்ட வேறுபாட்டைப் புரிந்து கொண்டீர்களா? ஆம், இயேசு நம்மிடம் முதலாவது எதிர்பார்ப்பது நன்மையை அல்ல! நேர்மையாக இருக்கும் உண்மையையே முதலாவதாய் எதிர்பார்க்கிறார்!! எனவே இவ்வசனத்தின் பொருள், "நேர்மையாக இல்லாதவனே பொல்லாங்கு செய்கிறவன். ஆனால், தான் பூரணமாயில்லாதிருந்தும் ஒளியினிடத்தில் வருகிறவன் எவனோ, அவனே, நேர்மையுள்ளவன்!" என்பதுதான். நாம் நன்மையினால் பூரணமான பின்புதான் ஒளியினிடத்தில் வரமுடியுமென்றால் நம்மில் ஒருவர்கூட ஒருக்காலும் ஒளியினிடத்தில் வரவே முடியாது! ஆனால் தேவனோ, நேர்மையான ஜனங்கள் யாவரையும் தன்னண்டை வரும்படி அழைக்கிறார். ஆனால் இவ்வாறு, அவரிடம் வந்த நேர்மையுள்ளம் கொண்டவர்கள்.... நாட்கள் செல்லச்செல்ல, கொஞ்சம் கொஞ்சமாய் நன்மையிலும் வளர்வார்கள்!!

நாம் நேர்மையை விரும்புகிறவர்களாயிருந்தால் மாத்திரமே, "எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்" என்ற ஜெபத்தை மெய்யாய் ஜெபித்திட முடியும். நீங்கள் குறைவுள்ளவர்களாய் இருக்கலாம். இருப்பினும் உங்கள் குறையோடுகூட வெளிச்சத்திற்குள் நிச்சயமாய்ப் பிரவேசித்திட முடியும்! இவ்வாறு யாரெல்லாம் நேர்மையுள்ளவர்களாய் தங்கள் பாவத்தை ஒத்துக்கொண்டு ஒளியினிடத்தில் வருகிறார்களோ அவர்களே 'சத்தியத்தின்படி' ஜீவிப்பவர்கள். இப்படிப்பட்டவர்களுடைய பாவம் நிச்சயமாய் கழுவப்பட்டுவிடும்!

***ஜெபம்*** : *எங்கள் பரம தகப்பனே! நேர்மையில் நடக்கும் "ஒளியுள்ள" வாழ்க்கையை எங்களுக்குத்தாரும்! ஒளியில் தென்படும் எங்கள் பாவங்கள் அனைத்தையும் நீர் சுத்திகரிப்பீரே, உமக்கே ஸ்தோத்திரம்! ஆமென்.*

## பிறரிடம் மன்னிப்பு கேட்கும் தாழ்மை வேண்டும்!

நாம் ஏன் ஓர் பரிசுத்தமுள்ள தேவனுக்கு முன்பாகப் பாவங்களை அறிக்கை செய்வதை எளிதாகவும், ஓர் பரிசுத்தமற்ற சகோதரனிடம் பாவங்களை அறிக்கை செய்வதை கஷ்டமாகவும் எடுத்துக் கொள்கிறோம்?(மத். 5:24). இது எப்படி சாத்தியமாகும்? அதற்கு ஒரே காரணம் யாதெனில், நம் அறைக்குச் சென்று தேவனிடம் அறிக்கை செய்வதாக எண்ணிக்கொள்ளுகிற நாம், உண்மையில் அவைகளை "நமக்கு நாமேதான்" அறிக்கை செய்து கொள்ளுகிறோம்! நாம் தேவனிடம் அறிக்கை செய்யவேயில்லை!! அதாவது, நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டோம் அவ்வளவுதான்! நீங்கள் உண்மையாகவே தேவனுக்கு முன்பாக உங்களைத் தாழ்த்தியிருக் கிறீர்களா என்பதற்கான பரீட்சை நீங்கள் தீங்கிழைத்த மனுஷரிடமும் சென்று மன்னிப்பு கேட்க விரும்பியிருக்கிறீர்களா? என்பதிலேயே அடங்கியுள்ளது!!

இந்திய கலாச்சாரத்தில் மனைவிகள் மாத்திரமே தங்கள் புருஷர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். புருஷர்களோ தங்கள் மனைவிகளிடத்தில் மன்னிப்பு கேட்க வேண்டியதில்லை என்ற தீமையே குடி கொண்டுள்ளது. ஏதோ, "ஆண் புருஷர்கள்" வானத்திலிருந்து குதித்தவர்கள் போல தோற்றத்தை உண்டாக்கி விட்டார்கள்! நான் மன்னிப்பு கேட்க வேண்டுமென்றால், அங்கே உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பேச்சுக்கே இடமில்லை! நீங்கள் உங்கள் அலுவலகத்தின் டைரக்டராகக்கூட இருக்கலாம். டைரக்டராகிய நீங்கள் உங்கள் அலுவலகத்தின் பியூனுக்குத் தீங்கிழைத்திருப்பீர் களென்றால் உங்களைத் தாழ்த்தி அப்பியூனிடம் சென்று,"நான் வருந்துகிறேன், இது என்னுடைய தவறுதான். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று கூறத்தான் வேண்டும்! இதற்கு குறைவானது எதுவும் உண்மைக் கிறிஸ்தவமாகாது!

இன்று அநேக சபைகளில் ஒருவருக்கொருவர் உள்ள உறவுகளில் 'விரிசல்' கொண்டிருக்கும் ஜனங்கள், தங்கள் பிரச்சனைகளை சுமுகமாய்த் தீர்த்துக் கொள்ளுவதற்கு ஒருவரையொருவர் அணுகுவதே இல்லை! இன்னொருவர் மீது கசப்பை வைத்துக் கொண்டு, அவர்களைச் சந்தித்து சரிசெய்திட இவர்கள் ஒருபோதும் செல்லமாட்டார்கள்!! இருப்பினும் இப்படிப்பட்டவர்கள் தங்களைக் கிறிஸ்தவர்கள் என வாய்கூசாமல் சொல்லிக்கொள்ளுகிறார்கள்! ஆம், இவர்கள் கிறிஸ்தவர்கள் அல்லவே அல்ல. இவ்வித ஜனங்கள், நாங்களும் தேவனுடைய ராஜ்யத்தில் வீற்றிருப்போம் எனக் கூறுவார்களென்றால், அது எந்த வஞ்சகத்திலும் கேடான வஞ்சகமாகும்!! நாமோ, மன்னிப்பு கேட்க தாழ்மைப்படக் கடவோம்!

**ஜெபம்** : எங்கள் பரம தந்தையே! மானிடர் யாராயிருந்தாலும், எங்களைத் தாழ்த்தி அவர்களிடம் உடனுக்குடன் ஒப்புரவாகிடும் ஜீவியம் வாழ கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.

**நம் பாவங்களை நேர்மையாய் அறிக்கை செய்திட அச்சம் தேவையில்லை!**

*நாம் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாய் நீதிமான் களாக்கப் பட்டிருக்கிறோம் என்றே வேதம் கூறுகிறது (ரோமர் 5:9). தேவன் நம்மை சுத்திகரிக்கும் வேளையில் நம்மை நீதிமான்களாயும் ஆக்கிவிடுகிறார். "நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம்" என்ற வார்த்தையின் பொருள் யாதெனில், "இதுவரை என் ஜீவியத்தில் நான் ஒருபோதும் பாவம் செய்யாதவனைப்போலவும், இப்போது நான் பூரணமான நீதியுள்ளவனைப்போலவும் இருக்கிறேன்" என்பதே யாகும். இது மகா அற்புதமல்லவா!*

*வரிசை வரிசையாக நம் பாவங்கள் ஓர் கரும்பலகையில் எழுதப்பட்டிருப்பதாகவே சித்தரிக்கலாம். இப்போது அந்த கரும்பலகையில் எழுதப்பட்டிருந்த எண்ணற்ற பாவக் குறிப்புகள் யாவும், ஓர் ஈரத்துணியினால் துடைத்து அழிக்கப்பட்டுவிட்டது! இப்போது அந்தக் கரும்பலகையில் நீங்கள் என்ன காண்கிறீர்கள்? ஒன்றுமில்லை!! அந்தப் பலகையில் இதுவரை எதுவுமே எழுதப்படாதது போலவே இப்போது தோற்றமளிக்கிறது. இவ்வாறாகத்தான் இயேசுவின் இரத்தமும் நம்மை முழுமையாகக் கழுவிச் சுத்திகரிக்கிறது. மேலும், "நான் அவர்கள் பாவங்களை இனி நினையாமலிருப்பேன்" (எபி.8:12) என்றும் தேவன் வாக்குரைக்கிறார்!! இவ்வாறு நான் உண்மையாகவே மன்னிக்கப்பட்டுவிட்டேன். இனியும் நான் மறுபடியும் மறுபடியும் என் பாவங்களைத் தேவனிடம் அறிக்கை செய்ய வேண்டியதில்லை என, என் இருதயத்தில் உணர்வது எத்தனை பெரிய இளைப்பாறுதலை நமக்குத் தருகிறது பார்த்தீர்களா!*

*"எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்" என கல் தெறித்தது போல் குறிப்பாக ஜெபிக்கும் ஜெபமே மேலான ஜெபமாகும்! ஆனால் இன்று அநேக ஜனங்கள், "ஆண்டவரே, நான் அநேக பாவங்கள் செய்திருக்கக்கூடும்..." என 'மேலோட்டமாகப்' 'பொதுவாக' ஜெபிக்கிறார்கள். அதாவது தாங்கள் செய்த பாவம் இன்னதென உறுதியாக அறியாததுபோல் ஜெபிக்கிறார்கள்! ஏனென்றால் உங்கள் ஜெபத்தில் "நீங்கள் பாவமே செய்யாதிருந்திருக்கக் கூடும்" என்ற தோற்றத்தையே உருவாக்கிவிட்டீர்கள்! நீங்கள் தேவனிடம் வரும்போது, "ஆண்டவரே, நான் பாவம் செய்துவிட்டேன். அந்த சகோதரனுக்கு விரோதமாக என் உள்ளத்தில் கசப்பு கொண்டேன். நான் அவனுக்குச் செய்த நன்மையின் நோக்கம் சுயநலமானதாகும்.... நான் இவைகளை என் சொந்த மகிமைக்காகவே செய்தேன்" என்றெல்லாம் குறிப்பாகச் சொல்லி ஜெபிப்பதுதான் உண்மையான ஜெபமாகும். நீங்கள் எப்போதும் தேவனிடம் யாதொன்றும் மறைக்காமல் நேர்மையாக ஜெபித்திட அச்சப்படாதீர்கள்!*

**ஜெபம்** : *எங்கள் பிதாவே! இயேசுவின் இரத்தம் எங்கள் பாவங்களை மன்னித்து "நீதிமான்களாய் மாற்றுகிறபடியால்" இனியும் எந்த பாவங்களையும் மறைக்காமல் அச்சமின்றி அறிக்கை செய்திட கிருபைதாரும், ஆமென்.*

**தன் அந்தரங்கத்தில் தூய்மையை நாடுபவனே ஆவிக்குரியவன்!**

*பரத்தின் மேலானவைகளில் கண்ணோக்கமாய் இருப்பவன், நிச்சயமாய் உள்ளான தன் அந்தரங்கங்களைக் காண்பதற்கும் நடத்தப்படுவான்! தேவனுடைய மகிமையைக் கண்ட ஏசாயா "உடனடியாகவே" நீசப்பாவியாகிய தன் அந்தரங்கத்தையும் கண்டுவிட்டான் (ஏசாயா 6:1-5). இதே போலவே யோபுவுக்கும், பேதுருவுக்கும், யோவானுக்கும் சம்பவித்தது! (யோபு 42:5,6 , லூக்கா 5:1, வெளிபடுத்தினவிசேஷம் 1:17). நாம் தேவனுடைய பிரசன்னத்தில் தொடர்ச்சியாக வாழ்ந்து வந்தால், நம் ஜீவியத்தில் கிறிஸ்துவைப்போல் அல்லாத ஏராளமான நீசத் தன்மைகளை நாம் கண்டுகொள்ளமுடியும்! இவ்வாறு, ஆவிக்குரிய மனிதன் தன் ஜீவியத்தில் மறைந்திருக்கும் பாவங்களைக் குறித்து தொடர்ச்சியான வெளிச்சத்தைப் பெற்றுக்கொண்டே இருப்பான்!*

*"பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள்" (சங்கீதம் 29:2) என்றே நாம் கட்டளையிடப் பட்டிருக்கிறோம். இந்த பரிசுத்தத்தின் அலங்காரமில்லாமல் அல்லது ஆடையில்லாமல் இருப்பது, ஆண்டவருக்கு முன்பாக "நிர்வாணமாய்" நிற்பதற்கு ஒப்பானதேயாகும்! ஆகவேதான், ஆவிக்குரிய மனிதன் தேவனுக்கு முன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் தன் மனச்சாட்சியை எப்போதும் சுத்த முள்ளதாக வைத்திருக்க நாடுவான் (அப்போஸ்தலர் 24:16). ஒரு வியாபாரி அதிக பணம் சம்பாதித்திட தன்னால் இயன்ற முயற்சிகளை செய்வதுபோல..... ஆராய்ச்சி செய்திடும் ஒரு விஞ்ஞானி புதிய கண்டுபிடிப்புகளுக்காக தன்னால் இயன்ற முயற்சிகளைச் செய்வதுபோல...... ஆவிக்குரிய மனிதனும், தன் மனச்சாட்சியை எப்போதும் சுத்தமுள்ளதாய் காத்துக்கொள்ள தன்னால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வான்!*

*ஒரு ஆவிக்குரிய மனிதன், மற்ற விசுவாசிகள் தங்கள் ஜீவியத்தில் ஒருபொருட்டாய் எண்ணாத பகுதிகளிலும் வெளிச்சம் பெற்றவனாய் தன்னை கழுவிக்கொண்டு, தொடர்ச்சியாக தன்னை நியாயந்தீர்த்து வாழ்ந்திடுவான்!! ஒரு ஆவிக்குரிய மனிதன், தான் தேவனுக்கு வலிமையுள்ளவனாக விளங்குவதற்குத் தடையாய் நிற்கும் அனேக காரியங்களுக்கு தன் உள்ளான ஜீவியத்தில் ஒவ்வொரு நாளும் மரித்திட வேண்டும் என்ற உண்மையை உணர்ந்தவனாக இருப்பான்!*

*ஆகவே அவனுடைய ஜீவியபாதை அனுதினமும் சிலுவை சுமக்கும் பாதையாய் மாறி "தன் சரீரத்தில் இயேசுவின் மரணத்தை எப்போதும் சுமந்து திரியும்" நிலைக்கு வந்துவிடுவான் (2 கொரி. 4:10).*

***ஜெபம்*** *: பரலோக பிதாவே! உம் மகிமையையும் உம் தூய்மையையும் நாங்கள் எவ்வளவு அறிகிறோமோ, அதே அளவில் எங்கள் அந்தரங்க ஜீவியத்தில் உள்ள அசுசிகளைக் களைந்து வாழ கிருபை செய்தருளும், ஆமென்.*

**ஆவிக்குரிய மனிதனின் மூன்று முக்கிய பண்புகள்!**

*ஒரு ஆவிக்குரிய மனிதன், "தேவன் ஒருவனை ஆசீர்வதித்திருப்பதின் ஒரே நோக்கம், அவன் பிறரை ஆசீர்வதிக்க வேண்டும் என்பதுதான்!" என்ற உண்மையை அறிந்திருப்பான். 1) தேவன் அவனுக்கு அதிகமாய் மன்னித்திருக்கிறபடியால், தனக்கு தீமைசெய்த அனைவரை யும் மகிழ்ச்சியுடன் உடனடியாக மன்னித்துவிடுவான்! 2) தேவன் அவனுக்கு மிகுந்த நல்லவராக இருந்தபடியால் அவனும் பிறருக்கு நல்லவனாகவே இருப்பான்! 3) அவன் தேவனிடம் இலவசமாய் பெற்றபடியால், மற்றவர்களுக்கும் தான் பெற்ற கிருபா நன்மைகளை இலவசமாய் கொடுப்பான்!*

*ஒரு ஆவிக்குரிய மனிதன் மற்றவரின் நலன் மீது மிகுந்த கரிசனை கொண்டிருப்பான்! இழந்தவர்கள் மீதும் துயர் நிறைந்த மானிடர் மீதும் அவன் எப்போதும் மனதுருக்கம் நிறைந்தவனாக இருப்பான்! நல்ல சமாரியன் உவமையில் காணும் லேவியனும், ஆசாரியனும் தேவை நிறைந்த ஒரு சகோதரனைப் புறக்கணித்துச் சென்றுவிட்டதுபோல், அவனால் முடிவதில்லை!! (லூக்கா 10:30-37).*

*வீழ்ச்சியடைந்த மனிதனை சாத்தானின் கட்டுகளிலிருந்து விடுதலை செய்து அவனுக்கு உதவிச் செய்யவும், அவனை ஆசீர்வதிக்கவும், அவனை தூக்கி நிலைநிறுத்தவும், தேவன் எப்போதும் கரிசனை கொண்டவராகவே இருக்கிறார். இதே போன்ற கரிசனையை ஆவிக்குரிய மனிதனும் பெற்றிருப்பான். ஒரு ஆவிக்குரிய மனிதன் தன் எஜமானனைப் போலவே "ஊழியம் கொள்ளாமல் ஊழியம் செய்திடவே" நாடுவான்! சாத்தானின் கட்டுகளிலிருந்து ஜனங்களை விடுதலையாக்கி, அவர்களுக்கு நன்மை செய்கிறவராகவே இயேசு சுற்றித்திரிந்தார் (அப்போஸ்தலர் 10:38). ஆவிக்குரிய மனிதனும் அவ்வாறாகவே நன்மை செய்கிறவனாகவே எப்போதும் திகழ்வான்!!*

*ஒரு ஆவிக்குரிய மனிதன், தான் பிறருக்குச் செய்திடும் ஊழியத்திற்காக அவர்களிடமிருந்து யாதொரு பணத்தையோ அல்லது கனத்தையோ தனக்கு ஆதாயமாக ஒருபோதும் தேடமாட்டான்! அவன் தேவனைப் போலவே, தன் ஜீவியத்தின் மூலமாகவும், ஊழியத்தின் மூலமாகவும் பிறரை ஆசீர்வதிப்பது ஒன்றையே நாடுவான். ஒருவரிடமிருந்தும் தனக்கென பரிசுப் பொருளையோ அல்லது காணிக்கையையோ அவன் எதிர்பார்த்திட மாட்டான். ஏனெனில் தன் ஒவ்வொரு தேவைக்கும், தேவனை மாத்திரமே அவன் நம்பியிருப்பான்!!*

***ஜெபம்*** *: அன்பின் பரலோக தந்தையே! ஆவிக்குரியவர் களாயிருந்து, பிறரை ஆசீர்வதிப்பதற்கும், பிறரிடம் கரிசனையாய் நடந்துகொள்ளவும், பிறரிடம் யாதொரு ஆதாயம் எதிர்பாராது நன்மை செய்யவும் கிருபைதாரும், ஆமென்.*

## நன்றி நிறைந்த உள்ளத்தில் துதி நிறைந்திருக்கும்!

நன்றியினால் நிறைந்த உள்ளமே, துதியினாலும் எப்போதும் நிறைந்திருக்க முடியும்! தேவன் தனக்கு செய்த ஒவ்வொரு செயலுக்கும் தங்கள் இருதயத்தில் நன்றியால் நிறைந்திருப்பவர்களுக்கு, தேவன் எண்ணற்ற தமது இரட்சிப்பை அருளி மகிழ்ந்திடுவார்! பத்து குஷ்டரோகிகள் ஆண்டவர் இயேசுவிடம் வந்து "ஆண்டவரே எங்களுக்கு இரங்கும்" என சத்தமிட்டபோது, அவர்கள் அனைவரையும் இயேசு சுகப்படுத்தினார் என நாம் யாவரும் அறிந்திருக்கிறோம் (லூக்கா 17: 12-14). இருப்பினும் அவர்கள் அனைவரும் "இரட்சிப்பை" கண்டடைந்தார்களா? இல்லை...... அந்த பத்து பேருக்கும் "இரட்சிப்பை" அருளவே இயேசு விரும்பினார். ஆனால், அவரிடம் திரும்பி வந்து நன்றி சொல்ல, அந்த ஒரு சமாரியன் மாத்திரமே வந்தான்! இன்றும் இயேசு மூலமாய் "சுகம்" அல்லது "நன்மை" பெற்றிட விரும்புபவர்கள் ஏராளம்! ஆனால், அவைகளை பெற்றபின்பு, "அவரை நேசித்து" அவரண்டை வருபவர்கள், இந்த சமாரியனைப் போல ஒருசிலரே இருக்கிறார்கள். ஆகவேதான், இந்த வெகுசிலரே அவர் தரும் "ஜீவனை" பெற்றுக் கொள்கிறார்கள்!! நன்றியால் நிறைந்து இயேசுவின் பாதத்தில் விழுந்து தொழுது கொண்ட அந்த சமாரியனிடம் "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" (வசனம் 16-19) என இயேசு கூறினார். அவர் தந்த "இரட்சிப்பை" அந்த 9-குஷ்டரோகிகள் பெறாமலே போய்விட்டார்கள்! வெறும் சுகத்தை மாத்திரமல்ல...... முற்றும் முடிய தன்னை காத்து இரட்சிக்கும் இரட்சகரை அந்த சமாரியனே பெற்றுச் சென்றான்!

எபேசியர் 5:20 கூறும் "எல்லாவற்றிற்காகவும்" தேவனை ஸ்தோத்தரிக்கும் ஜீவியம் "ஆவியினால் எப்போதும் நிறைந்து" வாழ்பவனுக்கே (வசனம் 18) சாத்தியமாகிட முடியும்! ஆவியில் நிறைந்து வாழ்பவர்களுக்கு மாத்திரமே "எல்லாவற்றிற்காகவும்" ஸ்தோத்திரம் செய்திடும் வாழ்க்கையை இயேசு கற்றுத் தருகிறார். ஆவியினால் நிறைந்த "புதிய திருமண தம்பதிகளுக்கு" தேவன் தன்னுடைய விசேஷ பரிசாக அவர்களின் "திருமண முதல் மூன்று ஆண்டுகள் பொருளாதார நெருக்கடியை" வழங்கினால் அது அவர்களுக்கு மிக்க நலமாயிருக்கும் என்றே நான் கருதுகிறேன்! தங்கள் இல்லாமையிலும் தேவனை முறுமுறுக்காமல், தங்கள் கணவன் அல்லது மனைவியை முறுமுறுக்காமல்...... அந்த பொருளாதார நெருக்கடியிலும் மனரம்மியமாய் எப்போதும் துதி செலுத்தும் வாழ்க்கையை, அந்த குறைவான மூன்று ஆண்டுகளில் கற்றுக் கொண்டதே இவர்கள் தேவனிடமிருந்து பெற்ற ஒப்பற்ற பரிசாகும்!!

**ஜெபம்** : *எங்கள் பரம தகப்பனே! உம்மிடம் பெற்ற ஒவ்வொரு நன்மைக்கும் நன்றியுள்ளவர்களாய் இருந்தால்மாத்திரமே, 'எல்லாவற்றிற்காகவும்' துதி செலுத்த முடியும் என கற்றுத்தந்தமைக்கு நன்றி, ஆமென்.*

**நம்மை நாள்தோறும் சோதித்துவாழ வேண்டும்!**

*தேவனே, என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்து கொள்ளும்! என்னைச் சோதித்து, என் சிந்தைகளை அறிந்து கொள்ளும்! வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியில் என்னை நடத்தும்" என தாவீது தேவனிடம் ஜெபித்த "ஆராய்ந்து பார்க்கும் வாழ்க்கை" நம் ஒவ்வொருவருக்கும் நிச்சயமாய் இருந்திட வேண்டிய வாழ்க்கையாகும் (சங்கீதம் 139:23,24). ஒவ்வொரு நாளிலும், ஒவ்வொரு வாரத்திலும், ஒவ்வொரு மாதத்திலும், ஒவ்வொரு வருடத்திலும்...... அதன் முடிவில் இவ்வாறு ஜெபித்து நம்மை தேவனுக்கு முன்பாக சோதித்தறிந்து வாழ்வது இப்பூமியில் நமக்கு கிட்டிய பாக்கியமாகும்!*

*சாக்ரடீஸ் என்ற தத்துவ ஞானி ஒரு சமயம் கூறும்போது, "சோதித்தறியா வாழ்வு வாழ்பவன், சீரழிந்த வாழ்க்கை வாழ்பவன்!" என மிக ஆணித்தரமாய் கூறினார். சாதாரண இவ்வுலக வாழ்க்கைக்கே அந்த ஞானி இவ்வாறு கூறவேண்டியது அவசியமென்றால், நித்திய வாழ்விற்கென "உங்களை ஆராய்ந்து சோதித்தறியுங்கள்" என பரிசுத் தாவியானவர் நம்மிடம் கூறுவதற்கு நாம் செவிமடுக்க வேண்டியது எத்தனை அவசியமாயிருக்கிறது! ஆம், நாள்தோறும் நம்மை தேவனுக்கு முன்பாக நிச்சமாய் சோதித்தறிந்து வாழ்ந்திட வேண்டும்!!*

*பாவம் என்பது, எந்த ரூபத்திலும் பாவம்தான். இது "எனக்குரிய" பெலஹீனம்! என யாதொன்றையும் புறக்கணித்திட இயலாது...... வேண்டுமென்றால், அவைகள் உங்கள் "இரகசியப் பாவம்" என கூறுவதே பொருத்தமாகும்!! இதுபோன்றவர்களை பவுல் அப்போஸ்தலன் மிக கண்டிப்பான குரலில் "(இது எனக்குரிய பெலஹீனம் என) நீங்கள் மேன்மை பாராட்டுகிறது நல்லதல்ல! கொஞ்சம் புளித்தமா, பிசைந்தமா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா? ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிற படியே, புதிதாய் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப் போடுங்கள்...... " என கூறினார் (2கொரிந்தியர் 5:6,7).*

*தன்னை உத்தம கிறிஸ்தவனாக அறிக்கை செய்து வாழும் யாராயிருந்தாலும் "கிறிஸ்துவைப்போல் அல்லாத சுபாவங்களை" தங்கள் முதுகுக்குப் பின்னால் பதுக்கிவைத்து ஒருக்காலும் வாழ்ந்திட இயலாது!*

***ஜெபம் :*** *அன்பின் தந்தையே! பாவம் எந்த ரூபத்தில் எங்களிடம் தங்கினாலும், அதை உம் வெளிச்சத்தில் சோதித்து அகற்றிவிடும் கிருபையை நாள்தோறும் எங்களுக்குத்தாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**தேவனை சார்ந்துகொள்பவர்களே பரிசுத்தஆவியை தொடர்ந்து நாடுவர்!**

*இன்று வளர்ந்து வரும் விஞ்ஞான முன்னேற்றத்தில் பரிசுத்தாவியை முழுமையாய் சார்ந்து கொள்வதற்குப் பதிலாக எலக்ட்ரானிக் சாதனங்களையும் ஒளி ஒலி நவீன இயந்திரங்களையும் மிக எளிதில் நாம் சார்ந்துகொள்ள முடியும்!!(அப்.1:8) சுவிசேஷத்தின் பிரபல்யத்திற்காக எங்கெல்லாம் நாம் விஞ்ஞான நவீனங்களைப் பயன்படுத்த முடியுமோ அங்கெல்லாம் நாம் பயன்படுத்த வேண்டும்!! இருப்பினும், நம்மையும் அறியாமலே கொஞ்சம் கொஞ்சமாய் பரிசுத்தாவியை விட்டு விலகி, இந்த விஞ்ஞான சாதனங்களை நாம் சார்ந்துகொள்ள முடியும்! ஆகவே இவ்விஷயத்தில் நாம் மிகுந்த கவனமாய் இருக்க வேண்டும்.*

*நாம் எதை சார்ந்து கொண்டிருக்கிறோம்? என்ற நம் உண்மை நிலையை நாம் கண்டுபிடிப்பது மிக எளிதேயாகும். நாம் சார்ந்து கொண்டிருப்பது மெய்யாகவே பரிசுத்தாவியாயிருந்தால் "அவராலே யன்றி என்னால் எதுவும் இயலாது" என அறிக்கை செய்து, திரும்பத் திரும்ப பரிசுத்தாவியை தேவனிடத்தில் வேண்டி ஜெபிப்பதற்கு நாம் வந்து விடுவோம்! அவ்வாறு நாம் செய்கிறோமா? நம் மனசாட்சியை இலகுவாக்குவதற்காக நாம் செய்திடும் 'வழக்கமான' சடங்காச்சார ஜெபத்தை இங்கு நாம் குறிப்பிடவில்லை. ஜெபம் என நாம் இங்கு குறிப்பிடுவது, நம்மையே முழுவதுமாய் தேவனிடத்தில் சரணடைந்து அவருடைய முகத்தை வாஞ்சையோடு தேடுவதேயாகும். இன்னும் தேவைப்பட்டால் உபவாசத்தோடே அவரது முகத்தைத் தேடி "நம்மை அழைத்த ஊழியத்திற்குத் தேவையான வல்லமையோடு பரிசுத்தாவி யானவர் நம்மில் தங்கியிருக்கிறார்" என்ற நிச்சயத்தைப் பெற்றுக் கொள்ளும்வரை தேடவேண்டும். இவ்வாறு அவருடைய வல்லமையை நாம் நாடும் செயல், ஏதோ ஒரேநாளில் பெற்றுவிடும் மொத்த அனுபவம் அல்ல. . . ஆம்,* **ஒவ்வொருநாளும்** *நாம் இவ்வாறாகத் தேட வேண்டும்!!*

*நாம் பணத்தை சார்ந்திருக்கிறோமோ? அல்லது நாம் பரிசுத்தாவியின் அபிஷேகத்தை சார்ந்திருக்கிறோமா? என்பதை சோதித்துப் பார்க்க 'ஒரு கேள்வியை' உங்களுக்கு நீங்களே கேட்டுப் பாருங்கள் : உங்களை பொருளாதார ரீதியில் தங்குபவர்கள் திடீரென அந்த ஆதரவை நிறுத்தி விட்டால் நீங்கள் அடைந்திடும் துயரத்திற்கு சமமாகவே, தேவன் உங்களுக்குத் தந்த அபிஷேகத்தை அகற்றி விட்டால் "அதே துயரத்தை" அடைவீர்களா? இவ்வித துயரம் கொண்டவர்களே நாள்தோறும் பரிசுத்த ஆவியினால் நிரம்பிட ஜாக்கிரதை கொண்டிருப்பார்கள்!*

***ஜெபம்** : எங்கள் பரலோக தகப்பனே! மாயையான ஏதுகரத்தில் எங்கள் மனம் சாய்ந்துவிடாமல் உம்மையும், உம் தூய ஆவியையுமே என்றென்றும் சார்ந்து வாழ கிருபை தாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்த நல்ல இருதயம் வேண்டும்!

"எலியாவின் சால்வையைக்கொண்டு" யோர்தான் நதியின் தண்ணீரை எலிசா அடித்தான் என நாம் யாவரும் அறிந்திருக்கிறோம்! எலியாவை பரத்திற்குச் சென்ற கிறிஸ்துவுக்கும், இந்த எலிசாவை பூமியில் கிறிஸ்துவின் ஊழியத்தை தொடர்ந்து செய்வதற்கு வைக்கப்பட்ட சபைக்கும் ஒப்பிட்டு நாம் காணமுடியுமென்றால். . . எலியா விட்டுச்சென்ற சால்வையை, இயேசு தன் சபைக்கு ஒப்புவித்த "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்கு" நாம் ஒப்பிட முடியும்! யோர்தான் நதியின் ஊடாய் வழி உண்டாக்குவதற்கு எலிசா சால்வையை உபயோகித்ததைப் போலவே, நம் ஜீவியப்பாதையில் தோன்றும் இடையூறுகளை அகற்றுவதற்கு தன் நாமத்தை உபயோகிப்பதற்குரிய அதிகாரத்தை இயேசு நமக்குத் தந்திருக்கிறார்!

ஆகிலும், மந்திர பாஷையைப்போல் இயேசுவின் நாமத்தைத் திரும்பத் திரும்ப உச்சரிப்பதில் எந்த பிரயோஜனமும் இல்லை! அவ்வாறு செய்தவர்கள் ஜீவியத்தில் எந்த வல்லமையும் வெளிப்பட்டதில்லை! அவர்கள் ஜீவியத்திற்குத் தடையாய் வந்த மலைகளைப் பெயர்த்திடவுமில்லை!!

ஒருசமயம், எலிசா கூறியபடி கேயாசி எழுந்து வந்து எலிசாவின் கோலை எடுத்து அதை மரித்த பிள்ளையின்மீது போட்டான். அவ்வேளையில் இந்த கேயாசி மிகுந்த அதிகாரத்தோடு "ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன், யாக்கோபின் தேவனுடைய நாமத்தில் மரணத்தினின்று நீ எழுந்து நட!" என உரத்த சத்தமாய் கூறியிருந்திருப்பான். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை!

எனவே ஒரு மனுஷன் பேசுகின்ற வார்த்தையை மாத்திரம் தேவன் பார்ப்பதில்லை! **அவனுடைய இருதயத்தையே** அவர் பார்க்கிறார். வார்த்தைகளை உபயோகிக்கும் மனுஷன் எப்படிப்பட்டவன் என்பதைப் பொறுத்தே அவனுடைய வார்த்தைக்கு வல்லமையும் இருக்கிறது!

கேயாசியின் இருதயம் தேவனுடைய மகிமையில் நிலை கொண்டிராமல் இவ்வுலகத்தின் மகிமையிலும், தன் சுய ஆதாயத்திலும் நிலைகொண்டிருந்ததை தேவன் நன்கு அறிந்திருந்தார்!!

எலிசாவின் இருதயமோ அப்படிப்பட்டதல்ல! அவனோ, தேவனுடைய மகிமை ஒன்றையே நாடினான்! ஆகவேதான் தேவன் தனது அதிகாரத்தை அவனுக்கு ஒப்புவிக்க முடிந்தது. அதனிமித்தமே, எலிசா ஜெபித்தவுடன், மரித்த பிள்ளை உடனடியாக உயிர் பெற்று எழுந்தது! யோர்தான் நதியை தன் சால்வையினால் அடித்தவுடன் இரண்டாய் பிளந்தது!!

**ஜெபம் :** எங்கள் பரம பிதாவே! "இயேசுவின் நாமத்தில்" வல்லமை உண்டு என்பதை எங்கள் நல்ல இருதயமான ஜீவியத்தில் நிரூபித்துகாட்டிட கிருபை தந்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.

### தேவனுக்கேற்ற நல்ல மனநோக்கம் வேண்டும்!

*நாம் வேதாகமத்தை எதற்காக வாசிக்கிறோம்? "அதன் மூலம் நமக்கு என்ன ஆசீர்வாதம் கிட்டும்?" என்ற ஒரே மனநோக்கமே திரளான கிறிஸ்தவர்களிடம் காணப்படுகிறது (எபி.4:12). இன்னும் சிலரிடம், தாங்கள் ஒரு 'வேதபண்டிதனாக வேண்டும்' என்ற வேட்கையும் அவர்கள் மன நோக்கத்தில் குந்தி நிற்கிறது! மிக சொற்பமானவர்களே, வேத வாக்கியத்தில் தேவனுடைய சித்தத்தை அறிந்து, பின்பு அதை நிறைவேற்றி தங்கள் ஜீவியத்தில் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு வேதவசனத்தை வாசிக்கிறார்கள்!!*

*நாம் எதற்காக ஜெபிக்கிறோம்? அதிகபட்சத்தில், "நமக்கென விசேஷித்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும்படி" ஜெபிக்கிறோம்! தேசத்தில் கர்த்தருடைய ஊழியம் செழித்து அவருடைய நாமம் மகிமைப்பட வேண்டும் என்ற ஏக்கத்தோடு ஜெபிக்கும் விசுவாசிகள் மிக சொற்பமே இருக்கிறார்கள். நாம் உபவாசித்துக்கூட ஜெபிக்கக்கூடும்!...*

*ஆனால்,* **என்ன நோக்கத்திற்காக** *நாம் உபவாசிக்கிறோம் என என்றைக்காவது நம் நோக்கத்தை நாம் ஆராய்ந்ததுண்டா?*

*அவ்வாறு நம்மை நிதானித்திருந்தால் "நாம் விரும்பியவைகளைப்" பெற வேண்டும் என்ற நோக்கமே நமக்குள் பிரதானமாய் இருந்ததை நாம் கண்டுபிடித்திருக்க முடியும். ஒருவேளை நம்முடைய விருப்பம் "நான் பரிசுத்தாவியினால் நிரப்பப்பட வேண்டும்" என்ற ஆவிக்குரிய விருப்பமாகக்கூட இருக்கலாம். ஆனால் 'அந்த' விருப்பத்தின் மன நோக்கம்கூட "நான் கர்த்தரால் வல்லமையாய் உபயோகிக்கப்பட வேண்டும்" என்ற சுய-நல நோக்கமே அல்லாமல்... தேவன் யாரைக் கொண்டாகிலும் தம்முடைய ஊழியத்தை செழித்திடச் செய்ய வேண்டும் என்ற பரந்த நோக்கமாயில்லை!! நாம் நாடுவது நல்லதாகவே இருந்தாலும் அதில் காணும் சுய-நலம், சுயநலமேயாகும்!!*

*நாம் எதற்காகப் பாடுகிறோம்? பாடல் வரம் பெற்ற அநேகர் "தனிப் பாடல்" (SOLOS) பாடுவதுண்டு. ஆனால் இவர்களில் எத்தனை பேர் நேர்மை உள்ளத்தோடு "நான் எனக்கென்று யாதொரு மகிமையையும் தேடாமல் ஆண்டவருடைய மகிமையை மாத்திரமே தேடினேன்!" எனக் கூறமுடியும்? நம் மனநோக்கங்கள் செம்மையாய் சீர்திருந்த மனம் திரும்புவோமாக!*

**ஜெபம்** : *எங்கள் பரலோக தந்தையே! எங்கள் நல்ல ஆவிக்குரிய செயலிலும் சுய-நல மனநோக்கம் மண்டியுள்ளதே.... தயவாய் தேவனுக்கேற்ற மனநோக்கம் எம்மில் தந்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**அன்பின்பெருக்கினால் கர்த்தரை சேவித்திடக்கடவோம்!**

*ஏராளமான தேவனுடைய பிள்ளைகள் ஓர் வறண்ட அனுசாரமாகவே தேவனை சேவிப்பது துயரமானதேயாகும். ஆம், நியமனம் செய்யப்பட்ட மார்க்க சடங்குகளையெல்லாம் உண்மையாய் இவன் நிறைவேற்றினான்! ஓர் சுருக்கமான காலை-மாலை தியானம் வைத்திருப்பான்! அதைத் தொடர்ந்து சில ஜனங்களின் பெயர்களை கிளிப்பிள்ளையைப்போல் தேவனிடத்தில் ஒப்பித்து அவர்கள் தேவைக்காக விண்ணப்பம் செய்வான்! இதோடு சேர்த்து, வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு, சிலசமயங்களில் மூன்று கூட்டங்களுக்குகூட செல்வான்! இவை அனைத்தையும் செய்துவிட்டு, போதுமான அளவு தேவனைப் பிரியப்படுத்திவிட்டதாகவே நம்பியிருப்பான்! இதனி மித்தமாய் இனிமேல், தனக்கோ அல்லது தன் குடும்பத்திற்கோ ஒரு ஆபத்தும் ஏற்படக்கூடாது! தன் எல்லாப் பிள்ளைகளும் பரீட்சையில் பாஸ் ஆகியிருக்க வேண்டும்! தன் உத்தியோகத்திற்குரிய பதவி உயர்வு டக்...... டக்கென்று கிடைக்க வேண்டும்! என்றெல்லாம் எதிர்பார்த்தும் நம்பியிருக்கிறான்!! இதைவிட மேலாய், சுவிசேஷ ஊழியத்திற்கும் தான் ஏதாவது செய்துவிட்டால் அதனிமித்தமும் 'இறுமாந்து' நம்பிக்கை கொண்டிருப்பான்!! இந்த எதிர்பார்ப்புக்கெல்லாம் மாறாக "ஏதாகிலும் நடந்துவிட்டால்" உடனே பொங்கும் குறைசொல்லை தேவனிடத்தில் கொட்டுவான். . . அதற்கு காரணமாயிருந்த மனுஷர்களிடத்திலும் கொட்டுவான்!!*

*தேவனுக்கென்று யாதொன்றும் செய்யாமல் இருப்பதைவிட, அவருக்கு பயந்தாகிலும் ஊழியம் செய்வது கொஞ்சம் பரவாயில்லை தான்! ஆகிலும், இதைவிட மேலான. . . அன்பின் உன்னத வழி ஒன்று இருக்கிறதே!! (1 கொரிந்தியர் 12:31, 13:1). கர்த்தர் நம்மை தண்டித்து விடுவாரோ என அவருக்குப் பயந்து நமது மார்க்க செயல்பாடுகளை நிறைவேற்றிட தேவன் ஒருபோதும் விரும்புவதேயில்லை. தன் கணவனை அன்புகூர்ந்து அவனை சேவித்திடும் மனைவியைப் போலவே, நாமும் கர்த்தரை சேவித்திட தேவன் விரும்புகிறார்!*

***ஜெபம்*** *: எங்கள் பரம தகப்பனே! உம்மையும் உம் வழிகளையும் "உம்மை அன்புகூர்ந்து" பின்பற்றுவதே மகிழ்ச்சியான கிறிஸ்தவ ஜீவியம் என உணர்த்தியமைக்கு நன்றி! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**நாள்தோறும் இயேசுவின் பாதம் அமர்ந்து அவர்குரல் கேட்கவேண்டும்!**

*ஒருவருடைய பாதத்தருகே அமர்வது தாழ்மையை சித்தரிப்பதாயிருக்கிறது. மரியாள் ஒரு நாற்காலியில் இயேசுவுக்கு சமமாய் உட்காராமல் ஓர் தாழ்ந்த ஸ்தானத்தில் அமர்ந்திருந்தாள். பெருமை கொண்ட ஒரு மனிதனிடம் தேவன் ஒரு போதும் பேசுவதில்லை. ஆனால், தனக்கு முன்பாக ஒரு பாலகனைப்போல் தாழ்மை கொண்டிருக்கும் ஆத்துமாவிடம் பேசுவதற்கே எப்போதும் ஆயத்த முள்ளவராகவே இருக்கிறார்! (மத்.11:25).அமர்ந்திருக்க கற்றுக்கொண்டவர்கள், அடங்கியுமிருப்பார்கள். இதுவே தன் எஜமானனுக்கு முன்பாக ஒரு சீஷன் கொண்டிருக்கும் மனநிலையாகும். நாம் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதன் மூலமாகவே அடங்கியிருக்கும் சுபாவம் வெளிப்படுகிறது! நம்முடைய ஆர்வத்தை பூர்த்தி செய்வதற்கோ அல்லது சில அறிவுபூர்வமான தகவல்களை நமக்குத் தருவதற்கோ தேவன் தன் வார்த்தையின் மூலமாய் நம்மிடத்தில் பேசுவதில்லை. நாம் கீழ்ப்படிய வேண்டுமென்றே நம்மோடு அவர் பேசுகின்றார். நமக்கு "தேவனுடைய சித்தத்தை செய்திட வேண்டும்" என்ற மனதிருந்தால் மாத்திரமே, அந்த அவருடைய சித்தத்தை அறிந்துகொள்ளவும் முடியும் என இயேசு யோவான் 7:17-ல் தெளிவுபடக் கூறினார்.*

*வேதவசனத்தின் மூலமாய் தங்களோடு தேவன் எதைப் பேசிட விரும்புகிறார் என அறிந்திடும் ஆர்வமே இல்லாமல், இன்றைய திரளான கிறிஸ்தவர்கள் வேதாகமத்தை வருடக்கணக்கில் வாசித்துக் கொண்டே இருக்கிறார்கள்! வேதத்தை வாசிப்பதில் ஒரு திருப்தியடைந்தால் அது அவர்களுக்குப் போதும்!! வேதம் வாசித்திடும் ஒவ்வொருநாளும் ஆண்டவருடைய சத்தத்தை நீங்கள் கேட்கிறீர்களா? அப்படியில்லை என்றால் அதற்கு என்ன காரணம்? தன்னை கவனித்துக் கேட்பவர்களுக்கோ ஆண்டவர் நிச்சயமாய் பேசுகிறார்! அவ்வாறு இருக்க, உங்கள் ஆவியின் செவிகளை எது அடைத்து வைத்திருக்கிறது? அவருக்கு முன்பாக அமர்ந்திருக்கத் தவறியதினிமித்தமா?. . . தாழ்மையுள்ள ஆவி இல்லாததனிமித்தமா?. . . அவர் ஏற்கனவே உங்களிடத்தில் பேசியவைகளுக்கு நீங்கள் கீழ்ப்படியாதிருந்த குற்றத்தினிமித்தமா?. . . எதுவாயிருந்தாலும், அவை அனைத்திற்கும் உடனடியாகவும், நிரந்தரமாகவும் பரிகாரம் ஏற்படவே தேவன் விரும்புகிறார்! தேவனுக்கு முன்பாக இந்த பரிகாரத்தை நீங்கள் சரிசெய்த பின்பு, சாமுவேலின் ஜெபமாகிய "கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன்!" என்ற ஜெபத்தை நீங்களும் ஏறெடுங்கள்! பிறகு, உங்கள் வேதாகமத்தைத் திருப்பி ஆண்டவருடைய முகத்தை ஆர்வமுடன் தேடுங்கள், இப்போது நீங்களும் அவருடைய சத்தத்தைக் கேட்பீர்கள், நிச்சயமாய் கேட்பீர்கள்!!*

***ஜெபம்*** *: எங்கள் பரம பிதாவே! ஆர்வமுடன் உம்பாதம் அமர்ந்து உம் குரல் கேட்டு கீழ்ப்படிந்து வாழும் கிருபையை நித்தமும் எங்களுக்குத்தந்தருளும், ஆமென்.*

**தன் பெற்றோர்களை கனம் செய்யும் நல்ல குடும்பம்!**

**யோ**சேப்பும் மரியாளும் நாசரேத்தின் தன்னுடைய வீட்டில் பலமுறை தவறு செய்து வீழ்ச்சியுற்றதை, இயேசு நிச்சயமாய் கண்டிருப்பார். . . அப்படியிருந்தும், அவரோ அவர்களை அசட்டை செய்யவேயில்லை! "இதுபோன்ற செயலே" நம் பெற்றோர்களை கனம் செய்வதற்குரிய உண்மையான அர்த்தமாகும்.

"உன் தாய் வயது சென்றவளாகும்போது அவளை அசட்டை செய்யாதே" என்றே நீதி. 23:22 கூறுகிறது. ஆம், உங்கள் பெற்றோர் களிடம் தவறுகளைக் (நிர்வாணங்களைக்) காணும்போது, அவர்களை அசட்டை செய்யாதிருங்கள்! அவர்களின் பெலவீனத்தை மூடிவிட்டு, அந்த பெலவீனத்தைக் குறித்து யாரிடமும் பேசாதிருங்கள்.

உண்மையில், இத்தகைய செயலை நம் பெற்றோர்களுக்கு மாத்திரமல்ல, எல்லா ஜனங்களுக்குமே அப்படியே செய்திட வேண் டும். ஏனெனில், உண்மையான அன்பு எங்கெல்லாம் இருக்கிறதோ அந்த அன்பு "திரளான பாவங்களையும் மூடிவிடும்" என்றே வேதம் சுட்டிக் காட்டுகிறது. நீங்கள் "மறுபடியும் பிறந்த" விசுவாசியாய் இருந்து, உங்கள் பெற்றோர்கள் அவிசுவாசிகளா யிருந்தால், அவர்கள் வேதவசனத்திற்குப் புறம்பாக "நீ இந்த விக்கிரகத்தை வணங்க வேண்டும். . . இந்தப் பெண்ணை (இரட்சிக்கப்படாத பெண்ணை) திருமணம் செய்திட வேண்டும். . ." என்றெல்லாம் கூறும்போது, நீங்கள் என்ன செய்ய வேண்டும்? அவர்களிடம் "என் பெற்றோர்களே, இப்போது நீங்கள் கூறுவதை என்னால் செய்திட முடியாது! ஏனென்றால், நான் விசுவாசிக்கும் வேதப்புத்தகம் இவைகளைத் தடைசெய்திருக்கிறது!!" என்றே நீங்கள் மிகுந்த மரியாதையுடன் கூறவேண்டும்! நீங்கள் நிச்சயமாய் ஆண்டவருக்காக உறுதியாய் நின்றிட வேண்டும். . . ஆனால் அதேசமயம், கரடுமுரடான அகங்காரத்தோடு நின்றுவிடவும் கூடாது! ஆம், நீங்கள் அளித்திடும் பதில் கிருபையும் மென்மையும் நிறைந்ததாகவே இருந்திட வேண்டும்!

ஆனால், வேதவசனத்திற்கு கீழ்ப்படியாமையைக் கொண்டுவராத மற்ற எல்லா விஷயங்களிலும், "பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களோடு வசிக்கும் காலம் வரை" அவர்களுக்கு கீழ்ப்படிந்தே இருக்க வேண்டும்! இருப்பினும், பிள்ளைகள் திருமணமாகிப் பெற்றோர் களுடைய வீட்டை விட்டு வெளியேறி தங்களுக்கென "ஓர் சொந்த குடும்பத்தை" அமைத்துக்கொண்ட பின்பு. . . இனியும் அவர்கள் தங்கள் பெற்றோர்களுக்குத் தொடர்ந்து கீழ்ப்படிய வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு இல்லை!! ஆனால், பெற்றோர்களுக்கு கனம் செய்து அவர்களை விசாரிப்பதை நாம் தொடர்ச்சியாய் செய்திட வேண்டும்!!

**ஜெபம்** : *எங்கள் பரலோக பிதாவே! ஆண்டவர் இயேசு எங்களுக்கு முன்வைத்த மாதிரியின்படி, எக்காலத்தும் எங்கள் பெற்றோர்களை அசட்டை செய்யாமல் கனம்பண்ணி வாழ கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

**தேவன் நம்மீது வைத்த மாறாத அன்பு!**

*ஒருசமயம் கர்த்தருடைய ஊழியர் ஒருவர் தன் சபையில் உள்ள ஒரு ஏழை விதவை, வீட்டு வாடகை கொடுக்க முடியாமல் கஷ்டப்படுவதை அறிந்தார். அவளுடைய வாடகை முழு பாக்கிக்கும் போதுமான பணத்தை அன்பளிப்பாக எடுத்துக் கொண்டு அவள் வீட்டிற்குச் சென்றார். அவள் வீட்டின் கதவை பலமுறை தட்டிப் பார்த்தும் கதவு திறக்க வில்லை! அதிக நேரமாய் நின்று கதவைத் தட்டிய ஊழியர், பதில் ஏதும் வராததால் அங்கிருந்து சென்றுவிட்டார்!! சிலநாட்கள் கழித்து அந்த ஏழை விதவையை ஒரு வீதியில் சந்தித்தார். "சகோதரி, உங்கள் வாடகைக்குப் போதுமான பணத்தை அன்பளிப்பாக நான் உங்கள் வீட்டிற்கு கொண்டு வந்தேன். ஆனால் உங்கள் வீடு பூட்டியிருந்தது. கதவைத் தட்டியும் ஒருவரும் திறக்கவில்லை" என்று கூறினார். அதற்கு அந்த சகோதரி, "அப்படியா, என்னை மன்னித்துக்கொள்ளுங்கள்! நீங்கள் கதவைத் தட்டிய அதே சமயத்தில் நான் வீட்டிற்குள்தான் இருந்தேன். வீட்டுச் சொந்தக்காரர் வாடகை பாக்கியை வாங்க வந்து விட்டாரோ என்று அஞ்சியே நான் கதவைத் திறக்காமல் இருந்து விட்டேன்" எனக் கூறினாள். பார்த்தீர்களா, வாடகையை வசூலிப்பதற்காக நம்மிடத்தில் ஆண்டவர் வரவில்லை, தன்னிடம் உள்ள யாவற்றையும் நமக்கு கொடுப்பதற்கே அவர் வந்தார். அப்படியிருக்க, அவருக்கு கதவை திறவாமல் இருப்பது எவ்வளவு பெரிய மதியீனம்! அதைவிட பெரிய மதியீனம், நம் முழு ஜீவியத்தையும் அவருக்கே சம்பூர்ணமாய் இன்னமும் அர்ப்பணிக் காமல் இருப்பதுதான்!!*

தேவனுடைய இந்த அன்பின் சுபாவம் ஒருக்காலும் மாறிப் போவதில்லை. இஸ்ரவேல் தேசத்தின் சரித்திர நிகழ்ச்சிகள் அனைத் திலும் "அவர்கள்மீது அவர் கொண்ட மாறாத அன்பினை" இஸ்ர வேலர்கள் அறிந்துகொள்ளும்படிக்கே தேவன் பிரயாசப்பட்டார். ஏனென்றால், வேதம் கூறுகிறபடி, "அநாதி சிநேகத்தால் உங்களை நான் சிநேகித்தேன்" என்றே தேவன் அவர்களிடம் கூறி இருந்தார் *(எரேமியா 31:3; உபாகமம் 4:37).*

இத்தனை ஆச்சரியமான அவருடைய மாறாத அன்பிற்கு ஈடாய் நம்மிடமிருந்து அவர் எதிர்பார்ப்பதெல்லாம் "நம்முடைய அன்பு மாத்திரமே ஆகும்!" *(உபாகமம் 6:5).*

***ஜெபம் :*** *அன்பின் தகப்பனே! உமது அன்பை நாங்கள் எக்காலத்திலும் சந்தே கப்பட்டுவிடாதபடி உம் அன்பில் நிலைத்திருக்க கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## வேதம் நமக்கு பெலன் தரும் தியானமாய் இருக்க வேண்டும்!

எரேமியா 15:16, 1 பேதுரு 2:2 ஆகிய வசனங்களில் 'உணவிற்கு' அடையாளமாய் வேதவசனம் ஒப்பிடப்பட்டிருப்பதைக் காண்கிறோம். தீர்க்கதரிசி எசேக்கியேலும்,அப்போஸ்தலனாகிய யோவானும் "ஒரு புத்தகத்தைப் புசித்தார்கள்"என்றே வேதாகமம் குறிப்பிடுகிறது (எசேக்கியல் 1:1-3; வெளி 10:9,10). ஆம், தேவனுடைய மனிதர்கள் தேவனுடைய வார்த்தையை புசித்து ஜீரணம் செய்தார்கள். உணவுதான் நமக்கு பெலன் தருகிறது. ஆகவே உணவு இல்லாமல் நம்முடைய சரீரம் பெலனடைந்து பாதுகாக்கப்பட முடியாது. போதுமான உணவு இல்லாமல் எலும்பும் தோலுமாய் தன் சரீரத்தில் பெலஹீனமாய் இருக்கிறவன், நோயை எதிர்த்து நிற்கும் திறன் அற்றவனாகவே இருப்பான். இதைப்போலவே தேவனுடைய வார்த்தையை அசட்டை செய்து புறக்கணிப்பவனும் தன் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி குன்றியவனாய் மாறி, அதன் நிமித்தம் சோதனையை எதிர்த்து நிற்பதற்கும், பிசாசின் தாக்குதல்களில் உறுதியாய் நிற்பதற்கும் திராணியற்ற பரிதாப நிலையில் இருப்பான்!!

அதே சமயம் நீங்கள் வேதாகமத்தை வாசித்து விட்டதால் மாத்திரமே பெலன் கொண்டிருக்க முடியாது. மாறாக, நீங்கள் வேதத்தைப் பிரியமுடன் வாசித்து, பின்பு அதை தியானித்து, அந்த வார்த்தைகள் உங்கள் இருதயத்தை ஊடுருவிச் செல்வதற்கு அனுமதித்து, அந்த இருதயத்தில் அவ்வசனங்கள் உங்களுக்கே சொந்தமாய் மாறிடவும் வேண்டும் (சங்கீதம் 119:11). இதை யோபு கூறும்போது "கர்த்தாவே உம்முடைய வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும் அதிகமாய் காத்துக் கொண்டேன்" (யோபு 23:12) என பரவசத்துடன் கூறினார். இவ்வித பெலன் கொண்டவனே சாத்தானுடைய கொடிய தாக்குல்களை எதிர் நோக்குவதற்கு யோபுவைப்போல் தைரியம் கொண்டவனாய் இருப்பான். ஆகவேதான் யோபு அடைந்த பல துன்பங்கள் மத்தியிலும், தேவன்மீது அவன் கொண்டிருந்த விசுவாசத்தை இழக்கவேயில்லை! ஆனால், தன் கணவன் தேவனுடைய வார்த்தையில் கொண்டிருந்த அதே பற்றுதலை அவனுடைய மனைவி பெறாதபடியால், தனக்குத் துன்பம் நேர்ந்த அடுத்தகணமே அவள் தேவனை நிந்தித்து துவண்டுபோய் விட்டாள்! ஆனால் யோபுவோ அப்படி இருக்கவில்லை. இவ்வாறு தேவனுடைய வார்த்தையை நாள்தோறும் தியானித்துப் பெற்றுக் கொள்வதினால் கிடைக்கும் பெலனைக் கொண்டு வாழ்வின் ஒவ்வொரு சோதனையையும் நாம் தைரியமாய் எதிர்த்து நின்றுவிட முடியும் என்பதற்கு யோபு ஒரு நல்ல மாதிரியாய் நம் யாவருக்கும் திகழ்கிறார்!!

***ஜெபம்*** : *பரம தகப்பனே! எங்கள் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உம் வசனமே எங்களின் ஆன்ம உணவாய் இருக்கிறதே! உம் வசனம் எங்கள் தினசரி தியானமாய் மாறிட கிருபை தாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**தேவனுடைய அன்பின் கரத்திலிருந்தே சகலமும் நமக்கு சம்பவிக்கிறது!**

*இந்த ஒரு உண்மையில் நம்முடைய விசுவாசம் திடமான அஸ்திபாரம் கொண்டிருக்க வேண்டும்! அந்த உண்மை என்னவெனில் "தேவன் நம்மோடு இடைபடும் அனைத்து கிரியைகளும் அவருடைய அன்பை ஆதாரமாகக் கொண்டே இருக்கிறது" என்பதுதான். செப்பனியா 3:17-ல் "தம்முடைய அன்பினிமித்தம் அவர் அமர்ந்திருப்பார்" என்ற வசனத்தின் சரியான மொழிபெயர்ப்பு "தேவன் உனக்காக தன் மிகுந்த அன்பினால் நிறைந்து மௌனமாய் அமர்ந்து திட்டம் வகுத்துக் கொண்டிருக்கிறார்" என்பது தான். இவ்வாறு நம்ஜீவியத்தில் பிரவேசிக்கும்படி தேவன் அனுமதிக்கும் ஒவ்வொரு சின்னச் சின்ன விஷயங்கள்கூட, தன் அன்பினால் திட்டம் வகுக்கும் தேவனுடைய இருதயத்திலிருந்துதான் புறப்பட்டு வருகிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோமா? உங்களுடைய வாழ்க்கையில் பிரவேசிக்கும் ஒவ்வொரு உபத்திரவமும், பிரச்சனைகளும் முடிவில் "நம்முடைய நன்மைக்காக இருக்கும்படியே" தேவன் ஏற்கனவே திட்டம் தீட்டியிருக்கிறார்.*

*நாம் போட்ட திட்டங்களை அவர் பலமுறை மாற்றி அழித்துவிடுகிறாரே, ஏன்? ஆம், அவர் நமக்கென்று திட்டமிட்டு வைத்திருக்கும்* **முதல் தரமானதை** *நாம் இழப்பதிலிருந்து நம்மை காப்பதற்கே அவ்வாறு செய்கிறார்! இவை அனைத்தையும் இந்த பூமியிலே நாம் முழுவதுமாய் அறிந்து கொள்ளக் கூடாததாய் இருக்கலாம். ஆனால், சகலமும் அன்பின் தேவனுடைய கரத்திலிருந்துதான் வருகிறது என்பதையாவது நாம் செம்மையாய் உணர்ந்து கொண்டால், அதுவே நம்மைத் தாக்கும் எல்லா கவலைகளிலிருந்தும் பயத்திலிருந்தும் நம்மை விடுதலையாக்கி விடும்!! ஆனால், இன்று விசுவாசிகள் இந்த சத்தியத்தில் உறுதியாக நிலை கொள்ளாதபடியால், வேதம் குறிப்பிடும் "புத்திகெட்டா தேவ சமாதானத்திற்கும்" "சொல்லிமுடியா மகிழ்ச்சிக்கும்" "மகிமையின் பூரணத்திற்கும்" இந்த விசுவாசிகள் அந்நியர்களாகவே தேங்கி நின்று விட்டார்கள்!*

*இந்த பூமியில் இயேசுகிறிஸ்து செய்த ஊழியங்கள், பழைய ஏற்பாட்டை நன்றாய் கற்றிருந்த அன்றைய ஜனங்கள், தங்கள் தேவனைப் பற்றி தாங்கள் கொண்டிருந்த தவறான கருத்துக்கள் யாவையும் திருத்தி அமைப்பதாகவே இருந்தது. எத்தனையோ முறை தன் சீஷர்களிடத்தில் "அவர்களின் பரமபிதா அவர்களை நேசிப்பதை யும், அவர்களுடைய தேவையைக்குறித்து அவர் அக்கறை கொண்டிருப்பதையும்" திரும்பத்திரும்ப அவர்களுக்கு எடுத்துரைத்தார்.*

**ஜெபம் :** *எங்கள் பரம பிதாவே! எங்கள் வாழ்வில் ஏற்படும் சம்பவங்கள், நீர் எங்கள் மீது வைத்த அன்பை நாங்கள் ஒருபோதும் சந்தேகித்திடாதிருக்க கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**சூழ்நிலைகளில் தேவனையே காண வேண்டும்!**

கன்னானாகிய (Copper Smith - தாமிரக் கொல்லன்) அலெக்சாந்தரைப்பற்றி பவுல் கூறியதுபோலவே, நம் எதிரிகளுக்கு அவர்களுடைய கிரியைகளுக்குத் தக்கதாக "கர்த்தரே" பலனளிப்பார்! (2 தீமோ. 4:14). ஆகவே, இதுபோன்ற பழிவாங்குவதற்குரிய விஷயங்களை கர்த்தரிடம் ஒப்புக்கொடுத்துவிடுவதே நமக்கு மிகுந்த பாதுகாப்பானதாகும் (ரோமர் 12:19).

ஆம், எந்த விஷயங்களையும் தேவனிடம் ஒப்புக்கொடுப்பதே மேன்மையான வாழ்க்கையாகும். ஏனெனில், அவர் என்ன செய்து கொண்டிருக்கிறாரோ, அதை அவர் நன்கு அறிவார்! "சகலமும்" அவருடைய அதிகாரத்திற்கே உட்பட்டிருக்கிறது! நல்லதொரு சிற்பியாய், நம்மில் இயேசுவை வடிவமைப்பதற்காக அவரே பாறையை நேர்த்தியாய் செதுக்கிக் கொண்டிருக்கிறார். பாறையின் "சில பகுதிகள்" கடினமானதாய் இருக்கிறபடியால், அவைகளைச் செதுக்குவதற்கு, இதுபோன்ற பொய்யான குற்றச்சாட்டுகளையும், எதிர்ப்புகளையும் அவர் உபயோகிக்க வேண்டியதாய் இருக்கிறது! இவ்வாறு அவருடைய செதுக்குதலுக்கு நாம் அடங்கியிருந்தால் . . . முடிவில், கிறிஸ்துவுக்கு ஒப்பான மனிதர்களாய் நாம் வடிவம்பெற்று, ஆவிக்குரிய அதிகாரத்தையும் பெற்றிட முடியும்!!

தான் நடத்தப்பட்ட ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் இயேசு தன் பிதாவின் கரத்தைத் தெளிவாய்கண்டபடியால், தன்னைக் காட்டிக்கொடுத்த யூதாஸையும் "சிநேகிதனே!" என அவரால் அழைக்க முடிந்தது! இவ்வாறு நம் எல்லா சூழ்நிலைகளிலும் தேவனுடைய சர்வ வல்லமையுள்ள ஆளுகையை நாமும் காணமுடிந்தால், அச்சூழ்நிலை களில் நம்மை நாமே தாழ்த்துவது நமக்கும் எளிதாய் மாறிவிடுமே!! இதனிமித்தம், ஏற்ற சமயத்தில் நம்மை உயர்த்துவதும் தேவனுக்கு மிக எளிதாய் இருக்கும்!! ஆம், நம் தோளின்மீது விழுந்த அழுத்தங்களை 'எப்போது' அகற்றி, அதே தோளின்மீது தன் அதிகாரத்தையும் 'எப்போது' தரவேண்டும் என்ற "ஏற்றவேளையை" தேவனே அறிந்திருக்கிறார். எனவேதான் நாம் அவருக்காகவே காத்திருக்க வேண்டும்! இவ்வாறு கர்த்தருக்காக காத்திருக்கிற ஒருவர்கூட ஏமாற்றம் அடைந்ததோ அல்லது வெட்கம் அடைந்ததோ இல்லவே இல்லை! (ஏசாயா 49:23).

**ஜெபம்** : *எங்கள் பரலோக பிதாவே! வாழ்வின் சூழ்நிலைகளில் நாங்களாக யாதொன்றிலும் பிரதிபலித்துவிடாமல், உம் ஆளுகையை விசுவாசித்து, நீரே கிரியை செய்யும்படி நாங்கள் அமர்ந்திருக்க கிருபைதாரும், ஆமென்.*

## நம் வீழ்ச்சியிலும் நம்மை நேசிக்கும் தகப்பன்!

*ஆண்டவர் நம்மைப் பார்த்து "என் மகனே, என் மகளே, நீ ஒருபோதும் வீழ்ச்சியடையவே கூடாது என்றே நான் உனக்காக ஜெபிக்கிறேன்" என கூறும்படியே நாம் விரும்புகிறோம். ஆனால், இதுபோன்ற ஜெபத்தை ஆண்டவர் நமக்காக ஜெபிப்பதில்லை என அறிவது நமக்கு மிகுந்த ஆச்சரியத்தையே தருகிறது!!*

*அப்படியானால், இயேசு சீமோனுக்காக என்னதான் ஜெபித்தார்? பேதுரு, சோதனையில் வீழ்ச்சியடையக்கூடாது என்பதற்காக ஜெபிக்காமல், அவன் வீழ்ச்சியடைந்தவுடன், தேவனுடைய சம்பூர்ண அன்பில் அவன் கொண்ட விசுவாசம் அவனைவிட்டு ஒழிந்து போகக்கூடாது என்பதற்காகவே ஜெபித்தார்!(லூக்கா 22:31,32). அதாவது, பேதுரு வீழ்ச்சியின் படுகுழியில் விழுந்தாலும், "தேவன் என்னை இன்னமும் அன்புகூருகிறார்!" என பேதுரு அறிக்கை செய்வதே அதன் பொருளாகும்.*

*இதுதான் விசுவாசம்! ஆம், இந்த அறிக்கையைத்தான் நாம் எப்போதும் நம் உதடுகளிலும், நம் இருதயத்திலும் கொண்டிருக்க வேண்டும்!! எத்தனை ஆழத்தில் அமிழ்ந்து, எவ்வளவு பெரிய படுகுழியில் வீழ்ந்தாலும் "நாம் இருக்கும் வண்ணமாகவே, தேவன் நம்மைத் தொடர்ந்து நேசிக்கிறார்!" என்பதே அந்த அறிக்கையின் முழக்கமாகும்!!*

*இந்த அறிக்கையைத்தான் கெட்டகுமாரன் கொண்டிருந்தான். அவன் வீழ்ச்சியடைந்தபோதும், தன் தகப்பன் இன்னமும் தன்னைத் தொடர்ந்து நேசித்துக் கொண்டுதான் இருக்கிறார் என்பதை அவன் தன் இருதயத்தில் ஆழமாய் விசுவாசித்திருந்தான். வீழ்ச்சியின் அகோரத்தில் "பன்றியின் உணவை" தின்னும் அளவிற்கு நம்மில் ஒருவரும் அத்தனை மோசமான வீழ்ச்சியை அடைந்திருக்கவே மாட்டோம். ஆனால், அவனோ வீழ்ச்சியின் படுபாதாளத்தை அடைந்தபோதும் "என் தகப்பன் இன்னமும் என்னை நேசிக்கிறார்!" என்பதை மனதார நினைவுகூர்ந்தான். ஒருவேளை, அவனுடைய தகப்பன் இறந்துவிட்டதாகவும்... இப்போது வீட்டைத் தன் மூத்த சகோதரனே நடத்திக் கொண்டிருப்பதாகவும் இவன் கேள்விப்பட்டிருந்தால், அவன் வீட்டிற்குத் திரும்ப வந்திருப்பான் என நீங்கள் நினைக்கிறீர்களா? நிச்சயமாய் அவன் திரும்ப வரவேமாட்டான்! ஏனென்றால், தன் மூத்த சகோதரன் எப்படிப்பட்டவன் என்பதை அவன் நன்கு அறிந்து வைத்திருந்தான்!! ஆகவே, அவன் ஒருக்காலும் வீட்டிற்குத் திரும்ப வந்திருக்க மாட்டான். ஆனால், தன்னை நேசிக்கும் தகப்பன் அங்கிருப்பதை அவன் அறிந்தபடியினால்தான் அவன் திரும்ப வந்தான்!!*

**ஜெபம் :** *அன்பின் பிதாவே! எங்கள் வீழ்ச்சியில் நாங்கள் ஒருபோதும் சோர்வடையாது இருக்கவும், திரும்பவும் எங்களை ஏற்றுக்கொள்ளும் அன்பின் தகப்பனாகிய நீர் உண்டென்றும் விசுவாசித்திட கிருபைதாரும், ஆமென்.*

**பெருமை அணுகாதிருக்க நம் வீழ்ச்சியின் குழியை மறக்க கூடாது!**

*பேதுரு, மற்ற கிறிஸ்தவர்களை எச்சரித்தபோது, "முன்செய்த பாவங்களற நாம் சுத்திகரிக்கப்பட்டதை மறவாதிருக்கக் கடவோம்" (2 பேதுரு 1:9) எனக் கூறினார். இதற்கு மாறாகத் தன் முந்திய நிலையை மறக்கிறவன் எவனோ அவன் 1) கண் சொருகிப்போனவன்! (Short-sighted கிட்டப்பார்வை கொண்டவன்). 2) குருடன்! என கடிந்து எச்சரித்தார். இவ்வாறு நான் ஒருபோதும் கண்சொருகிப்போன "கிட்டப்பார்வை" கொண்டவனாயும், குருடனாயும் இருக்க ஒருதுளியும் விரும்பவேயில்லை. நான் எக்காலத்தும், பரலோக பொக்கிஷங்களையும், நித்திய மதிப்புகளையும் காணக்கூடிய "ஓர் நீண்ட தூரப்பார்வை" கொண்டவனாகவே இருக்க விரும்புகிறேன்.*

*கண் சொருகிப்போன கிட்டப்பார்வை கொண்டவர்கள் யார்? யாரெல்லாம் பூமிக்குரியவைகளையும், பாவத்தின் இன்பங்களையும், பொருளாதார ஆஸ்திகளையும், மனுஷர் அங்கீகாரத்தையும் உயர்ந்த மதிப்புடையதாய் மதித்திருக்கிறார்களோ, அவர்களே கண் சொருகிப்போன கிட்டப்பார்வை கொண்டவர்கள். இது போன்ற விசுவாசிகளுக்காய் நாம் பரிதபித்து வருந்துவோமாக! பார்வையில் பலஹீனமடைந்து, சுமார் 10 அடிக்குமேல் எதையும் பார்க்க முடியாத ஒரு மனிதனை நீங்கள் கண்டால் அவன் மீது உங்களுக்கு கோபம் வருவதில்லை! மாறாக, அவனுக்காகப் பரிதாபமே கொள்வீர்கள்.*

*எந்தக் குழியிலிருந்து தேவன் அவர்களைத் தூக்கிவிட்டாரோ "அந்தக் குழியை" இவர்கள் மறந்துவிட்டார்கள்! அதன் விளைவாய், ஏதாகிலும் சில பகுதிகளில் தேவன் அவர்களை ஆசீர்வதித்தவுடன், இமைப்பொழுதில் பெருமையும் அடைந்துவிடுகிறார்கள்!!நானோ, தேவன் என்னைத் தூக்கி எடுத்த பாதாளக்குழியை ஒருபோதும் மறக்க விரும்பவில்லை! என்னுடைய எல்லா பாவங்களும் கழுவப்பட்டு, அவைகளில் ஒரு பாவத்தைக்கூட தேவன் நினைவுகூருவதில்லை என்பதை நான் அறிந்திருக்கிறேன். நான் "கிறிஸ்துவின் இரத்தத்தால் நீதிமானாக்கப்பட்டதினிமித்தம்" (ரோமர் 5:9) கடந்த ஆண்டுகால ஜீவியத்தில், நான் ஒருபோதும் பாவம் செய்யாதவனைப் போலவே தேவனுக்கு முன்பாகத் தைரியம் பெற்று நிற்கிறேன். ஆம், தேவனும் என்னை அப்படியேதான் காண்கிறார். இருப்பினும், நான் ஒரு காலத்தில் எப்படியிருந்தேனென்பதையோ ஒருக்காலும் நான் மறந்து விடவே மாட்டேன்! ஆண்டவர் என்னைப் பார்த்து, "நான் உன் பாவங்களை இனி நினையாமலிருப்பேன்" (எபி.8:12) என்றே கூறுகிறார். ஆனால், பெருமையின் குழியில் விழாதிருக்க நான் முற்காலத்தில் எந்த இழிநிலையில் இருந்தேன் என்பதையோ நான் நினைவுகூருவேன்!*

**ஜெபம்** : *எங்கள் பரம தகப்பனே! எங்களின் பெருமைக்கு காரணம், நாங்கள் வீழ்ச்சியுற்ற குழியை மறந்துவிட்டதாலேயே! என உணர்த்தியமைக்கு நன்றி! எந்நாளும் தாழ்மையாய் உமக்கு முன் வாழ கிருபை செய்தருளும், ஆமென்.*

**பாவத்தையும் உலகத்தையும் வேறுபிரிக்கும் சிலுவை!**

*நம்மில் சிலர் மாத்திரமே "சிலுவை சுமப்பதின் மெய்யான தாற்பரியத்தை" தெளிவாக விளங்கிக் கொண்டவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் நம்மிடையே உள்ள திரளானோர் "வாழ்க்கையின் பாரங்களையே" தங்கள் சிலுவைகளாக ஒப்பிட்டுப் பேசுகிறார்கள். இன்னும் சிலர் தங்கள் "சரீர சுகவீனங்களை" சிலுவைகளாக காண்கின்றனர். இன்னும் சிலர் அடங்கி வாழாத "தன் மனைவியையும்", அன்பற்ற "தங்கள் புருஷர்களையும்" அல்லது கீழ்படியாத தங்கள் "பிள்ளைகளையும்" 'சிலுவைகள் என' உருவகப்படுத்துகிறார்கள். சிலுவையின் தாற்பரியம் தங்க டாலரில் இல்லை! சிலுவை கல்வெட்டுகளில் இல்லை!. . . அதுபோலவே, மேற்கண்டபடி ஜனங்கள் எண்ணுகின்ற அனைத்தும் சிலுவை அல்லவே அல்ல! அதாவது "ஒருவன் தன் சிலுவையை எடுக்கக்கடவன்" என இயேசு குறிப்பிட்ட சிலுவை, இவை யாதொன்றும் இல்லை! இன்றைய சபைகள் கிறிஸ்துவின் சிலுவையை ஓர் மார்க்க அடையாளமாக அழகூட்டி வைத்திருக்கிறபடியால், இயேசு மெய்யாகவே கூறிய சிலுவைக்குப் பதிலாய் தவறான கருத்தையே தங்கள் உள்ளத்தில் பெற்றிருக்கிறார்கள்.*

*இப்பூமியில் இயேசு வாழ்ந்த காலத்தில் சிலுவையானது "மரணத்திற்குரிய ஓர் ஆயுதமாகவும், ஓர் பெருத்த அவனமாத்திற்குரிய ஆயுதமாகவும்" கருதப்பட்டது! அந்நாட்களில் நீங்கள் எருசலேமில் வாழ்ந்து வந்தால், அந்த வீதியில் ஓர் மனிதன் சிலுவை சுமந்து செல்ல, அவனைச்சூழ ரோம வீரர்கள் சென்று கொண்டிருக்க நீங்கள் காணும்போது, அவன் எங்கே சென்று கொண்டிருக்கிறான் என்பதை சந்தேகத்திற்கு இடமில்லாமல் அறிந்திருப்பீர்கள். ஆம், மரணம் அடையுமிடத்திற்கே அவன் சென்று கொண்டிருக்கிறான்! தன் உறவினர்கள் நண்பர்கள் ஆகிய அனைவரிடமிருந்தும், பாவத்திடமிருந்தும் விடைபெற்று, இனி ஒருபோதும் திரும்பி வராத பாதையில் சென்று கொண்டிருக்கிறான்!! இவ்வுலகத்திற்கே அவன் "குட்-பை" சொல்லிவிட்டு, இந்த உலகத்தைவிட்டே நிரந்தரமாய் பிரியப் போகிறான். இவ்வுலகில் அவன் கொண்டிருந்த உடமைகள் யாதொன்றையும் இனி அவன் மீண்டும் காணமாட்டான்! அதுமாத்திரமல்லாமல், அவன் உலகத்தை விட்டு செல்லும் அந்த வழியானது மகா நிந்தையும் அவமானமும் கொண்ட வழியாகும். சிலுவையின் மரணமானது பகிரங்க அவமானத்திற்குரிய மரணமாகும்! ஒருசமயம் பணக்கார வாலிபன் ஒருவன் தன்னை பின்பற்றும்படி இயேசு எடுத்துவரச் சொன்ன சிலுவையில் இவையாவும் அடங்கும்!(மாற்கு 10:17-22). 'பின்பற்றுவதின் பொருள்' சிலுவையில் அறையப்படும்படி எருசலேம் வீதியில் சென்ற இயேசுவின் பாதையில் நாமும் செல்வதேயாகும்!*

***ஜெபம்** : எங்கள் பரம தகப்பனே! எங்களைப் பாவத்திலிருந்தும் உலகத்திலிருந்தும் நிரந்தரமாய் பிரித்து, நித்திய ஜீவனை வழங்கும் "சிலுவை" எங்கள் வாழ்வின் தினசரி பங்காய் மாறுவதாக! ஆமென்.*

**இந்த பூமிக்கு நாம் அந்நியர்கள்!**

*ஓர் அந்நியர்களாகவே இவ்வுலகில் நாம் இருக்கிறோம். கடலின் நடுவிலிருக்கும் ஒரு கப்பல் கடல் தண்ணீரால் சூழப்பட்டிருந்தாலும் அந்த 'உப்பு நீர்' கப்பலுக்குள் ஊடுருவி வருவதில்லை! இதைப் போலவே ஒரு விசுவாசி இந்த உலகத்தில் வேறுபிரிந்து வாழத் தொடங்கிவிட்டால், அவன் இந்த உலகத்தில் பரியாசத்தையும், எதிர்ப் பையும் வெகு சீக்கிரத்தில் சந்திக்கவேண்டிய நிலை ஏற்படும்! மிக சொற்பகாலத்தில் இந்த உலகம் அவன் வாழ்வதற்கு அசௌகரியமுள்ள இடமாய் மாறிவிடும்! தன்னை பின்பற்றி வந்த சீஷர்களுக்கு இவ்வுலகத் தால் உண்டாகும் உபத்திரவங்கள் தவிர்க்க முடியாததாய் இருக்கும் என்ற உண்மையை முன் கூட்டியே கூறி எச்சரித்தார்! (யோவான் 16:33). ஒரு கிறிஸ்தவனுக்கு பரலோகம்தான் உண்மையான சொந்தமாய் இருந்தால், இந்த பூலோகம் அவனுக்கு உரியதாய் இராது என்ற உண்மையை நாம் இயற்கையாகவே விளங்கிக்கொள்ள முடியும். அவன், தண்ணீரிலிருந்து வெளியே போடப்பட்ட ஓர் மீன்! ஆகவே, இந்த பூமியில் அவன் வாழ்ந்திட கஷ்டங்களையும் துன்பங்களையும் சகிக்க வேண்டியதை அறிந்து ஆச்சரியப்பட ஒன்றுமில்லை! ஒரு மீனை தரையில் உயிருடன் பாதுகாப்பதற்கு ஓர் அற்புதம் நிகழ வேண்டும்! அதுபோலவே கிறிஸ்துவின் மெய்யான சபை இந்த பூமியில் நிலைத்திருப்பதற்கும் 'அந்த மீனுக்கு' நிகழ்ந்த அற்புதமே அவசியமா யிருக்கிறது! ஆம், நம் கிறிஸ்தவ ஜீவியம் இவ்வாறு இருந்திடவே தேவன் விரும்புகிறார். அதாவது, தேவனுடைய அற்புத கிரியையின் வல்லமையை ஒவ்வொருநாளும் சார்ந்து வாழும் ஓர் வாழ்க்கை!*

*அவருடைய ஜனத்திற்கும், இந்த உலகத்தின் ஆவிக்கும் நடுவே ஓர் பெரும் "பிளவு" நிரந்தரமாய் இருந்திடவே தேவன் விரும்புகிறார். அந்தப் பிளவின் ஆழமும் அகலமும் பரலோகத்தையும் நரகத்தையும் பிரிக்கும் அளவிற்கு இருந்திட வேண்டும். . . அதாவது அங்கிருந்து ஒருவரும் இங்கு வரவோ இங்கிருந்து ஒருவரும் அங்கு செல்லவோ கூடாத அளவிற்கு உள்ள பிளவு! (லூக்கா 16:26).*

*பார்த்தீர்களா, இந்த உலகத்தின் ஆவியிலிருந்து நாம் முற்றிலும் விடுபட வேண்டும் என்பதே தேவனுடைய தீராத வாஞ்சையாய் இருக்கிறது!*

***ஜெபம்*** : *எங்கள் பரம தந்தையே! ஒரு மீனுக்கு "தரை" அந்நியமாய் இருப்பது போலவே, நாங்கள் இந்த உலகத்திற்கு அந்நியர்களாய் வாழ்ந்து உம்மைப் பிரியப்படுத்திட உதவிசெய்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**உலகத்திற்கு அல்ல, கிறிஸ்துவுக்கே நாம் பைத்தியமாக வேண்டும்!**

*"நான் கிறிஸ்துவின் நிமித்தம் பைத்தியக்காரன்" என பவுல் தன்னை அழைத்துக்கொண்டார் (1 கொரிந்தியர் 4:10). இவ்வுலகில் 'டாக்டர், இன்ஜினியர்' பட்டத்தைவிட 'கிறிஸ்துவின் பைத்தியக் காரன்' என்ற பட்டம் மெத்தவும் சாலச் சிறந்ததேயாகும். ஆம், பவுல் சென்ற இடமெல்லாம் "பைத்தியக்காரன்" என்ற பட்டம் சூட்டியே ஜனங்கள் அவரைப் புறக்கணித்தார்கள். ஆனால், அது ஒன்றும் அவரை மனம் மடியச் செய்யவில்லை. ஏனென்றால், தன் குருவைப்போலவே அவர் இந்த உலகத்திற்கு ஏற்கனவே மரித்துவிட்டார்.*

*ஒரு பட்டணத்தில் வசித்த ஓர் சகோதரன் தன் ஆண்டவருக்கு சாட்சி பகரும் பொருட்டு தன் மேலாடையின் முன்னும் பின்னும் வசன அட்டைகளைத் தொங்கவிட்டு வீதிகளில் செல்வார். இதனிமித்தமாய் அந்த பட்டணத்தின் பல இடங்களிலும் இவர் கேலிக்குரியவராய் மாறினார். சில வருடங்களுக்குப் பிறகு, வசனங்களுக்குப் பதிலாய் தன் ஆடையின் முன்பகுதியில் "நான் கிறிஸ்துவுக்கு பைத்தியக்காரன்!" என்ற வாக்கியத்தை பெரிதாக எழுதியிருந்தார். தன் முதுகுப்புற அட்டையிலோ "நீங்கள் யாருக்கு பைத்தியம்?" என்ற வாசகத்தைப் பெரிதாக எழுதியிருந்தார்! இப்போது, அவரைக் கேலி செய்தவர்கள், இந்தக் கேள்விக்கு பதில் தரமுடியாமல் வெட்கத்தால் தலைகுனிந்தார்கள்!!*

*ஆம், கிறிஸ்துவுக்கு பைத்தியமாய் இருந்திட நமக்கு விருப்ப மில்லையென்றால், "பிசாசுக்கே பைத்தியமாய் மாறுவோம்!" என்ற உண்மையை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? சிலுவையை ஏற்றுக் கொள்வதன் பொருள் "இந்த உலகத்திற்கு மரிக்கும் ஸ்தானத்தை" ஏற்றுக் கொள்வதேயாகும். இதனிமித்தம், உலகம் நம்மைப் புகழ்வதோ அல்லது இகழ்வதோ ஒரு பொருட்டாய் நமக்கு இருப்பதில்லை. "இந்த ஒன்றில் குறைவுபடுவதே" இன்றைய திரளான இளைஞர்கள் கர்த்தருக்கு வல்லமையாய் செய்திட வேண்டிய ஊழியத்தை பெலன் இழக்கச் செய்திருக்கிறது. நமக்கு ஏராளமான உயர்கல்வித் தகுதிகள் இருக்கலாம், ஏராளமான வரங்களும் தாலந்துகளும் இருக்கலாம். ஆனால் "இந்த ஒன்று குறைவுபட்டால்" நாம் பெற்றிருக்கும் அனைத்து தகுதிகளும் கர்த்தருடைய ஊழியத்திற்கு எந்த பிரயோஜனமும் இல்லாமல் போய்விடும்!!*

**ஜெபம்** : *எங்கள் பரம பிதாவே! உம்மை எங்களைவிட்டு பிரிக்கும் உலகத்திற்கு பின்னால் பைத்தியமாய் திரியாதபடி, உமக்கே எங்களை சொந்தமாய் கொண்டீரே! தேவையான இப்பகுதியில் குறைவுபட்டு விடாதிருக்க கிருபைசெய்தருளும், ஆமென்.*

## பிறரை மனப்பூர்வமாய் மன்னித்திட வேண்டும்!

*கர்த்தருடைய ஜெபத்தில், "நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்களுக்கு மன்னியும்"(மத்தேயு 6:12) என குறிப்பிடப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். ஆம், நாம் பிறரை எவ்விதம் மன்னித்திருக்கிறோம் என்பதை தேவன் துல்லியமாக அளந்து பார்க்கிறார். ஏனெனில், நாம் அளக்கிற அளவின்படியே நமக்கும் அளக்கப்படும் என இயேசு போதித்தார். அவ்வாறு கூறும்போது, "கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்" என இயேசு கூறினார் (லூக்கா 6:18). அதாவது, நீங்கள் பிறருக்குக் கொடுப்பதற்கு சிறிய ஸ்பூனை உபயோகித்திருப்பீர் களென்றால், உங்கள் ஜெபங்களுக்குப் பதிலளிக்கும் தேவன் அதே சிறிய ஸ்பூனைத்தான் உங்களுக்கும் உபயோகிப்பார்! நீங்களோ பெரிய காரியங்களை எதிர்பார்த்து, பலத்த கிரியைக்காக தேவனிடம் ஜெபித்தீர்கள். ஆனால் தேவனோ சிறிய ஸ்பூனை எடுத்து உங்களுக்கு கொஞ்சம்தான் கொடுத்தார்! ஏன் தெரியுமா? நீங்கள் அந்த சிறிய ஸ்பூனை வைத்துத்தான் பிறருக்குக் கொடுத்தீர்கள். நீங்கள் எந்த அளவிற்கு பெரிய ஸ்பூனை உபயோகப்படுத்துவீர்களோ அந்த அளவிற்கு தேவனும் பெரிய ஸ்பூனைக் கொண்டு உங்களுக்குக் கொடுப்பார். தேவனுக்கு இந்தச் சட்டம், மாறாத சட்டமாகும்! நமக்குப் பரிமாறவரும் தேவன் இந்த சட்டத்தின்படியேதான் செயல்படுகிறார். மத்தேயு 5:7-ல், "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்" என இயேசு கூறினார். நீங்கள் எவ்வளவு அதிகமாய்ப் பிறரிடம் இரக்கம் காண்பிக்கிறீர்களோ அவ்வளவு அதிகமாய் நியாயத்தீர்ப்பு நாளில் தேவனும் உங்கள் மீது இரக்கமாயிருப்பார். "ஆனால், இரக்கம் செய்யாதவனுக்கோ இரக்கமில்லாத நியாயத்தீர்ப்பு கிடைக்கும்" என யாக்கோபு 2:13 கடுமையாய் எச்சரிக்கிறது!*

*எனவே, நீங்கள் பிறரை மிகவும் கொஞ்சமாய் ஒரு கருமியைப் போல் மன்னித்திருப்பீர்களென்றால் அதே போலவே தேவனும் உங்களுக்கு மன்னிப்பார். உங்களுக்குத் தீங்கிழைத்த ஒருவரை அன்பு ததும்பும் மன்னிப்பின் பார்வையால் பார்த்திருப்பீர்களென்றால் தேவனும் அவ்விதமே உங்களுக்குத் தன் அன்பு ததும்பும் மன்னிக்கும் பார்வையை கடாட்சித்திருப்பார்! ஆம், நீங்கள் பிறரை எவ்வாறு நடத்தினீர்களோ அதைப்போலவே தேவனும் உங்களை நடத்துவார்!!*

***ஜெபம்:*** *எங்கள் பரலோக பிதாவே! எங்களை நீர் மனப்பூர்வமாய் மன்னித்தது போலவே, எங்களுக்கு தவறு செய்கிறவர்களை மனப்பூர்வமாய் மன்னித்து, உமது தயவை ஏராளம் பெற்றிட கிருபை செய்தருளும், ஆமென்.*

**சுத்த இருதயம் கொண்டவனே சந்தோஷ மனிதன்!**

எல்லாக் கிறிஸ்தவர்களுமே சந்தோஷமாயிருப்பதற்கு வாஞ்சிக்கிறார்கள். ஆனால் இயேசுவோ, "இருதயத்தில் சுத்த முள்ளவர்கள் பாக்கியவான்கள்" (மத்.5:8) என்றல்லவா கூறினார். பாக்கியவான்கள் என்ற பதத்திற்கு "சந்தோஷம்" என்பது மற்றொரு பொருளாகும். எனவே இங்கே இயேசு கூறுவது யாதெனில், "தூய்மையான பரிசுத்த ஜீவியத்திலிருந்தே உண்மையான சந்தோஷம் பிறக்கிறது!" என்ற செய்தியேயாகும். பரலோகம் எப்போதும் குறைவில்லா மகிழ்ச்சி நிறைந்த இடமாய் இருப்பதற்கு காரணம், அங்கு நிறைவான பரிசுத்தம் இருப்பதால்தான்! பரிசுத்தமில்லாத எந்த மகிழ்ச்சியும் போலியானதேயாகும். நாம் உண்மையில், "ஆண்டவரே நான் பரிசுத்தமற்று இருந்தால் என்னை மகிழ்ச்சியற்றவனாக்கும்!" என்றே ஜெபிக்க வேண்டும். இல்லாவிட்டால் நம்முடைய ஆவிக்குரிய நிலைமையைக் குறித்து நாம் வஞ்சிக்கப்பட்டு ஏமாந்துபோக வாய்ப்பு உண்டு!

இன்று அநேக கிறிஸ்தவர்கள், தங்கள் ஜீவியத்தில் வல்லமை வேண்டுமென தேவனிடம் கேட்கிறார்கள். ஆனால் பரிசுத்தத்தின்மீது தீராத வாஞ்சை கொள்ளாமல் நீங்கள் வல்லமை கேட்டால், உங்கள் விண்ணப்பத்தில் தராசு போன்ற சமநிலை காணப்படவில்லை என்பதை இன்று அறிந்துகொள்ளுங்கள். இவ்வித சமநிலை இல்லாமல் வல்லமையைக் கேட்பது பெருத்த அபாயமாகும்! எப்படியென்றால், ஓர் அறுவை சிகிச்சை செய்யும் டாக்டர், கிருமி கொண்ட-ஆயுதங்களை(un-sterile) உபயோகப்படுத்துவது எவ்வளவு அபாயகரமானதோ, அதைக் காட்டிலும் தேவன் தன் வல்லமையை பரிசுத்தமற்ற ஓர் மனுஷனின் கையில் கொடுப்பது மிகுந்த அபாயமானதாகும்! அவ்விதம் தேவன் கொடுப்பது ஜீவனுக்குப் பதிலாக மரணத்தையே கொண்டுவரும். எனவேதான் இன்று அநேக கிறிஸ்தவர்களுக்குத் தேவன் தன் வல்லமையை அளவில்லாமல் கொடுத்துவிட முடியவில்லை!

**ஜெபம்** : *எங்கள் பரம தகப்பனே! "இருதயத்தில் பரிசுத்தம் இல்லையேல் மகிழ்ச்சியும் எனக்கில்லை" என்ற தரத்தில் என் ஜீவியம் அமைந்திட உதவி செய்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**சோதனையை ஜெயிப்பதே பரிசுத்த ஜீவியம்!**

*ஓர் கடும் யுத்தத்திற்குப் பிறகு விளைவதுதான் உண்மையான பரிசுத்தமாகும் (எபேசியர் 6:12). குஷியான நாற்காலியில் அமர்ந்துகொண்டு 'ஆகாய ஊஞ்சலனின் மலர் படுக்கையை' கனவு கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களுக்கு உண்மைப் பரிசுத்தம் ஒருபோதும் கிட்டாது! நம்முடைய இச்சைகளையும்; சாத்தானையும் எதிர்த்துப் போரிடும்போது மாத்திரமே உண்மையான பரிசுத்தத்தை நாம் அடைகிறோம்!!*

*இவ்வாறு, "நம் பரிசுத்தத்திற்கு பிசாசு தடையாக இருந்தால் அவனை ஏன் தேவன் அழிக்கக்கூடாது?" என நாம் கேட்கக்கூடும். இதற்கு விடை யாதெனில், பொன்னைச் சுத்திகரித்துப் புடமிடுவதற்கு ஓர் அக்கினி உலை எங்ஙனம் தேவையோ அதைப்போலவே நம் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு பிசாசுகூட தேவையாய்த்தான் இருக்கிறான்! நம் தசைகள் கடும் அப்பியாசத்திற்குள்ளாகும்போது மாத்திரமே வலிமை பெற்று விளங்குகிறது. இல்லாவிட்டால் நாம் வெறும் கொழுத்த "தோலா-தொப்புளா"மனுஷர்களாய் காணப்படுவோம்! ஆவிக்குரிய ஜீவியமும் இதற்கு ஒப்பானதேயாகும். நாம் ஆவிக்குரிய ஜீவியத்தில் வலிமை கொண்டவர்களாய் இருக்க வேண்டுமென்றால், நமக்கு எதிர்ப்புகள் அவசியம். இதனிமித்தமே நம்மைச் சோதிப்பதற்கு தேவன், சாத்தானை அனுமதித்திருக்கிறார்! கஷ்டமில்லாத இலகுவான வாழ்க்கை கொண்ட ஓர் மனிதன் எப்போதுமே தன் ஆவிக்குரிய ஜீவியத்தில் நலிவுற்று பெலவீனனாகவே காணப்படுவான். அவன் செய்ய வேண்டுமென தேவன் விரும்பினவைகளை அவனால் செய்திட முடியாது! ஆனால், கடுமையான பாடுகளுக்குள்ளும் பரீட்சைக் குள்ளும் பிரவேசித்து ஜெயம் பெற்று வரும் ஒரு மனிதனோ, தேவனுடைய சகல பரிபூரண சித்தத்தையும் செய்து முடிக்க வலிமை பெற்றவனாய் விளங்குவான்!! இதனிமித்தமே, சாத்தானை அழிக்காமல் தேவன் வைத்திருக்கிறார்.*

*ஏதேன் தோட்டத்தில் ஓர் விலக்கப்பட்ட மரத்தை தேவன் ஏன் வைத்தார்? இவ்வாறு அந்த மரத்தை தேவன் வைக்காமலிருந்தால், ஆதாம் பாவம் செய்திருக்க மாட்டானே என்றுகூட அநேகர் எண்ணுகிறார்கள். ஆனால் உண்மை யாதெனில், ஆதாம் பரிசுத்தமாவதற்கு அந்த மரம் அவசியமாயிருந்தது! ஆம், மனுஷனுக்கு சோதனையில்லாமல் பரிசுத்தம் ஒருபோதும் கைகூடாது. இதனிமித்தமே, ஏதேன் தோட்டத்திற்குள் சாத்தான் பிரவேசிக்க தேவன் அனுமதி வழங்கினார்!!*

**ஜெபம்:** *எங்கள் பரம தந்தையே! எங்களை அணுகும் சோதனைகளை உம் கிருபையால் ஜெயித்து "பரிசுத்தம்" அடைந்திட கிருபை செய்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**தேவனோடு ஐக்கியம் ஜெபத்தின் மேன்மை!**

இயேசு தன் பிதாவோடு ஐக்கியம் கொண்டிருந்த நேரம் அவருக்குப் 'பேரானந்தமே' ஆகும். நீங்கள் கடிகார அளவைப் பார்த்து ஜெபிப்பவர்களாய் இருந்தால், தேவனோடு நீங்கள் கொண்டுள்ள உறவு சரியாய் இல்லை என்பதே பொருளாகும். கிறிஸ்துவோடு நாம் கொண்டிருக்கும் உறவு மணவாளனோடு மணவாட்டி கொண்டிருக்கும் உறவிற்கு ஒப்பானது என வேதம் நமக்குப் போதிக்கிறது. திருமணத்திற்கென நிச்சயிக்கப்பட்டு, ஒருவரை யொருவர் ஆழமாய் நேசிக்கும் மணவாளனும் மணவாட்டியும் தாங்கள் உறவாடும் நேரத்தை கடிகார அளவின்படி வைத்துக் கொள்கிறார்கள் என்பதாக கற்பனை செய்து பாருங்கள். அப்படியிருப்பது வினோதமான செயலே ஆகும். ஆம், மெய் அன்பு கொண்டவர்கள் தங்கள் ஐக்கியத்தை கடிகார அளவின்படி கணக்கிடவே மாட்டார்கள். இதைப் போலவேதான் ஜெபமும் இருக்கிறது. கிறிஸ்துவோடு மெய் அன்பு கொண்டு ஐக்கியம் கொண்டவர்கள் 'இத்தனை மணி நேரங்கள்' ஜெபித்ததாக ஒருக்காலும் ஜம்பம் அடித்துக்கொள்ள மாட்டார்கள்!!

வீண் வார்த்தைகளால் நாம் ஏன் ஜெபிக்கவேண்டாம் என்பதற்கு இயேசு காரணம் கூறினார். ஏனெனில், "நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று உங்கள் பிதா அறிந்திருக்கிறார்" என்றே இயேசு கூறினார் (மத்தேயு 6:8). எனவே தேவைகளை அறிவிக்கும் செயலாக ஜெபம் இருக்கக்கூடாது. 'இன்னது தேவை' என்பதை அவர் ஏற்கனவே அறிந்திருக்கிறார். நம் தேவை, நம் சூழ்நிலை, நம் எதிர்காலம் ஆகிய யாவற்றையும் அவர் ஏற்கனவே அறிந்திருக்கிறார்!

உண்மையாகச் சொல்லவேண்டுமென்றால், அவர் நம்முடைய சூழ்நிலைகளை பலவருடங்களுக்கு முன்பாகவே அறிந்திருக்கிறார். "அப்படியானால், நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்?" ஜெபத்தின் உண்மையான நோக்கம்தான் என்ன? ஆம், ஜெபத்தின் முதல் பிரதானநோக்கம், பிதாவோடும் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் ஐக்கியம்கொள்ளும் உறவேயாகும்! இரண்டாவதான அவர் நோக்கம், நாம் தேவனோடு இணைந்து செயல்படும் உடன்ஊழியர்களாய் இருக்கவேண்டும் என்பதுமேயாகும்! நாம் இதற்காகவே ஜெபிக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம்.

***ஜெபம் :*** *எங்கள் பரலோக பிதாவே! எங்கள் ஜெப நேரம் உம்மோடு கொண்ட இன்பமான ஐக்கிய நேரம் என உணர்த்தியமைக்கு நன்றி! இந்த அன்பின் உறவு வளர கிருபை செய்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

### உத்தம கிறிஸ்தவ ஜீவியத்தில் உபவாசம் வேண்டும்!

1கொரிந்தியர் 7-ம் அதிகாரத்தில் பவுலும், மத்தேயு 17-ம் அதிகாரத்தில் இயேசுவும் உபவாசிப்பதின் அவசியத்தைக் கூறினார்கள். குறிப்பாக அசுத்த ஆவிகளைத் துரத்துவதற்கு உபவாசம் அவசியம் என்பதை இயேசு எடுத்துக்கூறினார். எனவே உபவாசம், நாமாகவே விரும்பி, நமக்குள்ள பாரத்தின்படி தெரிந்துகொள்ளும் கிரியையே ஆகும்.

இவ்வாறு உபவாசிக்கும்போது ஒருவருக்கும் தெரியாதபடி உபவாசிப்பதையே இயேசு மிகவும் வலியுறுத்தினார். ஒருவேளை நம் வீட்டில் உள்ளவர்களுக்கு நாம் உபவாசிப்பதை மறைக்க முடியாது. ஆனால் நிச்சயமாய் நாம் மனுஷர் காணும்படி ஒருக்காலும் உபவாசிக்கக்கூடாது! எனவே உபவாசத்தைவிட உபவாசத்திற்குப் பின்பாக உள்ள மனநோக்கம் மிகவும் முக்கியமாகும்!! தன்னுடைய சீஷர்கள் உபவாசிப்பார்கள் என்ற எண்ணத்தில்தான் “நீங்கள் உபவாசிக்கும்போது” (வசனம் 16) என இயேசு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில், ஜனங்களுக்கு முன்பாக உங்கள் உபவாசத்தின் முகவாடலை காண்பிக்க வேண்டாம் என்றும், அப்படிச்செய்தால் நீங்கள் மாயக்காரராய் இருப்பீர்கள் என்றும் இயேசு எச்சரித்தார். ஆனால், இன்று ஏராளமான விசுவாசிகள் தாங்கள் “இத்தனை நாட்கள்” உபவாசித்தோம் என வெளியே ஜம்பமாக கூறுகிறவர்களாகவே இருக்கிறார்கள். இவர்கள் மத்தேயு 6:16-ன் இயேசுவின் கட்டளையை பகிரங்கமாய் அலட்சியம் செய்கிறார்கள். இவர்களின் பலன் இப்பூமியிலேயே அடைந்து தீர்ந்துபோனது என இயேசு கூறினார். அதாவது உபவாசத்தினால் நாம் தேவனிடமிருந்து பெறவேண்டிய பலனை, இப்படிப்பட்டவர்கள் ஒருக்காலும் பெற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றே இவ்வசனம் இடித்து ரைக்கிறது! எனவேதான் நாம் உபவாசிப்பதை மனுஷர் அறிந்துகொள்ளாமல் இருக்கும் பொருட்டு முகத்தைக் கழுவி, தலைக்கு எண்ணெய்பூசி இருக்கவேண்டும் என இயேசு புத்தி கூறினார்.

இவ்வாறு நாம் மெய்யாகவே உபவாசத்தின் பலனைத் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்க வேண்டு மென்றால், நம்மால் கூடுமானமட்டும் அந்தரங்கத்தில் உபவாசித்திட ஜாக்கிரதை கொண்டிருக்கக்கடவோம்! அப்போது, அந்தரங்கத்தில் பார்க்கும் பிதா நம் உபவாசத்திற்கு வெளியரங்கமாய் பலன்தருவார்!!

**ஜெபம்** : எங்கள் பரம தகப்பனே! உம்மிடம் இன்னமும் நெருங்கி வரவும், 'அசுத்தங்களை' (அசுத்த ஆவி) மேற்கொள்ளவும் தந்த உபவாசத்தை அந்தரங்கத்தில் கிரமமாய் செய்திட உதவிசெய்தருளும், இயேசுவின் நாமத்தில், ஆமென்.

**"கண்ணிற்கு" ஒப்பான நம் மனசாட்சி!**

மத்தேயு 6:22, 23-ம் வசனத்தில், "கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்" என இயேசு கூறினார். நமக்குள் இருக்கும் மனசாட்சியையே இயேசு "கண்" எனக் கூறினார். நம்முடைய சரீரத்திற்குரிய கண்ணில் ஏதேனும் தூசி விழுந்துவிட்டால் நம்முடைய எல்லா முக்கியமான வேலைகளையும் அப்படியே விட்டுவிட்டு தூசியை எடுப்பதற்கு நாம் யாவருமே பிரயாசப்படுவது உண்டு. 'ஒரு தூசிகூட' நம் கண்ணில் தங்கிவிட்டால் நம் கண் குருடாக வாய்ப்புண்டு! எனவே தேவன் நம் கண்ணைக் கழுவுவதற்கு இயற்கையாகவே கண்ணின் மேல்பகுதியில் 'கண்ணீர்' என்ற திரவம் கண்ணைத் தொடர்ச்சியாய் கழுவும்படி சிருஷ்டித்திருக்கிறார். இக்கண்ணைப் போலவே நம்முடைய மனசாட்சியைக் காத்துக்கொள்ள வேண்டும் என்றே இயேசு வலியுறுத்தினார். எனக்கும் தேவனுக்கும் இடையில் யாதொரு குறையும் என் கண்ணில் (மனசாட்சியில்) தூசியாகப் படிந்திட அனுமதிக்கவே கூடாது. அப்படி ஏதாகிலும் குறை எனக்குள் ஏற்படுமென்றால் அவைகளை உடனே அறிக்கை செய்து விட்டுவிட்டு, மனந்திரும்பிவிட வேண்டும். இல்லாவிட்டால் அக்குறைகள் என் கண்ணில் தூசியாகப் படிந்து என்னை ஆவிக்குரிய குருடனாக மாற்றிவிடும்!

இன்று அநேக விசுவாசிகள் தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக எத்தனையோ காரியங்கள் செய்தாலும் அவர்களுடைய மனசாட்சி அவர்களை ஏதும் செய்யாதது போலவே காணப்படு கிறார்கள். இது எதைக்காட்டுகிறது என்றால், இவர்கள் மனசாட்சி தேவனுடைய வார்த்தையின் தரத்தின் அளவிற்கு பழக்குவிக்கப்பட வில்லை என்பதையே காட்டுகிறது. நாம் தேவனுடைய வார்த்தையின் தரத்திற்கு ஒப்பாய் நம்முடைய மனசாட்சியை பழக்குவித்தவர்களாய் இருக்கவேண்டும். உதாரணமாய் யாக்கோபு 4:11 வசனத்தில் "சகோதரரே, ஒருவருக்கொருவர் விரோதமாய் பேசாதிருங்கள்" எனக் கூறினார். சிலருடைய மனசாட்சி, சகோதரர்க்கு எதிராய் விரோதம் பேசும்போதே அவர்களை உறுத்துவதாய் இருக்கும். இவ்வாறு, மனசாட்சியை தேவனுடைய வார்த்தையின் தரத்திற்கொப்பாய் பழக்குவித்துக் கொண்டவர்களுக்கே, "உங்கள் இருதயத்தில் கசப்பான வைராக்கியத்தைக்கூட" வைக்காதிருங்கள் (யாக்கோபு 3:14) என புத்தி கூறினார். ஆகவே நாம் எந்த அளவிற்கு நம்முடைய மனசாட்சியில் பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறோம் என்பதே முக்கியமாகும்!

**ஜெபம்** : *எங்கள் பரலோக தந்தையே! 'சிறிய தூசி கூட' எங்கள் கண்களை உறுத்துவதுபோல, உம் வேத வசனத்தின் தரத்தில் வளர்ந்து எங்கள் மனசாட்சி அதற்கேற்ப பயிற்சி பெற கிருபை செய்தருளும், ஆமென்.*

**நல்ல தகப்பன்மார்களாய் இருந்திட வேண்டும்!**

*ஒரு சமயம் தாவீதின் ஜீவியத்தில் அவனுடைய மகன் அப்சலோம், தன் தகப்பனுக்கு விரோதமாகவே திட்டம் தீட்டினான்! அதன் மூலமாய் திரளான இஸ்ரவேலர்களின் இருதயங்களைத் தன் பக்கமாய் கவர்ந்துகொண்டு, முடிவில் தன் தகப்பன் தாவீதை சிம்மாசனத்திலிருந்தே துரத்தி விட்டான்!!*

*ஆனால், அச்சமயத்திலும் சில நண்பர்கள் தாவீதோடு சேர்ந்து துணையாய் நின்றார்கள். அவர்கள் யாவரும் முதல்தரமான போர் வீரர்களாயும், போர்களத்தில் நின்று தாவீதுக்காக யுத்தம் செய்ய ஆயத்தம் உள்ளவர்களாயும் இருந்தார்கள்! இந்த வீரர்கள் ஒருநாளில் அப்சலோமோடு யுத்தம் செய்வார்கள் என தாவீதுக்கு நன்றாகத் தெரியும். ஆகவேதான், தன் படைத்தளபதியாகிய யோவாபிடம், "பிள்ளையாண்டானாகிய அப்சலோமை என்னிமித்தம் மெதுவாய் நடப்பியுங்கள்! (*Deal Gently*)" என கட்டளை கொடுத்தான் (2 சாமு.18.5).*

*இவ்வாறாகவே, நாமும் எப்போதெல்லாம் சபையிலுள்ள கடினமான சகோதரர்களோடு இடைபட வேண்டியிருக்கிறதோ, அச்சமயங்களில் தாவீது அப்சலோமுக்காக சொன்னவார்த்தைகள் நம்முடைய மனதிற்கு முன்பாக கொட்டை எழுத்துக்களில் எழுதப்பட்டிருக்கக் கடவதாக! ஆம், "கர்த்தர் நிமித்தமாய் அந்த சகோதரனை மெதுவாய் நடப்பியுங்கள் (*Deal Gently*)" என்பதே தாவீதோடு இணைந்து நாமும் கூறவேண்டிய அற்புத வார்த்தை களாகும்!*

*பின்நாட்களில் "அப்சலோம் கொல்லப்பட்டான்" என்ற செய்தியை தாவீது கேட்டவுடன், தாவீது மிகவும் அழுது, "என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப்பதிலாக செத்தேனானால் நலமாயிருக்கும்!" (2சாமு.18:33) எனக் கூறினான். பார்த்தீர்களா, தாவீது ஒரு உபாத்தியாயன் அல்ல! முரட்டாட்டம் செய்த தன் மகனிடத்தில் ஓர் தகப்பனின் இருதயம் கொண்டவனாகவே இருந்தான். இந்த தாவீது "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷன்" என அழைக்கப் பட்டதில் ஆச்சரியம் ஏமில்லை!! ஏனென்றால் தாவீதின் இருதயத்தைப் போலவே, தேவனுடைய இருதயத்தின் விருப்பமும் இருந்தது. அதாவது, "நான் உன்னுடைய இடத்தில் மரிக்க விரும்புகிறேன்" என்பதுதானே அவருடைய விருப்பம்!! தேவனுடைய இந்த விருப்பத்தின் பிரதிபலிப்பாகவே, இயேசு கல்வாரியில் நமக்காக மரித்தார். இவ்வாறு தேவனுடைய இருதயத்தோடு நாமும் ஐக்கியமாய் பிரவேசிக்கும் போதுதான், நாம் மெய்யாகவே தகப்பனாய் மாறிட முடியும்!*

***ஜெபம்:*** *பரம தகப்பனே! பிள்ளைகள் எப்படியிருந்தாலும், சகோதரர்கள் எப்படி யிருந்தாலும், எங்கள் உள்ளம் அவர்களிடம் அன்பையும் பட்சத்தையும் இழக்காது நல்ல தகப்பனாய் வாழ கிருபைதாரும், ஆமென்.*

**நம்மைவிட்டு நீங்காத தெய்வ பிரசன்னம்!**

ஒரு சமயம், தேவனுடைய சமூகத்தில் தொடர்ச்சியாய்த் தங்கி வாழ்வதற்கு ஒரு சகோதரன் வாஞ்சை கொண்டார். இந்த இலக்கை அடைவதற்கு கடிகாரத்தின் ஒவ்வொரு ஒருமணி நேர ஓசை நேரத்திலும் சுருக்கமாய் ஜெபிப்பதற்கு தன்னைப் பழக்கிக் கொண்டார். ஆனால் இடைநேரத்தில் உலக அலுவலில் ஈடுபடும்போதோ, தான் தேவனுடைய பிரசன்னத்திலிருந்து விலகுவதாக உணர்ந்தார். ஆகவே, கடிகாரத்தின் ஒவ்வொரு ஒருமணி நேர ஓசை நேரத்திலும் தன்னை தேவனுடைய சமூகத்திற்கு மீண்டும் கொண்டுவர முயற்சித்தார். இவருடைய விருப்பம் நல்லதுதான்! ஆகிலும் தொடர்ச்சியாக தேவ சமூகத்தைக் காத்துக்கொள்ளும் பாக்கியத்தை அவரால் அடைந்திட முடியவில்லை! இவருடைய தவறு என்னவென்றால், தேவனுடைய சமூகத்தை வெளிப்புறமான தன்னுடைய "ஞாபகசக்தியில்" நிறுத்திவைக்க முயற்சித்தார்!! அவருடைய ஞாபகசக்தியின் ஏற்றத்தாழ்வுக்கு இணங்க தேவசமூகத்தின் உணர்வும் அவருக்குள் ஏற்றத்தாழ்வுக்குள்ளாகியது!! இவ்வாறெல்லாம் தேவனுடைய சமூகத்தில் வாழ எத்தனிப்பது சுத்த மதியீனமேயாகும்.

ஏனெனில் **நம்முடைய ஆவியில்தான்** தேவனுடைய சமூகம் இருக்கிறதேயல்லாமல் நம்முடைய ஞாபகசக்தியில் அல்ல!

இன்னும் சில விசுவாசிகள் தாங்கள் மகிழ்ச்சியாய் இருக்கும்போது "தேவனுடைய பிரசன்னத்தில்" இருப்பதாக எண்ணிக் கொள்ளுகிறார்கள். ஆனால் மகிழ்ச்சி அவர்களை விட்டு நீங்கும்போது "தேவ பிரசன்னமும்" அவர்களை விட்டு நீங்கிவிடுகிறது! இன்னும் சிலர் தாங்கள் அழுது துயரப்படும்போது தேவன் அவர்களுக்கு சமீபத்தில் இருப்பதாக எண்ணிக்கொள்கிறார்கள். ஆனால் அந்தோ, ஒருவன் தன் ஜீவகாலமெல்லாம் கண்ணீர் சொரிந்து கொண்டிருக்க முடியாதே!! ஆகவே கண்ணீர் வற்றியவுடன் "தேவ பிரசன்னமும்" நீங்கிப் போகிறது!!

உடைபட்ட ஒரு மனிதனின் அழகைக் காட்டிலும் மேலான அழகு ஒருவனிடத்தில் இல்லையென ஆணித்தரமாய் கூறலாம் (யோவான் 12:24). இதுபோன்ற ஒருவனிடம்தான் பிடிவாதமும், சுய-அன்பும் உடைபட்டு "சாந்தம்" மலர்ந்திட வழி பிறக்கிறது. இவனுடைய கடினமான ஓடு உடைகின்றபடியால், "நொறுங்குண்ட அவனது ஆவியின்" மூலமாய் தனது பிரசன்னத்தை நீங்காத ஐக்கியமாய் தந்தருளுகிறார்!

**ஜெபம்:** பரலோக பிதாவே! எங்கள் உணர்ச்சிகளில் அல்ல, நொறுங்குண்ட ஜீவியத்தில் எங்கள் ஆவியில் தங்கியிருக்கும் உம் பிரசன்னத்தை எந்நாளும் காத்துவாழ கிருபை செய்தருளும், ஆமென்.

### தெய்வீக அன்பு தணிந்திடக் கூடாது!

அன்பற்ற சூழ்நிலையை நாமும் அன்பற்ற உள்ளத்தோடு சந்திக்கலாமா? இவ்வித சூழ்நிலைகளில்தான், "தேவரீர் என் இருதயத்தில் தோன்றும் எல்லாத் தடைகளையும் அகற்றிவிட்டு உம்முடைய அன்பை எனக்குள் ஊற்றிவிடும்!" என ஜெபித்து கதறுபவர்களாய் இருக்க வேண்டும்!!

தேவ அன்பு நம்மில் பூரணமாய் ததும்பி வழியும் மட்டும் இக்கதறல் நம்மோடு இருக்கட்டும்! இவ்வாறு, நம்முடைய அன்பற்ற தன்மைக்காய் தீராத துயரம் கொண்டு தேவனிடத்தில் திரும்பி, "தேவனே என் இருதயத்தை உம்முடைய அன்பினால் நிறைத்துவிடும்!" என நாம் ஜெபித்திடும் நிலைக்கு வருவதை காண்பதற்கு தேவன் எவ்வளவாய் தவித்து காத்துக் கொண்டிருக்கிறார் என்பதை விவரிப்பதற்கு வார்த்தைகளே இல்லை எனலாம்!

ஏதோ தேவன் தம்முடைய அன்பினால் நம்முடைய இருதயத்தை நிரப்புவதற்கு விருப்பமில்லாதிருப்பது போல. . . "தேவ அன்பு என் உள்ளத்தில் நிறையட்டும்!" என முடிவில்லாத ஜெபத்தை நாம் செய்திட வேண்டியதில்லை! ஆம், எவ்வாறு திறந்து வைக்கப்பட்ட ஒரு அறையில் சூரியஒளி பாய்ந்து நிரப்புகிறதோ, அதைப் போலவே நம்முடைய இருதயத்தை தம்முடைய அன்பினால் நிறைத்து விடுவதற்கு தேவன் மகா விருப்பம் கொண்டுள்ளார். நாம் சுவாசிக்கும் காற்று நம்மைச் சுற்றிலும் சூழ்ந்து நெருக்கி இருப்பதைப் போலவே தேவ அன்பும் நம்மைச் சூழ்ந்து எப்போதும் நெருக்கி நிற்கிறது. அந்த அன்பு உள்ளே பிரவேசிக்க முடியாமல், கதவை மூடி தடை செய்யாதிருங்கள்!

நீங்கள் மாத்திரம் தடைகளை அகற்றி கதவைத் திறந்துவிட்டால் தேவ அன்பின் வெள்ளம் உங்கள் உள்ளம் புளகாங்கிதம் அடையும்படியாய் நிறைத்துவிடுவதை காண்பீர்கள்!!

இந்த அன்பின் ஜீவியத்தை வாழ்ந்துவிடும்படி தீராத வாஞ்சை கொண்டவர்கள் மாத்திரமே, பரிசுத்த ஆவியானவர் தங்களை நிறைத்துவிடும்படியாய் எப்போதும் தங்கள் இருதயத்தைக் கழுவி சுத்திகரித்துக்கொள்ள ஜாக்கிரதையாய் இருக்கிறார்கள். தேவனும் இவர்களின் இதய கூக்குரலைக் கேட்டு அவர்களை மீண்டும் மீண்டுமாய் தம் அன்பினால் நிறைத்துக் கொண்டே இருப்பார்!

"இந்த அன்பிற்காய் பசி தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்."

**ஜெபம்** : *எங்கள் பரலோக தந்தையே! எங்கள் இருதயத்தில் உமது அன்பு எந்த சூழ்நிலையிலும் ஆட்கொண்டிருக்க உதவிபுரிந்தருளும்! ஒருபோதும் எங்கள் இதய கதவு அன்பிற்கு அடைபடாதிருக்க கிருபை செய்தருளும், ஆமென்.*

**உலக ஆவிக்கு சிறைபடாது வாழ வேண்டும்!**

தூய்மையான பக்தியே தேவனுடைய பரிபூரண சித்தமும், அவருடைய பார்வைக்கு மகிழ்ச்சியும் நிறைந்ததாகும். இந்த பக்திக்கு களங்கம் விளைவிக்கும் "இப்படியிருந்தால்....." அல்லது "சரிதான், ஆனாலும். . ." ஆகிய தடங்கல் வார்த்தைக்கு இடமே இல்லை! "இந்த உலகத்தோடு நீங்கள் ஒத்தவேஷம் தரிக்கலாகாது" (ரோமர் 12:2). அவ்வளவுதான், இது அழியாத தேவனுடைய வார்த்தை. அதாவது, இந்த புத்திமதிக்கு நீங்கள் "முற்றுப்புள்ளி" வைத்திட வேண்டும்!

இந்த உலகம், என்னென்னவோ ஜாலங்கள் செய்கிறது! நீ ஏன் உலகத்தின் ஆவிக்குள் கொஞ்சம் கைகோர்க்கக் கூடாது என்பதற்கு பல்வேறு காரண யுக்திகளை வாரி வழங்குகிறது. கவனம். . . இதுதான் உலகத்தின் ஆவி! வஞ்சிக்கப்படுபவன் இந்த ஆவிக்கு பலியாகிவிடுவான். இந்த உலகம் உங்களுக்கு கற்றுக்கொடுக்க விரும்புவதெல்லாம், எங்களைப் போலவே "வாலாக இருந்துவிடு!" என்ற அழைப்புதான். ஆனால் சத்திய வேதம் ஓங்காரமிடும் அழைப் பெல்லாம் "நீ தலையாகவே இருந்துவிடு!" என்ற அழைப்புதான்!! (உபாகமம் 28:13).

வேதவாக்கியங்கள் என வரும்போது "ஓர் தனிப்பட்ட 'சுயாதீன' சுதந்திர வாழ்க்கையை" கைக்கொண்டு அனைத்து வேதவாக்கியங் களுக்கும் அப்படியே கீழ்ப்படிந்துவிடுங்கள். ஏனெனில், வேதவாக்கியங்கள் அனைத்தும் பழுதற்றதும், பூரணமுள்ளதும் ஆகும். பூரணமான வேதவசனத்தை, ஒரு மனுஷன் கொச்சைப்படுத்திவிடக் கூடாது. நீங்கள் நடந்துவரும் ஜீவிய பாதை "பழுதற்ற" வேதவாக்கியத்தின்படியான கீழ்ப்படிதலுள்ள ஜீவியம்தானா? என்பதை அடிக்கடி சோதித்துப் பாருங்கள்!

இன்று, மனந்திரும்பி தங்களை சீஷர்கள் என அழைத்துக் கொள்ளும் ஜனங்கள்கூட உலகத்தின் அனுசாரங்களையும், அதின் வழிமுறைகளையும், அது கற்றுக்கொடுத்த பாரம்பரியங்களையும்... ஏதோ, தேவனுடைய வசனத்திற்கும், தேவனுடைய இஷ்டத்திற்கும் நடுங்கி கீழ்ப்படிவதைப் போல, இந்த சீரழிந்த உலக அனுசாரங்களுக்கு அத்தனை உண்மையுள்ளவர்களாய் நடக்கத் துவங்கிவிட்டார்கள்! இவர்கள் வேத வாக்கியங்களுக்கு கொண்டுவரும் அவமதிப்பு கொஞ்ச நஞ்சமல்ல!! நாமோ, உலக ஆவிக்கு சிறைபடாது வாழ கவனம் கொள்ள வேண்டும்!

**ஜெபம் :** *எங்கள் பரலோக பிதாவே! உம்மீது நாங்கள் கொண்ட பக்தியில் சிறிதேனும் 'களங்கம்' இந்த உலகத்தால் உண்டாகாதிருக்க கிருபை தாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**துன்பத்தின் வாய்கால்கள் அனேகரை ஆசீர்வதித்திட முடியும்!**

*தென் இந்தியாவின் டோனாவூரைச் சேர்ந்த ஏமி கார்மைக்கேல் அம்மையார், படுத்த படுக்கையாய் இருந்த காலத்தில்தான், மிக அற்புதமான புத்தகங்களையும், கவிதைகளையும் எழுதினார். அந்த அம்மையார் சுக பெலனோடு இருந்திருந்தால், இந்தப் புத்தகங்களையும் கவிதைகளையும் எழுதியிருக்கவே மாட்டார்! ஆம், நம்முடைய சுகமான சரீரத்திலும் "தொடர்ச்சியாக மாமிசத்தில் முள் கொண்ட" சரீரத்திலும் கிறிஸ்து மகிமைப்பட முடியும்! (பிலிப்பியர் 1:20).*

*ஆகவே நம்மைச் சந்திக்கும் துக்கங்களையும் உபத்திரவங்களையும், தேவனுக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும் நம்மைத் தாழ்த்துவதற்குக் கிடைத்த அருமையான சந்தர்ப்பங்களாகவே நாம் எடுத்துக்கொள்ளக்கடவோம். இனியும், நாம் நமக்காக அழாதிருக்கக்கடவோம்! அதற்குப் பதிலாக, சங்.62:8 கூறுகிறபடி "ஜனங்களே எக்காலத்திலும் அவரை நம்புங்கள். அவர் சமூகத்தில் உங்கள் இருதயங்களை ஊற்றிவிடுங்கள். தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார்" என்றே நாம் இருப்போமாக! ஆம், "உங்கள் இருதயம் நொறுங்குவதற்கு சமீபமான வேளையில்" கர்த்தரும் உங்கள் சமீபமாயிருக்கிறார்! (சங்.34:18).*

*நாம் அழுகையின் பள்ளத்தாக்கில் கடந்து வரும்போதுதான், தேவன் அதை மற்றவர்களை ஆசீர்வதிக்கும்படியான நீரூற்றாய் மாற்றிட முடியும்! (சங்.84:6). பார்த்தீர்களா, நம் துன்பங்களின் மத்தியில் பரத்திலிருந்து வரும் ஜீவத்தண்ணீரால் தேவன் நமக்கு ஆறுதல் செய்து பரவசமளித்ததைப் போலவே. . . . இப்போது, அதே ஜீவத்தண்ணீரை நம்மைச் சுற்றியுள்ள மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கக் கூடியவர்களாய் தேவன் நம்மை மாற்றிவிட்டார்!!*

*ஒரு நாளில் நம் கண்ணீர் யாவையும் துடைத்துப் போடுவதாகவே தேவன் நமக்கு வாக்குதத்தம் செய்திருக்கிறார் (வெளி.21:1-4). அதன் பிறகு துக்கம் இல்லை! உபத்திரவம் இல்லை! மரணமுமில்லை! அழுகையும் இல்லை! கதறலும் இல்லை! வேதனையுமில்லை! . . . . ஏனென்றால், முந்தின அவையாவும் இப்போது ஒழிந்துபோயின!! நம் பிதா நம்மோடு எப்போதும் வாசமாயிருக்கும் அந்தப் புதிய வானத்திற்காகவும் அந்தப் புதிய பூமிக்காகவுமே இப்போது நாம் ஏக்கத்துடன் காத்திருக்கிறோம்!*

*நம் இருதயத்திலிருக்கும் அந்த ஏக்கத்தின் பெருந்தொனியே "கர்த்தராகிய இயேசுவே, சீக்கிரமாய் வாரும்!" என்ற ஜெபமாயிருக்கிறது!!*

**ஜெபம்** : *எங்கள் பரம தகப்பனே! எங்கள் துன்பத்தின் துக்கத்தில் மூழ்கிவிடாதபடி, அதில் கற்ற ஆறுதலையும், திவ்ய சுபாவத்தையும் கொண்டு அனேகரை ஆசீர்வதித்து வாழ்ந்துவிட எங்களுக்கு கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**மனுஷருக்கு முன்பாக கண்ணீர் சிந்தக்கூடாது!**

*இயேசு ஜெபம் பண்ணுகையில், அவருடைய "வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையில் விழுந்தது" என வாசிக்கிறோமே! (லூக்.23:44). வியாகுல நேரத்தில் எந்த மனுஷனிடமும் சென்று நம் "கண்ணீரைக்" காட்டிவிடாமல், 'வழக்கமான' நம் கெத்செமனேக்கு சென்று நம் "பிதாவிடம்" சிந்தும் கண்ணீர் நமக்கு கிட்டிய வாழ்வின் ஒப்பற்ற பாக்கியம் என்றே கூறவேண்டும்!*

*எத்தனை மானிடர் சூழ நின்று நமக்கு ஆறுதல் கூறி என்ன பிரயோஜனம்? அவை அனைத்தும் குப்பைகள்! ஆ, கண்ணீர் துளிகளை நம் நேசரின் ஒரு விரல் வந்து துடைப்பதுதான் எத்தனை ஆறுதல்!!*

*இயேசு மன்றாடி கண்ணீர் வடித்ததெல்லாம், எவ்வித துன்ப சூழ்நிலையிலும் "என் சித்தம் அல்ல உம் சித்தமே ஆகக்கடவது" என்ற மன பாரமேயாகும். "உமக்கு சித்தமாயிருந்தால் மாத்திரமே" இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கட்டும் என்றார் (லூக்கா 23:42). சில வேளைகளில், தேவன் சூழ்நிலைகளை மாற்றக்கூடும்! இன்னும் சில வேளைகளில் சூழ்நிலைகளை மாற்றாமலே, அதற்குள் நடத்திச் செல்வார்! எதுவாயிருந்தாலும் "பிதாவின் சித்தம்" செய்வதே இயேசுவுக்கும், அவருடைய சீஷர்களுக்கும் காணப்படும் பிரதான தவிப்பாகும்! தங்களின் "சுய சித்தம்" செய்து, பிதாவின் சமூகத்தை இழந்து வழ்வதைவிட, சாவதுமேல் என்பதே அவர்களின் கண்ணீர் ஜெபமாயிருக்கிறது!!*

*அவருடைய ஆத்துமா கலங்கிய வேளையில், எப்படியாவது அந்தச் சூழ்நிலையிலிருந்து தான் விடுவிக்கப்பட வேண்டும் என்பது அவரது கூக்குரலாயிராமல். . . . "பிதாவே, உமது நாமத்தை மகிமைப் படுத்தும்!" என்பதே அவரது கூக்குரலாயிருந்தது (யோவான் 12:27,28). ஆகவே, தனக்காக ஒருபோதும் கண்ணீர் சிந்தாமல் "பிதாவின் சித்தம்" செய்யப்பட வேண்டும் என்பதற்கு மாத்திரமே கண்ணீர் சிந்தினார்! ஆகவேதான், தனக்காக அழுத ஸ்திரீகளைக் கண்டு "எனக்காக அழாதீர்கள்!" என (லூக்கா 23:28). சட்டென்று கூறிவிட்டார். அதேசமயம் "உங்களுக்காக அழுங்கள்" என வேண்டிக்கொண்டார். இங்கேயும் எருசலேம் குமாரத்திகள் "சுய-அனுதாபத்திற்காய்" அழுவதற்கு அவர்களிடம் அவர் கூறவில்லை என்பது தெளிவா யிருக்கிறது. மாறாக, தன்னைப் போலவே, 'கெத்செமனே அனுபவங் களில்' பிதாவின் சித்தம் தங்கள் வாழ்வில் நிறைவேறுவதற்கும், பிதாவின் நாமம் மகிமைப்படுவதற்கும் ஜெபித்து அழுதிடவே பாதை காட்டினார்!*

***ஜெபம்** : அன்பின் தந்தையே! எங்கள் கண்ணீரை நீரே கண்டு, எங்கள் இதய வாஞ்சை தீர்த்திட முடியும்.... சுயத்தின் கண்ணீராய் அல்ல, உம் சித்தம் செய்திடும் கண்ணீராய் இருந்திட கிருபை செய்தருளும், ஆமென்.*

## யாரைக்கொண்டும் தேவன் பயன்படுத்துவார்!

தேவனுக்காக எழும்பி நிற்க வாஞ்சைகொண்ட யாவருக்கும் தேவன் தம் வேதத்தில் உற்சாக உத்வேகமூட்டும் வார்த்தைகளைப் பொழிந்திருக்கிறார். அன்று, எரேமியாவிற்கு பொழிந்த வார்த்தைகள் இன்று நம் யாவருக்குமே உரிய வார்த்தைகளாய் இருக்கிறது! சற்றே தயங்கி "நான் பேச அறியாத, வாலிபன்!" என ஒதுங்கிய எரேமியாவை, தேவனுடைய வார்த்தைகள் அத்தனையாய் உற்சாகமூட்டி எழுப்பிவிட்டதுமல்லாமல், "ஒரு தீர்க்கதரிசியாய்" அவனது பணியை கர்த்தருக்கு செய்து முடித்திட கிருபையும் அளித்தது!!

தயங்கிநின்ற எரேமியாவை "நீ பயப்பட வேண்டாம்!" "நான் உன்னுடனே இருக்கிறேன்!" (எரேமியா 1:6-9) என்ற வார்த்தைகள் அவனைத் தட்டி எழுப்பியது. "நான் உனக்கு கட்டளையிடும் வார்த்தைகளை ஜனங்களிடத்தில் பேசு, அதுபோதும்" என்றே அவனை முன்னேறிச் செல்ல தூண்டினார். இங்குதான் அனேகருடைய விசுவாசம் தடுமாறுகிறது! "தங்களால் முடியாது!" என எண்ணும் தடுமாற்றம்! இதுபோன்றவர்களுக்காகவே, ஒருநாளில் தேவன் "பிலேயாமின் கழுதை" பேசும்படிச் செய்தார்! அதன்மூலமாய், தேவன் அறைகூவும் செய்தி என்னவென்றால், ஒரு கழுதையைப் பேச வைத்த ஆண்டவர், உங்களையும் தன்னுடைய பணிக்கு பேசவைத்திட முடியும் என்பதுதான்! ஒருமுறை, எருசலேமிற்கு செல்ல இருந்த ஆண்டவர் இயேசு, "ஒரு கழுதைக் குட்டி" தனக்குத் தேவை என கேட்டு நின்றார். ஆம், ஒருவனைத் திட்டுவதற்கு "ஏய், கழுதை!" என்பார்களே... அதாவது, "மதிகெட்ட மூடன்" என அழைப்பதற்கு ஏதுவான ஒருவனையே தேவன் இன்றும் பயன்படுத்துகிறார்.

இப்போதாவது, நீங்கள் சோர்ந்து தளர்ந்து போகாமல், தேவனிடம் கிட்டிச் சேர்வீர்களா?

நீங்கள் இருக்கும்வண்ணமாகவே அவரிடத்தில் வாருங்கள்! நீங்கள் யார் என்று அவருக்குத் தெரியும். . . உங்களை வனைந்து அவருடைய தீர்மானம் உங்களில் நிச்சயம் நிறைவேறிடச் செய்வார்!

உங்கள் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் தேவன் தமக்கென ஓர் தீர்மானம் வைத்திருக்கிறார் என்பதை அறிந்து, அதை விசுவாசியுங்கள்!!

இந்த ஒப்பற்ற விசுவாசம் கொண்ட நீங்கள், தேவனிடத்தில் கிட்டிச் சேர்ந்து அவரைத் தேடுங்கள்! ஏனென்றால், "தம்மைத் தேடுகின்ற யாவருக்கும், தேவன் பலன் அளிக்கிறார்!!" என (எபிரெயர் 11:6) வேதம் கெம்பீரித்து முழங்குகின்றதே!! அந்த பாக்கியம் உங்கள் யாவரிலும் நிறைவேற தேவன் கிருபை செய்வாராக!!

**ஜெபம்** : எங்கள் பரம பிதாவே! உம் பணிக்கு அழைக்கப்படும்போது, உம்மை விசுவாசித்து, நாங்கள் இருக்கும் வண்ணமாகவே உம்மிடம் வந்து உம்பணிசெய்திட கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.

**நமது தேவன் சர்வ வல்ல தேவன்!**

*எந்த மனிதனும் தீர்க்க முடியாத 'இமயம்' போன்ற பிரச்சனைகள் மத்தியிலும் தன்னுடைய ஜனங்கள் தன்மீது நம்பிக்கையாய் இருப்பதைக் காண்பதில் தேவன் மகிழ்ச்சியடைகிறார்! இதுபோன்ற சூழ்நிலைகளில்தான் "ஓர் சர்வவல்ல தேவனை நான் விசுவாசிக்கிறேன்!" என்ற நம்முடைய விசுவாசத்தை நிரூபிக்கிறோம். ஆனால், இன்று அநேக கர்த்தருடைய ஜனங்கள் தங்கள் 'சொந்த கற்பனைக்குள் அடங்கும்' ஓர் தேவனையே விசுவாசிக்கிறபடியால், மனுஷர் மூலமாகவோ அல்லது பிசாசு மூலமாகவோ உருவாகும் புயல்களையும், மலைகளையும் சந்திக்கும்போது "இவர்களின் தேவன்" உதவிசெய்திட சத்துவமற்றவராய் இருக்கிறார். இந்த தேவன் வேதாகமம் உயர்த்திக்காட்டும் "நம்முடைய தேவன்" அல்ல! ஆம், தங்கள் சொந்த கற்பனையில் இவர்களே உருவாக்கி வைத்திருக்கும் "ஓர் தேவன்!" இது, புறஜாதிகள் வைத்திருக்கும் சிலையைக் காட்டிலும் மேலானதொன்றும் அல்ல!*

*எந்தப் பிரச்சனையாகிலும் "இது மிகப்பெரிய பிரச்சனை" என நம்முடைய தேவனுக்கு உண்டோ? இல்லவே இல்லை! அவ்வாறு இருக்க, மனுஷர்களோ அல்லது பிசாசுகளோ நமக்கு முன்பாக தோன்றச் செய்யும் மலைகளுக்கு நாம் ஏன் பயப்பட வேண்டும்? கானான் தேசத்திலிருந்த அரக்கர்களின் உருவத்தைப் பற்றி இஸ்ரவேலர்கள் கேள்விப்பட்டவுடன் "இது போன்ற அரக்கர்களை எல்லாம் கையாளுவது எங்கள் தேவனுக்கு கடினம்!" என சிந்திக்கத் துவங்கினார்கள். யார் இவர்களுடைய தேவன்? இவர்களை எகிப்திலிருந்து விடுதலை செய்தாரே, அந்த தேவனா? இல்லை, இவர்கள் தங்களுடைய 'கற்பனையில்' கொண்டிருந்த ஓர் சத்துவமற்ற தேவனே இவர்களுடைய தேவனாகும். ஆம், இப்படிப்பட்டவர்களை வனாந்திரத்தில் 38 வருடங்கள் அலையும்படி தேவன் தந்த தண்டனை நமக்கு ஒன்றும் ஆச்சரியமாய் இல்லை (உபாகமம் 2:14). இந்த இஸ்ரவேலர்கள் அவிசுவாசம் கொண்டிருந்தார்கள்! இவர்களுடைய அவிசுவாசம் தேவனை நிந்தித்து, அவர்களுக்காக எந்த கிரியையும் அவர் செய்ய முடியாதபடி அவருடைய கரத்தை கட்டிப்போட்டு விட்டது. இன்றைக்கும் தங்களுடைய அவிசுவாசத்தினால் தேவனுடைய கரத்தைக் கட்டிப்போடும் கிறிஸ்தவர்கள் ஏராளமாய் இருக்கிறார்கள்!!*

*ஆனால் தேவனோ இன்று யோசுவா, காலேப் போன்ற மனிதர்களையே நோக்கிக்கொண்டிருக்கிறார். ஏனென்றால், இவர்களே "தேவனால் கூடாதது ஒன்றுமில்லை!" என விசுவாசித்து அதைப் பெருமகிழ்வுடன் பிரகடனம் செய்கிறவர்கள்!*

***ஜெபம் :*** *எங்கள் பரம தகப்பனே! எத்தனை பிரச்சனைகள் ஆனாலும், அதை தீர்த்து வைத்திடும் உமது சர்வ வல்லமையை விசுவாசித்திடும் நல்ல இருதயம் எங்களுக்குத் தாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## நம் இருதயம் அன்பில் அனல் கொண்டிருக்க வேண்டும்!

ஆண்டவரோ நம்முடைய இருதயம் எப்போதும் அனல் கொண்டிருக்கவே விரும்புகிறார்! அவரை நேசிப்பதிலும், மற்ற விசுவாசிகளை நேசிப்பதிலும் இந்த அனல் எப்போதும் கொளுந்துவிட்டு எரிவதாகவே இருக்க வேண்டும். பழைய ஏற்பாட்டுப் பிரமாணம் நமக்கு எடுத்துக் கூறுகிறபடி, "பலிபீடத்தின்மேல் அக்கினி எப்போதும் எரிந்து கொண்டேயிருக்க வேண்டும். அது ஒருபோதும் அவிந்துபோகலாது!" (லேவியராகமம் 6:13) என்ற தரத்தையே ஆண்டவர் எக்காலத்தும் நம்மில் எதிர்பார்க்கிறார்.

ஒரு உண்மையான இயேசுவின் சீஷனிடத்தில், அடிப்படைத் தகுதியாக தேவன் எதிர்பார்ப்பதையே இவ்வசனங்களில் நாம் காண்கிறோம். இந்தத் தகுதிக்குக் குறைவான அனைத்தும், "தரம் குறைந்ததேயாகும்." முள்புதர் கர்த்தருடைய ஆவியினால் எரிந்து ஜூவாலிக்கும்போது, அதில் பூச்சியோ அல்லது எந்த ஒரு கிருமியோ நிச்சயமாய் உயிர் வாழ்ந்திட முடியாது. அதேபோல் நம்முடைய இருதயங்கள் ஆவியின் அக்கினியால் கொளுந்துவிட்டு எரியும்போது, அந்த இருதயத்தில் அன்பற்ற மனப்பான்மைகள் ஒருபோதும் தொடர்ந்து உயிருடன் வாழ்ந்திட முடியாது!

நாம் அனல் கொண்டிருக்கிறோமா அல்லது குளிர்ந்திருக்கிறோமா அல்லது வெதுவெதுப்பாய் இருக்கிறோமா என்பதைக் கண்டறிய "நம் அன்பின் மனப்பான்மையே" சோதித்தறிவதற்கு ஓர் சிறந்த வழியாகும். "அனல் கொண்டிருப்பது" பிறரை ஊக்கமாய் அன்புகூருவதாகும்! "குளிராய் இருப்பது" பிறரிடம் கசப்பும், மன்னிக்க முடியாத சுபாவமும் கொண்டிருப்பதாகும். "வெதுவெதுப்பாய் இருப்பது" பிறரிடத்தில் கசந்து இருப்பதும் இல்லை . . . அன்பாயும் இருப்பதில்லை என்ற இக்கட்டான நிலையாகும்!!

ஒரு விசுவாசி "யாரைக் குறித்தும் என் இருதயத்தில் யாதொன்றும் இல்லை" எனக் கூறுவானேயானால், அவன்தான் வெதுவெதுப்பாய் இருப்பவன். "உங்கள் இருதயங்களில் ஒருவருக்கொருவர் யாதொன்றும் இல்லாதிருக்கும்போது, நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" என்றா இயேசு கூறினார்? அப்படியில்லவே இல்லை! ஒருவருக்கொருவர் தீய மனப்பான்மை இல்லாதிருப்பது மாத்திரம், இயேசுவின் சீஷர்களைக் கண்டறியும் அடையாளம் அல்லவே அல்ல!! (யோவான் 13:35).

மாறாக, நம் இருதயங்களில் நிச்சயம் ஏதாவது இருக்கவேண்டும். ஆம், நம் எல்லா விசுவாசிகளிடத்திலும் ஊக்கமான அன்பை நம் இருதயத்தில் நாம் பெற்றிருக்க வேண்டும்!

**ஜெபம்** : *அன்பின் பரம தந்தையே! அன்பு என்ற எங்கள் மனப்பான்மையில் யாவரிடம் அனல் கொண்ட அன்பு நிலைத்திட கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**இனியும் நாம் பிசாசிற்கு அஞ்சிடத் தேவையில்லை!**

*மனுஷர்கள் யாவருமே சாத்தானுக்குப் பயந்திருக்கிறார்கள்! ஆண்டவர் நமக்கு காட்ட விரும்பும் முதல் பகுதி என்னவென்றால், சாத்தானுடைய சகல அதிகாரங்களும் சிலுவையிலே உரிக்கப்பட்டு, அங்கு அவன் தோல்வியடைந்தான் என்ற உண்மையை ஆகும் (கொலோசெயர் 2:15, எபிரேயர் 2-14). ஆகவேதான், ஒரு தேவனுடைய பிள்ளையை சாத்தான் எவ்விதத்திலும் தொடமுடிவதில்லை. ஒரு நபரின் பரிசுத்தமாகுதலுக்கு கிரியை நடப்பிக்கும்படி சாத்தானை தேவன் அனுமதித்தால் மாத்திரமே அவனால் தொடமுடியும்!*

மேலும், தேவன் நமக்குக் காண்பிக்க விரும்பும் மற்றொரு பகுதி என்னவெனில், "சாத்தானுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளுவதற்குரிய அதிகாரத்தை" தேவன் தன்னுடைய எல்லா பிள்ளைகளுக்கும் கொடுத்திருக்கிறார் (லூக்கா 10:19) என்ற உண்மையே ஆகும்.

*தங்கள் பாவங்களுக்காக கிறிஸ்து சிலுவையில் மரித்தார் என அறிந்திடும் அநேக விசுவாசிகள்...... அதே சிலுவையில் சாத்தான் முற்றிலுமாய் தோற்கடிக்கப்பட்டான் என இன்னமும் அறியாதிருக்கிறார்கள். எனவேதான் அவர்கள் சாத்தானுக்கு அஞ்சிவாழ்ந்து, அதனிமித்தம் அடிக்கடி மனசோர்வடைகிறார்கள்!*

இயேசு தன் சீஷர்களிடம், "நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்....... விசுவாசிக்கிறவர் களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்" எனக் கூறினார் (மாற்கு 16:15-17).

*மானிட சரித்திரத்தின் ஆரம்ப காலங்களிலிருந்தே புருஷர்களும் ஸ்திரீகளும் பிசாசுகளினால் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இயேசு வந்த பிறகுதான், ஜனங்கள் பிசாசுகளிடமிருந்து விடுதலை பெற்றார்கள்! ஆம், இப்போது சாத்தானை சிலுவையின்மேல் கிறிஸ்து தோற்கடித்துவிட்டார்! ஆகவே எந்த மனுஷனுடைய பாவங்களும் இயேசுவின் நாமத்தில் முழுமையாக மன்னிக்கப்படுவது போலவே, இயேசுவின் நாமத்தில் எந்த மனுஷனும் பிசாசுகளின் பிடியிலிருந்தும் முழுமையாக விடுதலை பெற்றிட முடியும்!*

**ஜெபம் :** *எங்கள் அன்புள்ள பிதாவே! எங்கள் பாவங்களை மாத்திரமல்லாமல், சாத்தானையும் சிலுவையில் ஜெயித்த எங்கள் ஆண்டவர் இயேசுவுக்கு ஸ்தோத்திரம்! இனியும், அவனுக்கு எவ்விதத்திலும் அஞ்சிடாது வாழ கிருபை தாரும், ஆமென்.*

**நம்முடைய காயம் பிறரை ஆசீர்வதித்திடும்!**

*துன்பங்களின் மத்தியில் அன்பையும், மன்னிப்பையும் காத்துக்கொள்வதே "மீட்பின் வல்லமையை" வெளிக்கொண்டு வருவதற்குரிய திறவுகோல் என்ற "அறிவை" இயேசு ஒரு வெளிப்பாடாய் பெற்றிருந்தார். எனவேதான், தேவனைப்பற்றும் அறிவினால் என் தாசனாகிய அவர் அநேகரை நீதிமான்களாக்குவார், அவர்களுடைய அக்கிரமங்களை தாமே சுமந்துகொள்வார் (ஏசாயா 53:11) என நாம் வாசிக்கிறோம்.*

*ஜனங்களை மறுரூபப்படுத்தும் வல்லமை புறப்பட்டுவரும் இரகசியம் சிலுவையில் மாத்திரமே உண்டு என்பதை இயேசு அறிந்திருந்தார்! சிலுவையில் அவருக்கு ஏற்பட்ட அத்தனை கேடு நிறைந்த காயங்கள்தான், இந்த உலகத்தின் மீட்பிற்கு ஏதுகரமாயிருந்தது...... அந்த சிலுவைக்கே இயேசு நம்மை இப்போது அழைக்கிறார்!! (மத்தேயு 16:24). "காயமடைதல்" என்ற பலிபீடத்தில் மாத்திரமே நம்முடைய பலிகளை நாம் தேவனுக்குப் படைத்திட முடியும்!! இந்த காயப்படுவதின் வல்லமையைக் குறித்த மாபெரும் சத்தியத்தை ஏசாயா 53-ம் அதிகாரத்தில்தான் நாம் கண்டுபிடிக்க முடிகிறது. ஆம், "கர்த்தரோ அவரைப் நொறுக்க சித்தமாகி அவரை பாடுகளுக்குள் உட்படுத்தினார். கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்" (ஏசாயா 53:10) என்பதே அந்த ஒப்பற்ற சத்தியம்!*

*தேவனுக்குப் பிரியமானதை (சித்தமானதை) இயேசு எவ்வாறு பெற்றார்? அந்த பிரியம் தேவனுடைய கரத்தில் எவ்வாறு செழிப்பாய் வாய்த்தது? அவர் நொறுக்கப்பட்ட வேளையில், காயமடைந்த வேளையில், அவர் சின்னாபின்னமாக்கப்பட்ட வேளையில்...... அவையாதொன்றிற்கும் பதிலுக்குப் பதில் செய்யாமல், தன்னையே ஒரு பலியாய் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து விட்டார் என்பதுதான் அந்த மேலான இரகசியம்!*

*ஆகவே, நாம் சந்திக்கும் நொறுக்கப்படும் அனுபவம் அழிவுக்குரியது அல்லவே அல்ல! மாறாக அது நமக்கு கிடைத்த ஓர் ஒப்பற்ற சந்தர்ப்பமேயாகும்!!*

*இவ்வித நொறுங்குதலுக்கு நம்மையே ஒப்புக்கொடுப்பதும் அன்பை வெளிப்படுத்துவதும், நம்மை காயப்படுத்திய பாவிகளின் இருதயத்தை தொடலாம் அல்லது தொடாமல் இருக்கலாம்! ஆனால், அது நிச்சயமாய் தேவனுடைய இருதயத்தை தொட்டுவிடும்!*

**ஜெபம்** : *எங்கள் பரலோக தந்தையே! உம்முடைய தழும்புகளால் நாங்கள் குணமடைந்தது போலவே, எங்களை காயப்படுத்துவோர்களை மன்னித்து ஆசீர்வதித்திட கிருபைதாரும், ஆமென்.*

**சிலுவைக்கு நம்மை ஒப்புக்கொடுத்திடக்கடவோம்!**

*சிலுவைக்கு விலகி இயேசு தப்பிச்சென்றிருக்க முடியும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்! ரோம போர் வீரர்கள் இயேசுவைப் பிடிக்க வந்தபோது அவர் பேதுருவைப் பார்த்து "நான் இப்போது பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரெண்டு லேகியோனுக்கும் அதிகமான தூதரை என்னிடத்திற்கு அனுப்ப மாட்டார் என்று நினைக்கிறாயா?" (மத். 26:53) எனக் கேட்டார். ஆம், ஒரு நாடி துடிப்பின் நேரத்திற்குள்ளாக வானங்கள் முழுவதும் ஆயிரமாயிரமான தூதர் சேனைகள் இறங்கிவந்து நிறைத்திருக்க முடியும்! அவ்வாறு தப்பிக்கும் வழியை இயேசு தனக்கென தெரிந்துகொண்டிருந்தால் மனுக்குலம் முழுவதும் கெட்டு சீரழிந்து போயிருக்கும். நாம் இல்லாமல் அவர் பரலோகத்திற்கு திரும்பிச் செல்வதைவிட தன் சொந்த பிதாவினால் கைவிடப்பட்டு பாடுபடுவதையே நமக்காக தெரிந்து கொண்டார்! மனுக்குலத்தை ஆக்கினைக்குள்ளாக தீர்ப்பதற்குப் பதிலாய் "அவர் தன்னையே குற்றநிவாரணபலியாக" (ஏசாயா 53:10) ஒப்புக் கொடுத்தார்..*

*இப்போது இயேசு "என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான்" (யோவான் 14:12) என்றே அறைகூவல் விடுத்தார். இயேசுவைப்போலவே நாமும் அற்புதங்கள் செய்திட முடியும் என்பதை குறிப்பிட்டு அவர் கூறியதாக நாம் எண்ணிட முடியும். ஆனால் "கிரியைகளை" வெறும் அற்புதங்களாக மட்டுப்படுத்தி இயேசு இந்த வசனத்தைக் கூறவில்லை! அவர் குறிப்பிட்ட கிரியைகளெல்லாம், மன்னிக்கும் மனப்பான்மையும், பிறரை ரட்சிப்பதும், பாவிகளில் ஒருவராக எண்ணப்படுவதும், தன்னையே குற்ற நிவாரண பலியாக ஒப்புக் கொடுப்பதுமாகிய கிரியைகளையே இன்று நாமும் செய்திட முடியும்!*

*சிலுவையின் பாதையே, பிறரை இரட்சித்திடும் பாதை! நம் இரட்சகரைப்போலவே, நாமும் அனேகரை 'மீட்டு' நம் திவ்விய அன்பினால் அவர்களை கிறிஸ்துவண்டை சேர்த்திட, சிலுவைக்கு நம்மை ஒப்புக்கொடுக்கக்கடவோம்!*

***ஜெபம்*** *: எங்கள் அன்பின் பிதாவே! சிலுவையை தவிர்த்துவிட்டு வாழ எண்ணும் எங்கள் சுயநலத்தை மன்னியும்! உமது கிரியைகள் எங்களில் வெளிப்பட சிலுவைக்கு எங்களை ஒப்புக்கொடுக்கிறோம், ஆமென்.*

**தேவனோடு தனித்திருக்க நாடுங்கள்!**

*இயேசுவைக் குறித்து "அவர் ஜனங்களை அனுப்பிவிட்ட பின்பு, தனித்து ஜெபம் பண்ண ஒரு மலையின் மேல் ஏறி, சாயங்காலமானபோது அங்கே தனிமையாக இருந்தார்" என மத்தேயு 14:23ஆம் வசனம் எடுத்துரைக்கிறது. ஆனால், இன்றைய நாகரீக உலகத்திலோ, தியான வாழ்க்கையை கைக்கொள்ளுவது அதிக கடினமாய் மாறிவருகிறது! ஏராளமான வேலைகள் மற்றும் நம்மை ஆட்கொண்ட ஏராளமான சிந்தைகள் நம்மை அடித்து வீழ்த்தி "தேவனோடு கொண்டிருக்க வேண்டிய நமது தனிமையான உறவை" அழித்துப்போடுகிறது!! நமக்கு நிஜமாய் நடந்திருக்க வேண்டிய தெல்லாம், இந்த உலகத்தை நாம் சந்திப்பதற்கு முன்பாக "முதலாவது" தேவனிடம் சென்று அவரது வல்லமையைப் பருகி அதன் மூலமாய் நாம் புதுப்பிக்கப் பட்டிருக்க வேண்டும் என்பதேயாகும்.*

*"ஓர் ஞானம் உள்ள ஆத்துமா தனிமையில் ஓய்ந்திருக்கும்" என்றே தியான நேரத்தைக் குறித்து ஒரு பக்தன் குறிப்பிட்டு எழுதினார். ஆனால், நாம் ஓய்ந்திருக்கும்படியான "தனிமை" எங்கேயிருக்கிறது? இன்றைய விஞ்ஞானம், மனிதனுக்கு உலக சொகுசுகளை வழங்கி, இந்த உலகத்தை தழுவிக்கொள்ளாமல் வாழ்ந்திட முடியாததுபோல் அவனது ஆத்துமாவை சூழ்ந்து கொண்டுள்ளது. "உன் படுக்கையில் அமர்ந்திருந்து, உன் இருதயத்தில் தியானமாயிரு" என வேதம் கூறும் ஆலோசனை மிகுந்த ஞானமும் ஆரோக்கியமும் நிறைத்ததாகும். ஆனால், இத்தனை ஆரோக்கியமான ஆலோசனையை, நம்மைச் சுற்றிக் கிடக்கும் செய்திதாள்கள், தொலைபேசி, வானொலி, மற்றும் தொலைக்காட்சி ஆகியவற்றிலிருந்து மீண்டு எங்ஙனம் கைக்கொண்டிட முடியும்?*

*இன்றைய நாகரீக உலகில் பெருகிவிட்ட களியாட்டுகள், நம்மோடு கொஞ்சிவிளையாடும் புலிக்குட்டியைப் போல் நம் மடியில் கிடந்து, வளர்ந்து....... இப்போது நம்மையே விழுங்கிவிடும் அபாயமுள்ளதாய் நம்மைச் சூழ்ந்து நிற்கிறது! நமக்கு ஆசீர்வாதம்போல் தோன்றியதெல்லாம், இப்போது சாபங்களாய் மாறிவருகிறது!! இந்த உலகம் ஊடுருவிச் செல்லாத "ஒரு பாதுகாப்பான இடம்" என ஒன்றுகூட இல்லை!! இதனிமித்தமே "மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" (1கொரிந்தியர் 9:27) என பவுல் கூறினார். நாம் தேவனோடு ஒவ்வொரு நாளும் முன்னேறிச் செல்ல வேண்டுமென்றால், இடையூறுகளையும் சொகுசுகளையும் புறக் கணித்தே முன்னேறிச் செல்ல வேண்டும். சிலுவையின் விலைக் கிரயம் இல்லாமல், நாம் தேவனோடு இசைந்து நடத்திட முடியாது!*

***ஜெபம் :*** *அன்பின் தந்தையே! எங்களைச் சூழ எத்தனை கொடிய பாவ உலகம்! அது அத்தனையும் ஜெயித்து உம்மோடு கொள்ளும் உறவு ஒன்று போதுமே, அதை நாள்தோறும் கண்டடைய கிருபைதாரும், ஆமென்.*

**இயேசுவின் அடிச்சுவட்டில் 'மனச்சோர்விற்கு' இடமில்லை!**

*இன்று ஒருசிலர், சோர்வடைந்துபோய் சாகவிரும்பிய எலியாவின் மாதிரியை, தாங்கள் அடையும் சோர்விற்கு நியாயப்படுத்த சுட்டிக் காண்பிக்கிறார்கள். ஆனால், சோர்வின் வலைக்குள் விழுந்த எலியாவோ அல்லது விபச்சாரத்திற்குள் விழுந்த தாவீதோ நம்முடைய மாதிரியுமல்ல, நமக்கு முன்னோடிகளுமல்ல! இவர்கள், நம்முடைய விசுவாசத்தை துவக்குகிறவர்களும் முடிக்கிறவர்களும் அல்ல! ஆம், இயேசு மாத்திரமே நம் விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிற வருமாயிருக்கிறார்! அவர் தன் ஆத்துமாவில், ஒரு காலத்தும் சோர்வடையவில்லை! அவருடைய ஆத்துமத்தில் உலர்ந்து போன சூனியமோ அல்லது காரிருளோ எக்காலத்தும் கவ்விக்கொண்ட தில்லை! இவ்வாறு "இயேசு நடந்தபடியே நாமும் நடந்திட" (1யோவான் 2:6) அழைக்கப்பட்டிருக்கிறோமேயல்லாமல், எலியா நடந்தபடி நடப்பதற்கல்ல!*

*ஆனால், இன்றுள்ள அநேக மறுபடியும் பிறந்த விசுவாசிகள் தாங்களும் "இயேசு நடந்ததுபோலவே நடக்க முடியும்" என்பதை விசுவாசிப்பதில்லை. ஏனெனில், இவர்கள் கிறிஸ்து ஸ்தாபித்த புதிய உடன்படிக்கையை இன்னமும் விளங்கிக் கொள்ளாமலே யிருக்கிறார்கள். பழைய உடன்படிக்கையின்கீழ் வாழ்ந்த பெரிய தீர்க்கதரிசிகளும் அனுபவிக்க முடியாத உயர்ந்த அளவின்படியான ஜீவியத்திற்குள், கிறிஸ்துவிலிருந்த தேவ வல்லமை தங்களை உயர்த்திட முடியும் என்ற சுவிசேஷத்தின் வல்லமையை இவர்கள், சிறிதேனும் பற்றிக்கொள்ளவில்லை! (மத்தேயு 11:11).*

*"இயேசு இருக்கிற பிரகாரமாகவே நாமும் இவ்வுலகத் திலிருக்கிறோம்" (1யோவான் 4:17) என்றே வேதம் நம்மைக் குறித்து கூறுகிறது! ஆகவேதான் "தமக்கு முன்வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு சிலுவையை சகித்த இயேசுவை நோக்கி" (எபிரெயர் 12:1,2) நம் கிறிஸ்தவ ஓட்டத்தை நாம் ஓட வேண்டும்! அவ்வாறு நாம் செய்தால், நாம் கர்த்தருக்குள் எப்போதும் சந்தோஷமாயிருந்திட முடியும்! (பிலிப்பியர் 4:4). அது மாத்திரமல்ல, "ஒன்றிற்கும் கவலைப்படாத" "மனச்சோர்வில்லாத" வாழ்க்கையை நாம் வாழ்ந்திடவும் முடியும் (பிலிப்பியர் 4:6; மத்தேயு 6:25-34).*

***ஜெபம் :*** *எங்கள் பரலோக பிதாவே! எத்தனை கொடிய சூழ்நிலையிலும் "மனச் சோர்வு" சிறிதும் இல்லாமல் நடந்த இயேசுவின் அடிச்சுவட்டை நாங்களும் விசுவாசத்துடன் பின்பற்றி வர கிருபை செய்தருளும், ஆமென்.*

**மாம்ஷீக மகிழ்ச்சியை நாடுவது கூடாது!**

மகிழ்ச்சியாயிருக்கும் பொருட்டு ஒருவன் கொண்ட எந்த சுய நல விருப்பமும் இச்சைக்கு ஒப்பான பாவமேயாகும்! அதனுடைய வேர் மாம்சத்திலிருக்கிறபடியால், அது தேவனுக்கு முன்பாக ஒருக்காலும் நின்றிட முடியாது!! ஏனெனில், "மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை! அது, தேவனுடைய பிரமாணத்திற்கு உட்பட்டதல்ல! அவ்வாறு உட்படவும் முடியாது!!" என ரோமர் 8:7 ஆணி அறைந்தாற்போல் கூறுகிறது.

இன்றைய 20-ஆம் நூற்றாண்டின் இந்த மனுக்குலம் கொண்டிருக்கும் கொள்கையாதெனில் "சந்தோஷமாயிருப்பதற்கே நாங்கள் பிறந்திருக்கிறோம்!" என்ற ஒரு-வரி கொள்கை மாத்திரமே யாகும். இவர்களில் ஒருவராவது "வீழ்ச்சியுற்ற மனிதன் சந்தோஷத்தைக் கேட்பதற்கு என்ன தார்மீக உரிமையுண்டு?" என தட்டிகேட்பதற்கு தைரியம் அற்றவனாக இருக்கிறான். இவர்களின் புத்தகங்கள், ஆடல் பாடல் அனைத்தும் அவனவன் தனிப்பட்ட விதத்தில் சந்தோஷத்தைத் தேடும் கடும் போராட்டத்தை சுட்டிக் காட்டுவதாகவே உள்ளது! தன்னுடைய உண்மை நிலையை உணர்ந்த எவனும், சந்தோஷத்தைக் கேட்பதற்குரிய உரிமை தனக்கு இல்லையென்பதை உணர்ந்திருப்பான்!

நல்ல உணர்வுள்ள மனிதன் புதிய ஏற்பாட்டின் ஒரு சில பக்கங்களை தியானத்துடன் வாசித்தாலே, சத்திய வேதத்தின் வலியுறுத்துதல் மகிழ்ச்சியை எல்லையாய் வைக்காமல், பரிசுத்தத்தை எல்லையாய் வைத்திருப்பதை மிக எளிதில் கண்டு கொள்ளுவான். ஜனங்களின் 'இருதயத்தை' குறித்த நிலையில் தேவன் அதிக அக்கறை கொண்டிருக்கிறாரேயல்லாமல், அவர்களுடைய உணர்வுகள் எந்த நிலையிலிருக்கிறது என்பது அவருக்கு அதிக முக்கியமல்ல. கீழ்படிதல் கொண்டவனாய் தேவசித்தத்தை நிறைவேற்றுகிறவன் மாத்திரமே சந்தேகத்திற்கு இடமில்லாமல் பூரண மகிழ்ச்சி கொண்டவனா யிருப்பான். ஆகிலும், அவனைப் பொறுத்தவரையில் "தான் எவ்வளவு மகிழ்ச்சியாய் இருக்கிறான்" என்ற கேள்வியல்ல........ தான் "எவ்வளவு பரிசுத்தமாயிருக்கிறான்" என்பதே முக்கிய கேள்வியாய் அவனுக்குள் குடிகொண்டிருக்கும்!

தான் பரிசுத்தமில்லாது வாழ்ந்து கொண்டு, அதேசமயம் ஒருவன் மகிழ்ச்சியை நாடுவது மாபெரும் மதியீனம்!

தேவனுடைய சித்தம் இன்னதென்று அறியவும் பின்பு அதை நிறைவேற்றவும் எடுக்கின்ற முயற்சியே சாலச் சிறந்ததாகும்! எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்க வேண்டும்? என்ற விஷயத்தை கிறிஸ்துவினுடைய தீர்மானத்திற்கு விட்டு விடுவதே ஒப்பற்ற வாழ்க்கையாகும்!

**ஜெபம்** : *அன்பின் பிதாவே! வீழ்ச்சியுற்ற எங்கள் மாம்சத்தில் 'பாவம்' மகிழ்ச்சியை நாடுகிறது! நாங்களோ, பரிசுத்த ஜீவியத்திலும், பிதாவின் சித்தம் செய்வதிலும் பிரதான விருப்பம் கொண்டிருக்க உதவும், ஆமென்.*

**பாவிகளுக்காக மரித்த இரட்சக பெருமான்!**

*ஒரு ஊரில், ஒரு தகப்பன் அந்த மாவட்ட நீதிபதியாய் இருந்தார். ஒரு சமயம், அவரது மகன் ஓர் பெரிய குற்றத்தைச் செய்து, நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டான்!! அவனுக்கு முன்பாக அமர்ந்திருந்த நீதிபதியோ, அவனது சொந்த தகப்பன்!! வழக்கின் முடிவில், 5-லட்சம் அபராதம் அல்லது 10-வருடம் சிறை தண்டனை என தீர்ப்பு வழங்கப்பட்டது!! அதைக் கேட்ட மகன், கண்ணீர் வடித்தான்! நீதிபதி ஆசனத்தில் வீற்றிருந்த அப்பா "மகனே, நான் உன் தகப்பனா யிருந்தாலும், நீதிபதியாகவும் இருக்கிறேன். உன் தண்டனையை நீ செலுத்தியே தீர வேண்டும்" என கூறி நீதிமன்றத்தை கலைந்து போகும்படி கட்டளையிட்டார். தன் நீதிபதி உடையை அங்கிருந்த அறையில் கழற்றி வைத்தார். பின்பு, குற்றவாளிக் கூண்டில் நின்ற தன் மகனிடம், சாதாரண உடையுடன் நெருங்கிவந்து, தன் பெட்டியிலிருந்த "வங்கி-செக்" ஒன்றை எடுத்து, தன் ஜீவ காலமெல்லாம் சேர்த்துவைத் திருந்த 5-லட்சத்தை நீதிமன்ற தண்டனை தொகையாக, தன் மகனுக் கென எழுதினார். தன் அன்பின் கரத்தை, தன் மகனின் தோள்மீது வைத்து "மகனே, இதோ உன் தண்டத்தொகையை நீ விடுதலையடையக் கடவாய்!" என கண்களில் நீர் மல்க கூறி, அவனை விடுவித்தார்!!*

*பார்த்தீர்களா? "நியாயத்தீர்ப்பிற்கு" தேவன் ஓர் நியாயாதிபதி! "அன்பிற்கு" அவர் ஓர் தகப்பன்!! இறைவனின் இந்த விந்தையை எத்தனைபேர் கண்டிருக்கிறார்கள்? கிறிஸ்தவர்களுக்காக இயேசு மரிக்கவில்லை! அவர் இந்துக்களுக்காகவும் மரிக்கவில்லை! அவர் முஸ்லீம்களுக்காகவும் மரிக்கவில்லை! அவர்....... அந்த இரட்சக பெருமான் இயேசு, பாவிகளுக்காகவே மரித்தார்!! (1தீமோ.1:15). கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து, ஒழுங்காக வேதம் வாசித்து, ஜெபம் செய்து, ஆலயத்துக்குச் செல்லும் கிறிஸ்தவர்களில் அனேகருக்கு "இரட்சிப்பு" தூரமாகவே உள்ளது! இவர்கள் தங்களை "பாவிகளாக" எண்ணி இரட்சகருக்கு முன்பாக மனந்திரும்பி வர முடியவில்லை! இவர்கள் "கிறிஸ்தவ பாவிகளாகவே" தங்கள் இரட்சிப்பை இழக்கிறார்கள்!!*

*இந்த உலகில் உள்ள ஒரு தாய்கூட, தனக்கு ஒரு பிள்ளை பிறந்தவுடன் "இப்பிள்ளை மரிப்பதற்காகப் பிறந்தவன்!" என்று கூறுவதேயில்லை....... மாறாக, இவன் "வாழப் பிறந்தவன்" என்றே கூறுவார்கள். ஆனால், இந்த சர்வ லோகத்தில், ஒரே ஒரு பிள்ளை மாத்திரமே "மரிப்பதற்கென்று பிறந்தவன்!". அந்த ஒப்பற்ற தியாகத்தை மானிடருக்காக செய்தது இயேசு ஒருவர் மாத்திரமே!! மானிடரின் பாவத்திற்காக மரித்து, மரணத்தையும் ஜெயித்து உயிரோடெழுந்த வரும் இந்த தியாகபெருமான் இயேசு ஒருவரே ஆவார்!!*

***ஜெபம்** : எங்கள் பரம பிதாவே! பாவிகளாகிய எங்களை இரட்சித்திட நீதியின் தண்டனையை எங்களுக்காக ஏற்றீரே! உம் தியாகத்திற்கு நாங்கள் அடிபணிகிறோம், தயவாய் இரட்சித்து ஏற்றுக்கொள்ளும், ஆமென்.*

## ஜீவனுக்குள் பிரவேசிக்கும் 'சிலரில்' நாம் இருக்க வேண்டும்!

*ஒரே ஒரு தடவை கூட பாவம் செய்வதைக்காட்டிலும், ஓர் சிறிய "சந்தர்ப்பவசமாய்" தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருப்பதைக் காட்டிலும், தங்கள் கண்களைப் பிடுங்கி எறிவதற்கும், தங்கள் கையை வெட்டி எறிவதற்கும் ஆயத்தமாய் தீர்மானித்து நிற்பவர்கள் பாக்கியவான்கள்! இவர்களே இயேசுவின் உண்மை சீஷர்கள்!! (மத்தேயு 5:29,30). இவ்வித உறுதியான தீர்மானத்தோடு, எந்த விலைக்கிரயமானாலும் சிறிதும் தயங்காமல் கீழ்ப்படிந்து, சுயத்திற்கு மரிக்கும் இடுக்கமான வழியாய் நடக்கத் தீவிரிக்கும் ஜனங்களையே தேவன் இப்பாரெங்கும் ஏங்கித் தேடுகிறார். இவ்வழியாய் நடக்க ஆர்வம் கொண்டவர்களோ மிகமிக சிலர்! இயேசுவும் இப்படித்தான் தீர்க்கதரிசனம் உரைத்தார், "ஜீவனுக்குப் போகிற நெருக்கமான வழியைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலரே" (மத்தேயு 7:14) என்றார். இப்போது கேளுங்கள்:*

*"உள்ளிருந்து பேசும் ஆவியானவரின் சத்தத்திற்கு" எக்கிரயமானாலும் செலுத்திக் கீழ்ப்படியத் துணிந்தவர்களும் மிகச் சிலரே!*

*தேவனை தங்கள் முழு மனதோடும் உண்மையாய் நேசிப்பவர்களும் மிகச் சிலரே!*

*உலக ஆதாயத்தையும்; கனத்தையும்; அதன் இன்பத்தையும் உதறித் தள்ளி, தங்கள் ஆண்டவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதற்கு அவைகளை வெறுத்து விட்டதினிமித்தம், அதை மிகுந்த சந்தோஷமாய் எண்ணிக் கொள்பவர்களும் மிகச் சிலரே!*

*தேவனுடைய பார்வைக்கு முன்பாக மாத்திரமே ஜீவித்து, மனுஷர் தங்கள் ஜீவியத்தை அங்கீகரித்தாலும் அல்லது அங்கீகரிக்காமல் போனாலும், அது தங்களுக்கு எந்த வித்தியாசமும் ஏற்படுத்தாது என அறைகூவி ஜீவிப்பவர்களும் மிகச் சிலரே!*

*நீதியும், சமாதானமும், பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷமுமாகிய தேவனுடைய இராஜ்ஜியத்தையே எக்கிரய மானாலும், முதன்மையாய்த் தேடுபவர்களும் மிகச் சிலரே!*

*இந்த ஆசீர்வதிக்கப்பட்ட "சிலரில் ஒருவராய்" இருந்திடவே நம் உள்ளம் நாடுவதாக!!*

***ஜெபம்*** *: பரலோக தந்தையே! கேட்டின் விசால வழியிலிருந்து 'ஜீவனின்' இடுக்கமான வழிக்குள் வந்தோம்! அந்த 'சிலரில்' நாங்களும் ஒருவராய் நிலைத்திருக்க கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**முழுமையும் தேவனுக்கே வாழ்ந்திட வேண்டும்!**

*"அங்கு தாழ்விடத்திலுள்ள, தண்ணீரண்டைக்கு அவர்களைக் கொண்டுபோ! நான் அவர்களை பரீட்சிக்க வேண்டும்" (நியாயாதிபதிகள் 7:4) என தேவன் கிதியோனுக்கு கட்டளையிட்டார். அந்த பதினாயிரம்பேரும் தண்ணீரண்டைக்கு வந்தபோது, அவர்களில் பெரும்பாலோர் தங்களுடைய சத்துருவைக் குறித்த யாதொரு எண்ணமும் அற்றவர்களாய் "குனிந்து, தண்ணீருக்குள் தலையை பதித்து, சுவைத்து சுவைத்து குடித்தார்கள்!". இன்றும் அநேக கிறிஸ்தவர்களுடைய நிலை இவ்வாறாகவே இருக்கிறது. உலகத்தின் கவர்ச்சிகளைக் கண்டமாத்திரத்தில், தங்கள் ஆண்டவரையும் அவருக்குரிய யுத்தத்தையும் மறந்துவிட்டு...... பொருளாசைபிடித்து உலக செல்வத்தைத் தேடி........ தங்கள் தலையை கவிழ்த்து, அதில் பதித்துக்கொள்கிறார்கள்! அன்றையதினம், கிதியோனின் வீரர்களில் 9,700 பேர் தகுதியை இழந்துபோனார்கள்!!*

*எஞ்சியிருந்தவர்கள் 300-பேர் மாத்திரமே! இந்த புருஷர்கள் மாத்திரமே, தண்ணீரண்டை வந்தபோதும், எதிராளியைத் தொடர்ந்து கண்காணித்தார்கள்......... அதே வேளையில், தங்கள் தாகத்திற்குத் தேவையான தண்ணீரை மாத்திரம் தங்கள் கைகளால் அள்ளிக்குடித்தார்கள்! உத்தம விசுவாசிகளாக சித்தரிக்கப்படும் இவர்கள், பணத்தையும் உலகப்பொருட்களையும் புழங்கினார்கள். "ஆனால்" அவைகளால் ஆட்கொள்ளப்படவில்லை! தங்கள் வேலைகளில் உண்மையுள்ளவர்களாய் இருந்து தங்கள் ஜீவனத்துக்குரியவைகளைச் சம்பாதித்தார்கள். மீதியான தங்கள் நேரம் முழுவதையும், ஆண்டவருக்காக அவர்களால் என்ன செய்ய முடியுமோ அந்த ஊழியங்களைச் செய்தார்கள்!! "இத்தகைய ஜனங்களே எனக்குத் தேவை!" என தேவன் உரைத்தார். அன்றைய சேனையில் 300-பேர் மாத்திரமே நிலைத்திருந்தார்கள்! முதலில் திரண்டு வந்த 32,000 பேரில் இவர்களின் விகிதம் 1% மாத்திரமே!! அன்றும், இன்றும் இந்த குறைவான சதவீதமே நிலைத்திருக்கிறது....... ஏனெனில், ஜீவனுக்குப் போகிற வழி இடுக்கமாயும், அதை கண்டுபிடிப்பவர்கள் வெகு சிலராயும் இருக்கிறார்கள்!! வாக்குத்தத்த பூமிக்கு புறப்பட்டு வந்த 600,000 புருஷர்களில் யோசுவா, காலேப் ஆகிய இரண்டு புருஷர்கள் மாத்திரமே பிரவேசித்தார்கள்! ஆகிலும், முழு இருதயம் கொண்ட "இந்த சிலரில் மாத்திரமே" ஆண்டவர் இன்றும் பிரியமாயிருக்கிறார்!!*

**ஜெபம்** : *எங்கள் பரம பிதாவே! உம் நோக்கத்தை தங்கள் வாழ்வில் நிறைவேற்றுபவர்கள், முழுமையும் உமக்குத் தந்தவர்கள்! உலகத்தின் 'தேவை' தவிர, முழுமையும் உமக்காய் வாழ அருள்புரியும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## T.V.பிரசங்கம் நம் மெய் விசுவாசத்தை மங்க வைத்துவிடக்கூடாது!

இன்று ஜனங்களுக்கு "பாவத்தை ஜெயிப்பதைவிட" "சரீர சுகமே!" மேலோங்கிய விண்ணப்பமாயிருக்கிறது! இவர்களுக்கு ஆத்துமாவைவிட, சரீரமே எல்லாம் என ஆகிவிட்டது!! இந்த நிலைக்கு காரணம் "இன்றைய பிரசங்கிகள்" என்றே கூறலாம்! அதுவும் இன்றைய "T.V. பிரசங்கிகள்" அதிக கேடு செய்கிறார்கள்! அன்றைய விசுவாச வீரர்கள் "தேவனுக்கு எவைகளை இன்னும் அதிகமாய் கொடுக்கலாம்!" என்பதில் வாஞ்சையும் ஜெபமும் கொண்டிருந் தார்கள்! இன்றைய தரம்கெட்ட விசுவாசமோ "தேவனிடத்திலிருந்து எவைகளை இன்னும் அதிகமாய் பெற்றுக் கொள்ளலாம்!" என்பதில் சரிந்து உருண்டுபோய்விட்டது! இந்த தரம் கெட்ட விசுவாசத்திற்கே "ஏராளமான விசுவாசிகள்" சபையில் சேர்கிறார்கள்!! இதனிமித்தம் இவர்களின் தரம் கெட்ட சுய-நல ஜெபத்தாலும்...... முடிவில், இவர்களைக் கொண்ட சபையும் தரம் கெட்ட சபைகளாய் போய்விடுகிறது!! ஆ, இது துயரம்!!

T.V. பிரசங்கிகள் துரிதமாய் விதைத்துக் கொண்டிருக்கும் இந்த "போலி விசுவாசத்திற்கு" எதிராய் நாம் "போர் முழக்கம்" விடுக்க வேண்டும்! அன்று, மார்ட்டின் லூத்தர் கூறும்போது "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என இயேசுவின் இரத்தத்தினால் உண்டான பாவ மன்னிப்பையும், நீதியாகுதலையும் முன்வைத்து . . . "இன்று நான் இந்த போர்க்களத்தில் நிற்கிறேன்!" என்றார். அந்தப் போர்க்களம் இப்போது முடிந்துவிட்டது!

இன்று நமது போர்க்களமாய் இருப்பதெல்லாம் "விசுவாசத்தினாலே ஐஸ்வர்யம், சுகம், சௌக்கியம்...." என்ற சீர்கெட்ட போலி விசுவாசத்திற்கே போர்க்கோலம் ஏற்றிட வேண்டும்!!

ஜெபம் என்ற மா வலியதோர் ஆவிக்குரிய ஆயுதம். . . . இன்று எப்படி எப்படியோ தேய்ந்து மழுங்கி சீர்கெட்டு நிற்கிறது! ஆனால், குழு ஜெபம். . . . சங்கிலி ஜெபம். . . . மாத ஜெபம்,. . . . இன்னும், எப்படி வகை வகையாய் பிரித்து, பிரித்து வைத்து ஜெபிப்பது போன்ற METHOD - 'வரையறைப்படுத்திய ஜெபங்களோ' ஏராளம் மலிந்து கிடக்கிறது! ஆம், இன்று "தேவபக்தியின் (ஜெபத்தின்) வேஷம் - FORM உண்டு! ஆனால், அங்கு வல்லமை இல்லை!!" *(2 தீமோத்தேயு 3:5).*

இந்நிலை மாறி, "தேவனுடைய இராஜ்ஜியமும், வல்லமையும், மகிமையும்" (மத்தேயு 6:10) என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் வல்லமை நிறைந்த ஜெப வீரர்களாய் மாறிட தேவன் நம் ஒவ்வொருவருக்கும் அருள்புரிவாராக!

**ஜெபம்** : *எங்கள் பரலோக தகப்பனே! "மாயமற்ற விசுவாசத்தை" எங்களில் வைத்திட விரும்பும் உம் தூய வசனங்கள், இன்று T.V.பிரசங்கங்களால் கறைப்பட்டு "மாய விசுவாசமாய்" மங்கிவிட்டதே!! இந்த வஞ்சகத்திலிருந்து எங்களை காப்பாற்றும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**நம் சரீரமாகிய தேவனுடைய வீட்டில் பரிசுத்தம் வளர வேண்டும்!**

*ஒரு சமயம், புகைபிடிக்கும் ஒரு கிறிஸ்தவரிடம் நான் பேசிக்கொண்டிருந்தேன். அவரிடம், "உங்கள் சபையில் அமர்ந்து நீங்கள் சிகரெட் குடிக்க முடியுமா?" என்று கேட்டேன். அதற்கு அவர் "அது ஒருக்காலும் முடியாது! ஏனெனில், சபை கட்டிடம் தேவனுடைய வீடு!" என்றார். இப்போது நான் அவரை திரும்பிப் பார்த்து "சகோதரனே, உண்மையில் உங்கள் சரீரம்தான் தேவனுடைய வீடு! (1கொரி.6:19). யாதொரு சபை கட்டிடமும் தேவனுடைய வீடு அல்ல!!" என்றேன். மேலும் "நீங்கள் உரைத்தது போல், ஒரு சபை கட்டிடத்திற்குள் விபசாரம் செய்ய மாட்டீர்கள்! சபை கட்டிடத்திற்குள் ஆபாச இணையதளத்தை பார்க்க மாட்டீர்கள்! ஆனால் கிறிஸ்து உங்களுக்குள் வாழும்போது, உங்கள் சரீரம்தான் இப்போது தேவனுடைய வீடாய் இருக்கிறது. ஆகவே உங்கள் சரீரத்திலுள்ள அவயவங்களை வைத்து நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதைக் குறித்து மிகுந்த கவனமாய் இருங்கள்!" எனக் கூறினேன். ஆம், புகைபிடித்தல், மதுபானம் அருந்துதல், போதை மருந்து அருந்துதல் அல்லது அசுத்தமான எண்ணங்களை உங்கள் சிந்தைக்குள் வர அனுமதித்தல் .... ஆகிய யாவும் உங்கள் சரீரத்தையும் உங்கள் மனதையும் கொஞ்சங்கொஞ்சமாய் அழித்துவிடும்!!*

*கிறிஸ்தவ ஜீவியம் ஒரு பந்தய ஓட்டத்திற்கே ஒப்பாயிருக்கிறது. நாம் பாவத்தைவிட்டு திரும்பி மறுபடியும் பிறந்தவுடன், இந்த ஓட்டப்பந்தயத்தின் துவக்க எல்லையில் வந்து நின்றுவிடுகிறோம். பின்பு இந்த பந்தய ஓட்டம் துவங்கி, உங்கள் ஜீவகாலமெல்லாம் தொடர்ந்து ஓடவேண்டும். நாம் ஓடுகிறோம்... ஓடுகிறோம்... ஓடிக்கொண்டே இருக்கிறோம்! இவ்வாறாக, ஒவ்வொருநாளும் பந்தய முடிவின் எல்லைக் கோட்டை நெருங்கி, நெருங்கிச் சென்று கொண்டேயிருக்கிறோம்! ஆனால், நாமோ நம்முடைய ஓட்டத்தை ஒருநாளும் நிறுத்திவிடக் கூடாது!*

*இதுதான், இந்தப் பூமியில் நாம் வாழவேண்டிய மிகச் சிறந்த வாழ்க்கையாகும்! ஏனெனில், இதன் மூலமாய் உங்கள் ஜீவியத்திலுள்ள கெட்ட பகுதியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாய் தூய்மை பெற்று... வருடங்கள் செல்லச் செல்ல, நீங்கள் தேவனைப் போலவே அதிக அதிகமாய் உருமாறிவிடுவீர்கள்.!!*

***ஜெபம் :*** *அன்பின் பிதாவே! எங்கள் சரீரத்தை உமது வீடாக மாற்றியமைக்கு நன்றி! உமது வீடு நாளுக்குநாள் பரிசுத்தத்தில் வளர்ந்துவர கிருபை செய்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**முழு அர்ப்பணமே கிறிஸ்தவ ஜீவியம்!**

ஒரு கிறிஸ்தவன், தான் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டவுடன் கண்டிப்பாய் "தண்ணீர் ஞானஸ்நானம்" எடுத்திருக்க வேண்டும். தண்ணீர் ஞானஸ்நானம் எடுப்பது, ஓர் திருமண சான்றிதழ் பெறுவதற்கு ஒப்பாகும்.! அதே சமயம், ஒரு திருமண சான்றிதழ் மாத்திரமே நீங்கள் பெற்றுக் கொண்டதால், நீங்கள் திருமணமானவர்களாய் மாறிவிட முடியாது. இதைப்போலவே, நீங்கள் தண்ணீர் ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டால் மாத்திரமே "ஒரு கிறிஸ்தவனாய்" நீங்கள் மாறிட முடியாது! ஆம், நீங்கள் மெய்யாகவே திருமணம் செய்து கொண்ட பிறகுதான், நீங்கள் ஒரு திருமண சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும்!! இதற்கு ஒப்பாகவே, உங்களை முழுமையும் கிறிஸ்துவுக்கு கொடுத்த பின்புதான், நீங்கள் ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ள முடியும்!! ஞானஸ்நானத்தில் நீங்கள் முழங்கும் சாட்சி என்னவெனில், "என் பழைய ஜீவியத்திற்கு நான் முற்றுப்புள்ளி வைத்து, இயேசு கிறிஸ்துவை என் ஜீவியத்தில் ஆண்டவராய் ஏற்றுக்கொண்டேன்!" என்பதேயாகும்.

நல்ல கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் ஏராளம் பேசிக்கொள்வார்கள்! அதைப்போலவே, நீங்களும் இயேசுவிடம் பேசி. ...அவர் உங்களிடம் வேதப்புத்தகத்தின் மூலமாய் பேசுவதை "ஒவ்வொரு நாளும்" நீங்கள் செவிகொடுத்திட வேண்டும்!! ஒரு நல்ல மனைவி, தன் கணவனுக்கு மகிழ்ச்சி தராத யாதொன்றையும், ஒருபோதும் செய்திட மாட்டாள்! எதைச் செய்தாலும், தன் கணவரோடு இசைந்து செய்திடவே விரும்புவாள்! ஒரு மெய்யான கிறிஸ்தவனும், "இயேசு பார்த்திட விரும்பாத சினிமாவைப் பார்ப்பது".... போன்ற கிறிஸ்துவுக்குப் பிரியமில்லாத யாதொன்றையும் செய்திட மாட்டான்! ஆம், அவன் இயேசுகிறிஸ்துவோடு சேர்ந்து செய்திட முடியாத "யாதொன்றையும்" செய்திட மாட்டான்!!

இது ஓர் ஆச்சரியம் நிறைந்த அற்புத வாழ்க்கை! ஏனெனில், இவ்வுலகில் யாருக்கும் கிடைத்திடக்கூடாத "தலைசிறந்த நண்பரோடு!" நாம் வாழுகிறோம்!! நாம் ஒருபோதும் தனிமையாய் இருப்பதில்லை.... ஏனெனில், இயேசு எக்காலத்தும், எந்த இடத்திலும் நம்மோடு கூடவே இருப்பார்! நம்முடைய பிரச்சனைகளை அவரிடம் பகிர்ந்துகொண்டு, அதை தீர்ப்பதற்குரிய உதவியையும் அவரிடம் கேட்டிட முடியும். இந்த ஜீவியமே மகிழ்ச்சி நிறைந்த ஜீவியம்! கவலையிலிருந்தும் பயத்திலிருந்தும் விடுதலை பெற்றிடும் ஜீவியம்! இந்த ஜீவியம், தன் முழுமையையும் ஆண்டவருக்கு அர்ப்பணித் தவனுக்கே உரியதாகும்!

**ஜெபம் :** *எங்கள் பரலோக தந்தையே! கணவன் மனைவி திருமண வாழ்விற்கு ஒப்பாய் எங்கள் முழுமையும் கிறிஸ்துவோடு கலந்து வாழும் உத்தம ஜீவியம் எங்களுக்குத் தாரும்! ஆமென்.*

### "மனந்திரும்ப" வலியுறுத்தும் மெய் சுவிசேஷம்!

யோவான் ஸ்நானகன் தொடங்கி இயேசுவும், பவுலும், பேதுருவும் மற்ற எல்லா அப்போஸ்தலர்களும் "மனந்திரும்புதலையே" எல்லாவற்றிற்கும் முதலாக பிரசங்கித்தார்கள். ஆனால் இன்றோ. . . துரதிருஷ்டவசமாய், "மனந்திரும்புதல்" கடைசிக்கெல்லாம் கடைசியாக பிரசங்கிக்கப்படுகிறது!!

இதற்கு நேர்மாறாக, தேவனை-மையமாகக் கொண்ட சுவிசேஷமோ "மனந்திரும்பும்படியே" மனுஷனை அழைக்கிறது! மெய்யான மனந்திரும்புதல் கீழ்க்கண்டவாறு மனுஷனுக்கு அறைகூவல் விடுக்கிறது:

- ஒவ்வொருவரும் தங்கள் ஜீவியத்தில் மையமாய் வீற்றிருக்கும் "சுயத்திலிருந்து" திரும்பிவர வேண்டும்!

- தன் சுயசித்தம் செய்வதிலிருந்து திரும்பிவர வேண்டும்!

- தானாக தெரிந்துகொண்ட வழியில் நடப்பதிலிருந்து திரும்பிவர வேண்டும்!

- பணத்தை நேசிப்பதிலிருந்து திரும்பிவர வேண்டும்!

- உலகத்தையும், உலகத்திலுண்டான மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை மற்றும் ஜீவனத்தின் பெருமையிலிருந்து திரும்பிவர வேண்டும்!

***எல்லாவற்றிற்கும் மேலாக,***

- தேவனிடத்திற்கு திரும்பிவர வேண்டும்!

- தன் முழு இருதயத்தோடும் அவரை அன்புகூர திரும்பிவர வேண்டும்!

- அவரையே தன் வாழ்வின் மையமாய் வைத்து, இதுமுதற்கொண்டு அவருடைய சித்தம் செய்திட திரும்பிவர வேண்டும்!

"சிலுவையில் கிறிஸ்து அடைந்த மரணத்தின்மீது" கொண்டிருக்கும் விசுவாசம், அவன் மனந்திரும்பினால் மாத்திரமே அவனுடைய பாவங்களை மன்னித்திட முடியும்! அதன் பின்பு, பரிசுத்த ஆவி அபிஷேகத்தின் வல்லமையைப் பெற்று, அது அளித்திடும் பெலனைக் கொண்டு, நாள்தோறும் தன் சுயத்தை வெறுத்து. . . அதனிமித்தமாய், தேவனை-மையமாய் கொண்டதோர் வாழ்க்கையை அவன் வாழ்ந்திட முடியும்!! இந்த சுவிசேஷத்தையே, இயேசுவும் அப்போஸ்தலரும் பிரசங்கித்தார்கள்!

**ஜெபம்:** *பரம தகப்பனே! எங்கள் ஜீவியத்தில் நாங்கள் காணும் ஒவ்வொரு அசுசியையும் விட்டு, மனந்திரும்பி இயேசுவைப்போல் மாறிட கிருபை செய்திடும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**வேத வசனத்தில் தங்கி குடியிருக்க வேண்டும்!**

*"நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்" என இயேசு யோவான் 8:31-ல் ஆணித்தரமாகக் கூறினார். 'நிலைத்திருந்தால்' என்பது ஆங்கிலத்தில் 'தங்கியிருந்தால்' (ABIDING) என்றே பொருள்படுத்துகிறது. சொந்த வீட்டில்தான் நாம் எப்போதும் தங்கியிருக்க முடியும்! வாடகை வீட்டில் உள்ளவர்கள், தங்கள் வீட்டை அவ்வப்போது காலிசெய்து விடுவார்கள்!! இன்று அனேகர், தங்கள் சௌகரியப்படி அவ்வப்போது தங்கள் வீட்டை மாற்றிவிடுகிறார்கள்... அதாவது, வேத வசனத்தின்படியான வாழ்வில் 'தங்கி' நிலைத்திருப்பதில்லை!!*

*நம் முகத்தில் ஏதோ "கரி" ஒட்டியிருந்தால், அதை யாராவது ஒருவர்தான் நமக்குச் சொல்ல வேண்டும்! அல்லது, ஒரு கண்ணாடியின் முன்னால் நின்று அதைக் காணவேண்டும்!! அதுபோன்றதொரு "நல்ல கண்ணாடியே, தேவனுடைய வார்த்தை!" என யாக்கோபு 1:23 கூறுகிறது. ஆனால், துயரம் யாதெனில் எல்லோருமே தேவனுடைய வார்த்தையை கேட்கிறார்கள்... வெகு குறைவானவர்களே, அதன்படி செய்து, தங்கள் முகத்தில் உள்ள "கரியை" அகற்றிக்கொள்ளுகிறார்கள் (வசனம் 22). இவர்களே தங்கள் "செய்கையில் பாக்கியவானாய்" இருப்பவர்கள்! (வசனம் 25). ஆம், இவர்கள் கேட்டார்கள், அதன்படி செய்தார்கள்! மற்றவர்களோ, கேட்டார்கள் ஆனால் அதன்படி செய்யவில்லை!!*

*வசனத்தின்படி அதை கைக்கொள்ளுகிறவர்கள் என்பதின் அர்த்தம் "இவர்கள் பூரணர்கள்" என்பதா? இல்லை! மாறாக, வசனத்தைக் கைகொள்ளும் செயல் இவர்களுக்குள் நடந்து கொண்டிருக்கிறது என்பதுதான்!! உதாரணமாய், "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல்" என பிலிப்பியர் 4:6 கூறுகிறதே... இந்த வசனத்தைக் கைக்கொள்பவர்கள் "பூரண கவலைப்படாத வாழ்க்கை வாழ்பவர்கள்" என அர்த்தமா? இல்லை! "ஒன்றுக்கும் கவலைப்படாத வாழ்க்கை" 5000-அடி உயரம் கொண்ட வாழ்க்கை. இதை கைக்கொள்பவர்கள், இப்போது சுமார் 100-அடி முன்னேறி சென்று கொண்டிருக்கிறார்கள். இவர்கள் 5000-அடியை அடைந்துவிட்டார்களா? இன்னமும் இல்லை. ஆனால், அதை நோக்கிய 'செயலில்' முன்னேறுகிறார்கள். உத்தம கிறிஸ்தவ ஜீவியத்தில், "தேங்கிய நிலை" என்று இல்லவே இல்லை! மலை உச்சிக்கு 100-அடி சென்ற சைக்கிள், அங்கு நின்றுவிட்டால், உடனே கீழே இறங்கத் துவங்கிவிடும். அதுபோலவேதான் வசனத்தைக் கேட்டு தொடர்ந்து கைக்கொண்டு ஜீவிக்காதவர்களின் நிலையும் பின்மாற்றம் அடைகிறது!!*

**ஜெபம்** : *அன்பின் தந்தையே! ஒரு வீட்டில் நிலைத்து தங்கியிருப்பதுபோல், உம்முடைய வசனத்தில் நிலைத்திருந்து, ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சியடைய உதவிசெய்தருளும், ஆமென்.*

**குறையாத தெய்வ அன்பு வேண்டும்!**

"நேசம் மரணத்தைப் போல் வலிது!" (உன்னத. 8:6) என்றே வேதம் கூறுகிறது. அதாவது, மரணம் எந்த மனிதனையும் தப்பவிடாமல் யாவர் மீதும் வலிமையாய் சம்பவிப்பது போலவே, தெய்வ அன்பும் ஒருவர் பாக்கி இல்லாமல் மனுவர்க்கத்தின் எல்லோரையும் நேசிக்கிறது! இப்போதோ புதிய உடன்படிக்கையில் இயேசு மரணத்தையே ஜெயித்து விட்டார்! எனவே, இப்போது "திவ்ய அன்பே (நேசமே) மரணத்தைக் காட்டிலும் வலிது!!" என நாம் கூறிட முடியும். இயேசுவின் இப்பூலோக வாழ்க்கையில் "சிலுவையின் வழியாய்" அவர் வெளிப்படுத்திய தேவ அன்பை, மானிடரின் எவ்வித கொடிய வெறுப்பும் கசப்பும்; ஆவிக்குரிய மரணத்தைக் கொண்டுவரும் எவ்வித கொடிய பாவ விஷமும்; அந்த அன்பை மேற்கொள்ள முடியவில்லை! இருளில் உதித்த இத்தேவ அன்பின் வெளிச்சத்தை, இருளானது பற்றிக்கொள்ள முடியவில்லை! ஆம், மாம்சம் ஜெயிக்கப்பட்டது. . . ஏனெனில், அது தொடர்ச்சியாய் சிலுவையில் அறையப்பட்டு விட்டது. இவ்வாறு மாம்சமும் அதன் ஆசை இச்சைகளும் தொடர்ச்சியாய் வெறுக்கப்பட்டு சிலுவையில் அறையப்படும் போதுதான், அந்த கடின திரை கிழிக்கப்படுகிறது. ஆ, இப்போது நாம் எல்லோரையும் திவ்ய அன்பினால் அன்புகூர்ந்துவிட முடியும்.!

இவ்வொப்பற்ற தெய்வஅன்பு தன்னில் குறைவுபடுவதைக் கண்டு, என்ன கிரயமானாலும் அவ் அன்பைப் பெறுவதற்கு கூக்குரலிட்டு கதறுபவனே, மாம்சத்தின் வழியாய்ச் செல்லும் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தின் "சிலுவை உபதேச" வெளிப்பாட்டைப் பெறுவான்!

இன்று அநேக விசுவாசிகள், குறிப்பாய் பரிசுத்தத்தைப் பிரசங்கிக்கும் பிரசங்கிகளிடம்கூட அவர்களின் அன்பு தங்கள் குழுவினருக்குள் மாத்திரமே வரையறுக்கப்பட்டதாய் இருக்கிறது. இவர்கள் தங்கள் சொந்த குழுவினரைப்பற்றி தீமையாகப் பேசாமல் இருக்கலாம். ஆனால் மற்ற விசுவாசிகளைப்பற்றி தீமையாய் பேசவோ, தீமையானவைகளைக் கேட்கவோ செய்கிறார்கள்! இந்நிலை உங்கள் வாழ்க்கையில் காணப்படுகிறதா? என்பதை சற்றே ஆராய்ந்து பாருங்கள். மரணமானது, யாரென்றுபாராமல் யாவரையும் ஆட்கொள்வதுபோல், யாராயிருந்தாலும் நேசித்திடும் நேசமே, மரணத்தைக்காட்டிலும் மிக வலிது! அந்த அன்பையே நாம் நாடிடக் கடவோம்!!

***ஜெபம் :*** *எங்கள் பரம தகப்பனே! யார்மீது கொண்ட நேசத்திலும் நாங்கள் குறைந்து போகாதிருக்க, காரிருள் பகையையும் மேற்கொண்டு அன்புகூர்ந்திட கிருபைதாரும்! ஆமென்.*

**சிலுவையின் பாதையில் செழிப்பின் உபதேசம்!**

*தேவன் அருளும் கடின சூழ்நிலைகள் எதுவாயிருந்தாலும்..... உங்கள் சிலுவையை மனப்பூர்வமாய் சகித்து, அந்த சூழ்நிலையில் தேவனுடைய முகத்தை நாடுங்கள். . . உங்கள் அருகில் அவர் நிற்பதை தரிசித்து,அவரோடு கொண்ட ஐக்கியத்தில் உங்கள் இருதயம் சந்தோஷப்படுவதை காண்பீர்கள்! அது, தோன்றி மறையும் "உலக சந்தோஷம் அல்ல" இருதயத்தில்பெற்ற நிரந்தர சந்தோஷம்! (யோா.15:22).*

*"ஒரே, ஒரு முறை" அவரைக் கண்ட உறவில் சந்தோஷம் அடைந்தவன். . . சிலுவையை மனப்பூர்வமாய் ஏற்று "மீண்டும். . . மீண்டும்" அவருடைய உறவில் மகிழ்வான்! அவன் கண்களுக்கு முன்பாக இயேசுவின் இனிய முகம் காணுமே அல்லாமல், சூழ்நிலை களோ அல்லது அதற்குரிய மனிதர்களோ காணப்பட மாட்டார்கள்! சூழ்நிலையின் வெம்மை அகோரமாயிருந்தாலும், அவர்களின் நெஞ்சம் தேவனுடைய உறவில் களிகூர்ந்திருக்கும்! ஆனால் அந்தோ! "சிலுவையின் உபதேசத்தை" உபதேச அளவில் கேட்ட அனேகர், அன்றொருநாள் "பலவந்தத்தில் சிலுவை சுமந்த" சீமோனைப் போலவே (மத். 27:32) சூழ்நிலைகளில் சிக்கி தவிக்கிறார்கள்! அந்த சூழ்நிலைகளுக்குரிய மனிதர்களே இவர்கள் கண்முன் எப்போதும் நிற்கிறார்கள்! ஆ, இது துயரம்!! இயேசு தொடர்ந்து யோவான் 16:23-ல் கூறுகையில் "அந்த நாளிலே" (உபத்திரவத்தின் ஊடாய் என்னைக் கண்ட நாளிலே) "நீங்கள் என்னிடத்தில் ஒன்றும் கேட்கமாட்டீர்கள்" என்றார். உண்மைதான், அவரது உறவில் களித்தவன் "நீர் இன்றி, எனக்கு வேறெதுவும் வேண்டாம்" என தாவீது, சங்கீதம் 73:25-ல் கூறியதுபோல், கூறி நிற்பான்! இதுவன்றோ, உத்தம கிறிஸ்தவம்! இந்த தெய்வ உறவின் "மகிழ்ச்சியை" நிறைவாய் தங்கள் நெஞ்சில் கொண்டவர்கள் பாக்கியவான்கள். . . இவர்களே, தேவனை மெய்யாய் ஆராதிப்பார்கள்!! (சங்கீதம் 100:2). "இருதயத்தின் நிறைவான சந்தோஷம்" தேவனை ஆராதிப்பதற்கு அவசியமான முக்கிய பங்கில் ஒன்றாய் இருக்கிறது!!*

*ஆகிலும், அவ்வேளையில் கேட்கும்படியே இயேசு கூறினார்! மண்ணுக்குரிய யாதொன்றும் அல்ல. . . "அவர் நாமத்தினால்" கேட்கும் படியே கட்டளையிட்டார் (வசனம் 24). அவருடைய நாமம் அல்லது பிதாவின் நாமம் என்பது அவரது திவ்விய சுபாவமேயாகும்! அன்று அவசர சூழ்நிலையில் நீங்கள் விரும்பிய "பொறுமையை" கேளுங்கள்! "மீண்டும்" அவரைக் காணும்போது "சாந்தகுணத்தை" கேளுங்கள்! "இயேசுவின் தாழ்மையை" கேளுங்கள். . .மெய்யாய் சொல்ல வேண்டுமென்றால் "இதுவே" செழிப்பின் சுவிசேஷம் (Prosperity Gospel) . . . மற்றவை, அழிவின் மண்ணுக்குரிய சுவிசேஷம்!!*

***ஜெபம் :*** *எங்கள் பரலோக பிதாவே! எங்களை நேசித்து, உம்முடைய திவ்விய சுபாவம் அனைத்தையும் நாங்கள் பெற்று செழிப்பாகும்படி அருளிய சிலுவையின் பாதைக்கு எங்களை அர்ப்பணிக்கிறோம்! ஆமென்.*

**எதிர்கொள்ளும் சோதனையை ஜெயித்திட ஜெபம் தேவை!**

*சோதனைக்கும், பாவத்திற்கும் உள்ள வித்தியாசத்தை நாம் நன்கு அறிந்திருக்க வேண்டும். நாம் 'திடீரென்று' ஒன்றைப் பார்த்ததினிமித்தம் சோதிக்கப்பட்டால், அது பாவமாகாது! ஆனால் நம்மைச் சோதித்த ஒன்றைத் தொடர்ச்சியாக பார்ப்போமென்றால் அல்லது அவைகளைச் சிந்தையில் வைத்து சிந்திப்போமென்றால் . . . . ஆ, இப்போது நீங்கள் பாவம் செய்துவிட்டீர்கள்! நாம் சோதிக்கப்படுவதை ஒருக்காலும் தவிர்க்கவே முடியாது. ஆனால் நம்மைச் சோதித்தவைகளிலிருந்து நம் கண்களையோ அல்லது நம் மனதையோ நிச்சயமாய் திருப்பிக் கொள்ளமுடியும்!! இவ்விதம் நம் சித்தத்தை நாம் எவ்விதம் அப்பியாசப்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்துதான் நாம் பரிசுத்தமாகிறோமா அல்லது பாவத்தில் மூழ்குகிறோமா என்பதை நிர்ணயிக்க முடியும்.*

*நாம் சோதிக்கப்பட்டதற்காக நாம் குற்றவாளிகள் என தேவன் ஒருபோதும் நம்மைப் பிடிப்பதே இல்லை. ஆனால் நாம் சோதனைகளை எதிர்த்து நிற்க வேண்டுமென தேவன் திட்டவட்ட மாக விரும்புகிறார்! ஒரு பரிசுத்தவான், "பறவைகள் என் தலைக்கு மேல் பறந்து செல்வதை நான் தடை செய்யவே முடியாது. ஆனால் அவைகள் என் தலையில் உட்கார்ந்து கூடுகட்டுவதை என்னால் நிச்சயமாய் தடை செய்ய முடியும்" என கூறினார். ஆம், சோதனை உங்களிடத்தில் வருவதை நீங்கள் ஒருபோதும் தடை செய்யவே முடியாது. ஆனால், அந்த சோதனை உங்கள் மனதில் அமர்ந்து தங்கிவிடுவதை நீங்கள் நிச்சயமாய் தடை செய்திட முடியும்!*

*கெத்சமெனே தோட்டத்தில் பேதுரு, யாக்கோபு, யோவானைப் பார்த்து, "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என இயேசு கூறினார் (மத்.26:41). சீஷர்களை நோக்கி சோதனை நெருங்கி வந்ததை இயேசு அறிந்திருந்தார். எனவே, அந்த சோதனையை சந்திப்பதற்கு அவர்களை ஆயத்தம் செய்ய இயேசு விரும்பினார். ஆனால் அவர்களோ ஜெபிப்பதற்குப் பதிலாக நித்திரை பண்ணினார்கள். அதன் விளைவாக, சோதனை வந்தவுடன், ஓர் போர்ச்சேவகனின் காதை பேதுரு வெட்டினான். பேதுரு விழித்திருந்து ஜெபம் செய்யாதபடியால் பாவத்தில் விழுந்தான்! ஆனால் விழித்திருந்து ஜெபம் செய்த இயேசுவோ மிகுந்த தூய்மையாயும் அன்பாயும் நடந்துகொண்டார்!! நம்மை முன்கூட்டியே எச்சரிப்பதற்கு தேவன் எப்போதும் உண்மையுள்ளவராயிருக்கிறார். ஆவியானவர் நம் இருதயத்திற்குள், "இப்போது சற்றே அமர்ந்து உன் நேரத்தை ஜெபத்தில் செலவிடு!" என மெல்லிய தொனியாகப் பேசுவதை நாம் எல்லோருமே கேட்டிட முடியும்!*

***ஜெபம் :*** *அன்பின் தகப்பனே! சோதனையோடுகூட தப்பித்துக் கொள்ளும் வழியைத் தரும் ஜெபஜீவியம் எங்கள் வாழ்வில் நீங்காத பங்காய் மாறிட கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**தேவனிடத்தில் சேர்வதே பாவத்தை ஜெயித்திடும் இரகசியம்!**

*"எங்களைத் (திராணிக்கு மேலான) சோதனைக்குட்படப் பண்ணாமல்..." என்ற விண்ணப்பத்தைத் தொடர்ந்து, "தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்" என்ற விண்ணப்பம் வருவதைப் பார்த்தீர்களா! (மத்.6:13). "இரட்சித்துக் கொள்ளும்" என்ற வார்த்தைக்கு விரிவாக்கம் யாதெனில், "எங்களை உம்மண்டை இழுத்துக் கொள்ளும்" என்பதுதான்! எனவே இந்த ஜெபம், "எங்களைத் தீமையிலிருந்து விடுவித்து, உம்மண்டை இழுத்துக்கொள்ளும்" என்பதாகவே உள்ளது. தேவனும், தீமையும் வேறு வேறு திசையிலிருந்து நம்மை இழுக்கும் வலிமையான சக்திகளாகும். ஆகவேதான், "தகப்பனே, தீமையை நோக்கி இழுக்கும் சக்தியை என் மாம்சத்தில் நான் அதிகமாய் உணருகிறேன். ஆனால் நீரோ என்னை அந்தப் பாதைக்குள் போகவொட்டாதிரும்! அத்தீமைக்கு என்னை ஒப்புக்கொடுக்க நானும் விரும்பவில்லை. ஆண்டவரே, என்னை நீர் தயவாய் உம் பாதைக்குள் இழுத்துக்கொள்ளும்" என்றே ஜெபிக்கிறோம். பாவத்தின்மீது நாம் ஜெயம் பெற்ற வாழ்க்கை வாழ வேண்டுமென்றால், "நான்* **தேவனண்டையில்** *இழுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்ற தீராத வாஞ்சையும் தாகமும் மிகமிக முக்கியமானதாகும்!*

*இன்று அநேகக் கிறிஸ்தவர்களிடத்தில், "பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது" (ரோமர் 6:14) என்ற பொன்னான வாக்குத்தத்தம் அவர்கள் ஜீவியத்தில் நிறைவேறாததற்கு காரணம், பாவத்தின் பிடியிலிருந்து விடுதலையாக வேண்டும் என்ற தீராத வாஞ்சையும் தாகமும் அவர்களிடம் இல்லாததால்தான்! இவர்கள் தேவனிடம் சென்று, "ஓ, என் தேவனே என்ன விலைக்கிரயமானாலும் அதைச் செலுத்த நான் ஆயத்தம்... நீரோ என்னைப் பாவத்தின் பிடியிலிருந்து விடுதலை செய்யும்!" என ஒரு தடவைகூட கதறி ஜெபித்திருக்கவே மாட்டார்கள். ஏனெனில் பாவத்திலிருந்து விடுதலை பெறவேண்டும் என்ற 'தீராத தாகம்' இவர்களுடைய ஜீவியத்தில் இல்லை. . . . அவ்வளவுதான்! இவர்களோ, மோசமான நிலைக்கு வியாதிப்பட்டு விட்டால் "அதனிமித்தம்" தேவனிடம் கூக்குரலிட்டு கதறி ஜெபிப்பார்கள். ஆனால் அந்தோ...! இவர்கள் நோயுற்றிருப்பதைவிட, பாவம் செய்வதே மகா கொடியது என்பதை உணருவதேயில்லை!! எனவேதான் இவர்கள் தோல்வியின் படுகுழிக்குள் மூழ்கியிருக்கிறார்கள் என்பதில் எவ்வித ஆச்சரியமுமில்லை!!*

*"உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடுவீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்" (எரேமியா 29:13) என்றே தேவன் கூறுகிறார்.*

**ஜெபம்** : *எங்கள் பரம பிதாவே! பாவத்திற்கு எதிர்முனையில் நிற்கும் உம்மிடம் சேர்வதே ஜெயத்தின் இரகசியம் என அறிந்தோம்! உம்மிடம் கூக்குரலிட்டு தீவிரமாய் உம்மைச் சேர்ந்திட கிருபைதாரும், ஆமென்.*

**“சகலமும்” நன்மையாய் நடந்திட தேவனிடம் விசுவாசம் வேண்டும்!**

**யோ**சேப்பின் வாழ்க்கையை சற்று தியானியுங்கள். அவன் தனக்கு கிடைத்த வெளிச்சத்தின்படி தீமையிலிருந்து விலகி தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழ வாஞ்சித்து முயற்சித்தான். அவன் தேவனை பிரியப்படுத்தவே சதா விரும்பினான். தேவனும் அவனை மனநிறைவோடு ஆசீர்வதித்தார்! “ஆனால்” அவன் எவ்விதம் ஜனங்களால் நடத்தப்பட்டான் என்பதைப் பார்த்தீர்களா? அவனுடைய பத்துசகோதரர்களும் சேர்ந்து அவன்மீது பொறாமை கொண்டு அவனை எகிப்தின் கையில் விற்றுப்போட்டார்கள். இந்நிகழ்ச்சியைக் காண்பது **மகா கொடியதாய்** இருக்கிறதல்லவா? “ஆனால்” யோசேப்பை எகிப்தின் இரண்டாவது அதிபதியாக தேவன் நியமிப்பதற்கு இவைகள் யாவும் தேவனுடைய திட்டமாய் இருந்ததென இறுதியில் காண்கிறோமே!! அவனுடைய சகோதரர்கள் அவனுக்குச் செய்த தீமைகள் முடிவில் நன்மையாகவே விளங்கியது! பின்பு, யோசேப்பு எகிப்தை அடைந்தவுடன் போத்திபாரின் வீட்டில் வேலைக்காரனாக விற்கப்பட்டான். அங்கேயோ, போத்திபாரின் மனைவி அவனைத் தூண்டி சோதித்தாள். தெய்வபயம் கொண்ட யோசேப்போ அவளுடைய கபட ஆசைக்கு இணங்க மறுத்தான்! சோதிக்கப்பட்ட அந்த சூழலை விட்டே வெளியேறி ஓடினான்!! உடனே போத்திபாரின் மனைவி அவனைப் பொய்யாகக் குற்றம் சாட்டி அவனைச் சிறைச்சாலைக்குள் தள்ளினாள்.

இவ்விதநிகழ்ச்சி **கொடியதாய்** இருக்கிறதல்லவா? “ஆனால்” யோசேப்பை சிங்காசனத்தில் அமர்த்துவதற்கு சிறைச்சாலையின் வழியாகத்தான் தேவன் திட்டம் தீட்டியிருந்தார்! எப்படியெனில், அந்த சிறைச்சாலையில்தான் பார்வோனின் பான பாத்திரக்காரனை யோசேப்பு சந்தித்து அதன் விளைவாய் இறுதியில் பார்வோனுக்கு அறிமுகமானான் என்பதை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம் (ஆதி.39:41). யோசேப்பிற்கு, பல்வேறு ஜனங்கள் இவ்வாறு தீங்கு விளைவிக்க முயற்சித்தார்கள். “ஆனால்” தேவன் தன் சர்வவல்லமை யுள்ள ஆளுகையைக்கொண்டு, யோசேப்பின் வாழ்க்கை யைக் குறித்து தான் கொண்டிருந்த தீர்மானம் நிறைவேறுவதற்கு அத்தீமைகள் யாவையும் நன்மையாக முடியும்படி செய்தார்!! (ரோமர் 8:28). இதைப்போலவே நமக்கும் நடந்தேறும்! “சகலமும்” தேவன் நம் வாழ்க்கையைக் குறித்து கொண்டிருக்கும் திட்டம் நிறைவேறும் படிக்கே நடந்தேறும்! முடிவில், நம்மை **கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாய்** நிச்சயமாய் மாற்றுவார்!! ஆனால். . . . இவைகளை நாம் விசுவாசிக்க வேண்டும்! ஏனெனில், நம் விசுவாசத்தின் அளவின்படி மாத்திரமே நாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்!

**ஜெபம்** : *எங்கள் பரம தந்தையே! வாழ்வின் கொடிய சூழ்நிலைகளில், சகலமும் நன்மைக்கேதுவாய் கிரியை செய்திடும் உம் கரத்தை விசுவாசத்தோடு காண கிருபை செய்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**பிறருடைய வீழ்ச்சியில் அவர்களை நம் ஜெபத்தினால் தூக்கிவிட வேண்டும்!**

*நல்ல சமாரியன் உவமையில் ஆசாரியனின் (பாதிரியார்) மனோபாவத்திற்கும், சமாரியனின் மனோபாவத்திற்கும் உள்ள வேறுபாட்டைக் காண்கிறோம். வீழ்ச்சியுற்றுக் கிடந்த மனிதனை ஆசாரியன் கண்டு "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! நான் இவனைப்போல் வீழ்ச்சியடையவில்லை!" எனக் கூறி விலகிச் சென்றிருப்பான் (லூக்கா 10:30-37). இன்றும், ஒரு விசுவாசி வீழ்ந்தவுடன் இந்த ஆசாரியனைப் போலவே இன்னொரு விசுவாசி நடந்து கொள்ளுகிறார்! அவர் மற்றவர்களிடம் சென்று, "பாருங்கள், அந்த சகோதரன் விழுந்து விட்டார்" எனக் கூறுகிறார்!! அங்கே இந்த விசுவாசி மறைமுகமாகக் கூறுவது யாதெனில், "பார்த்தீர்களா! நான் வீழ்ச்சியடையவில்லை!" என்ற ஜம்பம்தான்!!*

*ஆனால், இவர்களுக்கெல்லாம் மாறாக நல்ல சமாரியன் என்ன செய்தான்? அவன், தான் பாவத்திலிருந்து ஜெயம் பெற்றதற்காக ஆண்டவரை ஸ்தோத்தரித்துவிட்டு விலகிச் செல்லவில்லை. அவன் உடனே கீழே இறங்கி, தூக்கி எடுத்து . . . . அவன் சுகமாகும்படி சத்திரத்துக்கும் கொண்டுபோனான்! இந்த உவமானத்தை இயேசு கூறிவிட்டு, "நீயும் போய் அந்தப்படியே செய்!" (லூக்.10:37) என்றே ஆணையிட்டார். இன்று நீங்கள், ஓர் சகோதரனிடத்தில் பெலவீனத்தைக் காணும்பொழுது அல்லது அவன் தன் ஜீவியத்தின் ஒருபகுதியில் வீழ்ச்சியடைவதைக் காணும்பொழுது இந்த நல்ல சமாரியனைபோலவே மனோபாவம் கொண்டிருக்கிறீர்களா? அந்த சகோதரனை உங்கள் ஜெபத்தினால் தூக்கியெடுத்து, அவன் குணமடையும்படி, இயேசுவினிடத்தில் கொண்டு செல்லுகிறீர்களா? ஆம், உங்கள் ஜீவியம் தேவனை மையமாகக் கொண்டிருக்கிறதா? இல்லையா? என்று அறிவதற்கு இவ்வித நிகழ்ச்சி நமக்குக் கிட்டும் நல்ல பரீட்சையாகும்.*

*"நான் மற்றவர்களைவிட மிகுந்த ஆவிக்குரியவன்!" என காண்பிக்க இச்சிக்கும் சுயம்-மையம் கொண்ட விருப்பத்தினால்தான், பிறர் பாவத்தில் விழும்போது அவர்களிடம் நாம் அக்கறை காட்டுவதில்லை. இது மகா கொடிய தீமையாகும்! நாமோ, வீழ்ச்சியுற்றவர்கள்மீது பரிதவித்து, அவர்களுக்காக ஜெபிக்கிற வர்களாய் மாறிட வேண்டும்!*

***ஜெபம்:*** *எங்கள் அன்பின் பிதாவே! நாங்கள் ஆவிக்குரிய பெருமை அற்றவர்களாய், பிறருடைய வீழ்ச்சியில் மெய்யான கரிசனைகொண்டு அவர்களுக்காக ஜெபித்திடும் தாழ்மை உள்ளம் தாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

### அன்பில் பெருகிடக்கடவோம்!

ஆண்டவராகிய இயேசு பத்து கற்பனைகளை இரண்டு கற்பனைகளாகத் தொகையிட்டுக் கூறினார். முதலாம் கற்பனை யாதெனில், "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக" என்பதுதான். இரண்டாம் கற்பனை யாதெனில், "உன்னிடத்தில் நீ அன்புகூர்வதுபோல பிறனிடத்திலும் அன்புகூரு வாயாக" என்பதே ஆகும் (மத்தேயு 22:37). இந்த இரண்டாவது கற்பனையைத்தான் இயேசு புதிதான கட்டளை எனக் குறிப்பிட்டு, "நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்" என சீஷர்களிடம் கட்டளையிட்டார் (யோ.13:34).

ஓர் உண்மையான இயேசுவின் சீஷன், தேவனையே மையமாகக் கொண்டு வாழ்ந்திட வாஞ்சிப்பான். தன் வாழ்வில் தேவன் கொண்டிருக்கும் சித்தத்திற்குப் புறம்பாகத் தனக்கென எவ்வித இலட்சியமோ அல்லது விருப்பமோ ஒருபோதும் கொண்டிட மாட்டான். இவ்விதம் தேவனை மையமாகக் கொண்டு ஜீவிக்கும் இந்த சீஷன், இயேசு தன்னை நேசித்தது போலவே தன் சகோதரர்களையும் பங்கமின்றி நேசிப்பான்! நம் சகோதர்களிடம் நாம் கரிசனை கொள்வதே அவர்களை அன்புகூர்வதாகும். இந்த உலகத்திலுள்ள ஒவ்வொருவருக்காகவும் நாம் கரிசனை கொண்டிட முடியாது! அந்த அளவிற்கான திராணி தேவனுக்கு மாத்திரமே உண்டு. ஆனால் நம்முடைய திராணிக்கேற்ப நம்முடைய சக விசுவாசிகளிடம் நாம் நிச்சயமாய் கரிசனை காட்டிட வேண்டும். இவ்விதமாய் கரிசனை காட்டும் நம் திராணியின் அளவு தொடர்ந்து பெருகிக் கொண்டேயும் வரவேண்டும்! முதல் படியாக இயேசு நம்மை நேசிப்பது போலவே, நம் வீட்டிலுள்ள குடும்ப அங்கத்தினர்களை அன்புகூர வேண்டும். பின்பு, இதோடு நாம் நின்றுவிடாமல் தேவனுடைய குடும்பத்திலிருக்கும் சகோதர சகோதரிகளை, நேசிக்கும்படி வளர்ச்சியடைய வேண்டும்!

இலக்கை நோக்கி முன் தொடர்வதுதான் பூரணமாகும்! பவுல் இவ்விதத் தீர்மானத்தோடுதான் முன்னேறிச் சென்று, "ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடர்கிறேன்" (பிலி.3:13,14) எனக் கூறினார். 1) தேவனையே மையமாகக் கொண்ட ஜீவியத்தில் நாம் பிழையற்றவர்களாய், எல்லாவற்றிற்கும் மேலாக அவரையே நேசித்து, பின்பு 2) இயேசு நம்மை நேசிப்பது போலவே நம் சகவிசுவாசிகளையும் பிறரையும் நேசிப்பதுமாகிய இந்த இரண்டு அன்பின் பிரமாணங்களே தேவன் நமக்கு முன் வைத்திருக்கும் பரம அழைப்பாகும்!

**ஜெபம்** : *எங்கள் பரம தகப்பனே! உம்மை நேசிக்கும் நாங்கள், எங்கள் குடும்பத்தார் துவங்கி, சபையின் சக சகோதர சகோதரிகள்வரை நேசிக்கும் அன்பில் வளர கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**தெய்வீக அன்பு மாத்திரமே ஒருக்காலும் ஒழிவதில்லை!**

*நம்முடைய இருதயத்திற்குள் உருவான ஓர் சிறிய அன்பற்ற தன்மைகூட கலர் சாயத்தின் கறை மெதுவாய் இறங்குவது போல் படர்ந்து, முடிவில் ஓர் எதிர்பாராத பெலஹீனமான நிகழ்ச்சியின் தருணத்தில் குறிப்பிட்ட அந்த ஆத்துமாவைத் தாக்கி விடும்! இச்சேதம் கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஏற்பட்ட பெருத்த சேதமாய் . . . அச்சேதம் சீர்படுத்த முடியாததாய்கூட மாறிவிடக்கூடும்!!*

*அன்பின் பாதையில் நடந்து செல்வதென்பது ஒருபோதும் ஓர் எளிய வழியே அல்ல! நாம் இவ்வழி செல்ல மனப்பூர்வமாய் தீர்மானித்த வர்களாய் இருந்தால், பாடுபடுவதற்கும் ஆயத்தமாய் இருக்க வேண்டும். ஏனெனில், நமக்கு முன்சென்ற நம்முடைய குருவாகிய கிறிஸ்துவும் இப்படித்தான் இவ்வழியாகக் கடந்து சென்றார். நம்மைச் சூழ்ந்து கொள்ளும் சில சூழ்நிலைகள்தான் எத்தனையாய் நம் மனுஷீக அன்பெல்லாம் மாயமாய் மறைந்துபோகச் செய்கின்றன!*

*உதாரணமாய், ஊழியம் செய்யும்படி தேவன் நமக்குத் தந்த ஸ்தலத்தில் அங்குள்ள சில ஆத்துமாக்களை தேவனுடைய பிள்ளை களாகும்படி வழிநடத்தி, அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டு . . . ஓர் நாளில் அவர்களும் கிறிஸ்துவின் ஊழியர்களாய் மாறி அநேகரை ஆசீர்வதிப் பதற்கு தகுதியடைவார்கள் என்ற நம்பிக்கையோடு ஊழியத்தில் நாம் கடுமையான பிரயாசங்கள் எடுத்திருக்கலாம் . . . அதனிமித்தம், நம் சரீர சுகத்தைக்கூட நாம் இழந்திருக்கலாம்! ஆனால், அந்தோ! நாம் பாடு பட்டு உழைத்த ஜனங்களோ நாம் எதிர்பார்த்த பலனைத் தராமல், நம் நம்பிக்கை யாவையும் கவிழ்த்துவிடுகிறார்களே!! இச்சூழ்நிலைகளில் நாம் என்ன செய்யப்போகிறோம்? ஆத்துமாவிற்காக உழைத்திடத் தூண்டிய அன்பிலிருந்து நாம் விலகிப்போகலாமா? அல்லது நாம் இன்னமும் அன்பில் நிலைத்திருந்து, "பிதாவே இவர்களை மன்னியும் . . . தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என தொடர்ந்து நாம் ஜெபித்திடக்கூடுமா? ஆம், அன்பு ஒருக்காலும் ஒழியாது! (1 கொரி. 13:8).*

*அன்பற்ற சூழ்நிலையை நாமும் அன்பற்ற உள்ளத்தோடு சந்திக்கலாமா? இவ்வித சூழ்நிலைகளில்தான், "தேவரீர் என் இருதயத்தில் தோன்றும் எல்லாத் தடைகளையும் அகற்றிவிட்டு உம்முடைய அன்பை எனக்குள் ஊற்றிவிடும்!" என ஜெபித்து கதறுபவர்களாய் நாம் இருக்க வேண்டும்!!*

***ஜெபம்*** : *எங்கள் பரம பிதாவே! மானிட எங்கள் அன்பு எரிக்கும் வெயிலில் வாடிப்போகிறதே! என்றென்றும் ஒழியாத உம் தெய்வ அன்பை உம் தூய ஆவியினால் நிரப்பி எங்களை நடத்தியருளும், ஆமென்.*

**தேவன் விரும்பும் தாழ்மையின் ஜீவியம்!**

"**தா**ழ்மைக்குத்தான்" தேவன் எவ்வளவாய் மதிப்பு வைத்திருக்கிறார்! இதை 1 பேதுரு 3:4 கூறும்போது "சாந்தமும் அமைதலும் உள்ள ஆவி ஒரு ஸ்திரீயினிடத்திலோ அல்லது ஒரு புருஷனிடத்திலோ காணப்பட்டால், அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது" என சங்கநாதமாய் ஒலிக்கிறதே!! தாழ்மையும், சாந்த இருதயமும் கொண்டவராகவே இயேசு இருந்தார். அது மாத்திரமல்லாமல், தன்னிடமுள்ள இந்த திவ்விய சுபாவத்தை சகோதர சகோதரிகளாகிய நாம் அவரிடம் வந்து கற்றுக்கொள்ளும் படியும் அழைத்தார்! (மத். 11:28).

சாந்தமும் அமைதலும் உள்ள ஆவியின் அர்த்தம் என்ன? ஆம், ஒருபோதும் எதிர்ப்பில்லாததும் அல்லது ஒருபோதும் அமைதி இழக்காததுமான தன்மையே சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகும். சில 'வாஷிங் மெஷினில்' இந்த 'எதிர்த்துப் போராடும் கருவி' (Agitator) பொருத்தப்பட்டுள்ளது! அது தொடர்ச்சியாக இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் திரும்பி சுழன்றுகொண்டேயிருக்கும். இவ்வாறு சற்றேனும் அமைதியாய் இராமல் அந்தக் கருவி எப்பொழுதும் எதிர்த்து (Agitating) சுழன்று கொண்டேயிருக்கும். ஆம், யாராகிலும் சிலர் அவர்களுக்குத் தவறு செய்து உரசல் ஏற்படுத்திவிட்டால் "இவர்களின் எதிர்ப்புக் கருவி" இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் எதிர்த்து சுழல ஆரம்பித்துவிடும்!!

ஆனால் தங்கள் ஆவியில் தாழ்மையையும் சாந்தத்தையும் பெற்றவர்கள். இந்த "எதிர்ப்புக் கருவியை" சிலுவையில் அறைந்து, அதின் பிடியிலிருந்து முற்றிலும் விடுதலை பெற்றிருப்பார்கள். எனவே மற்றவர்கள் எதைச்செய்தாலும் அல்லது செய்யாமல் போனாலும், அதனிமித்தம் இவர்கள் ஒருபோதும் பாதிக்கப்படவோ அல்லது மனம் புண்படவோ மாட்டார்கள்.

இதைக் குறித்து 1 பேதுரு 3-ம் அதிகாரம் தொடர்ந்து கூறும்போது "சாந்தமும் அமைதலும் உள்ள ஆவியின் அலங்காரம் " அழியாத அலங்கரிப்பாய் இருக்கிறது! என வியப்புடன் எடுத்துரைக்கிறது. இவ்வுலகத்திலுள்ள பெண்கள் "தலை நரைத்துப் போனாலும்கூட" தங்களை இளமையும் அழகும் உடையவர்களாய் காட்டுவதற்கு முயற்சிக்கிறார்கள். ஆனால் "அழியாத அலங்கரிப்பின்" மெய் ரகசியத்தை இன்று கேளுங்கள் ... ஆம், சாந்தமும் அமைதலும் உள்ள ஆவியே என்றென்றும் அழியாத அலங்கரிப்பாய் இருக்கிறது!! இந்த உண்மையை எத்தனை ஸ்திரீகள் (அல்லது புருஷர்கள்) கண்டிருக்கிறார்கள்?

**ஜெபம்** : எங்கள் பரம தகப்பனே! உள்ளத்தில் அமைதியையும், சாந்தத்தையும் இழப்பது, தாழ்மையை விட்டுவிடுவதாய் இருக்கிறதே! இந்த கொந்தளிக்கும் சிந்தையை சிலுவையில் அறைந்து தாழ்மையாய் வாழ கிருபைதாரும், ஆமென்.

**குருவை தரிசித்து ஓடும் சீஷனின் வெற்றி ஓட்டம்!**

*இயேசுவைப் பின்பற்றிய முதல் இரண்டு சீஷர்களில் ஒருவனாகிய அந்திரேயா கூறிய முதல் அறிக்கையே "மேசியாவைக் கண்டோம்!" என்பதுதான் (யோவான் 1:40, 41).* A.W. *டோசர் என்ற பக்தன் தன் அனுதின ஜெபத்தில் "இன்று உம்முகம் நான் தரிசிக்கட்டும், அது போதும் . . . இவ்வுலகத்திலுள்ள எதுவும் என்னை கவர்ச்சித்திட முடியாது" என ஜெபிப்பதுண்டு.*

*எவைகளையெல்லாம் வெறுக்க வேண்டும் என்ற பட்டியலல்ல சீஷத்துவம்! தன் குருவின் அழகைக் கண்டவன் ... எவைகளை என்றல்ல, எதையும்! எல்லாம்! வெறுத்திட மகிழ்வுடன் ஆயத்தமாயிருப்பான்.*

*"கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்" (பிலி.3:12) என பவுல் குறிப்பிட்ட 'அதை' என்பது எதை? அந்த வசனமே குறிப்பிடுகிறபடி "கிறிஸ்து இயேசுதான்" அதன் விடை! அன்று தமஸ்கு வீதியில், பவுல் இயேசுவை முதலாவதாய் சந்தித்த நிகழ்ச்சியில் "வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது" (அப்.9:3) என வேதம் கூறுவதைப் பாருங்கள். இவ்வாறு தன்னைப் பிடித்துக்கொண்ட இயேசுவில் தன் முழு ஆசையையும் பவுல் வைத்து, அவரை அடைந்துவிடும்படி "அந்தப் பந்தயப் பொருளை" (கிறிஸ்துவை) பெறும்படியே ஆசையாய் அவரைத் தொடருகிறேன் எனக் கூறினார் (வசனம் 14).*

*இவ்வுலகத்தில் பொதுவாய், பந்தய ஓட்டத்திற்கு "துவக்கம்" ஒரு திசையும், "முடிவு" மறுதிசையும் இருக்கும்! ஆனால் ஒரு மெய்யான கிறிஸ்தவ ஜீவியத்தின் ஓட்டமோ "துவக்கமும் இயேசுவில்தான் . . . முடிவும் இயேசுவில்தான்!" என்ற இரகசியத்தை வேதம் கூறுவதை உங்களால் காணமுடிகிறதா? நம் கிறிஸ்தவ ஜீவியத்தில், இந்தப் பந்தயசாலையின் இரகசியத்தை காணாதவர்கள் எவர்களோ, அவர்கள் ஓடுவதைப்போல் ஓடினாலும், பெற்றுக்கொள்ள மாட்டார்கள்! என்றே பவுல் 1 கொரி. 9:24,25 வசனங்களில் கூறினார். அது ஏனென்றால், துவக்கமும்-முடிவுமாய் இருக்கிற "மகிமையின் ஆண்டவரை" இவர்கள் கண்கள் காணவில்லை என்பதுதான்!!*

***ஜெபம்** : எங்கள் பரம தந்தையே! குருவின் மகிமையில் கட்டுண்டவனே சீஷன் என காண்பித்து வாழ்வின் ஓட்டத்தை ஜெயமாய் நடத்துகிறீரே உமக்கே ஸ்தோத்திரம்! ஆமென்.*

**மெய்யான மனந்திரும்புதல் வேண்டும்!**

*ஒரு மனிதன் தன் ஜீவியத்தைப் பாழ்படுத்தும் தீயபழக்கங்களை விட்டுவிட்டுத் திரும்பி இருக்கலாம். ஆனால் அதுவும் அவன் இப் பூமியில் உள்ள தன் வாழ்க்கையை பாதுகாத்துக் கொள்வதற்காக எடுத்துக்கொண்ட முயற்சி என்பதைத்தானே சுட்டிக் காட்டுகிறது? சிகரெட் பெட்டிகளில், சட்டபூர்வ எச்சரிக்கை: "புகைபிடிக்கும் பழக்கம் உடல் நலத்திற்கு கேடு" என எழுதப்பட்டிருக்கும். ஆகவேதான், சிலர் புகை பிடிப்பதில்லை! இதே காரணத்திற்காகவே ஜனங்கள் குடிக்காமலும், சூதாடாமலும் இருக்கக்கூடும்! தங்களுக்கு "எய்ட்ஸ்" நோய் வந்துவிடுமோ என்ற பயத்தினிமித்தம் இன்று அனேகர் விபச்சாரமும் செய்வதில்லை!! ஆனால், வேதப்புத்தகம் திட்டமும் தெளிவுமாய் கூறுகிறபடி இதுபோன்ற ஜனங்களில் ஒருவர் கூட "**தங்கள் பாவத்தை விட்டு**" மெய்யாய் மனந்திரும்பவேயில்லை!!*

*நாம் தேவனுடைய மகிமைக்காய் வாழும்படியே சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறோம். இவ்வாறு வாழாமல் நம்முடைய சுய வசதிக்காகவும், சுய பெருமைக்காகவும் வாழுவோமென்றால் நாம் உண்மையாய் மனந்திரும்பவுமில்லை, இரட்சிக்கப்படவுமில்லை! எனவேதான், இவ்வித நமக்காக வாழும் பாவ வழியிலிருந்து நம்மை மீட்பதற்காகவே இயேசு மரித்தார் (2கொரி.5:15). உதாரணமாய், ஒருவன் தன்னை சபையில் மற்றவர்களால் மதிக்கப்படத்தக்க பெரியவனாய் இருக்க விரும்பினால் அல்லது மற்றவர்கள் தனக்கு மரியாதை செலுத்த வேண்டும் என விரும்பினால்... இவன் தனக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்பதில் ஒரு துளியும் சந்தேகமே இல்லை. இவன் வேண்டுமானால் ஏதோ "மார்க்க விஷயத்தில்" தன்னை "வெள்ளை யடித்து" வைத்திருக்கலாம். ஆனால் அடிப்படை பூர்வமாய் அவனிடம் எந்த மாறுதலுமில்லை! இவன் ஒருவேளை "மறுபிறப்பு" "ஞானஸ்நானம்" போன்ற கிறிஸ்தவ மொழிகளையும் பேசிக் கொண்டிருக்கலாம். ஆனால் அவனுடைய உள்ளான மனிதனோ இன்னமும் அப்படியேதான் இருக்கிறான்!!*

*தேவன் விரும்பாத யாதொன்றையும் விட்டுவிட்டு, தன் சுய-வழியிலிருந்து தேவனிடம் அவரது "வழிக்கு" வருவதே மெய்யான மனந்திரும்புதலாகும்!*

***ஜெபம்*** *: பரலோக தகப்பனே! எங்களுக்காகவே வாழும் வழியை 'பாவ வழி' என அறிந்து அதிலிருந்து மனந்திரும்பும்படி நடத்தியமைக்காக ஸ்தோத்திரம்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**முழு ஜீவியமும் கர்த்தருக்கு தருவதே உத்தமம்!**

தங்கள் பணியிலிருந்து ஓய்வுபெற்ற சிலரிடமிருந்து நான் கடிதங்கள் பெறுவதுண்டு. அவர்கள் தங்கள் ஓய்வு வருடங்களைத் “தேவனுடைய ஊழியத்திற்கென” அர்ப்பணிக்க விரும்புவதாக எனக்கு கடிதம் எழுதுவார்கள். இது எப்படியெனில், “ஒரு கனவான் உங்கள் வீட்டிற்கு வந்தபோது, அவருக்கு முன்பாக தேனீர் அருந்திக் கொண்டிருக்கும் நீங்கள், முடிவில் டீ கப்பிலிருக்கும் மண்டியை அவருக்குத் தருவதற்கே” ஒப்பாகும் ! இவ்வாறாகத்தான், இன்று ஜனங்கள் தேவனுக்குச் செய்கிறார்கள்!! இந்த உலகத்தில் பணம் சம்பாதிப்பதற்கென்றே தங்கள் முழு ஜீவியத்தையும் செலவழித்து விட்டு, இப்போதோ தங்கள் வாழ்வில் எஞ்சிய “மண்டியை” தேவனுக்குத்தர விரும்புகிறார்கள்.... இது எத்தனை கொடிய அவமரியாதை!!

நாம் வாலிபமாய் இருந்த நாட்களிலேயே நம்முடைய ஜீவியத்தைத் தேவனுக்கு அர்ப்பணித்திருக்க வேண்டும். இவ்வாறு முழு ஜீவியத்தையும் அவரிடம் அர்ப்பணித்துவிட்டு, “அவர் என்ன கட்டளையிடுகிறாரோ” அதற்குப் பிரியமாய் வாழ்வதே உத்தமமானதாகும்! ஆண்டவராகிய இயேசு திரும்பவருகையில், எண்ணற்ற விசுவாசிகள் மிகப்பெரும் அதிர்ச்சிக்குள்ளாவார்கள் என்பது திண்ணம்! இவர்கள் பூமியில் சம்பாதித்துக் குவித்த பணம் முழுவதும், சிறுபிள்ளைகள் தாங்களாகவே “10-லட்சம்” “10-கோடி” என பேப்பரில் எழுதி “பிஸினஸ்” விளையாட்டில் சேர்த்த ‘பேப்பர் பணத்திற்கு’ ஒப்பாகவே அவர்களின் ஆஸ்தி, எந்த மதிப்பும் இல்லாதிருப்பதை அந்த நாளில் கண்டு திகைப்பார்கள்!(லூக்கா 12:20). ஆனால், இப்போது என்ன செய்ய முடியும்? ‘வாழ்க்கையின் பந்தயமோ’ முடிவடைந்துவிட்டது! தாங்கள் சேர்த்துக் குவித்த பிரயோஜனமற்ற குவியல்களைத் தவிர, இவர்களோ “நித்திய மதிப்புடைய” எதையும் சேர்த்துவைக்கவில்லையே! மேலும், இவர்கள் பூமியில் தேடி நாடியதெல்லாம் “மனுஷர் புகழ்ச்சிக்காகவே” இருந்ததால், அவையாவும் நித்தியத்தின் பிரகாசிக்கும் வெளிச்சத்தில், கனப்பொழுதில் “ஆவியாய்” மறைந்து போவதைக் காணும்போது, இவர்களின் ஏமாற்றம் சொல்லிமுடியாததாய் இருக்கும்!!

ஆனால், தங்கள் ஜீவியத்தில் தேவனுடைய சித்தம் ஒன்றையே செய்து, தேவனுடைய மகிமைக்காக மாத்திரம் வாழ்ந்தவர்களோ, அந்நாளில் சொல்லிமுடியா மகிழ்ச்சியில் திளைத்திருப்பார்களே!!

***ஜெபம்*** : *எங்கள் பரம பிதாவே! பூமியின் மேன்மைக்கு பெரும் பங்கை தந்துவிட்டு, எஞ்சியதை உமக்குத் தரும் ஜீவியம் வேண்டாம்.... எங்கள் முழுமையும் உமக்கே அர்ப்பணிக்கிறோம்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**நம் மனச்சோர்வை அகற்றும் அந்நியபாஷை!**

*ஒரு நபர் அந்நியபாஷை பேசும்போது, அவருடைய ஆவி (இருதயம்) 'ஏதோ பாஷைகளை' நேரடியாக இருதயத்திலிருந்து தன் வாய்மூலம் பேசுவதையே அறிகிறோம். இவ்வாறு பேசுவது அவருடைய மனதைத் தள்ளிவைத்துவிட்டுப் பேசுவதாகவே யிருக்கிறது. இதனிமித்தமாய் அவன் தன் இருதயத்திலிருக்கிற யாவற்றையும் தேவனிடத்தில் ஊற்றி கொட்டிவிடுகிறான்! அது அவனுடைய மகிழ்ச்சியின் பெருக்கமாகவோ அல்லது ஏதோ மனச் சோர்வினாலோ ஏற்பட்ட பாரமாகவோ இருக்கலாம்!! இதன் மூலமாய், அவனுடைய இருதயத்திலிருந்த 'பாரமான அழுத்தம்' அவனை விட்டுப் போய்விடுகிறது. இவ்வாறாகவே அவன் பக்திவிருத்தியடைகிறான்! (1 கொரி.14:4).*

*அந்நியபாஷை பேசுபவர் தனக்குத் தெரிந்த பாஷையை பேசாததினால், ஆண்டவர் மீது தன் முழுகவனத்தையும் வைத்து, தன் மனதை (MIND) உதறிவிட்டு தன் இருதயத்திலிருந்து நேரடியாக வார்த்தைகளைத் தன் வாயின் மூலமாய் பேசுகிறார். அவ்வாறு அவன் பேசுவதின் அர்த்தம் அவனுக்குப் புரியாவிட்டாலும், தன்னுடைய இருதயத்திலுள்ள ஏக்கங்களையும் பாரங்களையும் தேவன் இச்சமயத்தில் அறிந்துகொண்டார் என்பதை நன்றாய் உணர்ந்திருப்பான்.*

*தன் நெஞ்சத்தில் பாரம் உண்டாகும் சமயமெல்லாம், அந்தச் சுமையை நாம் மேற்கண்டதுபோல் தேவனிடத்தில் இறக்கி வைப்பது ஒரு விசுவாசிக்கு பெலனுள்ள நேரமாகும்! குறிப்பாய், ஒரு விசுவாசியின் மனம் (MIND) தன்னுடைய சொந்த பாஷையில் ஜெபிப்பதற்கு களைப் படைந்திருக்கும் சமயமே,* **அந்நியபாஷையின் ஜெபம்** *அவனுக்கு மிகுந்த ஆறுதலாயிருக்கிறது. இது எவ்வாறு என்பதை நம்மால் விளக்க முடியாவிட்டாலும், அந்தக் கிரியையை நாம் உணர முடியும்!*

இவ்வுலகத்தில் உன்னதமான கிறிஸ்தவர்களாய் திகழ்ந்தவர்கள், அந்நியபாஷை பேசினார்களோ இல்லையோ.... ஆனால், இவர்கள் தங்கள் ஆண்டவராகிய இயேசுவின் மீது முழு இருதயமான சொல்லி முடியா நேசம் கொண்டிருந்தார்கள்! பேதுரு, யாக்கோபு, யோவான், பவுல் போன்ற சீஷர்கள் அந்நியபாஷை பேசினார்கள்! ஆனால், நமக்குத் தெரிந்தவரை ஜான்வெஸ்லி, சார்லஸ் பின்னி, D.L.மூடி, A.B.சிம்ஸன், வில்லியம் பூத், C.T.ஸ்டட், வாட்ச்மேன் நீ போன்ற தேவ மனிதர்கள் ஒருபோதும் அந்நியபாஷை பேசியதேயில்லை! ஆனால், அவர்கள் அனைவரும் தங்கள் ஆண்டவரை முழுஇருதயமாய் அன்பு கூர்ந்தார்கள்! அவர்கள் அனைவரும் சிலுவையின் வழியில் நடந்து சென்றார்கள்! இவைகள்தான் அவர்கள் வாழ்வின் "மையமாய்" இருந்தது! மற்ற அனைத்தும் அவர்களுக்கு இரண்டாவதாகவே இருந்தது!!

***ஜெபம் :*** *எங்கள் பரலோக தந்தையே! இளைத்தவனை இளைப்பாறச்செய்யும் அந்நிய பாஷை வரத்திற்காக ஸ்தோத்திரம்! ஆகிலும் இதுவே பிரதானமில்லாமல், உம் சிலுவை வழியை முன்வைத்து வாழ கிருபைதாரும், ஆமென்.*

**நம் ஜீவியமே உலகத்திற்கு வெளிச்சமாக வேண்டும்!**

ஒரு சமயம், ஆண்டவர் தன்னைப் பற்றி கூறும் போது, "நான் உலகத்தில் இருக்கையில் உலகத்திற்கு ஒளியாக இருக்கிறேன்" எனக் கூறினார் (யோவான் 9:5). ஆனால் இயேசு இவ்வுலகத்தை விட்டு சென்ற பின்போ "உலகத்திற்கு வெளிச்சமாக" நம்மையே நியமனம் செய்தார்! (மத்தேயு 5:14). இதுவே எந்த உத்தம கிறிஸ்தவனுக்கும் உரிய மிகப் பெரிய பொறுப்பாகும்!!

இயேசு வெளிப்படுத்தின ஒளியானது, சில உபதேசங்களோ அல்லது போதனைகளோ அல்ல! அது, புதிய உடன்படிக்கை சத்தியம் கூட அல்ல!! தன்னுடைய ஜீவியத்தையே ஒளியாகப் பிரகாசித்தார். இயேசுவினுடைய ஜீவியத்திலிருந்துதான் தெய்வ சுபாவங்கள் நமக்கு ஒளியாக வீசியது!! "நாங்கள் வெளிச்சம் பெற்றிருக்கிறோம்" எனக் கூறி, பரிசுத்தாவியின் அபிஷேகத்தையும், பாவத்தின் மேல் பெற்றிடும் ஜெயத்தையும், இன்னும் இது போன்ற சத்தியங்களையே நாம் பெற்ற வெளிச்சமாக கூறிக் கொள்கிறோம். ஆனால் அது அல்ல..... "இயேசுவின் ஜீவியத்தையே" நாம் வெளிச்சமாக பிரகாசித்திட வேண்டும்!

புதிய ஏற்பாட்டில் இரண்டு முறை "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை" என எழுதப்பட்டிருக்கிறது. ஆம், முதன் முதலாக நமக்கு தேவனைப்பற்றி இயேசுவே வெளிப்படுத்தினார் (யோவான் 1:18). இயேசு தன் கரங்களை ஒரு குஷ்டரோகியின் தோளோடு வைத்து அணைத்துக்கொண்டபோது "தேவன் எப்படிப் பட்டவர்" என்று வெளிப்படுத்தினார்! அவர் காசுக்காரர்களை ஆலயத்திலிருந்து துரத்தியபோதும் "தேவன் எப்படிப்பட்டவர்" என்பதை வெளிபடுத்தினார்!........ இவ்வாறாக, "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்றே இயேசு தன் சீஷர்களிடம் திட்டமாக் கூறினார். அந்த இயேசுவோ இப்பொழுது பரலோகத்திற்கு சென்றுவிட்டார்!

பிதாவை, இயேசுவிடத்தில் சீஷர்கள் கண்டதைப்போலவே "நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பாய் இருந்தால்" தேவன் நமக்குள் நிலைத்திருப்பதையும், நம் சபையில் தேவன் இருப்பதையும் இன்றும் ஜனங்கள் காணமுடியும்! (1 யோவான் 4:12).

சபையில் நம்மை கவனித்துப் பார்ப்பவர்கள் "கிறிஸ்து எப்படிப் பட்டவராக இருப்பார்!" என்பதை நம் மூலமாய் அறியக்கூடியதாக இருக்க வேண்டும்! இவ்வாறு நம் ஜீவியத்தின் மூலமாய் "இயேசுவின் ஜீவனை" நாம் வெளிச்சமாக பிரதிபலிக்கத் தவறியிருந்தால், நம்முடைய பிரதான அழைப்பிலிருந்தே தவறிவிட்டோம்!

***ஜெபம்*** : *எங்கள் பரம தகப்பனே! வெறும் உபதேசமல்ல, இயேசுவைப்போலவே எங்கள் ஜீவியம் பிறர் காணக்கூடிய ஒளியாக மாறிட கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**ஒருவருக்கும் கடன்படாத வாழ்க்கை வேண்டும்!**

*எந்த மனிதனுக்கும் தேவன் ஒருபோதும் கடன்பட்டதே கிடையாது! புதிய உடன்படிக்கையில், அவரின் திவ்விய சுபாவத்தில் பங்குபெறும்படியே நாமும் அழைக்கப்பட்டிருக்கிறோம்!! எனவே தான், "ஒன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்" (ரோமர். 13:8) என நாமும் கட்டளையிடப்பட்டிருக்கிறோம்.*

*இன்னொருவரிடம் கடன் வாங்கி அவரிடம் கடனாளியாவது நியாயப்பிரமாண சாபங்களில் ஒன்றாகும். இந்த சாபமானது, நியாயப் பிரமாணத்திற்கு இஸ்ரவேலர்கள் கீழ்ப்படியாமலிருக்கும் போது அவர்கள்மீது வந்திறங்கும் என தேவனே கூறியதாகும் (உபா. 28:43-48). ஆம், 48ம் வசனம் கூறுகிறபடி, இஸ்ரவேலர்கள் "சகலமும் குறைவு பட்டு" போகும் பரிதாபத்திற்கே தள்ளப்பட்டு விடுவார்கள்!!*

*இதற்குமாறாக, இஸ்ரவேலர்கள் கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கும்போது அவர்களை ஆசீர்வதிப்பேன் என தேவன் வாக்குத்தத்தம் செய்த ஆசீர்வாதங்களில் ஒன்று என்னவென்றால், "நீ அநேகம் பேருக்கு கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய்" (உபாகமம். 28:12, 15:16) என்பதாகும். பிறருக்கும் கொடுத்து ஆசீர்வதிப்பதற்கென தேவையான கையிருப்பு வைத்திருப்பது, தேவன் தன் ஜனத்தை ஆசீர்வதிக்கும் விதத்தில் ஓர் வழியாகும்!*

*ஆனால், நீங்களோ ஓர் "தொடர்ச்சியான" பொருளாதார தேவையில் உழன்று கொண்டிருப்பவராயிருந்தால், உங்களையே ஓர் ஆவிக்குரிய பரிசீலனை செய்து, என்ன தவறு? என்றும் அது எங்கு நிகழ்ந்தது? என்றும் கண்டறியவேண்டியது மிகவும் அவசியமாகும்.*

*"கடன் வாங்கினவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை" (நீதி. 22:7) என வேதம் விளம்புகிறது. 'கடன் வாங்குதல்'* (Borrowing) *என்ற வர்த்தை எபிரேய பாஷையில், கடன் கொடுத்தவனுக்கு கடன் வாங்கினவன் "கட்டப்பட்டு இருத்தல்" என்றே பொருள்படுகிறது. பார்த்தீர்களா உங்களுக்கு கடன் தந்தவரால் நீங்கள் மேற் கொள்ளப்பட்டு, ஒரு சங்கிலியால் பிணைக்கப்பட்டு விட்டீர்கள்! தேவனுடைய பிள்ளைகள் ஒருவராகிலும் இவ்வாறு பிறரால் மேற்கொள்ளப்பட்டிருப்பது, ஒருபோதும் தேவனுடைய சித்தம் அல்லவே அல்ல! நாம் கிறிஸ்துவின் இரத்தத்தால் தேவனுக்கென கிரயத்திற்குக் கொள்ளப்பட்டபடியால், எந்த மனுஷருக்கும் நாம் அடிமையாகக்கூடாது என நமக்கு ஆணித்தரமான கட்டளை தரப்பட்டிருக்கிறது (1கொரிந்தியர். 7:23). "சிறைப்பட்டவர்களை" (கடன்பட்டு சங்கிலியால் கட்டப்பட்ட வர்களை) விடுதலை செய்வதற்காக இயேசு வந்தார் என எழுதியிருக் கிறதே! (லூக்.4:18). இது நம்மை பரவசமூட்டும் நற்செய்தி அன்றோ!*

**ஜெபம்** : *எங்கள் பரம தகப்பனே! உமது பிள்ளைகள் கடன்படுவதை விரும்பாத ஆண்டவரே, எங்கள் ஆவிக்குரிய நிலையை சீர்படுத்தி கடன் கட்டிலிருந்து உம் பிள்ளைகள் யாவரும் விடுதலைபெற கிருபை தாரும், ஆமென்.*

**நான் சுமந்திடும் சிலுவை!**

"தன்னை வெறுப்பதென்பது" ஒருவன், தான் தொன்று தொட்டு ஆதாமிலிருந்து பெற்று ஜீவிக்கும் "சொந்த ஜீவியத்தை" வெறுப்பதேயாகும். இந்த சுய-ஜீவியத்தை மரணத்திற்குள் கொண்டு வருவதே சிலுவையை எடுப்பதின் பொருளாகும். நம் சுய-ஜீவியத்தை நாம் முதலாவதாக வெறுத்துவிட்டால், பின்பு அதை நாம் எளிதில் அழித்து விட முடியும்!

ஆம், கிறிஸ்துவின் ஜீவனுக்கு நம் சுய-வாழ்க்கையே பிரதான எதிரியாய் இருக்கிறது. இந்த சுய-வாழ்க்கையைத்தான் "மாம்சம்" என வேதாகமம் அழைக்கிறது. நம்மிலுள்ள எல்லாவிதமான தீய-இச்சைகளுக்கும் இந்த மாம்சமே ஓர் பண்டகசாலையாய் இருக்கிறது! நமக்கானதைத் தேடுவதோ... நம் சுய கனத்தை நாடுவதோ... நம் சொந்த மகிழ்ச்சியை விரும்புவதோ... நம் சுய வழிக்குச் செல்வதோ... போன்ற நம் சுய-சித்தங்களை நிறைவேற்றும்படி ஏற்படும் சோதனைகளின் தூண்டுதல்கள் யாவும் இப்பண்டகசாலையிலிருந்தே புறப்பட்டு வருகிறது!!

நாம் நேர்மையுள்ளவர்களாய் இருப்போமென்றால், நாம் செயலாற்றும் நல்ல கிரியைகள்கூட தீமையான நோக்கங்களால் கறைப்படுவதை நாம் காண முடியும். எல்லாம், இந்த மாசுபடிந்த இச்சைகளிலிருந்து தோன்றுவதேயாகும். ஆகவே, நாம் இந்த "மாம்சத்தை" வெறுக்காவிட்டால், நம் ஆண்டவரை நம்மால் ஒரு போதும் பின்பற்றவே முடியாது! இதனிமித்தமே, "நம் சொந்த ஜீவனை" வெறுப்பது அல்லது இழப்பது குறித்து இயேசு அதிகமாய் பேசியிருக்கிறார். இந்த வாக்கியம், சுவிசேஷங்களில் 6-முறை திரும்பத் திரும்ப கூறப்பட்டுள்ளது (மத்தேயு 10:39; 16:25; மாற்கு 8:35; லூக்கா 9:24; 14:26; யோ.12:25). இவ்வாறு இந்த வாக்கியம் சுவிசேஷங்களில் அடிக்கடி கூறப்பட்டிருந்த போதும், இன்றோ இந்த வாக்கியத்தின் செய்திதான் 'மிகக் குறைவாய்' 'புரிந்துகொள்ளப்பட்டு' மிகக் குறைவாய் பிரசங்கிக்கப்படுகிறது!!

நம் சொந்த உரிமைகளையும், நம் சொந்த லாபங்களையும், தேடுவதை விட்டுவிடுவதும், நம் சொந்த கனத்தைத் தேடுவதை நிறுத்துவதும், சுய-இலட்சியங்களையும் சுய-ஆர்வங்களையும் வெறுத்து விடுவதும்... இன்னும் இதுபோன்ற சுய-வழிகளைத் தேடுவதை நிறுத்தி விடுவதுமே "நம் சொந்த ஜீவனை" வெறுப்பதின் பொருளாகும். ஆம், இந்த மார்க்கமாய் அல்லது இந்த வழியாய் நாம் செல்வதற்கு விருப்பம் கொண்டிருந்தால் மாத்திரமே நாம் இயேசுவின் சீஷர்களாய் இருந்திட முடியும்!

**ஜெபம் :** *எங்கள் அன்பின் பிதாவே! ஆண்டவர் இயேசுவின் ஜீவியமே எங்கள் வாஞ்சை! பரத்தின் இந்த வாழ்வை எங்கள் சிலுவை எடுத்து எங்கள் சொந்த ஜீவனை இழந்து சுதந்தரித்திட கிருபைதாரும், ஆமென்.*

**அன்றாட ஜீவியத்தில் பின்பற்ற வேண்டிய அவரது அடிச்சுவடு!**

*இயேசுவுக்கு குறைந்தது 4-சகோதரர்களும், 2-சகோதரிகளும் இருந்திருக்கிறார்கள் என்பதை மாற்கு 6:3-ம் வசனம் நமக்கு தெளிவுபடுத்துகிறது. ஆகவே, குறைந்தது 9-பேர்கள் ஒரே வீட்டில் வசித்து வந்தார்கள் என்பதையும்... அதுவும், அந்த வீடு ஓர் "ஏழை வீடு" என்பதையும் சுவிசேஷ புத்தகங்கள் எடுத்துக்காட்டுகிறது. ஓர் ஆட்டுக் குட்டியைகூட காணிக்கையாய் செலுத்த முடியாதஅளவிற்கு மரியாள் ஏழ்மையிலிருந்தாள் என்பதை லூக்கா 2:24, லேவி. 12:8 ஆகிய வசனங்களை ஒப்பிட்டு வாசிக்கையில் நாம் அறிந்துகொள்ள முடிகிறது! ஆகவே, வீட்டில் கஷ்டங்களும் நெருக்கடியும் ஏற்படும் சமயங்களில் இயேசு தன்னை ஆசுவாசப்படுத்திக்கொள்ளவோ அல்லது ஓய்ந்திருப்பதற்கோ அவருக்கென ஒரு தனி படுக்கைஅறை இல்லாதவராகவேயிருந்தார். மேலும் அவருடைய சகோதரர்கள், அவரை விசுவாசிக்கவில்லை எனவும் யோவான் 7:5 கூறுகிறது. 'ஒருமுறைகூட கோபப்படாத' அல்லது 'ஒருமுறைகூட சுயநலமாய் செயல்படாத' இவரைக் குறித்து அவர்கள் பகிரங்கமாகவே பொறாமை கொண்டிருந்தார்கள்! இவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்துகொண்டு அவரைப் பலமுறை ஏளனம் செய்து அவருக்கு எரிச்சல்மூட்ட முயற்சித்திருப்பார்கள். ஒரு பெரிய குடும்பமாய் இருந்துகொண்டு, ஒரு சிறிய வீட்டில் மனந்திரும்பாத தன் வீட்டாரோடு வாழ்ந்தவர்கள் மாத்திரமே, இயேசு நாசரேத்தின் தன் ஏழைவீட்டில் எத்தனை பிரச்சனைகளை சந்தித்திருப்பார் என்பதை எளிதில் விளங்கிக்கொள்ள முடியும். அப்படியெல்லாம் இருந்தும், இயேசுவோ ஒருசமயம்கூட பாவம் செய்யவேயில்லை! இவ்வாறு அவர் சந்தித்த சோதனைகளை இன்னும் அதிகமாய் கூட்டுவதைப்போல், யோசேப்பு மரித்துவிட்டார்! இயேசு ஊழியத்திற்கென வெளியேறிய வருடங்களில் யோசேப்பைக் குறித்து யாதொன்றும் சொல்லப்படாததை வைத்து, இயேசு சுமார் 13 முதல் 20 வயது பிராயமாயிருந்த வருடங்களில் யோசேப்பு மரித்திருக்க வேண்டும் என்றே கருதமுடிகிறது. எனவே, வீட்டின் மூத்த மகனாகிய இயேசுவின்மீது 8-உறுப்பினர்கள் கொண்ட அவரது குடும்பத்தைத் தாங்கும் சுமை விழுந்தது! தன் குடும்பத்தை போஷிப்பதற்காக இயேசு அரும்பாடுபட வேண்டியிருந்தது. அந்த நெருக்கமான சூழ்நிலைகளில் இன்னமும் அதிகமான சோதனைகளை இயேசு நிச்சயமாய் சந்தித்திருக் கக்கூடும்... ஆகிலும், அவரோ பாவம் செய்யவேயில்லை!!*

***ஜெபம் :*** *எங்கள் பரம தகப்பனே! எங்களைப்போலவே மனுஷராய் பிறந்து வளர்ந்த இயேசுவின் முன்மாதிரி வாழ்விற்கு நன்றி! அவரது அடிச்சுவடு நடந்து திவ்விய வாழ்வில் முன்னேற உதவிசெய்தருளும், ஆமென்.*

## வேதம் சுட்டிக்காட்டும் பக்தியுள்ள பெண்கள்!

*இரண்டு ரகமான பெண்களைக்குறித்து உன்னதப்பாட்டு 8:9-ம் வசனம் விவரிக்கிறது. முதல் ரகத்தைச் சார்ந்தவள் மதிலைப்போலவும் (WALL) இரண்டாவது ரகத்தைச் சார்ந்தவள் கதவைப்போலவும் (DOOR) இருக்கிறாள் எனக் கூறுகிறது. கதவைப்போல் இருக்கும் பெண், உங்கள் முன் நிற்பதற்கு முந்திக் கொள்பவளும், தன் இதயக்கதவை விரிவாய்த் திறந்து உணர்ச்சிகளைக் கொட்டுபவளுமாய் இருக்கிறாள்! மதிலைப் போன்று அல்லது சுவரைப்போன்று இருக்கும் பெண், கண்ணியமாய் நடந்துகொண்டு தன்னை மறைத்துக்கொள்ளவே எப்போதும் நாடுவாள்! எல்லாப் பெண்களும் இந்த மதிற்சுவருக்கு ஒப்பான பெண்களாய் இருக்கும்படியே ஸ்திரீகளை தேவன் சிருஷ்டித்தார். இதற்கு மாறாக, ஒரு பெண் "திறந்த கதவைப்போல்" இருப்பாளென்றால், இந்த வசனம் அறிவுறுத்து கிறபடி, அவளுடைய பெற்றோர்கள் 'அநேகம் பலகைகளை' அவளுக்கு மதிலாக வைத்திட வேண்டும்! அதாவது, அவளுடைய பெற்றோர்கள் பல்வேறு வழிகளில் அவளைக் கட்டுக்குள் கொண்டுவர வேண்டும்!! ஆனால், அவளாகவே ஒரு மதிற்சுவராய் இருந்துவிட்டால், ஓர் அரண்மனை போன்ற (Palace) பக்தியுள்ள வீட்டை அவள் ஜீவியத்தின் மூலமாய் கட்டிவிட முடியும்! என எத்தனை நேர்த்தியாய் வேதம் எடுத்துரைக்கிறது.*

*மேலும், 1 பேதுரு 3:3,4 வசனங்கள் அறிவுறுத்துகிறபடி, ஓர் இயேசுவின் சீஷியாய் வாழ விரும்பும் எல்லாப் பெண்களும் விலையுயர்ந்த வஸ்திரங்களையும், ஆபரணங்களையும் தவிர்த்திட வேண்டும்! ஏனெனில், ஒரு ஸ்திரீயிடம் தேவன் எதிர்பார்க்கும் விலையேறப்பெற்ற அணிகலன் "சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியே!" ஆகும். ஒரு ஸ்திரீ உடுத்தும் உடைகளைப் பிரதானமாய் கொண்டு சீஷத்துவம் கணக்கிடப்படுவதில்லை என்பது உண்மைதான். இருப்பினும், ஒரு ஸ்திரீயின் குணாதிசயங்களை, அவள் உடுத்தும் உடைகள் வெளியரங்கப்படுத்துவதும் உண்மையாகவே இருக்கிறது!! மேலும், இயேசுவின் சீஷியாய் இருப்பவள் தூய்மை இல்லாத 'அழுக்கான உடையை' உடுத்த மாட்டாள்! அதேசமயம், பளிச்சென தோன்றும் விலையுயர்ந்த உடைகளுக்காகவோ அல்லது அலங்கரிப்பு களுக்காகவோ தன் பணத்தை வீணாக்கிடவும் மாட்டாள்!!*

***ஜெபம்*** *: எங்கள் பரம தந்தையே! உமது பார்வையில் விலையேறப்பெற்றவர்களாய் வாழவேண்டும் என விரும்பி, விலையுயர்ந்த வஸ்திரம், அணிகலன்கள் போன்ற உலக கவர்ச்சிகளை வெறுத்திட எங்களுக்கு உதவி செய்தருளும், ஆமென்.*

### ஐக்கியத்தில் கவனம் கொண்ட நால்லதோர் குடும்பம்!

எபேசியர் 5:22 முதல் 6:9 வசனங்கள் வரை பரிசுத்தாவியானவர், குடும்பத்தில் காணும் கணவன்-மனைவி; பிள்ளைகள்-பெற்றோர்கள்; வேலைக்காரர்கள்-எஜமான்கள் ஆகிய உறவுகளைக் குறித்தே பேசுகிறார். குடும்ப உறவுகளைக் குறித்து கூறும் இவ்வசனங்களுக்கு அடுத்து "உடனே" காணப்படும் 10-ம் வசனத்திலிருந்து வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளோடு உள்ள போராட்டத்தை பரிசுத்தாவியானவர் விவரித்துப் பேசுகிறார். இந்த உண்மை நமக்கு போதிப்பது என்ன? ஆம், நம் குடும்ப வாழ்வில் காணும் உறவுகளைத் தாக்குவதையே சாத்தான் தன் பிரதான தாக்குதலாய் கொண்டிருக்கிறான் என்பதையே நமக்குப் போதிக்கிறது! இங்குதான், நாம் மிக விழிப்புடன் சாத்தானை மேற்கொண்டிட வேண்டும்!!

ஒருவருக்கொருவர் வாக்குவாதம் செய்துகொள்ளும் புருஷர்களும் மனைவிகளும், தங்களுக்கு நடுவே 'இடைவெளி' ஏற்படுத்துகிறபடியால். . . அந்த 'இடைவெளி' ஊடாய் சாத்தான் தங்கள் குடும்பத்திற்குள் பிரவேசித்துத் தங்கள் பிள்ளைகள் தாக்கப்படுவதற்கு "கதவைத் திறந்துவிடுகிறார்கள்" என்பதை அறியாதவர்களாகவே இருக்கிறார்கள். தன் பெற்றோர்களிடம் 'கரடுமுரடாய்' பேசிடும் ஒரு முரட்டாட்டம் கொண்ட பிள்ளை, ஒரு தொற்றுநோயைப்போல் தன் கணவனிடம் 'கரடுமுரடாய்' பேசிடும் தன் தாயிடமிருந்தே பெற்றிருப்பான்! அல்லது தன் ஆண்டவருக்கு ஏதோ சில பகுதிகளில் முரட்டாட்டம் செய்திட்ட தன் தகப்பனிடமிருந்து பெற்றிருப்பான்!! இந்த பெற்றோர்களே முதலாவதாக இந்த நோயை வீட்டிற்குள் அனுமதித்திருக்க. . . ஏற்பட்ட தொற்றுநோய்க்காக 'பாவம்' அந்தப் பிள்ளையை கடிந்துகொள்வதில் என்ன பிரயோஜனம்!! ஆகவே, இந்த பெற்றோர்களே இங்கு முதலாவதாக மனந்திரும்ப வேண்டும்!!

உங்கள் வீட்டின் விஸ்தாரத்தைவிட அல்லது அங்குள்ள விலையுயர்ந்த எலெக்ட்ரானிக் உபயோக சாதனங்களைவிட "உங்கள் இல்லத்தின் ஐக்கியமே" அதிகளவு முக்கியம் நிறைந்ததாகும்! நீங்கள் ஒரு ஓலை குடிசை வீட்டில் வசித்தாலும், அங்கு நீங்கள் ஆண்டவரின் சீஷர்களாய் இருந்துவிட்டால். . . உங்கள் குடும்பத்தில் நிச்சயமாய் தேவனுடைய மகிமை இறங்கி தங்கிவிடும்!!

**ஜெபம்** : *எங்கள் அன்பின் தகப்பனே! எங்கள் குடும்பத்தின் ஐக்கியத்தில் கவனம் கொண்டு, பிரிவினை தோன்றச்செய்யும் பொல்லாத சாத்தானை ஜெயித்துவாழ கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## குடும்பத்தில் பொறுப்புள்ள தாய்மார்கள் வேண்டும்!

தீத்து 2:5 கூறுகிறபடி, ஸ்திரீகள் "வீட்டிலுள்ள வேலைகள் செய்யும்படி தரித்திருக்க வேண்டும்" என்பதே அவர்களைக் குறித்த தேவசித்தமாய் இருக்கிறது. ஆகவே, தன் இல்லத்தைவிட்டு வெளியில் அலுவல் பார்க்கச் செல்லுவதினிமித்தம், எந்த தாயும் தன் வீட்டின் பொறுப்புகளை உதாசீனம் செய்யவே கூடாது. 1) தன் ஆண்டவர் 2) தன் கணவர் 3) தன் பிள்ளைகள் ஆகிய இந்த வரிசைப்படியே அவளுடைய பிரதான அன்பும் அர்ப்பணிப்பும் எப்போதும் இருந்திட வேண்டும். வேறு வழியில்லாமல், அப்படியே ஒரு வெளி அலுவலுக்கு அவள் செல்ல வேண்டியிருந்தாலும், அந்த முதல் மூன்று வரிசைக்குப் பின்னால் வரும் நான்காவது கவனத்திற்குரியதாகவே கண்டிப்பாய் அந்த அலுவல் இருந்திட வேண்டும்.

பொதுவாக பிள்ளைகளையுடைய தாய்மார்கள் ஏன் அலுவலுக்காக வெளியே போகிறார்கள் என்பதற்கு இரண்டு காரணங்கள்தான் உண்டு :

1. ஜீவனம் பண்ணும் பொருட்டு! தங்கள் கணவரின் வருமானம் குடும்பத் தேவைகளுக்குப் போதுமானதாய் இல்லாததால் வேலைக்குச் செல்லுகிறாள்!

2.ஆடம்பர ஜீவியத்தை விரும்பி! கணவனும் மனைவியும் ஓர் உயர்தர வாழ்க்கையை இச்சிப்பதினிமித்தம் மனைவியும் வேலைக்குச் செல்லுகிறாள்!

நீங்கள் வேலைக்குச் செல்லும் காரணம் பொருளாதார நெருக்கடியினிமித்தம் "ஜீவனம் பண்ணும் பொருட்டுதான்" என தேவனுக்கு முன்பாக நீங்கள் நேர்மையாகக் கூறமுடியுமென்றால், இதனிமித்தம் ஏற்ற விசேஷித்த தம் கிருபையைத் தேவன் உங்களுக்குத் தந்திடுவார் என்பதை நீங்கள் நிச்சயித்துக் கொள்ளலாம்.

அதற்கு பதிலாய், "ஆடம்பர ஜீவியத்தை விரும்பி" நீங்கள் வேலைக்குச் செல்பவராய் இருந்தால், நீங்கள் மெய்யாகவே "பெரிய அபாயத்திலிருக்கிறீர்கள்" என்பதை உங்களுக்கு நான் எச்சரிக்க விரும்புகிறேன். இந்த அபாயத்தின் விளைவைப் பல வருடங்களுக்குப் பிறகுதான் நீங்கள் அறுவடை செய்வீர்கள். ஆம், உங்கள் பிள்ளைகள் வீட்டிலிருந்து வெளியே செல்ல வேண்டிய சமயத்தில், அவர்கள் உங்களுக்கு அடங்காதவர்களாகவும், தேவனுக்கு எவ்விதத்திலும் பிரயோஜனமற்றவர்களாகவும் மாறுவார்கள்! இவ்வாறு நிகழ்ந்த பின்பு, யாதொன்றை நீங்கள் செய்ய விரும்பினாலும் அது காலதாமதமான செயலாகவே இருந்துவிடும்!

**ஜெபம்** : *எங்கள் பரலோக பிதாவே! வேதம் கட்டளையிடும் பொறுப்புகளிலிருந்து சிறிதேனும் விலகிடாத தாய்மார்களாய் வாழ்ந்திட ஏற்ற கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**பணமல்ல, தேவனே நமது ஒரே எஜமான்!**

*நாம் இந்த உலகத்தில் வாழும் காலமெல்லாம் ஒவ்வொருநாளும் பணத்தை கையாள வேண்டியதாயிருக்கிறது. இயேசுவின் சீஷர்களாகிய நாம் கவனமாயிராவிட்டால், தேவனையும் நேசித்து அதேசமயத்தில் உலகப்பொருள்களையும் நேசிக்கும் அபாயத்தில் சிக்கிக்கொள்ள முடியும்!*

*நாம் ஆண்டவரின் சீஷர்களாய் இருக்கும் பாக்கியத்தை பறித்துக் கொண்டு, பணம் நம்மை மிக எளிதில் வளைந்து பற்றிக் கொள்ள முடியும். ஆகவேதான், நாம் எவ்வாறு சாத்தானைக் குறித்து சாதகமான மனப்பான்மை வைத்திருக்க முடியாதோ அதேபோல, பணத்தின் மீதும் ஓர் சாதகமான மனப்பான்மை நாம் வைத்துக் கொள்ளவே முடியாது.*

*ஒன்று, ஆண்டவர் இயேசுவின் சீஷர்களாய் இருந்திட வேண்டும்! அல்லது உலகப்பொருள்களின் சீஷர்களாய் நாம் இருந்திட வேண்டும்!! ஆம், இந்த இரண்டிற்குமிடையே சீஷர்களாய் நாம் ஒருபோதும் இருந்திட முடியாது!!*

*நம்முடைய நோக்கம் தேவனைப் பிரியப்படுத்துவதாய் இருக்க வேண்டும். . . அல்லது நம்முடைய நோக்கம் பணத்தைப் பிரியப்படுத்து வதாய் இருக்க வேண்டும், அவ்வளவுதான்! ஏனெனில், இந்த இரண்டும் 'ஒரு காந்தத்திற்கு வடதுருவம் தென்துருவம் போலவே' எதிரும் புதிருமாய் இருக்கிறது. நாம் மெய்யாகவே தேவன்பால் ஈர்க்கப் பட்டவர்களாய் இருந்தால், பணத்தை விட்டு தூர விலகி நிற்போம்! தேவனை முழுவதுமாய் நேசிக்க வேண்டுமென்றால், உலகப் பொருட்களை முற்றிலுமாய் வெறுத்தே ஆக வேண்டும். ஒன்று, "இயேசு கூறிய இந்த சத்தியம் மெய்தான்" என நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது 'இயேசு பொய் சொல்லுகிறார்' என அவரை விட்டு நீங்கள் விலகிநிற்க வேண்டும்!*

*பணத்தை அசட்டை செய்வதின் பொருள், 'நாங்கள் பணத்திற்காக கவலைகொள்ள மாட்டோம்!' என்பதுதான். நாம் அதை உபயோகப்படுத்துகிறோம். . . ஆனால், பணத்தோடு பிடிப்பு கொண்டிருப்பதில்லை! பரலோகத்தின் வீதிகள்(தரை) தங்கத்தால் செய்யப்பட்டிருக்கிறது! இந்த பூமியிலோ, தங்கத்தை தலைக்கு மேல் உயர்த்தி வைத்திருக்கிறார்கள்! . . . ஆனால் பரலோகத்திலோ இதே தங்கம் நம் பாதத்திற்கு கீழாய் வைக்கப்பட்டிருக்கும்!! இந்த பூமியிலிருக்கும்போதே தங்கத்தை தங்கள் கால்களுக்கு கீழாய் வைத்திருக்க கற்றுக்கொண்டவர்களுக்காகவே பரலோகம் ஆயத்த மாக்கப்பட்டிருக்கிறது!*

***ஜெபம் :*** *எங்கள் பரம தந்தையே! உம்மைவிட்டு பிரிப்பதற்கு சதா போராடும் இந்த 'பணம்' என்ற எஜமானைக் குறித்து ஜாக்கிரதை கொண்டு, உம்மைமாத்திரமே "பற்றி" வாழ கிருபைதாரும், ஆமென்.*

**பணத்தை கையாளுவதில் சமநிலை பிரமாணம்!**

*சீஷர்கள் தங்கள் திருமணத்தையும், வேலையையும், சொத்துக்களையும், பணத்தையும் விட்டுவிட்டு வனத்தில் வாழும் துறவிகளைப்போல இருக்கும்படி தன் சீஷர்களை அவர் ஒருபோதும் அழைக்கவில்லை. கிறிஸ்தவர்கள் யோவான்ஸ்நானகனின் சீஷர்களாய் அல்ல. . . இயேசுவுக்கே அவர்கள் சீஷர்கள்! இயேசு தன் ஜீவியத்தின் பெரும்பகுதியை ஓர் தச்சனாய் இருந்து பணம் சம்பாதித்து தன் குடும்பத்தைப் போஷித்தார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.*

*இப்பூமிக்குரிய காரியங்களில் இயேசு எப்போதும் சமமான மனநிலையே கொண்டிருந்தார். ஒரு திருமண விருந்தில் ஏராளமான திராட்சை ரசத்தை அவரால் செய்திட முடிந்தது. . . அதுபோலவே நாற்பது நாட்கள் உபவாசமும் அவரால் இருந்திட முடிந்தது! இது போலவே, ஓர் உண்மையான சீஷன், ஒரு சிறந்த விருந்தை களித்திருக்கவும் அறிந்திருப்பான். . . அதேசமயம் தேவையான சமயங்களில் உபவாசிக்கவும் அறிந்திருப்பான்!!*

*நம் யாவருக்குள்ளும் "பண ஆசை" குடிக்கொண்டிருக்கிறது. "நான் பணத்தை நேசிக்கவில்லை!" என எண்ணுகிறவன் தன்னையே ஏமாற்றிக் கொள்ளுகிறவனாய் இருப்பான் அல்லது ஓர் பொய்யனாய் இருப்பான்! ஏனெனில் எல்லா மானிடனும் பணத்தை நேசிக்கிறான்!! "பணஆசையே எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது" (1தீமோ.6:10) என்றே வேதாகமம் ஆணித்தரமாக கூறுகிறது. இத்தீமையிலிருந்து நம்மை விடுவிக்க ஆண்டவரால் மாத்திரமே முடியும்!*

*வேதாகமத்தில் காணும் அநேக மாதிரிகள் முதலாவது நன்றாக ஓடி. . . பின்பு பணத்திற்கு பின்பாக ஓடி, தேவனுடைய உயர்ந்த பங்கை இழந்துபோனார்கள்! பணம் சம்பாதிப்பதற்காகவே சோதோமிற்கு சென்ற லோத்து அதனிமித்தம் தன் முழு குடும்பத்திற்கும் அழிவைக் கொண்டு வந்தான்! பணத்திற்காக தீர்க்கதரிசனம் சொன்ன பிலேயாம் தன்னையே அழித்துக்கொண்டான்! நாகமானின் பணத்தைத் தேடி ஓடிய கேயாசி, தான் தேவனுடைய ஒரு தீர்க்கதரிசியாகும் சந்தர்ப் பத்தை இழந்து போனான்! இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசை வைத்து, உத்தம அப்போஸ்தலன் பவுலை விட்டு தேமா விலகிச் சென்றான்! (2 தீமோத்தேயு 4:10). இதுபோன்ற ஏராளமான சம்பவங்கள் இன்றைய கிறிஸ்தவ சரித்திரத்தில் குவிந்து கிடக்கின்றன!! நாமோ தெய்வ பயத்துடன் வாழக்கடவோம்!!*

**ஜெபம்** : *எங்கள் பரலோக தகப்பனே! இவ்வுலகத்தில் எல்லோரையும் போலவே வாழ்ந்தாலும், உலகத்தால் கறைபடாத வாழ்க்கை வாழ்ந்திட எங்களுக்கு போதிய ஞானம் தாரும்! இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

**வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம்!**

"**வா**ங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" (அப்போஸ்தலர். 20:35) என்றல்லவா இயேசு கூறினார். இதற்குமாறாக, நாம் பிறரிடம் இருந்து ஏதேனும் அன்பளிப்பை பெறுவதற்கே நாம் விரும்புகிறோமா? அப்படியானால், நாம் ஆதாமின் புத்திரர் களாகவேதான் இன்னமும் இருக்கிறோம். ஆனால், தேவபுத்திரர்களின் ஓர் முக்கியமான குணாதிசயம் என்னவெனில், வாங்குவதைக் காட்டிலும் கொடுப்பதற்கே முதலிடம் தருவார்கள்! வேதம் சொல்லுவதைக் கேளுங்கள், "அன்பளிப்பை (GIFTS) வெறுக்கிறவனோ பிழைப்பான்!" (நீதிமொழிகள். 15:27). இவ்வசனத்திற்கேற்ப, இனிமேலாவது நம் மனம் புதிதாகுவதாக!! ஆம், தேவனுக்கு கொடுக்க கற்றுக்கொள்ளாததினாலேயே இன்று அனேகர் தொடர்ச்சியான கடனுக்குள் சிக்கியிருக்கிறார்கள்! (நீதி. 21:26 - LIVING BIBLE வாசித்துப்பாருங்கள்).

நம் சகவிசுவாசிகள் தேவையில் இருக்கும்போது, அவர்களுக்கு கொடுக்க மனதில்லாமையும் பொருளாதார நெருக்கடிக்கு ஓர் காரணமாகும். "ஏழையின் கூக்குரலுக்குத் தன் செவியை அடைத்துக் கொள்ளுகிறவன், தானும் சத்தமிட்டுக் கூப்பிடும்போது கேட்கப்பட மாட்டான்" (நீதிமொழிகள். 21:13). இதற்கு நேர்மாறாக "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான். அவன் கொடுத்ததை அவர் 'அற்புதமான வட்டியோடு' திரும்பக் கொடுப்பார்" (நீதிமொழிகள். 19:17 LB).

"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்..... நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அதே அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்" (லூக்கா. 6:38) என்பது தேவனுடைய மாறாத சட்டமாகும். இதை நாம் ஒருபோதும் தாண்டிச் செல்ல அல்லது தவிர்த்து விட முடியவே முடியாது. நாம் கொடுக்காவிட்டால் நிச்சயம் தேவையில் சிக்குவோம்! பிறருக்குப் பிசினித்தனம் பண்ணினால், நமக்கும் தேவன் பிசினித்தனம் பண்ணுவார்!!

'பணஆசை' என்ற சூத்திரமே இன்று அனேக கிறிஸ்தவர்களைத் "தேவை" என்ற சுழலில் வீழ்த்தியுள்ளது. ஆதாமின் புத்திரர்கள் பணத்தை நேசிக்கிறார்கள். நாம் மறுபடியும் பிறந்தவுடன், இந்த பணஆசை நம்மை விட்டு ஏதோ மாயமாய் மறைந்து விடுவதில்லை! ஆனால், இவ்விஷயத்தில் நம்மை நாமே நியாயம் தீர்த்து நம்மைக் கழுவிக் கொள்வதற்கு உண்மையுள்ளவர்களாய் இருப்போமென்றால், இப்பண ஆசை கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்து, இறுதியில் முழுவதுமாய் நம்மைவிட்டு மறைந்து ஒழிந்தே போகும்! கொடுப்பதற்கு ஆசை உள்ளவர்களாய் மாறிவிடுவோம்!!

**ஜெபம்** : எங்கள் பரம தந்தையே! எங்கள் ஆதாமின் சுபாவப்படி வாங்கியே பழகிய எங்களை வெறுத்து, உமக்கும் உம்முடையவர்களுக்கும் தாராளமாய் கொடுக்கும் பாக்கியத்தை எங்களுக்குத் தந்தருளும், ஆமென்.

**பணவிஷயத்தில் நீதியாயும், உண்மையுள்ளவர்களாயும் இருக்க வேண்டும்!**

*இயேசு அப்பத்தையும் - மீனையும் திரளாய் பெருகச் செய்திருந்தாலும், தன் சீஷர்களை நோக்கி, "ஒன்றும் சேதமாகாத படிக்கு மீதியான துணிக்கைகளை சேர்த்து வையுங்கள்" என கட்டளை யிட்டார்! (யோவான் 6:12). பார்த்தீர்களா, ஆண்டவர் வீணாக்குதலை வெறுக்கிறார்!! அனேக விசுவாசிகள் தங்கள் குடும்ப செலவீனத்தில் ஊதாரிகளாகவே இருக்கிறார்கள். நீங்கள் அப்படியிருந்தால், ஒவ்வொரு மாதமும் வரவு-செலவு கணக்கு எழுதிப்பார்த்து, உங்கள் பணம் எவ்வழியில் வீணாகிறது என்பதைக் கண்டுபிடியுங்கள். இவ்விஷயத்தை நீங்கள் "சீரியஸாக" எடுத்துக்கொள்ளவில்லை யென்றால், நீங்கள் தொடர்ந்து எக்காலமும் கடனுக்குள்ளேயே புதைந்து கிடப்பீர்கள்.*

*இன்று விசுவாசிகள் அநாவசியமான அனேக செலவீனங்களில் ஈடுபடுவதற்கு முக்கிய நோக்கம், "இவர்களுக்கு மனிதர்களின் புகழ்ச்சி வேண்டும்" அவ்வளவுதான்!...... குறிப்பாக திருமண வைபவம்!! தடபுடலாகத் திருமணம் நடத்த வேண்டும் என்பதற்காகவே இன்று அனேகர் கடனுக்குள் வீழ்கிறார்கள். இது என்ன? மதியீனம்... மதியீனத்தின் உச்சகட்டம்! இதைப்போலவே தங்கள் வீட்டிற்கு ஆடம்பரப் பொருட்களை தருவிக்கிறார்கள். பிறரைத் தங்களின் தடபுடல் விருந்திற்கும் அழைக்கிறார்கள். எதற்காக? தங்களுக்குப் புகழ்ச்சிவேண்டும் என்பதற்காகத்தான்! இவையனைத்தும் மதியீனத்தின் மொத்த உருவம்!! நாம் விடுதலையோடு தேவனுடைய பார்வையில் மாத்திரமே ஜீவிக்கவேண்டுமென்றால் மனுஷர்களின் புகழ்ச்சிக்கு கண்டிப்பாகச் சாக வேண்டும். அப்போது மாத்திரமே நாம் கடனிலிருந்தும் விடுதலையாகியிருக்க முடியும்!!*

*நாம் பணம் செலவு செய்வதில் உண்மையற்றவர்களாயிருந்தால், தேவன் தன் இராஜ்ஜியத்தின் மெய்யான ஐசுவரியத்தை நமக்கு ஒருக்காலும் தரவே மாட்டார் (லூக். 16:11). இன்றைய அனேகமான பிரசங்கிகளின் வறண்டுபோன பழங்கதைப் பிரசங்கங்களைக் கவனிக்கும்போது, இவர்களுக்கு மெய் ஐசுவரியமான "தேவனுடைய வார்த்தையில் வெளிப்பாடு" இல்லை என்பதை மிகத் தெளிவாய் அறிந்துகொள்ள முடிகிறது. இவர்கள் பணவிஷயத்தில் உண்மை யில்லாதிருப்பதே இதற்குக் காரணம்! தேவன் தன் வார்த்தையிலிருந்து நமக்கு வெளிப்பாடு தரவில்லையே என உணரும்போது, நாம் பணவிஷயத்தில் உண்மையில்லாதிருக்கிறோமா என நம்மைப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டியது மிகவும் அவசியமாகும். ஒருவேளை அது அநீதியாய் இல்லாமல் இருக்கலாம், ஆனால் 'கவனக்குறைவும்' 'வீணாக்குதலுமாய்' இருக்கக்கூடும்!*

***ஜெபம்:*** *எங்கள் பரம தகப்பனே! பணவிஷயத்தில் பொறுப்பில்லாமல் நடந்து கொண்ட எங்கள் தவறை மன்னித்து, அதில் உண்மையாய் இருந்து, உம் மெய்யான ஐசுவரியம் பெற்றிட உதவிசெய்தருளும், ஆமென்.*

**நம் தேவைகளுக்கு தேவனையே விசுவாசித்திட வேண்டும்!**

ஓர் நாத்திகனுக்குப் பொருளாதார சிக்கல் ஏற்பட்டால், அவன் உடனே வேறு ஒருமனிதனிடம் உதவி தேடி ஓடுவான்! ஏனென்றால் இவன் 'தேவன் இருக்கிறார்' என்பதை நம்புவதில்லை! இப்போது நம்மில் காரியம் எப்படியிருக்கிறது? நமக்குத் தேவை ஏற்படும்போது நாம் என்ன செய்கிறோம்? பொருளாதார நெருக்கடியைக் கொடுத்தும் தேவன் நம்மை சோதிக்க முடியும். அப்போஸ்தலர்களும் அடிக்கடி பொருளாதார தேவைக்குள் பிரவேசித்திருக்கிறார்கள் (1 கொரிந்தியர். 4:11). "ஆனால்" அவர்கள் ஒருபோதும் பிச்சை எடுக்கும் அல்லது கடன் வாங்கும் நிர்பந்தத்திற்குள்ளாக வீழ்ந்ததே கிடையாது. மாறாக, தேவன் தங்கள் தேவைக்குத் தருவார் என அவரையே நம்பியிருந்தார்கள், தேவனும் அவ்விதமே தந்தருளினார்! அருமை ஆண்டவர் தன் உண்மையுள்ள பிள்ளைகளை ஒருபோதும் கைவிடவே மாட்டார்! அவசியமானால், தன் தாசன் எலியாவைப் போஷித்தது போல, காகங்களைக் கொண்டும் எப்படியாவது போஷித்து விடுவார்!

இஸ்ரவேலர்கள் 'உதவி நாடி' எகிப்துக்குத் திரும்பியபோது, அவர்களுக்குத் துன்பமே எஞ்சியது! தேவனோ அவர்கள் தன் பக்கம் திரும்ப வேண்டும் என்றே விரும்பினார். நம் பொருளாதார தேவைக்காகத் தேவனிடம் மாத்திரமே ஓடி 'விசுவாசித்து' ஜெபித்திருக்கிறோமா? அல்லது அந்த நாத்திகனைப் போல நடந்து கொள்கிறோமா? (இது குறித்து ஏசாயா. 30:7-21, சங்கீதம். 121 கூறும் வசனங்களை வாசித்துப் பாருங்கள்). நம்மை மற்ற விசுவாசிகளோடு மதியீனமாய் ஒப்பிட்டுப் பார்க்காமல், தேவன் நமக்கு மகிழ்வுடன் கொடுத்ததைக் கொண்டு 'போதுமென்ற மனதுடன்' வாழக் கற்றுக் கொள்ளும்போதுதான், "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" (எபிரேயர். 13:5) என தேவன் உரைத்த வாக்குத்தத்தம் நம்மில் நிஜமாய் மாறிட முடியும்!

முழு இருதயத்தோடு கீழ்ப்படிபவர்களுக்கே அவர் உதவுவார்! (எரேமியா. 29:11-13). தன்னை கனம் பண்ணுகிறவர்களைத் தேவன் நிச்சயம் கனம் பண்ணுவார்!

**ஜெபம்** : எங்கள் பரலோக பிதாவே! எந்த தேவையின் சூழ்நிலையிலும் 'மனுஷரையல்ல', உம்மைநோக்கி ஓடி வரும் நல்ல விசுவாச உள்ளம் தாரும்! இயேசுவின் நாமத்தில் ஆமென்.

**நித்தியத்தின் மதிப்புள்ள வாழ்வை வாழவேண்டும்!**

"நாம் எவைகளை நித்தியத்தில் நினைவு கூருவோம்?" என்ற தலைப்பில் சகோ. வில்லியம் பூத் (இரட்சண்ய சேனை சபையின் ஸ்தாபகர்) எழுதிய செய்தியில், தான் கண்ட ஒருகனவைப் பற்றி எழுதியிருக்கிறார். அக்கனவில் அவர் தன்னை ஒரு முழுஇருதயம் கொண்ட சகோதரனாய் காணாமல், சாதாரண விசுவாசியாகவே தன்னைக் கண்டார். இக்கனவில் தான் மரித்து, பரலோகத்தில் நுழைவதைப் போன்ற காட்சிகளையும் கண்டார். அங்கே பரலோகத்தில் வில்லியம் பூத், தன்னுடைய "ஜீவ புத்தகத்தைக்" கண்டார். அந்த ஜீவ புத்தகத்தின் பதிவேட்டில் "மன்னிக்கப்பட்டான்!" என்ற வார்த்தை மாத்திரமே பெரியதாக எழுதப்பட்டிருப்பதையும் கண்டார். வில்லியம்பூத் முதலில், தான் மன்னிக்கப்பட்டு இப்போது பரலோகத்தில் இருப்பதற்காக பேரானந்தம் கொண்டார்! "ஆனால்" பரலோகத்தில் வேறொரு விசுவாசிகளின் குழுவையும் கண்டார்...... அவர்களோ சொல்லிமுடியா விசேஷித்த மகிமை கொண்டவர்களாய் இருந்தார்கள். யார் இவர்கள்? இந்த பூமியில் தங்கள் சொந்த ஜீவனை அருமையாய் எண்ணாதவர்கள்! இவர்கள் ஆண்டவருக்காகவும் அவருடைய சபைக்காகவும் சகலத்தையும் இழந்திருந்தார்கள்! பணத்தை, பதவியை, கௌரவத்தை...... இன்னும் இவ்வுலகம் அதிக மதிப்புடையதாய் கருதும் யாவற்றையும் இவர்கள் இழந்து தியாகம் செய்திருந்தார்கள்!!

இவர்களின் சொல்லி முடியா மகிமையைக் கண்ணுற்ற"பூத்" அவர்கள் மீது பொறாமை கொண்டார்! அச்சமயத்தில் இயேசு, வில்லியம் பூத்திடம் (கனவில்) வந்து, "வில்லியம் பூத், நீ காணும் சொல்லி முடியா மகிமையில் ஜொலிக்கும் இந்த ஜனங்களோடு ஒன்றாய் சேர்ந்து கொள்ளுவதற்கு உன்னால் ஒருக்காலும் முடியாது! ஏன் தெரியுமா? நீ இந்த மகிமையான ஜனங்களைப்போல் அல்லாமல், இந்த பூமியில் உனக்காகவே ஒரு வாழ்க்கையை வாழ்ந்தாய்!" என மனம்வருந்தி கூறினார். இயேசு இவ்வாறு வில்லியம் பூத்திடம் கூறவும், வில்லியம் பூத் கனவிலிருந்து விழித்தெழவும் சரியாய் இருந்தது. அப்போதுதான், தான் இன்னமும் உயிரோடிருப்பதையும், தான் கண்டது யாவும் கனவு மாத்திரமே என்பதையும் அறிந்தார். அச்சமயத்தில் அவர் எப்படியெல்லாம் உணர்த்தப்பட்டார் தெரியுமா? அன்றிலிருந்து, எஞ்சியுள்ள தன் முழு ஜீவியத்தையும் தன் ஆண்டவருக்காகவே வாழ்ந்து விடுவதற்கு உறுதியான தீர்மானம் பூண்டார்!!

***ஜெபம்*** : *எங்கள் பரம தந்தையே! வெறும் விசுவாசி என்ற பெயரில் ஜீவியம் முடிந்துவிடாதபடி, நித்தியத்தில் மகிமையைக் காணும் முழு அர்ப்பண ஜீவியம் எங்களுக்குத் தாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**ஞானத்தின் 7-தூண்கள்!**

*மணவாளன் "ஞானம்" என அழைக்கப்பட்டதை நீதி.8:1,27-ம் வசனங்களில் வாசிக்கிறோம். அதுபோலவே மணவாட்டியும் கூட "ஞானம்" என்றே அழைக்கப்படுவதை நீதி.9:1-ம் வசனத்தில் வாசிக்கிறோம். ஏனெனில் இந்த மணவாட்டி எல்லாவகையிலும் தன் மணவாளனுக்கு ஒப்பாகவே மாறிவிட்டாள்! ஞானத்தின் குணாதிசயங் களை உற்றுநோக்கி "யார் கிறிஸ்துவின் மணவாட்டி?" என்பதை எளிதில் கண்டுபிடித்திடவும் முடியும்!!*

**1. பரிசுத்தம்:** *கிறிஸ்துவின் மணவாட்டிக்கு மிக முக்கியமான "முதல் தூணாய்" காணப்படவேண்டியது இந்த பரிசுத்தமேயாகும்! வெளிப்புற பரிசுத்தத்தை மாத்திரம் காட்டி, உள்ளே 'வெற்று கூடாய்' காணப்படும் தூணல்ல இந்த பரிசுத்தம்! அப்படி இல்லவே இல்லை!! மாறாக, தூணின் உச்சி தொடங்கி அதன் அடிப்பாகம் வரை "உறுதியான கெட்டியான" தூணாய் விளங்குவதே இந்த பரிசுத்தம்!*

**2.சமாதானம்:** *நீதியும் சமாதானமும் எப்போதும் இணைந்தே செல்கிறது! ஆம், இவர்கள் இரட்டையர்கள்!! தேவனுடைய ராஜ்யம், நீதியும் சமாதானமுமாம்!! (ரோமர் 14:17). மெய்யான ஞானம் ஒருபோதும் வாக்குவாதம் கொண்டதும், சச்சரவுபண்ணுவதுமாய் இருப்பதே இல்லை! அது சண்டையிடுவதற்கு முன்செல்லாது! 'தன்னால் முடிந்த வரை' யாவரோடும் ரம்மியமான உறவையே நாடும்!*

**3. சாந்தமுள்ள கரிசனை:** *கிறிஸ்துவின் மணவாட்டி மற்றவர்களிடம் எப்போதுமே நல்லவர்களாயும், மென்மையுள்ளவர்களாயும், பொறுமையுள்ளவர்களாயும், சகித்துக்கொள்பவர்களாயும், மரியாதை காண்பிக்கும் குணம் கொண்டவர்களாயும் இருப்பார்கள்!*

**4. இணங்குவதற்கு விருப்பம்:** *எச்சரிப்பையும், புத்திமதியையும் ஏற்றுக்கொண்டு அதற்கு இணங்குவார்கள்.*

**5. மிகுந்த இரக்கமும் அதன் நற்கனிகளும்:** *அவ்வப்போது கொண்ட இரக்கத்தினால் அல்ல, கிறிஸ்துவின் மணவாட்டி எப்போதுமே இரக்கத்தினால் நிறைந்திருப்பாள்! யாரையும் நிபந்தனையின்றி, மகிழ்ச்சியுடன், மனப்பூர்வமாய் மன்னிப்பதற்கு கிறிஸ்துவின் மணவாட்டிக்கு கஷ்டமாய் இருப்பதே இல்லை!*

**6. என்றும் மாறாத உறுதி:** *தேவனுடைய பார்வையில் ஜீவிக்கும் இவன், தான் கற்றுத்தேர்ந்த சத்தியத்தில் உறுதியாய் இருப்பான்!*

**7. மாயமற்ற தன்மை:** *மற்றவர்கள் வெளியே காண்பதைவிட, தன் "உள்ளே" அதிகமான ஆவிக்குரிய களஞ்சியம் பெற்றவளாய் இருப்பாள், இந்த ஞான மணவாட்டி!*

*வாஞ்சையுள்ளவர்களாயிருந்தால், நாமும் ஞானத்தின் இந்த 7-குணாதிசயத்தை நிச்சயமாய் கண்டுகொள்ள முடியும்!!*

***ஜெபம்*** *: எங்கள் பரம தகப்பனே! ஞானத்தின் சம்பூர்ணம் நிறைந்த எங்கள் மணவாளனைப்போலவே, அவரது மணவாட்டியாகிய நாங்களும் ஞானத்தின் இந்த 7-திவ்ய அம்சங்களில் தேறிட கிருபை தாரும், ஆமென்.*

**பதிலுக்குப் பதில் செய்யாதிருக்கும் கிறிஸ்துவின் ஆவி வேண்டும்!**

*நம் ஜீவியம் கிறிஸ்துவினுடைய ஆளுகைக்கு முற்றிலுமாய் அர்ப்பணிக்கப்பட்டிருந்தால், பதிலுக்குப் பதில் செய்வதை நாம் மகிழ்ச்சியுடன் மறுத்திட முடியும்! மனுஷர்கள் நமக்கு என்ன செய்ய விரும்புகிறார்களோ, அதற்கு சாந்தமுடன் நம்மை ஒப்புக் கொடுத்திடவும் முடியும்!! ஏனென்றால், நம்மை இவ்வாறு நடத்துவதற்கு "தேவனே அவர்களை அனுமதித்திருக்கிறார்" என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.*

*மேற்கண்ட மனோபாவத்தையே சிலுவையின் பாடுகளில் இயேசு கொண்டிருந்தார். அவர் விரும்பியிருந்தால் பட்டயங்கள் உருவிய 72,000 தூதர்களை தன் உதவிக்கு அவர் அழைத்திருக்க முடியும். ஆகிலும் அவ்வாறு செய்திட அவர் மறுத்துவிட்டார்! தான் பொய்யாய் குற்றம் சாட்டப்படுவதற்கும், வையப்படுவதற்கும், அடிக்கப்படுவதற்கும், சிலுவையில் அறையப்படுவதற்கும் சாந்தமுடன் தன்னை ஒப்புக் கொடுத்துவிட்டார். ஏனெனில், "இவை அனைத்தையும் தன் பிதாவே அனுமதித்தார்"என்பதில் இயேசு உறுதியான விசுவாசம் கொண்டிருந்தார். நியாயசங்கத்தில் நடந்த விசாரணையில் இயேசு ஒரு புழுவைப் போல நடத்தப்பட்டார் என சங்கீதம் 22:6 கூறுகிறது. புழுவை வீசுவதைப் போல அவர் கீழே வீசப்பட்டு, மனுஷர்களின் கால்களால் அவர் மிதிக்கப்பட்டார். ஒரு பாம்பிடம் அவ்வாறு நடந்திருந்தால் அது எதிர்த்து நின்று தாக்கும்! ஆனால் ஒரு புழுவை நீங்கள் என்னதான் மிதித்து நசுக்கினாலும், அது ஒருபோதும் பதிலுக்கு பதில் செய்யாது!! ஆம், பாம்பின் செயலில் பிசாசின் ஆவி இருக்கிறது. ஆனால், ஒரு புழுவின் செயலிலோ தேவகுமாரன் வாசமாயிருக்கிறார்! ஜனங்கள் நம்மை துன்புறுத்தி அல்லது வசைபாடி அல்லது நம் உரிமைகளைக் காலினால் மிதிக்கும் போது நம்மிடத்திலிருந்து பிரதிபலிக்கும் கிரியை மேற்கண்ட இரண்டு ஆவிகளில் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். இன்றுவரை உங்களிடத்தில் இருந்த ஆவி என்ன ஆவி? என்பதை சற்று நிதானித்துப் பாருங்கள்!*

*இதுபோன்ற சூழ்நிலைகளில் உங்கள் பிரிய நண்பர்களும், காயமடைந்த உங்கள் சுயமும் "இத்தனை மோசமான இழிவை நீ ஏற்றுக்கொள்ளக்கூடாது" என்றும் "இவ்வளவு கேவலமான வசைச் சொற்களைப் பேசியவனை நீ அப்படியே விட்டுவிடக்கூடாது!" என்றும் உங்களிடம் பேசுவார்கள். ஆனால் பரிசுத்தாவியானவரோ சிலுவையின் பாதையை உங்களுக்கு காண்பித்து "நீ எதுவும் செய்ய வேண்டாம், யாதொன்றும் பேச வேண்டாம், அதற்குப் பதிலாய் உன் மூலமாய் நான் அவனை அன்புகூரட்டும்!!" என்றே கூறுவார்.*

**ஜெபம்** : *எங்கள் அன்பின் பிதாவே! எங்களுக்கு தீமை செய்தவர்களுக்கு, தீமை செய்யாது, இயேசுவைப்போல் அதை சாந்தமுடன் ஏற்று அன்புகூர்ந்திடும் நல்ல இருதயம் தாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**சிலுவையின் பாதை, ஜெயத்தின் பாதை!**

*சிலுவை செய்தியின் மறுபுறத்தில் ஓர் பிரகாசமான செய்தியும் அடங்கியிருக்கிறது! ஆம், சிலுவையே அதன் முடிவல்ல. . . அது, உயிர்த்தெழுந்த வாழ்விற்குள் நடத்தும் பாதையாகவும் இருக்கிறது. சிலுவையின் கிரியையை மனப்பூர்வமாய் ஏற்றுக் கொண்டவர்களுக்கு "ஓர் சந்தோஷம் அவர்களுக்கு முன் வைக்கப்பட்டிருக்கிறது" (எபிரெயர் 12:2). நிலத்தில் விழுந்து மரிக்கும் கோதுமை மணி "அதே நிலையில்" அங்கு இருப்பதில்லை. . . அது முளைத்து, ஓர் ஜெயமுள்ள கனி கொடுக்கும் வாழ்விற்கே மலர்கிறது!! சிலுவையின் பாதையை ஏற்றுக்கொண்ட ஒரு விசுவாசி மற்றவர்களால் தவறாய் புரிந்து கொள்ளப்பட்டு கடினமான பாதையில் சென்றாலும், முடிவில் தேவன் அவனை தூக்கி நிறுத்துவார்! ஆம், கனி கொடுக்கும் ஜீவியம் சுயத்திற்கு மரிப்பதிலிருந்தே பொங்கி வருகிறது!*

*இதற்கு யோசேப்பின் வாழ்க்கை ஓர் உதாரணமாயிருக்கிறது. தான் நேசித்த தன் சொந்த சகோதரர்களால் அடிமையாய் விற்கப்பட்ட அனுபவம் ஓர் கொடிய கசப்பான அனுபவமாகும்!*

*இவை யாவற்றின் விளைவாய். . . முடிவில், அவன் எகிப்தின் அதிபதியாய் மாறினான்! ஆம், தன்னை கனம்பண்ணுகிறவர்களை தேவன் எப்போதுமே கனம்பண்ணுகிறார் (1 சாமுவேல் 2:30). அன்றும் அதை செய்தார்! இன்றும் அதைச் செய்கிறார்!! யோசேப்புக்கு நடந்தது போல் 'உலகத்தின் கண்களுக்கு பகிரங்கமானதாய்' அவர் தரும் கனம் எல்லா சமயங்களிலும் இருப்பதில்லை. ஆகிலும், "தெய்வீக மதிப்பிற் குரிய கனத்தைத்" தவறாமல் தந்து நம்மை அவர் முடிசூட்டுகிறார்!!*

*எபிரெயர் 2:14 கூறுகிறபடி பிசாசானவனை "தன் மரணத்தினாலே" அழித்தார்! நம் ஆண்டவரே* **மரணத்தின் மூலமாக** *சாத்தானை ஜெயித்திருப்பாரென்றால், அவருடைய சீஷர்கள் பிசாசானவனை ஜெயித்திட இதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை! இயேசுவின் நாமத்தில் சில அற்புதங்களைச் செய்துவிட்டால் சாத்தானை தோற்கடித்துவிட்டதாக அநேகர் எண்ணிக் கொள்கிறார்கள். ஆனால், கிறிஸ்துவின் சிலுவையாகிய அந்த ஒரே ஆயுதமேயன்றி வேறு எதற்கும் சாத்தான் மடங்குவதில்லை!*

*சிலுவையின் பாதை ஒன்றே ஜெயத்தின் பாதைக்கு அடிகோலாகும். நம் இருதயத்தின் உள்ளிருந்தோ அல்லது மற்றவர் களிடமிருந்தோ "சிலுவையின் பாதையை தவிர்த்துவிடு" என தொனிக்கும் குரல் எப்போதுமே 'பிசாசின் குரல்' என்பதைக் கண்டறிய தவறிவிடாதிருங்கள்!*

**ஜெபம்** : *எங்கள் பரம தகப்பனே! சிலுவையின் மரணத்தால், சாத்தானை ஜெயித்த இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, எக்காலத்தும் சிலுவையின் வழியை விட்டு விடாதிருக்க கிருபை தாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**பாலிய இச்சை தூண்டுதலுக்கு விலகியோடவேண்டும்!**

*சிம்சோனும், தாவீதும் பாலிய இச்சையின் மூலமாகவே சாத்தானால் இழுக்கப்பட்டார்கள். இந்த தாவீது கோலியாத்தை ஜெயித்துவிட்டான், ஆனால் தன் சொந்த இச்சையை ஜெயித்துவிட அவனால் முடியவில்லை! பெலசாலிகளாய் இருந்த அநேக தேவ மனிதர்கள் இந்தப் பகுதியில் கடும் வீழ்ச்சியடைந்திருக்கிறார்கள். இக்குறிப்பிட்ட பகுதியில் கவனயீனமாகவோ அல்லது ஒழுக்கத்திற்குரிய கட்டுப்பாடற்றவர்களாகவோ இருப்பவர்கள், மிக எளிதில் சாத்தானுடைய ஆயுதத்திற்கு பலியாகி விடுகிறார்கள். உதாரணமாய் பெண்களின் இன்றைய நாகரீக ஆடைகளைப் பாருங்கள். தேவன் உடுத்தி மறைக்க விரும்பிய பகுதிகளில் எல்லாம் "டிசைன்ஸ்ஸ்" என்ற பெயரில் தங்கள் மறைவான சரீர பகுதிகளைத் திறந்து வெளியரங்கமாக்குகிறார்கள்!*

*ஆதாம், ஏவாளின் சரீரம் உடுத்தி நன்கு மூடப்பட வேண்டும் என்பதை ஆதியாகமம் 3 : 21 வசனத்தின் மூலமாய் தேவன் நமக்கு தெரியப்படுத்தியிருக்கிறார் :*

*'அழகு மாடல்கள்' என்ற பெயரில் "தங்கள் சரீரத்தை நிர்வாணப்படுத்தும்" சினிமாக்கள் மூலமாகவும், சாலையின் இருமருங்கும் விளம்பரப்படுத்தும் சுவரொட்டிகள் மூலமாகவும், பத்திரிகை மற்றும் மாத இதழ்கள் மூலமாகவும் சாத்தான் மிக கவனமாய் திட்டம் வகுத்து எண்ணற்ற புருஷர்களை அவர்களின் காம இச்சைகளுக்கு அடிமைகளாக்கும் வலையில் வீழ்த்திவிட்டான்!*

*இக்கொடிய நாட்களில் யோபுவைப் போலவே, நம் கண்களையும் "உடன்படிக்கையின் கட்டுப்பாட்டிற்குள்" வைத்து நம் ஆசை இச்சைகளை அடக்கி ஆளவேண்டியது அவசியமாய் இருக்கிறது (யோபு 31:1). இந்த 'இழிவான ஆசைகளைத் தூண்டி எரிய வைத்திடும்' யாதொன்றையும் காண்பதற்கோ அல்லது வாசிப்பதற்கோ நாம் மறுத்து விடவேண்டும். இதுபோன்ற கட்டுப்பாட்டை தாவீது வைத்திருக்கவில்லை, ஆகவேதான் அவன் பாவம் செய்தான்! (2 சாமுவேல் 11:2). இந்த கசப்பான பாடத்தை தாவீது கற்ற பின்புதான் "கர்த்தாவே மாயையைப் பாராதபடி நீர் என் கண்களை விலக்கிவிடும்" என ஜெபித்தான் (சங்கீதம் 119:37). இதே தவிப்பான ஜெபத்தை நாமும் ஜெபிப்பது நமக்கு நல்லது!!*

***ஜெபம்** : எங்கள் பரம தந்தையே! வேசித்தன ஆவி நிறைந்த இந்த உலகில், யோபுவைப்போல் 'கண்டிப்புடன்' வாழும் தூய்மை உள்ளம் தாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**தேவனுடைய நேரத்திற்கு காத்திருக்க வேண்டும்!**

இன்று அநேகர், செயல்படுத்த வேண்டிய தேவனுடைய கிரியைகளைப் பொறுமையில்லாமல் அவசர கோலத்தில் முடிக்க எண்ணி "தேவனுடைய நேரம்! தேவனுடைய நடத்துதல்!" ஆகியவை களை இவர்கள் குப்பையில் எறிந்துவிடுகிறார்கள். இதனிமித்த மாய்,அவர்களின் ஜீவியம் சுக்கு நூறாய் சேதமடைந்து போனது!

ஆனால் நாமோ, "அவருடைய வழியில் நின்று! அவருடைய நேரத்தில் முன்னேறி! அவருடைய வேகத்தை பின்தொடர்ந்து! வாழ்ந்துவிட்டால், தேவனுடைய பாதுகாப்பு மாத்திரமல்லாமல் அவருடைய வாக்குதத்தத்தையும் உரிமையுடன் நாம் சுதந்தரித்திட முடியும்!"

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஜீவியம் இதற்கு சிறந்த உதாரணமாய் இருக்கிறது. பிதா தனக்கு காட்டிய திசையெல்லாம் அவர் எப்போதும் முன்னேறிச் சென்றார்! பிதாவின் சித்தம் மாத்திரமே அவரை ஆட்கொண்டிருந்தது! பிதாவின் நேரமேயன்றி சாத்தானுடைய அல்லது மனுஷருடைய எவ்வித தூண்டுதலுக்கும் அவர் இணங்கவே யில்லை! அப்படியெல்லாம் தன்னை அவசரப்படுத்தியவர்களிடம் "என் வேளை இன்னும் வரவில்லை!" (யோவான் 7:6) எனக் கூறிவிட்டார். அதாவது, "நான் முன்னேறிச் செல்லும்படி என் பிதா எனக்குச் சொன்னால் மாத்திரமே என்னால் அடியெடுத்து வைத்திட முடியும்" என்றே கூறிவிட்டார்!

தேவனுடைய நேரத்திற்காக காத்திராமல், தானாகவே கர்த்தருடைய பணியை அவசரப்பட்டு செய்ததினிமித்தம், சவுல் ராஜா தன் இராஜ்ஜிய பாரத்தையே இழந்துபோனான்! (1 சாமுவேல் 13: 8 - 14). இதே போலவே, அவசர செயல்புரிந்த அநேக விசுவாசிகள் "தேவனுக்குரிய சிறந்தவைகளை" இழந்துபோனார்கள். உதாரணமாய், தேவனுடைய சித்தத்திற்காக காத்திராமல் "திருமண விஷயத்தில்" ஏராளமான விசுவாசிகள் அவசரப்பட்டிருக்கிறார்கள்! அன்று அவரசப்பட்டுவிட்டு, இன்று வீட்டில் அமர்ந்து மனம் வருந்திக் கொண்டிருக்கிறார்கள்!! ஆகவே, ஆண்டவருடைய நேரத்திற்காக காத்திருக்கப்பழகுங்கள். . . அப்படியானால், உங்கள் ஜீவியத்தின் எதிர்காலத்தில் வருந்தக்கூடியதென யாதொன்றும் இருக்காது. தனக்கு காத்திருக்கிறவர்களை கர்த்தர் ஒருபோதும் வெட்கப்படுத்துவதே இல்லை!! (ஏசாயா 49: 23).

**ஜெபம்** : எங்கள் பரலோக பிதாவே! உம் நேரத்திற்கும், உமக்கும் காத்திருக்க நல்ல விசுவாசம் தாரும்! கர்த்தருக்கு காத்திருக்கும் நாங்கள் வெட்கப் படுவதில்லை என பறைசாற்ற கிருபைதாரும், ஆமென்.

**அந்நிய நுகத்தில் பிணைக்கப்படக்கூடாது!**

நம்மை வஞ்சிப்பதற்கு பிசாசு ஏராளமான தந்திர வாக்கு வாதங்களை கொண்டவனாய் இருக்கிறான். "என்ன? அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக" என 2 கொரிந்தியர் 6:14 வசனத்தை இப்படியா குறுகிய மனதோடு பார்ப்பது?" என்றே அவன் பவ்வியமாய் கூறிவருகிறான். அவன் சொல்கிறான் "எல்லாம் சரிதான், திருமணத்திற்கு பின்பு உன் கணவனை அல்லது மனைவியை சுவிசேஷத்தை விசுவாசிக்கும்படி சொல்! எல்லாம் தானாவே சரியாகி விடும்" என்றும் இந்த இளைஞர்களின் காதுகளில் கிசுகிசுக்கிறான். "ஏய், இவ்வளவு வசீகரமான ஏற்ற பொருத்தத்தை இப்போது விட்டுவிட்டால், இந்த அளவுக்குப் பொருத்தம் பின்பு என்றுமே உனக்கு கிடைக்காமல் போய்விடும்!" எனவும் நயவஞ்சக அம்புகளை இந்த வாலிபர்களிடம் எய்கிறான்! இவனுடைய துர்ஆலோசனைக்கு செவி கொடுத்து மடங்கி விழுந்த வாலிபர் கூட்டங்கள் ஏராளம் ஏராளம்!! வேத வசனத்திற்கு முரணாக திருமணமாகிவிட்ட குணப்படாத கணவனோ அல்லது மனைவியோ, அதிகமான ஜெபத்திற்குப் பிறகு மனம் மாறிய அற்புதம் அங்கொன்றும் இங்கொன்றும் இருக்கத்தான் செய்கிறது! ஆனால் இதையெல்லாம் ஆதாரமாக கொண்டு தங்கள் ஆண்டவருக்கு கீழ்படியாமல் இருப்பது மகா கொடுமை! "நான் ஏன் சாத்தானை தாழ பணிந்து வணங்கினேன்!" என்பதற்கு காரணங்களை முன்வைப்பது கொடுமையிலும் கொடுமை!!

உங்கள் ஜீவியத்தில் இதுபோன்ற இந்த திருமண "இக்கட்டு நேரம்" வந்துவிட்டதா? நான் உங்களை அன்புடன் வேண்டுகிறேன் : நீங்கள் பெற்ற விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தோடு உறுதியுடன் நில்லுங்கள்! பிசாசு கொண்டு வந்த ஒவ்வொரு அவிசுவாச திருமண நுகத்தடியையும் மறுத்துவிடுங்கள்! அவன் கொண்டு வந்த நுகத்தடியை உங்கள் மீது பூட்டுவதற்கு பெரும்படையே திரண்டு வந்தாலும் இணங்கி விடாதீர்கள்! அவருடைய சித்தத்திற்காக காத்திருந்து, ஜெபத்துடன் தேவனுடைய உதவியை நாடுங்கள்! அவர் ஒருபோதும் உங்களை கைவிடமாட்டார்! அவரைக் கனப்படுத்திவிடுங்கள்... அப்போது, தான் தெரிந்து கொண்ட துணையை அவர் உங்களுக்குத் தருவார்! தேவனே தெரிந்தெடுத்து நமக்குத் தருவது எதுவோ, அது மாத்திரமே நம் வாழ்வில் மகா மேன்மையும் அருமை யுமானதாகும்!!

***ஜெபம் :*** *அன்பின் தகப்பனே! உம் வசனத்திற்கு விரோதமாய் வாழ்ந்துவிட பிசாசின் நயவஞ்சகம் யாதொன்றிற்கும் அடிமையாகாதிருக்க உதவிபுரிந்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**பூமியில் பொக்கிஷம் கொண்டவர்களுக்கே கவலை ஆட்கொள்ளுகிறது!**

*கவலைப்படாதிருங்கள்! என்ற புத்திமதியை, இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது என்ற வசனத்தோடு தொடர்புபடுத்தி, "ஆகையால்... கவலைப்படா திருங்கள்" என்றே இயேசு கூறினார் (மத். 6:24,25). இன்று ஜனங்கள் என்ன காரணத்திற்காக கவலைப்படுகிறார்கள்? ஆம், ஜனங்கள் பணத்தை சேவிப்பதாலேயே, எல்லா கவலைகளும் உண்டாகிறதென இயேசு தெளிவாகப் போதித்தார். இன்றைய மானிடவர்க்கம் முழுவதும் இந்த ஒரு காரணத்தினிமித்தமே கவலையென்ற நோயினால் பீடிக்கப் பட்டுள்ளது! ஆனால் வருத்தமான காரியம் யாதெனில், இன்று அநேக கிறிஸ்தவ விசுவாசிகள்கூட கவலைப்படுகிறார்கள் என்பதுதான்!!*

*இக்கிறிஸ்தவர்கள் இன்னமும் தங்கள் பொக்கிஷங்களைப் பூமியிலேயேதான் வைத்திருக்கிறார்கள். உங்களுக்கு மிகவும் பிரியமான உங்கள் குழந்தையின்மேல் உங்களுடைய பொக்கிஷம் இருக்கு மென்றால் நீங்கள் அந்தப் பிள்ளையினிமித்தம் நிச்சயமாய் கவலைகொள்வீர்கள்! உங்கள் பொக்கிஷம் பணத்தின்மீது இருந்தால், பணத்திற்காகக் கவலைப்படுவீர்கள்!! உங்கள் பொக்கிஷம் சரீர சுகத்தின்மீது இருந்தால் சரீர சுகத்திற்காக கவலைப்படுவீர்கள்!! ஆனால் இவைகளிலிருந்து நாம் இரட்சிக்கப்படவேண்டும் என்பதற்காகவே இயேசு இப்பூமிக்கு வந்தார். ஆம், உலகப் பொருட்களின் பிடியிலிருந்து அல்லது பணஆசையிலிருந்து விடுதலை யாகும் மாபெரும் இரட்சிப்பு!!*

*சகேயுவைப் பார்த்து: "இன்றைக்குஇந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது" என இயேசு கூறினார் (லூக்கா 19:9). எதிலிருந்து சகேயு இரட்சிக்கப்பட்டான்? பண ஆசையிலிருந்தே இரட்சிக்கப்பட்டான்! அநீதியான தன் பண விஷயத்தில், பணத்தைத் திருப்பிக்கொடுத்து ஒப்புரவாகுவதற்கு அவன் மனப்பூர்வமாக ஆயத்தமாயிருந்தான். மெய்யாகவே இந்த சகேயு, இயேசு அவனுடைய வீட்டிற்கு வந்தபடியால் இரட்சிப்படைந்து விட்டானே! . எனவே "நமக்கு ஏற்படும் கவலை யாவும் உலகப்பொருட்களை சேவிப்பதினிமித்தமே ஏற்படுகிறது" என்ற மாபெரும் உண்மையை நாம் யாவரும் அறிந்துகொள்ளக்கடவோம். நம் 'பொக்கிஷத்தை' பரலோகத்தில் வைத்து, மேலானவைகளையே நாடக்கடவோம்!!*

***ஜெபம் :*** *எங்கள் பரலோக பிதாவே! எங்கள் இருதயம் பரலோக பொக்கிஷத்தில் நாட்டம் கொண்டு, பூமிக்குரிய கவலையிலிருந்து விடுதலையாக கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**பிறரை நியாயம் தீர்க்கக்கூடாது! ஆகிலும் ஆவிக்குரிய விழிப்பு வேண்டும்!**

*கர்த்தர் வருமளவும் காலத்திற்கு முன்னே தீர்ப்பு சொல்லாதிருங்கள் என பவுல் அறிவுறுத்தும்போது (1கொரி.4:5), எவைகளைக் குறித்து தீர்ப்பு செய்யக்கூடாது என்பதைத் தெளிவாக விளக்கினார். 1) இருளில் மறைந்திருக்கிறவைகள். அதாவது, சிந்தை வாழ்க்கை போன்ற மனுஷர் காணமுடியாத அந்தரங்க வாழ்க்கை. 2) இருதயத்தின் யோசனைகள். அதாவது ஒருவருடைய இருதயத்தில் கொண்டிருக்கும் மறைவான நோக்கங்கள் (வசனம் 5). ஆம், இவைகளைக் கடைசிநாளில் கிறிஸ்துதான் நியாயந்தீர்ப்பார். எனவே கிறிஸ்து வருவதற்குமுன் காலத்திற்கு முன்பே, நாம் எந்த ஒரு மனிதனின் மறைவான இருதய நோக்கங்களை நியாயந்தீர்க்காதிருக்க ஜாக்கிரதையாய் இருக்கக்கடவோம்!! நம் ஒவ்வொருவருடைய மாம்சத்திலும் நன்மையேதும் இராதபடியால், நம்மைச்சுற்றி உள்ளவர்களுடைய கிரியைகளைக் கண்டு எவ்வளவு முடியுமோ அவ்வளவு மோசமான அபிப்பிராயத்தை நமக்குள் உருவாக்கிக் கொள்ளுகிறவர்களாகவே இருக்கிறோம். அவ்வித சமயங்களில் நல்ல எண்ணங்களைவிட தீயசிந்தையே நமக்குள் உருவாக சோதிக்கப் படுகிறோம். இதனிமித்தமே, கர்த்தர் மாத்திரமே நியாயந்தீர்க்கக்கூடிய 'மறைவான ஜீவியத்தை' நாம் ஒருக்காலும் நியாயந்தீர்க்காதிருப்பதற்கு கட்டளையிடப்பட்டிருக்கிறோம்!*

*இவ்வாறு பிறரை நியாயந்தீர்க்க வேண்டாம் என இயேசு மத்தேயு 7:1-5 வசனங்களில்கூறியபோதும், 15-16-ம் வசனங்களில் "கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்" என்றும் கூறினார். இங்கே இயேசு நமக்குப் போதிக்கும் அடுத்த பகுதியான சத்தியம் யாதெனில், 'தெளிவாய் பகுத்தறிந்து நியாயந்தீருங்கள்' என்பதேயாகும். அவ்வாறு பகுத்தறிவதற்கு அவர்களின் "கனிகளைக்" காணும்படியும் இயேசு புத்திசொன்னார். ஆம், அவர்களுடைய மனநோக்கங்களையும், சிந்தைகளையும் அல்ல, அவைகளைக்குறித்து நாம் எதுவுமே அறிந்துகொள்ள முடியாது. மறைவானவைகளை நியாயந்தீர்க்கிற கர்த்தருக்கே அவைகளை நாம் ஒப்புக்கொடுத்திட வேண்டும். ஆனால், வெளியரங்கமான கனிகளை வைத்து ஒருவன் உண்மையான தீர்க்கதரிசியா? அல்லது கள்ளத்தீர்க்கதரிசியா? என்பதை நாம் யாவரும் தெளிவாகப் பகுத்தறியக்கூடியவர்களாய் இருக்கவேண்டும் என்பதே இயேசுவின் வாஞ்சையாகும்.*

***ஜெபம்*** *: எங்கள் அன்பின் ஆண்டவரே! பிறரின் மனநோக்கங்களை நீர் ஒருவரே நியாயம்தீர்ப்பவர்! நாங்கள் அதற்கு விலகியிருந்து, தெளிந்த புத்தியோடு ஆவிக்குரியகாரியங்களை நிதானித்திட கிருபைதாரும்! ஆமென்.*

## தீவிரம்கொண்டு தேடுவோர் கண்டடையும் பரிபூரண ஜீவன்!

*மனுஷீக தீர்மானத்தால் இயேசு வழங்கும் "பரிபூரண ஜீவனை" சுதந்தரிப்பது ஒருக்காலும் முடியாது என்பதை நாம் யாவரும் அறிந்துகொள்வோமாக! பின் எவ்வாறு முடியும் என்பதை இயேசுவே நமக்கு அடுத்த வசனத்தில் விடை கூறியிருக்கிறார்: "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்" (மத்தேயு 7:7,8). பார்த்தீர்களா! பரத்தின் பரிபூரண ஜீவனுக்குரிய வாழ்க்கையை நாம் தேவனிடமிருந்துதான் கேட்டுப் பெற்றுக்கொள்ள முடியும். இவ்வசனங்களில் இயேசு வெளிப்படுத்தும் ஆதங்கம் யாதெனில், கேட்கிற ஒருவன் தொடர்ச்சியாய் கேட்க வேண்டும் . . . தேடுகிற ஒருவன் தொடர்ச்சியாய் தேடவேண்டும் . . . தட்டுகிற ஒருவன் தொடர்ச்சியாய்த் தட்டவேண்டும்! இந்த செயல் உங்களுக்குள் நடந்துவிட்டால், பரலோகத்தின் பரிபூரண ஜீவன் உங்களுக்குள் வந்துவிடும் என்பதில் ஒரு துளியும் சந்தேகமேயில்லை!!*

*இந்த உறுதியைத்தான் அடுத்த 9,10,11 ஆகிய வசனங்களில் இயேசு உவமையாக வெளிப்படுத்தினார். இவ்வுலகத்திலுள்ள பொல்லாத தகப்பன்கூட மீனைக் கேட்கிற தன் பிள்ளைக்குப் பாம்பைக் கொடுப்பதில்லை! அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பதில்லை! அவ்வாறிருக்க பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறவர்களுக்கு நன்மையானவைகளைக் (பரிபூரண ஜீவனைக்) கொடுப்பது அதிக நிச்சயமல்லவா? என இயேசு வாக்குரைத்திருக்கிறார். நன்மையானவைகள் என இயேசு குறிப்பிட்டவைகள்: மலைப்பிரசங்கத்தில் (மத்.5,6,7) குறிப்பிட்ட, ஒன்பது பரலோக பிரமாணங்களைச் சுதந்தரிப்பதும், ஒன்பது தவறான தீய மனநோக்கங்களிலிருந்து விடுதலையாவதுமான பரிபூரண ஜீவனுக்கு வழிநடத்தும் சத்தியங்களே ஆகும்! லூக்கா சுவிசேஷம் 11:11-13 வசனங்களில் நன்மையானவைகள் என்ற பதத்திற்குப் பதிலாய் "பரிசுத்த ஆவியைக்" கொடுப்பது அதிக நிச்சயமல்லவா? என்றும் இயேசு குறிப்பிட்டார்!*

*பரிசுத்தஆவியின் வல்லமை மூலமாய் நாம் பெற்றிடும் நன்மையானவைகள், பரலோகத்திற்குரிய திவ்விய சுபாவங்களே ஆகும்! இந்த திவ்விய சுபாவங்களை அல்லது பரிபூரண ஜீவனை நாம் யாவரும் பெற்றிடவேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாகும். இப்பரிபூரண ஜீவனை நாம் முழுமையாய் பெறும்வரை, நாம் யாவரும் தொடர்ச்சியாய்க் கேட்டு . . . தொடர்ச்சியாய் தேடி. . . தொடர்ச்சியாய் தட்டி..... இறுதியில் பரிபூரணஜீவனை சம்பூரணமாய் அடைந்திடக் கடவோம்!*

**ஜெபம் :** *எங்கள் பரம பிதாவே! உம்முடைய பரம ஜீவனை தீவிரமாய் வாஞ்சித்து, உம் பரிசுத்தாவியின் துணைகொண்டு அதைப் பெற்றுவிட கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**இடுக்கமான வாசலுக்குப் பின்பாக உள்ள "ஜீவனில்" நம் விருப்பம் இருப்பதாக!**

*ஒரு கிறிஸ்தவ பொதுக்கூட்டத்தில் சுமார் 2-இலட்சம் ஜனங்கள் கூடுவதாக வைத்துக்கொள்ளுங்கள். அத்திரளான கூட்டத்தைப் பார்த்து, "உங்களில் எத்தனைபேர் பரலோகம் செல்ல விரும்புகிறீர்கள்?" என்ற கேள்வியைக் கேட்டுப்பாருங்கள். அக்கூட்டத்தில் புத்தியுள்ள எந்த மனிதனும் தங்கள் கையை உயர்த்தி விடுவார்கள். ஆம், 2-இலட்சம் ஜனங்களும் தங்கள் கையை உயர்த்துவார்கள் என்பதில் சந்தேகமேயில்லை! மதியில்லாத மனிதன் மாத்திரமே நரகத்திற்குச் செல்ல விரும்புவான். ஆனால் இயேசுவோ ஜனங்களைப்பார்த்து, "எத்தனைபேர் இயேசுவை விசுவாசிக்கிறீர்கள் . . . எத்தனைபேர் பரலோகம் வர விரும்புகிறீர்கள்?" என்ற கேள்வியோடு நின்றுவிடாமல் "இடுக்கமான வாசலை" ஜனங்களுக்குக் காண்பித்தார்!! அதாவது, "உங்களில் எத்தனைபேருக்கு தேவனுடைய பரிசுத்தத்தில், தாழ்மையில் பங்குபெற விருப்பம்? தன் சத்துருவை சிநேகிப்பதும், உங்களைத் துன்புறுத்துகிறவர்களை மன்னிப்பதும், தனக்கான ஆதாயத்தைத் தேடாமல் தேவனுடைய மகிமையை மாத்திரமே தேடுவதும், மற்றவர்களை நியாயந்தீர்க்க மறுப்பதுமாகிய ...தேவனுடைய சுபாவம் உங்களில் எத்தனைபேருக்கு வேண்டும்?" என்ற கேள்வியை அந்த 2-இலட்சம் ஜனங்களிடத்தில் இயேசுவைப்போலவே கேட்டுப்பாருங்கள்! குழுமியிருக்கும் ஜனங்கள் தங்கள் கையைத் தூக்குவார்களா? இல்லையா? என்பதை விட்டுவிடுங்கள் . . . குறைந்தபட்சம் எத்தனைபேருக்கு இவ்வித ஜீவியத்தின்மேல் "ஆர்வம்" இருக்கிறது என்பதை கண்டறியுங்கள்!! 'இந்த வெறும் ஆர்வம்' கூட வெகு சிலரிடம் இருப்பதைத்தான் நீங்கள் பார்ப்பீர்கள். எதற்காக இயேசு* **'சிலர் அதைக் கண்டுபிடிப்பார்கள்'** *(மத்தேயு 7:14) எனக் கூறினார்? ஏனெனில் 7-ம் வசனத்தின்படி இவ்வித ஜீவியத்தை 'வாஞ்சித்துத் தேடுபவர்களே' மிகவும் கொஞ்சம் என்பதினால்தான்!! நீங்கள் முழு இருதயமாய் திவ்வியசுபாவ ஜீவியத்தைத் தேடினால் நிச்சயம் கண்டுபிடிப்பீர்கள் என இயேசு மாறாத தன் வாக்குத்தத்தத்தை நமக்குத் தந்திருக்கிறார். இவ்வாறு தேடுகிறவர்கள்தான், தாங்கள் தேடும் திவ்விய வாழ்விற்கென எந்த விலைக்கிரயமும் செலுத்த ஆயத்தமாய் இருப்பார்கள்!*

*இப்போது உங்களைக் குறித்து என்ன? பரிபூரண ஜீவனை சுதந்தரித்திட, "இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்" என இயேசு பரிவுடன் அழைக்கும் அழைப்பிற்கு மகிழ்வுடன் செவிகொடுக்க நீங்கள் ஆயத்தமா?*

**ஜெபம்** : *எங்கள் பரம தகப்பனே! வெறும் பரலோகம் அல்ல, பரலோகத்தின் பொக்கிஷமாகிய உம் ஜீவன்மீது எங்கள் கண்கள் எப்போதும் நோக்கியிருக்க கிருபை செய்தருளும்! ஆமென்.*

**நல்ல கனி, இருதயத்தின் தூய சாரத்திலிருந்து வரவேண்டும்!**

*நல்ல கனிகளைக் கொடுக்கவேண்டும் என்பதற்காக முட்புதரில் திராட்சப்பழங்களைத் தொங்கவிடலாமோ? (மத்தேயு 7:17). ஆம், நல்ல கனிகளை நாமாக முயற்சி செய்து, ஒருக்காலும் அதை உற்பத்தி செய்துவிட முடியாது. ஒரு மாமரம் தானாக உற்பத்தி செய்தா மாம்பழங்களைத் தொங்கவிட்டுக்கொள்கிறது? இல்லவே இல்லை! நல்ல மாம்பழங்கள் மரத்தின் ஜீவனிலிருந்து உருவானதேயாகும். மரம் நல்லதாக இருந்தால் அது தானாகவே நல்ல கனிகளைக் கொடுத்துவிடும். அதாவது நல்ல கனிகள் வேண்டுமென்றால், உங்கள்கவனம் முழுவதும் ஜீவன் உற்பத்தியாகும் மரத்தின்மீதும் அல்லது அதன் வேரின்மீதும் இருக்கக்கடவது! மரத்தின் வேர்போன்று இருக்கும் உங்களின் அந்தரங்க மனநோக்கம் தீயதாய் இருந்தால் அதாவது மெய்யாய் மனந்திரும்பாமலும், நேர்மையாய் ஒப்புர வாகாமலும், சுத்த மனசாட்சியில்லாமலும் இருந்தால் . . . நீங்கள் எவ்வளவுதான் மாம்பழங்களை அங்குமிங்கும் தொங்க விட்டு மனுஷருக்கு ஒரு வெளித்தோற்றத்தைக் கொடுத்து கவர்ச்சித்தாலும் அது ஏமாற்று வஞ்சகமேயாகும். நீங்கள் மெய்யாகவே மரத்தை நல்லதாக மாற்ற விரும்புபவர்களாயிருந்தால்,* **மாம்சமாகிய வேரின்மீது** *இயேசு கோடாரியை வைப்பதற்கு உங்களை அனுமதிக்கிறவர்களாய் இருக்கவேண்டும். இவ்வாறு கோடாரி வேரின்மீது விழுந்து மாம்சத்திற்கு மரணத்தைக் கொண்டு வந்துவிட்டால், பரிசுத்தாவியானவரின் மூலமாய் உங்களில் புதிய ஜீவன் தெய்வசுபாவமாக மலர்ந்துவிடும்!*

*ஓர் உண்மையான தீர்க்கதரிசியை அடையாளம் காண்பதற்கு அவருடைய ஜீவியமாகிய கனிகளை வைத்துத்தான் அடையாளம் காணவேண்டுமென இயேசு தெளிவாகப் போதித்தார். ஏனெனில், கடைசிநாளில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் எழும்புவார்களென வேதாகமம் எச்சரிக்கிறது. இன்று நாம் இக்கடைசிநாட்களின் ஓரத்தில்தான் நின்றுகொண்டிருக்கிறோம். இக்காலத்தில் வாழும் கள்ளத்தீர்க்கதரிசிகளை சரியாய்ப் பகுத்தறியவேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது! நல்ல இருதயம், நல்லகனி, நம் பிரதான மாகட்டும்!!*

***ஜெபம்*** *: எங்கள் பரலோக தந்தையே! வெளித்தோற்றத்தில் மாறும் ஜீவியம் அல்ல, இருதய அந்தரங்கத்தின் தூய்மையிலிருந்து விளைந்திடும் 'நல்ல கனி' எங்கள் வாழ்வில் பெருகிட கிருபைதாரும்! ஆமென்.*

**தேவனால் பலன் அளிக்கப்படும் பாக்கியம் வேண்டும்!**

வெளி.11:16-18 வசனங்களில், "உமது நாமத்தின்மேல் பயபக்தியாயிருந்தவர்களுக்குப் பலனளிக்கும் காலம் வந்தது" என கூறப்பட்டிருப்பதைக் காண்கிறோம். மல்கியா புத்தகத்தின்படி, தேவன் தனக்கென "ஓர் ஞாபகப்புத்தகத்தை" வைத்திருக்கிறார். அப்புத்தகத்தை அவர் உற்று கவனித்துத் தன்னுடைய நாமத்திற்கு யார் உண்மையாகவே பயப்படுகிறார்கள் என்பதை அறிகிறார்! குறிப்பாக, ஒருவருக் கொருவரான சம்பாஷணையில் யார் தனக்குப் பயப்படுகிறார்கள் என்பதை தேவன் கண்காணிக்கிறார். மறுபடியும் பிறந்த விசுவாசிகளில் 1% க்கும் குறைவானவர்களே தங்களுடைய தனிப்பட்ட சம்பாஷணை களில் தெய்வபயம் கொண்டிருக்கிறார்கள். எனவே தேவனுடைய ஞாபகப்புத்தகத்தில் மிகமிகக் கொஞ்சம் பேர்களே இருப்பார்கள் என்பதே உறுதி. இந்த ஞாபகப்புத்தகம் பிரமாண்டமானதோர் புத்தகமாக இருக்குமென எண்ணிவிடாதீர்கள். அப்புத்தகம் மிகச் சிறியதாகவே இருக்கும். ஆகிலும் அக்கொஞ்சம் பேர்களையே தேவன் "என் சம்பத்து" என பாராட்டி மகிழ்கிறார்.

"தேவன் பலனளிக்கிற காலம் வந்தது" என்ற இந்த வசனத்தின் தொடர்பாக லூக்கா 14-ம் அதிகாரத்தில் இயேசு கொடுத்த கட்டளையைப் பார்க்கிறோம். லூக்கா 14:12-ல் "நீ பகல் விருந்தாவது இராவிருந்தாவது பண்ணும்போது, உன் சிநேகிதரையாகிலும்... ஐசுவரியமுள்ள அயலகத்தாரையாகிலும் அழைக்க வேண்டாம். அழைத்தால் அவர்களும் அழைப்பார்கள். அப்பொழுது உனக்குப் பதிலுக்குப் பதில் செய்ததாகும்." என்றார். இந்த வசனத்தின்படியான இயேசுவின் கட்டளைக்கு கீழ்ப்படிய 1% விசுவாசிகளாவது ஆர்வம் காட்டுகிறார்களா? என்பது சந்தேகமே. மேலும், 13-ம் வசனத்தில், "நீ விருந்து பண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளை யும் குருடரையும் அழைப்பாயாக" என்றார். இவ்வசனத்தின்படியான சத்தியம், நாம் குருடர்களையும் சப்பாணிகளையும் விருந்துண்ண அழைக்க தேடிச்செல்ல வேண்டும் என்பதில்லை. மாறாக 14-ம் வசனத்தின்படி, "நமக்கு பதில் செய்ய முடியாதவர்களை" விருந்திற்கு அழைக்க வேண்டும் என்பதே இயேசு கூறிய சத்தியமாகும். அப்படிச் செய்வோமென்றால், "நீ பாக்கியவானாயிருப்பாய்" (லூக்.14:14) என இயேசு கூறினார். ஏனெனில் அவர்களிடமிருந்து பதிலுக்கு திரும்பிப் பெறாத உங்களுக்கு தேவாதி தேவனால், "நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உங்களுக்குப் பதில் செய்யப்படும்" என இயேசு கூறினார். இந்நிகழ்ச்சி, கடைசி நாளில் தேவன் பலனளிக்கிற காலத்தில் நிறைவேறும்! தங்களுக்கு எந்த சுயலாபமும் கருதாமல் பிறருக்கு நன்மை செய்தவர்கள் கடைசிநாளில் தேவனால் பலனளிக்கப்படுவார்கள்!!

**ஜெபம்:** *பரலோக பிதாவே! இப்பூமியில் பிரதிபலன் கருதி யாதொன்றும் செய்யாமல், பரலோக பிரதிபலனுக்காகவே எங்கள் ஜீவிய வாழ்க்கை இருந்திட கிருபை செய்தருளும்! ஆமென்.*

**இயேசுவைப்போலவே ஜெயித்து பரலோகத்தை களிகூறச்செய்வோம்!**

*புதிய ஏற்பாட்டின் மூன்று இடங்களில் பரலோகம் களிகூருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1) லூக்கா 15:7 இங்கே மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த மகிழ்ச்சி உண்டாகிறது எனக் கூறப்பட்டுள்ளது. 2) வெளி. 12:12 ஓர் விசுவாசி சாத்தானை ஜெயிக்கும்பொழுது பரலோகத்தில் மிகுந்த மகிழ்ச்சி உண்டாகிறது. 3) வெளி. 19:7 ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம் வந்தது. அவரின் மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள். எனவே நாம் சந்தோஷப்பட்டுக் களிகூருவோம் என கூறப்பட்டதை வாசிக்கிறோம். இங்கு வரிசையாக ஓர் விசுவாசிக்கு மூன்று காலக் கட்டங்கள் வைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். முதற்காலக்கட்டமாக ஒருவன் தன் பாவங்களிலிருந்து மனந்திரும்புவதும், இரண்டாவது காலக்கட்டமாக இந்த விசுவாசி தன் தனிப்பட்ட ஜீவியத்தில் சாத்தானை ஜெயிப்பதும், மூன்றாவது காலக்கட்டமாக, என்னை நானே ஆட்டுக்குட்டியானவரின் திருமணத்திற்கு அவரின் மனைவியாக ஆயத்தம் செய்துகொள்வதுமாகும். இக்காலக்கட்டங்களை நாம் செவ்வனே பூர்த்திசெய்தால் பரலோகத்தில் நம் மூலமாக மகிழ்ச்சி உண்டாகும்!*

*இயேசு சாத்தானை ஜெயித்தபடியால் இப்போது அதே ஜெயத்தை சாத்தானின்மீது பிரகடனம் செய்யும் சிலாக்கியத்தை நமக்கு இயேசு அளித்திருக்கிறார். எனவேதான் ரோமர் 16:20-ம் வசனத்தில், "சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார்" எனக் கூறப்பட்டுள்ளது. அதாவது, சாத்தான் ஏற்கனவே சிலுவையில் நசுக்கப்பட்டுவிட்டான். ஆனால் இப்போது பூமியிலிருக்கும் விசுவாசிகளுக்கு இதே சிலாக்கியம் இயேசுகிறிஸ்துவினால் கையளிக்கப்படுகிறது. வெளி. 12:4-ல் சாத்தான், பிள்ளையை (கிறிஸ்துவை) பட்சிக்கும்படி முயற்சித்தான். அதில் அவன் தோற்றுப்போனான்! சாத்தான் வானமண்டலத்தில் மிகாவேலோடும் அவனுடைய தூதர்களோடும் யுத்தம் செய்தான். அதில் அவன் தோற்றுப்போனான்! இதே சாத்தான் நம்மோடும் யுத்தம் செய்கிறான். நாம் தோற்கடிக்கப்படலாமா? கூடாது! இயேசு நமக்காக சிலுவையில் சம்பாதித்த வெற்றியைச் சாத்தானின்மீது பிரகடனம் செய்து நம் அனுதின வாழ்க்கையில் அவனை நம் கால்களின்கீழ் மிதிக்கவேண்டும் என்ற அழைப்பை உணராதிருப்போமென்றால், அது வெட்கத்திற்குரியதாகும்! நாமோ, சாத்தானை நம் கால்களின்கீழ் மிதித்து வாழவேண்டும்!*

***ஜெபம்**: எங்கள் பரம தகப்பனே! இயேசுவில் "முற்றிலும் ஜெயம் பெறும் வாழ் வினால்" பரலோகத்தை எங்கள் நாங்கள் களிப்புறச்செய்திட கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

### நாம் போராடாமல், கர்த்தரே பெற்றுத்தரும் ஜெயம்!

**ப**ழைய ஏற்பாட்டில் நம்மை பக்திவிருத்தியடையச் செய்திடும் மோசேயின் பாடல் வருகிறது.

இந்தப் பாடலை, யாத்திராகமம் 15-ம் அதிகாரத்தில் காண்கிறோம். இஸ்ரேல் புத்திரர்கள் எகிப்து தேசத்தை விட்டு வெளியே வந்து; செங்கடலைக் கடந்து; பார்வோனும் அவனுடைய சேனைகளும் செங்கடலில் மூழ்கடிக்கப்பட்டு . . . ஆகிய இந்நிகழ்ச்சிகள் இஸ்ரேல் புத்திரரை பரவசம் கொள்ளச் செய்தது! அச்சமயம்தான் மோசேயும் இஸ்ரேல் புத்திரர்களும் சேர்ந்து கர்த்தரைப் புகழ்ந்து, "கர்த்தரைப் பாடுவேன்; அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார்; குதிரையையும் குதிரை வீரனையும் கடலிலே தள்ளினார் . . ." (யாத். 15:1) எனப் பாடினார்கள். இந்தப் பாடல் வெளிப்படுத்தின விசேஷத்தில் நடந்த முக்கியமான நிகழ்ச்சியை உங்களுக்கு நினைவுறுத்தவில்லையா? வெளி.6-ம் அதிகாரத்தில், அந்திக்கிறிஸ்துவாக வெள்ளைக் குதிரையில் ஏறிவந்தவனை, கர்த்தர் ஜெயம்கொண்டார்! மேலும், "கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர். அவர் எனக்கு இரட்சிப்புமானவர். அவரே என் தேவன், அவரே என் தகப்பனுடைய தேவன். அவரை உயர்த்துவேன். கர்த்தரே யுத்தத்தில் வல்லவர். கர்த்தர் என்பது அவருடைய நாமம்" (யாத். 15:2,3) எனவும் பாடினர். கடைசியாக சம்பவிக்கப்போகும் அர்மகெதோன் யுத்தத்தில் அந்திக்கிறிஸ்துவும் அவனுடைய சேனைகளும் இஸ்ரேல் தேசத்தில் முகாமிட்டு, இஸ்ரேல் தேசத்தை தங்கள் முழு பலத்தோடு தாக்குவார்கள். இந்த சரியான சமயத்தில், இயேசுகிறிஸ்து தன் பரிசுத்தவான்களோடு பரத்திலிருந்து இறங்கி வருவார். அவருடைய பாதங்கள் அவர் முந்தி பரத்திற்கு ஏறிச்சென்ற இடமான ஒலிவமலையின்மேல் வந்து இறங்கும். அப்போது அந்திக் கிறிஸ்துவையும் அவனுடைய சேனைகளையும் இயேசுகிறிஸ்து அழித்தொழிப்பார். 'அவரே யுத்தம் செய்து' ஜெயித்திருந்தாலும், பரிசுத்தவான்களாகிய தேவஜனங்கள் அந்த ஜெயத்தில் பங்குபெற்று மகிழ்ந்திருப்பார்கள். இன்று நாமும் இவ்விதமே ஜெயம் பெறுகிறோம்!!

இந்த விசுவாசம் கொண்ட யாவரும் மோசேயின் பாடலை, இன்றும் பாட முடியும். இப்பாடலுக்காக ஏதோ கட்டிடத்திற்குள் நாம் பாடல் பயிற்சி (Choir) பெற வேண்டியதில்லை. நம் ஒவ்வொரு நாள் ஜீவியத்தின் சம்பவங்களிலும், "நான் பதிலுக்குத் திரும்பப் போராடமாட்டேன் 'கர்த்தரே யுத்தத்தில் வல்லவர்' எனவே நான் அவர்மீது நம்பிக்கை வைத்து சும்மாயிருப்பேன்!" என்ற மோசேயின் பாடலை நாம் ஒவ்வொரு நாளும் பயிற்சி செய்வோமாக!

**ஜெபம் :** *எங்கள் அன்பின் பிதாவே! இவ்வுலக சூழ்நிலைகளில் போராட துடிக்கும் எங்கள் சுயம் சிலுவையில் ஒழிவதாக! நீரே முன்னின்று ஜெயமளிக்கும் வாழ்வை எங்களுக்குத் தருவீராக! ஆமென்.*

**தேவனோடு கொண்ட ஐக்கியமே நம் முதல் தேவை!**

தனக்கு ஒரு வேலைக்காரன் (Servant) வேண்டுமென்பதற்காக தேவன் ஆதாமை சிருஷ்டிக்கவில்லை! அல்லது தனக்கு ஒரு "பண்டிதன்" (Scholar) வேண்டுமென்பதற்காகவும் தேவன் ஆதாமை சிருஷ்டிக்கவில்லை!! "இப்போது" உங்களையும் என்னையும்கூட அவ்விதமே வேலைக்காரன் (ஊழியன்) தனக்குத் தேவை என்றோ, அல்லது ஒரு பண்டிதன் தனக்குத் தேவை என்றோ ஆண்டவர் சிருஷ்டிக்கவில்லை. அவருக்கு ஏற்கனவே அவரைச் சேவிக்கும்படியாக கோடிக்கணக்கான தேவதூதர்கள் போதுமான அளவு இருக்கிறார்கள். ஆம், ஆதாமைத் தேவன் சிருஷ்டித்ததின் பிரதான நோக்கம், ஆதாம் தன்னோடு ஐக்கியம் கொள்ள வேண்டும் என்பதேயாகும். ஆதியிலே தேவன், "ஆறு நாட்கள் வேலைசெய்து, ஏழாம் நாளில் ஓய்ந்திரு" என்ற பிரமாணத்தை ஆதாமுக்குத் தரவில்லை! இந்தப் பிரமாணம் பிற்காலத்தில்தான் மோசேயின் நியாயப்பிரமாணத்தின்மூலம் ஏற்பட்டது.

இதற்கு மாறாக, ஆதாம் ஆறாம் நாளில்தான் சிருஷ்டிக்கப் பட்டான். ஆகவே, தேவனுக்கு ஏழாம் நாளாயிருந்த அந்தநாள், ஆதாமுக்கோ முதல் நாளாய் மாறியது! அதாவது, ஆதாம் தன் சிருஷ்டிகரோடு இளைப்பாறி அவரோடு ஐக்கியம் கொள்ளும் நாளாகவே ஆதாமுக்கு அந்த முதல் நாள் இருந்தது! இவ்வாறு, அந்த முதல் நாளில் ஆதாம் தேவனோடு ஐக்கியம் கொண்ட பிறகுதான், அவன் வெளியே தோட்டத்திற்குச்சென்று ஆறு நாட்களும் தேவனுக்கு ஊழியம் செய்திடும் நிலையிலிருந்தான்!!

இவ்வாறு தேவன் நமக்கென ஏற்படுத்தியிருக்கும் ஒழுங்கு வரிசையை உதாசினம் செய்து "முதலாவதாக" தேவனோடு ஐக்கியம் கொள்ளத் தவறிவிட்டு, அந்த இடத்தை அவருடைய திராட்சத் தோட்டத்திற்குச் சென்று அவருக்கு ஊழியம் செய்யும் நிலை மிகவும் பரிதபிக்கக்கூடிய நிலையே ஆகும். இவ்வாறு நமக்கு சம்பவித்திருக்கும் என்றால், நாம் படைக்கப்பட்டதின் பிரதான நோக்கத்தையும், நம்முடைய மீட்பின் பிரதான நோக்கத்தையும் இழந்துவிட்டோம் என்றே கூறவேண்டும்!!

குறிப்பாய், இந்தியா போன்ற ஒரு தேசத்தில், நம்மைச் சுற்றியுள்ள "தேவையினால் ஆட்கொள்ளப்பட்டு" தேவனிடம் ஐக்கியம் கொள்ளுவதற்கோ நேரம் இல்லாதுபோகும் பரிதாபம் ஏற்பட வாய்ப்பு அதிகமாய் இருக்கிறது. ஏராளமான தேவைகள் நம்மைச் சுற்றியிருக்க, தேவனோடு ஐக்கியப்பட 'காத்திருக்கும் நேரம்' வீணான நேரமாக நமக்குத் தோன்றிவிடக்கூடாது!

**ஜெபம்** : *அன்பின் தந்தையே! இந்த அவசர உலகில், அலுவல்களும் ஊழியங்களும் எங்களை பலமாய் ஈர்த்துவிடாதபடி, உம்பாதம் அமரும் ஐக்கியத்தை முதன்மை வைத்துவாழ கிருபை தாரும்! ஆமென்.*

## சந்தேக கண்ணோட்டம் இல்லாத ஜீவியம் வேண்டும்!

*தன்னைக் கொலை செய்யத் தயாராயிருந்த காயீனை கிஞ்சித்தும் சந்தேகம் கொள்ளாத ஆபேலின் நல்ல இருதயத்தைப் பாருங்கள்! காயீனை அல்ல, தன்னையே நியாயம் தீர்த்து தாழ்மையில் நொறுங்கியிருந்த ஆபேல், நாம் யாவரும் பின்பற்ற வேண்டிய நல்மாதிரி! ஆபேலோ, காயீனின் மனோபாவத்திற்கு முற்றிலும் மாறுபட்ட வனாய் இருந்ததைப் பார்த்தீர்களா? காயீன், ஆபேலைத் தன்னோடு வயல்வெளியில் "வாக்கிங்" அழைத்தபோது, ஆபேல் தன் இருதயத்தில் ஒரு துளிகூட சந்தேகம் கொள்ளாமல் தன் சகோதரனோடே நடந்தான்! (ஆதி.4:8). காயீன் தன்மீது பொறாமை கொண்டிருக்கிறான் என்பதில் அவனுக்குச் சிறிதும் சந்தேகக் கண்ணோட்டமே இல்லை. ஆபேல் தன் இருதயத்தில் எவ்வளவாய் கபடற்று இருந்தான் பார்த்தீர்களா! அவன் தன்னையே நியாயம் தீர்த்து, இருதயம் நொறுங்கி இருந்தான். ஆனால் தன் சகோதரன் காயீனையோ நியாயம் தீர்க்கவேயில்லை. இந்த சுபாவமே நாம் பின்பற்றக்கூடிய நல்ல மாதிரியாய் இருக்கிறது!*

*தங்கள் காரியம் நன்றாய் நடந்தேறியதால், "என்மீது மற்றவர்கள் பொறாமை கொண்டிருப்பார்களோ? என் மீது கெட்ட அபிப்பிராயம் வைத்திருப்பார்களோ? எங்கே என்னைக் கீழே இழுத்துத் தள்ளி விடுவார்களோ?" என்றெல்லாம் ஓயா சந்தேகம் நிறைந்தவர்களாய் இன்று அனேகர் இருக்கிறார்கள்! மற்றவர்களுக்கு விரோதமாய் நமக்கு ஏதும் மனதில் இல்லாமல் இருக்கலாம்...... ஆனால், மற்றவர்கள் என்மீது விரோதம் வைத்திருப்பார்களோ என்ற சந்தேகத்தோடு நாம் காணப்பட முடியும். ஆ, இங்குதான் நாம் கறைப்பட்டுப் போகிறோம்!*

*ஆபேலோ, தன்னைக் கொலை செய்யத் தயாராய் இருந்தவன் மீதுகூட கிஞ்சித்தும் சந்தேகம் அற்று இருந்தான். அவனுக்கு எத்தனை நல்ல இருதயம் பாருங்கள்! இதே இருதயமல்லவா நமக்கும் தேவை!! நெருக்கமான ஜீவ வழியில் இரு குன்றுகளின் அபாய முனைகள் உள்ளன. ஒரு குன்றின் முனை "பொறாமை" இன்னொரு குன்றின் முனை "சந்தேகம்". இந்த இரண்டில் ஏதேனும் ஒன்றில் நாம் வீழ்ந்து பாதாளத்தை அடையும் வாய்ப்பு உண்டு!*

*ஆபேலுக்கோ, காயீன் மீது பொறாமையோ அல்லது அவனைக் குறித்த சந்தேகமோ கொஞ்சமும் இல்லவே இல்லை! நம் சக சகோதரர்களோடு கொள்ளும் உறவில் நாம் பின்பற்றி நடக்க வேண்டிய பாதையும் இதுவே ஆகும். சந்தேகத்தினால் நம் இருதயம் கறைபட்டு 'ஜீவிப்பதைவிட' ஆபேலைப்போல் சிறிதும் சந்தேகிக்காத இருதயத்தோடு 'சாவது' நல்லது!*

**ஜெபம் :** *எங்கள் பரம பிதாவே! சிறிதேனும் சந்தேகிக்காமல் கள்ளங்கபடற்ற உள்ளத்தோடு வாழ்ந்த ஆபேலைப்போல், "இவர்கள் என்னை பகைக்கிறார்களோ" போன்ற சந்தேகமற்ற "கபடற்ற" வாழ்வுதாரும்! ஆமென்.*

**தேவனுக்கு முன்பாக தாழ்மைபட்டிருக்கக்கடவோம்!**

*நான் சில சமயங்களில் திறந்தவெளியில் அமர்ந்து வானத்தி லுள்ள நட்சத்திரங்களை அண்ணாந்து பார்ப்பதுண்டு. வானத்தில் கோடிக் கணக்கான நட்சத்திரங்கள் இருப்பதையும், இந்த அண்டசராசரத்தில் இந்த பூமி ஒரு சிறு துரும்பைப் போல் இருப்பதையும் நான் அறிவேன்! இந்த ஆச்சரியத்தில் நான் மூழ்கி, "ஓ தேவனே, நீர் எவ்வளவு பெரியவர்! இந்த அண்டசராசரமும் எத்தனை மகத்துவமும் பெரியதுமாயிருக்கிறது! இந்த அண்டசராசரத்தில் பூமி என்று அழைக்கப்படும் இந்தச் சிறிய துரும்பில் "நானோ" இன்னும் மிக மிகச் சிறிய ஓர் தூசியாகவே இருக்கிறேன்! அப்படியிருந்தும், இந்தப் பூமியில் உம் ஸ்தானாதிபதியாய் இருந்துகொண்டு உம்முடைய மகத்துவங்களைப் பிரசங்கிக்கும் பொறுப்புள்ள இடத்தில் இருக்கிறேன்! ஆகவே, ஆண்டவரே, என்னைக்குறித்து நான் தாழ்மையான தெளிந்த எண்ணங்கொண்டிருக்க எனக்குத் தயவாய் உதவிசெய்வீராக!" என்றே ஜெபிக்கிறேன். இதே ஜெபத்தை நீங்களும்கூட தேவனை நோக்கி ஜெபிக்கும்படி அன்புடன் ஆலோசனை கூறுகிறேன்!*

*தரையில் ஊர்ந்து சென்று கொண்டிருக்கும் எறும்போடு நான் ஏன் தொடர்புகொள்ள முடிவதில்லை! ஏனென்றால், நான் அவ்வளவு பெரியவனாயிருக்கிறேன்! நான் மானிடரூபத்தோடு அதனருகில் சென்றால், அவை அஞ்சி விலகியோடிவிடும். நான் அந்த எறும்போடு தொடர்புகொள்ள ஒரேவழி, நான் முதலாவது அந்த எறும்பைப்போல் மாற வேண்டும். அதேபோல், தேவனும் நம்மோடு தொடர்பு கொண்டிட ஒரேவழி, அவர் நம்மைப்போலவே மாறுவதுதான்! (பிலி.2:8). இந்த உண்மையை நாம் யாவரும் புரிந்துகொள்வது மிக எளிது. இப்போது அதேபோல், நாம் பிறருக்குச் செய்யும் ஊழியத்திலும்கூட (ஸ்தல சபையோ அல்லது சந்திக்கப்படாத இடமோ), நமக்கு முன்னிருக்கும் முதல் நியதி "எல்லாவற்றிலும் அவர்களுக்கு ஒப்பாக மாறுவதுதான்!" என்பதை மறந்துவிடவே கூடாது! அதாவது, எசேக்கியேல் தீர்க்கதரிசி கூறுவதுபோல், "அவர்கள் உட்காருகிற (தாபரிக்கிற) ஸ்தலத்திலே நாமும் உட்கார்ந்து" (எசேக்கியேல் 3:15) என்பதே அதன் பொருளாகும்!! இங்குதான் தேவனுக்கு முன்பாக நாம் தாழ்மைப்படும் இரகசியம் அடங்கியிருக்கிறது!*

**ஜெபம்** : *எங்கள் பரலோக தகப்பனே! உம்முடைய மகத்துவத்தை நான் கண்டு, வானங்கொள்ளாத தேவனுக்கு முன்பாக எப்போதும் தாழ்மைப்பட்டு வாழ, எளியவர்களிடமும் தாழ்த்தி ஐக்கியம்கொள்ள உதவிசெய்தருளும், ஆமென்.*

**இயேசுவை நோக்கிப்பார்த்து ஓடக்கடவோம்!**

*"இயேசுவை நோக்கிப்பார்த்து (Looking unto Jesus) நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் ஓடக்கடவோம்" (எபிரேயர் 12:1). தேவ பக்தியின் இரகசியம் மாம்சத்தில் வெளிப்பட்ட கிறிஸ்து என்ற அந்த* **நபரில்தான்** *இருக்கிறதேயல்லாமல், "கிறிஸ்து நம்முடைய மாம்சத்தில் வெளிப்பட்டார்" என்ற* **உபதேசத்தில்** *இல்லவே இல்லை. இதை (1தீமோத்தேயு 3:16) மிகத்தெளிவாய் சுட்டிக்காட்டுகிறது. எனவே "அவர்" என்ற தனி நபரின் மூலமேயல்லாமல், அவருடைய மாம்சத்தை ஆராய்ந்து கண்டறியும் உபதேசத்தினால் நாம் பரிசுத்தமாவதில்லை.*

*நாமாக எடுத்துக்கொள்ளும் எந்த முயற்சியும் (Self effort) நம்முடைய பாவ இருதயத்தை ஒருக்காலும் பரிசுத்தமாக்கிட முடியாது. அந்த அற்புத மாற்றம் நிகழ்வதற்கு தேவன்தான் நமக்குள் கிரியை நடப்பிக்க வேண்டும். பரிசுத்தம்(நித்திய-ஜீவன்) தேவனால் உண்டாகும் ஈவு, அதை கிரியையினால் ஒருக்காலும் அடைந்திட முடியாது (ரோமர்.6:12). தேவன் மாத்திரமே நம்மை முற்றிலும் பரிசுத்தமாக்க முடியுமென 1தெசலோனிக்கேயர் 5:12 மிகத்தெளிவாக கூறுகிறது. இந்த வசனங்களை நம்மில் ஒருவரும் தவறு என்று சொல்லிவிட முடியாதே!! இருப்பினும் இன்று எண்ணற்ற விசுவாசிகள் தாங்கள் பரிசுத்தமாகும் பொருட்டு தங்களைத் தாங்களே வெறுப்பதற்குப் போராடிக் கொண்டிருப்பதைத்தான் நாம் பார்க்கிறோம். அந்தோ, இவர்கள் பரிசுத்தத்தை அடைவதற்குப் பதிலாய் "பரிசேயர்களாகவே" மாறிவிடுகிறார்கள்!*

*எபேசியர் 4:24 குறிப்பிடும் மெய்யான பரிசுத்தம், இயேசுமீது கொண்ட விசுவாசத்தினால்...... அதாவது, "இயேசுவை நோக்கிப்பார் பதால்" மாத்திரமே அடைந்திடமுடியும். ஆம், நாம் உபதேசத்தை மாத்திரமே நோக்குபவர்களாயிருந்தால், முடிவில் பரிசேயர்களாகவே முற்றுப் பெறுவோம். இயேசுவை நோக்கிப்பார்ப்பதின் பொருள் என்ன என்பதை எபிரெயர் 12:2 மிகத் தெளிவாக நமக்கு எடுத்துரைக்கிறது. முதலாவதாக, நாம் அவரை நோக்கிப்பார்த்து "இந்த பூமியில் ஒவ்வொரு நாளும் சிலுவையை சகித்து வாழ்ந்தவராகவும்! நம்மைப் போல எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டும்! பாவமில்லாதவராகவும்!" காண்பதுதான் (எபி.4:15). இவ்வாறு அவர் நமக்கு முன்னோடி யானபடியால், இப்போது அவருடைய அடிச்சுவடுகளைப்பின்பற்றி நாமும் தொடர்ந்து ஓட வேண்டும். இரண்டாவதாக, "பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறவராகவும்" நாம் அவரைக் காண வேண்டும். இவ்வாறு பிதாவின் அருகிலிருந்து நமக்காக வேண்டுதல் செய்யவும், நம்முடைய சோதனைகளிலும் உபத்திரவங்களிலும் நமக்கு உதவி செய்யும்படியும் அவர் ஆயத்தத்துடன் இருக்கிறார்!*

**ஜெபம் :** *பரமபிதாவே! உபதேசம் எங்களை இரட்சித்திட முடியாது என அறிந்தோம். இப்பூமிக்கு வந்த ஆண்டவர் இயேசுவின் மீது கொண்ட விசுவாசமும், அவரது வாழ்வின் அடிச்சுவடுமே எங்களின் பரிசுத்தமாகட்டும்! ஆமென்.*

**தேவனை அன்புகூர்ந்து, நன்மை செய்கிறவர்களிடம் முறுமுறுப்பு இல்லை!**

*தேவனிடத்தில் அன்பு கூர்ந்து அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கு (அதாவது, தங்கள் ஜீவியத்தில் தேவனுடைய சித்தத்திற்குப் புறம்பாக இப்பூமியில் எந்த இலட்சியமும் இல்லாதவர்களுக்கு) சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே நடக்கும்படி கிரியை செய்திட, தேவன் சொல்லி முடியா வல்லமை பெற்றிருக்கிறார் (ரோ.8:28). இந்த அற்புதமான வாக்குதத்தத்தை, தங்களுக்கென சுய நல நோக்கம் கொண்டவர்கள் ஒருகாலும் உரிமை பாராட்டவே முடியாது. ஆனால் நம் ஜீவியத்தில் தேவனுடைய சித்தத்தை சம்பூரணமாய் ஏற்றுக் கொண்டவர்களாயிருந்தால், இப்பூமியில் நம் ஜீவியத்தின் ஒவ்வொரு நிமிஷமும் இந்த வாக்குதத்தத்தை உரிமை கொண்டாட முடியும்!*

*நமக்கு மற்றவர்கள் தற்செயலாகவோ அல்லது வேண்டுமென்றோ செய்திடும் எந்த நன்மையானாலும் அல்லது தீமையானாலும் இந்த ரோமர் 8:28 ஆம் வசன வடிகட்டி (FILTER) வழியாய் கடந்துவந்து, நமக்கு மிகவும் அருமையாகவே முடிவில் வந்து சேரும்! இவ்வாறு தேவன் நமக்கென்று திட்டம் தீட்டியுள்ள அதிக நன்மையானவைகளில் ஒன்று என்னவென்றால், ஒவ்வொரு சமயமும் கிறிஸ்துவின் சாயலுக்கொப் பாய் நாம் மாறுவதுதான் (ரோ.8:29). இந்த அருமையான வசனத்தில் சொல்லப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றிடும் யாவருக்கும் "இந்த வடிகட்டி" (Filter) ஒவ்வொரு சமயமும் நன்மையை கிரியை நடப்பித்துக் கொண்டேயிருக்கும்!!*

*இதைக்காட்டிலும் சற்று மேலாக, 1 பேதுரு 3:13, "நாம் நன்மை செய்கிறவர்களாய் இருந்தால்" ஒரு மனிதனும் நமக்கு தீங்கு செய்திட முடியாது என மிக நேர்த்தியாய் கூறுகிறது. துரதிருஷ்டவசமாய் இன்று ரோமர் 8:28 அறியப்பட்டிருப்பது போல், இந்த அருமையான வசனத்தை அனேகர் அறியாதிருக்கிறார்கள். இருப்பினும் இந்த வாக்குதத்தமோ, தங்கள் இருதயங்களை எல்லா ஜனங்களிடத்திலும் நன்மை நிறைந்ததாய் காத்துக்கொண்டவர்களுக்கு மாத்திரமே சொந்தமானதாகும். இதுபோன்ற ஒரு விசுவாசிக்கு எந்த பிசாசோ அல்லது எந்த மனுஷனோ தீமை செய்வதென்பது ஒருக்காலும் கூடாத காரியம்! ஆகவே, "மற்றவர்கள் எனக்குத் தீங்கு செய்துவிட்டார்கள்" என எந்த ஒரு கிறிஸ்தவன் குறை கூறுகிறானோ, அப்போதெல்லாம் அவன் மறைமுகமாய் ஒத்துக்கொள்வது யாதெனில் "நான் தேவனிடத்தில் அன்பு கூரவில்லை! நான் தேவனுடைய தீர்மானத்தின் படி அழைக்கப்படவில்லை! நான் நன்மை செய்யத்தீவிரம் கொண்ட வனுமல்ல!" என்ற அறிக்கையேயாகும். இப்படியில்லாதிருந்தால், அவனுக்கு மற்றவர்கள் எதைச்செய்தாலும் நன்மைக்காகவன்றோ கிரியை நடந்திருக்கும்! அவனிடம் குறைசொல்லும் இருக்காது!!*

**ஜெபம்** : *எங்கள் பரம தந்தையே! உம்மீது நேசம் கொண்டு, உம் வழியில் நன்மை செய்திடும் எங்களுக்கு யாதொரு தீமையும் இல்லையே! குறைசொல்லும் இல்லையே! இவ்வழி தொடர்ந்து வர கிருபை தாரும்! ஆமென்.*

## தேவனால் முன்குறிக்கப்பட்ட வாழ்வை அறிந்து வாழும் பாக்கியம்!

*"நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்துவுக்குள் (முன்கூட்டியே) சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையா யிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர்முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்" (எபேசியர் 2:10).*

பல வருடங்களுக்கு முன்பாகவே நம்மை கிறிஸ்துவுக்குள் தேவன் தெரிந்து கொண்டபோது, இப்பூமிக்குரிய வாழ்க்கையில் நாம் என்ன செய்ய வேண்டுமென்பதை வரையறை செய்துவைத்துவிட்டார்!. இப்போது நம்முடைய கடமை என்னவென்றால், தேவனுடைய அந்த திட்டத்தை ஒவ்வொருநாளும் கண்டுபிடித்து அதன்படி பின்பற்றி நடப்பதுதான்! தேவனுடைய திட்டத்தைக் காட்டிலும் மேலான திட்டத்தை நாம் நமக்கென ஒருக்காலும் வரையறுக்கவே முடியாது!!

ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் தேவன் வித்தியாசமான திட்டங்களை வைத்திருக்கிறபடியால், மற்றவர்கள் செய்வதைப் போலவே நாமும் அப்படியே செய்வதற்கு முயலவே கூடாது! உதாரணமாய், யோசேப்பைக்குறித்து தேவன் கொண்டிருந்த திட்டம் யாதெனில், "அவன் எகிப்தின் அரண்மனையில் தங்கியிருந்து, தன்னுடைய ஜீவியத்தின் பின்பகுதியான எண்பது ஆண்டுகள் மிகுந்த வசதியுடன் வாழவேண்டுமென்பதாயிருந்தது!". இப்படியிருக்க, யோசேப்பின் மாதிரியை மோசே பின்பற்றி வசதியையும், ஆடம்பரத்தையும் விரும்பியிருந்தால்...... அவனுடைய சொந்த வாழ்க்கைக்குரிய தேவனுடைய சித்தத்தை நிச்சயமாய் இழந்திருப்பான்!

இன்றும் அதைப்போலவே, ஒருசகோதரன் தன் ஜீவிய காலமெல்லாம் அமெரிக்க தேசத்தில் வசதியுடன் வாழ தேவன் விரும்பியிருக்கக்கூடும்! ஆனால் இன்னொரு சகோதரனையோ தன் ஜீவ காலமெல்லாம் வட இந்தியாவின் உஷ்ணத்திலும் தூசியிலும் உழன்று வாழும்படி அவர் வைத்திருக்கக் கூடும்!! இந்த இருவருமே, தேவன் தங்கள் வாழ்வில் கொண்டிருக்கும் திட்டத்தை அறிந்தவர் களாய் திருப்தியுடன் இருக்கவேண்டுமேயல்லாமல், ஒருவரையொருவர் ஒப்பிட்டுப்பார்த்து பொறாமைப்படவோ அல்லது குறைகூறவோ கூடாது! இந்திய தேசத்தில்தான் ஊழியம் செய்யும்படி தேவன் என்னை அழைத்திருக்கிறார் என்பதை நான் நன்கு அறிவேன். ஆனால் என்னைப் போன்ற அழைப்பை மற்றவர்களும் பெற்றிருக்க வேண்டுமென நான் ஒருவரையும் வற்புறுத்தியதேயில்லை. இருப்பினும், நாம் நம்முடைய சுய கனத்தைத் தேடினாலோ அல்லது சொகுசு வாழ்க்கையை விரும்பினாலோ அல்லது மனுஷர்களுடைய அங்கீகாரத்தை நாடினாலோ, நாம் ஒருக்காலும் தேவன் நமக்கென்று வைத்திருக்கும் அவரது திட்டத்தைக் கண்டு பிடிக்கவே முடியாது!

**ஜெபம்** : *அன்பின் தகப்பனே! எங்கள் வாழ்க்கையில் நீர் முன்குறித்துவைத்த நியமனத்தை உம்மிடம் கேட்டு, அறிந்து, அதன்படி வாழ்ந்திட கிருபைதாரும்! ஆமென்.*

**தேவனை தனிப்பட்ட விதத்தில் அறிந்திட வேண்டும்!**

*“தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் திடங்கொண்டிருப்பார்கள்” (தானியேல் 11:32).*

*இரண்டாவதாக கைமாற்றுவதுபோல் (Second Hand) பிறர் மூலமாய் நாம் தேவனை அறிந்து கொள்வதை தேவன் விரும்புவதேயில்லை. ஒரு புதிதான இளைய விசுவாசிகூட தன்னைத் தனிப்பட்ட முறையில் அறிந்து கொள்ளும்படியே தேவன் அவனை அழைக்கிறார் (எபிரேயர் 8:11). தேவனையும் இயேசுகிறிஸ்துவையும் தனிப்பட்ட விதத்தில் ஒருவன் அறிந்து கொள்வதே நித்திய ஜீவன் என்று இயேசு விளக்கினார். இதுவே பவுலின் வாழ்க்கையில் தீராத ஏக்கமாயிருந்தது! அது போலவே, நமக்கும் தேவனை அறிகிற அறிவு தீராத ஏக்கமாய் நமக்குள் இருந்திட வேண்டும் (பிலிப்பியர் 3:10).*

*தேவனை தீர்க்கமாய் அறிந்திட வாஞ்சை கொண்டவன், எப்போதும் அவர் சொல்வதைக் கவனிக்க தீவிரம் கொண்டவனாயிருக்கவேண்டும். ஒரு மனிதன் தன்னை ஆவிக்குரிய ஜீவனோடு காத்துக்கொள்வதற்கு ஒரே வழி “தேவனுடைய வாயிலிருந்து புறப்படும்” ஒவ்வொரு வார்த்தையையும் கவனித்துக் கேட்பதுதான்! நம் கிறிஸ்தவ வாழ்க்கையில் அவருடைய பாதத்தில் அமர்ந்து அவர் கூறுவதை கவனித்துக் கேட்பதே மிக முக்கியமானதென்று இயேசு லூக்கா 10:42-ல் கூறினார்.*

*இயேசு ஒவ்வொரு நாள் காலையிலும் தன் பிதா சொல்வதை கவனித்துக் கேட்கும் பழக்கம் வைத்திருந்ததைப் போலவே, நாமும் அந்தப் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும்! (ஏசாயா 50:4). காலையில் மாத்திரம் அல்லாமல்... அந்தப் பகல் முழுவதும்...... நாம் தூங்கும் இரவு நேரங்களிலும் அவ்விதமே இருப்போமென்றால், இரவிலும் நம்மை அதேபோல் ‘கவனித்து கேட்கும்’ மனதுடையவர்களாகச் செய்வார். நாம் எழும்பினாலும், “கர்த்தாவே சொல்லும் உமதடியான் கேட்கிறேன்” என கூறிட முடியும் (1 சாமு.3:10).*

*நாம் தேவனை நெருக்கமாய் அறிந்திருப்பதுதான், நம்மை எல்லா சூழ்நிலைகளிலும் ஜெயம் பெற்றவர்களாய் மாற்றிவிடும்! ஏனென்றால், நாம் சந்திக்கும் ஒவ்வொரு பிரச்சனைகளுக்கும் தேவனிடத்தில் விடை உண்டு! நாம் அவரை கவனித்துக்கேட்டால், அந்த விடையை அவர் நமக்கு நிச்சயமாய் சொல்லுவார்!!*

***ஜெபம்*** *: எங்கள் பரலோக பிதாவே! பிறர் மூலமாய் அல்ல, நாங்களே உம்மிடம் நேரடியாய் வந்து உம் வார்த்தை கேட்டு, உம் வழி நடக்க உதவிசெய்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**தேவபக்தியின் வழி துன்பத்தின் வழி என்பதை மறக்கலாகாது!**

*"கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2தீமோத்தேயு 3:12).*

இயேசு தன்னுடைய சீஷர்களிடத்தில் கூறும்போது, இந்த உலகத்தில் அவர்கள் துன்பத்தை சந்திக்கவேண்டுமென்பதை திட்டமாய் கூறினார் (யோவான். 16:33). எனவேதான் அவர் பிதாவினிடத்தில் தன் சீஷர்களுக்காக ஜெபிக்கும்போது, "நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளவில்லை" என்றே ஜெபித்தார் (யோவான்.17:15). மேலும் அப்போஸ்தலர்கள் தங்களுடைய விசுவாசிகளுக்குப் போதிக்கும்போது "அநேக உபத்திரவங்களின் வழியாய்தான் அவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க முடியும்" என போதித்தார்கள் (அப்போஸ்தலர் 14:22).

மேலும் இயேசு கூறும்போது, "வீட்டு எஜமானையே 'பெயர்செபூல்' எனக் கூறியிருந்தால், அவன் வீட்டாரை அப்படிச் சொல்வது அதிக நிச்சயமல்லவா?" எனக் கூறினார் (மத்தேயு 10:25 ). பார்த்தீர்களா, இந்த அடையாளங்களை (நிந்தைகளை) வைத்துதான் நாம் அவருடைய உண்மையுள்ள வீட்டாராய் இருக்கிறோமா? அல்லது இல்லையா? என்பதை அறிந்து கொள்ள முடியும்! என்னுடைய ஜீவிய காலத்தில் எத்தனையோ விசுவாசிகள் என்னை "பிசாசு" "பிசாசின்மகன்" "அசுத்தாவி பிடித்தவன்" "கொலை பாதகன்" "தியோத்திரேப்பு" என்றெல்லாம் கூறி அழைத்திருக்கிறார்கள்! இவ்வாறு நாம் இயேசுவின் வீட்டாராய் இனம் கண்டு சுட்டிக்காட்டப்படுவது நமக்கு கிடைத்த மிகப்பெரும் பாக்கியமேயாகும்! இன்று யாரெல்லாம் ஆண்டவருக்கு உத்தமமாய் ஊழியம் செய்கிறார்களோ, அவர்கள் யாவருக்குமே இந்த நிந்தை அனுபவம் நிச்சயம் கிட்டியிருக்கும்!!

ஒரு மெய்யான தீர்க்கதரிசி தன் "சொந்த இனத்தாரால்" ஒருபோதும் கனம் அடையமாட்டான் என்று இயேசு கூறினார் (மாற்கு 6:4). எந்தவொரு மெய்யான தீர்க்கதரிசியும் அவனுடைய சொந்த இனத்தாரால் புறக்கணிக்கப்பட்டு கனவீனமும் அடைவான்! இதைப் போலவே ஒரு மெய்யான அப்போஸ்தலனும் "தூஷிக்கப்பட்டு....... உலகத்தின் குப்பையைப் போலவும் எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப் போலவும்...... கருதப்படுவார்கள்" என பவுல் கூறினார் (1கொரிந்தியர் 4:13).. துன்புறுத்தப்படுவதும், புறக்கணிக்கப்படுவதும், எத்தனையோ வல்லமையான தேவனுடைய ஊழியர்களுக்கு தேவன் நியமித்த பங்காகவே இருக்கிறது!

**ஜெபம்** : *எங்கள் அன்பின் தந்தையே! எங்கள் ஆண்டவர் இயேசு இவ்வுலகில் நடந்த பாதை துன்பத்தின் பாதை! ஆதலால், நாங்களும் மகிழ்வுடன் அந்த பாதை நடந்து முன்னேற கிருபைதாரும்! ஆமென்.*

**நாம் ஒளியில் நேர்மையுடன் நடந்திட வேண்டும்!**

*“அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்” (1யோவான் 1:7).*

ஒளியில் நடப்பதற்கு முதலாவது தகுதியாய் இருக்கவேண்டியது, நாம் ஒன்றையும் தேவனிடத்தில் மறைக்காமல் இருக்கவேண்டும்!! அதாவது, அவரிடத்தில் உள்ளதை உள்ளபடியே எல்லாவற்றையும் சொல்வதாகும்! தேவனை நோக்கிச் செல்வதற்குரிய முதல்படி நேர்மை தான் என்பதை நான் ஆணித்தரமாய் கண்டிருக்கிறேன். புரட்டிப் பேசும் உண்மையற்றவர்களை தேவன் அருவருக்கிறார். வேறு எவரையும் கடிந்து கொள்ளாத அளவிற்கு, மாய்மாலக்காரர்களையே இயேசு அதிகமாய் கடிந்து கொண்டார் என்பதை நாம் அறிய வேண்டும்.

நாம் பரிசுத்தமாகவோ அல்லது பூரணமாகவோ இருக்கும்படி முதலாவதாக தேவன் கேட்கவேயில்லை. ஆனால், முதலாவதாக நேர்மையாய் இருக்கும்படியே நம்மிடம் கேட்கிறார்!

இதுவே உண்மையான பரிசுத்ததின் ஆரம்பமாகும். இந்த ஊற்றுக் கண்ணிலிருந்துதான் மற்ற அனைத்தும் புரண்டுவர முடியும். நாமனைவருமே மிக எளிதாய் செய்யக்கூடிய ஒன்று இருக்குமென்றால், அது **நேர்மையாக** இருப்பதுதான்!

ஆகவே எந்தப் பாவத்தையும் உடனடியாக தேவனிடம் அறிக்கை செய்துவிடுங்கள். பாவமான சிந்தைகளுக்கு மழுப்பலான நாகரீகமான வார்த்தைகளைச் சூட்டாதிருங்கள். நீங்கள் உண்மையில் உங்கள் கண்களினால் விபச்சார மயக்க இச்சை கொண்டுவிட்டு, “நான் தேவனுடைய சிருஷ்டிப்பின் அழகை மாத்திரமே ரசித்தேன்” என்று கூறாதிருங்கள். அதேபோல் கோபத்தை “நியாயமான கோபம்” என்றும் அழைக்காதிருங்கள்! இவ்வாறு நேர்மையற்றவர்களா யிருந்தால், நீங்கள் ஒருக்காலும் பாவத்திலிருந்து ஜெயம் பெறவே மாட்டீர்கள்!! ஆகவே, ஒருபோதும் பாவத்தை “தவறு” என்று அழைக்காதிருங்கள். ஏனென்றால் இயேசுவின் இரத்தம் உங்களுடைய எல்லா ‘பாவங்களை’ மாத்திரமே கழுவமுடியும் அல்லாமல், உங்கள் ‘தவறுகளை’ அவருடைய இரத்தம் கழுவாது! ஆம், நேர்மையற்ற ஜனங்களை அவர் ஒருக்காலும் கழுவி சுத்திகரிப்பதேயில்லை. “தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்” (நீதிமொழிகள் 28:13). ஆகவே, நேர்மையுள்ள ஜனங்களுக்கு மாத்திரமே சுவிசேஷத்தில் நம்பிக்கை இருக்கிறது!

***ஜெபம் :*** *எங்கள் அன்பின் தகப்பனே! குறைகள் ஏராளம் இருந்தாலும், அவைகளை மறைக்காமல் ‘ஒளியில்’ வைத்து நேர்மையாய் உம்மிடம் அறிக்கை செய்து பரிசுத்தத்தில் வளர கிருபை செய்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

## தேவனுக்குரிய அனைத்தும் 'மனப்பூர்வமாய்' வேண்டும்!

*"உற்சாகமாய் (மிகுந்த மகிழ்சியுடன்) கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" (2கொரி 9:7)*

*இதனிமித்தமே, தேவன் மனிதனுக்கு, அவனுடைய மனந்திரும்புதலுக்கு முன்பாகவும், மனம் திரும்பிய பிறகும்... ஏன் பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்ற பின்புங்கூட அவனுக்கு முழு சுயாதீனம் அளித்திருக்கிறார். இவ்வாறு தேவனைப்போலவே நாமும் இருந்திடவேண்டுமென்றால் நாமும் மற்றவர்களை ஆளுகை செய்வதற்கு முயற்சிக்காமல், நம்மைவிட அவர்கள் வித்தியாசமாயிருப்பதற்கும், நம்மைவிட வித்தியாசமான கருத்துக்கள் கொள்வதற்கும், அவரவர் ஓட்டத்தின் விகிதப்படி ஆவிக்குரிய வளர்ச்சியடைவதற்கும் சுயாதீனம் கொடுத்திட வேண்டும்!!*

*எந்த கட்டாயத்திணிப்பும் பிசாசிற்குரியதேயாகும்! பரிசுத்த ஆவியானவர் ஜனங்களை "நிரப்புகிறார்" ஆனால் பிசாசுகளோ ஜனங்களைப் "பிடித்துக்கொள்ளுகிறது!". இங்கே வித்தியாசம் என்னவென்றால், பரிசுத்த ஆவியானவர் ஒருவனை நிரப்பும் போது, அவன் இன்னமும் தான் விரும்பியதைச் செய்வதற்கு முழுசுதந்திரத்தையும் தந்து விடுகிறார். ஆனால் பிசாசுகளோ ஜனங்களைப் பிடித்துக் கொண்டால், அவைகள் அவர்களுடைய சுதந்திரத்தை முழுமையாய்ப் பறித்துக் கொண்டு அவர்களை ஆளுகையும் செய்கின்றன!!*

*நாம் தேவனுக்குச் செய்திடும் எந்த ஊழியமாயிருந்தாலும் அவைகள் உற்சாகத்தோடும், மகிழ்ச்சியோடும், சுயாதீனமாய் தானகவே மனமுவந்து செய்யப்படாவிட்டால் அவையாவும்* **செத்தகிரியைகள்** *என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அதேபோல், ஏதோ ஒரு பிரதிநலனைக் கருதியோ அல்லது சம்பளத்தின் அடிப்படையிலோ செய்யப்படும் எவ்வித தேவனுடைய ஊழியமும் செத்த கிரியைகளேயாகும்! மற்றவர்களின் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி தேவனுக்கு கொடுக்கும் எந்தப் பணத்திற்கும், தேவனைப் பொருத்த மட்டில் அவைகளுக்கு எந்த மதிப்பும் இல்லவே இல்லை!*

*கட்டாயத்தின் பேரிலோ அல்லது மனசாட்சியின் உறுத்தலிலிருந்து தப்பிப்பதற்காகவோ செய்யப்படும் ஏராளமான கிரியைகளைக் காட்டிலும்,* **மிகுந்த மகிழ்ச்சியுடன்** *அவருக்குச் செய்திடும் ஒரு செயல் அற்பமானதாயிருந்தாலும் அதற்கே தேவன் அதிக மதிப்பு தருகிறார்.*

**ஜெபம்** : *எங்கள் பரம பிதாவே! எவ்விதத்திலும் கட்டாய உணர்வில்லாமல், மனப்பூர்வமாய் உம்மை சேவித்திட எங்களுக்கு உதவும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**பரிசுத்தவான்களின் ஜெபத்தில் பங்குபெற வேண்டும்!**

*வெளி 4:10-ம் வசனத்தில் மூப்பர்கள் ஒவ்வொருவரும் ஓர் சுரமண்டலத்தையும் ஓர் பொற்கலசத்தையும் பிடித்திருந்தார்கள். அந்த பொற்கலசம் தூபவர்க்கத்தால் நிறைந்திருந்தது. இந்த தூபவர்க்கம் என்ன தெரியுமா? பரிசுத்தவான்களுடைய ஜெபங்கள்! தூதர்களுக்கு மேலாக அதிகாரம் பெற்றிருந்த 24 மூப்பர்களும்* (The angelic authorities) *தேவனுக்கு முன்பாக படைத்தது யாது? பரிசுத்தவான்களுடைய ஜெபங்களையே அவர்கள் படைத்தார்கள்! 2,000 வருடங்களாக ஜெபித்த, ஜெபித்துக்கொண்டிருக்கும் பரிசுத்தவான்களுடைய ஜெபங்கள் யாவும் இந்த பொற்கலசத்தில் வந்து சேர்கிறது என்பதை அறிவீர்களா? இப்பொற்கலசம் ஒருநாள் நிறையப்போகிறது. அப்போது பரிசுத்த வான்களின் ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த இப்பொற்கலசங்கள் தேவனுக்கு முன்பாக சமர்ப்பிக்கப்படும்.*

*கவனியுங்கள், இவ்விதம் பொற்கலசத்தில் நிரப்பப்படப்போகும் பரிசுத்தவான்களின் பிரதானமான ஜெபம் யாது தெரியுமா? அந்த ஜெபம், "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய இராஜ்யம் வருவதாக . . ." என்பதுதான்! பரிசுத்தவான்களுடைய ஜெபமாக இருப்பதெல்லாம், பரலோகத்தில் உம்முடைய ராஜ்யம் இருப்பது போல பூமியிலேயும் உம்முடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதாக! என்ற ஜெபம்தான். "தேவரீர், இப்பூமியை துரிதமாய் மீட்டுக்கொள்ளும்" என்பதே இவர்களின் பேராவல்! இவ்வித ஜெபத்தை அநேக பரிசுத்தவான்கள் மிகுந்த பாரத்தோடு ஜெபித்தார்கள்... இன்றும் ஜெபித்துக்கொண்டிருக் கிறார்கள். இந்த ஜெபத்தை இயேசு ஜெபிக்கும்படி சொன்னாரே! எத்தனைபேர் இன்று இச்ஜெபத்தை ஜெபிக்கிறார்கள்?*

*இந்தப் பொற்கலசம் ஓர் பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றுவதற்கு ஒப்பாகும். நீங்கள் ஊற்றியவுடன் அந்தப் பாத்திரம் உடனே நிறைந்துவிடுமா? இல்லை. ஆயினும் தொடர்ந்து ஊற்றப்படும் பொழுது அந்தப் பாத்திரம் நிச்சயமாய் நிரம்பிவிடும். இவ்விதமே நீங்களும் நானும் அவருடைய ராஜ்யம் வரவேண்டுமென வாஞ்சித்து ஜெபிக்கும் போதெல்லாம், இந்தப் பொற்கலசத்தை நிறைப்பதற்கு ஊற்றுகிறவர்களாயிருக்கிறோம். இப்போது இந்த ஜெபத்தின் முக்கியத்தை அறிந்துகொண்டீர்களா? எந்த ஜெபம்? என் முதுகு வலிக்காகவும், என் பதவி உயர்வுக்கும் இன்னும் இதுபோன்ற உலக காரியங்களுக்காக ஜெபிக்கும் ஜெபமா? இவைகளுக்கெல்லாம் மேலாக தேவனுடைய ராஜ்யம் உங்களைப் பிரதானமாக ஆட்கொண்டு நிறைந் திருக்கிறதா? இவ்விதம் பூமியில் தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்ற வாஞ்சையின் ஜெபமே மிகமிக முக்கியமானதாகும்!*

**ஜெபம் :** *எங்கள் பிதாவே! கேடான இந்த உலகில் உம் பரிசுத்த நாமமும், உம் நீதி யின் இராஜ்ஜியமும் விரைவில் வரவேண்டும் என்ற ஏக்கமுள்ள ஜெபத்தை எங்களுக்குத்தாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

### 7-பாக்கியவான்கள்! 7-ம் வேண்டும்!!

வெளிப்படுத்தின விசேஷப் புத்தகம் ஏழு பாக்கியவான்களைக் குறிப்பிடுகின்றது. இந்த 7 - பாக்கியவான்கள் வசனங்களை நம் மனதில் நிறுத்தி தியானிப்பது நல்லது.

1) வெளி.1:3 - "இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள். காலம் சமீபமாயிருக்கிறது."

2) வெளி. 14:13 - "பின்பு, பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடேகூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று."

3) வெளி. 16:15 - "இதோ, திருடனைப்போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்."

4) வெளி. 19:9 - "பின்னும், அவன் என்னை நோக்கி : ஆட்டுக் குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது என்றான். மேலும், இவைகள் தேவனுடைய சத்தியமான வசனங்கள் என்று என்னுடனே சொன்னான்."

5) வெளி. 20:6 - "முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்."

6) வெளி. 22:7 - "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான் என்றார்."

7) வெளி. 22:14 - "ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் தங்கள் அங்கிகளை வெளுத்துத் தோய்த்தவர்கள் (NASB) பாக்கியவான்கள்."

**ஜெபம்** : *எங்கள் அன்பின் தகப்பனே! கடைசி காலத்தில் ஜொலித்திடும் 7- பாக்கியவான்களின் பங்கு முழுவதும் எங்களுடையதாய் மாறிட அனுகிரகம் செய்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**சாத்தானை ஜெயித்து வாழ 3-முக்கிய ஆயுதங்கள்!**

*வெளி 12:11-ல் "அவர்கள் அவனை ஜெயித்தார்கள்" என வாசிக்கிறோம். எவ்விதம் இவர்கள் சாத்தானை ஜெயித்தார்கள்? அதைக் குறித்து மூன்று ஆயுதங்கள் இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. 1) நம்முடைய பாவங்களுக்காக சிந்தப்பட்ட இயேசுகிறிஸ்துவின் இரத்தம். "ஆண்டவராகிய இயேசுவே! நான் மனந்திரும்பி என் பாவங்களை அறிக்கைசெய்து நீர் எனக்காக சிந்தின இரத்தத்தால் முற்றிலும் கழுவப்பட்டுவிட்டேன்" என்பதே நம்முடைய அறிக்கையா யிருக்கிறது. இப்போது நாம் சாத்தானின் குற்றஞ்சாட்டுதலுக்கு ஆளாகவேண்டிய அவசியமே இல்லை. இந்த சாத்தான் நம்மை தேவனிடத்தில் குற்றஞ்சாட்டுவதோடு நில்லாமல் நம்மையும் குற்றம்சாட்டுவான். அவ்விதம் அவன் குற்றம்சாட்டும்பொழுது, "சாத்தானே! நீ குற்றஞ்சாட்டும் இந்தப் பாவங்கள் அத்தனையி லிருந்தும் நான் மனந்திரும்பி அறிக்கைசெய்து இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு அவரால் முற்றிலும் மன்னிக்கப் பட்டுவிட்டேன்!!" என நீங்கள் முழங்க வேண்டும். 2) தங்கள் சாட்சியின் வசனத்தினால் அவனை ஜெயித்தார்கள். நாம் கூட்டங்களில் சாட்சி கொடுப்பதை இங்கு கூறவில்லை. சாத்தானுக்கு முன்பாக அறிக்கைசெய்யும் சாட்சியே இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவனை நேருக்கு நேர் தைரியமாய் எதிர்த்து நின்று, "சாத்தானே, நான் இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டவன்!" என நம் வார்த்தைகளினால் கூறிடும் சாட்சியாகும். இந்த சாட்சியே சாத்தானின் குற்றஞ்சாட்டுதலை ஜெயித்திட வல்லதாகும். அதுமாத்திரமல்லாமல், தேவனுடைய வாக்குதத்தத்தை அறிக்கை செய்தும் நாம் ஜெயித்திட முடியும் 3) மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல் இருந்தவர்களே சாத்தானை ஜெயித்தார்கள். அதாவது, இவர்கள் தங்கள் சிலுவையை எடுத்து அதில் மரிக்கும்படி தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள்! ஏனென்றால், கல்வாரி சிலுவையில்தான் இயேசு சாத்தானை ஜெயித்தார். இதைப்போல் நாம் நம்முடைய ஸ்தானத்தைக் "கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டேன்" என வைத்திருந்து, ஒவ்வொருநாளும் சிலுவையை எடுத்து சுயத்திற்கு மரிப்போமென்றால் நாமும் இயேசுவைப்போல் சாத்தானை சிலுவையில் வெற்றி சிறப்போம்!! இந்த மூன்றுமே நம்முடைய தொடர்ச்சியான யுத்தத்திற்குரிய ஆயுதங்களாயிருக்கிறது!!*

***ஜெபம் :*** *எங்கள் பரம தகப்பனே! சாத்தானை ஜெயித்திட எங்களுக்கு கிருபையாய் அருளிய இந்த 3-ஆயுதங்களையும் விட்டுவிடாமல், தொடர்ந்த யுத்தம் செய்து ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேற கிருபைதாரும்! ஆமென்.*

**சகலமும் தேவனுடைய மகிமைக்கே செய்யப்பட வேண்டும்!**

பிலிப்பியர் 3:13-ல் பவுல், "பின்னானவைகளை மறந்து" எனக் கூறினார். அவ்விதம் பவுலுக்குப் பின்னாக இருந்தவைகள் யாது? ஓர் வெற்றியுள்ள ஜீவியமும்! தேவனுக்காக நிறைவேற்றிய வல்லமையான ஊழியமுமே, பவுலுக்குப் பின்னாக இருந்தது! ஆனால் பவுலோ அவை யாவற்றையும் தன் மனதிலிருந்து அகற்றினார். ஏனென்றால், அவர் தன் ஜீவியத்திற்காகவும் தன் ஊழியத்திற்காகவும் தேவனுக்கே சகல மகிமையையும் செலுத்தினார்!

நியாயத்தீர்ப்பு நாளில் தனக்கு முன் நிற்கும் இரு கூட்டத்தாரைக் குறித்து இயேசு குறிப்பிட்டுக் கூறினார். அதில் ஒரு கூட்டத்தார், "கர்த்தாவே உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம், உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம், உமது நாமத்தினாலே அநேக அற்புதக் கிரியைகளைச் செய்தோம்" என்பார்கள். ஆனால் ஆண்டவரோ, அவர்களைப் பார்த்து, "அக்கிரம செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள்" என்றே கூறுவார் (மத்.7:22, 23). ஆனால் ஆண்டவர் இரண்டாவது கூட்டத்தாரை குறிப்பிட்டுப் பேசும்போது, "நான் பசியாயிருந்தேன் எனக்குப் போஜனம் கொடுத்தீர்கள்... வஸ்திரமில்லாதிருந்தேன் எனக்கு வஸ்திரங் கொடுத்தீர்கள்... வியாதியாயிருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன் என்னைப் பார்க்க வந்தீர்கள்" எனக்கூறுவார்.

ஆனால் அவர்களோ தாங்கள் இவைகளையெல்லாம் செய்தோம் என்ற தன்னுணர்வு அற்றவர்களாகவே காணப்பட்டார்கள்.

ஆகவே அவர்கள், "ஆண்டவரே, எப்பொழுது இவைகளை யெல்லாம் உமக்குச் செய்தோம்? இவைகளையெல்லாம் செய்ததாக எங்களுக்கு நினைவில்லையே!" என்பார்கள். ஆ. . . . இது எத்தனை மகா அருமை! இவர்கள் பதிலைக் கேட்ட நம் நல்ல ஆண்டவர், "நீங்கள் பாக்கியவான்கள்! என்னுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதற்கு நீங்களே பாத்திரவான்கள்!" என உள்ளம் பூரிக்ககூறுவார்(மத்.25:31-40).

ஓர் நீதிமான் நன்மையை செய்வான் . . . . செய்து முடித்தவுடன், அவைகளை மறந்துவிடுவான். அநீதியான மனுஷனோ தான் செய்த எல்லா நன்மைகளையும் தன் மனதின் டைரியில் ஞாபகமாய் எழுதி வைத்துக் கொள்வான்!!

இவ்வாறு நீங்கள் தேவனுக்காகவும் பிறருக்காகவும் செய்த எல்லா நன்மைகளையும் குறித்து தன்னுணர்வு கொண்டு மகிமையில் மிதக்கிறீர்களா? நாம் ஜாக்கிரதையாயிருப்போமாக!

**ஜெபம் :** எங்கள் பரம பிதாவே! அன்பு செலுத்துவதும், ஊழியம் செய்வதும் தேவனுக்கு செய்வதாகவே எப்போதும் இருந்து, "நான் செய்தேன்" என்ற உணர்வை அகற்றிட கிருபை செய்தருளும், ஆமென்.

**துன்பங்கள் நமக்குள் கிறிஸ்துவின் சுபாவத்தை வளரச் செய்கிறது!**

“அவர் என்னை சோதித்தபின் பொன்னாக விளங்குவேன்” யோபு 23:10).

ஏதோ தங்கள் கவலைகளையெல்லாம் தங்கள் கண்ணீரின் கடலுக்குள் மூழ்கடித்துவிடலாம் என்ற எண்ணத்தில், சிலர் பல வாரங்களாய் அழுது கொண்டேயிருக்கிறார்கள்! இன்னும் சிலர், துக்கத்தின் சுமையால் நசுக்கப்பட்டு “இருதயத்தில் அழுகிறார்கள்.”

துன்பங்களும், உபத்திரவங்களும் ஓர் மிக நல்ல நோக்கத்திற்காய் மாறிவிட முடியும். அந்த நோக்கத்தை மனதில் கொண்டுதான் நம்மில் ஆழமாய் அன்புகூரும் சர்வ வல்ல தேவன், துன்பங்கள் நம் வாழ்வில் பிரவேசிக்க அனுமதிக்கிறார். உபத்திரவங்கள் நம் முழு குணாதிசயங்களையும் மாற்றிவிட முடியும்! கோடாரி தன்னை வெட்டும் போது சந்தனமரம் நல்ல வாசனையைப் பரிமளிக்கிறது! அதைப்போலவே நாமும் துன்பத்தின்மூலம், தான் தேவனிடத்தில் கற்றுக்கொண்ட நன்மையின் மூலமாய் தனக்குத் தீங்கு செய்தவர்களையும், மற்றவர்களையும் ஆசீர்வதிப்பவர்களாய் மாறிவிட முடியும்! தேவனுக்கேற்றவர்களாய் நீங்கள் மாற வேண்டுமென்றால், ஏராளமான உபத்திரவங்களை நீங்கள் சந்தித்திடவும் ஆயத்தமாயிருக்க வேண்டும் . . . . அதேசமயம், அந்த உபத்திரவங்கள் உங்களை அழுத்தும்படி அனுமதித்துவிடவுங்கூடாது.

சில பக்தர்கள் துன்பத்தின் கொடிய ஆழத்திற்குள் சென்றிருக் கிறார்கள். இருப்பினும் அவர்களின் பக்தியான அனுபவங்கள் அளவில்லா ஆசீர்வாதமாய் இருந்திருக்கிறது. துன்பங்களை சரியான விதத்தில் கையாள கற்றுக்கொண்டால், நாம் சீர் கொண்டவர்களாய் மாறிட முடியும் என்ற உண்மையை நாம் காணவேண்டும். இந்த துன்பம் என்னும் பள்ளிக்கூடத்தில் அருமையான பாடங்களை நாம் கற்றுக்கொள்ளுகிறோம். அந்தக் கல்வியின் இறுதியில் நாம் பெறும் பலனே “கிறிஸ்துவைப் போன்று மாறிடும் நம் சுபாவம்” ஆகும்!!

துன்பம் தரும் எந்த நிகழ்ச்சிகளையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் நமக்கில்லை. ஆனால், ஆண்டவர் அவைகளைக் கட்டுப்படுத்தி அதன் மூலம் “நமக்குள்” நன்மையான காரியங்கள் உண்டாகும்படிச் செய்திட முடியும்!! ஆம், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர் களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே நடக்கிறது (ரோமர் 8:28).

***ஜெபம் :*** *அன்பின் தகப்பனே! இவ்வுலகத்தின் துன்பங்கள் எங்களை கண்ணீருக்குள் ஆழ்த்திவிடாமல், அந்த துன்ப அக்கினி எங்களை சுத்தப்பொன்னாய் உம்மைப்போல் மாற்றிடட்டும்! ஆமென்.*

**வாழ்க்கைத் துணை நீங்கினாலும், நீங்காத துணையாய் கர்த்தர் உள்ளார்!**

*"உன் சிருஷ்டிகரே உன் நாயகன் (கணவர்); சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம்; இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் மீட்பர், அவர் சர்வ பூமியின் தேவன் என்னப்படுவார்" (ஏசாயா 54:5) என்று உன் கர்த்தர் சொல்லுகிறார் என்ற வசனம் எத்தனை ஆறுதலாய் இருக்கிறது.*

*தன் இளங்கணவரை ஆண்டவருடைய அழைப்பிற்குச் செல்லும்படி இழந்த ஓர் பக்தியுள்ள சகோதரி, தன் கணவரை இழந்த அதே மாதத்தில் கீழ்கண்ட செய்தியை வாசித்தார்கள்! அந்தச் செய்தியின் மூலமாய் தேவனுடைய பெரிதான ஆறுதலை அச்சகோதரி கண்டடைந்தார்கள்!*

*"அதோ அங்கே சில பெண்கள் கூட்டத்தைக் காண்கிறேன்! அவர்கள் ஒரு வருடத்திற்கு முன்பாகவோ அல்லது சில மாதங்களுக்கு முன்பாகவோ அல்லது சில வாரங்களுக்கு முன்பாகவோ அல்லது சில நாட்களுக்கு முன்பாகவோ "வல்லமையும் ஞானமும் நிறைந்த" ஓர் இளைஞனைத் தங்கள் துணையாய் பெற்றார்கள்! அந்த சம்யுக்த இளைஞன் தங்களின் வாழ்க்கை பாரங்களையெல்லாம் தன்மீது ஏற்றுக்கொண்ட படியால்..... இவள், பொறுப்பின் அழுத்தத்திலிருந்து முற்றிலும் விடுதலை பெற்றுவிட்டாள். அந்த இளம் கணவனின் நட்பில் வாழ்ந்த நாட்கள்தான் எத்தனைப் பிரகாசமும் மகிழ்ச்சியுமாய் அவளுக்கு இருந்தது! ஆனால், அந்தோ! காரிருளான அந்த நாள் வந்தபோது தன் நேசத்துக்குரியவரை அவ்விருள் பறித்துச் சென்றுவிட்டதே! ஆ, இப்போது தனிமை! வெறுமை! வறட்சி! சொல்லொண்ணா பாரமும் கவலையும் இன்று அவளை கவ்விக் கொண்டது. பாதிப்புக்குள்ளான ஸ்திரீயே! நான் சொல்வதை சற்று கவனி: உன் வலப்பக்கத்தில் ஒருவர் நடந்துவருகிறார்! அவர், இந்த உலகில் வாழ்ந்த எந்த அன்புள்ள கணவனைக் காட்டிலும் எந்த ஞானமுள்ள கணவனைக் காட்டிலும் எந்த பெலசாலியான கணவனைக் காட்டிலும் .... அதிக அன்புள்ளவர்! அதிக ஞானமுள்ளவர்! அதிக பெலனானவர்! உன்னை நடத்திச் சென்று உதவுவதற்கு சர்வ சம்பூரணர்!! அவர் உன் வாழ்க்கையில் உள்ள சகல பாரங்களையும் பொறுப்புகளையும் தாங்கி ஏற்றுக்கொள்ள ஆயத்தமாய் இருக்கிறார்! நீ நினைப்பதைக் காட்டிலும் மேலானவை களைச் செய்ய ஆயத்தமாய் இருக்கிறார். வெறுமையும் துன்பமும் நிறைந்த உன் இருதயத்தின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் அவர் வந்து அமர்ந்திட காத்துக் கொண்டிருக்கிறார். உன்னிடம் வந்து தங்கிட நீ அவருக்கு இடம் கொடுத்துவிட்டால், உன் எல்லாத் தனிமையும் நெஞ்சின் வேதனையும் உன்னைவிட்டு நிரந்தரமாய் மாயமாய் மறைந்துவிடும்!"*

***ஜெபம்*** *: எங்கள் அன்பின் தந்தையே! எங்கள் வாழ்க்கை துணை இழப்பினும், உமது பலத்த புயத்தின் ஆதரவை காணச் செய்திரே உமக்கே நன்றி! ஆமென்.*

**பக்தியுள்ள விதவைகளை ஆதரிக்கும் தேவன்!**

வடஇந்தியாவில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததற்காக கோடாரியால் வெட்டி கொலை செய்யப்பட்ட கணவருடைய இளம் ஏழை விதவையை நான் சந்தித்தேன். அவளுடைய சாட்சி என் நெஞ்சை நெகிழச் செய்தது! தன் சிறு குழந்தைகளோடு நின்று கொண்டிருந்த அந்த விதவை "என் கணவனின் இரத்தம் சிந்தப்பட்ட அதே இடத்தில் ஓர் சபை எழும்ப வேண்டும்! அதுவே என் ஜெபம்!!" எனக் கெம்பீரித்தார். அந்த சகோதரியின் கண்ணீர் மெய்யாகவே "வாகை சூடும் ஜெயத்தின் கண்ணீராகவே" இருந்தது.

நம் ஆண்டவர் மெய்யாகவே விதவைகளுக்கும் தகப்பனற்றவர்களுக்கும் தேவனானவர். ஓர் உவமையின் மூலமாய் "ஜெபத்தை" இயேசு கற்றுக்கொடுத்தபோது, தன் எதிராளியிடமிருந்து பாதுகாப்பிற்காய் ஓர் அநீதியான நியாயாதிபதியினிடத்தில் சென்ற "ஒரு விதவைக்கே" நம்மை ஒப்பிட்டுக் கூறினார். இந்த விதவை விடாப்பிடியாய் கெஞ்சி, தன் பாதுகாப்பைப் பெற்றுவிட்டாள்!

அதேபோல், மற்றவர்கள் "சிறிய தொகை" என எண்ணிய இரண்டு காசுகளைத் தேவனுக்குப் படைத்த ஓர் விதவையைத்தான் இயேசு அநேகருக்கு முன் பகிரங்கமாய் மெச்சிக் கொண்டார்! அவள் தந்த காணிக்கை, தன் ஏழ்மையில் தன் முழு ஜீவனத்துக்குரியதையும் கொடுத்த அதிக விலைக்கிரயம் கொண்ட காணிக்கையாகும்! இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம் யாதெனில், நாம் அவருக்காகச் செய்திடும் "ஒவ்வொரு சிறிய தியாகங்களையும்" இயேசு பார்க்கிறார் என்பதேயாகும்!

அதுவும் குறிப்பாக நம் துன்பங்கள், கண்ணீர்களின் மத்தியில் படைத்திடும் தியாகக் காணிக்கைகளை இயேசு பரவசத்துடன் காண்கிறார்!!

பக்தியுள்ள விதவைகளைக் குறித்து வேதாகமம் குறிப்பிடுகையில் அவர்கள் "பரிசுத்தவான்களுடைய கால்களைக் கழுவுபவர்கள்" எனக் குறிப்பிடுகிறது (1 தீமோ.5:10). அதாவது, அவள் தன்னுடைய ஊழியத்தினால் தேவ ஜனங்களின் இருதயத்தை மகிழச் செய்துவிடுவாள்! என்பதேயாகும்.

இவ்வாறு தேவனுக்கும் தேவனுடைய ஜனத்திற்கும் இந்த விதவை எவ்வாறு மகிழ்ச்சியை கொண்டு வந்தாள்? அவள் முதலாவது தன்னுடைய பாரங்களையும், கவலைகளையும், கண்ணீர்களையும் ஆண்டவருடைய பாதத்தில் இறக்கி வைத்துவிட்டாள் என்பதே அந்த இரகசியமாகும்!!

**ஜெபம்** : எங்கள் பரலோக பிதாவே! விதவைகளின் தேவனாகிய உம் அன்பை ருசித்தவர்கள், பிறரையும் தெய்வீக நேசத்தால் நேசிப்பார்களே! அந்த தெய்வ நேசம் எங்களையும், விதவை சகோதரிகளையும் நிரப்புவதாக! ஆமென்.

**நமக்களித்த பிள்ளைகள் தேவன் திரும்ப பெற்றிடும் கடன்!**

தேவன் நமக்களித்த பிள்ளைகளிடம் நமக்கிருக்கும் பொறுப்பை கீழ்காணும் கவிதை நேர்த்தியாக விளக்குகிறது:

*"சொற்ப காலம் கடன் உன் பிள்ளை!" என்றார் தேவன்:*
*"உயிருள்ள மட்டும் நேசி,*
*மரித்ததும் திரும்ப எனக்குத் தந்துவிடு"*
*ஓராண்டு அல்லது இரண்டு அல்லது ஐந்து*
*அல்லது நான்கு அல்லது மூன்று! அவனை*
*என்னிடம் அழைத்திடும் காலமும் விசாரிப்பாயோ?*
*அவன் தரும் பரவசமே உந்தன் மகிழ்ச்சி...*
*'அற்பமே' நீடிக்கலாம், அத்துயரத்தில்...*
*அவனது ஞாபக நினைவுகளே உந்தன் ஆறுதல்!*
*நிரந்தரமாய் தந்திட வாக்குரைக்க இயன்றிடேன்.*
*பூமியில் யாவுமே திரும்பவே வரவேணும் அறிந்திடு!*
*பூமியில் கற்றிட பாடங்கள் அறிவேன்.... அதை,*
*நான் தரும் குழந்தை கற்றிடவும் விரும்பினேன்... அதற்கு,*
*போதகன் பெற்றிட பார் உலகும் தேடினேன்.*
*பூமியின் மாந்தரில் உன்னையே தெரிந்தேன்!*
*உன் அன்பு அனைத்தையும் அவனுக்கே தருவாயோ?*
*உன் பிரயாசம் அனைத்தையும் வீணென்று நினைப்பாயோ?*
*'காலம் முடிந்துவிட்ட பிள்ளையை' என்னிடம் சேர்த்திட*
*கரம் நீட்டி எடுக்கையில் என்னை வெறுத்திடாதிருப்பாயா?*
**பதிலுமே உரைத்திட்டார் பாங்குடன் பெற்றோரும்:**
*"அன்பின் தேவனே, உம் சித்தமாகட்டும்"*
*இப்பிள்ளை வழங்கட்டும் தெய்வீக மகிழ்ச்சி.*
*துயரமே வந்திட்டால் நாங்களும் சகிக்கட்டும்!*
*பட்சமாய் காத்துமே.... கடைசி மட்டும் அன்புமே!*
*அவன் அளித்திடும் ஆனந்தம் நன்றியுடன் பெறுவோமே!!*
*அவனுக்கென்று திட்டங்கள் முடியுமுன்னே நீர் வந்தால் ...*
*கசந்த எம் துயரத்தில் தைரியம் தாங்குவோம்*
*உம் நோக்கம் ஒன்றையே அறிந்திடவும் நாடுவோம்...."*

**ஜெபம்:** *எங்கள் அன்பின் தகப்பனே! பெற்றோர்களாகிய எங்களை நம்பி பிள்ளைகளை கடனாய் ஈந்தீரே! ஏற்றவிதமாய் போதித்து அன்புகூரவும், ஏற்றவேளையில் மகிழ்வுடன் உம்மிடம் ஒப்படைக்கவும் கிருபை செய்தருளும், ஆமென்.*

**எத்துன்பத்திலும் எளியவர்களின் ஜெபமே ஜெயம்!**

*நீங்கள் எவ்வளவுதான் கோழையும் பெலவீனருமாயிருந்தாலும், பரலோகத்தின் கதவை நீங்கள் தட்டும்போது, அது உங்களுக்கு நிச்சயமாய் திறக்கப்பட்டுவிடும்! காரிருள் அமைதி நேரங்களில் உங்கள் இருதயத்திலிருந்து தேவனை நோக்கி கூப்பிடுங்கள்! சிறிது நேரத்தில் பரலோகம் திறந்து, உங்கள் விண்ணப்பத்திற்கு தேவன் பேசும் பதிலை நீங்கள் கேட்பீர்கள்!!*

*துன்பத்தின் அக்காரிருள் நேரத்தில் தேவன் உங்களுக்குத் தந்த வாக்குத்தத்தங்களை எழுதி வைத்துக் கொள்ளுங்கள்! அவை ஒவ்வொன்றும் ஒரு வானவில்லாகவும், விலையேறப்பட்ட வைடூரியமாகவும் உங்களுக்கு இருப்பதைக் காண்பீர்கள்! அவைகளைப் பத்திரப்படுத்தி வையுங்கள்! என்றாவது ஒரு நாள், பிறருக்கு உதவி செய்யும்படி அதை நீங்கள் மற்றவர்களுக்குத் தரவேண்டியிருக்கும்!! துன்பத்தின் அந்தரங்கத்தில் கேட்கும் உங்கள் பிதா, வெளியரங்கமாய் உங்களுக்கு நிச்சயமாய் பலனளிப்பார். தன் பதிலை "விரைவாய் தருவதாகவும்" அவர் மேலும் வாக்களித் திருக்கிறார். ஆகவே, நீங்கள் பதிலைப் பெறும்வரை ஜெபத்தில் உறுதியாய் தரித்திருங்கள். உங்கள் துக்கத்தில் அமிழ்ந்துபோவது தேவனுடைய சித்தம் அல்லவே அல்ல. பலவந்தம் செய்யும் யாவருக்கும் தேவனுடைய ராஜ்ஜியம் சொந்தமாகவே வைத்திருக்கிறார்! அவ்விதமாய் தன் இராஜ்ஜியத்தை சுதந்தரிக்கும்படியே இயேசு நமக்கு சவால் கொடுத்து அழைக்கிறார்!!*

*"கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழ பாளையமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்" (சங்.34:10) என்றும், "நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும், நாம் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் கிரியை செய்திட தேவன் வல்லவராய் இருக்கிறார்" (எபேசி.3:20) என்றும் வேதம் கூறுவதைப் பாருங்கள்.*

*ஆகவே, மிகுந்த விசுவாசத்தோடு அவரிடம் கேளுங்கள். தைரியமாய் கிருபாசனத்தண்டை வந்து, ஜெபத்தில் உறுதியாய் இருங்கள். "எழுந்திரு, இராத்திரியிலே முதற் சாமத்தில் கூப்பிடு. ஆண்டவரின் சமூகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப்போல ஊற்றிவிடு; எல்லாத் தெருக்களின் முனையிலும் பசியினால் மூர்ச்சித்துப் போகிற உன் குழந்தைகளின் பிராணனுக்காக உன் கைகளை அவரிடத்திற்கு ஏறெடு" (பிரசங்கி 2:19) என்ற ஜெபத்தின் கூக்குரலையே நாமும் செய்திடக்கடவோம்.*

***ஜெபம்*** *: எங்கள் பரம தந்தையே! சோதனையின் பெலவீன நேரத்தில், எங்கள் துயர்தீர்க்கும் உம் இரட்சிப்பிற்கு ஜெபித்திட ஓடிவரச்செய்திடும் கிருபையைத் தந்தருளும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.*

**அசம்பாவிதங்கள் நம்மை மனச்சோர்வடைய செய்திடக்கூடாது!**

*சில வருடங்களுக்கு முன்புதான், நம் தேசத்தின் சுதந்திர நாளில் ஓர் கொடிய பூமி அதிர்ச்சி குஜராத் மாநிலத்தின் சில முக்கிய நகரங்களை அழித்துவிட்டது. அப்பகுதிகளில் எத்தனை கோரமான அழுகுரல்கள் கேட்டிருக்கக்கூடும்! ஒரு சில வினாடிகளில் எண்ணற்றோர் அனாதைகளாகினர்! எண்ணற்றோர் வீடுகளை இழந்தனர்!! பூமி அதிர்ச்சி, தேவனுடைய தண்டனை என நாம் சொல்லிவிட முடியாது. இயேசுவின் நாட்களில் சீலோவாம் கோபுரம் விழுந்தபோது, அந்த விபத்தில் மரித்தவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிகப் பாவம் செய்தவர்கள் அல்ல என்பதை இயேசு அவ்வேளையில் தெளிவுபடுத்தினார். மேலும், கடைசி நாட்களில் யுத்தங்களும், பஞ்சங்களும், பூமி அதிர்ச்சிகளும் சம்பவிக்க வேண்டியதே எனவும் இயேசு எச்சரிக்கையாய் கூறினார். ஆகவே "கர்த்தருடைய வருகை சமீபித்துவிட்டது!" என்பதையே பூமி அதிர்ச்சிகள் நமக்கு நினைவூட்டுகின்றன. மேலும், கொடிய விக்கிரக ஆராதனைக் குள் மூழ்கிப் போயிருக்கும் நம் இந்திய தேசத்திற்குத் தேவன் இரக்கம் பாராட்டும்படியாய், நாம் யாவருமே நம் தேசத்திற்காய் ஜெபித்திட வேண்டிய அவசியத்தையும் இதுபோன்ற சம்பவங்கள் காட்டுகிறது!*

*மரணம் சம்பவித்த சில வீடுகளில் அங்குள்ளவர்கள் தேவனைத் திட்டுவதை நான் கேட்டிருக்கிறேன். அதுபோன்ற இடத்தில், அந்த இடத்தை விட்டே போய்விடலாமா என்றுகூட நான் எண்ணியிருக்கிறேன். இச்சமயங்களில், எதிர்காலத்திற்கென நமக்கு* **ஓர் உயிருள்ள நம்பிக்கை** *இருக்கிறது என்பதையே அங்கு கூடியிருக்கும் புறஜாதிகள் அறிந்துகொள்ள வேண்டும்! ஆண்டவருக்குள் மரித்தவர்கள் அவருடைய சமூகத்திற்குள் உடனடியாகப் பிரவேசித்துவிடுவார்கள்!! ஆகவே, மரித்தோரிலிருந்து இயேசு உயிர்த்தெழுந்தபடியால், எதிர் காலத்திற்கு ஓர் மகிமையான நம்பிக்கை நம் யாவருக்குமே இருக்கிறது!!*

*துக்கமான மனச்சோர்வு என்ற உளையான சேற்றுக்குள் நீங்கள் சிக்கிக் கொள்ளாதபடி கவனமாயிருங்கள்! அப்படியாகிவிட்டால், உங்கள் உணர்வுகளுக்கும், உங்கள் மன நிலைக்கும், உங்கள் ஆவிக்குரிய நிலைக்கும் நீங்களே தீங்கு செய்துவிட முடியும். இந்நிலையில், உங்கள் மனதில் தோன்றும் யூகங்களையெல்லாம் கூறி மற்றவர் களையும் நீங்கள் இடறச் செய்துவிட முடியும். ஒரு நாளில், மரித்த உங்கள் அன்பு கூர்ந்தவரை பரலோகத்தில் காணும் போது. . . . இப்பூமியில் ஆண்டவரோடு நெருங்கி நடக்கும் வாய்ப்பை இழந்து வீணாக்கிய அந்த மனச்சோர்வின் காலங்களுக்காய் நீங்கள் 'அன்று' வெகுவாய் துக்கமடைவீர்கள்!*

**ஜெபம்:** *அன்பின் பரம தகப்பனே! தேசத்தின் சோக நிகழ்ச்சிகள், எங்கள் இல்லங்களின் சோக சம்பவங்கள் எங்களை ஜெபத்திற்கு உந்திட வேண்டுமே அல்லாமல், மனசோர்வின் உளைக்குள் சிக்காதிருக்க கிருபைதாரும், ஆமென்.*

**துன்பங்கள் கொண்டுவரும் பாக்கியங்கள்!**

"நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். பரலோகராஜ்யம் அவர்களுடையது" (மத்.5:10) என துன்பத்தோடு "பாக்கியத்தையும்" ஆண்டவர் இணைத்துக் கூறுவதைப் பாருங்கள். நம்மைத் துன்பப்படுத்துகிறவர்களை மன்னிக்கவும், அன்புகூரவும், அவர்களுக்காக ஜெபிக்கவும் இயேசு கற்றுக் கொடுத்தார்! இவ்வாறு, நமக்குத் தீமை செய்கிறவர்களுக்கு நன்மை செய்வது மூலமாய் "நாம் அன்புள்ள பிதாவின் பிள்ளைகள்" என்பதை நிரூபிக்கிறோம். ஆம், தேவன் எல்லோருக்குமே நல்லவராகத்தான் இருக்கிறார்! ஒருவேளை உங்கள் நெருங்கிய நண்பரோ, அல்லது உறவினரோ உங்கள் முதுகிற்குப் பின்பாக உங்களுக்கு கொடிய தீங்கு இழைத்திருக்கலாம். அதற்காக நீங்கள் அழவேண்டாம்! அதற்குப் பதிலாய், "இயேசுவின் அடிச் சுவடுகளில்" நானும் நடந்துவர சிலாக்கியம் பெற்றேனே என்பதில் களிகூர்ந்திடுங்கள். இதுபோன்ற சமயங்களில் 'கிறிஸ்துவின் சிந்தையே' உங்களை ஆண்டு ஆட்கொள்ளக்கடவது!!

ஆண்டவர் நிமித்தமாய் நீண்ட ஆண்டுகளாய் சிறையிலிருக்கும் சில 'பாஸ்டர்களைக்' குறித்து நான் வாசித்திருக்கிறேன். அவர் களுடைய மனைவிகளுக்குத்தான் இது எத்தனை வேதனையாய் இருக்கக்கூடும்! இன்றும்கூட, அநேக நாடுகளில் உபத்திரவத்திற்குள் ஆளாகியிருக்கும் கிறிஸ்தவக் குடும்பங்களுக்காக நாம் யாவரும் ஜெபித்திட வேண்டும். நம் இந்திய தேசத்திற்கும் உபத்திரவங்கள் வரும் காலம் நெருங்கிவிட்டதை நாம் உணர்கிறோம். நாம் விசுவாசத்தில் உறுதியாய் இருக்கும்படியாக தேவன் நம்மை காத்துக்கொள்ள நாம் ஜெபம் செய்திடக்கடவோம். இது சமயங்களில், ஆண்டவர் நிமித்தமாய் உபத்திரவத்திற்கு ஆளாகி மரித்த இரத்தசாட்சிகளைப் பற்றிய புத்தகங்களை நாம் வாங்கி வாசிப்பது நல்லது. இதுபோன்ற புத்தகங்கள், நாம் உபத்திரவங்களை சந்திக்கும் நேரத்தில் நம்மை ஸ்திரப்படுத்த நிச்சயமாய் உதவும்!

"இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல" (ரோமர் 8:15) என்றும்,

"அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கன மகிமையை உண்டாக்குகிறது" (2கொரி.4:17) என்றும், வசனங்கள் நம்மைத் தேற்றுவதை ஏற்றுக்கொள்ளுங்கள்!

**ஜெபம் :** *எங்கள் அன்பின் பிதாவே! மெய்யாகவே எங்கள் வாழ்வில் நிகழும் துன்பங் கள் வேதவசனம் எங்களில் நிறைவேறவும், பரத்தின் மகிமை அடைந்திடவும் செய்கிறதே! கவனமாய் எங்களை ஒப்புக்கொடுத்துவாழ கிருபை செய்தருளும், ஆமென்.*

**இதோ, நற் சுவிசேஷம்! இனி நாம் அழ வேண்டாம்!**

*"அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: நீ அழவேண்டாம்; இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றான்." (வெளி 5:5).*

"நீ அழவேண்டாம்." இங்கு ஓர் நற்செய்தி காத்திருக்கிறது இதுவே உண்மையான சுவிசேஷம். அது யாதெனில், இயேசுகிறிஸ்து தாவீதின் மாம்சத்திற்கொப்பான மாம்சத்தில் வெளிப்பட்டார் என்பதுதான்! புதிய ஏற்பாட்டில், இயேசு "தாவீதின் வித்தில்" (Seed of David) வந்தவரென பல இடங்களில் வாசிக்கிறோம். இந்த சத்தியம் மிகமிக முக்கியமானது. இதே சத்தியம், வேதாகமத்தின் கடைசி பக்கமாகிய 22-ம் அதிகாரத்தில் மீண்டும் வலியுறுத்தி எழுதப்பட்டிருப்பதைக் காண்கிறோம். அந்த வசனம் கூறுவது யாதெனில், "இயேசுவாகிய நான் என் தூதனை அனுப்பினேன். நான் தாவீதின் வேரும் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறேன் என்றார்" (வெளி.22:16). ஆம், அவர் நம்மைப்போன்ற மாம்சத்தில் வந்தார்! இவ்விதமே அவர் நமக்கு நெருங்கிய உறவினரானார். இதுவே சுவிசேஷம்! இனியும் அழவேண்டாம்!! நம்மைப்போன்ற மாம்சத்தில் நெருங்கிய உறவினனாக ஒருவர் வந்து விட்டார்!! ஒருவேளை இயேசுகிறிஸ்து வேறுவிதமான மாம்சத்தில் வந்திருந்தால் அவர் நம்முடைய நெருங்கிய உறவினன் ஆகியிருக்க முடியாது. அவர் நம்மை மீட்டிருக்கவும் முடியாது. எனவேதான் பவுல் ரோமர் 1-ம்அதிகாரத்தில், "நான் பிரசங்கிக்கிற சுவிசேஷம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவானவர் மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும் . . . பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனைப்பற்றியது" என்றார்.

தாவீதின் வேரிலிருந்து வந்தே இயேசுகிறிஸ்து ஜெயங் கொண்டார். தேவன் பாவத்தை அவருடைய மாம்சத்தில் நியாயந்தீர்த்தார். இவ்விதம் அவர் ஜெயித்தபடியால் மாத்திரமே பாத்திரவானாய் மாறினார்! இதுவே நற்சுவிசேஷம்! இச்சுவிசேஷத் தின்படி, இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நாம் பாவமன்னிப்படைந்து இரட்சிக்கப்பட்டது மாத்திரமல்லாமல், நாமும் அவரைப்போலவே பாவத்தை ஜெயித்துவாழ முடியும்!!

***ஜெபம்:*** *எங்கள் அன்பின் தந்தையே! தாவீதின் சந்ததியில் இயேசு கிறிஸ்துவை எங்கள் இரட்சகராய் அனுப்பியது மாத்திரமல்லாமல், அவர் மூலம் அளித்த "பாவத்தின் மேல் ஜெயத்தையும்" பெற்றிருக்கிறோமே! உமக்கே ஸ்தோத்திரம், ஆமென்.*

**லௌகீக துக்கத்தை மேற்கொள்ள வேண்டும்!**

*"லௌகீக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது" (2கொரி.7:10) என வேத வசனம் எச்சரிப்பதைப் பாருங்கள்.*

*லௌகீகமான உங்கள் வாழ்வின் கவலைகளை அடிக்கடி நினைவுபடுத்தி, மற்றவர்களின் ஆறுதலையும் அனுதாபத்தையும் பெறும் ஆசையில், "அந்த நினைவுகளைச்" செத்தஉடலைப் பாதுகாக்கும் "எகிப்திய மம்மீஸ்" போன்று பத்திரமாய் வைத்திருக்க விரும்புகிறீர்களா? இந்த இழிவான நிலையிலிருக்கும் நீங்கள், நடந்து முடிந்த துயரமான சம்பவங்களை மீண்டும் நினைவுகூரும்படி எப்போதெல்லாம் சோதிக்கப்படுகிறீர்களோ, அப்போதெல்லாம் அந்த சிந்தைகளை அப்புறப்படுத்திட தேவன் உங்களுக்கு உதவி செய்யும்படி ஜெபம் செய்யுங்கள்! இந்தச் செயலை நீங்கள் தொடர்ச்சியாய் செய்து வந்தால், சில காலங்களுக்குப் பிறகு அந்த கடந்த கால சம்பவங்களை நீங்கள் முற்றிலுமாய் மறந்துவிடுவீர்கள்! உங்கள் ஆத்துமாவும் சுகம் பெற்றுவிடும்!*

*உங்கள் கடந்த காலம் "கெட்டுப்போன பிரேதத்திற்கு" ஒப்பாயிருக்கிற படியால், அவைகளை நீங்கள் நிரந்தரமாய் புதைப்பதே அவசியமாயிருக்கிறது:*

*அவ்வாறு நீங்கள் செய்யும்போது, ஓர் பெரிய அடிமை கட்டிலிருந்து நீங்கள் விடுதலையானதை உணர்வது மாத்திரமல்லாமல், பரலோகத்தின் முன் ருசியை இந்தப் பூமியிலேயே நீங்கள் அனுபவிப் பதைக் காண்பீர்கள். இவ்வாறு நீங்கள் செய்வதால், நீங்கள் வாழும் படி இந்த உலகத்தை சிறந்த ஸ்தலமாய் மாற்றியதுமல்லாமல், உங்களைச் சூழ்ந்த மற்றவர்களுக்கும் அந்த இனிய உணர்வை நீங்கள் தந்துவிட முடியும்!!*

*தேவன் விரும்புகிறபடி உங்கள் வாழ்க்கையை வாழ்ந்துவிடுங்கள். உங்கள் சுயநலத்திலிருந்து மனந்திரும்பி, உங்கள் முழுமையையும் ஆண்டவராகிய இயேசுவினிடத்தில் 'சமர்ப்பணம்' செய்துவிடுங்கள். சில சமயங்களில், உங்கள் பொறுமையின் எல்கைக்கே நீங்கள் வந்துவிட்டதாக உணரலாம். ஆனால், அதுபோன்ற உணர்வு நீங்களாக எண்ணிக் கொண்டதேயாகும்! ஏனெனில் தேவனுடைய கிருபை உங்களை எச்சூழ்நிலையிலும் பாதுகாத்துக்கொள்ள முற்றிலும் போதுமானதேயாகும். உங்கள் திராணிக்கு மிஞ்சி நீங்கள் சோதிக்கப்பட தேவன் ஒருபோதும் அனுமதிக்கவே மாட்டார்!!*

***ஜெபம்*** *: எங்கள் பரலோக தந்தையே! என்றோ, எப்போதோ நடந்த வாழ்வின் துயரங்களை அல்லது ஏமாற்றங்களை இன்னமும் தொடர்ச்சியாய் எண்ணி பின்மாறிப்போன எங்களை மன்னியும்! அவைகளை ஜெயித்து உமக்குள் முன்னேறிவர கிருபைதாரும்! ஆமென்.*

**பிறருக்காக ஆத்தும கரிசனை வேண்டும்!**

அநீதியாய் சிறையிலடைக்கப்பட்ட யோசேப்பின் சரித்திரத்தை சிந்தித்துப் பாருங்கள். அந்தச் சிறைச்சாலையில் யோசேப்பு தன் சொந்த துக்கங்களை மறந்தவனாய், சிறைக் கைதிகளின் துக்கங்களே அவனை ஆட்கொண்டிருந்தது! இவ்வாறு பார்வோனின் பானபாத்திரக்காரன் மீது யோசேப்பு கொண்டிருந்த அக்கறைதான், முடிவில் அவன் சிறையிலிருந்து வெளிவருவதற்கும் நடத்தியது!!

பார்த்தீர்களா, மற்றவர்கள்மீது கொண்ட மெய்யான அக்கறையே உங்களின் விடுதலைக்கு வகுத்துத் தரும் முதற் படியாய் மாறிவிட முடியும்! (ஆதியாகமம் 40:7).

"அள்ளித்தூவும் விதையை சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான். ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பி வருவான்" (சங்கீதம் 126:6) என்றே வேதம் உத்திரவாதம் அளிக்கிறது.

தேவ ஜனத்தின் பின்மாற்றத்தைக் கண்டு, தன்னுடைய கண்கள் "கண்ணீர் ஊற்றாய் மாறி ஜனங்களுக்காய் தொடர்ச்சியாய் தன்னுடைய கண்கள் அழுதிட வேண்டுமென விரும்பி" (எரேமியா 9:1; 13:17) எரேமியா அழுதார்.

தேவ ஜனத்தின் பாவங்களுக்காக தானியேல் அழுதார் (தானியேல் 9:20,21).

வீழ்ச்சியடைந்த தேவ ஜனத்தின் நிலையைக் கண்டு எஸ்றாவும், நெகேமியாவும் அழுதார்கள் (எஸ்றா 10:1; நெகேமியா 1:4).

மனந்திரும்பாத தன் சொந்த யூத ஜனங்களுக்காக தன் இருதயத்தில் பவுல் இடைவிடாத துக்கம் கொண்டிருந்தார் (ரோமர் 9:1-3).

நம் தேசத்திலுள்ள விக்கிரக கோபுரங்களையும் சிலைகளையும் நாம் ஏராளமாய் பார்த்துப் பழகிவிட்டபடியால், அவைகள் நம் ஆவியில் எந்த சலனமும் ஏற்படுத்தாததுபோல் தோன்றுகிறது (அப்போ.17:16). ஆனால் நாம் வாழும் இந்த தேசத்தினிமித்தம் ஆண்டவருக்கு முன்பாக நம் யாவருக்குமே ஓர் பொறுப்பு இருக்கத்தான் செய்கிறது! இதைத் தேவன் குறிப்பிடும்போது "என் நாமம் தரிப்பிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்" (2 நாளாகமம் 7:14) எனக் கூறினார்.

**ஜெபம்** : எங்கள் பரமதகப்பனே! எங்கள் ஜெபங்கள் சுயநலமாய் இல்லாமல், பிறரின் இரட்சிப்பிற்காக, எங்கள் தேசத்தின் இரட்சிப்பிற்காக பரிதபிக்கும் ஜெபமாய் மாற கிருபைதாரும்! இயேசுவின் நாமத்தில், ஆமென்.

**துன்பத்தில், பரமநோக்கம் நிறைவேறிட உடன் நிற்கும் ஆண்டவர்!**

*உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியும் ஆண்டவருக்கு முழுமையாய் அர்ப்பணம் செய்யப்பட்டிருந்தால், சரீர வேதனை உங்களுக்கு வரும்போது, அது உங்களுக்கு சற்றே இலகுவாயிருப்பதை நீங்கள் காண்பீர்கள். கடந்த நாட்களில், ஓர் தலைவலிகூட உங்களால் தாங்க முடியாததாய் இருந்திருக்கக்கூடும். ஆனால் இப்போதோ, உங்கள் உயிருக்கே ஆபத்தான வியாதி வந்தாலும், நீங்கள் அதற்காக ஜெபித்து. . . . பின்பு கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருந்திட முடியும்! “நாம் தண்ணீர்களைக் கடக்கும் வேளையில் அது நம்மேல் புரளுவதில்லை,” என்றும் அவர் உறுதியளித்து வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். இந்த வசனங்களை LIVING BIBLE மொழி பெயர்ப்பு நேர்த்தியாகக் கூறுகிறது:*

*“ஆழமான தண்ணீர்களின் கொடிய துன்பங்கள் மத்தியில் நான் உன்னோடேயிருப்பேன். கஷ்டத்தின் ஆறுகளை நீ கடந்து செல்லும் போது நீ மூழ்கிப் போகமாட்டாய்! நெருக்கத்தின் அக்கினியில் நடந்து செல்லும் போது நீ எரிந்து போகமாட்டாய்! அக்கினி ஜுவாலைகள் உன்னைத் தீண்டாது, நீ பயப்படாதே! நான் உன்னோடேயிருக்கிறேன்” (ஏசாயா 43:2,5).*

ஒவ்வொரு சூழ்நிலைக்கும் அவருடைய கிருபை நமக்குப் போது மானதாகவேயிருக்கிறது! நம்முடைய உபத்திரவங்கள் அதிகரிக்க அதிகரிக்க தேவன் வழங்கும் கிருபையின் அளவும் நமக்கு அதிகரித்துக் கொண்டே செல்லும்! இந்த நல்ல தேவனுக்கே துதி உண்டாகக் கடவது!!

“தேவனுடைய விலையேறப் பெற்ற அலங்கரிப்பாய்” திகழ்ந்த அநேகர், கற்பனைக்கும் எட்டாத துன்பத்தின் ஆழங்களிலிருந்து தோன்றியவர்களேயாவர். “வைரங்கள்” பூமியின் ஆழத்திலிருந்து உருவாகுவதைப் போல், இவர்களும் சொல்லிமுடியா வெப்பத்திலும் அழுத்தத்திலும் துன்பங்கள் சகித்து, எல்லா மனுஷருடைய கண் களுக்கும் மறைவாயிருந்து தோன்றியவர்களேயாவர்! இதேபோல நீங்களும்கூட ஆண்டவருடைய விலையேறப்பெற்ற அலங்காரமாய் இருந்துவிட முடியும்! தேவன் உங்களோடு இடைபடும் சமயங்களில், மகிழ்ச்சியுடன் உங்களை ஒப்புக்கொடுத்து சுய-பட்சாதாப கண்ணீர் வடிக்காதவர்களாய் நீங்கள் இருந்தால். . . . தேவன் மாத்திரமே கண்டிட்ட உங்கள் கண்ணீர், உங்களை கிறிஸ்துவின் சாயலுக் கொப்பாய் மறுரூபப்படுத்திட கிரியை செய்வதாய் மாறிவிடும்!

**ஜெபம்:** *எங்கள் பரலோக பிதாவே! எங்களை உம்மிடம் முழுவதும் தந்தோம்! வாழ்வின் வெப்பத்தில் துணைநின்று, உம்மைப்போல் எங்களை மாற்றுவதற்காய் ஸ்தோத்திரம்! ஆமென்.*

**எத்துன்பத்திலும் "அவர் மெல்லிய சத்தம்" கேட்டிட வேண்டும்!**

*"எந்தப் பெருங்காற்றும் அலையும்" தங்களை மூழ்கடித்து விடும் என சீஷர்கள் பயந்தார்களோ "அலைகள் மீது" இயேசு மிதித்து நடந்து, அவர்களை நெருங்கி "நான்தான் பயப்படாதிருங்கள்" என மெல்லிய சத்தமாய் சீஷர்களிடம் கூறினார்! அவ்வேளையில் அந்தப்பெருங்காற்று உடனே அமைதியானது!! இன்றும் நம் வாழ்க்கையில் நம்மை அச்சுறுத்தி கலங்கச் செய்யும் எந்தப் புயலையும் தன் "மெல்லிய சத்தத்தால்" அமைதிப்படுத்த . . . அவர், இன்றும் மாறாதவராகவே இருக்கிறார். "உமது காருண்யம் (மென்மையான மெல்லிய சத்தம்) என்னைப் பெரியவனாக்கும்" (சங்.18:35) என்ற வசனம்தான் எவ்வளவு உண்மையானது!!*

*பிறருடைய விரோதத்தை நாம் சந்திக்க வேண்டியிருக்கிறதா? அப்படியானால், "தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள் ளுங்கள்" (எபி.12:3). நம்முடைய நண்பர்கள், உறவினர்களிடமிருந்து நாம் சந்திக்கும் விரோதங்கள், நாம் சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டும் அடையாளங்களே யாகும்! "இந்த பாதையில்தான்" நாம் இயேசுவையும் சந்திக்கிறோம். அவர் விரோதத்தினால் துன்பப்பட்டாலும், சுய-அனுதாபத்திற்கும், குறை கூறுதலுக்கும் தன்னை ஒப்புக்கொடாமல் தீமையை நன்மை யினாலேயே ஜெயித்தார்! தன் மீது குற்றம் சுமத்தியவர்களை மன்னித்து ஆசீர்வதித்தார்! இவ்வேளையில், தன் பிதாவின் மெல்லிய சத்தத்தைக் கவனித்துக் கேட்டு அவரிடமே தன் காரியங்களை ஒப்புவித்தார்!!*

*நம் பிதா, நாம் அனைவரும் பேசுகின்ற செய்கின்ற ஒவ்வொரு காரிங்களையும் கவனிக்கிறபடியால், சகலத்தையும் ஒரு நாளில் நீதியாய் நியாயந்தீர்ப்பார். அவருடைய நியாயத்தீர்ப்பில் எந்தவித பாரபட்சமு மிருக்காது. ஏனென்றால், ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் உள்ள உண்மை என்னவென்பதை அவர் நன்கு அறிந்திருக்கிறார்! இயேசு செய்ததைப் போலவே காரியங்களைப் பிதாவிடம் ஒப்படைத்து அவருடைய மெல்லிய குரலை நாமும் கேட்டால், சுய-பட்சாதாபத்தின் எல்லா உணர்வுகளையும் நாம் ஜெயித்து, அவருடைய பாடுகளின் ஐக்கியத்தில் நமக்கும் பங்கு கிடைத்ததை எண்ணி மகிழ்ச்சியடைந் திடவும் முடியும்! இவ்வாறு நாம் செய்வோமென்றால், எல்லா தீமையான புறங்கூறுதலையும், குற்றஞ்சாட்டும் சுபாவத்தையும், பிறர் நமக்கு இன்னது செய்யவேண்டுமென்ற எதிர்பார்ப்புகளையும், சுயத்தைப் பாதுகாக்கும் சுபாவங்களையும், தன்னை நியாயப்படுத்து வதும், சுய-அனுதாபம் கொள்ளுவதும் ஆகிய யாவற்றையும் ஜெயித்து நாம் முற்றுப்புள்ளி வைத்துவிட முடியும்!!*

***ஜெபம்*** *: பரலோக தந்தையே! எவ்வித பெரும் புயல், விரோதங்கள் ஆகிய வாழ்வின் சூழலில் "உமது மெல்லிய சத்தம்" கேட்டு இயேசுவின் ஆசீர்வதிக்கப்பட்ட அடிச்சுவடு தவறாமல் பின்பற்றி நடந்திட கிருபைதாரும்! ஆமென்.*

**சதாகாலமும் நம்மோடு இருக்கும் தேவன்!**

"**தா**யின் பால் மறந்த குழந்தையைப்போல நான் என் ஆத்துமாவை அடக்கி அமரப்பண்ணுவேன்; என் ஆத்துமா பால் மறந்த குழந்தையைப்போல் இருக்கிறது" (சங்கீதம் 131:2) என தாவீதினால் சாட்சி பகரமுடிந்தது. பால்குடி மறந்த பிள்ளை இளைப்பாறுதலற்று இருப்பதில்லை! அல்லது தன் தாயின் கவனம் தனக்கு எப்போதும் வேண்டும் என்ற சார்ந்துகொள்ளும் விருப்பமும் இருப்பதில்லை! ஆகவே, பால்குடிமறந்த பிள்ளை இவ்வுலகில் கவலையற்று மகிழ்ச்சியாய் இருப்பதை நாம் பார்க்கமுடியும்! "நாமும்கூட" கர்த்தரைச் சார்ந்து நிலைத்திருப்போமென்றால், பால்குடி மறந்த பிள்ளையைப்போல் இருந்திட முடியும்! எவ்வளவுதான் பாடுகளும் துன்பங்களும் நிறைந்த வேலைகள் இருந்தாலும், அதன் மத்தியிலும் அவர் நம்மோடு இருப்பதை நாம் கண்டுகொள்ள முடியும்!!

"சதாகாலமும் நான் உன்னோடிருக்கிறேன். நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை"என்பது ஆண்டவர் நமக்கென்று அளித்த நிரந்தரமான ஆறுதலின் வசனங்களாகும். இதுவே புதிய உடன்படிக்கையில், நமக்குத் தேவன் வழங்கியிருக்கும் மகிழ்ச்சியான செய்தியாகும்: அதாவது, "நாம் என்ன செய்து கொண்டிருந்தாலும், சதாகாலமும் அவர் நம்மோடு இருப்பார் என்பதும்; நம்முடைய வீடுகளில் நாம் அவரை எப்போதும் சந்தித்து உறவு கொள்ளமுடியும் என்பதுமே"அந்த நற்செய்தியாகும்.

இப்போது, "இந்தப்பூமியில் ஆண்டவருடைய சமூகத்தைத் தவிர வேறு விருப்பம் ஏதுமில்லை" என்ற பாக்கியமான இடத்தை நாம் அடைந்திருக்கிறோம். இதை மேடம் குயான் அம்மையார் நேர்த்தி யாய்க் குறிப்பிட்டு கீழ்காணும் கவிதையைப் பாடினார்கள் . . .

*விரும்பும் இடமோ அல்லது விரும்பாத இடமோ*
*எதிலும் என் ஆன்மா மகிழ்ச்சி காணவில்லை;*
*என் வழி நடத்திட என்னோடு தேவனிருந்தால்*
*போவதோ அல்லது தங்குவதோ சமமான சந்தோஷமே!*
*தேவா, நீர் இல்லாத இடத்தில் நான் இருந்திட கூடுமோ?*
*ஆ, அதுவே என் பெருந்துயரமாகும்!*
*தொலைவான இடமென்று எதையும் நான் கூறிடேன்*
*எங்கிருந்தாலும் "உம்மைக்கண்டால்" அதுவே என் பாதுகாப்பு!!*

இந்த அம்மையார் பெற்ற "அதே பாக்கியத்தை" நாமும் பெறுவதுதான் எத்தனை மென்மையானது!!

**ஜெபம் :** *எங்கள் பரம தகப்பனே! இவ்வுலகின் ஆதரவிற்காய் அழுதுகொண்டிருக்கும் பிள்ளைகளாய் இராமல், உம்மையே விசுவாசித்து, நீர் எங்களைவிட்டு விலகாத பங்கில் பூரண திருப்திகாண எப்போதும் எங்களை வழிநடத்தும்! ஆமென்.*

**சிலுவையின் பாதையில் புதிய பாடலை கற்றுத் தேறிடக்கடவோம்!**

*பரலோகத்தில் இனிய கானம் ஒலித்தது! அவைகள் தங்கள் பிதாவுக்கு முன்பாக துதியால் நிரம்பிய கானமாகவும் ஆராதனையின் கானமாகவும் ஆழ்ந்த மகிழ்ச்சியால் திளைத்த கானமாகவும் இருந்தது! ஜெயம் பெற்றவர்கள் ஆட்டுக்குட்டியானவரோடு "சீயோன் மலையின் மேல்" (Mt. Zion) நின்றிருந்தார்கள் (வெளி 14:2,3).*

*இச்ஜெயம் பெற்றவர்கள் சிங்காசனத்திற்கு முன்பாக "புதுப் பாட்டைப்" (New Song) பாடினார்கள் என்றும், அந்தப் பாட்டு பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட 1,44,000 பேரேயல்லாமல் வேறொருவரும் கற்றுக்கொள்ளக்கூடாதிருந்தது என வாசிக்கிறோம். இது ஒரு பெரிய விசேஷம் இல்லையா! இதை ஏன் மற்றவர்கள் கற்றுக்கொள்ளமுடியவில்லை? மற்றவர்களிடம் சங்கீத ஞானம் இல்லையென்பதற்காகவா? அப்படியொன்றுமில்லை. அப்படியிருக்கு மென்றால் சினிமா பாடகர்களைக் கொண்ட "பிசாசின் குடியிருப்பில்" ஏராளமான பேர் சங்கீத வித்தகர்களாய் இருக்கிறார்களே! அப்படியானால் இந்த புதிய பாடல் வேறு என்ன? இப்புதிய பாடலை ஒருவன் தன் இருதயத்தில் மாத்திரமே கற்றுக்கொள்ள முடியும். வெளி. 5:12-ல் காணும், "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையை யும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ள பாத்திரர்" என்பதே அந்த புதிய பாடல். இப்பாடலில் குறைசொல்லுவதும் முறுமுறுப்பதும் ஒரு கடுகளவும் கிடையாது! இப்பாடலை கற்றுக்கொள்வதற்காகவே தேவன் இப்பூமிக்குரிய வாழ்க்கையை நமக்கு அருளியிருக்கிறார் என எத்தனைபேர் அறிந்திருக்கிறார்கள்? அது பரலோகத்தின் பாடல்! துதியின் பாடல்! நன்றியின் பாடல்! - இப்பாடலில் ஒரு துளிகூட முறுமுறுப்பும் குறைசொல்லுதலும் கிடையாது. நாம் புகைவண்டியைத் தவற விடுகிறோம்... சமைத்த உணவு எதிர்பார்த்த ருசி இல்லை . . . யாரோ சிலர் உரிமைகளை பறித்துச் செல்கின்றனர் . . . இவ்வாறு எத்தனை எத்தனை அருமையான சந்தர்ப்பங்கள் நாம் சிலுவையை எடுத்து இயேசுவைப் பின்பற்றி புதிய பாடலைக் கற்றுக்கொள்ளும்படி நமக்கு கிட்டுகின்றது! நாம் சிலுவையை எடுத்து அதில் நம்முடைய உரிமைகளுக்காகவும் மதிப்பிற்காகவும் நம் சுயத்திற்காகவும் மரிக்க விரும்பாத பட்சத்தில், இப்புதிய பாடலைக் கற்றுக்கொள்வது ஒருக்காலும் முடியாது. நாமோ நாள்தோறும் நம் சிலுவை எடுத்து, ஆட்டுக்குட்டி யானவர் நின்ற சீயோன் சிகரம் நோக்கி தீவிரமாய் செல்லக்கடவோம்! ஜீவகால மெல்லாம் "புதியபாடலே" நம்மிடம் ஒலித்திடக் கடவது!!*

**ஜெபம் :** *எங்கள் பரலோக பிதாவே! எங்கள் வாழ்வின் பயணம் சிலுவையின் பயணம்! ஜெயம்பெற்ற ஆட்டுக்குட்டியானவர் நின்ற சீயோன் மலைநோக்கி செல்லும் பயணம்! யாதொரு முறுமுறுப்பும் இப்பயணத்தில் இல்லை! துதியின் புதிய பாடலே எங்கள் பங்கு! உமக்கே ஸ்தோத்திரம், ஆமென்.*